யாரோ மனதிலே...
தீபா பாபு

யாரோ மனதிலே...
தீபா பாபு

1

அந்தியும் சாய்ந்து இரவு மலரத் துவங்கியிருந்த பின் மாலைப் பொழுதில் டிரஸ்ஸிங் டேபிளின் முன் அமர்ந்து தனது கரத்தில் அடங்க மறுத்து அடம்பிடிக்கும் அடர்ந்து வளர்ந்திருந்த கருநிற கூந்தலை பெரிய ஹேர் பான்டினுள் திணித்துக் கொண்டிருந்தாள் ஹிரண்மயி.

தெளிவான நிலவு முகத்தில் மெல்லியதாக பட்டும்படாமல் பவுடரை ஒற்றியெடுத்து விட்டு திருத்தமாக வில்லென வளைந்திருந்த இரு புருவங்களுக்கிடையே மிளகு அளவு மெரூன் ஸ்டிக்கரை ஒட்டியவள் தன் கழுத்தில் புத்தம் புதியதாய் பளிச்சென்று மஞ்சள் பூச்சுடன் ஒளிர்ந்த தாலி கயிற்றுடன் இருந்த தங்ககொடியை லேசாக முன்னே இழுத்துவிட்டு சரிசெய்து தனது அலங்காரத்தில் திருப்தி அடைந்தாள்.

விழிகளில் கூர்மை நிறைந்திருக்க நிமிர்வுடன் இருந்தவளை கண்ட மங்களம், "ஏன்மா இந்த சின்ன நெக்லஸை மட்டுமாவது போட்டுக் கொள்ளேன். உன் மாமியார் ரொம்ப சிம்பிளாக இருக்கிறது என ஏதாவது சொல்லப் போகிறார்கள்!" என்றாள்.

"ப்ச்... இப்பொழுது அது ரொம்ப அவசியமா என்ன?" என்று அலட்சியமாக வினவியபடி தலையில் இரண்டு முழம் மல்லிகைப்பூவை தொங்க விட்டு ஹேர்பின் குத்தினாள்.

"அவசியமோ இல்லையோ அவர்கள் ஏதாவது சொன்னால்..." என்று அவள் முடிக்கும் முன்னரே இவள் ஒரே வரியில் முடித்து விட்டாள்.

"சொன்னால் நான் பேசிக் கொள்கிறேன்!" என்று எழுந்து நின்றவள் ஐந்து அடிக்கு சற்று உயரமாக அதற்கேற்ற உடல்வாகுடன் அழகாக பெண்மைக்குரிய நளினத்துடன் இருந்தாலும் அதையும் மீறி அவளிடம் ஒருவித நிமிர்வு தெரிந்தது.

"சரி இன்றே அந்த தம்பியிடம் அனைத்து விஷயங்களையும் கூறி விடப் போகிறாயா?"

"ம்... இதுவரை யோசிக்கவில்லை, நான் சொல்லும்வரை நீங்கள் யாரிடமும் எதுவும் உளறிவிட வேண்டாம்!" என்று எச்சரித்தாள்.

"இல்லையில்லை... நான் கண்டிப்பாக சொல்ல மாட்டேன். பிரச்சனை எதுவும் வராது அல்லவா... உன்னை நம்பி தான் இதற்கு ஒப்புக் கொண்டேன்!" என்றாள் மங்களம் அச்சத்துடன்.

"ஷ்... சும்மா புலம்பாதீர்கள் எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று சிடுசிடுத்தாள் ஹிரணி.

"என்னவாயிற்று அம்மாவுக்கும், பெண்ணுக்கும் என்ன பிரச்சினை? ஏன் என் மருமகள் உங்களிடம் சத்தம் போடுகிறாள் சம்பந்தியம்மா?" என்று வினவியபடி அறைக்குள்ளே வந்தார் பவானி.

"இல்லை அது..." என்று மங்களம் தடுமாற, ஹிரண்மயி பதிலளித்தாள்.

"அது ஒன்றுமில்லை அத்தை... இந்த நெக்லஸையும் போட்டுக் கொள் என்று அம்மா வற்புறுத்துகிறார்கள். எனக்கு பிடிக்கவில்லை வேண்டாம் உறங்கும் பொழுது உறுத்தலாக இருக்கும் என்கிறேன். நீங்கள் சத்தம் போடுவீர்கள் என்று என்னை மிரட்டிப் பார்க்கிறார்கள்!" என அவரிடம் இயல்பாய் கூறி முறுவலித்தாள்.

ஓ... என்றவாறு அவளை மேலிருந்து கீழ்வரை பார்த்தவர், "போட்டுக் கொண்டால் நன்றாக பாந்தமாக தான் இருக்கும். ஆனால் உனக்கு பிடிக்கவில்லை எனும்பொழுது வற்புறுத்தி என்ன செய்வது? நன்றாக இருக்கின்ற மனநிலையை இது போன்ற அற்ப காரணங்களுக்காக கெடுத்துக் கொள்ள வேண்டாம். விடுங்கள் சம்பந்தி... இந்த காலத்துப் பிள்ளைகளுக்கு என சில தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு இருக்கிறது. அதில் நாம் தலையிட்டால் வருத்தம் தான் மிஞ்சும் அவர்களின்

போக்கிற்கே அனுசரித்து செல்ல வேண்டியது தான்!" என்றவர் தன் கைகளிலிருந்த பால் சொம்பை ஹிரணியின் கைகளில் கொடுத்தார்.

"இந்த வீட்டில் இன்று தொடங்கும் உங்கள் இருவரின் வாழ்விலும் அனைத்து செல்வங்களும் வந்து சேர அந்த இறைவனை பிரார்த்தித்து கொள்கிறேன்!" என்று அவள் உச்சியில் தன் கரம் பதித்து ஆசிர்வதித்தார் பவானி.

தயக்கத்துடன் கூடிய மெல்லிய புன்னகையை அவரிடம் சிந்தியவள் தன் அன்னையை ஓரவிழியில் நோக்க, மங்களம் வேகமாக முன்னே வந்தாள்.

"சரிங்கம்மா... நான் பாப்பாவை அழைத்து சென்று மாப்பிள்ளையின் அறையில் விட்டு வருகிறேன்!"

"ஆங்... சரி சரி செய்யுங்கள், நான் கீழே காத்திருக்கிறேன் வாருங்கள்!" என்று பவானி படியிறங்க ஆரம்பிக்க, அவரை நோக்கி ஒரு ஏளனப் புன்னகையை சிந்திய ஹிரண்மயி மங்களத்துடன் அகிலனின் அறை நோக்கி சிந்தனையுடன் நடந்தாள்.

அகிலன்! பவானி அம்மாவின் அருமருந்தன்னப் புத்திரன். படிப்பு, வேலை எல்லாம் ஐடி துறையில், ஆறு மாத பிரொஜக்ட் ஒன்றிற்காக கனடா சென்றிருந்தவன் இரண்டு தினங்களுக்கு முன்பு தான் தாயகம் திரும்பியிருந்தான்.

தன் தாயின் வற்புறுத்தலால் வேறு வழியின்றி தன்னுடைய இருபத்தி ஏழாவது வயதில் மூன்று மாதங்களுக்கு முன்பு தான் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்திருந்தான். இன்னும் ஓரிரு ஆண்டுகள் கழித்து திருமண பந்தத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்றிருந்தவனை பவானியின் சில இமோஷனல் பிளாக்மெயில்கள் தான் அவர் கூற்றிற்கு அவனை ஒத்துக்கொள்ள வைத்திருந்தது.

அகில் சம்மதம் தெரிவித்த மறுநாளே தங்கள் பிரிவு சங்கத்தில் பதிவு செய்து பெண் தேடும் படலத்தை

ஆரம்பித்து விட்டார் பவானி. ஆனால் முதல் இரண்டு மாதங்களாக பல்வேறு பெண்களின் ஜாதகங்கள் கிடைத்தும் பொருத்தம் பார்த்தால் அகிலின் ஜாதக கட்டத்துடன் சேராமல் விலகி நின்றது. ஒரு சில பெண்களின் அழகு, வேலை, குடும்ப பிண்ணனி என்று ஏதாவது ஒன்று பலவகையில் அவரை கவர்ந்தாலும் ஜாதக விஷயத்தில் துணிந்து முடிவெடுத்து தன் மகனின் எதிர்கால வாழ்வை கேள்விக்குறியாக்க அவர் தயாராக இல்லை.

இந்நிலையில் தான் கடந்த மாதம் சங்கத்திற்கு சென்றிருந்த பொழுது ஹிரண்மயினுடைய ஜாதகம் பவானியின் கைகளுக்கு கிடைத்தது. அவளுடைய புகைப்படத்தை பார்த்ததுமே லட்சணமான பெண் என்று அவருக்கு பிடித்துவிட கடவுளிடம் பலமாக ஒரு வேண்டுதலை வைத்துவிட்டு பொருத்தம் பார்க்க சென்றார். குடும்ப ஜோசியரோ இது போன்ற ஒரு பொருத்தமான ஜாதகத்தை இதுவரையில் நான் பார்த்ததே இல்லை என ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து அவர் வயிற்றில் பாலை வார்த்தார். உங்கள் மகனுக்காவே பிறந்தவள் இந்தப் பெண், இவளின் வருகையால் உங்கள் வீடும் மகனுடைய வாழ்வும் சிறப்பாக இருக்கும் என்று வாக்கு கொடுத்தார். உள்ளமெல்லாம் பூரிக்க வீட்டிற்கு வந்து அகிலுக்கு விஷயத்தை தெரியப்படுத்தும் முன் ஹிரணியின் ஜாதகத்துடன் இணைந்த அவளின் பயோடேட்டாவை முழுவதும் படித்துப் பார்த்தவருக்கு இவள் தங்கள் குடும்பத்துக்கு ஒத்து வருவாளா என்ற ஐயம் திடீரென்று உதித்தது.

குழப்பத்துடன் அகிலுக்கு போன் செய்து பரஸ்பர நல விசாரிப்புக்கு பின் தயக்கத்துடன் தற்பொழுது வந்திருக்கும் பெண்ணின் ஜாதகப் பொருத்தத்தையும், படிப்பையும் விளக்கியவர் தனது மனநிலையையும் அவனிடம் முன் வைத்தார்.

"பெண் பார்ப்பதற்கு நன்றாக அழகாக இருக்கிறாள்டா, ஜாதகமும் அருமையாக பொருந்துகிறது. ஆனால் அவள் படிப்பு தான் சற்று யோசனையாக இருக்கிறது. மேற்கொண்டு அவர்கள் வீட்டில் பேசலாமா வேண்டாமா என்று தயக்கம் தோன்றுகிறது!"

"அது ஒன்றும் நீங்கள் பயப்படும் அளவுக்கு பெரிய பிரச்சனை இல்லைம்மா அவள் வக்கீலுக்கு படித்திருந்தாலும் கோர்ட், கேஸ் என்று அலையவில்லையே... ஒரு தரமான கம்பெனியில் லீகல் அட்வைசராக தானே பணிப்புரிகிறாள். பிறகென்ன கவலை, குழப்பம் எல்லாம்? அவள் வக்கீல் தொழிலில் ஈடுபட்டு பலதரப்பட்ட மனுக்களுக்காக நீதிமன்றத்தில் வழக்காடினால் தான் அவளுக்கோ, நமக்கோ தேவையில்லாத சிக்கல்கள் ஒருவேளை வரலாம் என பயப்படலாம். இந்த வேலையில் அதுப் போன்ற பாதிப்புகள் ஒன்றுமில்லை. இப்பொழுதெல்லாம் பல கம்பெனிகளில் ஹெ.ஆர் டிபார்ட்மென்டில் எம்.பி.ஏ. ஆட்களை விட பி.எல், எம்.எல் ஆட்களை தான் அதிக சம்பளம் கொடுத்து தேர்த்தெடுக்கின்றனர். அவள் அது போன்ற காரணத்திற்காக கூட அந்த படிப்பை தேர்ந்தெடுத்து படித்திருக்கலாம்!" என்றான் அவருக்கு தெளிவாக.

"ஓ... அப்படி சொல்கிறாயா? அப்பொழுது பிரச்சினை ஒன்றும் வராது இல்லை?"

"அவ்வளவு கஷ்டம் ஏன்? குழப்பமாக இருந்தால் விடுங்கள், வேறுப்பெண்ணை பார்க்கலாம்!"

அவனை பொறுத்தவரை இன்னும் சிறிது காலம் திருமணம் தள்ளிச் சென்றாலும் பிரச்சினையில்லை.

"இல்லை... இல்லை... உன் ஜாதகத்துக்கு பெண்ணை பிடிப்பதே பெரும்பாடாக இருக்கிறது. இதில் நன்றாக பொருந்துவதையும் தள்ள வேண்டாம். இந்த பெண்ணையே பேசி முடித்துவிடலாம் குறிப்பில் பார்த்தால் குடும்பமும் நல்ல குடும்பமாக தான்

தெரிகிறது. ஏன் தானாக வரும் நல்ல வாய்ப்பை தவிர்க்க வேண்டும்?"

"சரி உங்கள் இஷ்டம்!" என்று ஒரே வரியில் முடித்து விட்டான் அகில்.

அவன் சொல்லில் அகமும், முகமும் ஒன்றென மலர்ந்தவர், "அப்படியென்றால் நான் முதலில் பக்கத்தில் இருக்கும் இன்டர்நெட் மையத்திற்கு சென்று பெண்ணுடைய போட்டோவையும், பயோடேட்டாவையும் உனக்கு அனுப்பி வைக்கிறேன். நீ பார்த்து அபிப்பிராயம் சொல், உனக்கு பிடித்து விட்டால் பெண் வீட்டாரிடம் பேசி விடலாம்!" என்றார்.

"ஓகே அனுப்புங்கள்!" என்று லைனை கட் செய்து விட்டு காத்திருந்தான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் பவானி அனுப்பி வைத்த தகவல்கள் அவனது மெயில் பாக்ஸை வந்தடைய அதை திறந்து விழிகளை மேயவிட்டான்.

பார்த்தவுடனே பளிச்சென்று நேர்ப்பார்வையாய், தீட்சன்யமாய் இருந்த விழிகள் அவன் மனதை கவர நிதானமாக அவளை அளவிட்டான். இதழ்கள் விரிய புன்னகையுடன் இருந்தாலும் அவை விழிகளை எட்டவில்லை அவளிடம் சற்றே அலட்சியம் இருக்கிறதோ என்ற எண்ணம் அவனுக்கு தோன்றியது.

இருக்கலாம்... படிப்பும், பதவியும் அப்படி. ஆனால் நேர்ப்பார்வை அவளிடம் இருக்கும் நேர்மையை பறைசாற்ற அதற்கு மேல் எதையும் எண்ணி குழம்ப விரும்பாமல் பவானிக்கு போன் செய்து தன் விருப்பத்தை கூறிவிட்டான் அகிலன்.

உடனே மகிழ்ச்சியுடன் அவனுக்கு வாழ்த்து தெரிவித்துவிட்டு அவன் எப்பொழுது நாடு திரும்புவான் என்பதையெல்லாம் விசாரித்தறிந்துக் கொண்டு பெண் வீட்டாருடன் பேசினார். அவர்களும் அகிலின் புகைப்படம்

மற்றும் பயோடேட்டாவை பார்த்து திருப்தியடைந்து தங்கள் பெண்ணிடம் தெரிவித்தனர்.

ஹிரணியும் சம்மதம் தெரிவிக்க, இதோ... திருமணம் முடிந்து தங்களின் இனிமையான இல்லற வாழ்வை துவங்க ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

நறுமண மலர்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட அறையில் சற்றே குழப்பத்துடன் கரங்களை மார்புக்கு குறுக்கே கட்டியபடி படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தான் அகில்.

அருகிலுள்ள சிறு வட்ட மேஜையில் பழங்களும், இனிப்பு வகைகளும் வரிசையாக அடுக்கப்பட்டிருக்க அவனோ பெருமூச்சொன்றை மெல்ல வெளியேற்றியபடி தலையை தாங்கினான்.

திருமணம் முடிவானதும் ஹிரணியுடன் இருமுறை அலைபேசியில் பேசியிருக்கிறான் அகில். முதல் முறை தங்களின் அறிமுகங்களை தவிர வேறெதுவும் பேசாமல் முடித்துவிட்டனர். மறுமுறையாவது தன் மனதிலிருப்பதை அவளிடம் தெரிவித்துவிட வேண்டும் என பலமுறை தன்னை தயார்படுத்திக் கொண்டு அவளை அழைத்தான்.

ஆனால் அவள் குரல் கேட்ட மறுநிமிடம் தொண்டை அடைத்து வார்த்தைகள் வெளிவர மறுத்தது. அவளிடம் சம்பந்தமில்லாமல் ஏதேதோ உளறிவிட்டு பேச எண்ணியதை பேசாமல் விட்டான்.

கதவை தட்டும் சிறு ஒலியை தொடர்ந்து கதவு திறக்கப்பட லேசான பதட்டத்துடன் நிமிர்ந்து அமர்ந்தான் அகில்.

சின்ன தயக்கத்துடன் உள்ளே வந்த ஹிரண்மயி அவனிடம் ஒரு பார்வையை வீசிவிட்டு அருகில் வந்தாள்.

எதிரே வந்து நிற்பவளிடம் என்ன பேசுவதென்று ஒரு கணம் புரியாமல் தடுமாறிவிட்டு பின் வேகமாக உட்கார் என தன்னெதிரே கை காண்பித்தான்.

மெத்தையில் அவன் எதிரே மெதுவாக அமர்ந்தவள் தன் கரங்களில் இருந்த பால் சொம்பை நோக்கிவிட்டு அவனிடம் நிமிர, புரிந்துக் கொண்டவன் அதை வாங்கி அருகிலுள்ள டீபாயில் வைத்தான்.

பின் சட்டென்று நெற்றி சுருங்க, "நீ எதுவும் குடிக்கிறாயா?" என்று அவளிடம் வினவினான் அகிலன்.

மனைவியிடம் ஒரு வார்த்தை கேட்காமல் தான் பாட்டுக்கு வாங்கி வைத்தது சரியா தவறா என்ற குழப்பம் அவனுக்குள் திடீரென்று தோன்றியது.

"இல்லை எனக்கு வேண்டாம்!" என்று உடனே மறுத்தாள் ஹிரணி.

ம்... என்ற கணவன் வேறெதுவும் பேசாமல் சிந்தையில் ஆழ, அவன் முகத்தை கூர்ந்துப் பார்த்த மனைவியும் தன் சிந்தனையில் மூழ்கினாள்.

இவனும், இவன் அம்மாவும் இவளிடம் மறைக்கும் விஷயம் என்னவென்று இவளுக்கு நன்றாக தெரியும். ஆனால் இவள் எதை மறைத்து இந்த வீட்டிற்குள் நுழைந்துள்ளாள் என்பது தான் பாவம் இவர்களுக்கு தெரியாது என்று தனக்குள் ஏளனமாக புன்னகைத்துக் கொண்டாள் ஹிரண்மயி.

உடனே முகம் தீவிரமாக தன்னுடைய செயல்களுக்கான காரண காரியத்தை ஆராய்ந்து அதில் மூழ்க துவங்கினாள்.

2

நிமிடங்கள் கரைய தன் சிந்தையிலிருந்து முதலில் வெளியே வந்த அகிலன் நிமிர்ந்து ஹிரணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

அவளோ இன்னும் தன் உலகத்திலிருந்து வெளி வராமல் விழிகள் சுவற்றை வெறித்திருக்க யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

'என்ன இது? நான் தான் இவளிடம் எப்படி விஷயத்தை கூறுவது என குழம்பிக் கொண்டிருக்கிறேன் என்றால் இவள் எனக்கும் மேல் குழப்பத்துடன் இருப்பது போல் தோன்றுகிறதே... இவளும் என்னிடம் எதையாவது மறைக்கிறாளா என்ன? அப்படியென்றால் அது என்னவாக இருக்கும்? ஒருவேளை... இவள் வாழ்க்கையில் ஏதாவது பாஸ்ட் லவ் இருக்குமோ? சரி, முதலில் இவளை பேச வைப்போம். பிறகு அதைப் பொறுத்து நாம் நம் விஷயத்தை ஆரம்பிக்கலாம்!'

"ஹிரண்மயி!"

"ஆங்..." என்று தன்னிடம் திரும்பியவளின் விழிகளில் சற்று முன்பிருந்த தெளிவு இல்லாமல் அவை லேசாக சலனமுற்றிருப்பதை மனதில் குறித்துக் கொண்டான் அகில்.

"வாட்ஸ் தி பிராப்ளம்? சம்திங் பாதரிங் யூ. என்னிடம் ஷேர் பண்ணக் கூடியது என்றால் தயக்கமின்றி சொல்லலாம்!"

ம்... என்று ஆமோதிப்பாக தலையசைத்தவள், "நான் சொல்லப் போவதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என தெரியவில்லை. திருமணம் என்ற ஒன்று நடந்து விட்டால் அடுத்து இது தான் என்று..." என வேகமாக பேசிக் கொண்டே சென்றவள் சற்றுத் தயங்கி நிறுத்தி, "இந்த உறவை அப்படி உடனே கட்டாயமாக

ஆரம்பிக்க வேண்டுமா என்ன?" என்று புருவம் சுருக்கி எடுப்பாக வினவினாள்.

அதை ரசித்தவனின் இதழ்களில் மெல்லிய முறுவல் பூக்க, "அப்படியென்று யார் சொன்னார்கள்?" என கேட்டவனின் விழிகள் குறும்பில் மின்னியது.

தன் சொல்லால் ஒன்று அவன் எரிச்சலடைவான் அல்லது தன்னை சமாதானம் செய்து தனக்கு சாதகமாக மாற்ற முயல்வான் என்று அவள் கணித்திருக்க அதற்கு மாறாக வெளிவந்த அகிலின் கேள்வி அவளை நெற்றி சுருங்க வைத்தது.

"அப்பொழுது இந்த அரேன்ஜ்மென்ட்ஸ் எல்லாம்..." என்று அவள் முடிக்காமல் நிறுத்த, "ஸோ வாட்?" என தோள்களை குலுக்கினான் அகில்.

"ஸீ... இது பெரியவர்களின் கடமையாக அவர்கள் எண்ணுகிறார்கள். நல்ல நாள் பார்த்து திருமணத்தை முடிப்பது போல் நல்லநேரம் பார்த்து மணமக்களுக்கு இதை ஏற்பாடு செய்து விட்டால் அவர்களுடைய பொறுப்பு நிறைவடைவதாக அவர்கள் நிறைவுக் கொள்கிறார்கள். அதைத் தொடர்ந்த நம் வாழ்வை நாம் நல்லபடியாக பார்த்துக் கொள்வோம் என்று அவர்கள் நம்புவதில் என்ன தவறு இருக்கிறது?"

'இப்பொழுது இவன் என்ன தான் சொல்ல வருகிறான்?' என்று அவனை புரிந்துக் கொள்ள இயலாமல் அயர்வுடன் பார்த்தாள் ஹிரணி.

அவள் பாவனைக் கண்டு நகைத்தவன், "ஏன்டா என்னை இப்படி குழப்புகிறாய் என கேட்க தோன்றுகிறதா?" என்று கண்சிமிட்டினான்.

சற்றுமுன் அவனுக்குள் இருந்த தவிப்பு குறைந்திருந்தது.

அவனுடைய குபீர் சிரிப்பிலும், கண்சிமிட்டலிலும் தன்னையுமறியாமல் தடுமாறியபடி தலையாட்டச் சென்று விட்டவள் சட்டென்று சுதாரித்து இல்லை என்று மறுப்பாக தலையசைத்தாள்.

"பொய்..." என்று அவளிடம் தன் சுட்டுவிரலை நீட்டினான் அவன்.

எவ்வளவு தான் தன்னை கட்டுப்படுத்த முயன்றாலும் முடியாமல் அவளையும் மீறி இதழ்களில் நகை அரும்பியது.

"ம்... ஒத்துக்கொள்கிறேன், ஆமாம் தான்!" என்றாள் புன்னகையுடன்.

"எஸ்... தட்ஸ் குட்... என்ன பிரச்சினை என்றாலும் பேசி தீர்த்துக் கொள்ளலாம். அதற்கெதற்கு இவ்வளவு டென்ஷனாக சீரியசாக இருக்கிறாய் நீ?"

ஹிரணியின் முகத்திலிருந்த புன்னகை துணி கொண்டு துடைத்தாற் போல் பட்டென்று ஒளிக்குன்ற அவள் உடலில் லேசான இறுக்கம் வந்தது.

"அப்பொழுது இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நாம் நம் வசதிக்கு வாழலாம் என்கிறீர்கள்!"

"யா... அப்சலூட்லி!" என்று கைகளை விரித்தான் அகில்.

"தென்... ஓகே ஃபைன், எனக்கு கொஞ்சம் டயர்டாக இருக்கிறது நான் தூங்குகிறேன்!" என்று எழுந்தாள் அவள்.

திகைப்புடன், "என்ன?" என்றவனிடம் திரும்பியவள் பதிலுக்கு, "என்ன?" என்றாள் புரியாமல்.

"நீ இவ்வளவு நேரமாக குழம்பியது... என்னிடம் பேச நினைத்தது எல்லாம் இதற்காக மட்டும் தானா?" என்றான் குழப்பத்துடன்.

"ஆமாம்... வேறென்ன இருக்கிறது?" என்று அலட்சியமாய் மொழிந்து விட்டு சுற்றிலும் பார்த்தாள் ஹிரண்மயி.

பதிலின்றி அவளை கூர்ந்தவனின் மூளையில் சம்திங் ராங் என்ற எச்சரிக்கை உணர்வு தோன்றியது. தன்னை மீறி தன்னிடம் புன்னகைத்த நேரம் தவிர மீதி நேரம் முழுவதும் அவள் முகத்தில் ஏதோ ஒரு முகமூடி

அணிந்துக் கொண்டு சுற்றுகிறாளோ என்கிற ஐயம் ஏற்பட்டது.

விழிகளால் அறையை அளந்து விட்டு அவனருகே வந்தவள், "நான் இந்த பெட்ஷீட்டும், பில்லோவும் எடுத்துக் கொள்ளட்டுமா?" என்றாள்.

அகிலன் முகம் மாறாமல் சம்மதமாக தலையசைக்க, தாங்க் யூ என்று முனகிவிட்டு சென்று பெட்ஷீட்டை விரித்தவள் அமைதியாகப் படுத்துக் கொண்டாள்.

அவளிடமிருந்து வந்த தாங்க் யூ என்ற சொற்களும் மனமுவந்து வெளிவராமல் கடமையே என்று வந்தது போலிருந்தது அவனுக்கு.

சட்டென்று இதயத்தில் இனம்புரியாத வெறுமை சூழ்ந்துக் கொள்ள, இதுவரை தன் குழப்பத்திலேயே முழுதாக உழன்றுக் கொண்டிருந்தவன் முதன்முறையாக அவளைப் பற்றி ஆராய்ந்துப் பார்த்தான்.

காலையில் திருமணத்தின் பொழுது கோவிலில் தான் அவளை நேரிலேயே சந்தித்தான் அகில், அதுவும்... மணமகளாக. அறிமுகப்படலத்தின் பொழுது கூட அவள் விழிகளில் தனக்கான தனிப்பட்ட பளிச்சிடல் எதுவுமின்றி இதழ்களில் சிறு வெட்கப் புன்னகை கூட தோன்றிய மாதிரி நினைவில் இல்லை. கடமையே என உதட்டை விரித்தவள் ஹாய் என்றதோடு நிறுத்திக் கொண்டதாக ஞாபகம். சற்று முன்னரும் அப்படித்தானே புது மணமகனாக எனக்கிருந்த லேசான பதட்டமும், குழப்பமும் கூட அவளுக்கிருந்தது போல் தெரியவில்லையே... சிறிய தயக்கத்துடன் இயல்பாக உள்ளே வந்தவளை தூண்டி விட்டது தான் தாமதம் தன் மனதிலிருந்ததை மடமடவென்று பேசிவிட்டு சென்று படுத்துக் கொண்டாள்.

என்னுடைய எதிர்பார்ப்பை பற்றியோ விருப்பத்தை பற்றியோ அவள் மருந்துக்கும் கவலைப்பட்டது போல் தெரியவில்லையே... அப்படியென்றால் என்ன அர்த்தம்? என் விருப்பு, வெறுப்புகளை பற்றி அவளுக்கு சற்றும்

அக்கறையில்லை என்று அர்த்தமா... அது எப்படி முடியும்? கணவன், மனைவியாக முறையாக இல்வாழ்க்கையில் இணைந்தப் பிறகு இருவரும் ஒருவரை பற்றி மற்றவர் அறிந்துக் கொள்ள முயற்சிக்க வேண்டாமா? அது தானே தாம்பத்தியத்தின் முதல் பாடம். படித்தப் பெண்ணான இவளுக்கு இது தெரியாதா என்ன? ஃபார்மாலிட்டிக்கு கூட உங்கள் அபிப்ராயம் என்ன என்று ஒரு வார்த்தை கேட்க தோன்றவில்லையே அவளுக்கு... என்று யோசித்தவனுக்கு வருத்தமே மிஞ்சியது.

ஒரு கணவனாக அவளிடம் மனைவி என்கிற உரிமையில் தன் வாழ்க்கையில் இருக்கின்ற பிரச்சினை குறித்து மனம் விட்டுப் பேசி தன்னை புரியவைத்து விடைக் காணலாம் என்று பார்த்தால் அவள் தன்னை ஒரு பொருட்டாக கூட எண்ணாமல் தள்ளி நிற்பது போன்ற ஒரு பிரமை தோன்றியது அவனுக்கு. அது உண்மையா பொய்யா என்று அவனால் தெளிவாகப் பகுத்தறிந்து புரிந்துக்கொள்ள இயலவில்லை.

ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினையில் புதியதாக தான் திருமணம் செய்திருக்கும் மனைவியின் குழப்பமும் சேர்ந்துக் கொள்ள அகிலுக்கு தலை விண்விண்ணென்று தெறிப்பது போல் வலியெடுக்க ஆரம்பித்தது.

லேசாக தலையை அழுத்தி விட்டுக் கொண்டவனுக்கு வெளியே சென்று சற்று காற்று வாங்கினால் நன்றாக இருக்கும் என்று தோன்ற, படுக்கையில் இருந்து இறங்கி கதவுவரை சென்று குமிழில் கை வைத்தவனுக்கு சட்டென்று பொறி தட்டியது.

ச்சை... என முன்நெற்றியில் தட்டிக் கொண்டவன், 'இன்று தான் திருமணமாகி முதலிரவு அறைக்குள் இருப்பவன் இந்நேரத்திற்கு வெளியே சென்றால் அம்மாவுக்கும், மாமியாருக்கும் யார் பதில் சொல்வது? என்னவோ ஏதோ என்று ஆயிரம் கற்பனைகள் செய்துக் கொண்டு பதறுவார்கள்!' என சலிப்புடன் உள்ளே திரும்பியவன்

தனக்கு முதுகை காண்பித்தவாறு படுத்திருந்த மனைவியை பார்த்தான்.

'இவள் உண்மையிலேயே தூங்கி விட்டாளா என்ன? இவளால் மட்டும் எப்படி படுத்தவுடனே இப்படி நிம்மதியாக தூங்க முடிகிறது? தனக்குள் எதையாவது ரகசியத்தை மறைத்து வைத்திருப்பவர்களுக்கு உறக்கமே வராது என்பார்களே... இவள் எந்த சலனமும் இல்லாமல் அமைதியாக உறங்குவதை பார்த்தால் நான் தான் தேவையில்லாமல் எதை எதையோ கற்பனை செய்துக் கொண்டு குழம்புகிறேனோ, இருக்கலாம்... அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல எனக்குள் இருக்கும் குற்றவுணர்ச்சியே கூட அவளை தவறாக கணிக்கலாம். அவளுடைய இயல்பே தனக்கு தேவையானதை மட்டும் பேசி எதிரில் உள்ளவர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் தன் வசதிக்கு ஏற்ப நடந்துக் கொள்வதாக இருக்கலாம். அவள் என்னிடம் பேசிய விஷயத்திற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் அவளை ஒட்டி தானே நானும் பேசினேன்!' என்று மெல்லியதாக பெருமூச்சொன்றை வெளியேற்றினான் அகிலன்.

விடிவெள்ளி விளையும் வேளையில் ஒலித்த பறவைகளின் கரைதல் ஹிரணியின் தூக்கத்தை மெல்ல கலைத்தது.

மெதுவாக புரண்டுப் படுத்தவளுக்கு சில வருடங்களாக பழகியிருந்த மென்மையான மெத்தை சுகம் இல்லாமல் தரையில் விரித்த வெறும் படுக்கை விரிப்பு முதுகை அழுத்த முகம் சுளித்தபடி திரும்பி நேராக படுத்தாள்.

கைகளை உயர்த்தி சோம்பல் முறிக்க இருந்த நேரம் புலன்கள் வேலை செய்ய படுவேகமாக தன் கழுத்தை தொட்டுப் பார்த்தவள் திரும்பி கட்டிலைப் பார்க்க, அகில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

இத்தனை நேரமாக தன்னை மறந்து எப்படி இப்படியொரு உறக்கத்தில் ஆழ்ந்தோம்? அதுவும் புதிய இடம், இதுவரை

இல்லாத வழக்கமாக தனியாக இருக்கும் ஒரு ஆடவனின் அறையில் உறங்குகிறோம் என்கிற அடிப்படை விழிப்புணர்வு கூட தனக்குள் எழவில்லையே... என்று தவிப்புடன் தலையை அழுத்திக் கொண்டவளுக்கு தன் மேலேயே வெறுப்பு வந்தது.

அவளுக்கு விவரம் தெரிய ஆரம்பித்த வயதிலிருந்தே நேற்று வரை தன் வாழ்க்கையில் இந்தளவுக்கு அவள் என்றும் ஆழ்ந்து உறங்கியதே இல்லை. அதுவும் இன்று இருக்கும் சூழ்நிலையில் அவள் முன் மலைப்போல் பெரும் பிரச்சினைகள் குவிந்துக் கிடக்க நிம்மதியான உறக்கம் என்பது எங்கிருந்து இவளுக்கு வந்தது என்கிற கேள்விக்கு மட்டும் அவளிடம் விடை கிடைத்தப்பாடில்லை.

ஒருவேளை... அவள் விழிகள் அவளையும் மீறி அகிலனிடம் சென்று நிலைத்தது. நேற்று இரவு எனக்கு சாதகமாக இவன் ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டதே என் மனதை இந்தளவிற்கு தன்னிறைவு அடையச் செய்து விட்டதா என்ன? ச்சை... அப்படியிருக்காது, இந்த திருமண பந்தத்தில் தன்னை இவள் பிணைத்துக் கொண்டது எதற்காக என்பது நினைவில் வர அதுதான் சரி என்ற முடிவிற்கு வந்தாள் ஹிரண்மயி.

கடந்த ஒரு மாத காலமாக இந்த குடும்பத்தில் தான் எப்படியாவது மருமகளாக நுழைந்துவிட வேண்டும் என்று எனக்குள் ஏற்பட்டிருந்த மன உளைச்சல், இந்த திருமணம் நல்லபடியாக நிறைவடையவும் பெரும் அமைதியை அடைந்துவிட்டது போலிருக்கிறது. அதனால் தான் இப்படியொரு நிம்மதியான தூக்கம் வந்திருக்கிறது என்றெண்ணி பெருமூச்சொன்றை வெளியேற்றியவள் அடுத்து தன் திட்டங்களை எல்லாம் எவ்வாறு எப்பொழுது அமுல்படுத்துவது என்று தனக்குள் திட்டமிட ஆரம்பித்தாள்.

கண்டிப்பாக நேற்று முதல் தனக்கு மாமியார் என்ற பதவியை அடைந்திருக்கும் பெண்மணி மூலம் இதற்கு நிறைய இடையூறுகள் வரலாம். இவன் எப்படி?

கேள்விப்பட்ட வரையில் இவனை பற்றி எந்தவொரு புறஞ்சொல்லும் இல்லை. ஆனால்... அதற்காகவெல்லாம் இவன் என்னை ஆதரிப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவும் இந்த வீட்டிற்குள் நான் வருவதற்கு பயன்படுத்திக் கொண்ட துருப்புசீட்டு தான் இவன் என்பது தெரியவரும் பொழுது இவனுடைய நடவடிக்கைகள் எனக்கெதிராக எப்படி வேண்டுமென்றாலும் திரும்பலாம்.

ஒரு நிமிடம் பதற்றத்தில் விரல்களை நெட்டி முறித்தவள் அடுத்து பலமாக தலையை உதறிக் கொண்டு நிமிர்ந்தாள்.

'நோ... இவன் ஆதரவு எனக்கு கிடைத்தால் தான் என்ன இல்லாவிட்டால் தான் என்ன? ஐ டோன்ட் கேர் அபௌட் தட், நான் நினைத்ததை முடிப்பேன்!' என்று தனக்குள் சூளுரைத்தவள் படுக்கையை விட்டு தீர்மானத்துடன் எழுந்தாள்.

3

குளித்து முடித்து ராயல் ப்ளு ஃபிளோரல் பிரின்டட் புடவையை தன் உடலில் சுற்றிய ஹிரண்மயி கூந்தலை லேசாக உலர வைத்து, காதின் ஓரம் இருபுறமும் மெல்லியதாக முடியை பிரித்து நடுவில் சேர்த்து முறுக்கியவள் அதில் சிறிய கிளிப் ஒன்றை மாட்டினாள். நெற்றியில் ஸ்டிக்கரை ஒட்டியவளின் விரல்கள் தன் வகிட்டில் குங்குமம் இடச் சென்றப் பொழுது அவளையும் மீறி பார்வை தன்னவனிடம் தாவியது.

கவிழ்ந்துப் படுத்து தலையணைக்கடியில் கரங்களை புதைத்திருந்தவனிடம் ஒரு அசைவும் இல்லை.

'இவன் என்ன இப்படி அசந்து தூங்குகிறான்? மணி ஆறரை ஆகிவிட்டது. எப்பொழுதும் இப்படித்தான் தூங்குவானோ... என்னை பற்றிய விவரம் தெரிந்தப் பிறகு இவனால் இப்படி நிம்மதியாக தூங்க முடியுமா?'

'என்ன வாழ்க்கை இது முற்றிலும் விந்தையாக... எதற்காக வேண்டி என்ன செய்துக் கொண்டிருக்கிறேன் நான்?' என்று தன் பிம்பத்தை கண்ணாடியில் நோக்கியவள் இதழ்களை அழுந்த மூடி ஒரு அழுத்தமான பார்வையை வீசி விட்டு வெளியேறினாள்.

கீழே இறங்கியவள் கிச்சனில் அரவம் கேட்டு ஓசையின்றி எட்டிப் பார்த்தாள். பவானி தான் அடுப்பில் இருந்து எதையோ இறக்கி கொண்டிருந்தார்.

'இந்த தத்துபித்து அம்மாவை எங்கே காணவில்லை? இன்னும் தூங்குகிறதா? இரவு இவர்களிடம் எதையும் உளறாமல் ஒழுங்காக இருந்ததா என்னவென்று தெரியவில்லையே...' என்று இதழ் கடித்தபடி மங்களத்தை தேட, அவள் அறையில் பவானி கொடுத்த காபியை நிதானமாக ருசித்தபடி ஏதோ புத்தகத்தை மேய்ந்துக் கொண்டிருந்தாள்.

சரியான புத்தகப் பைத்தியம், கையில் புத்தகம் இருந்தால் போதும் எதிரில் யாராவது வந்து வெடிக்குண்டை எறிந்தால் கூட தெரியாது.

அருகில் சென்ற ஹிரணி அவள் தோளை தட்ட, திரும்பிக் கூட பாராமல் தோளில் ஏதோ தூசி விழுந்தது போல் தட்டிவிட்டு அவள் மீண்டும் வாசிப்பில் ஆழ பல்லைக் கடித்தவள் புத்தகத்தை பிடுங்கினாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்தவள், "அடப் பாப்பா... எழுந்து விட்டாயா?" என ஈயென்று இளித்தவளின் கேள்வியை அலட்சியப்படுத்தி விட்டு தன் கேள்வியை தொடுத்தாள் பெண்.

"அப்புறம்... உங்கள் சம்பந்தியம்மாவிடம் இரவெல்லாம் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்? நீங்கள் எப்பொழுது கிளம்புவதாக சொல்லி இருக்கிறீர்கள்?"

"நான் கிளம்புவதா? அவர்கள் என்னிடம் உன்னையும், மாப்பிள்ளையையும் மறுவீடு சம்பிரதாயத்திற்காக நம் வீட்டிற்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள். அப்பாவை கூட போன் செய்து இங்கே வரச் சொல்லி விட்டேன் நான்!" என்றாள் மங்களம் பொறுப்பாக.

"வாட்?" என அதிர்ந்தவளோ, "யாரை கேட்டு சம்மதம் சொன்னீர்கள் நீங்கள்? நான் உங்களிடம் என்ன சொல்லி வைத்திருந்தேன்!" என்று உறுத்து விழித்தாள்.

"நீ சொன்னதெல்லாம் சரி பாப்பா, காலையில் டிபன் முடித்துவிட்டு கிளம்புவதாக தான் நானும் சொன்னேன். ஆனால் அவர்கள் தான் புது மணமக்களை மறுவீடு அழைத்து செல்ல வேண்டும் அதுதான் முறை என்றார்கள். அப்பொழுதும் நான் சொன்னேன், இதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது நான் பெண்ணிடம் கேட்டு சொல்கிறேன் என்றேன். சின்னப்பெண் அவளிடம் என்ன கேட்பது உங்களுக்கே விஷயம் தெரியவில்லை, நான் சொன்னதை செய்யுங்கள் என்று முடித்து விட்டார்கள். பையனை பெற்றவர்கள் இல்லையா?

என்னால் அதற்குமேல் ஒன்றும் எதிர்த்துப் பேச முடியவில்லை!" என்று தலையை சொரிந்தாள்.

"காட்! டோட்டலாக சொதப்பி வைத்திருக்கிறீர்கள்... இப்பொழுது தேவையில்லாமல் அந்த வீட்டிற்கு வேறு அலைந்துக் கொண்டு பொழுதை வீணடிக்க வேண்டுமா?" என்று கண்களை இறுக மூடி தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள் ஹிரணி.

"நான் என்ன செய்யட்டும்? அவர்கள் தான்..."

"ப்ச்... சரி விடுங்கள், இதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலாது கிளம்பித் தான் ஆக வேண்டும். ஆனால் இனிமேலாவது கொஞ்சம் சமயோசிதமாக என் திட்டப்படி நடக்கப் பாருங்கள்!" என்றாள் எரிச்சலுடன்.

மங்களம் பலமாக தலையை உருட்ட, காதை ஒட்டிய கன்னத்துக் கதுப்பில் சுருண்டிருந்த முடிக்கற்றைகளை லேசாக கோதி பின்னே ஒதுக்கியவள் முகத்தை சீர்ப்படுத்திக் கொண்டு பவானியை தேடிச் சென்றாள்.

வாணலியில் எதையோ தாளித்துக் கொண்டிருந்தவரின் அருகில் செல்லவும் இவள் வரவை உணர்ந்து திரும்பியவர், இவளிடம் இதமாக முறுவலித்தார்.

"வாம்மா... காபி சாப்பிடுகிறாயா?" என்று வினவியபடி அடுப்பின் அனலை குறைத்தவர், அவளுக்கு டிகாஷன் கலந்தார்.

"பரவாயில்லை கொடுங்கள், நானே கலந்துக் கொள்கிறேன்!"

"அதனால் என்ன... பிடி!" என்று அவளிடம் கப்பை நீட்டினார்.

தேங்க்ஸ்... என்றதுடன் சின்னப் புன்னகையை வெளியிட்டவள் கப்பை வாங்கிக் கொண்டாள்.

"அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன், நீயும், அகிலும் ஒரு பத்து மணி வாக்கில் கிளம்பி அம்மா, அப்பாவுடன்

மறுவீட்டிற்கு உங்கள் வீடு போய்விட்டு இரவு நம் வீட்டிற்கு வந்து விடுங்கள். என்ன?" என்றபடி கறிவேப்பிலையை உருவி வாணலியில் போட்டார்.

மறுப்பேதும் கூறாமல் ம்... என்றபடி காபியை உறிஞ்சினாள் ஹிரணி.

"அகில் இன்னும் எழவில்லையா?"

"ஆமாம்... நான் கீழே வரும் வரை தூங்கி கொண்டு தான் இருந்தார்!" என்றபடி கப்பை கழுவி வைத்தவள், "நான் ஏதாவது செய்யட்டுமா?" என்றாள் பதவிசாக.

"இல்லை வேண்டாம்... ஓரளவு வேலை முடிந்துவிட்டது. நீ என்ன செய்கிறாய் பிரிட்ஜில் முல்லைப்பூ தொடுத்து வைத்திருக்கிறேன் அதை எடுத்து தலையில் வைத்துக்கொள். அப்புறம் பூஜையறையில் விளக்கேற்றி விட்டு வந்து அகிலுக்கு காபி கலந்து எடுத்து போய் அவனை எழுப்பிவிடு. பிறகு கிளம்புவதற்கு தாமதமாகி விடும்!" என்றார்.

சரி என்றவள் விளக்கேற்றி விட்டு வந்து காபியுடன் மாடியேறினாள்.

'உறங்கி கொண்டிருப்பவனை எப்படி எழுப்புவது? போனில் ஏதாவது பாட்டை போட்டு அவன் காதருகில் வைத்து விடலாமா?' என்று சிந்தித்தபடி அறைக்குள் நுழைய, அதற்கு அவசியம் இல்லாமல் அவன் வாஷ்ரூமில் இருந்தான்.

ப்பூ... என்று ஊதியவள் கப்பை அருகிலிருந்த டேபிளில் வைத்துவிட்டு சென்று பால்கனியில் நின்றாள்.

குளித்து முடித்து இடுப்பில் வெறும் டவலுடன் வெளியே வந்த அகில் ஹிரணியை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

'அடக்கடவுளே... இவள் எப்பொழுது அறைக்கு வந்தாள்? இவள் கீழே இருக்கிறாள் என்று தானே பனியனை கூட எடுத்துச் செல்லவில்லை!' என்று மனதினுள் புலம்பியபடி அவன் வேகமாக வார்ட்ரோப்பை நோக்கி செல்ல, கதவு

திறந்த ஒலியை கொண்டு அகில் வந்துவிட்டான் என சுவாதீனமாக அவனிடம் திரும்பிய ஹிரண்மயி அவன் இருந்த நிலையைக் கண்டு திகைத்து மின்னல் வேகத்தில் எதிர்புறம் திரும்பிக் கொண்டாள்.

'இடியட்... இவனையெல்லாம்... கொஞ்சமாவது இங்கிதம் வேண்டாம். உடன் ஒரு பெண் தங்கியிருக்கும் அறையில் இப்படித்தான் இருப்பார்களா?' என்று உள்ளம் படபடக்க அவனை அர்ச்சித்துக் கொண்டிருந்தாள்.

அகிலனோ விரைந்து கைக்கு கிடைத்த டீசர்ட் ஒன்றையும் நைக் பான்டையும் அணிந்தவன் தன்னை சமன்படுத்திக் கொண்டு தலையை துவட்டியபடி அவளருகில் வந்தான்.

"குட்மார்னிங்!" என இவன் பளிச்சென்று புன்னகைக்க, அவளோ திரும்பி அவனை முறைத்தாள்.

"என்ன?" என்றான் குழப்பத்துடன்.

"நம்முடன் அறையில் புதிதாக ஒரு பெண் இருக்கிறாளே என்கிற டீசன்ஸி கொஞ்சமும் இல்லாமல் இப்படி தான் குளித்துவிட்டு அரைகுறையாக வெளியில் வருவீர்களா? ச்சே..." என்றாள் ஹிரண்மயி காட்டமாக.

அதிர்ந்தவன், "எக்ஸ்யூஸ்மி!" என்று விழிகளை விரித்தான்.

"என்ன?" என்றாள் இவள் புருவம் சுருக்கி.

"என்ன பேசுகிறாய் நீ? முதலில் இது என்னுடைய அறை, நான் எப்படி வேண்டுமென்றாலும் குளித்துவிட்டு வருவேன், டிரஸ் பண்ணுவேன். அதைக்கேட்க நீ யார்?" என பட்டென்று பதிலுக்கு கோபமாக கேட்டவன், "அட நீ என் பெண்டாட்டி இல்லை... அதுவே மறந்து போய்விட்டது. அந்த அழகில் நம்முடைய உறவு இருக்கிறது!" என்று அலுத்துக் கொண்டான்.

உடனே, "ஆமாம்... நான் குளிக்கப் போகும் பொழுது நீ இங்கேயா இருந்தாய்? இல்லை அல்லவா... நீ கிளம்பி

கீழே போய்விட்டாய் என்று நினைத்து தான் எப்பொழுதும் போல் நான் கொஞ்சம் கேஷுவலாக இருந்தேன். அதற்கு என்னவோ டீசன்ஸி அது இது என்று இப்படி குதிக்கிறாய்? நியாயப்படி பார்த்தால் ஒரு புது மனைவியாய் நீ என்ன செய்திருக்க வேண்டும்? ஒன்று... ஐயையோ இப்படி வந்து நிற்கிறாரே என்று வெட்கப்பட்டிருக்க வேண்டும், அப்படி இல்லையா... சுட்டுப் போட்டாலும் எனக்கு வெட்கம் வராது என்றால் கடவுளே என்று தலையில் கைவைத்தபடி சங்கடமாகவாவது நின்றிருக்க வேண்டும். இரண்டுமே இல்லாமல் அது என்ன என்னிடம் வந்து சண்டைப் போடுகிறாய் நீ? நேற்று இரவிலிருந்தே உன்னை கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன். சம்திங் ராங்... உன்னிடம் எதுவோ சரியில்லை!" என்று இடவலமாக தலையாட்டினான் அகில்.

அவன் படபடவென்று பொரிய ஆரம்பிக்கவும், இவன் என்ன இப்படியெல்லாம் பேசுகிறான் என்று முதலில் தடுமாறிக் கொண்டிருந்தவள் இறுதியாக கணவன் வெளிப்படுத்திய சந்தேகத்தில் முகம் கன்றினாள்.

"என்ன சத்தத்தையே காணோம்? உன் சுபாவமே இது தானா... பேசினால் உனக்கு வசதியாக மட்டும் பேசுவாய், இல்லையென்றால் பேசாமலே இருந்து விடுவாயோ. என்ன அப்படியா?" என்று தீவிரமாக வினவினான்.

இவனிடம் வாயை திறவாமல் இருப்பது தான் இப்பொழுது ரொம்ப உசிதம் என்று எண்ணியவள், "அப்படியெல்லாம் எதுவுமில்லை... உங்களுக்கு காபி எடுத்து வந்தேன்!" என்றபடி கப்பை எடுக்க, இத்தனை நேர தர்க்கத்தில் அது ஆறி அவலாகப் போயிருந்தது.

"ஓ... ஆறிவிட்டது, நான் போய் வேறு கலந்து எடுத்து வருகிறேன்!" என்று வெளியேற முயன்ற ஹிரணியின் கரத்தை வேகமாக பற்றி நிறுத்தினான் அகில்.

"வேண்டாம்... நானே கீழே வருகிறேன், வா போகலாம்!" என்க, அவன் செயலில் ஒரு கணம் திகைத்தவள் தன்

கரத்தை மெல்ல அவன் பிடியிலிருந்து நயமாக உருவிக் கொண்டு மடமடவென்று முன்னே நடந்தாள்.

நெற்றியை சுருக்கியவனோ யோசனையுடன் அவளை பின் தொடர்ந்தான், சற்று நேரத்தில் ஹிரணியின் அப்பா பகவதியும் வந்துவிட உணவை முடித்துவிட்டு பவானியை தவிர மற்றவர் கிளம்பினர்.

அனைவரும் சென்றதும் வீடே வெறிச்சென்றிருக்க, பழைய நினைவுகளில் ஆழ்ந்தவரின் விழிகளில் கண்ணீர் சுரந்தது. தன் வீம்பை இழுத்துப்பிடித்து அதை துடைத்தெறிந்தவர், அமைதியாக இருக்கும் மனது தான் சாத்தானின் வசிப்பிடம் என்பது சரியாக தான் இருக்கிறது. இதற்கு பேசாமல் அலுவலகமாவது சென்றிருக்கலாம் என்று தலையில் கைவைத்து பெருமூச்சுவிட்டுக் கொண்டார்.

அகிலின் பத்தாவது வயதில் அவனின் தந்தை மாணிக்கம் உடல்நலக் குறைவால் மரணித்துவிட, கூட்டுறவு வங்கியில் அவர் பார்த்து வந்த கிளார்க் வேலை பவானிக்கு கிடைக்கப் பெற்று யாரையும் சார்ந்து வாழாமல் தன் கையே தனக்குதவி என்பது போல் தன் வாழ்க்கையை தானே கவனித்துக் கொண்டார்.

அகிலின் கைகள் தன் போக்கில் ஸ்டீரியங்கை வளைத்துக் கொண்டிருந்தாலும் விழிகள் தன்னருகில் அமர்ந்திருந்த புது மனைவியை கவனமாக ஆராய்ந்துக் கொண்டிருந்தது. கைகளை கட்டிக்கொண்டு இறுக்கமாக அமர்ந்திருந்தவள் ஜன்னலுக்கு வெளியே வெறித்துக் கொண்டு வந்தாள்.

பின்புறம் அமர்ந்திருந்த ஹிரணியின் தாய், தந்தையின் தலையும் வெளிப்புறத்தில் இருப்பதைக் கண்டவன், 'என்ன குடும்பம்டா இது? இவர்களுக்கு எல்லாம் தங்கள் அருகில் இருப்பவர்களிடம் பேசவே தெரியாதா?' என்று குழம்பினான்.

சரி நாமாவது ஆரம்பிப்போம்... என்று தன் மாமானாரிடம் பேச்சுக் கொடுத்தான்.

"அப்புறம் மாமா... நீங்கள் பள்ளி தலைமையாசிரியராக இருந்து ஓய்வுப் பெற்றவர் என்று அம்மா சொன்னார்கள். உங்கள் பெண் எப்படி நன்றாக படிப்பாளா இல்லை வாத்தியார் பிள்ளை மக்கு என்பது போல் தத்தியாக இருந்தாளா?" என்று கடைக்கண்ணால் ஹிரணியின் முகம் சிவப்பேறுவதை ரசித்துக் கொண்டே வினவினான்.

அகிலின் கேள்வியில் தடுமாறிய பகவதி திருதிருவென்று விழித்தபடி அருகிலிருந்த மங்களத்தையும் பின் முன்னால் அமர்ந்திருந்த ஹிரணியையும் பார்க்க அவள் விழிகளாலே அவரை எச்சரிக்கை செய்தாள்.

தன் கவனமெல்லாம் ரோட்டில் இருப்பதை போல் பாவ்லா செய்துக் கொண்டிருந்தவன் இப்பார்வை பரிமாறல்களை கவனிக்கத் தவறவில்லை.

4

"என்ன மாமா சத்தத்தையே காணோம்? ஹிரணி எதுவும் மிரட்டுகிறாளா..." என்று கேட்டு பகவதியிடம் வசீகரமாக கண்ணடித்தான் அகில்.

அவன் துணைவி பக்கென்று அதிர்ந்துப் போனாள் என்றால் பின்னிருந்தவர்களுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது.

"ஏ... ஏன்? நான் ஏன் மிரட்டுகிறேன்? பள்ளியிலும், கல்லூரியிலும் டாப்பராக வந்தவள் நான். என் சொல்லில் நம்பிக்கை வரவில்லை என்றால் வீட்டிற்கு போனதும் என்னுடைய சர்டிபிகேட்ஸை எடுத்துக் காண்பிக்கிறேன்!" என்றவளின் விழிகளில் மின்னல் தெறித்தது.

ம்... என மெச்சுதலாக இதழை வளைத்தவன், "கிரேட்... கூட படித்தவர்கள் அனைவரையும் அத்தனை வருடங்களாக ஓரங்கட்டி விட்டு முன்னிலையை தக்க வைத்துக் கொண்டிருந்திருக்கிறாய். வெரிகுட்!" என்று பாராட்டினான்.

சின்ன சிலுப்பலுடன் தலையை வெளியே திருப்பியவளை கண்டவன், "ஆனால்... உன்னை விட மதிப்பெண்கள் குறைவாக எடுத்தவர்கள் எல்லோரும் முட்டாளுமில்லை... எந்த இடத்திலும் உன்னை ஜெயிக்க ஆளில்லை என்று நினைப்பதும் முட்டாள்தனமானது!" என்றான் அழுத்தமாக.

விழிகள் சிவக்க திரும்பியவள் பேசும் முன்னே முந்திக் கொண்டவன், "இப்பொழுது எதற்கு இத்தனை கோபம்? எதிலும் ஜெயித்தே பழகிவிட்டதால் சின்ன விஷயத்தில் கூட ஏமாற நேரிடலாம் கவனமாக இரு என பொறுப்பான கணவனாய் உன்னை எச்சரித்தேன் அவ்வளவுதான்!" என்று முறுவலித்தவனிடம் என்ன பேசுவது என புரியாமல் வெளிப்புறம் திரும்பிக் கொண்டாள்.

சட்டென்று அகிலன் வாய் விட்டு சிரிக்க ஆரம்பிக்க, ஹிரண்மயி கை முஷ்டிகளை இறுக்கியபடி பற்களை கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவளின் தத்துப் பெற்றோர் தான் பாவம் அகிலின் பேச்சால் முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போல் நெளிந்துக் கொண்டே வந்தார்கள்.

"அத்தை... வீட்டில் வாலினி, மூவ், அயோடக்ஸ் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?"

"தம்பி?" என்றாள் மங்களம் பணிவுடன்.

"இல்லை... உங்கள் பெண் பாவம் காரில் ஏறியதிலிருந்து தலையை ஒரே பக்கமாக வெளியிலேயே திருப்பி வைத்திருக்கிறாள். எப்படியும் வீட்டிற்கு போவதற்குள் இவளுக்கு கழுத்து சுளுக்கு பிடிக்கிறதா இல்லையா என்று பாருங்கள்?" என நகைத்தான்.

'ஐயோ... அவள் தான் அடாவடி என்று பார்த்தால் இந்தப் பையன் வேறு அவளை இப்படி சீண்டி விளையாடுகிறதே... இதெல்லாம் எங்கே போய் முடியப் போகிறதோ?' என்று தனக்குள் புலம்பினாள் மாமியார்.

மடியில் கிடந்த க்ளட்சை ஹிரணி கைகளால் இறுக்குவதை ஓரவிழியில் கவனித்தவன், 'எப்பொழுது டீசன்ஸி குறித்துப் பேசி என்னையே நீ துணிச்சலுடன் அதட்டினாயோ அப்பொழுதே புரிந்துவிட்டது உன் மனதில் எனக்கு கணவனாக எந்த இடமும் இல்லையென்று... அதற்கு அடுத்த சான்று இயல்பாக கையை பிடித்ததற்கே அப்படி வேகமாக உருவிக் கொண்டு விலகிச் சென்றது. ஒருவரையொருவர் புரிந்துக் கொள்ளும்வரை தாம்பத்ய உறவை தள்ளி வைப்பது சரி, ஆனால் அதற்காக நட்பான புன்னகையும், பேச்சும், தொடுதலுமே கூடாது என்றால் என்ன அர்த்தம்? நேற்று இரவு எனக்கு தோன்றிய சந்தேகம் சரி தான், நீ ஏதோ முகமூடி அணிந்துக் கொண்டு தான் சுற்றுகிறாய். எதற்காக இந்த திருமணத்திற்கு சம்மதித்தாய் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் உன்

துணிச்சலான நடவடிக்கைகளை பார்த்தாலே தெரிகிறது உன்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது என்று, பிறகு... சரி... எதுவென்றாலும் உன் வாய் வழியாகவே உன்னுடைய எண்ணத்தை நான் வரவழைத்துக் காண்பிக்கிறேன்!' என்று தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டான்.

"ப்ச்... நேராக எங்கே போகிறீர்கள்? ரைட்டில் கட் பண்ணுங்கள்!" என்று முகத்தை சுளித்துக் கொண்டு அதட்டியவளை திரும்பி முறைத்தான் அவன்.

"ஆமாம்... தினமும் உங்கள் வீட்டிற்கு காலை, மாலை இருவேளையும் வந்து உன்னை பிக்கப் செய்து டிராப் செய்தேன் பார். அதனால் வீடு அடையாளம் தெரியாமல் மறந்து நேரே செல்கிறேன் என ரொம்பவும் சலித்துக் கொள்கிறாய் நீ!" என்று அகில் கடுமையாக கூறவும், முகம் கன்றியவள் சாரி என முணுமுணுத்தாள்.

இறுக்கமான முகத்துடன் வண்டியை ரிவர்ஸ் எடுத்து திருப்பியவன், "அடுத்து எங்கே எந்தப் பக்கம் என்று இப்பொழுதே சொல்லிவிடு. பிறகு ஏதாவது அதட்டினாய் என்றால் நான் அமைதியாக இருப்பேன் என்று மட்டும் எண்ணி விடாதே!" என்றவனின் கோபக் குரல் அவள் மனதை வாடச் செய்ய அதை முகத்திற்கு கொண்டு வராமல் லாவகமாய் விழுங்கியவள் வீட்டிற்கு வழி சொன்னாள்.

வீட்டின் முன் காரை நிறுத்தி இறங்கியவன் எதுவும் பேசாமல் சுற்றுப்புறத்தை பார்வையால் அளக்க, முன்னே சென்று கதவை திறந்தவள் உள்ளே வாங்க என்று அழைத்தாள்.

அமைதியாக வீட்டினுள் வந்தவனை அங்கே இருந்த சோபா ஒன்றில் அமரச் சொன்னவள், மங்களத்திடம் கண்ஜாடை காட்டி உள்ளே அழைத்துச் சென்றாள்.

தனது க்ளட்சிலிருந்து பணத்தை எடுத்து நீட்டியவள், "மதியம் வடை பாயசத்துடன் விருந்து தயாரிப்பதற்கு என்னவெல்லாம் தேவையோ அதையெல்லாம் வாங்கி

வந்து விடுங்கள். அப்படியே மறக்காமல் காபி போடுவதற்கு பாலும் வாங்கி கொள்ளுங்கள்!" என்றாள்.

அவள் தயக்கத்துடன் நிற்க, "இன்னும் என்ன? பணம் போதாதா..." என்றவளிடம், "இல்லைம்மா... அதெல்லாம் போதும், அது வந்து... நீ கொஞ்சம் அந்த தம்பியிடம் பார்த்துக் கவனமாக நடந்துக் கொள். என்ன இருந்தாலும் நம் பக்கம் தவறு இருக்கிறது. அதுவுமில்லாமல் ஆண்பிள்ளைகள் திருமணம், முதலிரவு போன்ற விஷயங்களில் நிறைய எதிர்பார்ப்போடு காத்திருந்து இருப்பார்கள். நேற்று இரவு நீ எப்படியும் உனக்கேற்றபடி வசதியாக பேசி அவரை விலக்கி தான் வைத்திருந்து இருப்பாய். அதுவே அவருக்கு பெரும் ஏமாற்றமாக இருந்திருக்கும், அதனால் அவரிடம் பொறுமையாக பதவிசாக பேச முயற்சி செய்!" என்று அறிவுறுத்தி விட்டு வெளியேறினாள்.

மங்களத்தின் சொற்கள் ஹிரணியின் இதயத்தை படபடக்கச் செய்தது, 'என்ன இந்தம்மா பாட்டுக்கு அது இஷ்டத்துக்கு உளறிவிட்டுப் போகிறது? அவன் அதுப்போல் எல்லாம் எதிர்பார்த்திருப்பானா என்ன? நோ... நோ... கண்டிப்பாக அப்படியெல்லாம் கிடையாது. நேற்றிரவு அதைப்பற்றி பேசும் பொழுது மிகவும் இயல்பாக தானே பேசினான். இன்று வந்த கோபம் நான் அவனிடம் மிகவும் ரூடாக நடந்துக் கொண்டதால் வந்தது. இந்த விஷயத்தில் அவர்கள் சொல்வதுப் போல் தவறு என் பக்கம் தான். இனிமேல் அதுபோல் எல்லாம் முறைத்துக் கொண்டு சுற்றக் கூடாது, நாம் எண்ணி வந்த காரியத்திற்கு பங்கம் விளைவிப்பதாக அது அமைந்து விடக்கூடும்!' என்று நெற்றி வியர்வையை துடைத்தபடி வெளியே சென்றாள்.

ஹாலில் அகிலனோ பகவதியை கண்டு ரொம்பவும் காண்டாகி கொண்டிருந்தான்.

இருக்காதா பின்னே... இவனை சோபாவில் அமர வைத்துவிட்டு அம்மாவும், பெண்ணும் உள்ளே சென்று விட்டார்கள். எதிரில் அமர்ந்திருந்த மனிதரோ

செய்தித்தாள் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு தன் முகத்தை மறைத்தபடி அதில் தீவிரமாக மேய்ந்துக் கொண்டிருந்தார்.

‘இந்த ஆளையெல்லாம்... ஆங்... கவுண்டமனி பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் இனிஷியலுக்காக சாப்பாடு போட்டு வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இன்னும் பொருத்தமான வார்த்தை என்றால் ஆங்... மிக்ஸர்... எஸ்... மிக்ஸரே தான்!’ என கடுப்புடன் மாமனாருக்கு பட்டப்பெயர் சூட்டினான் அகில்.

வாயே திறக்காத இவரெல்லாம் எப்படி ஸ்கூல் ஹெட்மாஸ்டராக இருந்திருப்பார்? இல்லை... ஒருவேளை வீட்டில் எலி வெளியே புலியா? அப்படியாக தான் இருக்கும். அதனால் தான் திருமணமான மறுநாளே மகள் என்னை டாமினேட் செய்யப் பார்க்கிறாள் போலிருக்கிறது. ஆனால் அதற்கு நான் ஒன்றும் அவள் அப்பா போன்ற டம்மி பீசில்லையே... எனக்கு அடக்குவதும் பிடிக்காது, அடங்குவதும் பிடிக்காது என்று தனக்குள் பேசிக் கொண்டவன் கால் மேல் கால் போட்டபடி வசதியாக சாய்ந்தமர்ந்தான்.

அவனருகில் வந்த ஹிரணி, "சாரி ஒரு பைவ் மினிட்ஸ் அம்மா பால் வாங்கப் போயிருக்கிறார்கள், வந்தவுடன் காபி தருகிறேன். அதற்கு முன் வேண்டுமென்றால் ஏதாவது ஸ்நாக்ஸ் சாப்பிடுகிறீர்களா?" என்று வினவியவளை பதிலின்றி கூர்ந்தான் அகில்.

'இப்பொழுது எதற்கு இப்படி பார்க்கிறான்?' என்று தடுமாறியவளை நிதானமாக அளந்தவன், "காலை டிபன் முடித்த அடுத்த ஒரு மணி நேரத்தில் ஸ்நாக்ஸ் சாப்பிடுவதற்கு நான் என்ன கேஜி படிக்கும் பையனா?" என்று கேலியாக வினவி அவளை மேலும் திணறடிக்க, ஹிரணி அவனை எதிர்க்கவும் முடியாமல் அடங்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தாள்.

"சரி... உன்னுடைய அறை எது?"

"ஏன்?" என்று வேகமாக கேட்டவளை வித்தியாசமாக பார்த்தவன், "இதென்ன கேள்வி நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்க வேண்டும்!" என்றான் சோம்பல் முறித்தபடி.

"ஓ... வாங்க!" என்று அவனை தயக்கத்துடன் தன்னறைக்கு அழைத்துச் சென்றாள்.

அறையை நோட்டமிட்டவன், "வீடு முழுக்க மிகவும் புதியதாக சுத்தமாக இருக்கிறது. அதிகம் புழக்கம் இருப்பது போலவே தெரியவில்லையே!" என்று தன் கருத்தை வேறு தெரிவிக்கவும், திருடனுக்கு தேள் கொட்டிய கணக்காக கைகளைப் பிசைந்தாள் ஹிரணி.

பதிலுக்காக அகில் தன்னிடம் திரும்பவும் விரைந்து தன்னை சுதாரித்துக் கொண்டவள், "இதற்கு நான் பதில் வேறு சொல்ல வேண்டுமா? நாங்கள் இருப்பதே மூன்று பேர், மூவருமே பெரியவர்கள் எனும்பொழுது வீடு ஏன் சுத்தமாக இருக்காது?" என்று எதிர்கேள்வி கேட்டாள்.

தான் கோபத்தை வெளிப்படுத்திய பின்பு சற்று நேரமாக அடங்கியிருந்த அவளின் துடுக்குத்தனம் மீண்டும் தலை தூக்குவதை கண்டு தனக்குள் புன்னகைத்தவன் அவளையே சுவாரசியமாக பார்க்க, அவன் பார்வையில் தடுமாறிய பாவையவளோ வேகமாக அங்கிருந்து வெளியேற முயன்றாள். அவள் முயற்சியை தடுக்கும் விதமாக அவளின் வலது கரத்தை அழுந்தப் பற்றினான் அகில்.

"எங்கே ஓடுகிறாய்?"

"இல்லை... நீங்கள் ரெஸ்ட் எடுங்கள். நான் அம்மா வந்து விட்டார்களா என்று பார்க்கிறேன் அவர்களுக்கு சமையலில் உதவ வேண்டும்!" என்று அவன் பிடியிலிருந்த தன் கரத்தை உருவ முயன்றாள்.

தன் பிடியை மேலும் இறுக்கியவன், "சமையலை அவர்களே பார்த்துக் கொள்வார்கள், புதுப் பெண்ணான உன்னிடம் உதவி எதிர்பார்த்து தொந்திரவு செய்ய

மாட்டார்கள். அதுவும் இங்கே இருக்கின்ற நான்கு பேருக்கு சமைப்பதற்கு நீ என்ன பெரிய உதவி செய்யப் போகிறாய்?" என்று கிண்டலாக கேட்டான்.

அலைபாயும் விழிகளோடு பதில் தேடி தவித்தவளை மேலும் கலவரப்படுத்த எண்ணியவன் போல் தன்னருகில் அவளை சுண்டி இழுத்தான் அகில். அதில் தடுமாறி அவன் தோளைப் பற்றியவள் முற்றிலுமாக தன் பொறுமை இழந்து அவனை உறுத்துப் பார்த்தாள்.

வெடுக்கென்று தன் கையை உதறிக் கொண்டவள், "என்ன செய்கிறீர்கள்?" என்று அடிக்குரலில் சீறினாள்.

"ம்... பார்த்தால் தெரியவில்லை? என் பெண்டாட்டியை சீண்டி விளையாடிக் கொண்டிருக்கிறேன்!" என்றவனின் குரலில் நிச்சயம் நக்கல் தெறித்தது.

உள்ளம் எரிமலையாய் குமுற எதிர்த்து பேச இயலாத தன் சூழ்நிலையை எண்ணி மிகவும் வெறுப்பில் கொதித்தாள் ஹிரண்மயி. அவன் கூற்றுப் போலவே அவள் அவனுடைய மனைவி என்பது அவளை மேலும் எரிச்சலுக்கு உள்ளாக்கியது.

முகம் இறுக நின்றிருந்தவளின் கன்னத்தை அவன் மென்மையாக வருடத் துவங்கவும், "ப்ளீஸ் ஸ்டாப் இட்... திஸ் ஈஸ் யுவர் லிமிட்!" என்று சினத்துடன் அவன் விரல்களை விலக்கியவளை கண்கள் இடுங்க நோக்கினான் அகிலன்.

"எனக்கு ஒரு சந்தேகம் நீ என் மனைவி தானே?"

அவன் கேள்விக்கு பதிலளிக்காமல் இதழ்களை அழுந்த மூடி இறுக்கமாக இருந்தவளின் முகத்தை ஒரு விரல் கொண்டு தன் புறம் திருப்பியவன், "உன்னிடம் தான் கேட்கிறேன்!" என்றான் அழுத்தமாக.

ஹிரணியோ அவனுக்கு மேல் அழுத்தமாக நின்றாள். அவனும் சளைத்தவன் அல்லவே அடுத்த தாக்குதலை தொடுத்தான்.

"ஓ... கேள்வி புரியவில்லையா? சரி இப்படி கேட்டால் புரிகிறதா என்று பார்... என்ன காரணத்திற்காக இதை என் கையால் கட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்குள் வந்திருக்கிறாய்?" என்று அவள் கழுத்திலிருந்த மாங்கல்யத்தை புடவைக்குள் இருந்து அதிரடியாக வெளியே எடுத்து அகில் வினவவும் அவளுடைய விழிகள் அவனை திகைப்புடன் ஏறிட்டது.

"என்ன விழிக்கிறாய்? சற்று முன்னர் நான் சொன்னது நினைவிருக்கிறதா? எந்த இடத்திலும் ஜெயித்து விடலாம் என்கிற அதீத நம்பிக்கையும் முட்டாள்தனமானது தான். என்ன காரணத்திற்காகவோ எனக்கு மனைவியாக துணிந்தவள் அடுத்து கணவனாக நான் நடந்தால் எப்படி அதை சமாளிக்க வேண்டும் என்பதையும் யோசித்து முடிவு செய்திருக்க வேண்டும். முதலிரவு நடக்க வேண்டாம் என்று சொன்னதுவரை எல்லாம் சரி, தொடவே கூடாது என்றால் கூட மணந்துக் கொண்டவன் கேனையனாக மண்டையாட்டி விடுவான் என ரொம்பவும் கேவலமாக தப்புக்கணக்கு போட்டு விட்டாயேம்மா!" என்று ஏளனமாக கேட்டவனை வெறித்துப் பார்த்தாள் ஹிரண்மயி.

5

அகிலின் கேள்வியில் பிரமித்து நின்றிருந்தாள் ஹிரணி.

'அவன் இத்தனை சுலபமாக தன்னை கண்டுக்கொள்வான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய கூற்று உண்மைதான், அவன் தன்னை தொடுவது பிடிக்காமல் அதனை எதிர்க்கப் போய் சிறு விஷயத்தில் ஏமாந்து தான் நடிப்பை கைவிட்டு இவள் எகிறி விட்டாள். அப்படியல்லாமல் அகில் தன்னை மனைவியாக எண்ணி உரிமையுடன் தொட்டுப் பேசுவதை கண்டுக்கொள்ளாமல் இருந்திருக்க வேண்டுமோ... ஆனால் அதெப்படி முடியும்? இது போன்ற விஷயங்களை நான் அறவே வெறுக்கும் பொழுது, என்னால் எவ்வாறு இவனுடைய நெருக்கத்தை சகித்துக்கொள்ள முடியும்!' என்று உள்ளுக்குள் குமைந்தாள்.

"ம்... இன்னும் என்ன யோசனை? யுவர் கேம் ஈஸ் ஓவர், முதலிலிருந்து எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல். நீயென்ன திட்டத்திற்காக என்னை மணந்துக் கொண்டாய்?" என்றவனை தற்பொழுது இவள் ஏளனமாக ஏறிட்டாள்.

"ஏன் இவ்வளவு தூரம் கண்டுப்பிடித்தவர் காரணத்தையும் முழுதாக கண்டுப்பிடிக்க வேண்டியது தானே?" என்றாள் அலட்சியமாக.

ஹிரணியை கூர்ந்து நோக்கியவன், 'என் குற்றச்சாட்டிற்கு மறுப்பேதும் கூறாமல் இவள் தன் வாயாலே ஒத்துக் கொள்வதைப் பார்த்தால்... ஏதோ திட்டத்தோடு தான் என்னை திருமணம் செய்திருக்கிறாளா... ஆனால் ஏன்?' என்று குழம்பியவனுக்கு காரணம் பிடிப்படவில்லை.

"என்னால் முடியாது என்று நினைக்கிறாயா?" என சவாலுடன் வினவியவனை கண்டு பரிகாசமாக முறுவலித்தவள் பதிலேதும் கூறாமல் ஜன்னலருகே

சென்று கரங்களை கட்டிக்கொண்டு வெளியே வெறித்தாள்.

அவள் தோளைப் பற்றி வேகமாக தன் புறம் திருப்பியவன், "இந்த சிரிப்பிற்கு என்ன அர்த்தம் என்னால் முடியாது என்கிற திமிரா?" என்று விழிகள் சிவப்பேற முறைத்தான்.

"இல்லை... நம் சமூகத்தில் ஊன்றிப் போயிருக்கும் ஆண் என்கிற திமிர் தற்பொழுது உங்கள் கேள்வியில் பிரதிப்பலிப்பதை கவனித்தேன் சிரிப்பு வந்து விட்டது!" என்று மீண்டும் புன்னகைத்தாள்.

"ஓ... ஒரு பெண்ணான உனக்கே இவ்வளவு திமிரும், தைரியமும் இருக்கும் பொழுது எனக்கு இருக்க கூடாதா என்ன?" என்றான் அவன் எடுப்பாக.

தோள்களை குலுக்கியவள், "அதென்ன திமிரும், தைரியமும் ஆண்களுடைய தனிப்பட்ட சொத்தா என்ன பெண்களுக்கு இருக்க கூடாது என சொல்வதற்கு?" என்று இளக்காரமாக வினவினாள்.

"எது எப்படி இருந்தாலும் ஒரு சில நேரங்களிலும், விஷயங்களிலும் ஒரு பெண்ணால் ஆணுக்கு சமமாக வரவே முடியாது!" என்று அகில் பொடி வைத்து பேச ஹிரண்மயி வெகுண்டாள்.

"அந்த திமிரில் தானே எல்லோரும் ஆடுகிறீர்கள், உடலளவில் அவளை களங்கப்படுத்தி சாய்த்து விட்டால் உங்களை போன்ற ஆண்களை ஜெயிக்க முடியாது என்ற அகங்காரம் தான் இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது. நீங்கள் என்ன செய்தாலும் தவறான பேச்சுக்களும், பாரங்களும் பெண்களை தானே சென்றடையும். அதையெல்லாம் தூசிப்போல் தட்டிவிட்டு எந்தவொரு கவலையுமில்லாமல் உங்கள் வாழ்க்கையை நிம்மதியாக வாழ்பவர்கள் தானே நீங்கள் எல்லாம்!" என்று குற்றம்சாட்டி விழிகளில் அனல் பறக்க உடல் நடுங்க சீறியவளின் வார்த்தைகள் அவன் தன்மானத்தை சீண்டி ஆத்திரத்தை வரவழைத்தாலும், இப்பொழுதைய

பிரச்சினையை விட்டுவிட்டு தேவையில்லாத விஷயத்தில் பேச்சு திசை திரும்புவதை தவிர்க்க விரும்பி பொறுமையை கடைப்பிடித்தான் அகில்.

"இப்பொழுது என்ன தேவையோ அதை விடுத்து மற்றதை வாதிட்டு என்ன பயன்? எதற்காக நீ இவ்வளவு இமோஷனல் ஆகிறாய்?" என்று அமைதியாக வினவினான்.

சின்ன முகச் சுளிப்புடன் மௌனமாக திரும்பிக் கொண்டவளை கண்டவன் எதுவும் பேசாமல் தண்ணீரை எடுத்து வந்து கொடுத்தான்.

"எனக்கு வேண்டாம்!" என்று விறைப்புடன் மறுத்தவளை பார்த்து அவனுக்கு கோபத்திற்கு பதில் புன்னகையே அரும்பியது.

"ஏன் இதில் ஏதும் மயக்க மருந்து கலந்திருப்பேன் என்று பயமா?" என அவளை அதிலிருந்து வெளிக்கொணர வேண்டி தூண்டுதலாகப் பேசினான் அகிலன்.

"ப்ச்... ஸ்டுப்பிட்டாக பேசாதீர்கள்!" என்றாள் சுள்ளென்று.

"யார் நான் பேசுகிறேனா அல்லது நீ பேசுகிறாயா? சம்பந்தமேயில்லாமல் நான் கேட்ட கேள்விக்கு பதிலுரைக்காமல் உலகத்தில் யாரோ செய்கின்ற தப்புக்கெல்லாம் ஆணாகப் பிறந்த ஒரே பாவத்திற்காக என் மேல் குற்றம்சாற்றப் பார்க்கிறாயே... அது ரொம்ப புத்திசாலித்தனமாக தோன்றுகிறதா உனக்கு?" என்று நக்கலாக வினவினான்.

அவன் கேள்வியில் உண்மை இருந்ததால் உஃப்... என பெருமூச்சொன்றை வெளியேற்றியவள் அவன் கைகளிருந்த பாட்டிலை வெடுக்கென்று பிடுங்கி மடமடவென்று தண்ணீரை தொண்டையில் கவிழ்த்தாள்.

"போதுமா?"

"போதாது!" என்றவனின் விழிகள் அவளை கூறுப் போட, புருவம் சுளித்தபடி திரும்பியவள் அவன் பதிலுக்காக

வாயைத் திறந்தாள்.

"உங்களுக்கு எந்த சிரமும் வேண்டாம் அனைத்தையும் நானே தெளிய வைக்கிறேன். ஆக்ட்சுவலி இன்று மறுவீடு சம்பிரதாயம் அது இது என்று உங்கள் அம்மா குறுக்கே வந்து குழப்பாமல் விட்டிருந்தால் இந்நேரம் உங்கள் குழப்பத்திற்கான விடை தன்னால் கிடைத்திருக்கும். என் முதல் திட்டப்படி நான் அதற்கு தயாராக தான் இருந்தேன். எனிவேஸ்... ஓகே இன்றே அனைத்து புதிரையும் விடுவிக்கிறேன்!"

"சரி சொல்!"

"சாரி... வெறும் வாய் வார்த்தைகளாக சொல்வதில் எனக்கு விருப்பமில்லை. வக்கீலுக்கு படித்தவள் அல்லவா எதையும் ஆதாரத்துடன் பேச நினைக்கிறேன்!"

"ஓ... அப்பொழுது என்ன செய்யலாம் என்கிறாய்?"

நெற்றியை சுருக்கியவள், "நீங்கள் கிளம்பி உங்கள் வீட்டிற்கு செல்லுங்கள். எனக்கு சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதையெல்லாம் முடித்தப் பிறகு நானே நேராக அங்கே வந்து விடுகிறேன்!" என்றாள்.

"எதற்கு? நானும் உன்னுடன் வருகிறேன்!"

"இல்லை வேண்டாம்... அது சரி வராது!"

"ஏன் ஆதாரத்தை கலைத்து விடுவேன் என்று பயமா?"

சட்டென்று நகைத்தவள், "அது உங்களால் முடியாது. ஒன்று... அதற்கு நான் விடமாட்டேன், இரண்டாவது நான் உங்களை பற்றி கேள்விப்பட்ட வரையில் நீங்கள் அதுபோன்ற காரியத்தையெல்லாம் செய்ய மாட்டீர்கள்!" என்றாள் தீவிரமாக.

அவளுக்கே தெரியாமல் அவள் மனதில் தனக்கு ஒரு நல்ல இடம் இருப்பதை அறிந்து அகிலின் விழிகள் பளிச்சிட்டது.

"ஓ... ரொம்ப தெளிவாக எல்லாம் விசாரித்து ஸ்கெட்ச் போட்டு தான் என்னை மணந்திருக்கிறாய்!"

"யா... அஃப்கோர்ஸ், எதையும் ஆரம்பிக்கும் முன்னர் அதில் வெற்றி பெறுவதற்காக தெளிவாக திட்டமிடுவது என் பழக்கம்!" என்றாள் லேசாக எட்டிப் பார்த்த கர்வத்துடன்.

"ரொம்ப நல்ல்லலல... பழக்கம்!" என்று வார்த்தையை அழுத்தியவன், "ஆனால் பாவம் நான் தொட்டுப் பேசுவதிலும் கொஞ்சம் நீ பொறுமையை கடைப்பிடித்து இருந்தாய் என்றால் இந்நேரம் கதை வேறுமாதிரி பயணித்திருக்கும்!" என்றான் விரிந்த புன்னகையுடன்.

"ப்ச்... எது எப்படியிருந்தாலும் இது கட்டாயம் வெளிவர வேண்டிய விஷயம் தான் என்பதால் இங்கே பொறுமைக்கு அவசியமில்லை!" என்று தன் முகத்தில் கடுமைப் பரவ மொழிந்தாள் ஹிரணி.

"ஒகே... ஃபைன், நான் கிளம்புகிறேன். உன் அப்பா, அம்மாவிற்கு இதெல்லாம் தெரியுமா? இல்லை... திட்டமெல்லாம் உன் வரையில் மட்டும் தானா?"

"அவர்களுக்கு அனைத்து விவரமும் தெரியும், ஆனால் திட்டமெல்லாம் என்னுடையது மட்டும் தான்!"

"நினைத்தேன்... ஓகே பை!" என்று வெளியேறினான்.

பின்னோடு வந்தவளிடம் திரும்பியவன், "வீட்டிற்கு சீக்கிரமாக வருவதற்கு பார் அம்மாவிற்கு பதில் சொல்ல வேண்டும்!" என்க சம்மதமாக தலையசைத்தாள்.

"என்ன தம்பி கிளம்புகிறீர்களா? இன்னும் சற்று நேரத்தில் சாப்பாடு தயாராகி விடுமே..." என்ற மங்களத்தை இடைமறித்தவள், "அவருக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது நீங்கள் போய் சமையலைப் பாருங்கள்!" என்று அவளை உள்ளே அனுப்பி வைத்துவிட்டு அகிலுடன் வெளியே சென்றாள் ஹிரண்மயி.

மாலை வேளையிலேயே வீட்டிற்கு தனியாக வந்து நிற்கும் மகனை கண்டு குழம்பினார் பவானி.

விரைவாக வீட்டிற்கு திரும்பி அவரை ரொம்ப நேரம் தவிக்க விட வேண்டாம் என்று தான் அகில் கூடுமான வரை வெளியே சுற்றி அலைந்துவிட்டு தாமதமாக வீட்டிற்கு வந்திருந்தான்.

"என்னடா இந்நேரத்திற்கே வந்து விட்டாய்? அதுவும் நீ மட்டும் தனியாக... ஹிரண்மயி எங்கே?"

"ம்... அவளுக்கு கொஞ்சம் வேலையிருப்பதால் சிறிது தாமதமாக வருவாள். எனக்கு ரொம்ப போரடிக்கவும் நான் முன்னால் கிளம்பி வந்து விட்டேன்!"

"ப்ச்... என்னடா இது? மறுவீடு சென்ற மணமக்கள் ஒன்றாக திரும்பி வரவேண்டாமா... இப்படியா தனித்தனியாக வருவது. என்ன பிள்ளைங்களோ?" என்று அலுத்துக் கொண்டவரின் கன்னத்தை தட்டியவன், "என்னம்மா நீங்கள் இதையெல்லாம் நம்பிக் கொண்டு... சரி போய் எனக்கு ஒரு காபி போடுங்கள், நான் ரெப்ரெஷ் செய்து வருகிறேன்!" என்று மாடியேறினான்.

"ம்க்கும்... கல்யாணம் செய்து வைத்தப் பின்னால் தனக்கு வேண்டியதை பெண்டாட்டியிடம் கேட்பானா, அவளை அம்மா வீட்டில் விட்டுவிட்டு இங்கே வந்து என்னை விரட்டிக் கொண்டிருக்கிறான் இவன்!" என்று தனக்குள் பேசியபடி கிச்சனுக்கு சென்றார் பவானி.

தன் அம்மாவின் சொற்கள் செவியில் மோத அகிலின் இதழ்களில் விரக்தியான புன்னகை ஒன்று தவழ்ந்தது.

'என் மனைவியிடம் இதையெல்லாம் நான் எதிர்பார்க்க தான் முடியுமா அல்லது அவள் தான் எனக்கு இதெல்லாம் செய்து விடுவாளா?'

போர்டிகோவில் அமர்ந்திருந்த அகிலன், பவானி தந்த காபியை அருந்தியபடி தீவிர சிந்தனையிலிருந்தான்.

ஒரு சில காரணங்களுக்காக உற்றார், உறவினரை தவிர்க்க வேண்டி ஊரை கூட்டாமல் தனக்கு ரகசியமாக திருமணம் செய்து வைப்பதில் உறுதியாக இருந்து விட்டாரே இந்த அம்மா. அவர் மட்டும் தனியாக பெண்

பார்த்து, திருமண ஏற்பாடுகளை கவனித்து, சிம்பிளாக கோவிலில் நடத்தியது இன்று எவ்வளவு பெரிய பிரச்சினையில் வந்து நிற்கிறது?

அவர் தயங்கி யோசித்த விஷயங்களை எல்லாம் தனக்கு சாதமாக பயன்படுத்திக் கொண்டு அழகாக திட்டம் போட்டு சட்டப்படி என் மனைவியாக சாமர்த்தியமாக வீட்டிற்குள் நுழைந்து விட்டாளே ஹிரணி என்று ஒருநேரம் அவளை நினைத்து அவனுக்கு வியப்பாக தான் இருந்தது.

தன் தோளில் ஏதோவொரு ஸ்பரிசத்தின் அழுத்தம் விழவும் வேகமாக திரும்பியவன் அங்கே கவலையுடன் நின்றிருந்த அன்னையை கண்டு முயன்று புன்னகைத்தான்.

"என்னம்மா?"

"அகில்... நீ என்னிடம் எதையாவது மறைக்கிறாயா என்ன?"

"ஏன்மா உங்களுக்கு அப்படியா தோன்றுகிறது?"

"ஆமாம்... நீ ஏதோ குழப்பத்தில் இருப்பது போல் தோன்றுகிறது, புதிதாக திருமணமான பையனுக்குரிய மகிழ்ச்சியே உன் முகத்தில் சற்றும் இல்லையே?" என்றார் விசனத்தோடு.

அவர் முகத்தையே ஆழ்ந்துப் பார்த்தவன் ஒரு முடிவுக்கு வந்தவனாக அவரின் கரம்பற்றி தன்னருகில் இருந்த சேரில் அமர வைத்தான்.

"நான் உங்களிடம் எதையும் மறைக்கவில்லைமா அதற்கு அவசியமுமில்லை. இன்னும் சற்று நேரத்தில் உங்கள் மருமகளே வந்து அதை உங்களுக்கு தெரியப்படுத்தி விடுவாள்!" என்றவன் முன்தினம் இரவு நடந்தது முதல் மதியம் ஹிரணியின் வீட்டிலிருந்து கிளம்பியது வரை அனைத்தையும் கூறினான்.

"என்னடா சொல்கிறாய் உன் வாழ்வு பாழாக நானே காரணமாகி விட்டேனா?" என்று நெஞ்சில் கை வைத்தவரின் விழிகளிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருக்கெடுத்து இறங்கியது.

"ஷ்... மா... காம் டவுன், ஒன்றும் பிரச்சினையில்லை!" என்று தன் கரத்தை அழுத்தியவனின் கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் பவானி.

"எப்படிடா நான் அமைதியாக இருக்க முடியும்? உன் மேல் சற்றும் விருப்பமோ, ஆவலோ இல்லாமல் தன் சுயலாபத்திற்காக மட்டும் தான் அவள் உன்னை திருமணம் செய்திருக்கிறாள் என்றால் அடுத்து அவளுடைய திட்டம் தான் என்ன? இனி உன்னுடைய எதிர்கால வாழ்வு எப்படியிருக்கும்?" என்றார் விழிகளில் பரவிய அச்சத்தோடு.

"நீங்களே சொல்லி விட்டீர்கள் அடுத்து அவள் என்ன செய்யப் போகிறாள் என தெரியவில்லையே என்று... பிறகென்ன? என்ன தான் நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் அதற்குள் கவலைப்பட வேண்டாம். எவ்வளவு யோசித்தும் எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லைம்மா, திட்டம் போட்டு நம்மை ஏமாற்றி இந்த வீட்டிற்குள் நுழையும் அளவுக்கு அப்படியென்ன இங்கே பிரச்சினை இருக்கிறது? உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?" என்று அவரிடம் வினவினான்.

சில நிமிடங்களுக்கு மூளையை கசக்கி விட்டு அவரும் ஒன்றும் புரியாமல் பரிதாபமாக விழித்தார்.

"எனக்கும் தெரியவில்லையேடா... அவள் இந்த வழியில் நம்மை ஏமாற்றி வரும் அளவுக்கு நாம் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்?" என்றவர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே வாசலில் கால் டாக்ஸி ஒன்று வந்து நின்றது.

ஹிரண்மயி தான் வந்து விட்டாளா என்று காரை நோக்கி விரைந்த அகில், கீழே இறங்க சொல்லி கரம்பற்றி

இழுத்து அவள் கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கும் நபரை கண்டு அதிர்ந்து சிலையானான்.

பின்னோடு வந்த பவானியும் ஹிரணியோடு அமர்ந்திருந்த நபரை கண்டு திகைப்புடன் தடுமாறியபடி அருகிலிருந்த அகிலின் கரத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

6

அகில்... என்ற பவானியின் குரல் காற்றாக வெளிவர அவருடைய உடல் நடுங்கத் துவங்கியது. கரங்கள் சில்லிட அவனை இறுகப் பற்றியவரின் விழிகள் எதையோ தேடி காருக்குள் அலைபாய்ந்தது.

தன் தாயின் தடுமாற்றத்தை உணராமல் அகிலனும் தவிப்புடன் விழிகளை சுழற்றிக் கொண்டிருந்தான்.

தன்னுடன் இருந்த பெண்ணை ஹிரண்மயி வற்புறுத்தி கீழே இறங்க வைத்தாள்.

"ஹிரணி... ப்ளீஸ் வேண்டாம்மா போகலாம்!" என்றே மாறி மாறி முணுமுணுத்துக் கொண்டிருந்தவள் தன் எதிரில் இருந்தவர்களை மறந்தும் நிமிர்ந்துப் பார்க்கவில்லை.

"ப்ச்... கொஞ்சம் நேரம் அமைதியாக இருங்கள் அக்கா, எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று அவளை லேசாக அதட்டி அடக்கி விட்டு, லக்கேஜை எடுத்த வைத்த டிரைவரிடம் நன்றியுரைத்து கையிலிருந்த பணத்தை கொடுத்தாள் நாயகி.

பவானியோ, அகிலோ தற்பொழுது ஹிரணி பற்றிய எந்த ஒரு பிரச்சனை குறித்தும் தெரிந்துக் கொள்ள கொஞ்சமும் தயாராக இல்லை.

அவர்களுடைய எண்ணமெல்லாம் காரிலிருந்து இறங்கி தலைக்குனிந்தபடி ஓய்ந்துப் போய் நின்றிருந்தவளின் மேல் தான் பதற்றத்துடன் நிலைத்து இருந்தது.

'கடவுளே... இவள் ஏன் இப்படி நிற்கிறாள்? என்னவாயிற்று இவளுக்கு? இவளை... இவளை இப்படி பார்க்கப் பார்க்க என் கருப்பையும், நெஞ்சமும் ஒருசேர பதறுகிறதே... தயவுசெய்து என்னை எந்தவொரு சோதனைக்கும், வேதனைக்கும் உள்ளாக்கி விடாதேப்பா... சத்தியமாக என்னால் எதையும் தாங்கிக் கொள்ள முடியாது!' என்று நெஞ்சை அழுத்திக் கொண்டார் பவானி.

"ம்... வாங்க!" என்று அந்தப் பெண்ணை கைத்தாங்கலாக பிடித்து வீட்டினுள் அழைத்துச் சென்றாள் ஹிரணி.

அவளிடம் மறுக்கவும் இயலாமல் எதிரில் உள்ளவர்களை பார்க்கவும் தைரியம் இல்லாமல் கால்கள் தள்ளாட மெதுவாக அன்ன நடையிட்டு உடன் சென்றாள் அவள்.

"அகில்... என்னடா இது?" என்று இதழ் துடிக்க விழிகள் கலங்க ஏறிட்டவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவனும் உள்ளம் நடுங்க பவானியை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

வரவேற்பு அறையின் நடுவில் நின்றுக் கொண்டிருந்த பெண்களிடம் சென்றதும் ஹிரணி முன்னே வந்து, "இங்கே பாருங்கள்..." என எதையோ பேச முயல, பவானி வேகமாக அவளை குறுக்கே கைநீட்டி தடுத்தார்.

"இல்லை நான்..." என்று அவள் மேலும் குறுக்கே வர, "உன்னை எதுவும் பேசாதே என்றேன்!" என்றவரின் தீப்பார்வையில் அவள் இதழ்கள் தன்னால் அதிர்ந்து மூடிக் கொண்டது.

மெல்ல புதியவளை நெருங்கி நின்றவர், "ஏன்டி இப்படி வந்து நிற்கிறாய்?" என்றதும் அவள் விழிகள் மடைத் திறந்த வெள்ளமாக ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

"உன்னை தான்டி கேட்கிறேன் எனக்கு பதில் சொல். ஏன்டி இப்படி இருக்கிறாய்?" என்று நடுங்கும் கரங்களால் அவள் தோள்களைப் பற்றி வினவினார்.

அவ்வளவுதான் ஹக்... என்ற ஓசையுடன் அவள் முகத்தை மூடிக் கொண்டு ஓவென்று பெருங் குரலெடுத்து அழ, பவானியின் விழிகளும் நீரைப் பொழிய ஆரம்பித்தது.

அவர்களை தடுக்கும் வழியறியாது தடுமாறிய ஹிரணி வேகமாக அகிலனிடம் சென்றாள். அவனோ தன் கண்ணெதிரே நிற்பவளின் நிலைக்கண்டு எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாமல் கலங்கிப் போய் பதற்றத்தோடு நின்றிருந்தான்.

"ப்ளீஸ்... உங்கள் அம்மாவை கொஞ்சம் அமைதியாக இருக்க சொல்லுங்கள். அக்கா ஏற்கனவே மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள். அவர்களை ரொம்ப சிரமப்பட்டு நான் மீட்டுக் கொண்டு வந்திருக்கிறேன், அதை கெடுத்துவிட வேண்டாம். அதுவும் பிரெக்னென்ட்டாக இருக்கும் நிலையில்..." என்று அவள் மேலே என்ன பேசினாளோ அதற்கு மேல் மொழிந்த எந்தவொரு வார்த்தையும் அவன் காதுகளில் விழாமல் அவனுடைய விழிகள் எதிரில் உள்ளவளின் வயிற்றை வெறித்தது.

"ஏன்டி இப்படி அழுகிறாய்? எனக்கு பயமாக இருக்கிறதே, பதில் சொல்லடி... என் பையன் எங்கே?" என்று வினவியவர் பதற்றத்தின் உச்சத்தில் பிரஷர் அதிகமாகி மயங்கி விழ ஆரம்பித்தார்.

அதிர்ந்தவள் அம்மா என்று கத்தியபடி அவரை பிடிக்க முயல, அகில் வேகமாக வந்து தன் தாயை தாங்கினான்.

அவரை மெதுவாக நடத்தி சென்று அங்கிருந்த சோபாவில் அமர வைத்தவன், "உட்காருங்கள்!" என்று எதிரில் உள்ள சோபாவை அவளுக்கு கை காட்டினான்.

பவானி மயங்கியதில் பதற்றமடைந்திருந்தவள், தன் வேதனையை மறந்து அச்சத்துடன் அமரச் சென்றாள்.

சட்டென்று நினைவு வந்தவளாக, "நான் அம்மாவிற்கு குடிக்க ஏதாவது எடுத்து வருகிறேனே!" என்றாள் தவிப்புடன்.

தன் அண்ணனை குறித்து எந்த ஒரு தகவலும் தெரியாமல் மனம் வேதனையில் இருந்தாலும், தற்பொழுதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு அனைவரையும் அமைதியாக்க விரும்பினான் அகில்.

அண்ணியின் குணத்தை கண்டு முகம் கனிந்தவன், "வேண்டாம்... இந்த நிலைமையில் ஏன் நீங்கள் சிரமப்பட்டுக் கொண்டு, அமைதியாக உட்காருங்கள். உங்கள் தங்கை வெட்டியாக தானே நிற்கிறாள், அவளை

போய் எதையாவது சூடாக குடிக்க எடுத்து வரச் சொல்லுங்கள்!" என்று மனைவியை சீண்டினான்.

அவளால் புதிய பிரச்சினை எதுவும் வராமல் ஏற்கனவே தங்களுக்கு உள்ள பிரச்சினை தொடர்பாக தான் அவள் இந்த வீட்டிற்கு வந்திருக்கிறாள் என்பதில் சற்றே நிம்மதி அடைந்திருந்தான் அவன்.

ஹர்சிதா திரும்பி ஹிரணியை பார்க்க, அதுவரை அகிலின் வார்த்தைகளை கேட்டு அவனை பலமாக முறைத்துக் கொண்டிருந்தவள் சட்டென்று தன் முகத்தை சீர்படுத்திக் கொண்டு கிச்சனுக்கு சென்றாள்.

அருகிலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து பவானியின் முகத்தில் தெளித்து துடைத்தவன், அம்மா என்று அவரை மெல்ல உலுக்கினான்.

ம்... என்று விழிகளை மெதுவாக திறந்தார் அவர். ஹர்சிதா அவரையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய முகத்தை கண்டதும் மீண்டும் அவர் நெஞ்சம் கலங்க துவங்க, "டேய் அகில்... உன் அண்ணா எங்கே என்று அவளை தயவுசெய்து சொல்ல சொல்டா!" என்று அச்சத்துடன் அவன் சட்டையை இறுகப் பற்றினார்.

"அண்ணி ப்ளீஸ்... தயவுசெய்து என்ன பிரச்சினை என்று கொஞ்சம் வேகமாக சொல்லுங்கள். அண்ணா ஏன் இத்தனை நாட்களாக என்னை தொடர்பு கொள்ளவில்லை?" என்றான் கவலையுடன்.

"அவர்... அவரை... அவரை நான்கு மாதங்களாக காணவில்லை!" என்றவளின் உதடுகள் அழுகையில் துடிக்க முகம் சிவந்து விழிகளும் கலங்கியது.

"என்ன?" என்றான் அகிலன் அதிர்ச்சியோடு.

"என்னடி சொல்கிறாய்? நீ அன்று அவனை தேடிக்கொண்டு இங்கே வீட்டிற்கு வந்தாயே அதன்பிறகு

அவன் வரவே இல்லையா?" என்றார் பவானி கலக்கத்தோடு.

பொங்கும் அழுகையை அடக்கும் முயற்சியாக இதழை கடித்தபடி ஆமோதிப்பாக தலையசைத்தாள் ஹர்சிதா. அம்மா ஏற்கனவே அண்ணியை பார்த்திருக்கிறாரா என்று குழம்பிக் கொண்டிருந்த அகிலுக்கு, கடவுளே... என்று அவர் மீண்டும் தன் நெஞ்சை பிடித்துக் கொள்ளவும் அவருடைய உடல்நிலையை எண்ணி கலக்கமாகிப் போனது. அவரை உடனடியாக திசைதிருப்ப விரும்பியவன் தன்னுடைய அண்ணியின் நிலையை எடுத்துக் காட்டினான்.

"அம்மா டென்ஷனாகாதீர்கள், அண்ணாவை காணவில்லை என்று தானே அண்ணி சொன்னார்கள். எப்படியாவது அவனை தேடிக் கண்டுப்பிடித்து விடலாம் அதற்கு நான் பொறுப்பு. முதலில் நீங்கள் இன்னொரு விஷயத்தை கவனித்தீர்களா?" என்று அவரிடம் தூண்டில் போட்டான்.

தன் மூத்த மகனை குறித்த கவலை மனதில் பெருமளவில் இருந்தாலும் இளையவனின் பேச்சை கேட்டு அவனை குழப்பத்துடன் ஏறிட்டார் அவர்.

"என்னடா?"

"உங்கள் மருமகள் இப்பொழுது கர்ப்பமாக இருக்கிறார்கள் போலிருக்கிறது. நீங்கள் அதைக் கவனிக்கவில்லையா?" என்றான் அவன் மெல்லிய புன்னகையுடன்.

பவானி அப்பொழுது தான் ஹர்சிதாவை முழுமையாக கவனித்தார். அவள் லேசான சங்கடத்துடன் தலையை குனிந்துக் கொள்ள, இவருக்கோ மீண்டும் தன் மகனின் நினைவில் மனது பாரமாகியது.

அதற்குள்ளாக ஹிரண்மயி அனைவருக்கும் குடிக்க தேநீர் எடுத்துவர, அனைவரின் விழிகளும் அவளிடம் திரும்பியது.

பவானியிடமும், அகிலனிடமும் கொடுத்தவள் அடுத்து ஹர்சுவிடம் செல்ல, அவளை வேகமாக தடுத்தார் மூத்தவர்.

"நில்... அவளுக்கு இதெல்லாம் கொடுக்காதே!" என்று அவர் பட்டென்று முழங்கவும், அகிலுக்கு குழப்பம் என்றால் அவளை அநாதைப்பெண் என்று தவிர்க்கப் பார்ப்பதாக ஹிரணியின் முகம் கோபத்தில் சிவந்தது.

உடனே சிலிர்த்துக்கொண்டு ஏதோ பேச வாய் திறந்தவளை அகில் பார்வையாலே அடக்க, அவளும் பதிலுக்கு அவனிடம் பார்வையால் எகிறிக் கொண்டிருந்தாள்.

தன்னுடைய தேநீரையும் கீழே வைத்துவிட்டு எழுந்துக் கொண்ட பவானி, வா என்று ஹர்சிதாவின் கரம்பற்றி நேராக பூஜையறைக்கு அழைத்து சென்றார்.

சில நிமிடங்கள் அமைதியாக கண்மூடி தியானித்து தன் பிரார்த்தனையை வைத்தவர், "ஹிரணி இங்கே வா!" என்று அவளை அழைத்தார்.

அவர் செய்வதையெல்லாம் புரிந்துக் கொள்ள முடியாமல் பார்த்திருந்தவள் அருகில் வந்து நிற்க, "விளக்கேற்றி விட்டு இவளுக்கு குங்குமத்தை எடுத்துக் கொடு!" என்றார்.

அவர் சொன்னபடி செய்தவள் குங்குமச் சிமிழை எடுத்து ஹர்சுவிடம் நீட்டினாள். விழிகள் நீரில் மிதக்க நடுங்கும் விரல்களால் அதை எடுத்து தன்னுடைய வகிட்டில் இட்டுக் கொண்டாள் அவள்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டவர் விபூதியை எடுத்து அவள் நெற்றியில் பூசி ஆசிர்வதித்தார்.

"சீக்கிரமாக உன் புருஷன் திரும்பி வந்து நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் நூறு வருடம் சேர்ந்து வாழ வேண்டும்!"

அம்மா... என்ற விம்மலுடன் தன் காலில் விழ வந்தவளை தடுத்து தன்னோடு அணைத்துக் கொண்டவர் அவளை ஹாலுக்கு அழைத்து வந்தார்.

உடன் வந்த ஹிரணியிடம் திரும்பியவர், "நீ போய் அவளுக்கு பாலில் நிறைய சர்க்கரை போட்டு எடுத்து வா, முதல் முறையாக வீட்டிற்கு வந்தவளுக்கு பால் தான் தர வேண்டும் டீயெல்லாம் தரக் கூடாது!" என்க, அவளின் மான் விழிகள் அவளையும் மீறி தன் துணைவனிடம் பாய்ந்தது.

அவனோ ஒற்றை புருவத்தை உயர்த்தி கேலியாக சிரிக்க, சிலிர்த்துக் கொண்டு உள்ளே திரும்பினாள் பெண்.

"சண்டிக்குதிரை!" என வாய்க்குள் முணுமுணுத்தான் அகில்.

"ஆமாம்... உனக்கு இது எத்தனை மாதம்?" என்று வினவினார் பவானி.

"ஆறு மாதங்கள்மா!" என்றவளின் முகம் வேதனையில் வாடியது.

விமலன் தன்னிடம் விவரம் சொல்லி தன் சொல்லை ஏற்க மறுத்து பிரிந்து சென்று இவளை மணந்தும் ஆறு மாதங்களாகிறது. அப்பொழுது இவளுடன் நன்றாக சந்தோசமாக தானே குடும்பம் நடத்தியிருக்கிறான்... நம்பி வந்தவளை நட்டாற்றில் விட்டுச் செல்லும் பழக்கம் கண்டிப்பாக என் மகனுக்கு சுட்டுப் போட்டாலும் வராது. பிறகு அவனுக்கு என்ன தான் நடந்திருக்கும்? எப்படி இத்தனை மாதங்களாக இவளை பிரிந்திருக்கிறான்? என்று குழம்பியவர் விபத்து ஏதாவது... என்றெண்ணும் பொழுதே உடல் நடுங்கியது.

தவிப்புடன் திரும்பி அருகிலிருந்த அகிலை ஏறிடவும், அதே ஆலோசனையில் எதை எதையோ பொருத்திப் பார்த்து அஞ்சிக் கொண்டிருந்தவன் தன் தாயின் கலக்கத்தை உணர்ந்து தன்னை மறைத்து அவரிடம் நம்பிக்கையுடன் புன்னகைத்தான்.

லேசாக நிம்மதிப் பெருமூச்சு விட்டவருக்கு எதிரில் இருப்பவளை பார்க்கப் பார்க்க மனதிற்கு வருத்தமாக தான் இருந்தது. தன்னுடைய கோபதாபங்களை மீறி ஒரு பெண்ணாக அவள் வேதனையை நன்றாக உணர்ந்தார். எந்தவித சொந்தமும் இன்றி அநாதரவாக வந்தவளுக்கு ஒரே ரட்சகனாக துணையிருந்த தன்னுடைய மகனின் பிரிவு அவளை என்ன பாடுப்படுத்தும் என்பது முழுதாக புரிந்தது.

"இந்தப் பாலை குடிங்கக்கா!" என்று ஹர்சிதாவிடம் டம்ளரை நீட்டியவளை கீழிருந்து மேலாக யோசனையுடன் ஆராய்ந்த அம்மாவும், மகனும் தங்களுக்குள் ரகசியமாக பார்வையை பரிமாறிக் கொண்டனர்.

"ஹிரண்மயி!" என்று அழைத்த பவானியை திரும்பி கேள்வியுடன் நோக்கினாள் அவள்.

"ஹர்சிதாவை உனக்கு எப்படி தெரியும்?"

"நானும், அக்காவும் ஒன்றாக ஆசிரமத்தில் வளர்ந்தவர்கள்!" என்றாள் அவள் நிமிர்வுடன்.

"என்ன?" என்று அதிர்ந்த பவானியின் குரலை தொடர்ந்து, "அப்பொழுது... அம்மா, அப்பா, அந்த வீடு எல்லாம்?" என்று திகைப்புடன் வினவினான் அகில்.

அவனை அலட்சியமாக பார்த்தவள், "அம்மா எங்கள் ஆசிரமத்து சமையல்காரம்மா, அப்பா அங்கே வாட்ச்மேன். வீடு உங்கள் அம்மா பெண் பார்க்க வரும் முன்பு ஒரு இரண்டு மாதங்களுக்காக மட்டும் வாடகைக்கு எடுத்தேன்!" என்றாள் எடுப்பாக.

சற்றும் அவர்களை ஏமாற்றி வந்திருக்கிறோமே என்கிற எந்தவித குற்றவுணர்வும் இல்லாமல் துணிச்சலுடன் அவள் பதிலளித்தது அவர்கள் இருவரையும் வியக்கச் செய்தது.

திரும்பி தன் அம்மாவை பரிதாபமாக பார்த்த அகில் அதற்குமேல் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரிக்க

ஆரம்பிக்க, அதைத் தொடர்ந்து பவானியும் கண்களில் நீர்வழிய சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

7

தன் பதிலை கேட்டு கணவனும், மாமியாரும் மிகவும் சினம் கொள்வார்கள் என்ற அவளின் எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாக இருவரும் ஒன்றாக கண்களில் நீர் தேங்கி வழியும் அளவிற்கு ஆர்ப்பரித்து சிரிக்கவும் ஹிரண்மயி ஒன்றும் புரிந்துக் கொள்ள இயலாமல் குழம்பினாள்.

ஹர்சிதாவிற்கும் அவர்கள் பேசிக் கொள்வது எதுவும் புரியவில்லை, 'இங்கே என்ன நடக்கிறது?' என்று விழித்தாள்.

"ஹிரணி... என்ன சொல்கிறாய்? மங்களம் அம்மாவையும், பகவதி அப்பாவையும் வீடெடுத்து தங்க வைத்து நடிக்க வைத்தாயா... எதற்காக? அப்புறம்... நானும் உன்னிடம் மதியத்திலிருந்தே கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீ திருமணமே செய்துக் கொள்ள மாட்டேன் என்று தானே ரொம்ப வருடமாக சொல்லிக் கொண்டிருந்தாய். பிறகெப்படி உன் கழுத்தில் தாலி, நெற்றி வகிட்டில் குங்குமம் எல்லாம் இருக்கிறது? அப்பா, அம்மா நாடகம் போல் இதுவும் நாடகமா என்ன? உனக்கு நீயே தாலி கட்டிக்கொண்டாயா... ஆனால் எதற்காக?" என்றாள் மீண்டும் குழப்பத்துடன்.

சட்டென்று அகிலனின் சிரிப்பு நின்று பதறியடித்தவனாக தன் அண்ணன் மனைவியிடம் வேகமாக பேசினான் அவன்.

"ஓ காட்! என்ன அண்ணி பொசுக்கென்று இப்படி கேட்டு விட்டீர்கள்? நான் எவ்வளவு கஷ்டப்பட்டு அவள் கழுத்தில் மூன்று முடிச்சி போட்டேன்... ஸீ ஈஸ் மை பெட்டர் ஹாஃப் அண்ணி, என்ன வொய்ஃபை இதையெல்லாம் உன் அக்காவிடம் சரியாக சொல்வதில்லையா? கொஞ்சமும் பொறுப்பில்லாமல் இருக்கிறாயே!" என்று மனைவியிடம் கண்ணடித்து கேலியாக வேறு பேசினான்.

"என்ன உண்மையாகவா?" என்று ஹர்சு திகைப்புடன் வினவ மறுபுறம் பவானியோ, "அதென்னடா வொய்ஃபை? வொய்ஃப் தானே சரி!" என்று அதிமுக்கியமாக மகனிடம் தன் சந்தேகத்தை கேட்டார்.

"இவள் என் வொய்ஃபாக இருந்தாலும் செய்த வேலை என்னவோ வொய்ஃபை வேலை தானேம்மா... கனெக்டிங் நெட்வொர்க் மாதிரி... கனெக்டிங் பீப்பிள்ஸ். ரைட்?" என்று மீண்டும் வெடிச்சிரிப்பு சிரித்தான்.

ஹிரணியின் முகம் ஜிவுஜிவென்று சிவக்க, "எனக்கு புரியவில்லை... நான் கேட்ட கேள்விக்கு அவள் பதிலேதும் சொல்லாமல் நேராக இங்கே அழைத்த வந்த பதற்றத்தில் இருந்தேன். இப்பொழுது நீங்கள் என்னவோ அவளை உங்கள் மனைவி என்கிறீர்கள்?" என்று அகிலிடம் இன்னமும் குழப்பத்துடன் வினவினாள் ஹர்சு.

"மை குட்னெஸ்... சத்தியமாக நான் தான் அவள் புருஷன் அண்ணி. ஏய் பெண்டாட்டி... உண்மையா இல்லையா?" என்று ஹிரணியை நோக்கி தீவிரமாக கேட்டான் அவன்.

தான் நினைத்து ஒன்றை செய்து முடிக்க அவை அனைத்தும் தற்பொழுது தனக்கெதிராக திரும்புவதில் ஏக கடுப்பில் முகம் இறுக அழுத்தமாக நின்றிருந்தாள் அவள். அடுத்து என்ன செய்து இதிலிருந்து எப்படி வெளியேறுவது? என்ற எரிச்சல் வேறு சேர்ந்துக் கொண்டது.

"ஹிரணி... என்ன பதிலே பேசாமல் அமைதியாக நிற்கின்றாய். என்ன நடந்தது என்று உண்மையை சொல்?" என சற்று அழுத்தமாக கேட்டாள் ஹர்சிதா.

"அவளை ஏன் கேட்கிறீர்கள்? உங்களுக்கு அனைத்து கதைகளையும் நான் சொல்கிறேன்!" என்று வசதியாக காலை மடித்து சம்மணமிட்டு அமர்ந்துக் கொண்டான் அகில்.

பற்றாக்குறைக்கு அவளிடம் வேறு திரும்பி, "நீ ஏன் நின்றுக் கொண்டே இருக்கிறாய்? நம் மூன்று பேருடைய

கதையையும் நான் ஒருவனே சொல்ல வேண்டுமில்லை... கொஞ்சம் நேரமாகும். அதனால் இங்கே வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து கேள்!" என்று அவளை பாசமாக அழைத்தான்.

அவன் பேச்சில் மற்ற இரு பெண்களும் சிரிக்க, இவளோ முறைத்தபடி அவனுக்கெதிரே சென்று அமர்ந்தாள்.

"தென் யுவர் விஷ்!" என்று அசால்ட்டு ஆறுமுகமாக தன் தோள்களை குலுக்கிக் கொண்டவன், நடந்ததை கூற ஆரம்பித்தான்.

"ம்... முதல் கதை என்னிடமிருந்தே ஆரம்பிக்கிறேன், இது அகிலின் கூற்று!"

"நான் கனடா சென்ற இரண்டாவது வாரமே விமல் போன் செய்து நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன்டா இனி அவள் தான் என் வாழ்க்கை என திடீரென்று விஷயத்தை கூறியதில் எனக்கு ஒரே ஆச்சரியம், இருபத்தியொன்பது வயது வரை எந்தப் பெண்ணையும் ஏறிடாமல் சாமியாராக வாழ்ந்து வந்த என் அண்ணனுக்கு காதலா என்று. இருந்தாலும் என்னை போன்ற விளையாட்டுப் பிள்ளையாக இல்லாமல் மிகவும் பொறுப்பானவன் என்பதால் எனக்கு சந்தோசம் தான். அண்ணியை குறித்த விவரத்தையும், குணத்தையும் தெரிவிக்கவும் பொருத்தமானவர் தான் என்ற திருப்தியும் உருவாகிற்று. ஆனால் அம்மாவோ அநாதைப் பெண்ணாக ஆசிரமத்தில் வளர்ந்தவளா வேண்டாம் என்று சொல்கிறார் என அடுத்த அழைப்பில் புலம்ப ஆரம்பித்தான். இப்படியே நாட்கள் கடக்க ஒருநாள் திடீரென்று அழைத்தவன் அண்ணியை திருமணம் செய்துக் கொண்டு தனியாகச் செல்லப் போகின்றேன் வீடெல்லாம் பார்த்து விட்டேன் என்றான். கொஞ்சம் பொறுமையாக இருடா, ஒரு மாதத்திற்குள் அப்படியென்ன அவசரம்? அம்மாவின் நிலையிலிருந்தும் சற்று யோசித்துப் பார், எப்படியாவது ஒரு ஐந்து மாதத்தை தள்ளிவிடு. நான் ஊர் திரும்பியதும் அம்மாவிடம் பேசி சம்மதிக்க வைக்கிறேன். நானும்

ஊரில் இல்லாத நேரம் அவர்களை தனியாக விட்டுச் செல்லாதே என்றேன் பதிலுக்கு அவனுடைய கலங்கிய குரல் மட்டுமே வெளிப்பட்டது. எனக்கு தெரியும்டா அம்மா நம் மேல் எவ்வளவு பாசமும், நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள் என்று நானும் அவர்கள் மேல் மிகுந்து மரியாதை வைத்திருக்கிறேன். ஆனால் என்னால் நீ வரும் வரை எல்லாம் அவளை தனியாக விட முடியாதுடா. அவள் மிகவும் பாவம்டா இத்தனை வருடங்களாக தனிமையில் இருந்து விட்டாள். இதற்கு மேலும் அவளை அப்படியே விட்டு வைக்க என் மனம் விரும்பவில்லை. அம்மாவை இப்படி விட்டுச் செல்ல எனக்கு சற்றும் விருப்பமில்லை தான். ஆனால் வேறுவழியுமில்லை நான் அவளை திருமணம் செய்து கொண்டு தான் ஆக வேண்டும். அம்மா போல்டானவர்கள் எப்படியாவது தன்னை சமாளித்துக் கொள்வார்கள். நானும் அவர்கள் என்னை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை என்றாலும் தொலைவிலிருந்தே தினமும் அவர்களுடைய நலனை எப்படியாவது கவனித்துக் கொள்கிறேன் நீ என்னுடைய வார்த்தையை நம்புடா என முடித்து விட்டான்!" என்றவனுடைய பெருமூச்சை தொடர்ந்து இருபெண்களின் மெல்லிய விசும்பல் ஒலி மட்டுமே அங்கு ஒலித்தது.

அந்நேரத்தில் தாங்கள் இருவரும் விமலை தர்மசங்கடமான நிலைமைக்கு தள்ளிவிட்டோமே என தாயாய் பவானியும், மனைவியாய் ஹர்சிதாவும் வருந்தினார்கள்.

"அதன்பிறகு திருமணம் முடிந்து அண்ணியுடன் அவ்வப்பொழுது வீடியோ சேட்டிங்கில் வருவான். மிகவும் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருப்பான், அம்மாவை குறித்த விவரத்தையும் மறக்காமல் தெரிவிப்பான். மிகவும் ரோஷமாக இருக்கிறார்கள்டா... பார்க்க மறுக்கிறார்கள் என்று வருந்துவான். பிறகு திடீரென்று ஒருநாள் விமலுடைய தொடர்பே முற்றிலும் விட்டுப் போயிற்று. அவனுடைய மொபைல், இமெயில், அலுவலக எண்ணிற்கு என எதை தொடர்பு கொண்டாலும்

அவனோடு பேச இயலவில்லை. எனக்கோ என்ன பிரச்சனை என்று ஒன்றும் தெரிந்துக் கொள்ள முடியவில்லையே என்கிற பயம் ஒருபக்கம் எதையும் நேரில் சென்று தேடி அலைந்து தெரிந்துக் கொள்ள முடியவில்லையே என்ற எரிச்சல் ஒருபக்கம். இதை அம்மாவிடம் தெரிவித்து தனியாக இருக்கும் அவர்களின் பதற்றத்தை வேறு கிளப்பிவிட வேண்டாம் என அவர்களிடம் சொல்லாமல் மறைத்து விட்டேன். இந்நிலையில் தான் இவர்கள் ஒருபக்கம் எனக்கு திருமணம் என்ற கூத்தை ஆரம்பித்தார்கள். எனக்கு சற்றும் ஆர்வமில்லை, விருப்பமில்லை, இப்பொழுது வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். இப்படித்தான் அவனும் சொன்னான் திடீரென்று ஒரு பெண்ணை காதலித்து அவசர அவசரமாக மணந்துக் கொண்டான். நீயும் அதேபோல் தான் பேசுகிறாய் என சத்தமிட்டார்கள். நான் யாரையும் காதலிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தும் நம்ப மறுத்து இமோசனலாக என்னை அட்டாக் செய்து அழ ஆரம்பித்து விட்டார்கள். ஏற்கனவே உன் அண்ணன் செய்து வைத்த காரியத்தால் தகப்பன் இல்லாமல் தனியாக ஒரு பெண்மணியால் வளர்க்கப்படும் பிள்ளைகள் இப்படித்தான் இருக்கும் என்று உறவுக்காரர்கள் மத்தியில் எனக்கு அவப்பெயர். இதில் நீயும் என் பேச்சை கேட்காதே என்னை மொத்தமாக அசிங்கப்படுத்துவது என்று இருவரும் ஒரேமாதிரி முடிவு செய்து விட்டீர்கள் எனவும் வேறுவழியில்லாமல் நான் சம்மதித்து விட்டேன். விமலை பற்றிய கவலை ஒருபுறம் இருந்தாலும் சரி எப்படியோ அம்மாவை ஒருவழியாக திருப்தியடைய வைத்தாயிற்று, இனி நேரில் சென்று விமல் ஏன் என்னை தொடர்பு கொள்ளாமல் இருக்கிறான் என்கிற தகவலை தெரிந்துக் கொள்ளலாம் என்று சற்று அமைதியடைந்தேன். இங்கே வந்து அவனை தேடிச் சென்ற இடமெல்லாம் எனக்கு பதில் நெகடிவ்வாகவே கிடைத்தது. அலுவலகத்துக்கு நான்கு மாதங்களாக வரவில்லை, அவன் தங்கியிருந்த வீட்டிற்கு சென்று விசாரித்தாலும் காலி செய்து போய்

விட்டார்கள் என சொல்லவும் எனக்கு அடி மேல் அடியாக இடி தான் விழுந்தது. ஒன்றுமே புரியாமல் பைத்தியம் பிடிப்பது போல் இருந்த நிலையில் எனக்கு கல்யாணம் என்று இவள் கழுத்தில் வேறு நான் தாலி கட்டிவிட்டேன்!" என அவனையும் மீறி புன்னகைத்தான்.

"அந்த இக்கட்டான சூழ்நிலையில் அனைவர் முன்னும் நடித்தாக வேண்டிய கட்டாய நேரமென்பது தான் நான் கொஞ்சம் கவலை மறந்து இருந்த நேரம். அம்மாவிடம் விமலை பற்றி மறைப்பது ஒருபக்கம் என்றால் கட்டிய மனைவியிடம் எனக்கு ஒரு சகோதரன் இருப்பதையே மறைத்து விட்டோமே என்கிற குற்றவுணர்ச்சி எனக்குள் இருந்த மனஉளைச்சலை சிறிது திசைதிருப்பியது. அம்மா என்ன தான் கொஞ்சம் போல்டாக இருந்தாலும் ஒரு சில விஷயங்களில் பூதக் கண்ணாடி கொண்டு பார்த்து பெரிதுப்படுத்தி பயந்து விடுவார்கள். அப்படியொரு விஷயம் தான் என் திருமணம் கூட, இந்தக் காலத்தில் காதல் மணம் புரிவதெல்லாம் மிகச் சாதாரணம் என்பதை புரிந்துக் கொள்ளாமல் தேவையில்லாமல் தனக்கு தானே குழம்பிப் போய் நம் ஜாதியில் தான் பெண்ணெடுப்பேன் விமலை பற்றிய விவரம் சொன்னால் பெண் தர மாட்டார்கள் என்று என்னை எதுவும் பேச விடாமல் இங்கே இருந்து ஆட்டி வைத்து விட்டார்கள். ப்பூ... அவன் பொறுப்பானவன் நீ விளையாட்டுப் பிள்ளை என்று சொல்லி சொல்லியே இப்பொழுது அனைத்து பொறுப்பும் என் மேல் தான் வந்து விழுந்திருக்கிறது!" என்று கவலையுடன் உரைத்தவன், "ஆனால் நீங்கள் ஏன் அண்ணி இத்தனை நாட்களாக என்னை தொடர்பு கொண்டு விமலை காணவில்லை என்ற விவரத்தை சொல்லவில்லை?" என ஹர்சிதாவிடம் வருத்தத்துடன் வினவினான்.

"எனக்கு தெரியவில்லையே... நான் என்ன செய்வேன்? இப்படியொரு சூழ்நிலை வரும் என்பது தெரியாமல் நான் சுதாரிப்பாக இல்லாமல் மிகவும் முட்டாள்தனமாக இருந்து விட்டேன். ஒவ்வொரு முறையும் அவர் உங்களுடன் பேசும்பொழுது வந்து இணைந்துக்

கொண்டேனே தவிர உங்கள் மொபைல் நம்பரையும், மெயில் ஐடியையும் தனியாக வாங்கி வைக்க தோன்றாமல் தவறிழைத்து விட்டேன். அவர் முதல் நாள் வீட்டிற்கு வரவில்லை எனும் பொழுது லேசான கவலையும், பயமும் வந்தது. மறுநாளும் வராமல் இருக்கவும் மிகவும் பயந்து விட்டேன், அம்மாவை பார்க்க அவர் தினமும் இங்கே வீட்டிற்கு வருவார் என்று தெரியும். வார இறுதி நாட்களில் என்னையும் இந்த பக்கமாக அழைத்து வருவார் என்பதால் எனக்கும் வீடு நன்றாக அடையாளம் தெரியும். இரண்டாவது நாள் அம்மாவுக்கு எதுவும் உடம்பு முடியாமல் இங்கே வந்து இருக்கிறாரோ ஏன் எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்று வந்து பார்த்தேன். ஆனால் அவர் இங்கேயும் இல்லாமல் அம்மாவும் எங்கள் மேல் உள்ள தவறால் மிகவும் கோபித்துக் கொள்ளவும் செய்வதறியாது திரும்பி சென்று விட்டேன். அதன்பிறகு எங்கே எப்படி தேடுவது என்றே தெரியவில்லை?" என்றாள் கலங்கிய விழிகளோடு.

மனதில் வேதனையோடு நிமிர்ந்த பவானி, "என்னை மன்னித்து விடும்மா... நீ அப்படியொரு சூழ்நிலையில் வந்திருக்கிறாய் என்பது எனக்கு நிஜமாக தெரியாது. அவ்வப்பொழுது அவன் வந்து என்னை சமாதானப்படுத்த முயற்சிப்பான். அதன் ஒரு பகுதியாக தான் நான் ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன் என்று உன்னை நாடகமாட விமல் அனுப்பி வைத்தான் என்று எண்ணி விட்டேன். அதன்பிறகு நீயும் வரவில்லை அவனும் என்னிடம் பேச முயற்சி செய்யவில்லை என்ற கோபத்தில் தான் விமலை முற்றிலும் தவிர்த்துவிட்டு அகிலுக்கு வேகமாக திருமண ஏற்பாடுகள் செய்தேன். ஆனாலும் அவனுக்கு இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை!" என்றவரின் குரல் தழுதழுத்தது.

8

"இல்லைம்மா... நீங்கள் பெரியவர்கள் அப்படியெல்லாம் சொல்லக் கூடாது, எங்கள் மீது தவறு இருக்கும் பொழுது உங்களுக்கு நியாயமாக கோபம் வரத்தானே செய்யும். எனக்கும் அப்பொழுது நான் இருந்த சூழ்நிலையில் அவரை விட்டு நொடியும் பிரியாமல் எந்நேரமும் அவரோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்பது மட்டும் முக்கிய பிரச்சினையாக தெரிந்தது!" என்றாள் ஹர்சிதா சோர்வுடன் தலையை குனிந்துக் கொண்டு.

"சரி விடு... எல்லாம் நடக்க வேண்டும் என்பது விதி. நாம் அனைவரும் அதற்கேற்ப நடந்துக் கொண்டிருக்கிறோம் வேறு என்ன சொல்வது? அப்பா இல்லாத பிள்ளைகளாக வளர்ந்ததால் யாரும் ஒரு குறை சொல்வது போல் இருக்க கூடாது என்று தான்... தவறாக எடுத்துக் கொள்ளாதே, யாருமற்ற உன்னை ஏற்றுக்கொள்ள என் மனம் மறுத்தது. சுற்றியுள்ள நம் சமூகத்தாரால் உண்டான குழப்பம், பிறப்பின் ரகசியம் தெரியாமல் குணம் எப்படியிருக்குமோ என்று ஒரு பயம்..." என பவானி தடுமாற அதுவரை அமைதியாக இருந்த ஹிரண்மயி நாகமாக மாறி சீறினாள்.

"ஓஹோ... எங்கள் பிறப்பிற்கு காரணமானவர்களை எங்களால் சுட்டிக்காட்ட முடியவில்லை என்றால் நாங்கள் தீயவர்களாகி விடுவோமா? முதலில் ஒன்றை தெளிவாக தெரிந்துக் கொள்ளுங்கள், எங்களை இதுப்போன்ற அவல நிலைக்கு ஆளாக்கியவர்கள் எல்லாம் நிச்சயம் ஏதோ ஒரு ஜாதி, சமூகத்தை சேர்ந்தவர்களாக தான் இருப்பர். தவறு செய்த அவர்கள் எல்லாம் ஜாதி முகமூடியை அணிந்துக் கொண்டு செய்த தவறை மறைத்தோ மறந்துவிட்டோ மகிழ்ச்சியாக கௌரவமாக குடும்பத்தில் வசிப்பார்களாம். ஆனால் அவர்களால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளான எங்களுக்கு மட்டும் குடும்பத்தில் நுழையவோ வாழவோ தகுதி கிடையாதாம். யார் வகுத்த நீதி இது?" என்று பொருமினாள்.

மறுக்க முடியாத உண்மை, அவள் சொல்வது அத்தனையும் நிஜத்தின் நிதர்சனம். ஆனால் இவற்றை யார் மாற்றி அமைப்பது? அவளின் கூற்றுக்கு பதில் தேடி கிடைக்காமல் அனைவரும் அமைதி காத்தனர்.

"நீ சொல்வது எல்லாம் சரி தான்மா, ஆனால் சமூக கட்டமைப்புகளுக்கு பயந்து அவற்றோடு ஒன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் என்னை போன்ற ஆட்களுக்கு எல்லாம் எங்களின் சுயவிருப்பு, வெறுப்புக்களை மீறி ஒரு சில விஷயங்களில் அதை மறுத்து செயல்பட மனதில் துணிவிருப்பதில்லை. ஒரு வேளை உன் மாமா உயிருடன் இருந்திருந்தால் நிலைமை வேறு மாதிரி மாறி இருந்திருக்குமோ என்னவோ... இன்றைய சூழ்நிலையில் நான் எடுக்கும் எந்தவொரு முடிவும் புருஷன் இல்லாததால் இவள் இஷ்டத்திற்கு ஆடுகிறாள் என்ற அவப்பெயரில் வந்து முடியும் என்பதாலேயே நான் ஒவ்வொன்றுக்கும் அஞ்சினேன்!" என்றவர் பெருமூச்சு விட, ஹிரணியின் அகத்திலிருந்த சீற்றம் சற்று கட்டுக்குள் வந்தது.

"ஆனால் ஒன்றும்மா... என்ன இருந்தாலும் நீ எங்களை இந்தளவுக்கு வில்லத்தனமாக உன்னுடைய கற்பனையில் சித்தரித்திருக்க வேண்டாம்!" என்று புன்னகைத்தவர், "தன் கணவனாகிய என் பிள்ளையை காணாமல் தொலைத்து விட்டு வயிற்றில் குழந்தையோடு தனிமையில் நிற்கின்ற அபலைப் பெண்ணை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அளவுக்கு நாங்கள் மனிதாபிமானம் அற்றவர்கள் அல்ல. நீ சாதாரணமாக இவளை அழைத்து வந்து என் முன்னால் நிறுத்தி விவரத்தை கூறியிருந்தாலே நான் நிச்சயமாக இவளை உளமாற ஏற்றிருப்பேன். சரிவிடு... இதுவும் ஒருவகையில் நல்லதுதான். நீ இப்படி செய்யவில்லை என்றால் தன் சொந்த வாழ்க்கையை பற்றி சற்றும் கவலைப்படாமல் உடன்பிறவா சகோதரியின் வாழ்க்கைக்கு நியாயம் கேட்டுப் போராட துணிச்சலுடன் பல வேலைகள் செய்து வீட்டிற்குள் நுழைந்திருக்கும் உன் போன்ற ஒரு நல்ல குணமுள்ள மருமகள் எங்களுக்கு கிடைத்திருக்க

மாட்டாள். அனைத்தும் நன்மைக்கே... இனி நான் சமூகத்தை பற்றியோ உறவினர்களின் விமர்சனத்தைப் பற்றியோ எந்த கவலையும் கொள்ளப் போவதில்லை. என் மகன் திரும்ப கிடைத்து நீங்கள் நால்வரும் மகிழ்ச்சியாக ஒற்றுமையாக வாழ்ந்தால் அதுவே எனக்கு போதும்!" என்று கூறியவர் நிம்மதியாக இருக்கையில் சாய்ந்தார்.

விமலனை கண்டுப்பிடிக்க வேண்டும் என்ற கவலையை தவிர மற்ற அனைத்துமே அழகாக சீராகி விட்டதில் அனைவருக்குமே நெஞ்சில் பெரும் அமைதி ஏற்பட்டது. ஒருத்தியை தவிர... வேறு யார்? எல்லாம் நம் நாயகி ஹிரண்மயி தான்.

திருமணமே செய்துக் கொள்ள கூடாது என்று உறுதியாக இருந்தவளை ஹர்சிதாவின் அவல நிலையே ஆட்டம் காண வைத்தது.

அவர்கள் வளர்ந்த ஆசிரமத்தில் உள்ள கட்டுப்பாடே அவரவரின் படிப்பு முடிகிறவரை தான் அங்கே அவர்களின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் தங்கியிருக்க முடியும். அதன்பிறகு அவர்கள் தங்களுக்கான வருமானத்தை தேடிக்கொண்டு அங்கிருந்து வெளியேறி விட வேண்டும். ஹிரணியை விட நான்கு வயது பெரியவளான ஹர்சிதா மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவள். பி.காம் முடித்துவிட்டு ஆசிரமத்திலிருந்து வெளியேறி விடுதி ஒன்றில் தங்கியிருந்து தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக பணிப்புரிய ஆரம்பித்தாள். அவ்வப்பொழுது பண்டிகை விசேஷ நாட்களில் அனைவரும் ஆசிரமத்தில் ஒன்றாக குழுமுவர், மற்றபடி அவரவர் நேரத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி தான் தொடர்புகள் இருக்கும்.

வருடங்கள் கடந்த நிலையில் ஹிரணியும் சட்டப்படிப்பை முடித்து லீகல் அட்வைசராக வேலைக்கு செல்ல ஆரம்பித்திருந்தாள். திடீரென்று ஒருநாள் ஹர்சிதா தான் ஒருவரை திருமணம் செய்துக் கொண்டதாக அவளிடம்

தகவல் தெரிவிக்க, நல்லவராக இருந்தால் சரி என்று லேசாக அலுத்தபடி வாழ்த்தியதோடு நிறுத்திக் கொண்டாள் இவள். நாட்கள் சிறகடித்து பறக்க, ஹர்சிதாவோடு அவ்வளவாக தொடர்பில் இல்லாமல் இருந்த நிலையில் தான் மூன்று மாதங்களுக்கு முன்பு வேலை முடிந்து விடுதிக்கு திரும்பும் வழியில் சாலையில் அவள் மயங்கி விழுந்திருக்க சுற்றி கூட்டம் சூழ்ந்திருந்ததைக் கண்டு அதிர்ந்துப் போனாள். பசி மயக்கத்திலும், உடல் அயர்விலும் பலவீனமாக இருந்தவளை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை எடுத்த பின் விசாரித்தப் பொழுது தான் அவள் கர்ப்பமாக இருப்பதும் கணவன் அவளை விட்டுப் பிரிந்து விட்டான் என்பதும் ஹிரணிக்கு தெரிந்தது.

அந்த ஆள் உங்களை அம்போவென்று விட்டு ஓடிவிட்டானா என்றவள் கோபமாக பேசிட, ஹர்சுவோ அவள் சொல்லை ஏற்க மறுத்து அவரை காணவில்லை தேட வேண்டும் என்று மட்டுமே அடுத்தடுத்து புலம்பிக் கொண்டிருக்கவும் எரிச்சல் வந்தாலும் அவள் உடல்நிலையை கருத்தில் கொண்டு இவள் அமைதியாகி விட்டாள். பிறகு தங்கும் விடுதியை விடுத்து ஹர்சுவும், விமலும் தங்கியிருந்த வீட்டையும் காலி செய்துவிட்டு இவர்கள் இருவரும் தனிவீடு எடுத்து தங்கினர். என்ன தான் ஹிரண்மயி அவளுக்கு துணையிருந்து தேற்ற முயன்றாலும் விமலின் நினைவிலும், தன் குழந்தையின் எதிர்காலத்தை குறித்தும் ஹர்சிதா பயந்துக் கொண்டே தன் உடல்நிலையை சரியாக பேண மறுத்து அழுது கரைந்தாள்.

ஏமாற்றி சென்றவனை நம்பி இன்னும் தன் உடல்நலத்தை கெடுத்துக் கொள்கிறாளே என்று ஹர்சுவின் வெகுளியான குணத்தை எண்ணி அவள் மேல் ஆத்திரமாக வந்தாலும் அதையும் மீறி அவளை அநாதைப் பெண் என்று காரணம் காட்டி ஏற்க மறுத்து ஒதுக்கிய விமலின் குடும்பத்தார் மீது கட்டுக்கடங்காத சினம் பெருகியது ஹிரணிக்கு.

ஏமாற்றிச் சென்றவன் என்னவோ சென்று விட்டான். ஆனால் இந்த அக்கா இப்படி கிடந்து தவிக்கிறாளே... இதற்கு தீர்வு தான் ஏது? நாளைப் பின்னே தன் குழந்தையும் தன்னை போல் இந்த சமூகத்தில் யாருமற்ற அனாதையாக வளர நேர்ந்து விடுமோ என்று வெகுவாக அஞ்சி துடிதுடித்தவளை கண்டு தன் சிந்தனையில் ஆழ்ந்தவள் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தாள்.

நாங்கள் தான் எங்களுடைய ரிஷிமூலத்தை தெரிந்துக் கொள்ளும் வாய்ப்பே கிடைக்காமல் சமுதாயத்தில் தனிமைப்படுத்தப்பட்டோம். ஆனால் இந்த குழந்தையின் தகப்பனுடைய குடும்பத்தினரை பற்றிய விவரம் தான் அக்காவுக்கு தெரியுமே... அதை வைத்து அந்த குடும்பத்து மனிதர்களிடம் எப்படியாவது போராடி குழந்தைக்கு சரியான அங்கீகாரத்தை பெற்றுத் தரலாமே என்று சிந்தித்தாள்.

ஹர்சிதாவிடம் அதை தெரிவிக்க அவளோ பிடிவாதமாக மறுத்து விட்டாள். அவர்களுடைய விருப்பமில்லாமல் நாங்கள் திருமணம் செய்துக் கொண்டோம், பிறகு எந்த உரிமையில் போய் நீதி கேட்கச் சொல்கிறாய். அவரில்லாமல் நான் அந்த வீட்டிற்கு வரமாட்டேன் என தீர்மானமாக கூறி விட்டாள்.

நமக்காக இங்கே யார் நியாய அநியாயம் பார்த்து நடந்துக் கொள்கிறார்கள்... நாம் மட்டும் ஏன் அதை கடைப்பிடிக்க வேண்டும்? என்கிற ஆத்திரம் பெருகியது ஹிரணிக்கு. அவள் நினைவெல்லாம் இப்பொழுது ஹர்சிதாவை தாண்டி குழந்தையிடம் சென்றுவிட்டது. அதற்கு சமுதாயத்தில் தகுந்த அதிகாரம் பெற்றுத் தர வேண்டும் என்ற முனைப்பிலே அவள் தீவிரமாக இருந்தாள். அதை நேரடியாக சொல்லி விவரத்தை கேட்டால் ஹர்சு சொல்ல மறுப்பாள் என்று ஒரு வாரம் கழித்து மெதுவாக விமல் குறித்த பேச்சை ஆரம்பித்து மெல்ல மெல்ல அவனுடைய குடும்ப விவரம் எல்லாவற்றையும் தெரிந்துக் கொள்ள ஆரம்பித்தாள் ஹிரணி.

ஹர்சுவும் அவளுடைய திட்டத்தை புரிந்துக் கொள்ளாமல் அவ்வப்பொழுது பேச்சுவாக்கில் அவள் விட்டு விட்டு கேட்ட விவரங்கள் முழுவதையும் தந்து விட்டாள். முதலில் பவானியிடம் பேசிப் பார்ப்போம் என்று அவரை தேடி வங்கிக்கு சென்றாள். அவர் வேலை முடிந்து தன் தோழியுடன் வெளியே வர இவள் பின் தொடர்ந்து சென்றப் பொழுது தோழியின் கேள்விக்கு அவர் அளித்த பதில் இவளுக்குள் பெரும் கோபத்தை வரவழைத்தது.

வேறென்ன? பெரிய மகனை எப்பொழுது தான் வீட்டிற்குள் சேர்த்துவதாக உத்தேசம் என்ற கேள்விக்கு கடந்த பல நாட்களாக அவன் தன்னை காண வருவதில்லை என்கிற அதிருப்தியில் இருந்தவர் அவன் எந்த சூழ்நிலையில் வந்தாலும் சரி, இனி வாழும் காலம் முழுமைக்கும் அவனையும், அவன் மனைவியையும் வீட்டிற்குள் சேர்க்க மாட்டேன் என்று முடித்து விட்டார்.

இது போதாதா நம் நாயகிக்கு... தொடர்ந்து வந்த நாட்களில் பலவாறு திட்டமிட்டு இறுதியில் அகிலை மணந்து இவள் அந்த வீட்டிற்குள் உரிமையுடன் சென்றால் தான் அப்பாவி ஹர்சிதாவிற்கும், பிறக்கப் போகின்ற குழந்தைக்கும் நீதி வாங்கி கொடுக்க முடியும் என்று காய்களை நகர்த்தி நடத்தியும் காண்பித்து விட்டாள்.

என்னவொன்று எல்லாம் வெற்றிகரமாக முடிந்தும், தான் கற்பனையில் நினைத்திருந்தற்கு மாறாக எவ்வித போராட்டமும் இன்றி ஹர்சிதாவை சுலபமாக மனமாற ஏற்றுக் கொண்டனர் இக்குடும்பத்தினர். போதாக்குறைக்கு இவளையும் தங்கள் மருமகள் என்று அவர்கள் சந்தோசம் கொள்வது தான் இவளுக்கு சலிப்பை ஏற்படுத்தியது.

ஹிரண்மயி நினைத்திருந்ததே வேறு, கொஞ்ச நாட்களுக்கு ஹர்சுவுடன் வீட்டிலிருந்து போராடி குழந்தை பிறந்த பிறகு அதற்கான உரிமையை டி.என்.ஏ டெஸ்ட் ரிப்போர்ட் முதற்கொண்டு அனைத்தையும் பெற்று

தந்துவிட்டு இவள் விலகி விடலாம் என்று அழகாக கணக்குப் போட்டிருந்தாள்.

ஆனால் தனக்கு தாலி கட்டியவனை பெற்றவரோ எங்கே தேடினாலும் தங்கள் குடும்பத்திற்கு இப்படியொரு மருமகள் கிடைக்க மாட்டாள் என்ற ரீதியில் பாராட்டிப் பேசி இவள் நிரந்தரமாக இங்கே வாழ வந்தது போல் காட்சியை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்.

‘இனி இவர்களை எவ்வாறு ஏமாற்றி தான் இங்கிருந்து கிளம்புவது?’ என்று கீழுதட்டை கடித்தபடி யோசனையில் ஆழ்ந்தாள் ஹிரணி.

நெற்றி சுருங்க ஆழ்ந்த சிந்தனையில் இருந்தவளை தன் கூர் பார்வையால் கொக்காய் கவனித்துக் கொண்டிருந்தான் அவள் மணாளன்.

தான் மற்றவர் கதையை சொல்லவே தேவையில்லாமல் அவரவர் நிலையை அவரவர் தெளிவாக்கி விட, மற்றதும் இப்படி தான் நடந்திருக்கும் என்ற உறுதி வந்து விட்டதால் அகிலின் கவனம் முழுக்க இப்பொழுது ஹிரணியிடம் தான் குவிந்து இருந்தது.

'இந்த கேடி அடுத்து யாரை கவிழ்க்க இப்படி தீவிரமாக திட்டம் போடுகிறாள்? நிச்சயம் என்னை பற்றியதாக தான் இருக்கும். ஆரம்பத்திலிருந்தே இவளுடைய இலக்குக்கு முழு இரையாகி கொண்டிருப்பது நான் தானே... தன் வசதிக்கு என்னை கணவனாக்கி கொண்டு வீட்டிற்குள் நுழைந்தவளுக்கு அவள் எண்ணி வந்த காரியம் முற்றுப் பெறவும், இனிமேல் இவனுடைய உறவு தனக்கு அவசியமில்லை என்று இங்கிருந்து வெளியேறுவதை குறித்து தான் ரொம்பவும் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருப்பாளாக இருக்கும்!'

முதலில் லேசாக கடுப்பை வெளிப்படுத்திய அவன் முகம் அடுத்து அவனுக்குள் தோன்றிய உற்சாகத்தில் மந்தகாசப் புன்னகையை பரவ விட்டது.

'நீ என்ன திட்டம் வேண்டுமென்றாலும் போடுடி என் அறிவாளி பெண்டாட்டி, அது எதுவும் நடக்காது. நவ்... இட்ஸ் மை டர்ன்டி செல்லம். உன்னை அவ்வளவு சுலபத்தில் என் உறவை உடைத்து செல்ல விட மாட்டேன். தெரிந்தோ தெரியாமலோ நான் எதிர்பார்த்த அத்தனை தகுதிகளோடும் எனக்கு பிடித்த விதமாக துணிச்சலான பெண்ணாக எனக்கு வலை விரிக்கிறேன் என்று நீயே வலிய வந்து அகிலின் வாழ்க்கை வலையில் மொத்தமாக விழுந்திருக்கின்றாய். என்னவொன்று கொஞ்சம் திமிரும், அகங்காரமும் தான் அதிகமாக இருக்கிறது. இட்ஸ் ஓகே... உனக்கு அதுவும் கூட ஒரு அழகு தான், அதை மீறி உன் மனதை ஜெயிப்பதும் எனக்கு சுவாரசியமான விஷயம் தான். தற்பொழுது போடுகின்ற திட்டத்தை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு உன் மனதோடு போராடுவதற்கு நீ தயாராக இரு பேபி!' என்று மானசீகமாக தன் மனையாளை கொஞ்சினான் அவள் கணவன்.

9

"நீங்கள் சொல்வது சரி தான்மா. போனது எல்லாம் போகட்டும், இனிமேல் முடிந்து போனதை பற்றிப் பேசி யாரும் வருந்த வேண்டாம். இனி வாழும் காலம் முழுக்க இது தான் நம்முடைய குடும்பம் நீங்கள், விமல், அண்ணி, நான், ஹிரண்மயி. நாம் என்றும் பிரியாமல் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் ஆதரவாக அன்பாக இருந்தாலே போதும். அதைவிட வேறென்ன வேண்டும்?" என்று ஹிரணிக்கு தேவையான இடங்களில் ஆங்காங்கே வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து தன் அம்மாவை ஒத்துப் பேசி அப்பாவியாக புன்னகைத்தான் அகில்.

கொஞ்ச நேரமாக தன்னுடைய கவனத்தில் இல்லாமல் சுற்றம் மறந்து தன் கவலையில் உழன்றுக் கொண்டிருந்த ஹிரணி அகிலின் குரல் கேட்டு வேகமாக நிமிர்ந்தாள்.

அவன் பேசப் பேச இவள் மனம் திகைத்தது, 'இவன் என்ன இப்படி பேசுகிறான்? அவன் அம்மாவுக்கு தான் இதெல்லாம் புரியாது, திருமணம் நடந்து விட்டதால் சரி என ஏற்றுக் கொண்டார்கள். ஆனால்... இவன் யோசிக்க வேண்டாமா? விருப்பமில்லாமல் காரண காரியத்திற்காக தன்னை மணந்துக் கொண்டவள் எப்படி தன்னுடன் காலம் முழுவதும் குடும்பம் நடத்துவாள் என்று சற்றும் கவலைக் கொள்ளாமல் இப்படி தன்னிஷ்டத்திற்கு பேசிக் கொண்டிருக்கிறானே... இவன் என்ன பைத்தியமா?' என விரல்களை நெறித்தபடி குமுற ஆரம்பித்தாள்.

"ஓகே அண்ணி... நீங்கள் அண்ணாவை நினைத்து எதுவும் பயப்பட வேண்டாம். நான் எப்படியாவது அவனை தேடிக் கண்டுப்பிடிக்க பார்க்கிறேன். தயவுசெய்து இனி உங்களின் உடல்நலத்தில் கவனம் செலுத்துங்கள், நீங்களும் குழந்தையும் ஆரோக்கியமாக இருந்தால் தானே விமல் திரும்பி வரும் பொழுது மகிழ்ச்சியாக உணர்வான். அப்படி இல்லையென்றால் உங்களை ஏதோவொரு இக்கட்டான சூழ்நிலையில் பிரிந்திருக்கும்

அவனது உள்ளம் உங்களின் உடல் மெலிவை கண்டு மிகுந்த குற்ற உணர்ச்சியில் தவிக்க ஆரம்பித்து விடும். அவனுடைய செயலுக்கு அந்த தண்டனை கொடுப்பது தான் சரி என நீங்கள் நினைத்தீர்கள் என்றால் நான் எதுவும் தடுக்க மாட்டேன். என்னுடைய ஆதரவு எப்பொழுதும் உங்களுக்கு உண்டு!" என்றவன் வார்த்தைகளில் கிடுக்குப்பிடி போட்டு அவளை பார்க்க, எதிர்பார்த்த மாதிரியே பதறித் தான் போனாள் ஹர்சிதா.

"ஐயோ... அப்படியெல்லாம் எதுவுமில்லை, அவர் மேல் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. தவிர்க்க முடியாமல் என்னை பிரிந்திருந்தாலும் அவரின் இதயம் முழுவதும் எனக்காக என்னுடைய தனிமையை எண்ணி தான் நிச்சயம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். அதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை அவர் நல்லபடியாக திரும்ப கிடைத்தாலே போதும், வேறெதுவும் வேண்டாம். அவருக்கு தண்டனை அளிக்க வேண்டும் என்றெல்லாம் நான் கனவிலும் நினைக்கவில்லை!" என்று அவன் நினைவில் கண்ணீர் உகுத்தாள்.

அவளின் பேச்சு ஹிரணிக்கு கடுப்பையே வரவழைத்தது. எதிர்மறையான சம்பவங்களையே அதிகம் கேள்விப்பட்டு வளர்ந்தவளுக்கு விமல் மேல் சற்றும் நம்பிக்கையில்லை. அவன் அவளை ஏமாற்றி விட்டதாகவே அவள் உறுதியாக எண்ணினாள். பெற்றவளையும், உடன் பிறந்தவனையும் ஹர்சிதாவிற்காக தூக்கி எறிந்து சென்றவன் வேறொரு வளமையான வாழ்வு கிடைத்து அதற்காக இவளை தூக்கி எறிந்திருக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? அதை எண்ணிப் பார்க்காமல் சும்மா அவனை உத்தமனாக்கி சீன் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எரிச்சலுடன் நினைத்தாள்.

அவள் எண்ணத்தையும் குறைச் சொல்லி என்ன பயன்? நம் நாட்டில் வாழும் குடும்பங்களில் உள்ள எத்தனையோ ஆண்கள் தந்தையாய், சகோதரனாய், கணவனாய், மகனாய் தங்கள் வீட்டுப் பெண்களின் நலனிற்காகவும்

மேலும் அவர்களின் மகிழ்ச்சிக்காகவும் தங்களின் சொந்த விருப்பு, வெறுப்புக்களை துறந்து எதையும் செய்வார்கள் என்பது தனிமையில் வாழ்ந்த அவளுக்கெப்படி தெரியும்?

"சரி விடுங்கள், உங்கள் நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது. அதையே பற்றுக்கோலாக கொண்டு தைரியமாக இருங்கள் நீங்கள். அப்புறம் எனக்கு விமலை பற்றி சில தகவல்கள் வேண்டுமே... உங்களுடன் இருந்த காலத்தில் அவன் எவ்வாறு நடந்துக் கொண்டான்? ஏதாவது முக்கியமான விவரம் எதையும் உங்களிடம் பகிர்ந்துக் கொண்டானா?" என்று பொதுவாக அவளிடம் விமல் குறித்து தனக்கு உபயோகமான தகவல்கள் எதுவும் கிடைக்குமா என கவனமாக பேசிக் கொண்டிருந்தான் அகிலன்.

ஹிரணிக்கு தன் கணவன் தேவையில்லாத வேலை செய்கிறான் என்பது போல் தோன்றியதால் அவர்களின் பேச்சில் கவனம் செலுத்தாமல் தன் வரையில் இங்கிருந்து எப்படி நழுவிச் செல்வது என்று மீண்டும் குழம்ப ஆரம்பித்தாள்.

அதற்குள் அகிலின் அலைபேசி அலற, காதுக்கு கொடுத்தவன் எதிர்முனையின் கேள்விக்கு தகுந்த பதிலை கூறி விட்டு ஒகே பார்க்கிறேன் என்று அதை அணைத்து கீழே வைத்தான்.

"சரி... என் சீனியர் தான் லைனில் வந்தார், முக்கியமான வேலை வந்திருக்கிறது அதை உடனடியாக பார்க்க வேண்டும். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்!" என்று எழுந்து தன் அறைக்குச் சென்று விட்டான்.

"அவன் வேலையில் ஆழ்ந்தால் எப்படியும் குறைந்தது அரைமணி நேரத்திற்கு கீழே வர மாட்டான். மணி தான் எட்டாக போகிறதே... இரவு உணவை தயாரித்து விட்டால் நேரமாக சாப்பிட்டு விட்டு உறங்கச் செல்லலாம். இன்று வேறு அனைவருக்குமே மனஉளைச்சல் கொஞ்சம் அதிகமாக இருந்தது, ஓய்வெடுத்தால் தான் சற்று

நன்றாக இருக்கும். இது போன்ற நேரத்தில் நீயும் சரியான உணவு வேளைக்கு நன்றாக சாப்பிட வேண்டும் ஹர்சிதா. உனக்கு என்ன வேண்டுமென்றாலும் என்னிடம் தயங்காமல் கேள். என்ன புரிகிறதா?" என்று மருமகளின் தலையை அன்புடன் தடவியவர், "ஹிரணி... நீ எழுந்து வா, நாம் சமையலை பார்க்கலாம்!" என்று எழுந்தார்.

"நானும் வந்து ஏதாவது உதவுகிறேனேம்மா!" என்று உடன் வர முயன்றவளை தடுத்து அமர வைத்தவர், "நிச்சயமாக நீயும் செய்ய வேண்டும் தான், அதுதான் ஆரோக்கியமான பிரசவத்திற்கு உதவியாக இருக்கும். ஆனால் இப்பொழுது நீ மிகவும் நோஞ்சானாக இருக்கிறாய். முதலில் உன் உடலை தேற்றி விட்டுப் பிறகு எனக்கு உதவுவதை பற்றி யோசி!" என்றவர் தன் சின்ன மருமகளை அழைத்துக் கொண்டு சமையலறை சென்றார்.

ஹிரணியின் எண்ணம் குறித்து மகன் மட்டும் அல்ல தாயும் ஓரளவுக்கு புரிந்து தான் வைத்திருந்தார். அதனால் அவளை வலுக்கட்டாயமாக இழுத்துப் பிடித்து தங்கள் குடும்ப வழக்கங்களில் திணிக்க வேண்டும் எப்பொழுதும் தனிமையில் ஒதுங்க விடக் கூடாது என முடிவெடுத்து விட்டார் அவர்.

உணவை முடித்து விட்டு அகில் அறைக்கு திரும்பிவிட ஹிரண்மயி ஹர்சிதாவுடன் அமர்ந்திருந்தாள்.

"நீ வாம்மா!" என்று ஹர்சுவை தன் அறைக்கு அழைத்து சென்ற பவானி, "உங்கள் அறை அகிலின் அறைக்கு எதிரே மாடியில் இருக்கிறது. இது போன்ற நேரத்தில் நீ அங்கே தனிமையில் இருக்க வேண்டாம். அடிக்கடி மாடிப்படி ஏறி இறங்குவதும் உனக்கு சிரமமாக இருக்கும். அதனால் விமல் வரும் வரை நீ என்னுடனேயே தங்கிக் கொள்!" எனவும் ஹிரணிக்கு தயக்கமாக இருந்தது.

'இது என்ன? அக்காவை காரணம் காட்டி இங்கிருந்து வெளியேறும் வரை அவர்களுக்கு துணையிருக்கிறேன் என பெயர் பண்ணிக் கொண்டு தனிமையில் இருந்து

விடலாம் என்று பார்த்தால் இந்த அத்தை வேறு வழக்கம் போல் சொதப்புகிறார்களே... இனி இதை எப்படி தவிர்ப்பது?'

"சரி... நீயும் உன் அறைக்கு போய் தூங்குவது தானே. ஏன் இங்கேயே நின்றுக் கொண்டிருக்கிறாய்? குட்நைட்!" என்று விட்டு வாயில் கதவை சாற்றி முன் விளக்கை அணைக்க சென்றார் பவானி.

சலிப்புடன் நின்றிருந்த ஹிரணியின் கன்னத்தை ஹர்சு மென்மையாக தடவ அவள் புறம் திரும்பினாள் பெண்.

"உன்னை நினைத்தால் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது ஹிரணிம்மா. என் மேல் கொண்ட அன்பிற்காக உன் வாழ்க்கையையே பணயம் வைத்திருக்கிறாயே... நான் மிகவும் கொடுத்து வைத்தவள். உன் அத்தான் போலவே நீயும் என் மேல் மிகவும் அக்கறை கொண்டுள்ளாய். எது எப்படியோ திருமணமே வேண்டாம் என்று சொன்னவள் எனக்கு ஓரகத்தியாகவே இங்கு வந்து விட்டாய். இனிமேல் நாம் இருவரும் என்றும் மகிழ்ச்சியுடன் ஒரே வீட்டில் வசிக்கப் போகிறோம் என்பதே எனக்கு மிகவும் நிறைவாக இருக்கிறது!" என்று அவள் கைகளை பற்றிக் கொண்டு நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது என புரியாமல் இவள் சங்கடத்துடன் நிற்க, அறைக்குள் வந்த பவானி ஹிரணியை பார்த்து அர்த்தமாக புன்னகைத்தார்.

வேறு வழி தெரியாமல் இருவரையும் கண்டு பொதுவாக முறுவலித்து விட்டு அகிலின் அறை நோக்கி மெதுவாக சென்றாள் ஹிரண்மயி.

கதவின் முன்னின்று தவிப்புடன் கரங்களை பிசைந்தவள் பவானியின் பேச்சுக் குரல் கேட்பது போல் இருக்கவும் அவசரமாக கதவை திறந்து உள்ளே நுழைந்து சாற்றிக் கொண்டாள்.

'ஐயோ... நான் பாட்டுக்கு பதற்றத்தில் கதவை தட்டாமல் வேகமாக அறைக்குள் நுழைந்து விட்டேனே!' என்று தனக்குள் குன்றியபடி நிமிர்ந்து கணவன் முகத்தை ஏறிட, இவளின் அரவம் உணர்ந்து நிமிர்ந்தவனோ இவளை கண்டதும் அசட்டையாக இவள் தானா என்பது போல் விழிகளை திருப்பிக் கொண்டு தன் வேலையில் ஆழ்ந்தான்.

அவன் செயலில் குழம்பியவள், 'என்ன இருந்தாலும் நாமாக மன்னிப்பு கேட்டு விடுவோம் அது தான் நாகரீகம்!' என்று "ஐ ஆம் சாரி... உங்கள் அம்மா விரட்டவும் அவசரத்தில் கதவை தட்டாமல் உள்ளே வந்து விட்டேன்!" என கணவனிடம் வெகு தீவிரமாக வருத்தம் தெரிவித்தாள்.

அகில் பதிலுக்கு எந்த உணர்வையும் வெளிப்படுத்தாமல் கருமமே கண்ணாக மூழ்கியிருந்தான். மனதோ கடுப்புடன் அவளை கண்டபடி அர்ச்சித்துக் கொண்டிருந்தது.

'இவளோடு இதே ரோதனையாக போயிற்று... மனதில் கொஞ்சம் கூட கணவன், மனைவி என்ற எண்ணமே துளியும் தோன்றாது போலிருக்கிறது. காலையில் குளித்து முடித்து வாஷ்ரூமிலிருந்து வெறும் டவலுடன் வெளியில் வந்தேன் என்று நாகரீகத்தின் பெயரை சொல்லி என்னிடம் சண்டையிட்டாள். இப்பொழுது என்னவோ தான் கதவை தட்டாமல் வந்தது பெரும் குற்றம் என்பது போல் வருத்தம் தெரிவித்து என்னை ரொம்பவே டென்சன் செய்கிறாள். இவளையெல்லாம் என்ன தான் செய்வதோ? நாகரீகம் என்ற வார்த்தையை நினைத்தாலே இப்பொழுது எல்லாம் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது!' என பற்களை கடித்தான்.

'இவனுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்? கொஞ்சம் கூட என் சொற்களுக்கு மதிப்பு தராமல் அலட்சியமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான்!' என்று பொங்கினாள் ஹிரணி.

"நான் உங்களிடம் தான் பேசிக் கொண்டிருக்கிறேன்!" என்றாள் அதிகாரமாக.

"அப்படியா சரி!" என்றவனோ அவளை சிறிதும் திரும்பி பார்க்கவில்லை.

விறுவிறுவென அவன் எதிரில் போய் நின்று, "இங்கே பாருங்கள்... நீங்கள் செய்வது எதுவும் சரியில்லை. நான்..." என்று விரல் நீட்டி எச்சரித்தவளை, சட்டென்று இழுத்து தன்னெதிரே அமர வைத்து உஷ்... என வாயின் மேல் விரல் வைத்து விழிகளை உருட்டினான் அகில்.

அவன் அவ்வாறு தன் கையை பிடித்து இழுத்ததில் படபடத்துப் போனவள் திகைப்புடன் வாயடைத்து போய் அவனை நோக்கினாள். லேசாக விழிகள் விரிந்திருக்க நெற்றியில் வியர்வை அரும்ப அமர்ந்திருந்தவளை கண்டு மனதில் காதல் பொங்க தன் தோளில் சாய்த்து அவளை அமைதிப்படுத்த தோன்றிய உணர்வை சிரமப்பட்டு விழுங்கியவன் நிமிர்ந்து அமர்ந்தான்.

"ஏய்... நான் முக்கியமான அசைன்மென்டில் இருக்கிறேன். ரொம்பவும் கவனம் எடுத்து செய்ய வேண்டிய வேலை இது. நீ கதவை தட்டி விட்டு வந்தால் எனக்கென்ன... இல்லை தட்டாமல் வந்தால் தான் எனக்கென்ன? என்னை தொந்திரவு செய்யாமல் அமைதியாக இருந்தாய் என்றால் அதுவே எனக்கு பெரிய உதவி. எனக்கும் அது தான் வேண்டும், சும்மா சும்மா ஃபார்மாலிட்டி என்கிற பெயரில் நொய்நொய் என்று எதுவும் பேசாதே. அப்புறம் இதையும் சொல்லி விடுகிறேன்... எதற்கெடுத்தாலும் நாகரீகம் என பெயர் சொல்லிக் கொண்டு நீயும் எதுவும் செய்யாதே, என்னிடமும் எதையும் எதிர்பார்க்காதே. இந்த வீட்டைப் பொறுத்த வரை நீ இயல்பாக வந்தாயோ அல்லது திட்டம் போட்டு வந்தாயோ ஆகமொத்தம் நீ என்னுடைய மனைவி அவ்வளவுதான். ஓகே... இதற்கு மேல் எதுவும் பேசாமல் போய் உன் வேலை என்னவோ அதை மட்டும் பார்!" என்று மனைவிக்கு திருப்பி பதிலளிக்க சற்றும்

வாய்ப்பு தராமல் படபடவென்று பேசி முடித்து தன் வேலையை தொடர ஆரம்பித்தான் அகில்.

10

அகிலனின் அதிரடியால் சிந்திக்க மறந்து அவனை வெறித்தபடி அமர்ந்திருந்தாள் ஹிரண்மயி.

அவளால் அவன் செயல் குறித்து எதையும் யோசிக்க முடியவில்லை, இன்னமும் இதயம் சமனமாகாமல் படபடவென்று அடித்துக் கொண்டது. இதுவரை அவளை யாரும் இப்படி உரிமையுடன் கரம்பற்றி இழுத்து எதிரே தள்ளி இவ்வாறு படபடத்தது இல்லை.

உறவுகள் யாருமற்ற சூழ்நிலையில் அநாதரவாக ஆசிரமத்தில் வளர்ந்திருந்தாலும் மற்றவர் அவளை அதட்டவோ குறைக் கூறவோ எதற்கும் வாய்ப்பளிக்காமல் நல்லவிதமாக தான் அவள் வளர்ந்திருந்தாள். என்னை துச்சமாய் நினைத்து தூக்கி எறிந்தவர்களின் முன் என் நிலையை நிச்சயமாக உயர்த்தி காண்பிப்பேன் என்ற உறுதி சிறு வயது முதலே அவளின் ஆழ் மனதில் வேரூன்றி இருந்தது. அதனால் தானோ என்னவோ தான் யாருக்கும் குறைந்தவளில்லை என்கிற அழுத்தமான உணர்வு அவளுடைய ரத்தத்திலேயே ஊறி அவளுக்கொரு நிமிர்வை பெற்று தந்தது.

"ஆமாம்... இப்பொழுது எதற்காக இப்படி என் எதிரே அமர்ந்துக் கொண்டு குறுகுறுவென்று கண்சிமிட்டாமல் பார்க்கிறாய்? வேலை செய்ய முடியாமல் எனக்கு ஒரு மாதிரி அசௌகரியமாக இருக்கிறது!" என்றான் அகில் வேண்டுமென்றே லேசாக உடலை நெளித்தபடி.

திடுக்கிட்ட ஹிரணி, "என்ன?" என்றாள் பிரமிப்புடன்.

"ஆங்... ஏன் என்னை சைட் அடிக்கிறாய் என்றேன்?"

முகம் சிவந்தவள், "உங்களுக்கென்ன பைத்தியமா... நானே வேறு வழியின்றி விருப்பமில்லாமல் ஹர்சு அக்காவிற்காக தான் உங்களை மணந்தேன் என்பது

தெரியுமல்லவா? பிறகு எதற்காக இப்படி உளறுகிறீர்கள்?" என்றாள் முறைப்புடன்.

"அதை தான் நானும் யோசித்தேன், விருப்பமில்லாமல் திருமணம் செய்ததற்கே இப்படி சைட் அடிக்கிறாயே... இன்னமும் என்னை விரும்பி மணம் புரிந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?"

அவனின் கற்பனை போகும் திசையை கேட்டு அதிர்ந்தவள், "ஹேய்... என்ன இது? போதும் போதும் நிறுத்துங்கள், நீங்களும் உங்கள் கற்பனையும்... கேட்கும் பொழுதே அருவருப்பாக இருக்கிறது!" என்று முகத்தை சுளித்தாள்.

'இருக்கும்டி... இருக்கும். ஏன் சொல்ல மாட்டாய்? கட்டிய கணவனுடன் காதல் புரிவது உனக்கு அருவருப்பாக இருக்கிறதா... இதற்கெல்லாம் சேர்த்து வைத்து உன்னை என் பின்னால் சுற்ற விடுகிறேனா இல்லையா என்று பார்!' என தனக்குள் வஞ்சினத்துடன் கறுவிக் கொண்டான் அகில்.

"நான் ஒன்றும் உங்களை சைட் அடிக்கவில்லை, எவ்வளவு தைரியம் இருந்திருந்தால் நீங்கள் என் கையை பிடித்து இழுத்திருப்பீர்கள் என்று முறைத்துக் கொண்டிருந்தேன்!"

"ஆங்... இதை கட்டியிருக்கும் தைரியத்தால் தான் உரிமையிருக்கிறது என பிடித்து இழுத்தேன்!" என்று அவள் கழுத்தில் கிடந்த மாங்கல்யத்தை சட்டென்று எடுத்து வெளியில் போட்டான் நாயகன்.

"ச்சே... இதே வேலையாகப் போயிற்று உங்களுக்கு. எதற்கு சும்மா சும்மா இதை எடுத்து வெளியில் போடுகிறீர்கள்?" என்று கடுப்புடன் வினவியபடி மீண்டும் தாலியை தனது ஆடைக்குள் மறைத்தாள் ஹிரணி.

"என்ன செய்வது? அடிக்கடி நீ அதை மறந்து விடுகிறாயே... அதனால் தான் அவ்வப்பொழுது இதைக் காண்பித்து, நீ யார், நான் யார் என்பதை உனக்கு நினைவூட்டுகிறேன்!"

"தேவையில்லை... காரண காரியத்திற்காக கட்டப்பட்டது எப்பொழுதும் செல்லாது. அதைப் போல தான் நீங்கள் என்னிடம் எடுத்துக் கொள்ளும் உரிமையும். ரொம்பவும் கணவன் அது இது என்று தேவையில்லாமல் அதிக உரிமையுடன் நடந்துக் கொள்ள வேண்டாம். என்னை விட்டு நீங்கள் தள்ளி இருப்பது தான் நம் இருவருக்குமே நல்லது!" என்றாள் அலட்சியத்துடன்.

ஹக்... என பதிலுக்கு ஏளனமாக சிரித்தவன், "உன் வாக்கியத்தை கொஞ்சம் திருத்திக் கொள்ளம்மா... காரண காரியத்திற்காக தாலி கட்டிக்கொண்டவள் நீதானே தவிர நானில்லை. அதைப்போல தான் உரிமையும், உனக்கு என் மேல் எந்தவித உரிமையுமில்லை என்பது நிச்சயமான உண்மையே. ஆனால் அதே சமயம் உன் மேல் எனக்கு முழு உரிமையிருக்கிறது!" என்றான் சவாலுடன்.

அவன் சொல்லில் ஒரு நொடி புருவம் சுருக்கியவள், "அப்படியென்றால்?" என குழப்பத்துடன் வினவினாள்.

"அப்படியென்றால்... என்னை பொறுத்தவரை நீ என்னுடைய மனைவி, அதனால் நான் இயல்பாக தான் இருப்பேன். ஓவர் ஃபார்மாலிட்டியாக உன்னை விட்டு ஒதுங்கி இருக்க மாட்டேன். அதேபோல் எனக்கு வேண்டுவதை உரிமையுடன் உன்னை செய்ய சொல்வேன். ஆனால்... உனக்கு அந்த உரிமை கிடையாது, நீ எதையும் என்னிடம் வேண்டவோ, எதிர்பார்க்கவோ முடியாது!"

'என்ன? என்னை உரிமையுடன் செய்ய சொல்வானா...' என அவனுக்கு பதிலடி கொடுக்க காத்திருந்தவள், அவனுடைய அடுத்த வாக்கியத்தில் முன்னதை மறந்தாள்.

"ஹும்... அது எனக்கு தேவையுமில்லை, நான் எதையும் உங்களிடம் எதிர்ப்பார்க்க மாட்டேன்!" என்றவளின் உடல் தன்னால் நிமிர்ந்தது.

"சந்தோசம்... இப்பொழுது எழுந்து போகிறாயா? நான் என் வேலையை பார்க்க வேண்டும்!" என்றான் அகில் உடனே பட்டென்று.

லேசாக முகம் சுருங்க விசுக்கென்று எழுந்து இரண்டடி வைத்தவள், ஏதோ நினைவில் மீண்டும் அவனிடம் வந்தாள்.

"அப்புறம்... இதை மறந்து விட்டேன், என்னை மருமகளாக நினைத்து சம்பிரதாய முறை எதையும் செய்ய சொல்ல வேண்டாம் என்று நீங்கள் உங்கள் அம்மாவிடம் கொஞ்சம் சொல்லி வையுங்கள்!"

"எதற்காக?"

"இதென்ன கேள்வி? நான் தான் சொன்னேனே... செல்லாத தாலிக்கு இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று எனக்கு எந்த அவசியமுமில்லை!" என்றாள் ஹிரணி அழுத்தமாக.

"அதையே தான் நானும் சொல்கிறேன், நீ சொல்லி நான் என் அம்மாவிடம் எதைப் பற்றியும் பேச வேண்டுமென்று எனக்கும் எந்த அவசியமுமில்லை!" என்று கூலாக திருப்பி அடித்து அவள் வாயை அடைத்தான் அகில்.

திகைப்புடன் விழி விரிய நின்றவளுக்கு, அது உண்மை தானே என்று அதில் உள்ள நியாயம் புரிந்தது.

இதுவரை அவளை யாரும் இவ்வாறு அவமானப்படுத்தியதே இல்லை, பதிலுக்கு பதில் என்று ஒவ்வொன்றையும் திருப்பி திருப்பி அடிக்கிறானே என்று தடுமாறிப் போனாள் பெண்.

ஒரு நிலைக்கு மேல் சென்ற இடமெல்லாம் தனக்கென்று தனி மதிப்பை தேடி வைத்திருந்தவளின் சொல்லுக்கு யாரும் மறுப்பேச்சே பேசியதில்லை.

அடுத்து அவனிடம் தான் எதை பேசினாலும், செய்தாலும் அதற்கு ஏதாவதொரு குட்டு தயாராக வைத்திருப்பானோ என்று ஹிரணிக்கு சட்டென்று சிறு சஞ்சலம் தோன்றியது.

இப்பொழுதைக்கு அகிலிடம் மேலே வேறு எதையும் வாதிடாமல் அமைதியாக இருப்பதே தனக்கு நல்லது என்று தோன்ற மெதுவாக தன் இடத்துக்கு திரும்பி சென்றாள்.

"ஒரு நிமிடம்... நில்!” என்று அவளை தடுத்தவனின் பார்வை அங்குலம் அங்குலமாக அவளை கூறுப் போடுவது போல் தோன்றியது அவளுக்கு.

“இத்தனை தூரம் நீ பேசிய பிறகு, நம் உறவை பற்றி நாம் இப்பொழுதே தெளிவான ஒரு முடிவு எடுக்க வேண்டும்!”

‘சரி தான்...’ என நிம்மதிக் கொண்டவள் அவனை ஆர்வமாக பார்த்தாள்.

"முதலில் இந்த விஷயத்தில் நீ உன்னுடைய ஆட்டிட்யுடை மாற்றிக் கொள். சும்மா... எதற்கெடுத்தாலும் உங்களை கட்டாயத்துக்காக தான் மணந்தேன் என்று அலட்டுவதை விட்டு விட்டு, நான் சொல்லும் காலக்கெடு வரை இந்த வீட்டில் நீ எனக்கு நல்ல மனைவியாக ஒழுங்காக நடிக்கிறாய்!" என்று அகில் அதிகாரமாய் கூறியதும் ஹிரணியின் முகம் கோபத்தில் ஜிவுஜிவென்று சிவந்தது.

"ஏன்... நான் ஏன் அவ்வாறு நடிக்க வேண்டும்? என்னால் முடியாது..." என்று வேகமாக படபடத்தவளை பாதியில் இடையிட்டு நிறுத்தினான் அகில்.

"ஏய்... ஏய்... போதும் நிறுத்து, எதற்கெடுத்தாலும் சும்மா பாப்கார்ன் மாதிரி துள்ளிக் குதிக்காதே. நான் சொல்ல வருவதை முழுவதுமாக கேள். நானாக உன்னை தேடிவந்து மணம் புரியவில்லை, நீயாக தான் உன் சுயலாபத்திற்காக என்னை ஏமாற்றி திருமணம் செய்துக் கொண்டுள்ளாய். நீ எண்ணி வந்த காரியம் நல்லபடியாக முடிந்துவிட்டதால் இனி என்னுடைய லாபத்திற்காக நீ கட்டாயம் நடித்து தான் ஆக வேண்டும். இதற்காகவெல்லாம் நான் எவளையும் வெளியில் இருந்து தனியாக வாடகைக்கு பிடித்து வீட்டிற்கு அழைத்து வர முடியாது. ஏற்கனவே என்னுடைய மனைவியாக இருக்கின்ற நீயே தொடர்ந்து என் வேலை முடிகிற வரை

உடன் இருந்து நல்லவிதமாக நடித்து விட்டுப் போ!" என்று அலட்சியமாக உத்திரவிட்டான்.

மாலையில் இருந்தே அடுத்தடுத்து முற்றிலும் அவளுடைய திட்டத்திற்கு மாறாக அனைத்தும் நடந்துக் கொண்டிருக்க ஹிரண்மயி உண்மையிலேயே உள்ளம் சோர்ந்து போனாள். மூளை என்கிற ஒரு உறுப்பே தன் மண்டையில் இல்லையோ என்ற ஐயம் தோன்றும் அளவுக்கு எதையும் சமாளிக்க முடியாமல் திண்டாடினாள் அவள்.

அயர்வுடன் நின்றவளை கண்டு இவனுக்கும் நெஞ்சம் உருகினாலும், எங்கே தான் கொஞ்சம் தளர்ந்து அவளுக்கு பிடிக்கொடுத்தாலும் அவள் சுலபமாக தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வாள் என்பதால் பொங்கும் தன் உணர்வுகளை கவனமாக கட்டுப்படுத்தி கொண்டு வெளியே இறுக்கமாக அமர்ந்து இருந்தான் அகில்.

ஏதேதோ சிந்தனையில் இருந்த ஹிரணிக்கு சட்டென்று ஒன்று தோன்ற அவனை வேகமாக நிமிர்ந்துப் பார்த்தாள். கணவனோ கேள்வியாக புருவங்களை சுருக்கி ஏறிட்டான்.

'இப்பொழுது இவன் என்ன சொன்னான்? நான் அவனுடைய மனைவியாக நடிக்க வேண்டுமா... நடக்க வேண்டும் என்பதற்கு பதில் நடிக்க வேண்டுமென்றால் என்ன அர்த்தம்? என்னை இவன் மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை மறைமுகமாக உணர்த்துகிறானா?'

தான் அவனை அலட்சியமாக நிராகரித்த வரை அவளுக்கு எதுவும் பெரியதாக தெரியவில்லை. ஆனால் இப்பொழுது அவன் தன்னை நிராகரிக்கிறான் என்ற எண்ணமே அவள் இதயத்தை வலிக்கச் செய்தது.

தன்னுள் உதித்த குழப்பத்தை நிவர்த்திக்க வேண்டி அவனிடமே நிதானமாக கேள்வி எழுப்பினாள் ஹிரண்மயி.

"எதற்கு என்னை அவ்வாறு நடிக்க சொல்கிறீர்கள்?"

"சொல்கிறேன்... முன்பே நீ கொஞ்சம் பொறுமையை கடைப்பிடித்திருந்தாய் என்றால் நானும் அப்பொழுதே உனக்கு எல்லாவற்றையும் தெளிவாக விளக்கியிருப்பேன்!" என்று ஒரு குட்டு வைத்துவிட்டு, "இட்ஸ் ஓகே... உன்னிடம் இல்லாததை எதிர்பார்ப்பதும் என்னுடைய தவறு தான், சரி இப்படி உட்கார்!" என தனக்கெதிரே கை காட்டினான்.

பற்களை அழுந்தக் கடித்து தன் மனதின் குமைச்சலை மறைத்தபடி, "பரவாயில்லை, அப்படியே சொல்லுங்கள்!" என்றாள் மனைவி பதவிசாக.

"உனக்கு எப்படியோம்மா... ஆனால் எனக்கு நீ நின்றுக் கொண்டிருக்கும் பொழுது பேசுவது என்பது வசதியாகப் படவில்லை. வீட்டில் என் அறையில் ஒய்வாக அமர்ந்து திட்டத்தை விவரிக்கிறேன் என்ற உணர்வு இல்லாமல், உன் புறம் நேராக திரும்பி பார்த்துக் கொண்டிருப்பது என்னவோ கான்பிரன்ஸ் ஹாலில் மீட்டிங்கில் விறைப்பாக நிமிர்ந்து அமர்ந்துக் கொண்டு பேசுவது போல் முதுகெல்லாம் ரொம்ப வலிக்கிறது!" என்று உடலை முறித்தவாறே காலை நீட்டி வசதியாக சாய்ந்தமர்ந்துக் கொண்டான் அகில்.

'இது என்ன வம்பாகப் போயிற்று? ஒவ்வொரு முறையும் இவனுடைய கட்டிலில் அமர்வது போலவே சூழ்நிலை வந்து அமைகிறதே. அதுவும் திமிரைப் பார்... உட்கார சொல்லி கை காண்பித்து விட்டு இவன் இப்படி காலை நீட்டிக் கொண்டால் நான் எங்கே சென்று அமர்வதாம்?' என்ற எரிச்சல் மூண்டது அவளுக்கு.

அவள் மனதை படித்தவன் போல, "நீ இந்த பக்கமாக வந்து உட்கார் தாயே... கால் வலிக்கிறதே என்று கொஞ்சம் நீட்டி விட்டேன். பிறகு திமிராக என்னை காலடியில் உட்காரச் சொல்கிறான் என்று வேறு நீ எண்ணிவிடப் போகிறாய்!" என பரிகாசம் செய்தான் கணவன்.

'எல்லாம் என் நேரம்டா... பொறுமையில்லை என்று வேறு குட்டி விட்டாய். என்னிடம் அது இருக்கிறதோ இல்லையோ வம்படியாக முடிந்தவரை உன் முன்னிலையில் அதை நான் இழுத்துப் பிடித்து தான் ஆக வேண்டும்!' என்று பெருமூச்சு விட்டவாறே நெற்றியில் விழுந்த முடியை ஒதுக்குவது போல் முகத்தை சீர்ப்படுத்திக் கொண்டு வந்து அவனருகில் அமர்ந்தாள் ஹிரணி.

"ஃபைன்... மாலையில் கீழே அனைவரின் முன்னும் நான் வெளிப்படுத்தியது என்னுடைய ஒருபக்கம் மட்டுமே. தனது ஒரு பிள்ளையை தொலைத்து விட்டு துன்பத்தில் தவிக்கும் தாயிடம் மற்றொரு பிள்ளையின் வாழ்க்கையும் முழுமை அடையாமல் அந்தரத்தில் தான் தொக்கி நிற்கிறது என்ற உண்மையை பறைசாற்றி அவரை மேலும் கவலையில் தள்ள நான் விரும்பவில்லை!"

"ஏன்? நான் திட்டம் போட்டு தான் உங்களை மணம் புரிந்தேன் என்பதை நாங்கள் வீட்டிற்கு வரும் முன்பே நீங்கள் அவர்களுக்கு விவரமாக எடுத்துரைத்திருப்பீர்கள் அல்லவா... பிறகு இதில் எங்கிருந்து பிரச்சனை வந்தது? உங்கள் அம்மா இதை ஏற்கனவே எதிர்பார்த்து தானே இருந்திருப்பார்கள்!"

"எஸ்... மறுக்க முடியாத உண்மை தான், ஆனால் நீ இதை யோசித்துப் பார்த்தாயா... அப்பொழுது எனக்கோ அல்லது அம்மாவுக்கோ விமலை பற்றிய விவரம் ஒன்றும் முழுதாக தெரியாதல்லவா... அவன் எங்கோ ஓர் மூலையில் நன்றாக இருக்கிறான் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தோம். பிரச்சினை உன்னை பற்றியது மட்டும் தான் என்று நாங்கள் இருந்த வேளையில் நீ அண்ணியை அவ்வாறு அழைத்து வந்தாய். அவர்களுடைய தளர்ந்த மேனியை கண்ணால் பார்த்ததுமே விமலை பற்றிய பயத்தில் அம்மாவின் உடல்நிலை மோசமாகி விட்டது. ஒரு வழியாக அவரை தேற்றினால், நீ ஏமாற்றி வந்தது கூட இந்த குடும்பத்தின்

நலனுக்காக தானே என்று உடனே உன் மீது அவருக்கு அளவற்ற பாசமும், நன்மதிப்பும் மலையென பெருகி விட்டது. உன்னுடைய மனநிலையை பற்றி கொஞ்சமும் யோசிக்காமல் திருமணம் நடந்தது நடந்தது தானே அதை யாராலும் மாற்ற முடியாது என்று உன்னை தன் இளைய மருமகளாகவே தானாக மீண்டும் மனதில் உருவேற்றிக் கொண்டார்கள். என்ன செய்வது? இனி அதை மாற்ற நான் தான் ரொம்பவும் மெனக்கெட வேண்டும். ப்ச்..." என்று போலியாக அலுத்தபடி கண்களை மூடி பின்னால் சாய்ந்துக் கொண்டான் அகில்.

11

அவன் பேசப் பேச நெற்றி சுருங்க கேட்டிருந்த ஹிரணி, 'இப்பொழுது இவன் என்ன சொல்ல வருகிறான்? இவனுடைய அம்மா சமாதானம் ஆகும் வரை அல்லது அவருடைய மூத்த மகன் விமல் கிடைக்கும் வரை நான் இவனுடைய மனைவியாகவே இந்த வீட்டில் இருக்க வேண்டும் என்கிறானா?' என்று தன் மனதில் எண்ணியதை அகிலிடம் வாய் விட்டும் கேட்டாள்.

"ம்... ஆமாம், அது மட்டுமில்லாமல் இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது!"

"அது என்ன?"

"ஆக்ட்சுவலி உன்னை திருமணம் செய்துக் கொள்ள எனக்கு சுத்தமாக விருப்பமே இல்லை!" என்று நிறுத்தி அவளை ஆழம் பார்த்தான் அகில்.

இயல்பான மனித குணம் என்பது நாம் ஒருவரை விரும்புகிறோமோ இல்லையோ, ஆனால் அவர்கள் மனதில் நம் மீது எவ்வித ஈர்ப்போ, அன்போ இல்லையென்று தெரிய வரும்பொழுது லேசான ஏமாற்றம் பரவி அதை ஜீரணிப்பது நமக்கு சற்று சிரமமான விஷயம் தான்.

அதைத்தான் தற்பொழுது ஹிரணியும் அனுபவித்துக் கொண்டிருந்தாள். தன் வசதிக்காக அவனை துருப்பு சீட்டாக உபயோகப்படுத்தி விட்டு விலக எண்ணியவளுக்கு அவன் மனதில் தன் மேல் எந்த ஆர்வமுமில்லை என்பது லேசான வருத்தத்தை கொடுத்தது.

அவள் அதை தன் முகத்திற்கு பரவாமல் தடுக்க முயன்று கொண்டிருக்க, ஹிரணியின் மனதின் எண்ணங்களை படிக்க வேண்டி அவ்வாறு பேசிக் கொண்டிருந்த அகிலின் கழுகு விழிகளில் அது தெளிவாக விழுந்து இதழ்களில் அடர்ந்தப் புன்னகையை மலரச் செய்தது.

நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் இந்த ஊமை நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்க, மெல்ல தன் தொண்டையை செறுமி விட்டு மேலே பேச ஆரம்பித்தான் அவன்.

"இன்னும் சிறிது காலம் குடும்ப வாழ்க்கையில் மாட்டிக் கொள்ளாமல் பேச்சிலராக லைஃபை என்ஜாய் பண்ணலாம் என்று எண்ணியிருந்தேன். அதற்குள் விமல் காதலில் விழுந்து அப்படி சொதப்பலாக திருமணம் செய்யவும், அம்மா தன் எதிர்பார்ப்பு முழுவதையும் என் மேல் திணிக்க ஆரம்பித்து விட்டார்கள். உன்னை திருமணம் செய்ய மறுத்து எவ்வளவோ போராடிப் பார்த்தேன். பட்... நோ ரெஸ்பான்ஸ், தன் பிடியிலேயே அவர்கள் உறுதியாக நிற்கவும் வேறு வழியின்றி உன்னை திருமணம் செய்துக் கொண்டேன். அதற்காக உன்னை போன்று இல்லற வாழ்விலிருந்து சில மாதங்களில் விலகி விடலாம் என்றெல்லாம் நான் நினைக்கவில்லை, என் அம்மாவும் என்னை அப்படி வளர்க்கவில்லை. ஸோ... சிறிது காலம் கழித்து உன்னையே மனமாற ஏற்றுக் கொள்ளலாம் என்று தான் முடிவு செய்திருந்தேன். ஆனால் உனக்கு என் மேல் சற்றும் விருப்பமில்லை என தெரிய வந்தப்பொழுது, எதற்கு உனக்காக நான் என்னை காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆகையால் பலவாறு யோசித்து நான் ஒரு தெளிவான முடிவு எடுத்திருக்கிறேன். ஏதோ ஒரு முறை தவறுதலாக திருமணம் நடந்து விட்டது, அதை சரியான முறையில் திருத்தி அமைத்துக் கொள்ள நினைக்கிறேன். ஏற்கனவே நான் போட்டிருந்த திட்டப்படி ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களோ கழித்து மறுமணம் செய்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். அதற்கு முன் என் மனதிற்கு பிடித்தமான பெண் எங்கேயும் கண்களில் தென்பட்டால் கால அவகாசம் தேவையில்லை, உடனடியாக திருமணம் தான்!" என்று ஹிரணியை பார்த்து அழகாய் புன்னகைத்தான் அகில்.

ஏனோ அவள் முகத்தில் அது தோன்ற மறுத்து தர்க்கம் செய்தது. விழிகளில் எந்த உணர்வுமின்றி அமைதியாக

அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இதற்கு எதற்கு நான் இங்கே இருக்க வேண்டும்?" என்று மெல்லிய குரலில் சந்தேகம் கேட்டாள் பெண்.

"என்ன நீ எப்பொழுது பார் என்னிடமே வரிசையாக கதை கேட்டுக் கொண்டிருக்கிறாய்? நீயாக கொஞ்சம் யோசித்து எதையும் கால்குலேட் செய்ய மாட்டாயா? நான் எப்படி உன்னை அழகாக கண்டுப்பிடித்தேன். ஆச்சரியம் தான், ஒரு வக்கீலாக இருந்துக் கொண்டு இவ்வளவு திட்டம் போட்டு என்னை ஏமாற்றி திருமணம் செய்தவளுக்கு... ஏன் இப்பொழுது மட்டும் எதையும் யூகிக்க முடியவில்லை?" என்று சீண்டினான்.

புருவம் சுளித்தபடி அமர்ந்திருந்தவள், "ப்ச் தெரியவில்லை... தூக்கம் வருகிறது என்று நினைக்கிறேன்!" என கூறியவள் அதை நிரூபிப்பது போல் கை மறைவில் கொட்டாவி ஒன்றை நிதானமாக வெளியேற்றினாள்.

"ம்... ம்... இருக்கலாம்!" என்று தோள்களை குலுக்கிக் கொண்டவன், "சரி நானே எல்லாம் சொல்லி விடுகிறேன், முழுவதுமாக கேட்டுவிட்டு அப்புறமாக தூங்க போ!" என்று மனைவிக்கு யோசனை சொன்னான்.

அவளின் பார்வை அவனிடம் சலிப்பை வெளியிட, அதைக் காணாதவன் போன்று தீவிரமாக பேச ஆரம்பித்தான் அகிலன்.

"ஸீ... இது தான் என்னை பொறுத்த வரை பெஸ்ட். நீ பாட்டுக்கு அண்ணியை அழைத்து வந்து இந்த வீட்டில் சேர்த்ததோடு உன் வேலை முடிந்து விட்டது என்று கிளம்பி விட்டாய் என்றால் என் பாடு தான் கஷ்டமாகி போகும். அம்மா உடனே ஒரே ஃபீலிங்ஸ் ஆஃப் இண்டியா ஆகி தன்னால் தான் தன் பிள்ளையின் வாழ்வு இப்படி வீணாகப் போயிற்று என்று ஏகத்திற்கும் புலம்பி தள்ளி என் வாழ்வை சீராக்குகிறேன் என அதிரடியாக அடுத்தப் பெண்ணை தேட ஆரம்பித்து விடுவார்கள். மீண்டும் முன்பின் யாரென்று தெரியாத ஒரு பெண்ணுடன்

திருமணம் என்கிற ரிஸ்க்கை எடுக்க நான் கொஞ்சம் கூட தயாராக இல்லை. அதனால் எனக்கேற்ற பெண்ணை தேடி நான் கண்டுப்பிடிக்கும் வரை நீ என் மனைவியாக இந்த வீட்டிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும்!" என்றான் தெளிவாக.

ஹிரண்மயி மௌனம் காக்க, "ஹேய்... முடியாது என்று மறுக்க காரணம் எதுவும் தேடாதே, நீ என்ன சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். உன் தேவைக்கு நீ எப்படி என்னை பயன்படுத்திக் கொண்டாயோ அதேபோல் இப்பொழுது என்னுடைய தேவைக்கு நீதான் உதவி செய்ய வேண்டும்!" என்று முடித்தான் அகில்.

ஏனோ அவனுடைய திட்டம் அவளுக்கு மன உளைச்சலை உண்டு பண்ணியது. தான் விலகிய பிறகு அவன் யாரை வேண்டுமென்றாலும் திருமணம் செய்துக் கொள்ளட்டும் என்றிருந்தவளுக்கு தற்பொழுது அகில் கட்டிய தாலி தன் கழுத்தில் இருப்பதாலோ என்னவோ இவன் தன்னவன் என்கிற உரிமைப் போராட்டம் அவளையும் அறியாமல் தன்னால் கிளர்ந்தெழுந்தது.

"என்ன யோசனை? பதில் சொல். இப்படி அமைதியாக அமர்ந்து இருந்தால் என்ன அர்த்தம்?"

'எனக்கு பிடிக்கவில்லை என்று அர்த்தம். என் இடத்திற்கு வேறு ஒருத்தியை கொண்டு வருவதற்கு நான் இவனுக்கு உதவ வேண்டுமா என்ன கதை இது?' என சுறுசுறுவென்று எரிச்சல் மூண்டது.

"என்னால் இதற்கு ஒத்துக்கொள்ள முடியாது என்று நான் மறுத்து சென்றால் உங்களால் என்ன செய்து விட முடியும்?" என்றாள் ஹிரணி அலட்சியமாக.

"பேபிம்மா... என்னை திருமணம் செய்துக் கொண்டதில் உனக்கு மூளை எதுவும் குழம்பி விட்டதா என்ன? நீ என்னை சட்டப்படி பிரிய வேண்டுமென்றால் குறைந்தது ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை என்னுடன் இருந்து தான் ஆக வேண்டும். இல்லை... சொல்லாமல்

கொள்ளாமல் எங்காவது ஓடி விடலாம் என்று நினைத்தாய் என்றால் நீ எங்கு சென்றாலும் என்னுடைய தேடல் உன்னை துரத்திக் கொண்டு வரும். நீ என்னை எவ்வளவு தான் ஏமாற்றினாய் என்றாலும் நான் கேனையனாக சிரித்துக் கொண்டே அமைதியாக இருப்பேன் என்று எண்ணி விட்டாயா? அது தான் கிடையாது, இருக்கின்ற இடத்தில் இருந்துக் கொண்டே உன்னை சுற்றியுள்ள நபர்களை வைத்தே உனக்கு நெருக்கடி கொடுப்பேன்!" என்று வில்லத்தனமாக சிரித்தான்.

சின்ன திகைப்புடன் அவனை ஏறிட்டவளிடம், "எப்படி என்கிறாயா? ஸோ சிம்பிள்... நாம் திருமணம் செய்துக் கொண்ட பொழுது எடுத்த புகைப்படங்களை எல்லாம் எனக்கு அக்கவுன்ட் இருக்கின்ற அனைத்து சோஸையல் மீடியாவிலும் போடுவேன். அதுவே போதும், இருந்தாலும் ஒருவேளை யார் கண்ணிலும் படாமல் நீ தப்பி விட்டாய் என்றால்... அதனால் அடுத்த நடவடிக்கையாக என்னுடைய நண்பர்கள் மூலமாகவும் நம் திருமண விஷயத்தை உலகம் முழுவதும் பரப்புவேன். மேற்கண்ட புகைப்படத்திலிருக்கும் பெண் உடன் இருக்கும் நபரை திருமணம் செய்து அவரை ஏமாற்றி விட்டு ஓடி விட்டார். அதில் உண்டான மன உளைச்சலில் அவர் இப்பொழுது சித்தப்பிரமை பிடித்து அலைகிறார், இத்யாதி... இத்யாதி... இது போதாது உன்னை சுற்றி வளைப்பதற்கு? நல்ல எண்ணம் கொண்டவர்கள் எனக்கு உதவ வேண்டி தொடர்பு கொள்வார்கள். அப்படி இல்லையா... மோசமானவர்கள் என்றால் நிச்சயம் உனக்கு குடைச்சல் கொடுப்பார்கள். ஆகமொத்தம், என்னை ஏமாற்றி திருமணம் செய்துக் கொண்ட நீ நிம்மதியாக வாழ முடியாது!" என்றான் ஏளனமாக.

அவனுடைய வார்த்தைகள் உண்டாக்கிய கற்பனையில் ஆத்திரம் கொண்டவள், "நீங்கள் மட்டும் பெரிய உத்தமரா... உடன் பிறந்த சகோதரன் ஒருவன் இருப்பதையே மறைத்து தானே என்னை திருமணம் செய்துக் கொண்டீர்கள்?" என்றாள் ஆக்ரோஷமாக.

"ஆமாம்மா... நான் இல்லையென்று சொல்லவில்லையே. அதனால் உன்னுடைய வாழ்வு எதுவும் பாதிப்புக்கு உள்ளானதா? இல்லையே... உன்னோடு வாழ்வதற்கு நான் தயாராக தானே இருந்தேன். நீ வேண்டாமென்று மறுத்து செல்லும் பொழுது நான் எதற்காக உன்னிடம் கெஞ்ச வேண்டும்?" என்று ஆணித்தரமாக கேட்டான் அகில்.

பதிலின்றி இறுக்கமாக மௌனம் சாதித்தவளை தனக்கு சாதகமாக மேலும் தூண்டினான் அவன்.

"ஓகே... நீ செய்த குற்றமெல்லாம் மறைந்து நான் செய்வது தான் உனக்கு பெரிய அநியாயமாக தெரிகிறதென்றால், நோ ப்ராப்ளம்... இப்பொழுதும் உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். என்ன இருந்தாலும் இறைவனின் சன்னிதானத்தில் உனக்கு தாலி கட்டியிருப்பதால் சேர்ந்து வாழ்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பளிக்க விரும்புகிறேன். வாழும் காலம் முழுமைக்கும் என்னுடன் பெண்டாட்டியாக குடும்பம் நடத்த நீ தயாராக இருக்கிறாயா?" என்று நேர்ப்பார்வையாய் வினவினான்.

அவனிடம் இந்த திடீர் சமாதானத்தை எதிர்பாராதவளுக்கு அதை ஏற்றுக் கொள்ளவும் மனம் வரவில்லை.

ஆண்கள் என்றால் சுயநலவாதிகள், எதிரில் உள்ளவர்களை தங்கள் இஷ்டத்திற்கு வளைப்பதற்காக எவ்வளவு தூரம் வேண்டுமென்றாலும் நல்லவர்களாய் வேடம் போடுவார்கள் என்ற எண்ணம் ரத்தத்திலேயே ஊறி இருப்பதால் அகிலின் மீது கொஞ்சம் நல்ல அபிப்ராயம் இருந்தாலும் தன் கொள்கையை மீறி அவனோடு சேர்ந்து வாழ்வதற்கும் அவளுக்கு சிறிதும் விருப்பமில்லை.

"சாரி... அதெல்லாம் என்னால் முடியாது, என் தவறாகவே அது இருக்கட்டும். நானே ஏமாற்றுக்காரியாக இருந்து விட்டுப் போகிறேன்!" என்று மறுத்தாள் ஹிரணி.

தன் ஏமாற்றத்தை மறைத்து, "ஃபைன்... அப்பொழுது உனக்கு வேறுவழியில்லை, எனக்கானவளை நான் கண்டுப்பிடிக்கும் வரை நீ என்னுடன் இருந்து தான் ஆக வேண்டும்!" என்று வெளியே அழுத்தமாக முடித்தான் அகில்.

"நீங்கள் சொல்வதை பார்த்தால் எத்தனை நாட்கள் என்ற உறுதியில்லை போலிருக்கிறதே!" என்று கைகளை பிசைந்தாள் நாயகி.

"எத்தனை நாட்களாக இருந்தால் உனக்கு என்ன? அதில் என்ன பிரச்சினை வருமென்று நீ நினைக்கிறாய்? ஓ... ஒருவேளை எதிர்காலத்தில் உனக்கு பிடித்தமானவரை மறுமணம் செய்யும் பொழுது நாம் ஒன்றாக பலநாட்கள் இருந்தது தேவையில்லாத பிரச்சினை எதையும் கிளப்பி விட்டு விடுமோ என பயப்படுகிறாயோ!" என்று தீவிரமாக வினவி அவன் உரக்க சிந்திக்க, இவள் கோபமடைந்தாள்.

"போதும் நிறுத்துங்கள்... திருமணமே வேண்டாமென்று இருந்த நான் ஹர்சு அக்காவிற்காக தான் உங்களையே திருமணம் செய்துக் கொண்டேன். நான் ஒன்றும் உங்களை போல் மறுமணம் எல்லாம் செய்துக் கொள்ள மாட்டேன். என்னுடைய சுயலாபத்திற்காக நடந்திருந்தாலும் என்னை பொறுத்தவரை இந்த ஜென்மத்தில் நீங்கள் ஒருவர் மட்டும் தான் என் கணவர். வேறு யாருக்கும் என் வாழ்க்கையில் இடம் கிடையாது!" என படபடவென்று பட்டாசாய் பொரிந்தவளின் வார்த்தைகளை உள்ளுக்குள் ரசித்தவன் அதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான்.

"தென் வாட்ஸ் தி பிராப்ளம்? ஏன் என்னோடு ஒன்றாக இருப்பதற்கு இவ்வளவு தயங்குகிறாய்? ஓகே சொல்ல வேண்டியது தானே... வெளியில் தான் கணவன், மனைவி. இந்த அறையை பொறுத்த வரை நாம் இருவரும் ஜஸ்ட் ரூம்மேட்ஸ் அவ்வளவுதான். உன் வசதிக்கு நீ பாட்டுக்கு வேலைக்கு சென்று வரலாம், மேலும் வசதியாக உன் உடன்பிறவா அக்காவான அண்ணியுடன் இன்னும் சிறிது காலம் இந்த வீட்டில் நீ தங்கி இருக்கலாம்!" என்று

தொடர்ந்து தன் வாதத்திற்கு வலுக் கூட்டி அவளை குழப்ப ஆரம்பித்தான் அகில்.

12

அகிலன் சொல்வதில் தவறேதும் இருப்பதாய் தோன்றவில்லை ஹிரணிக்கு, 'என்ன இருந்தாலும் அவன் வாழ்வில் நாம் குறுக்கு வழியில் வந்தது மிகவும் தவறான செயல் தான். ஸோ... அதற்கு பரிகாரமாக அவனுக்கான வாழ்வை அவன் தேடிக் கொள்ளும் வரை நான் என்னுடைய ஒத்துழைப்பை தருவது தான் நியாயமானது!' என்ற முடிவுக்கு வந்தாள்.

"ஒகே... நான் உங்களுக்கு செய்தது தவறு என்பதால் மட்டுமே இங்கே தொடர்ந்து இருப்பதற்கு சம்மதிக்கிறேன். மற்றபடி உங்களுடைய பூச்சாண்டி மிரட்டலுக்கு எல்லாம் பயந்து இல்லை!" என்றாள் ஹிரண்மயி எடுப்பாக.

"ஓ... அப்பொழுது என்னை வெற்று வேட்டு என்கிறாயா?"

"அப்படி சொல்லவில்லை, ஆனால் அதுபோல் என்னுடைய வாழ்க்கை பாதிக்கும் அளவிற்கு எல்லாம் நீங்கள் சமூக வலை தளங்களில் என் புகைப்படத்தையும், செய்தியையும் வெளியிட மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்!"

"பாருடா... என் மேல் உனக்கு அந்த அளவுக்கு நல்ல அபிப்ராயம் இருக்கிறதா என்ன?" என்றான் அகில் வியப்புடன்.

"இல்லாமல் தான் திருமணம் செய்துக் கொள்ள துணிந்து முடிவெடுத்தேனா? உண்மையாகவோ நடிப்பிற்காகவோ ஒரு ஆடவனுடன் சில காலமாவது ஒரே அறையில் தங்க வேண்டுமென்றால் அவனுடைய கேரக்டர் மிகவும் முக்கியமாயிற்றே... உங்களை பற்றி தீர விசாரித்து நீங்கள் பெண்களை மதிப்பவர் என்பதால் தான் நான் திருமணம் செய்துக் கொண்டேன்!"

"இத்தனை தூரம் என் மேல் நல்ல எண்ணம் இருப்பவளுக்கு தொடர்ந்து என்னுடன் மனைவியாக

வாழ்வதில் மட்டும் என்ன பிரச்சினை?" என்று சந்தேகம் கேட்டான் அவன்.

"ப்ச்... எந்த ஒரு ஆண்மகனையும் சார்ந்து வாழ்வதில் எனக்கு சிறிதும் விருப்பமில்லை. என் வசதிக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப தான் என்னால் வாழ முடியும். முழுவதுமாக கணவன், குடும்பம் என்றெல்லாம் கமிட் செய்துக் கொண்டு அவர்களின் எதிர்பார்களுக்கேற்றபடி என்னை காம்ப்ரமைஸ் செய்துக் கொண்டு எல்லாம் என்னால் வாழ முடியாது. இந்த வக்கீல் படிப்பை நான் தேர்ந்தெடுத்து படித்ததற்கு காரணமே சட்டம் குறித்த அடிப்படை விழிப்புணர்வு கூட இல்லாமல் பல இன்னல்களை குடும்பத்திலும், சமூகத்திலும் அனுபவித்து வரும் அப்பாவிப் பெண்களுக்கு உதவும் பொருட்டு தான். எங்கள் ஆசிரமத்திற்கு அருகிலேயே கன்சல்டிங் ஆபிஸ் ஒன்று போட்டிருக்கிறேன். பெரியதாகவோ சிறியதாகவோ பிரச்சினை என்று வரும் பெண்களுக்கு கவுன்சிலிங் கொடுப்பது, அவர்களுக்கு உதவும் சட்டங்கள் குறித்த விவரம் தெரிவிப்பது, மேலும் தேவைப்பட்டால் எனக்கு தெரிந்த பெண் காவல் அதிகாரி ஒருவர் மூலமாக அவர்கள் குடும்பத்திலுள்ள ஆட்களுக்கு எச்சரிக்கை விடுத்து முதலில் சமரசம் செய்து கொள்வதற்கான முயற்சிகளில் இறங்குவேன். அதற்கு மேலும் அந்தப் பெண்களுக்கு தன் கணவனுடன் தொடர்ந்து வாழ விருப்பமில்லை என்றால் மட்டுமே விவாகரத்து செய்வதற்கு உதவிப் புரிந்து, தங்கள் வாழ்க்கையை அவர்கள் கௌரவமாக அமைத்துக் கொள்வதற்கு ஏற்ற மாதிரி ஏதாவது ஒரு நல்ல வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவேன்!" என்றவளை எண்ணி உண்மையிலேயே நாயகனுக்கு பெருமையாக இருந்தது.

"நீ லீகல் அட்வைஸராக தானே கம்பெனியில் வேலைப் பார்க்கிறாய். பிறகு இதற்கெல்லாம் நேரம் ஏது?"

"லீகல் அட்வைஸராக இருப்பது என்னுடைய பண தேவைக்காக, இது என்னுடைய ஆத்ம திருப்திக்காக. ஏனென்றால் இந்த சமூகத்தில் என் போன்ற பல

அநாதைகள் உருவாக காரணம், எங்களை பெற்ற பெண்களுக்கு எந்தப் புறமிருந்தும் எந்தவொரு ஆதரவும் கிட்டாததால் தான் தனிமையில் வளர்க்க அஞ்சிக் கொண்டு இவ்வாறு வீசிச் சென்று விடுகின்றனர். அட்லீஸ்ட்... இது போன்ற மாரல் சப்போர்ட் ஏற்படுத்தி கொடுத்தாலாவது எதிர்காலத்தில் எங்களை போன்று சமுதாயத்தில் அநாதை என்ற முத்திரை குத்தப்படாமல் தாயின் அரவணைப்பில் வாழும் பிள்ளைகளின் எண்ணிக்கையாவது கொஞ்சம் உயரும்!" என்றவளின் குரலில் அவளையும் மீறி சற்றே வெறுப்பு வெளிப்பட்டது.

ஆண்களின் ஏமாற்று வேலையால் மட்டும் தான் பெண்கள் பாதிப்புக்கு உள்ளாகி இவ்வாறு செய்து விடுகின்றனர் என்ற கருத்தை தன்னுள் ஆழமாக விதைத்திருக்கிறாள் என்பது அவள் பேசப் பேச அகிலுக்கு தெளிவாகவே புரிந்தது. இதை மறுத்து பேச அவனிடம் ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் தற்பொழுது தான் தன்னையுமறியாமல் தன்னிடம் மனம் விட்டுப் பேசுகிறாள் அதைக் கெடுக்க வேண்டாம் என்று நினைத்தவனுக்கு அவள் கூறுவது போல குறிப்பிட்ட சதவீத ஆண் வர்க்கத்தினர் அப்படி இருக்கவும் தானே செய்கிறார்கள் என்றும் தோன்றியது.

"அப்பொழுது கம்பெனி நேரம் போக மீதி நேரம் முழுவதும் உன் அலுவலகத்திற்கே சரியாகப் போய் விடுமா?" என்று விவரம் கேட்டான்.

"இல்லை... இருபத்திநான்கு மணி நேரமும் பாதிக்கப்பட்ட பெண்கள் என் அலுவலகத்தை முற்றுகையிடும் அளவிற்கு நம்நாடு இன்னும் அந்தளவு மோசமடையவில்லை!" என மெல்லியதொரு புன்னகையை சிந்தியவள், "எனக்கு அம்மாவாக நடித்தார்களே சமையல்காரம்மா மங்களம், அவர்களுடைய பெண் நிர்மலா தான் என் அலுவலகத்தை பார்த்துக் கொள்கிறாள். கடந்த வருடம் தான் நான் தனியாக அலுவலகம் தொடங்கினேன், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் மேலே டிகிரி எதுவம் படிக்காமல்

வேலை தேடியவளை சம்பளம் கொடுத்து அங்கே அமர வைத்துவிட்டேன். முக்கியமான சட்ட நுணுக்கங்களை நான் அவளுக்கு கற்றுக் கொடுத்துள்ளதால் எங்களிடம் வரும் பெரும்பாலான கேஸ்களின் விவரங்களை அவளே ஓரளவுக்கு சேகரித்து வைத்துக் கொண்டு என்னை தொடர்பு கொள்வாள். நான் அதற்கேற்றபடி என் நேரத்தை ஒதுக்கி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். இப்பொழுது அவளையும் தொலைதூர கல்வி வழியில் லேபர் லா படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். எதிர்காலத்தில் பிரொப்பராக ஒரு கன்சல்டிங் ஆபிஸாகவே அதை தனியாக மாற்றி விடலாம் என்று ஒரு திட்டம் இருக்கிறது!" என்றாள் கணவனிடம் விளக்கமாக.

"ஓ... குட் சூப்பர்ப்... கிரேட் டிசிஸன், மை அட்வான்ஸ்ட் ஹார்ட்லி விஷ்ஷஸ் ஃபார் யூ!" என்று அவளிடம் கரம் நீட்டினான் அகில், ஒரு சின்ன தடுமாற்றத்திற்கு பின் அவன் கரம்பற்றி தயக்கத்துடன் நன்றி தெரிவித்தாள் ஹிரணி.

இதுவரை அவளின் வளர்ச்சியை கண்டு இவ்வாறெல்லாம் யாரும் தனிப்பட்ட முறையில் சந்தோசம் கொண்டு அவளை பாராட்டியதேயில்லை என்பதால் சற்று சங்கடமாக உணர்ந்தாள் பெண். படிக்கும் காலத்திலிருந்தே அவள் பெரும் மதிப்பெண்களுக்கும், வளர்ச்சிக்கும் பொதுவான மேம்போக்கான வாழ்த்துக்கள் மட்டும் தான் கிடைக்கும். இன்று தனக்காக என்று தனியாக உற்சாகம் கொள்பவனை பார்த்து உள்ளுக்குள் ஏதோவொரு மாற்றம் நிகழ்ந்து இதயத்தை சுற்றி ஒரு மாயக்கட்டு விழுவது போன்ற தோற்றம் உருவாகி அவளை பதற்றம் கொள்ளச் செய்தது.

அதுவரை இருந்த தெளிவு மாறி அவள் முகத்தில் குழப்பம் பரவுவதை கண்டவன், "என்னம்மா?" என்றான் தன்னையும் மீறி.

அவனுடைய கனிவு தன் மனதை பலவீனமாக்குவதை ஒரு திடுக்கிடலுடன் உணர்ந்தவள் அதை தவிர்க்க வேண்டி, "ஒன்றுமில்லை!” என்று வேகமாக தலையசைத்து விட்டு, “சரி நான் தூங்கப் போகிறேன்!" என சட்டென்று எழுந்துக் கொண்டாள்.

அவளை தடுத்து மேலும் பேச்சை வளர்த்த ஆசைக் கொண்ட மனதை சடுதியில் கட்டுப்படுத்தி, "ஓகே... குட் நைட்!" என்றவன் இதமாக முறுவலிக்க, பதிலுக்கு உதட்டை மட்டும் விரித்து காண்பித்து விட்டு சென்றாள் அவள்.

நெற்றி சுருங்க அவளை யோசனையோடு அளவிட்ட அகில் பின் பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு லேப்டாப்பின் புறம் திரும்பி, தன் கவனத்தை அதில் ஒருமுகப்படுத்தி தான் பாதியில் விட்ட வேலையை மீண்டும் தொடர்ந்தான்.

பிளாங்கட்டுக்குள் தன்னை புகுத்திக் கொண்ட ஹிரணியின் மனமோ பெரும் குழப்பத்தை தத்தெடுத்திருந்தது.

ஹர்சிதாவை ஏற்றுக்கொள்ள மறுக்கும் குடும்பம் என்று பவானியின் மீதும் அகிலின் மீதும் லேசான துவேஷத்தை வளர்த்திருந்தவளுக்கு தற்பொழுது அவர்களுடன் நெருங்கி பழகப் பழக முன்பு போல் அந்த வன்மத்தையோ, வெறுப்பையோ பற்றிக் கொண்டு தொங்க முடியவில்லை.

வயதில் பெரியவர் என்று பவானியை தான் எதிர்க்க முடியவில்லை என இவனிடம் எகிறப் பார்த்தால், இவன் பதிலுக்கு சண்டையிட்டு அல்லது சமாதானமாகப் பேசி என்று ஏதேதோ ஜாலங்கள் செய்து ஆக மொத்தத்தில் தனக்கு வசதியாக என்னை மாற்றி விடுகிறான்.

அவனுடன் பேசும் பொழுது மட்டும் ஏன் ஏதோ மாயையில் சிக்குண்டிருப்பது போல் அவனுடைய வார்த்தைகளுக்கு பெரிதாக எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காமல் சாதகமாக மாறிவிடுகிறேன்? ஆண்கள்

எல்லோரும் இப்படித்தான் நயமாக பேசி பெண்களை தங்கள் பக்கம் திசைத் திருப்பும் கயவர்களாக இருப்பார்களோ... முதலில் எதிர்க்க மறப்பவர்கள் பின்பு அவர்களின் சொல்பேச்சுக்கு அடங்கும் அடிமையாக மாறி விடுவார்களோ, அப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது.

இவ்வளவு தூரம் ஆண்களை பற்றி எச்சரிக்கை உணர்வோடு வளர்ந்திருக்கின்ற நானே இவனிடம் ஏமாந்து சொல்வதெற்கெல்லாம் தலையாட்டுகிறேனே... அப்பொழுது சாமான்யப் பெண்களின் நிலைமை மிகவும் கஷ்டம் தான். நாட்டில் உள்ள அநாதைகளின் எண்ணிக்கை இவனை போன்ற வாய் ஜாலர்களின் உபயத்தால் தான் அதிகரிக்கும் போலிருக்கிறது.

கொஞ்சம் ஏமாந்து தலையாட்டவும் என்னமாய் அக்கறை உள்ளவன் போல நடிக்கிறான் இவன்? பாராட்டுகிறானாம், வாழ்த்துகிறானாம், இதில் என்னம்மா என்று பெரிய கரிசனம் வேறு... ச்சே... நல்லவேளை சுதாரித்து எழுந்து வந்து விட்டேன். இல்லையென்றால் ஹர்சு அக்காவின் நிலைதான் எனக்கும் வந்திருக்கும்.

இவனுடைய அண்ணன் விமலன் சரியான சுயநலம் பிடித்தவனாக இருப்பான் போலிருக்கிறது. பெற்ற தாயையும், உடன் பிறந்தோனையும் தன் காதலிக்காக ஒதுக்குவது போல் ஒதுக்கி விட்டு இரண்டு மாதம் சந்தோசமாக அவர்களுடன் தாம்பத்தியம் நடத்தி அவர்கள் கர்ப்பமானதும் வேறு ஏதோ ஊருக்கு கம்பி நீட்டி விட்டான். இப்பொழுது எங்கே எந்தப் பெண்ணை ஏமாற்றிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை என்று வெறுப்பாக எண்ணினாள். ஆனால் அதுவரை அண்ணனுக்கு தம்பி எவ்வளவோ பரவாயில்லை தாலி கட்டியிருந்தாலும் என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து என்னை விட்டு விலகி இருக்கிறான் என நிம்மதி பெருமூச்சுவிட்டுக் கொண்டாள்.

‘இல்லை ஒருவேளை… என் குணத்திற்கும், தொழிலுக்கும் பயந்து கொஞ்சம் அடக்கி வாசிக்கிறானோ… இருந்தாலும் இருக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்…’ என்று உறங்க முயற்சி செய்து வெற்றியும் கண்டாள்.

வேலையை முடித்து தன் மடிக்கணினியை மூடிய அகில் சோர்வாக நெட்டி முறித்து திரும்பி ஹிரணியை பார்த்தான்.

அவள் பிறப்பிற்கு காரணமானவர்கள் அவளை கைவிட்டு அநாதையாக்கியதும், அவள் வளர்ந்திருந்த சூழ்நிலையுமே தன் மனைவியின் மனதை மிகவும் பாதித்திருக்கிறது என்பதை சரியாக உணர்ந்தவன், அவளை அதிலிருந்து நாம் தான் கொஞ்சம் கொஞ்சமாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

தன்னைவிட்டு விலகி தனிமையில் படுத்துறங்கும் அவளை தன் கைவளைவுக்குள் கொண்டு வந்து, நானிருக்கிறேன் உனக்கு என்று ஆறுதலளிக்க ஆசைக் கொண்டது நெஞ்சம்.

ஆனால் நிச்சயமாக இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் தனது அன்பையோ, கனிவையோ அவள் கொஞ்சமும் ஏற்றுக் கொள்ளாமல் எதையுமே சந்தேக கண் கொண்டு தான் பார்ப்பாள். அதனால் சிறிது காலத்திற்கு அவளாக என்னை புரிந்துக்கொள்ளும் வரை என் அன்பை அவளிடம் மறைத்து இயல்பாகவும் அதே நேரம் சற்று இடைவெளி விட்டும் பழக வேண்டும் என்று முடிவு செய்தான்.

விமலின் வார்த்தைகள் காதில் ரீங்காரமிட்டது.

'அவள் ரொம்ப பாவம்டா… இத்தனை வருடங்களாக யாருமற்ற தனிமையில் வாழ்ந்து விட்டாள். இனிமேலாவது உனக்கு எல்லாமுமாக நான் இருக்கிறேன் என்று அவளை தேற்றி வாழும் காலம் முழுக்க மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்டா!'

விழியோரம் நீர்க்கசிய, 'எங்கேடா இருக்கிறாய் நீ? அண்ணிக்காக எங்களுடைய நினைவை கூட இரண்டாம் பட்சமாக்கி மணந்துக் கொண்டவன் பின்பு எப்படிடா இத்தனை மாதங்களாக அவர்களை பிரிந்திருந்து இவ்வாறு வேதனையில் தள்ளியிருக்கிறாய்?' என்று தனக்குள் புலம்பினான் அகில்.

காலையில் கண் விழித்தவன் அறை வெறுமையாக இருப்பதை கவனித்து விட்டு எழுந்து வாஷ்ரூம் சென்றான். டிராக்சூட் அணிந்து கீழே இறங்கியவனை புன்னகை முகமாக எதிர்கொண்டார் பவானி.

"குட்மார்னிங்டா!"

"குட்மார்னிங்மா... எங்கே என்னுடைய தர்ம பத்தினியை காணவில்லை?" என்று கேலியாக விசாரித்தான்.

"ஷ்... மெல்லப் பேசுடா, உன் பெண்டாட்டி எழுந்து வந்ததும் நேராக ஹர்சுவை அழைத்துக் கொண்டு மாடியில் சற்று நேரம் வாக்கிங் போய் வந்தாள். பிறகு உன் அண்ணியை கீழே அனுப்பிவிட்டு அவள் குளித்து தயாராகி வந்தாளா... என்னம்மா டீ தரவா? என்றேன். அவள் பதிலளிப்பதற்குள் என் மூத்த மருமகள், இருங்கம்மா... இத்தனை நாட்களாக தான் நீங்கள் ஒருவரே எல்லாம் செய்தீர்கள், இப்பொழுது தான் நாங்கள் இருவரும் வந்துவிட்டோமே... இனிமேல் எது எது எப்படியெப்படி செய்ய வேண்டும் என்று நம் வீட்டு வழக்கத்தை மட்டும் சொல்லிக் கொடுங்கள் நாங்கள் எல்லாம் பார்த்துக் கொள்கிறோம் என்றாளா... நான்..." என ஆர்வமாக பேசிச் சென்றவரை வேகமாக இடைமறித்தான் இளைய மகன்.

"போதும் போதும்... எனக்கு புரிகிறது. இது தான் சாக்கென்று உடனே வேலையிலிருந்து எஸ்கேப்பாக மண்டையாட்டி விட்டீர்கள். சரியா?" என்று குறும்பாக கண்ணடித்தான்.

படவா... என்று அவன் காதை திருகியவர், "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... அவர்களுக்கும் இந்த

வீட்டோடு ஒரு பிணைப்பு வர வேண்டுமென்று தான் நான் அதற்கு சம்மதித்தேன்!" என்று முறைத்தார்.

"எனக்கு தெரியாதாம்மா உங்களை பற்றி, நான் சும்மா சீண்டினேன்!" என்று விட்டு, "சரி நான் கிட்சன் பக்கம் சென்று ஒரு அட்டன்டென்ஸ் போட்டு விட்டு வருகிறேன்!" என அங்கே சென்றான்.

"ஹாய் அண்ணி... குட்மார்னிங்!" என்றான் உற்சாகமாக.

அவன் குரலில், "ஓ... குட்மார்னிங்!" என்று திரும்பி அழகாக முறுவலித்தாள் ஹர்சிதா.

தன் கணவனுடைய குடும்பத்தில் இணைந்து விட்டோம், இனி அவனை பற்றி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்கிற நம்பிக்கையில் நேற்றை விட அவள் முகத்தில் சற்று தெளிவு தெரிந்தது.

13

அடுத்து முகம் முழுவதும் குறும்பு கூத்தாட மனைவியிடம் திரும்பிய அகில், "குட்மார்னிங் வொய்ஃபை!" என்று உரக்க கூறினான்.

அவன் கேலியில் உள்ளம் கொதிக்க பற்களை அழுந்தக் கடித்த ஹிரண்மயி, ஹர்சிதாவின் முன்னிலையில் எதையும் வெளிப்படுத்த இயலாமல் முகம் இறுக பால் பாத்திரத்தையும், டம்ளர்களையும் உருட்ட ஆரம்பித்தாள்.

அதை விழிகளில் ரசித்தவாறே, "என்ன அண்ணி நீங்கள் வளர்ந்த இடத்தில் ஒருவர் காலை வாழ்த்து தெரிவித்தால் பதில் மரியாதையாக திரும்ப அவர்களுக்கு வாழ்த்து சொல்ல வேண்டும் என்பதையெல்லாம் சரியாக கற்றுத் தரவில்லையா?" என்று பரிகாசத்துடன் வினவினான்.

"அப்படியெல்லாம் இல்லையே... எங்கள் ஆசிரமத்தில் இறைவழிபாடு கூட இரண்டாம் பட்சம் தான், ஒழுக்கத்திற்கு தான் முதல் முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஹிரணிம்மா... என்ன பழக்கம் இது? தம்பியிடம் பதில் வணக்கம் சொல்ல வேண்டாமா நீ?" என்று லேசாக அதட்டினாள் ஹர்சு.

"ப்ச்... அக்கா... அவர் ஒழுங்காக சொல்லியிருந்தால் நானும் சரியாக நடந்திருப்பேன். அதென்ன என்னிடம் மட்டும் அவருக்கு அவ்வளவு நக்கல், நையாண்டி பேச்சு?" என்று ஓர விழியில் கணவனை முறைத்தாள்.

அது... என்று ஹர்சு பேசும் முன் முந்திக் கொண்ட அகில், "இதென்ன வம்பாகப் போயிற்று? என் மனைவியிடம் கேலி பேசி விளையாடாமல் நான் வேறு யாரிடம் விளையாட முடியும்? அடுத்த வீட்டுப் பெண்களிடமா... உதைக்க வரமாட்டார்கள்?" என்றான் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு.

அதைக்கண்டு மெல்ல முறுவலித்த ஹர்சிதா, அப்பொழுது தான் தன்னுடைய தங்கையையும்,

கொழுந்தனையும் நன்றாக கவனித்தாள்.

உம்மென்று முகத்தை சுளித்தபடி நின்றிருந்த ஹிரணியிடம் உன்னை விடுவேனா என்று பார்வையாலே சீண்டி வம்பு வளர்த்துக் கொண்டிருந்தான் அகில்.

'ஆஹா... நம் கொழுந்தன் அவளிடம் வேண்டுமென்றே விளையாடிக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் நாம் வேறு இங்கு நந்தியாக குறுக்கே நின்றுக் கொண்டு இருக்கிறோம்!' என்பதை சற்று தாமதமாக உணர்ந்தவள் ஹிரணியிடம் வேகமாக திரும்பினாள்.

"நீ அவருக்கு காபி கலந்து கொடும்மா, எனக்கு லேசாக கால் வலிப்பது போலிருக்கிறது. நான் போய் ஹாலில் கொஞ்ச நேரம் உட்காருகிறேன்!" என்று அவள் திரும்ப எத்தனிக்க, கணவன், மனைவி இருவரின் குரலும் ஒரு சேர பதற்றத்துடன் ஒலித்து அவளை தடுத்து நிறுத்தியது.

"என்னவாயிற்று அக்கா?"

"என்னவாயிற்று அண்ணி?"

அவர்கள் அன்பில் ஒரு நொடி நெகிழ்ந்தவள் பின் தன்னை விரைவாக சுதாரித்து, "ஒன்றுமில்லை... மாடிப்படி ஏறி இறங்கியதால் சற்று டயர்டாக இருக்கிறது அவ்வளவுதான்!" என சட்டென்று வாய்க்கு வந்ததை கூறி மென்மையாக புன்னகைத்தாள்.

ஓ... என்றவன், "ஆனால் உடம்பில் எந்தவொரு சின்ன தொந்திரவு என்றாலும் மறைக்காமல் உடனே கண்டிப்பாக சொல்லிவிட வேண்டும் அண்ணி. விமல் திரும்பி வரும் நாளில் அவனை இன்பத்துடன் வரவேற்க நீங்களும், குழந்தையும் நலமுடன் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை எப்பொழுதும் மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள்!" என்று அக்கறையாய் எச்சரித்தான்.

அவன் சொல்லில் கணவனின் பிரிவு மீண்டும் அவளை சூறாவளியாய் தாக்கத் துவங்க முகம் கசங்கி விழிகள்

கலங்க ஆரம்பிப்பதை உணர்ந்து வேகமாக தலையாட்டி விட்டு அங்கிருந்து வெளியேறினாள் ஹர்சிதா.

அதைக்கண்டு துணுக்குற்றவன் தன் மனைவியிடம் எதையோ பேச எண்ணி அவளிடம் திரும்ப அவளோ அவனை உறுத்து விழித்தாள்.

ஒருகணம் தடுமாறியவன், “என்ன?” என்றான் புரியாமல்.

"உங்களுக்கு கொஞ்சம் கூட ஒரு காமன் சென்ஸே கிடையாதா? அக்காவே இப்பொழுது தான் உங்கள் வீட்டிற்கு வந்தப்பிறகு தன் கணவனின் பிரிவை மறந்து சற்று தெளிவாக இருக்கிறார்கள். அதற்குள் உங்கள் அண்ணனை பற்றி தேவையில்லாமல் நினைவுப்படுத்தி அக்காவின் மனவேதனையை மறுபடியும் கிளப்புகிறீர்களே, நீங்களெல்லாம்..." என்று இழுத்தவள், ச்சை... என்பதோடு நிறுத்திக் கொள்ள முகம் சிவந்துப் போனது இவனுக்கு.

தான் செய்த ஒரு சின்ன பிசகிற்காக ஹிரணி அவ்வாறு எடுத்தெறிந்துப் பேசியதில் உள்ளிருந்து சுறுசுறுவென்று கிளம்பியது அகிலுக்கு.

தன் கோபத்தில் உழன்றவளாக திரும்பி அடுப்பில் பாலை வைத்தவள் அப்பொழுது தான் தன் கணவனுடைய அமைதியை தாமதமாக கவனித்தாள். விமலுக்காக ஹர்சு வருந்துவதை ஒருபொழுதும் விரும்பாத ஹிரணி அதை தன் கணவனிடம் தவறாக காண்பித்து விட்டதை உணர்ந்து தயக்கத்துடன் அவனிடம் திரும்பினாள்.

அவமானத்தில் கறுத்த முகத்துடன் சமையலறை வாயிலை நோக்கி நடந்தவனை கண்டு திகைத்தவள், "உங்களுக்கு காபி..." என்று சத்தமாக மொழிந்து அவனை தடுக்க முயல வேகமாக இடையிட்டவன், "தேவையில்லை!" என்ற ஒரே சொல்லுடன் அங்கிருந்து விரைந்து வெளியேறினான்.

'ச்சே... எங்கோ போகின்ற கோபத்தை நான் ஏன் அவனிடம் காண்பித்தேன்? காலங்கார்த்தாலே புன்னகை

முகமாக வந்து கேலிப் பேசி வாழ்த்தியவனின் மனதை நோகடித்து அனுப்பி விட்டேனே... இப்பொழுது காபி கூட குடிக்காமல் வெறும் வயிற்றோடு வெளியில் போகிறானே!' என்று தனக்கே தெரியாமல் கணவனுக்காக வருந்தி கடமை மனைவியாய் தவிக்க ஆரம்பித்தாள் ஹிரண்மயி.

அகில் கிளம்பி வெளியே சென்றதிலிருந்தே கைகளை பிசைந்தபடி வாயிலை வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்த ஹிரணியை பார்த்து குழம்பினார் பவானி.

'இவள் என்ன போருக்கு அனுப்பிய கணவன் எப்பொழுது வீடு திரும்புவான் என்கிற ரீதியில் இவ்வளவு பதற்றமாக சுற்றுகிறாள்?'

ஹர்சுவிடம் விழிகளால் ஹிரணியை சுட்டிக்காட்டி என்ன விஷயம் என்றவர் வினவ, அவளும் சைகையினாலே அவர்களுக்குள் டிஷ்யூம் டிஷ்யூம் என்று கைகளை காட்டினாள்.

முதல் நாள் நள்ளிரவு வரை உறங்காமல் தங்களின் உணர்வுகளை பகிர்ந்துக் கொண்டதன் விளைவாக மாமியார், மருமகள் இருவருக்குள்ளும் நல்லதொரு புரிதல் ஏற்பட்டிருந்தது. அதேபோல் ஹிரணியின் செயல்களை கேட்டு அதிர்ந்துப் போன ஹர்சிதா அவளின் செயலிற்காக பவானியிடம் மன்னிப்பு கேட்டாள். அதற்கு அவசியமில்லை உன்னால் முடிந்தால் எப்படியாவது உன் தங்கையை சமாளித்து கொழுந்தனோடு சேர்ந்து வாழ வைக்கப் பார் என்று முடித்து விட்டார் அவர்.

'இதுங்களுக்கு வேறு என்ன வேலை?' என்று இதழ் மலர்ந்த பவானிக்கு தன்னுடைய இளைய மகனை எண்ணி உண்மையிலேயே ஆச்சரியம் தான்.

தனக்கு பிடித்த சிறு விஷயங்களை கூட எப்பொழுதும் விட்டுக் கொடுக்காமல் விமலோடு மல்லுக்கு நிற்கும் இந்த பிடிவாதக்காரனுக்கு எங்கிருந்து இவ்வளவு அமைதி

வந்தது? திருமணம் என ஒன்று நடந்து மனைவியின் பிடிவாதக் குணம் தெரியவும் இவன் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறானோ... அதுவும் நல்லது தான் இருவரில் ஒருவர் விட்டுக்கொடுத்து சென்றால் தான் வாழ்க்கை சிறக்கும். ஆனால் இவளும் தன்னை கொஞ்சம் மாற்றிக்கொள்ள முயன்றால் மிகவும் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் தம்பதியரில் ஒரு சாராரே தொடர்ந்து விட்டுக்கொடுத்தலும் ஒரு எல்லைக்கு மேல் வாழ்க்கையில் சலிப்பை உண்டு பண்ணி உறவில் பிளவை உண்டாக்கி விடும் அபாயமும் இருக்கிறது என்ற கவலையும் தோன்றியது.

அகிலன் கேட்டை திறந்து உள்ளே வரவும் வேகமாக தன் முகத்தை சீர்ப்படுத்திக் கொண்ட ஹிரண்மயி கிச்சனுக்கு சென்று விட்டாள்.

சோபாவில் தன் தாயருகில் விழுந்தவன் டிவி ரிமோட்டை கையில் எடுத்து செய்திகளை தேடி அதன் பொத்தான்களை அழுத்த துவங்கினான்.

"காபி தரவா?" என்று அவன் அருகில் வந்து நயமாக வினவியவளை அழுத்தமாய் ஏறிட்டவன், "வேண்டாம்!" என்று முகத்தை திருப்பிக் கொண்டான்.

'என்ன? இவன் இன்னும் காபி குடிக்கவில்லையா... அதற்குள் சண்டை வந்து வெளியில் சென்று விட்டான் போலிருக்கிறது!'

கணவன், மனைவிக்கு இடையே நில்லாமல் இங்கிதமாய் ஒதுங்கி செல்ல எண்ணிய பவானி பெரியவளிடம் திரும்பி, "ஹர்சிதா... என்னுடன் வா, தோட்டத்திற்கு சென்று சுவாமி படங்களுக்கு பூப்பறித்து வரலாம்!" என்றவரின் அழைப்பை புரிந்துக் கொண்டவளும் அவருடன் எழுந்து சென்றாள்.

அவர்கள் இருவரும் வெளியேறியதும் அகிலிடம் திரும்பிய ஹிரணி, "ப்ளீஸ்... நான் அப்படி பேசியிருக்க கூடாது தான். ரியலி... ஐ ஃபீல் வெரி பேட் ஃபார் தட், அதை மறந்து விடுங்களேன். நான் வேண்டுமென்றால்

உங்களிடம் மன்னிப்பு..." என்று மன்றாடியவளை தடுத்தான் அகில்.

"எதையும் முன்பின் யோசிக்காமல் வாய்க்கு வந்ததை பேசிவிட்டு பின்னால் மன்னிப்பு வேண்டுவதெல்லாம் அநாவசியம் என்கிற எண்ணம் கொண்டவன் நான். ஸோ..." என்று முடிக்காமல் எழுந்தவன் அவளை திரும்பியும் பார்க்காமல் விறுவிறுவென்று மாடிப்படிகளை கடந்து சென்று தன்னறைக்குள் புகுந்துக் கொண்டான்.

அவனை பொறுத்தவரை எதிராளியிடம் காச்மூச் என்று கத்தி சண்டையிட்டு தன் எதிர்ப்பை காண்பிப்பதை விட, அவர்களை விட்டு அமைதியாக விலகியிருந்து நம் உணர்வுகளை அவர்களின் மனதில் பதியச் செய்து மீண்டும் அப்படியொரு சூழ்நிலையை வராமல் தடுப்பதே சிறந்த யுக்தி என்று எண்ணுவான்.

அவனுடைய எண்ணம் சரி என்பது போல குற்றவுணர்வில் தவித்தபடி கீழே நின்றிருந்தாள் அவன் நாயகி.

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று பேசும் தன் குணத்தை இனி எப்படியாவது சிரமப்பட்டு மாற்ற முயற்சிக்க வேண்டும் என்கிற நல்ல முடிவுக்கு வந்தவள் மெல்லிய பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு பவானியை தேடிச் சென்றாள்.

குளித்து முடித்து லைட் பிங்க் ஷர்டும், பிளாக் பேண்டுமாக ஃபார்மல் டிரஸ்ஸில் அலுவலகத்திற்கு கிளம்பியவன் டிரஸ்ஸிங் டேபிள் முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்த நேரத்தில் கண்களால் இறைஞ்சியபடி கண்ணாடியில் தன் பின்னால் வந்து நின்ற பிம்பத்தை கண்டு ஒரு நொடி தயங்கி பின் விழிகளை திருப்பிக் கொண்டான்.

"இன்று அலுவலகம் போக வேண்டுமா?"

"ம்!" என்றபடி கைக்கடிகாரத்தை எடுத்து தன் மணிக்கட்டில் கட்டினான்.

"டிபன் தயாராகி விட்டது. சாப்பிட வருகிறீர்களா?"

"இல்லை... வேண்டாம்!" என்று ஷாக்ஸை எடுத்து காலில் மாட்டினான்.

"என் மீது கோபம், நான் செய்வது பிடிக்கவில்லை என்றால் எதற்காக நீங்கள் உங்களை தண்டித்துக் கொள்கிறீர்கள்?" என்றவளின் குரல் அவளையும் மீறி பிசிறு தட்டியது.

"எனக்கு என்றும் அடுத்தவரை தண்டித்துப் பழக்கமில்லை!" என்றவன் லேப்டாப் பேக்கை எடுத்து தோளில் மாட்ட, "அதேபோல் தான் எனக்கும் இப்படி அடுத்தவரிடம் கெஞ்சிப் பழக்கமில்லை!" என பட்டென்று மொழிந்தவளின் குரல் கமறியது.

விரைவாக தன்னை மறைத்து திரும்பி நின்றவளை கூர்ந்து பார்த்தவன், "அப்பொழுது கெஞ்சாதே... உன்னுடைய வேலை என்னவோ அதைமட்டும் பார்த்துக் கொண்டு உன் வழியில் செல்!" என்றான் கரங்களை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு.

"அது...” என்றவள் லேசாக செருமிவிட்டு, “அது என்னால் முடியவில்லை!" எனம்பொழுது அவளின் விழிகள் தன்னால் இயலாமையுடன் தழைந்தது.

முகத்தில் வெளிச்சம் பரவ, "ஏன்?" என்றான் அகில்.

"தெரியவில்லை!" என்றவளின் ஒற்றை சொல்லில் இவன் இதயம் மலர, 'தெரியாமல் இருப்பதும் நல்லதுதான்!' என்று தனக்குள் சிரிப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்.

"சரி டிபன் எடுத்து வை!" என்றதும் பளீரென்று மலர்ந்தவள் வேகமாக அவனிடம் திரும்பி, "நிஜமாகவா?" என்றாள் ஆவலுடன்.

"என்ன? நிஜமாகவாவா... ஏய்... நீ உண்மையிலேயே டிபன் செய்துவிட்டாயா இல்லை இவன் எப்படியும் சண்டையில் டிபன் சாப்பிடாமல் சென்று விடுவான் வேலை மிச்சம்

என விட்டுவிட்டு இங்கே வந்து சும்மா சீன் போடுகிறாயா?" என்றவனை பதிலுக்கு முறைப்பாக பார்த்தாள் ஹிரணி.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை... குழிப்பணியாரம் தயார் செய்து விட்டேன்!"

'பாருடா... எனக்கு பிடித்த டிபனை என் பெண்டாட்டி தன் கையால் இவ்வளவு வேகமாக தயார் செய்திருக்கிறாளே!' என்று வியந்தவன் பறக்கிறேன் பறக்கிறேன் பறவை போலத்தான் என சினிமா பாடலை பாடிக்கொண்டு தன்னை மறந்து விண்ணில் பறந்தான்.

"என்னவாயிற்று?" என்றவளுக்கு அவனுடைய அமைதியை கண்டு குழப்பமாக இருந்தது.

'அவருக்கு பிடித்த உணவு என்பதை தெரிந்துக் கொண்டு தானே செய்தேன்!'

"பணியாரமா... அதற்குள் எப்படி செய்தாய்?"

அது... என்று முதலில் தடுமாறியவள், "அத்தை தான் காலை டிபனுக்கு பணியாரம் செய்யலாம் மாவெல்லாம் தயாராக இருக்கிறது வெங்காயம், மல்லி இலை மட்டும் நறுக்க வேண்டும் என்றார்கள். சரியென்று நான் தான் அவரிடம் செய்முறை விளக்கம் கேட்டு தயார் செய்தேன்!" என்றாள் விளக்கமாக.

மெச்சுதலாக இதழை வளைத்தவன், "பரவாயில்லையே... காலையில் நான் பார்த்த வக்கீல் அம்மாவா இது? பெண்ணடிமைத்தனம் வசனம் பேசி கணவனுக்காக என்று எல்லாம் நான் சமைக்க மாட்டேன் என தன் மாமியாரிடம் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் அவர்கள் சொல்லாமலே தானாக கேட்டு சமைத்திருக்கிறாளே!" என்று அவளிடம் அர்த்தம் பொதிந்த பார்வை ஒன்றை வீசிவிட்டு தோள்களை குலுக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

அகிலின் சொல்லில் பிரமித்து நின்ற ஹிரண்மயி, 'ஆமாம்... நான் ஏன் அவனுக்காக சமைத்தேன்?

அவனுக்கு கோபம் என்றால் எப்படியோ சாப்பிடாமல் போகட்டும் நமக்கென்ன வந்தது என்று என்னால் ஏன் அவனை அப்படி ஒதுக்கி தள்ள முடியவில்லை... இதுதான் குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பார்களா? அதற்காக... அதற்காக தான் சமைத்தேனா... ஆனால்... ஆனால் அவன் கோபித்துக் கொண்டால் ஏன் என் மனம் இப்படி கிடந்து தவிக்கிறது?' என்று புலம்பியவளை மேலே யோசிக்க விடாமல் அகிலன் குரல் கொடுத்தான்.

"ஹிரணி... இன்னும் கீழே இறங்கி வராமல் அறையில் அப்படி என்ன செய்கிறாய் நீ? எனக்கு அலுவலகத்திற்கு நேரமாகிவிட்டது பார். பிறகு சாப்பிடாமல் செல்கிறேன் என்று என்னை எதுவும் குறைச் சொல்லாதே!"

'ஐயோ... ஆமாம் நேரமாகிறதே!'

"இதோ வருகிறேன்!" என்று கணவனுக்கு பதில் குரல் கொடுத்தபடி எல்லாவற்றையும் மறந்து தடதடவென்று படிகளில் இறங்கினாள் ஹிரணி.

14

அகிலன் அனைவரிடமும் விடைப்பெற்று அலுவலகத்திற்கு கிளம்பியவுடன் தன்னருகில் வந்தமர்ந்த ஹிரணியின் கரங்களை ஆசையுடன் பற்றிக்கொண்டாள் ஹர்சிதா.

"அகில் ரொம்ப நல்லவராக தெரிகிறார், நீ மிகவும் கொடுத்து வைத்தவள். உன் மீது பெரும் தவறு இருப்பினும் அதைப்பற்றி சற்றும் கவலை கொள்ளாமல் உன்னிடம் மாசற்ற அன்பு செலுத்துகிறார். நீ உன்னுடைய பழைய வீணான கொள்கைகளை எல்லாம் விட்டுவிட்டு அவரோடு அனுசரித்து சந்தோசமாக குடும்பம் நடத்த வேண்டும். எனக்காக உன் வாழ்வை பணயம் வைத்ததை விட நீ அவருடன் சேர்ந்து வாழ்வதில் தான் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைவேன்!"

"மிகவும் சரியாக சொன்னாய்மா, இதுவரை நடந்தது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். இனி நடக்கப் போவதாவது நம் வீட்டின் மகிழ்ச்சியை மீட்டுத் தரட்டும்!" என்றபடி எதிரே அமர்ந்தார் பவானி.

இருவரிடமும் சற்றே மழுப்பலான புன்னகை புரிந்தவளின் மனதோ, 'இதென்ன இவர்கள் இருவரும் அவனை பற்றி சரியாக தெரியாமல் ஏகத்திற்கும் உயர்த்தி கற்பனை கோட்டை கட்டுகிறார்கள். அவன் மிகவும் சுவாதினமாக மனதிற்கு பிடித்த வேறுப் பெண்ணை தேடும் முயற்சியில் அல்லவா ஈடுபட்டிருக்கிறான். பிறகெப்படி என்னை மனைவியாக ஏற்றுக் கொள்வான்?' என்று கேள்வி எழுப்பியது.

"என்னடா யோசனை?"

"ஒன்றுமில்லைக்கா நாளையிலிருந்து அலுவலகம் செல்லலாமா என்று யோசிக்கிறேன்!"

"அதுவும் சரி தான், ஆனால் அகிலிடம் பேசி விட்டாயா... வேறெதுவும் கமிட்மென்ட் இல்லையென்றால் நீ

அலுவலகம் செல்வதில் எதுவும் பிரச்சினை இருக்காது!" என்று தயக்கத்துடன் கூறினாள் ஹர்சிதா.

"அவரிடம் என்ன பேச வேண்டும்? என்ன கமிட்மென்ட்?" என்றாள் ஹிரண்மயி புரியாமல்.

"இல்லைம்மா... இருவரும் சேர்ந்து வெளியூர் போகும் திட்டம் எதுவும் இருக்கலாம் என்று ஹர்சு சொல்கிறாள்!" என பவானி விளக்க, விவரம் புரிந்து லேசான தடுமாற்றம் தோன்றினாலும் அதை மறைத்து, "அப்படியெல்லாம் எதுவும் இல்லை அத்தை, அவருக்கு வேலை மிகுதியாக இருப்பதாக சொன்னார்!" என்று மறுத்தாள் ஹிரணி.

"நீங்கள் அம்மா?"

"நான்... உனக்கு ஹெல்த் எப்படி இருக்கிறது? ஒரு வாரம் விடுமுறை எடுக்கலாமா என யோசிக்கிறேன். உன் உடல்நலத்தை சற்று தேற்றி விட்டு வங்கிக்கு செல்லலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்!" என்றார் பவானி.

"இல்லைம்மா... நான் நன்றாக தான் இருக்கிறேன், ஒன்றும் தொந்திரவு இல்லை. நீங்கள் இந்த நேரத்தில் விடுமுறை எடுப்பதற்கு பதிலாக எதிர்காலத்தில் பிள்ளை பிறப்பின் பொழுது எடுத்தால் போதும்!"

"ஆமாம் அத்தை அக்கா சொல்வதும் சரி தான், நீங்கள் நாளையிலிருந்து வங்கிக்கு செல்லுங்கள். ஆனால் ஒரு விஷயம் அக்கா... நாங்கள் நிம்மதியாக வெளியே சென்று வேலை பார்க்க உங்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்கு அவசியம் வேண்டும். நேரத்திற்கு உணவருந்தி நன்றாக பழங்கள், காய்கறிகள் சாப்பிட்டு உங்கள் உடலை நன்றாக ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் புரிகிறதா?"

"சரிங்க மேடம்... உன் உத்திரவுப்படியே நடந்துக் கொள்கிறேன்!" என்று போலியாக பணிந்து கேலி செய்தாள் ஹர்சிதா.

பதிலுக்கு முறுவலித்தவளின் அலைபேசி அழைப்பு விடுக்க, "அலுவலகத்தில் இருந்து தான் பொது மேளாலர் அழைக்கிறார். நான் பேசி விட்டு வருகிறேன்!" என்று எழுந்து அறைக்கு சென்றாள் ஹிரண்மயி.

"ஏன்மா அகிலை பற்றி பேசும்பொழுது ஹிரணியின் முகமே சரியில்லையே கவனித்தீர்களா?"

"ம்... அப்பொழுது மட்டுமா? காலையிலிருந்தே கவனித்துக் கொண்டு தானே இருக்கிறேன். அவன் மேல் அவளுக்கு இருக்கும் அபிப்ராயம் மதில் மேல் பூனையாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அவனிடம் முதலில் எதற்காகவோ கோபமாக சண்டையிட்டவள் பின்பு அவன் கோபித்துக் கொள்ளவும் சமாதானப்படுத்த பின்னாலயே தவிப்புடன் அலைந்தாள் பார் அது போதும் நமக்கு. அந்த குணத்தை எப்படியாவது நம் பக்கமாக சாதகமாக மாற்ற அகிலுடன் கலந்தாலோசித்து ஏதாவது திட்டமிட வேண்டும்!" என்று பவானி சிந்தனையில் ஆழ்ந்தார்.

* * *

அன்று இரவு தங்கள் அறையில் அகில் மொபைலில் யாரிடமோ தீவிரமாக பேசிக் கொண்டிருக்க, ஹிரணி தன் கரங்களிலிருந்த கோப்பில் மூழ்கியிருந்தாள்.

"ஆமாம்டா... அண்ணா காணாமல் போய் கிட்டத்தட்ட ஏழு மாதங்கள் ஆகப்போகிறது. முதலில் எனக்கும் இது குறித்த விவரம் எதுவும் தெரியவில்லை, பிறகு தான் அண்ணியின் மூலம் எல்லாம் தெரிய வந்தது!"

"ஓ... அப்படியா சரி, நீ அவருடைய அலைபேசி எண்ணை என்னிடம் கொடு நான் அவரை தொடர்பு கொள்கிறேன். எதற்கும் நான் பேசுவதற்கு முன்னால் என்னை பற்றிய விவரங்களை ஒருமுறை அவரிடம் நீ தெரிவித்து விடேன். ஆமாம்... ஆமாம், அறிமுகப்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும்!"

"நம்பர்... ம்... இதோ ஒரு நிமிடம்!" என்று சுற்றும்முற்றும் பார்த்தவன் வேகமாக ஹிரணியிடம் சென்றான்.

"ஹேய் மயூ... ஒன் செக்!" என்று அவள் கரத்திலிருந்த பேனாவை பிடுங்கியவன், தன் நண்பன் சொன்ன எண்களை உள்ளங்கையில் குறித்துக் கொண்டான்.

"ஓகே ஃபைன்... ரொம்ப தாங்க்ஸ் டா, நாளை காலையில் பேசி விடுகிறேன், ஆங்... ஷ்யூர் பை!" என்று அலைபேசியை அணைத்தான்.

ஹிரணியிடம் திரும்பியவன் அவளை கண்டு முறுவலிக்க, அவளோ அவனை குழப்பத்துடன் நோக்கினாள்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?" என்றவன், "என் நண்பன் தான் பேசினான், அவனுடைய குடும்ப நண்பர் ஒருவர் விமலின் அலுவலகத்தில் தான் வேலை பார்க்கிறாராம். அவரிடம் பேசி ஏதாவது விவரம் கிடைக்கிறதா என்று பார்க்க சொன்னான். ஏற்கனவே காவல்துறையில் புகார் கொடுத்து விட்டோம் இருந்தாலும் நாமும் ஏதாவது நடவடிக்கை எடுத்து முடிந்தவரை விரைவாக விமலை கண்டுப்பிடிக்க வேண்டும் அல்லவா. பாவம்... அண்ணியை நினைத்தால் தான் எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எப்படியாவது அவனை கண்டுபிடித்து அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்!" என்று வருந்தினான்.

கையில் எழுதியிருந்த நம்பரை கைபேசியில் பதிவிட்டவன், "ஓ... உன் பேனாவை மறந்து விட்டேன் பார் இந்தா!" என்று அவளிடம் நீட்டினான்.

ஹிரணியோ அகிலின் பதிலில் தெளிவடையாமல் அவன் சொற்கள் காதில் விழாதவளாக மேலும் சிந்தித்தபடி அமர்ந்திருந்தாள்.

"ஹலோ வொய்ஃபை... என்னவாயிற்று? நான் பேசியது ஏதுவும் உன் காதில் விழுந்ததா இல்லையா இப்படி விழித்துக் கொண்டிருக்கிறாய்!"

"ப்ச்... உங்கள் அண்ணாவை பற்றி நீங்கள் பேசிய கதை எல்லாம் நன்றாகவே என் காதில் விழுந்தது. இதெல்லாம்

தேவையில்லாத வேலை, வேண்டுமென்றே வீட்டை விட்டு ஓடிப்போனவரை எவ்வளவு தூரம் தான் நீங்கள் தேடிக் கண்டுப்பிடிக்கிறீர்கள் என்று நானும் பார்க்கிறேன். நீங்கள் அருகில் வருவது தெரிந்தால் வேறெங்காவது ஓடி ஒளிந்து கொள்வார் அவர். ஹூம்... என்னை பொறுத்தவரை உங்கள் முயற்சியெல்லாம் டோட்டலி வேஸ்ட் தான்!" என்று உதடு பிதுக்கி அலட்சியமாக தோள்களை குலுக்கினாள் அவள்.

உள்ளே சுறுசுறுவென்று கோபம் பொங்க கை முஷ்டிகளை இறுக்கியவன் அவளிடம் மேலே பேச விரும்பாமல் எரிச்சல் கொண்டு திரும்பினான்.

"அதெல்லாம் இருக்கட்டும்... இந்த மயூ யார்?" என்ற குரல் அவன் நடையை தடுக்க இதழில் உல்லாச முறுவல் பூத்தது.

தன்னுடைய அண்ணன் மேல் அறியாமையால் வளர்த்துக் கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக இவனிடம் அவள் முசுடாக நடந்துக் கொண்டாலும் இருவருக்குமிடையே இருக்கும் உறவின் காரணமாக அவ்வப்பொழுது அவள் தடுமாறுவது அவனை உவகை கொள்ளச் செய்தது.

"மயூவா யார் அது?" என்று அவளிடம் வந்து அப்பாவியாய் வினவினான் அகில்.

"நீங்கள் தானே என்னிடம் பேனாவை வாங்கும் பொழுது மயூ என்று ஏதோ ஒரு பெயர் சொன்னீர்கள்..." என்று தயக்கத்துடன் இழுத்தாள் ஹிரணி.

ஷ்... என்று ஒற்றை விழி மூடி நாக்கை கடித்தவன், "அப்படியா சொன்னேன்!" என்று அசடு வழிந்தான்.

'இவன் எதற்கு இப்படி சிரிக்கிறான்?'

அது... என்று மெல்ல இழுத்தவன், "சரி... அதை உன்னிடம் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை, மேலும் மறைக்க தேவையுமில்லை!" என்ற முஸ்தீபுடன் எதிரே அமர்ந்தான்.

அவளின் குழம்பிய முகத்தை காதலுடன் ரசித்தவன், "கடந்த ஒரு மாதமாக நான் தேடிக் கொண்டிருந்த பெண் அவள் தானா என்று அவளை கண்ட நாள் முதலாக என் மனது கொஞ்சம் அலைபாய்கிறது!" என சிறு வெட்கப் புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

கணவனை சின்ன திகைப்புடன் பார்த்தவள், அவனுடைய வெட்கம் கண்டு மனதில் குமைந்தாள்.

'இவன் அண்ணனை தேடுகிறானா அல்லது அதற்குள் தனக்கான துணையை தேடுகிறானா?'

"நமக்கு திருமணமாகியும் ஒரு மாதம் தான் ஆகிறது என்று நினைக்கிறேன்!" என்றாள் ஹிரணி குத்தலாக.

"எஸ்... கரெக்டாக ஒரு மாதம் இரண்டு நாட்கள். எனக்கான துணைவியை கண்டுப்பிடிக்கும் வரை நீ என்னுடன் தான் இருந்தாக வேண்டும் என்று உன்னிடம் கண்டிஷன் போட்டேன் இல்லையா... அன்றிலிருந்து மனதே சரியில்லை விருப்பமில்லாத பெண்ணை எத்தனை நாட்களுக்கு தான் கட்டாயப்படுத்தி உடன் தங்க வைப்பது என்று ஒரே கவலையாக இருந்தது!" என சோகமாக கூறினான் அகில்.

'இருக்கும்... இருக்கும்!' என உள்ளுக்குள் பழித்தாள் அவள்.

"அதற்கு அடுத்த இரண்டாவது நாள் கார்ப்ரேட்டில் நடந்த மீட்டிங் ஒன்றிற்காக சென்றிருந்தப் பொழுது தான் நான் மயூவை சந்தித்தேன். ஷீ ஈஸ் சோ சாஃப்ட் அன்ட் சார்மிங், பார்த்தவுடனே ரொம்பவும் இம்ப்ரெஸ் ஆகி விட்டேன்!" என்றவனின் விழிகள் கனவில் மிதக்க ஹிரணியின் உள்ளம் ஏமாற்றத்தில் சுருங்கியது.

தொண்டையில் அடைத்ததை விழுங்கியவள், "நீங்கள் எனக்காகவென்று அவசரப்பட்டு ஏதாவது தவறான பெண்ணை தேர்ந்தெடுத்து விடாதீர்கள்!" என்றாள் உள்ளே போன குரலில்.

"நோ... நோ... அவசரப்படவில்லை, இன்னமும் என் காதலை கூட அவளிடம் நான் சொல்லவில்லை. முதலில்

அவளை பற்றி நான் தெளிவாக புரிந்துக் கொண்டு அவள் மனதில் என்னை பற்றிய நல்ல அபிப்பிராயத்தை வளர்க்க வேண்டும். அப்புறம் தான் அடுத்த அடியாக என் காதலை பற்றிப் பேச வேண்டும்!"

விழிகளில் வெறுப்பு பரவ, "இப்படி தான் திட்டம் போட்டு மறுக்க தோன்றாதபடி பெண்களை உங்கள் வலைகளில் விழ வைப்பீர்கள் இல்லை?" என்று கோபமாக கேட்டாள் நாயகி.

'அடிப்பாவி... உன் புத்தியில் நல்ல சிந்தனையே தோன்றாதா? என்னை ரோட் சைட் ரோமியோ லெவலுக்கு டெவலப் செய்கிறாயே?'

"அதென்ன பெண்களை என்று பன்மையில் சொல்கிறாய்... என் வாழ்க்கையில் வரும் முதலும் கடைசியுமான ஒரே பெண்ணம்மா அவள்!"

"ப்ச்... ஒன்றோ மேற்பட்டதோ திட்டம் போட்டு தானே காய்களை நகர்த்துகிறீர்கள்!" என்றாள் இகழ்ச்சியாக.

"திட்டம் போடுவதை பற்றியெல்லாம் நீ பேசாதேம்மா... நீ வந்த வழியை கொஞ்சம் திரும்பி பார்!" என்றான் நக்கலாக.

முகத்தில் சிவப்பேற, "நான் ஒன்றும் யாரையும் ஏமாற்றவில்லை!" என்றாள் ஹிரண்மயி வேகமாக.

"நானும் அவளை ஏமாற்ற நினைக்கவில்லை, வாழும் காலம் முழுக்க அவளோடு ஈருடல் ஓருயிராக வாழ வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறேன்!" என காதல் வசனம் பேசினான் அகில்.

அதைக்கேட்க பொறுக்காதவள் விறுவிறுவென எழுந்து அறையை விட்டு வெளியேறினாள்.

15

ஹிரண்மயி விசுக்கென்று எழுந்து அறையை விட்டு வெளியேறவும் அவளின் அவசரப்புத்தியை எண்ணி இடவலமாய் புன்னகையுடன் தலையசைத்தான் அகிலன்.

தன் அண்ணனை பற்றி தவறாக கணித்தது, தங்களை குறித்த விவரம் சரியாக தெரியாமல் அவசரப்பட்டு தன்னை திருமணம் செய்துக் கொண்டது, இப்பொழுது முட்டாள்தனமாக தன் மனதில் வேறொரு பெண் இருப்பதாக சந்தேகம் கொண்டு கோபித்துக் கொள்வது என அனைத்திலுமே இப்படி சிறுபிள்ளைத்தனமாக நடந்துக் கொள்கிறாளே... இவளையெல்லாம் என்ன செய்வது? நிச்சயம் புத்தி சொல்லி திருத்த முடியாத கேஸ் இவள், தானாக அனுபவபட்டு திருந்தினால் தான் நம் வழிக்கு வருவாள். அதுவரை நாமும் இந்த காதல் விளையாட்டை வைத்து அவள் கோப அனலில் சிறிது காலத்திற்கு குளிர் காய்வோம் என்றெண்ணி கள்ளச்சிரிப்புடன் படுக்கைக்கு சென்றான்.

மாடியில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து தன்னுடைய மன குமுறலை குறைக்க முயன்றுக் கொண்டிருந்தாள் ஹிரணி.

'ச்சே... இறுதியில் இவனும் தன் ஆண் புத்தியை காண்பித்து விட்டான். நான் வேண்டாமென்று மறுத்த மறுதினமே தன் மனதை அலையவிட்டு மற்றொரு பெண்ணை தேடிப்பிடித்து விட்டானே. இதே ஒரு பெண்ணாக இருந்திருந்தால் இப்படி எல்லாம் செய்திருப்பாளா? இதில் என்னிடமே அவளை பற்றி உயர்த்தி பேசி காதல் வசனம் வேறு பேசுகிறான். எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்? அதெப்படி அவ்வளவு சுலபமாக என்னை விடுத்து மற்றொரு பெண்ணை தோர்ந்தெடுத்திருப்பான் அவன்? மனதில் கொஞ்சம் கூட சஞ்சலம் இல்லாமல் பல்லைக் காட்டியபடி பேசுகிறானே... அவனை எல்லாம் சும்மா விடக்கூடாது, ஏதாவது செய்ய வேண்டும்!' என்று பொருமினாள்.

நாம் தான் அதற்கு வழி வகுத்தோம் என்பதை புரிந்துக் கொள்ளாமல் தவறு முழுவதும் அவனுடையது தான் என்று தீர்ப்பு வழங்கி அகிலை தண்டிக்க வழி தேடினாள் ஹிரணி.

ஒரு மணி நேரமாக நடந்ததில் உடல் அயர்வுக் கொள்ள கீழே இறங்கி அறைக்கு வந்தவள் உறங்கும் அவனை சில நிமிடங்களுக்கு முறைத்தபடி நின்றாள்.

அவள் தனக்கு வசதியாக செய்கின்ற காரியங்கள் அனைத்தும் உண்மையில் ஆராய்ந்து பார்த்தால் அவனுக்கு வசதியாக அமைவது போன்று அவளுக்குள் ஒரு பிரமை தோன்றியது.

திருமணம் முடிந்த அன்று இரவு கூட நான் கீழே தரையில் படுக்கிறேன் என்றதற்கு இவன் மறுப்பேச்சு பேசவில்லை. அதேபோல் தான் அவனுடன் வாழ்வதற்கு இவளுக்கு விருப்பமில்லை என்றதற்கும் எந்த எதிர்ப்பு தெரிவிக்காமல் சரியென்று ஒத்துக் கொண்டு இன்று கூலாக தனக்கு வேறு பெண்ணை தேடிக்கொண்டு விட்டான்.

'நான் உன்னுடன் வாழ முடியாது தான், அதற்காக தாலி கட்டிய என்னை அவ்வளவு சுலபமாக கழட்டி விட்டு விட்டு மனதில் என்னை பற்றிய சிறு உறுத்தலோ நினைவோ இல்லாமல் வேறொரு பெண்ணுடன் வாழ்ந்து விடுவாயா நீ... விடமாட்டேன். அப்புறம் என்ன சொன்னாய்? உன் வாழ்வில் முதலும் கடைசியுமான பெண் அவளா... ஹ்ஹ... உன்னோடு வாழவில்லை என்றாலும் உன் வாழ்வில் வந்த முதல் பெண்ணாக நான் தான் இருப்பேன். அந்த நினைவை உன் மனதில் பதிய வைக்காமல் நான் இங்கிருந்து போக மாட்டேன்!' என்று தனக்குள் அவனிடம் சவால் விட்டவளாக அருகில் வந்தவள் சற்று தயங்கி நின்றாள்.

'நோ... நீ உன்னை நினைத்து தயங்குவது கடைசியில் அவனுக்கு சாதகமாக அமைந்துவிடும். இவன் உன்னுடைய கணவன் தானே... எதற்கும் தயங்காமல்

இங்கிருக்கும் வரை உன் உரிமையை நிலைநாட்டு. இல்லையென்றால் எதிர்காலத்தில் நீ இவன் எதிரில் வந்தால் கூட உன்னை இவனுக்கு அடையாளம் தெரியாமல் போய்விடும்!' என்று வழக்கம் போல் தவறான வழியில் தன்னுடைய கற்பனை குதிரையை தட்டி விட்டவள் தான் நினைத்ததை செய்தாள்.

அலைபேசியின் ஒலியில் உறக்கம் கலைந்து புரண்ட அகில் கண்களை திறவாமல் சலிப்புடன் அதை ஸ்வைப் செய்து காதில் வைத்தான்.

"ஹலோவ்வ்..." என்று ஒரு கொட்டாவியை விட்டவாறே எதிர்முனைக்கு செவி சாய்த்தவன் ஏகத்திற்கு கடுப்பானான்.

"டேய்... இப்பொழுது நேரம் என்ன தெரியுமா? உனக்கு மாலை நேரமென்றால் என்னை ஏன்டா இப்படி நள்ளிரவில் அழைத்து தூக்கத்தை கெடுக்கிறாய்? என்னது? வேண்டாம் வாயில் நல்லா வந்திடும் சொல்லிட்டேன். வேலையில் சந்தேகம் வந்தால் கேட்கின்ற நேரத்தை பார். நோ... நோ... கண்டிப்பாக சொல்ல மாட்டேன். ஒன்று செய்... சரியாக மதியம் ஒரு மணிக்கு எனக்கு கால் பண்ணு, அப்பொழுது உன் சந்தேகத்தை தீர்த்து வைக்கிறேன் நான். என்னது நடுராத்திரி ஆகிவிடுமா? ஹஹா... எனக்கு அது தானே வேண்டும். பை!" என்று தன் நண்பனிடமிருந்து பிறந்த பல புலம்பல்களை கேட்டுக்கொண்டே புன்சிரிப்புடன் போனை அணைத்து அருகில் வைத்தான் அகிலன்.

திரும்பி படுத்தவனின் விழிகளில் சின்ன திகைப்பு பரவ அவசரமாக கீழே எட்டிப் பார்த்தான்.

வேகமாக பக்கென்று வெடித்த சிரிப்பை இருகைகளாலும் வாயை மூடி அடக்கியவன், "அட களவாணி பிள்ளை... கதை இப்படி போகிறதா? இது கூட நன்றாக இருக்கிறதே... அங்கே சுற்றி இங்கே சுற்றி போகும் வழி தெரியாமல் என்னுடைய வழிக்கே வந்து விட்டாயா? ச்சோ... ஸ்வீட். ஓகே... மயூவை வைத்தே

இவளை ஒரு வழியாக்கி விட வேண்டியது தான். ஏன் பேபி... பக்கத்தில் வந்து படுத்து தூங்கிய வரை எல்லாம் சரி, ஆனால் முகத்தை கூட என்னிடம் காண்பிக்காமல் இப்படி தலைவரை இழுத்து போர்த்திக் கொண்டால் அப்புறம் எப்படி அத்தான் உன்னை சைட் அடிப்பது? ம்...' என்று மெதுவாக ஹிரணி போர்த்தியிருந்த போர்வையை உருவப் போனவன் கடைசி நொடியில் கையை இழுத்துக் கொண்டான்.

'இல்லை இல்லை... இவளை கண்டுக்கொள்ளாமல் வேறு பெண்ணை நேசிக்கிறேன் என்ற கோபத்தில் தான் இவள் என்னை நெருங்குகிறாள். உண்மை தெரிந்தால் மீண்டும் ஆணாதிக்கம், ஏமாற்று வேலை, அடிபணிய மாட்டேன் அது இது என எதையாவது உளறிக் கொண்டு பழையபடி விலகி செல்வாள். அதற்கு இடம் கொடுக்க கூடாது, தொடர்ந்து நாம் ஒதுங்கி இருப்பது போலவே பில்டப் செய்வோம். ஹும்... இந்த நாடகம் இன்னும் எத்தனை நாட்களுக்கோ!' என பெருமூச்சொன்றை விட்டவாறே தள்ளிப்படுத்தான் அகில்.

காலை ஆறு மணிக்கு எல்லாம் வழக்கம் போல் உறக்கம் கலைந்தும் அவள் நடவடிக்கையை காண ஆவல் கொண்டு எழாமல் படுத்திருந்தான் அவன்.

அவள் மட்டும் சலைத்தவளா என்ன? விழித்தெழுந்தவள் மெல்ல உணர்வுக்கு வந்து அகிலை திரும்பி பார்த்தாள்.

அவன் அயர்ந்து உறங்குவதை கண்டு சலித்தவள், 'ஐயோ... இவன் இன்னும் எழவே இல்லையா? எழுந்துப் பார்த்தால் தானே இரவில் நான் இவனருகில் படுத்துறங்கியது இவனுக்கு தெரியும்!' என்று விரல் நகம் கடித்தாள்.

ஹிரணி அசையாது படுத்திருப்பது அகிலுக்கு குழப்பத்தை உண்டு பண்ணியது. இப்படியே இருவரது குழப்பத்திலும், யோசனையிலும் நிமிடங்கள் கரைந்து அரைமணியை கடக்க அவ்வளவு நேரமாக அசையாமல்

படுத்திருப்பது வேறு அவஸ்தையாக இருந்தது அவர்களுக்கு.

இறுதியில் அகிலின் பொறுமை காற்றில் பறக்க முதல் ஆளாக அவன் எழுந்தமர்ந்தான்.

அதோடு, "இதென்ன இவள் இங்கே படுத்திருக்கிறாள்?" என்றவன் வியப்புடன் உரக்க யோசிக்கவும் ஹிரணியின் உள்ளம் குத்தாட்டம் போட்டது.

அவள் முகத்தில் உதித்த மலர்ச்சியை கண்டு ஓசையின்றி தலையில் அடித்துக் கொண்டவன் கட்டிலை விட்டிறங்கி வாஷ்ரூம் சென்றான்.

கதவை சாத்தும் ஓசைக் கேட்டு விழிகளை திறந்தவள், 'இப்பொழுது அவனுக்கு எப்படி இருக்கும்? ஐயையோ... இவள் எதற்கு இங்கே வந்துப் படுத்தாள் என நிச்சயம் புலம்பிக் கொண்டிருப்பான்!' என்றெண்ணி உவகை கொண்டு தானும் எழுந்தாள்.

மாறாக கதவைத் திறந்து வெளியே வந்தவன் புன்னகை முகமாக, "குட்மார்னிங்!" என்று சுவாதினமாக அவளுக்கு காலை வணக்கம் தெரிவித்தான்.

அதில் விழித்தவள் சுதாரித்து, "குட்மார்னிங்!" என்றாள் வேகமாக.

"கீழே தரையில் படுப்பதற்கு கஷ்டமாக இருக்கிறதா என்ன? நேற்று மெத்தையில் படுத்திருந்தாய். இப்படியெல்லாம் சிரமப்படாதே நம் மேல் நாம் முதலில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று நானே உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நீ கேட்பாயோ மாட்டாயோ என சந்தேகம் கொண்டு தான் சொல்லவில்லை!" என்று தோள்களை குலுக்கினான்.

அகிலின் சொல்லில் மலைத்தவளுக்கு அடுத்து என்ன பேச வேண்டும், எப்படி ரியாக்ட் பண்ண வேண்டும் என்று ஒன்றுமே தோன்றாமல் மூளை மரத்துப் போய்விட்டது.

இருக்காதா பின்னே... இவள் நினைத்தது ஒன்று நடந்ததென்னவோ வேறொன்று.

'மனதில் வேறு பெண்ணை நினைத்திருப்பவன் அருகில் தான் உறங்கியதை எண்ணி கவலைக்கொள்வான் என்று பார்த்தால்... அவனோ நானே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன் என்கிறானே... இப்பொழுது என்ன செய்வது? ஒதுங்கினாலும் ஏற்றுக் கொள்கிறான், நெருங்கினாலும் ஏற்றுக் கொள்கிறான். இவனை என்ன கணக்கில் கொண்டு வந்து அடுத்து நான் திட்டமிடுவது?' என்று விசனம் கொண்டாள் ஹிரண்மயி.

"ஓய்... என்ன? இன்னும் தூக்கம் தெளியவில்லையா... நின்றுக் கொண்டே தூங்குகிறாய்!" என்று கேட்டவன் ட்ராக் சூட்டில் இருந்தான்.

"இல்லை... வேறு யோசனையில் இருந்தேன்!"

"ஓ... சரி, நான் ஜாகிங் போய் வருகிறேன் பை!" என்று வெளியேறிவனை சோர்வுடன் பார்த்தவள் தொப்பென்று அருகிலுள்ள சேரில் விழுந்தாள்.

* * *

"அகில்... உங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமே!" என்று தயக்கத்துடன் அருகில் வந்தாள் ஹர்சிதா.

விமலை பற்றி ஏதாவது கேட்கப் போகிறாளோ என்கிற பதற்றம் லேசாக தொற்றிக் கொள்ள அதை மறைத்து, "சொல்லுங்கள் அண்ணி!" என்றான் நாயகன் வெளியே சாதாரணமாக.

அன்று அலுவலகம் முடிந்து நேரமாக வீடு திரும்பியவன் டிவியில் ஸ்போர்ட்ஸ் சேனல் ஒன்றில் மூழ்கி இருந்தான்.

"இல்லை... உங்களுக்கு நடந்த திருமணம் எனக்காக ஹிரணியால் தவறாக திட்டமிடப்பட்டு உங்களை ஏமாற்றி செய்யப்பட்டது. ஆனால் அவள் மிகவும் நல்லப்பெண், என் மேல் உள்ள பாசத்தில் தான்..." என தடுமாறி நிறுத்தினாள்.

அண்ணியின் பேச்சில் முகம் இளகியவன் அவளை பார்த்து புன்னகைத்தவாறே, "முதலில் உட்காருங்கள்... என்ன திடீரென்று தங்கைக்கு சர்டிபிகேட் எல்லாம் கொடுக்க ஆரம்பித்து விட்டீர்கள்?" என்று கேலியாக வினவினான்.

"அது... ஏற்கனவே பேச வேண்டும் என்று நினைத்தது தான். ஆனால் ஹிரணி உடன் இருப்பதால் முடியாமல் போயிற்று. இன்று அவள் இன்னும் வீடு திரும்பாமல் நீங்கள் தனியாக இருக்கவும் பேசுகிறேன்!"

"ஹஹா... சரி சொல்லுங்கள்!"

"அவள் எந்தளவிற்கு துணிச்சலாக நடந்துக்கொள்கிறாளோ, அந்தளவுக்கு எதையும் சரியான கோணத்தில் சிந்திக்காமல் அவ்வப்பொழுது கொஞ்சம் சிறுபிள்ளைத்தனமாகவும் நடந்துக் கொள்வாள். அதேபோல் கொஞ்சம் பிடிவாதமும் அதிகம்..." என மென்று விழுங்கினாள் ஹர்சு.

"ஆங் அண்ணி... கொஞ்சம் என்று பூசி மெழுகாதீர்கள், உங்கள் தங்கைக்கு அது ரொம்பவே ஜாஸ்தி!"

கொழுந்தனிடம் முறுவலித்தவள், "சரி ஒப்புக்கொள்கிறேன், அவளுக்கு பிடிவாதம் ரொம்பவே அதிகம் தான்!" என்றாள் பெண்.

"ம்... இது பெர்பெக்ட். இப்பொழுது நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? அவள் மீது நான் கோபமாக இருக்கிறேன் என்று எதுவும் நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?"

"ஐயோ... அப்படியில்லை... நீங்கள் அவளை எப்பொழுதும் எங்கேயும் விட்டுக் கொடுத்ததில்லை. ஆனால் அவளை உளமாற உங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்வீர்களா?" என்றாள் கவலையுடன்.

"அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம் அண்ணி, ஹிரண்மயி என்னை எப்படி வேண்டுமென்றாலும் ஏமாற்றி வந்திருக்கட்டும். ஆனால் என்று அவள் புகைப்படத்தை பார்த்து பிடித்துப் போய் இவள் தான் என்

மனைவி என நானாக மனமார தேர்ந்தெடுத்தேனோ அந்த நொடியில் இருந்து இப்பொழுது வரை ஒன்றில் நான் உறுதியாக இருக்கிறேன். எங்களுக்குள் எப்பொழுதும் பிரிவென்ற பேச்சிற்கே இடமில்லை, என்னை விட்டுப் பிரிந்து செல்ல என்றும் அவளை நான் அனுமதிக்கவே மாட்டேன்!" என்று ஆணித்தரமாக கூறினான் அகில்.

16

அகிலின் கூற்றில் நிம்மதியடைந்த ஹர்சிதா, "ரொம்ப சந்தோசம்... உங்களுக்கு ஹிரணியை பிடித்திருக்கிறதா இல்லையா என ஒரு சின்ன உறுத்தல் மனதின் ஓரம் இருந்துக் கொண்டேயிருந்தது, இப்பொழுது தான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது!" என்று முறுவலித்தாள்.

"அதென்ன அதற்குள் நிம்மதியடைந்து விட்டீர்கள்? எனக்கு பிடித்தால் போதுமா... உங்கள் வீம்புக்கார தங்கைக்கு பிடிக்க வேண்டாமா?" என்றான் அகில் புன்சிரிப்புடன்.

"ப்ச்... அவளை பற்றிய கவலையும் இருக்கிறது தான். இந்த திருமணம் பிடிக்கவில்லை அக்காவிற்காக தான் செய்தேன் என்று உங்களிடம் கண்டிப்பாக ஏதாவது உளறிக் கொட்டி இருப்பாளே!" என்றாள் லேசான வருத்தத்துடன்.

"நூறு சதவீதம் சரி!" என்று அவன் பாராட்ட, "ஆனால் இங்கு அம்மாவோடும், உங்களோடும் பழகும் பொழுது அவளின் எண்ணெங்கள் நிச்சயம் மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!" என்றாள் அவனிடம் இவள் யோசனையோடு.

"ம்... மாறும் இல்லை அண்ணி, ஆல்ரெடி மாறத் துவங்கி விட்டது. எங்களுக்கு திருமணமான புதிதில் அவளிடம் இருந்த வீம்பு ரொம்பவே குறைந்து விட்டது, இப்பொழுது அவள் மிகவும் குழப்பத்தில் இருக்கிறாள். என்ன தான் ஆண்களையும், குடும்ப அமைப்பையும் வெறுத்து ஒதுங்கி வாழ வேண்டும் என்று ஹிரண்மயி நினைத்தாலும், பிறந்ததிலிருந்தே ஆசிரமத்தில் தனிமையில் வளர்ந்த அவளுடைய ஆழ் மனது பந்தப் பாசத்திற்காக ஏங்குகிறது. இதுவரை அவளுக்கே தெரியாமல் அடிமனதில் உறங்கி கொண்டிருந்த அந்த உணர்வு நம் வீட்டில் எங்களுடன் பழகப் பழக நன்றாக

மேலெழும்பி வருகிறது. அதனுடைய வெளிப்பாடு, இதை மனதோடு வைத்துக் கொள்ளுங்கள் அவளிடம் கேட்டு விடாதீர்கள். உண்மையில் உங்களை எங்கள் குடும்பத்துடன் இணைத்து வைத்து விட்டு, அவள் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட வேண்டும் என்று தான் திட்டமிட்டிருந்தாள். அதை என்னிடம் சொல்லவும் வேறு செய்தாள். அவள் ஏதோ திட்டமிட்டு தான் என்னை ஏமாற்றி திருமணம் செய்திருக்கிறாள் என்பது ஆரம்பத்தில் எனக்கும் கஷ்டமாக தான் இருந்தது. ஆனால் அதற்கான காரணமாக ஹிரணி உங்களை முன் நிறுத்தியதும் எனக்கு ஒரே சந்தோஷம். எப்படியாவது அவளை வெளியேற விடாமல் இங்கேயே தொடர்ந்து தங்க வைக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஏதேதோ பேசி அவளை ஒருவழியாக சம்மதிக்க வைத்தேன். ஆனால் அவளின் கவனத்தை எப்படி என் பக்கம் திரும்ப வைப்பது என்பது தான் எனக்கு பெரிய சவாலாக இருந்தது. கடைசியில் அதற்கும் உங்கள் தங்கையே அழகாக வழி வகுத்துக் கொடுத்து விட்டாள். திருமணமான புதிதில் இருவருக்கும் இடையே கருத்து மோதல் அதிகமாகி நான் வேறு பெண்ணை திருமணம் செய்யும் வரை அவள் இங்கேயே இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டேன்!"

"ஐயோ... என்ன நீங்கள் இப்படி செய்து விட்டீர்கள்? கட்டிய மனைவியாக அவள் உடன் இருக்கும் பொழுது இன்னொரு பெண்ணை திருமணம் செய்யப் பார்க்கிறீர்களே என்று அவளுக்கு நிச்சயமாக உங்கள் மேல் கோபம் வந்திருக்கும்!"

"தெரியும்... அதற்காக நீயே தொடர்ந்து என் மனைவியாக இரும்மா என்று சொல்லியிருந்தால் மட்டும் அவள் ஏற்றுக் கொண்டிருப்பாள் என்கிறீர்களா?"

"ம்ஹூம்... அதுவும் மாட்டாள் தான்!"

"ம்... அதனால் தான் அப்படி சொன்னேன், சொல்லும் பொழுதே அவள் முகத்தில் பலத்த ஏமாற்றம் தெரிந்து எனக்கு பெரிய நம்பிக்கையை கொடுத்தது. அதேபோல்

ஒருநாள் பேச்சுவாக்கில் அவளுடைய பெயரையே சுருக்கி மயூ என்று அழைக்கவும், எனக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு அவள் பெயரை சொல்லி தான் இவளை அழைக்கிறேன் என்று மேடம் மிகவும் பொரும ஆரம்பித்து விட்டாள். அதன் வெளிப்பாடாக என்னை டென்சனாக்க என்று நெருங்க ஆரம்பித்தவளை மேலும் நன்றாக குழப்பி விட்டு விட்டேன். இப்பொழுது ஹிரணி என்னை என்ன செய்வது என ஒன்றும் புரியாமல் ரொம்பவும் தலைசுற்றிப் போயிருக்கிறாள்!" என்று பலமாக சிரித்தான் அகில்.

"அச்சோ... பாவம் அவள்!" என்கிற பரிதாப வார்த்தைக்கு மாறாக ஹர்சுவின் இதழ்கள் மெல்லிய புன்னகையை வெளிப்படுத்தியது.

"பாவமா? அவளுக்கெல்லாம் பாவம் பார்த்தால் கடைசியில் நான் தான் பாவமாக நிற்க வேண்டும். அவள் சுலபமாக மூட்டை முடிச்சை கட்டிக் கொண்டு கிளம்பிவிடுவாள்!"

அவர்களின் வாழ்வில் பிரச்சினை இருக்காது என்ற உறுதி தோன்றவும் அடுத்து தன்னவனை பற்றிய தவிப்பு மேலெழும்பியது ஹர்சிதாவிற்கு. ஆனால் அதை அகிலிடம் கேட்கவும் அவளுக்கு சங்கடமாக இருந்தது. ஏனென்றால் ஹிரணியை பற்றி இவள் பேச வரும்பொழுதே அவன் அண்ணனை குறித்து தான் ஏதாவது கேட்கப் போகிறாளோ என்கிற பதற்றம் அகிலின் முகத்தில் தோன்றியதை அவள் கவனித்திருந்தாள்.

"என்ன அண்ணி?"

"ஒன்றுமில்லை... கொஞ்சம் டயர்டாக இருக்கிறது, நான் அறைக்கு செல்கிறேன்!" என்று சோர்வுடன் தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு எழ முயன்றவளை நிறுத்தினான் அவன்.

"அண்ணி... ஒரு நிமிடம், நீங்கள் கேட்கவில்லை என்றாலும் நான் சொல்கிறேன். விமலை பற்றி தினமும்

விசாரித்துக் கொண்டு தானிருக்கிறேன். கூடிய விரைவில் அவனை கண்டுப்பிடித்து விடுவோம் என்ற நம்பிக்கையில் தான் ஒவ்வொன்றையும் செய்துக் கொண்டிருக்கிறேன்!" என்றான் அகிலன் அவளிடம் கனிவுடன்.

மளமளவென்று விழிகளில் கண்ணீர் முத்துச்சரம் தொடுக்க, குரல் வெளிவராமல் ஆமோதிப்பாக தலையசைத்தவளை வருத்தத்துடன் பார்த்தவன் அவள் கரத்தை ஆதரவாக பற்றிக்கொண்டான்.

"அண்ணி... இங்கே பாருங்கள், நான் விமலுக்கு மட்டும் தம்பியில்லை உங்களுக்கும் தான். இனி நீங்கள் என்னை எப்பொழுதும் தம்பி என்று தான் அழைக்க வேண்டும். அந்த வார்த்தையின் மீதும், உறவின் மீதும் நம்பிக்கை வையுங்கள். உங்கள் பிள்ளை இந்த பூமியில் பிறக்கும் பொழுது அதை வரவேற்க உங்களருகில் அவன் நிச்சயமாக இருப்பான்!" என்றான் உறுதியாக.

"நானும் அந்த நம்பிக்கையில் தான் உயிர் வாழ்கிறேன்!" என்றாள் ஹர்சு தழுதழுத்த குரலில் விழிநீரை துடைத்தபடி.

"குட்... அந்த பாசிடிவ் ஆட்டியூடை மட்டும் என்றும் விட்டு விடாதீர்கள் கெட்டியாக பற்றிக் கொள்ளுங்கள். நாம் விமலை சந்திக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை நெருங்கி கொண்டிருக்கிறோம் என்பதை எப்பொழுதும் மந்திரமாக ஜெபித்து இருங்கள்!"

அன்று இரவு உணவு முடிந்து அறைக்கு போன மகன் அடுத்த பத்தாவது நிமிடத்தில் தடதடவென்று கீழே இறங்கி வரவும் குழம்பிப் போன பவானி சமையலறையிலிருந்து வெளியே வந்து அவனை பின் தொடர்ந்து சென்று எட்டிப் பார்த்தார்.

'என்ன பிரச்சினை? ஏன் இவ்வளவு அவசரமாக வெளியே செல்கிறான்?'

அவன் செயலை கண்டு திகைத்தவர், "டேய்... என்னடா செய்கிறாய்?" என்று கிட்டதட்ட கூவினார்.

ஹிரண்மயினுடைய ஸ்கூட்டியின் முன் சக்கரத்தை கூரிய ஆணி ஒன்றால் குத்தி பஞ்சராக்கி கொண்டிருந்தவன் அவரின் கேள்வியில் பதறியடித்து எழுந்தான்.

"உஃப்... அம்மா பயந்து விட்டேன். நீங்கள் தானா? ஏன்மா இப்படி திடுதிப்பென்று பின்னால் வந்து நின்று கேள்வி கேட்டு என்னை மிரள வைக்கிறீர்கள். நான் கூட உங்கள் மருமகள் தான் வந்து விட்டாளோ என்று ஒரு நிமிடம் ஆடிப்போய் விட்டேன்!" என தன்னுடைய நெஞ்சை மெல்ல நீவி ஆசுவாசப்படுத்தினான் அகில்.

அவனுடைய பதற்றம் கண்டு நன்றாக வாய் விட்டு சிரித்த அன்னையோ, "ஹஹாஹா... பெண்டாட்டியிடம் அவ்வளவு பயமாடா உனக்கு?" என்று கேலி செய்தார்.

"ம்... நீங்கள் ஏன் சிரிக்க மாட்டீர்கள்? தேடிப்பிடித்து கட்டி வைத்தீர்கள் இல்லை..." என்று போலியாக முறைத்தான்.

"ஹிஹி... சரி சரி விடுடா, நான் கண்டுப்பிடிக்கவில்லை என்றால் மட்டும்... இந்த வீட்டிற்குள் நுழைய அவளுக்கு இருந்த ஒரே பகடைக்காய் நீதான். எப்படியாவது உன்னை காதலித்தாவது அவள் வலையில் வீழ்த்தியிருப்பாள்!"

"ஏது? ம்க்கும்... உங்கள் மருமகள் மேல் அந்த நம்பிக்கை வேறு இருக்கிறதா உங்களுக்கு? சுட்டுப்போட்டாலும் அவளுக்கெல்லாம் காதல் என்கிற வார்த்தைக்கு கூட ஒரு அர்த்தமும் புரிய வைக்க முடியாது. இதில் என்னை வேறு வலையில் வீழ்த்துவாளாம்!" என்று எரிச்சலோடு உதட்டை சுழித்துக் கொண்டான் மகன்.

"சரி அதைவிடு... அவள் வண்டியை எதற்கு இப்பொழுது பஞ்சராக்கி கொண்டிருக்கிறாய் நீ?"

"ஏன்மா சினிமாவே பார்த்ததில்லையா நீங்கள்... இது ஒரு கேள்வி என்று கேட்டு இதற்கு என்னிடம் பதிலை வேறு

எதிர்பார்க்கிறீர்கள்?" என்று அலுத்துக் கொண்டான் அகில்.

"டேய்... உன் பில்டப்பை விட்டு விட்டு முதலில் பதிலை சொல்டா. தெரியவில்லை என்று தானே கேட்கிறேன்!"

"அது... ஹீரோயின் வண்டியை பஞ்சராக்கி விட்டால் அவள் வேறு வழியில்லாமல் ஹீரோவின் வண்டியில் தானே ஏறி ஆக வேண்டும்!" என்று டீசர்ட் காலரை தூக்கி விட்டான்.

"ஏன்? உன்னுடைய ஹீரோயின் ஆட்டோவிலோ, கால் டாக்சியிலோ போக மாட்டாளா? அவளிடம் அதற்கெல்லாம் காசு இருக்காதா?" என்றார் பவானி நக்கலாக.

"உங்கள் யோசனையில் தீயை வைக்க, நீங்களே அவளுக்கு தெளிவாக சொல்லி கொடுப்பீர்கள் போலிருக்கிறது!" என்று முறைத்தவன், "நாளை மேடமிற்கு வேறவழியே இல்லை நிச்சயம் என் வண்டியில் தான் வருவாள்!" என்றான்.

அவனை வியப்புடன் பார்த்தவர், "அதெப்படிடா அவ்வளவு உறுதியாக சொல்கிறாய்?" என்றார் ஆர்வமாக.

"ம்... உங்கள் மகனை சாதாரணமாக எண்ணி விட்டீர்களா? என் பெண்டாட்டிக்கு நாளை காலை கம்பெனியில் ஒரு தொழிலாளியின் வழக்கு தொடர்பாக எம்.டியுடன் முக்கியமான மீட்டிங் இருக்கிறது. அதற்கு தேவையான விவரங்களை எல்லாம் அவள் வெகுதீவிரமாக சேகரித்து கொண்டிருக்கிறாள். இதை அவளுக்கு கீழ் பணிபுரிபவரிடம் போனில் தெரிவித்துவிட்டு அலுவலகத்திற்கு சீக்கிரமாக வரச்சொல்லி உத்திரவிட்டுக் கொண்டிருந்தாள். அது தான் நாளை கேப்பை வரவழைத்து கிளம்பி செல்லும் அளவிற்கு எல்லாம் அவளுக்கு நேரமிருக்காது என திட்டமிட்டு வண்டியை பஞ்சராக்கி விட்டேன்!" என்று கண்ணடித்தான்.

"யமகாதகன்டா நீ!" என்று மலர்ச்சியுடன் அவன் கன்னம் கிள்ளிய பவானி, "காலையில் என் மருமகளின் முகம் போகின்ற போக்கை பார்ப்பதற்கு இப்பொழுதே எனக்கு ஆவலாக இருக்கிறதுடா!" என்று குதூகலித்தார்.

"ம்மா... போதும், அவள் முன்னால் ஈயென்று சிரித்து என்னை வேறு மாட்டிவிட்டு விடாதீர்கள் நீங்கள்!"

"ஏன்டா பதறுகிறாய்? சிரிக்காதபடி என்னை முதலில் தயார் செய்து கொண்டு நான் வெளியே வருகிறேன். போதுமா?"

"ஓகே... ஆனால் உங்களால் முடியும் என்கிற நம்பிக்கை வரவில்லை என்றால் தயவுசெய்து வெளியே வராதீர்கள். சரி நான் போய் தூங்குகிறேன், குட்நைட்!" என்று உள்ளே சென்றான்.

மறுநாள் காலை, "அக்கா டிபன் ரெடியா?" என்ற கேள்வியுடன் கையில் வாட்சை கட்டியவாறே பரபரப்புடன் வேகமாக கிச்சனுக்குள் நுழைந்தாள் ஹிரண்மயி.

"ஆங்... எல்லாம் ரெடி ரெடி, தோசை தான். தம்பி சீக்கிரமாக அலுவலகம் செல்ல வேண்டும் என்று டைனிங்கில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார், சட்னி அங்கே தான் இருக்கிறது. நீயும் போய் உட்கார், நான் தோசை எடுத்து வருகிறேன்!" என்றாள் ஹர்சிதா.

"இல்லை... நீங்கள் அலைய வேண்டாம். நான் இங்கேயே சாப்பிட்டுக் கொள்கிறேன்!"

"அதெல்லாம் எதுவும் வேண்டாம், நீங்கள் இரண்டு பேரும் வெளியே போங்கள். நான் தோசை ஊற்றுகிறேன், எனக்கு கிளம்புவதற்கு இன்னும் நேரமிருக்கிறது!" என்று உள்ளே வந்தார் பவானி.

"இல்லை அத்தை நேரமாகி..."

"எங்கே சாப்பிட்டாலும் ஒரே நேரம் தான் பிடி!" என்று அவளிடம் தட்டை நீட்டினார்.

வேறுவழியின்றி வாங்கி கொண்டவள் அகிலின் எதிரில் அமர்ந்து வேகவேகமாக சாப்பிட்டாள்.

'ஐயோ... வொய்ஃபை ரொம்ப டென்ஷனாக இருக்கிறாளே, பிளான் எதுவும் சொதப்பாமல் இருந்தால் சரி!' என்று தனக்குள்ளே பேசியபடி அவளை நோட்டமிட்டான் அகிலன்.

"ம்... இல்லை இல்லை போதும்!" என்று பவானியிடம் மறுத்து விட்டு எழுந்தவள் தட்டை சிங்கில் போட்டு விட்டு வெளியே வந்தாள்.

அனைவரிடமும் பொதுவான "பாய்" உடன் தன் வண்டியிடம் சென்ற ஹிரண்மயி, “ஐயோ...” என்று அதிர்ந்து மூவரின் இதயத்துடிப்பையும் ஒன்றாக எகிற வைத்தாள்.

17

தனது வண்டியின் முன் டயர் பஞ்சராகியிருப்பதை கண்டு திகைத்த ஹிரண்மயி சன்னமாக கூவியதில் வீட்டினுள் இருந்த மூவரும் ஒருவரையொருவர் அசடுவழிய பார்த்துக் கொண்டனர்.

பவானியின் உபயத்தால் ஹர்சிதாவின் காதிற்கும் விஷயம் சென்றிருந்தது.

"என்ன செய்யப் போகிறாளோ தெரியவில்லையே..." என்று வாய்க்குள் முனகினான் அகிலன்.

"நான் சென்றுப் பார்க்கிறேன்!" என்று ஹர்சு வாயிலுக்கு விரைய, "போங்க போங்க... அப்படியே ஸ்டிராங்காக ஒரு ரெக்மென்டேஷன் போட்டுட்டு வாங்க!" என்றான்.

"ஹஹா... கண்டிப்பாக!" என்று கேலியாய் சிரித்து விட்டு வெளியேறினாள் அவள்.

"என்னவாயிற்றும்மா?"

"ஐயோ அக்கா... வண்டி பஞ்சராகி விட்டது அக்கா!" என்றாள் ஹிரணி தவிப்புடன்.

"அடடா... எப்படி? நீ நன்றாக மெயின்டைன் செய்வாயே..."

'அடக்கடவுளே... இந்த அண்ணி என்னை அவளிடம் ரெக்மென்ட் செய்ய போனார்களா அல்லது மாட்டிவிடப் போனார்களா?' என்று மனதிற்குள் புலம்பினான் அகில்.

"அதுதான்கா எனக்கும் புரியவில்லை, போன வீக்கென்ட் தான் சர்வீஸ் செய்து வாங்கினேன்!"

"இப்பொழுது என்ன செய்வது?"

"என்ன செய்வது... வேறுவழியில்லை கால்டாக்ஸிக்கு கால் பண்ண வேண்டியதுதான்!" என்று மொபைலை எடுத்தாள் ஹிரணி.

பவானி அகிலிடம் நக்கலான பார்வை ஒன்றை செலுத்த, அவனோ பதிலுக்கு அவரை முறைத்துக் கொண்டிருந்தான்.

"அதெல்லாம் வேண்டாம் கேப்பை அழைத்தால் நேரமாகி விடும். அவன் இதோ அதோ என்று பொழுதை நன்றாக இழுத்து விடுவான்!" என்றவாறு அவள் கரத்திலிருந்து அலைபேசியை பிடுங்கிய ஹர்சு, "நீ பேசாமல் அகிலுடன் கிளம்பு, அவர் உன்னை நேரமாக அலுவலகத்தில் விட்டு விடுவார். மீட்டிங் வேறு இருக்கிறது என்று புலம்பினாயே..." என கொழுந்தனை கோர்த்து விட்டாள்.

"இல்லைக்கா... போனில் பேசுபவன் தான் அருகில் வந்து விட்டதாக சொல்லி ஏமாற்றுவான். ஆன்லைன் புக்கிங்கில் வண்டி எங்கே வருகிறது என்று ரூட் மேப்பை பார்த்து நாமே தெரிந்துக் கொள்ளலாம். இதற்காக அவரை வேறு ஏன் தொல்லை செய்ய வேண்டும்?"

"சரி எந்த வண்டியும் நம் ஏரியாவை சுற்றி அருகில் இல்லையென்றால் அப்பொழுது என்ன செய்வாய்? எதற்கு தேவையில்லாத இந்த நேரவிரயம் உன் கணவனோடு செல்வதில் உனக்கு என்ன பிரச்சினை?"

"அப்படி இல்லைக்கா அவர்..." என அவள் தயங்கி இழுக்க அதேநேரம் வெளியே வந்த அகில், "ஏய்... நீ இன்னும் கிளம்பவில்லை? என்ன பிரச்சினை அண்ணி?" என்று முகத்தில் அப்பாவி வேடம் தரித்து வினவினான்.

"ஒன்றுமில்லை தம்பி... இவள் வண்டி பஞ்சராகி விட்டது..."

"என்ன? அப்படியா... எங்கே?" என்று அவசரமாக அவளை இடைமறித்து வண்டியை ஆராய்ந்தான் அவன்.

ஹிரணி வண்டியையே கவலையுடன் பார்த்திருக்க, ஹர்சுவும், பவானியும் அவன் நடிப்பை நமட்டு சிரிப்புடன் பார்த்திருந்தனர்.

"ஏதோ கூரிய ஆணி ஒன்று ரொம்ப ஆழமாக டயரை கிழித்திருக்கும் போலிருக்கிறதே!" என்று தாடையை தடவினான்.

"ஆமாம்... இரவு நிறுத்தும் பொழுது கூட நன்றாக தான் இருந்தது!" என்றாள் ஹிரணி அவனருகில் சென்று குனிந்து தன் வண்டியை ஆராய்ந்தபடி.

ம்கும்கும்... என்று பவானி லேசாக தொண்டையை செறும, நிமிர்ந்து அவரை விழியிடுங்க நோக்கியவன் பின்பு தன் மனைவியிடம் திரும்பி, "இரவு நன்றாக இருந்திருந்தால் எப்படி தானாக பஞ்சராகி இருக்கும்?" என்றான்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை!"

"என்ன புரியவில்லை? இருட்டில் எங்கேயாவது விட்டு ஏற்றி வந்திருப்பாய்!" என்றான் அவன் அசால்டாக.

இருக்குமோ... என்று அவள் யோசிக்க, "தம்பி... அவளுக்கு ஏதோ முக்கியமான மீட்டிங் இருக்கிறது என்று தான் அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள். இன்று ஒரு நாள் நீங்கள் அவளை அழைத்து செல்கிறீர்களா?" என்றாள் ஹர்சிதா.

ஓ... என்று அகில் வாயை திறக்க இருந்த நேரம், "என்ன நீ ஒன்றுமே புரியாமல் பேசிக் கொண்டிருக்கிறாய்? அவனுமே அலுவலகத்திற்கு நேரமாக செல்ல வேண்டும் என்று தானே வேகவேகமாக சாப்பிட்டு கிளம்பினான்!" என தெளிவாக அவன் காலை வாரினார் பவானி.

அவரின் பேச்சில் கடுப்பானவன் தன்னுடைய முகத்தையே மொய்த்துக் கொண்டிருக்கும் ஹிரணியின் விழிகளை தாண்டி அன்னையை முறைக்க முயன்று தோற்றான்.

"ஓ... அப்படியா தம்பி?" என்று தன் கேள்வியால் ஹிரணியின் கவனத்தை தன்புறம் திருப்பினாள் ஹர்சு.

கிடைத்த அவகாசத்தில் தாயிடம் ஒற்றை விரல் நீட்டி எச்சரித்தவன் அவரின் கண்சிமிட்டலில் புன்னகை புரிந்து, "எனக்கு அவசர வேலை என்று ஒன்றுமில்லை அண்ணி. இப்பொழுது கொஞ்சம் தாமதாக போனால் மாலையில் சற்று தங்கியிருந்து அந்த வேலையை

முடித்து விடுவேன். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை!" என்றான் லேசாக தோள்களை குலுக்கியவாறு.

"அப்பொழுது நீங்களே இவளை அழைத்து செல்கிறீர்களா?"

"ஷ்யூர்... அவளுக்கு ஆட்சேபனை இல்லையென்றால்..." என்று கொக்கி போட்டு நிறுத்தினான்.

"ஏன்? அவள் என்ன வேற்றாளோடா போகிறாள்? அவள் புருஷனோடு ஒன்றாக செல்வதில் அவளுக்கென்ன பெரிதாக ஆட்சேபனை இருந்து விடப்போகிறது? என்னம்மா ஹிரணி நான் சொல்வது சரிதானே?" என மருமகளிடம் தோரணையாக வினவினார் பவானி.

ஆங்... என்று முதலில் தடுமாறியவள் பின்பு வேறுவழி இல்லாமல் சம்மதமாக தலையசைத்தாள்.

முகமெல்லாம் பளீர் புன்னகை துலங்க, "சரி வா!" என்று துள்ளலுடன் அகில் சென்ற இடத்தை கண்டு திகைத்து நின்றாள் ஹிரண்மயி.

'இவன் என்ன காரை விட்டு பைக்கிடம் செல்கிறான்?'

"காரை எடுக்கவில்லையா?" என்றாள் தயக்கத்தோடு.

மற்ற இரு பெண்களுக்குமே கூட இது அறிவிக்கப்படாத புதிய விஷயமாக தான் இருந்தது.

"இல்லைப்பா... நீ என்னுடன் வருவாய் என்று எனக்கெப்படி தெரியும்? நான் நேற்றே சர்வீஸ் சென்டரில் சொல்லி இன்று காரை எடுத்துப் போக சொல்லி விட்டேன். அதனால் தான் காலையில் எழுந்ததுமே என் வண்டியை கூட நன்றாக துடைத்து வைத்தேன்!" என்று பதில் கூறியவாறு பைக்கில் அமர்ந்து ஹெல்மெட்டை மாட்டினான்.

ஹிரணி அப்படியே நின்றுக் கொண்டிருக்கவும், "ஏய்... நேரமாகவில்லையா சீக்கிரமாக ஏறு!" என்று அவளை விரட்டியவன், எதைப் பிடித்து ஏறுவது என புரியாமல்

குழம்பி விழித்தவளை கண்டு இதழில் சிரிப்பு குவிந்திட விரைந்து முன்புறம் திரும்பிக் கொண்டான்.

"என்னம்மா நின்றுக் கொண்டேயிருக்கிறாய்? உங்கள் இருவருக்குமே நேரமாகிறது பார்!"

"இதோ அக்கா!" என்று தட்டுத்தடுமாறி ஒருவழியாக அவனை பிடிக்காமல் ஏறி அமர்ந்து விட்டாள் பெண்.

'வாடி... என் பெண்டாட்டி! என்னை தொட மாட்டீர்களோ...' என்று தனக்குள்ளாக அவளிடம் உல்லாசமாக கேள்வி எழுப்பியவன் வண்டியை வேகமாக ஒரு முறுக்கு முறுக்க, அதில் எங்கே தான் தவறி கீழே விழுந்து விடுவோமோ என பதறிப் போன அவன் மனைவி சட்டென்று அகிலின் தோளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன செய்கிறீர்கள்? பார்த்து மெதுவாக எடுங்கள். ப்ளீஸ்..." என்றாள் விழிகளில் அச்சம் பரவ.

"ஏய்... நான் இன்னும் ஓட்டவே ஆரம்பிக்கவில்லை. அதற்குள் மெதுவாக என்றால் நான் எப்படி வண்டியை எடுப்பது?"

"இல்லை... இப்படி யார் பின்னும் வண்டியில் அமர்ந்து சென்று எனக்கு பழக்கமில்லை!"

"அதற்கு நான் என்ன செய்வது? இப்பொழுது நாம் கிளம்பலாமா வேண்டாமா?"

"ம்... சரி கிளம்புங்கள்!" என்றாள் அவள் உள்ளே போன குரலில்.

"ஹிரணிம்மா... இப்பொழுது எதற்காக இவ்வளவு கூச்சப்படுகிறாய்? தம்பி தானே... நன்றாகப் பிடித்துக் கொள். கீழே எதுவும் விழுந்துவிடப் போகிறாய்!"

"சரிக்கா!" என்று தயக்கத்துடன் அவன் தோளை பற்றிக் கொண்டாள் இவள்.

"நன்றாக உட்கார்ந்து விட்டாயா? டேய்... பார்த்து மெதுவாக போடா!"

"சரிம்மா!" என்று அவர்களிடம் பதவிசாக தலையாட்டிவிட்டு சென்றவனை கேலி செய்தார் பவானி.

"வீட்டுக்காரம்மா பின்னால் உட்காரவும் என் பிள்ளைக்கு அப்படியே வாயெல்லாம் பல் தான்!"

கமலின் 'பார்த்த முதல் நாளே... உன்னை பார்த்த முதல் நாளே...' பாட்டு மனதினிலே ஓட சிலாகித்தபடி வண்டி ஓட்டிக் கொண்டிருந்த கணவனுக்கு மாறாக எந்த நேரம் நாம் கீழே விழுவோமோ என்ற பயத்துடன் முள் மேல் அமர்ந்திருப்பது போல் அமர்ந்திருந்தாள் அவன் மனைவி.

என்ன தான் அவன் தோளை அவள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாலும் வண்டியின் ஓட்டத்திற்கு பாலன்ஸ் செய்ய முடியாமல் மிகவும் தடுமாறினாள்.

"கொஞ்சம் மெதுவாகப் போகிறீர்களா?" என்று ஹிரணி அவனிடம் மெல்லமாக கூற, "இப்படியா?" என வண்டியை ஓரமாக நிறுத்தியே விட்டான் அகில்.

"என்ன நிறுத்தி விட்டீர்கள்?"

"பின்னே... ஏற்கனவே நான் நாற்பதை தாண்டவில்லை. இதில் இன்னும் மெதுவாக போக சொன்னால் சத்தியமாக எனக்கு ஓட்டத் தெரியாது வண்டி தள்ளாடும்!"

ஒரு கணம் விழித்தவள், "அப்புறம் எப்படி அலுவலகத்திற்கு செல்வது?" என்று தவிப்புடன் திருப்பி தன் மணிக்கட்டை பார்த்தாள்.

தன் மிடுக்கை தொலைத்து தன்னெதிரே அப்பாவியாக நிற்கும் அவளை கண்டு சட்டென்று கனிவு பிறக்க, "ம்... சரி, நான் சொல்கிறபடி உட்கார் வா!" என்று அவள் கரம்பற்றி இழுத்து தன் இடையை சுற்றி வளைத்துக் கொண்டான்.

அவன் செய்கையில் திகைத்தவள், "என்ன செய்கிறீர்கள்? வேண்டாம்!" என்று பதறி விலகினாள்.

"ஓ காட்... மய்... அது..." என தடுமாறி, "ஹிரணி... இப்படியே நீ பொழுதை வீணாக்கினாய் என்றால் நாம் சீக்கிரமாக அலுவலகத்தை சென்றடைய முடியாது. இப்பொழுது என்ன செய்யலாம்?" என்றான் தன்னை சமாளித்து கோபமாக.

தன்னுடைய கவலையில் இருந்தவள் அவன் உளறியதை கவனியாமல் இருந்ததால், "அது..." என்று திணறினாள்.

"ப்ச்... சும்மா வளவளக்காதே... இரண்டில் ஒன்று சொல். இப்பொழுது என் பின்னால் ஒழுங்காக உட்கார்ந்து வரப் போகிறாயா இல்லையா? எனக்கும் ரொம்ப தாமதமாகி கொண்டிருக்கிறது!" என்றான் முடிவாக.

அவள் அமைதியாக இருக்கவும், ச்சே... என்று போலியாக அலுத்தபடி திரும்பிக் கொண்டான். தவிப்புடன் அவனை நெருங்கி அமர்ந்தவள் அவன் வயிற்றை பட்டும்படாமல் வளைத்துக் கொண்டாள்.

இதயம் தொண்டையில் வந்து துடிக்க புதிய அனுபவமாக ஒரு ஆடவனை இத்தனை நெருக்கமாக ஒட்டி அமர்வது அவளுக்குள் கலவரத்தை உண்டு பண்ணியது.

அலுவலக கட்டிடம் கண்களில் தென்படவும் அப்பாடா என்று நிம்மதி பெருமூச்சு விட்டவளின் முகத்தில் அமைதி பரவியது.

'என்ன இது? இவ்வளவு மெதுவாக ஓட்டி வந்தும் இவள் அலுவலகம் இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டதே!' என்று உள்ளுக்குள் வெறுப்புடன் புலம்பினான் அகில்.

அதற்கு முற்றிலும் மாறாக கீழே இறங்கிய ஹிரண்மயி அவனிடம் அழகாக புன்னகைத்தாள்.

"நல்லவேளை... சரியான நேரத்திற்கு அழைத்து வந்து விட்டீர்கள். ரொம்ப தேங்க்ஸ்!"

'ஐய்யே... நன்றாக பல்லை காண்பி!' என தனக்குள் அவளை நொடித்தவனை, "நீங்கள் கிளம்பவில்லையா?" என்றாள் ஹிரணி.

ம்... ம்... என்றவன் சட்டென்று விழிகள் ஒளிர ஆவலுடன் மனைவியை நேராகப் பார்த்தான்.

"சரி மாலையில் எப்படி வீட்டிற்கு போவாய்?"

"அது ஒன்றும் பிரச்சினை இல்லை... அலுவலக காரில் வந்து விடுவேன். காலையில் அவசரம் என்பதால் தான் வேறுவழியில்லாமல் உங்களை தொந்திரவு செய்ய வேண்டியதாகப் போயிற்று!" என்று முறுவலித்தாள்.

'சாயந்திரம் அந்த காரும் பஞ்சராகி விட வேண்டும்!' என வேகமாக சபித்தவன், "ஓ... ஃபைன்... ஓகே பை!" என்று ஏமாற்றத்துடன் சோர்வாக கிளம்பிச் சென்றான்.

உள்ளே செல்ல தோன்றாமல் தன்னை மறந்து கணவன் சென்ற திசையையே இமைக்காமல் பார்த்து நின்றவளை, "குட்மார்னிங் மேடம்... இதுவரை எங்கள் கண்ணிலேயே காண்பிக்காமல் கவனமாக மறைத்து வைத்திருந்த உங்கள் ஹஸ்பென்ட் அவர் தானா?" என்று அருகில் ஒலித்த ஒரு பெண்ணின் சீண்டல் குரல் அவள் மனதை கடுப்பாக்கியது.

முகம் சுணங்க திரும்பியவளின் எதிரே புன்னகை முகமாக வெல்ஃபேர் ஆபிசர் நின்றிருந்தாள்.

"ஆமாம்... மறைத்தெல்லாம் வைக்கவில்லை, அறிமுகம் செய்ய நேரம் அமையவில்லை அவ்வளவு தான்!"

"சும்மா பொய் சொல்லாதீர்கள் மேடம்... ஒன்றரை மாதமாக ஒரு ஞாயிறு கூடவா வரவேற்புக்கு கிடைக்கவில்லை. ஆளைப் பார்த்தால் சும்மா ஹீரோ கணக்காக செம ஹேன்ட்செம்மாக தான் இருக்கிறார். என்னிடம் மட்டும் உண்மையை சொல்லுங்கள் யாராவது கொத்திக் கொண்டு போய்விடுவார்கள் என்று தானே இப்படி அடைக்காத்து கொண்டிருக்கிறீர்கள்!" என ரகசிய குரலில் வினவி கண்ணடித்தவளை இழுத்து பளார் பளாரென்று அறைய தோன்றிய உணர்வை சிரமப்பட்டு விழுங்கி கண்களை எட்டாத புன்னகையுடன் மீட்டிங்கிற்கு நேரமாகிவிட்டது என்று அவளிடம் இருந்து

விலகி நடந்தாள் நாயகி உள்ளூர பெரும் குமைச்சலுடன் தான்.

'இடியட்... பெண்ணா இவள்? யார் புருஷன் சைட் அடிக்க எப்பொழுது கிடைப்பான் என்று முதல் ஆளாய் அலைவாள் போலிருக்கிறது. இவளை போன்றவர்களை எல்லாம் இந்த உலகில் வைத்துக் கொண்டு பொதுவாக ஆண்களை மட்டும் குறைசொல்லி என்ன பயன்? இப்படிப்பட்ட ஜென்மங்களாலும் எத்தனை எத்தனை குடும்பங்கள் ஒழுக்கத்திலிருந்து விலகி சிதைந்து விடுகிறது' என்று அவளை கிழிகிழியென்று கிழித்தபடி தன் ஆத்திரத்தை எல்லாம் நடையின் வேகத்தில் காண்பித்தாள் ஹிரண்மயி.

18

இரவு படுக்கையில் அமர்ந்து தன் அலைபேசியை நோண்டிக் கொண்டிருந்த அகிலின் முகம் புன்னகையில் விரியவும் ஹிரணியின் புருவங்கள் முடிச்சிட்டது.

அப்பொழுது தான் உறங்குவதற்காக தங்கள் அறையினுள் வந்தவள், 'என்ன மொபைலை பார்த்து முகம் அப்படியே ஜொலிக்கிறது? ஒருவேளை அந்த மயூவுடன் சேட் செய்துக் கொண்டிருக்கிறானோ!' என்றெண்ணி இறுகினாள்.

அவள் வருகை உணர்ந்து நிமிர்ந்தவன், "என்ன இவ்வளவு நேரம் கழித்து வருகிறாய்? இன்றைக்கு உன் அக்காவோடு அதிக அரட்டையா?" என்று முறுவலித்தவனிடம் பதிலுக்கு புன்னகைக்க தோன்றாமல் லேசாக ஆமோதிப்பாக தலையாட்டிவிட்டு சென்று தன் இடத்தில் முடங்கிக் கொண்டாள் மனைவி.

'கொஞ்சமே கொஞ்சம் சிரித்தால் தலையில் இருக்கும் கிரீடம் சரிந்து விடும். ம்ஹும்... இவளையெல்லாம் திருத்த முடியாது!' என்று தனக்குள் மெல்லிய பெருமூச்சுடன் தலையசைத்தபடி தன் வேலையை தொடர்ந்தான் அகிலன்.

போர்வைக்குள் தன்னை மறைத்திருந்தவளின் மனமோ பாரமாக இருந்தது.

அகிலுடன் நெருங்கிப் பழகாத நேரம்வரை தன்னை பிரிந்தவுடன் அவன் வேறு திருமணம் செய்துக் கொள்வான் என்பதை மிகச்சாதாரணமாக கணக்கிட்டு மணந்துக் கொண்டவளுக்கு, தற்பொழுது அவனுடைய உள்ளம் வேறுப்பெண்ணிடம் சாய்வதை ஜீரணிக்க முடியவில்லை.

'என்னை பற்றி அவன் மனதில் ஒரு பாதிப்பும் இல்லையா... என்னோடு வாழவேண்டும் என்று எந்த ஆவலும் அவனுக்கு மருந்துக்கும் தோன்றவில்லையா?

ஆனால் கொஞ்ச நாட்களாக எனக்கு அப்படி தோன்றுகிறதே... இந்த வீட்டிலுள்ளவர்களோடும் இவனோடும் தொடர்ந்து வாழும் காலம்வரை இருக்க வேண்டுமென்று ஆசைக்கொள்கிறதே என் மனது!' என்று தவித்தாள்.

விழியோரம் நீர் தேங்குவதை கண்டு உள்ளம் பொங்கியது அவளுக்கு, 'இப்பொழுது எதற்குடி அழுகிறாய்? கொஞ்சம் கூட அறிவில்லை உனக்கு... இந்த உலகில் உன்னை பற்றி கவலைப்படவோ மகிழ்ச்சியடையவோ இங்கே யார் இருக்கிறார்கள்? இத்தனை நாட்களாக எப்படி உன்னை மட்டுமே நம்பி வாழ்ந்தாயோ... அதேபோல் யாருடைய துணையும் எதிர்பாராமல் தொடர்ந்து துணிவோடு இரு. உன்னை பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல் வேறுப்பெண்ணை தேடிப் போகிறவனோடு எல்லாம் வாழ வேண்டும் என்று நீ ஏங்குகிறாயா? பைத்தியம் தான் பிடித்திருக்கிறது உனக்கு. ஹர்சு அக்கா மனதால் மிகவும் பலவீனமானவர்கள், அவர்களின் வாழ்வை சீர்ப்படுத்த தான் நீ இங்கே வந்தாய். அதோடு நிறுத்திக்கொள், வேறு எந்த எண்ணத்தையும் வளர்த்து கொள்ளாதே. அது உன்னை நீயே அசிங்கப்படுத்தி கொள்வதற்கு சமம், உன் நிழலே உன்னை இகழ்ச்சியாக பார்க்கும் அளவுக்கு கோழையாகி விடாதே. அடுத்தவருக்காக ஏங்கி அழுகின்ற அளவுக்கு நீ எவருக்கும் சளைத்தவள் இல்லை என்பதை என்றும் நினைவில் கொள்!' என மீண்டும் தன்னை கடினப்படுத்திக் கொண்டாள்.

கடந்த நான்கு நாட்களாக மறுபடியும் தனக்குள் நத்தையாக சுருண்டவளை கண்டு மற்ற மூவரும் தங்களுக்குள் குழம்பினர்.

கேட்கின்ற கேள்விக்கு பதில், கடமையே என செயற்கையாக வரவழைத்தப் புன்னகை, எந்நேரமும் அறைக்குள் முடங்கியிருப்பது, கீழே தன் அம்மாவிடமும், அண்ணியிடமும் பேசிக் கொண்டிருக்கும் அகில் அறைக்கு வந்தால் வேகமாக வெளியே மாடிக்கு சென்று

விடுவது என்றிருந்தவளை கண்டு உண்மையில் கடுப்பாகிப் போனான் அவன். ஆனால் அவள் தான் எதைஎதையோ எண்ணி முட்டாள்தனமாக நடந்துக் கொள்கிறாள் என்றால் நாமும் பதிலுக்கு சண்டையிட வேண்டாம் என ரொம்பவும் பொறுமையை கடைப்பிடித்தான்.

அன்றைய பின்மாலைப் பொழுதில் ஹிரண்மயி அலுவலகத்தில் இருந்து கிளம்பும்பொழுதே எந்த நேரத்தில் மழை தூறல் ஆரம்பிக்குமோ என்பது போல் வானம் மந்தமாக இருட்டடித்து இருந்தது.

மழை ஆரம்பிப்பதற்குள் நேரமாக வீட்டிற்கு சென்றுவிட வேண்டும் என்று வேகமாக வண்டியை ஓட்டியவள் இருந்தும் பாதி வழியிலேயே மாட்டி நனைந்துக் கொண்டே வீட்டை அடைந்தாள்.

அவளை வெளி வாயிலிலேயே எதிர்கொண்ட பவானியும், ஹர்சிதாவும் உரிமையுடன் கடிந்துக் கொண்டனர்.

"எதற்கு இப்படி தொப்பலாக நனைந்துக் கொண்டு வருகிறாய் ஹிரணி? எங்கேயாவது ஓரமாக சிறிது நேரம் நின்றிருக்கலாமில்லை!" என்றாள் ஹர்சு கவலையுடன்.

"இல்லைக்கா... மழையின் வேகம் கொஞ்சமும் குறைவது போல் தோன்றவில்லை, அதுதான் நேராக வந்துவிட்டேன்!" என்று நடுங்கியபடி உள்ளே வந்தாள் அவள்.

"சைக்லோன் உருவாகிவிட்டது என்று நேற்றிலிருந்து தான் டிவியில் விடாமல் அலறுகிறார்களே... பேசாமல் அகிலை தொடர்பு கொண்டு அவனோடு பத்திரமாக காரிலாவது வரலாம் இல்லை!" என அதட்டினார் பவானி.

மனதில் லேசாக சலிப்பு தோன்ற "ஒன்றும் பிரச்சினை இல்லை அத்தை... வெந்நீரில் குளித்தால் சரியாகிவிடும். நான் அறைக்கு போகிறேன்!" என அங்கே நில்லாமல் மாடியேறினாள் ஹிரணி.

"ஆமாம்... எதுவென்றாலும் உன் இஷ்டத்திற்கு தான் நடக்க வேண்டும். யாருடைய பேச்சையும் காதில் வாங்காதே!" என்ற முணுமுணுப்பு செவியில் மோத, 'ஆமாம்... உங்கள் மகன் மட்டும் அப்படியே என் மேல் காதல் கொண்டு அலைகிறார் நான் அவருடைய உதவியை ஏற்பதற்கு!' என தனக்குள் பழித்து அவரின் பேச்சை அலட்சியபடுத்தியவள் தன்னறைக்குள் நுழைந்தாள்.

வெந்நீரில் குளித்து இரவு உடைக்கு மாறியிருந்தவள் தன் கூந்தலை உலர்த்தி கொண்டிருக்க அகில் உள்ளே வந்தான்.

தன் வருகை உணர்ந்தும் திரும்பாமல் நின்றிருந்தவளை பார்வையாலேயே கூறு போட்டவனின் முகத்தில் மெல்லிய எரிச்சல் ரேகை பரவ, அவளிடம் நின்று என்ன ஏதுவென்று எதையும் விசாரிக்க தோன்றாமல் தன் வேலையை முடித்துக்கொண்டு வேகமாக வெளியேறினான் அவன்.

கணவன் சென்றதும் திரும்பியவளோ, 'வெளியே இவ்வளவு மழை கொட்டுகிறதே, தலைமுடியை உலர வைக்கிறாளே... மழையில் நனைந்து விட்டாயா என்று ஒரு வார்த்தை எதுவும் அக்கறையாக கேட்கிறானா பார்!' என தனக்குள் கழிவிரக்கம் ஒருபுறம், சினம் மறுபுறமுமாக போராடியவள் பின்பு வீம்பாக திரும்பி நின்றுக் கொண்டாள்.

அகில் வீட்டினுள் நுழையும் பொழுதே ஹிரணி மழையில் நனைந்தபடி வந்ததாக பவானி ஒரு புலம்பு புலம்பி தள்ளிவிட்டார். ஊரில் ஆங்காங்கே மோசமான சம்பவங்கள் நடக்கின்ற சூழலில் இளம்பெண்ணான அவள் தனியாக மழையில் நனைந்து வந்த கவலை அவருக்கு.

உரிமையாய் தன் உதவியை எதற்கும் ஏற்க மறுக்கிறாளே என அதிலேயே எரிச்சலுற்றிருந்தவன் தன்

வருகையை உணர்ந்தும் திரும்பாமல் திமிராக இருந்தவளை எண்ணி மேலும் கடுப்பாகிப் போனான்.

விடியற்காலையில் எழுந்த மெல்லிய அனத்தல் சத்தம் அகிலின் உறக்கத்தை விரட்ட சிந்தனை குழம்ப திரும்பி அருகில் பார்த்தான்.

தலைவரை இழுத்து மூடிய போர்வைக்குள் இருந்து ஹிரணி தான் முனங்கிக் கொண்டிருந்தாள். திகைத்தவன் வேகமாக அவளுடைய போர்வையை விலக்கும் பொழுதே அவள் மேனியின் அனல் வந்து அவனை வெகுவாக தாக்கியது.

அவனுடைய செயலால் உறக்கம் கலைந்தவள் அவன் தன் புறங்கையால் இவள் நெற்றியை தீண்டவும் முகத்தை சுளித்தபடி கரத்தை விலக்கி தள்ளினாள்.

"எப்பொழுதிருந்து ஜுரம் அடிக்கிறது? இரவிலிருந்தேவா..."

ப்ச்... என்று விட்டு பதிலின்றி திரும்பி படுத்தவள் மீண்டும் போர்வையை இழுத்து மூடப் பார்க்க, வந்த கோபத்தில் அவள் மீதிருந்த போர்வையை ஒரே உருவில் பிடுங்கி தூர வீசினான் அகில்.

"என்ன செய்கிறீர்கள் நீங்கள்?" என சத்தமிட்டபடி அதிர்ச்சியுடன் எழுந்தமர்ந்தவளுக்கு ஜன்னல் வழியாக வெளியிலிருந்து வீசிய ஊதக்காற்றால் உடல் சிலிர்த்து நடுங்கியது.

அதைக்கண்ட பின்னும் எதையும் லட்சியம் செய்யாமல் போர்வையை மடித்து வைத்துவிட்டு எழுந்து சென்றான்.

அவன் செயல்களை திகைப்புடன் பார்த்தவளுக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை, உடம்பின் அனல் அயர்வோடு நடுக்கத்தையும் சேர்த்து அதிகரிக்க செய்தது. தொடர்ந்து உட்கார இயலாமல் உடல் தள்ளாட, மேனியின் பலவீனத்தால் உள்ளமும் பலவீனமாகி, இவன் ஏன் இப்படி செய்கிறான்? என்று அவளுக்கு அழுகை வேறு பொங்கியது. இருந்தும் அவன் முன் அதை

வெளிப்படுத்திவிடக் கூடாது என்று வீம்பாக இதழ் கடித்து அடக்கினாள்.

கைகளால் முழங்கால்களை கட்டிக்கொண்டு உடலை குறுக்கி யோசனையில் அமர்ந்திருந்தவளை சடாரென்று கட்டிலில் தள்ளியவன் அவளுடைய விரிந்த விழிகளை அலட்சியம் செய்து தன் கையிலிருந்த பிளாங்கட்டால் அவளுக்கு போர்த்தி விட்டான்.

அவனுடைய அதிரடியில் இமைக்க மறந்து அவள் விழிகள் அவனையே பார்த்திருக்க கதவை திறந்துக்கொண்டு வெளியேறினான் அகில்.

முகத்தில் நிம்மதி தோன்ற அவன் தள்ளியதில் நேராக விழுந்திருந்தவள் மெதுவாக பிளாங்கட்டை வாகாக இழுத்து போர்த்திக்கொண்டு ஒருபுறமாக சுருண்டு படுத்துக் கொண்டாள். முன்பிருந்த மெல்லிய போர்வையை விட இது குளிருக்கு இதமாக இருக்க, மனதில் அகிலின் முகம் தோன்றி இதழில் அழகிய முறுவலை மலரச் செய்தது.

தன் நினைவில் உழன்றபடி இருந்த ஹிரணியை மீண்டும் வலுக்கட்டாயமாக இழுத்து எழுப்பிய அகில், அவளுடைய தாடையை அழுந்தப் பற்றி தன் கையிலிருந்த டம்ளரால் அவள் இதழ்களை பிரிக்க முயன்றான்.

இம்முறை வலுவாக அவன் கரம்பற்றி தடுத்தவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

அவனோ அதை சளைக்காமல் எதிர்க்கொள்ள, "ஏன் இப்படி ஹார்ஷா பிஹேவ் பண்றீங்க?" என்றாள் எரிச்சலுடன்.

பதிலின்றி டம்ளரை அவள் கைகளில் திணித்துவிட்டு மேசையின் புறம் சென்று அங்கே எதையோ குடைய ஆரம்பித்தான் அவன்.

ச்சே... என்று முகத்தை சுளித்தவள் தன் கையிலிருந்ததை குனிந்துப் பார்த்தாள், இளஞ்சூடாக பால் இருந்தது.

லேசாக பெருமூச்சு விட்டுவிட்டு அதைப் பருக ஆரம்பித்தாள்.

மாத்திரை அட்டை ஒன்றை எடுத்துக் கொண்டு அருகில் வந்தவன் அதை அவள் மடியில் வீசிவிட்டு சென்று தன்னிடத்தில் படுத்து கைகளை மடக்கி முகத்தை முழுவதுமாக மூடிக்கொண்டான்.

அவனை திரும்பி பார்த்தவளின் நெஞ்சம் தன் தவறை மறந்து அவன் தன்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்று எண்ணி வெதும்பியது.

'இதுவே இவனுடைய மயூவாக இருந்திருந்தால் இப்படித்தான் செய்திருப்பானா... பக்கத்தில் அமர்ந்து மாத்திரையை பிரித்து கொடுத்திருக்க மாட்டான்?'

துக்கம் தொண்டையை அடைக்க மாத்திரையுடன் சேர்த்து அதையும் விழுங்கிவிட்டு படுத்தாள் ஹிரண்மயி.

சற்றுநேரம் கழித்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்தவளிடம் மெதுவாக திரும்பி படுத்தான் அகில். மழையில் நன்றாக நனைந்திருந்ததால் மூக்கடைத்திருக்க லேசாக இதழ் பிளந்து மூச்சுவிட்டபடி முகத்தை மூடாமல் கழுத்துவரை இழுத்துப் போர்த்தியிருந்தாள் அவள்.

நெற்றியில் கரம் வைத்துப் பார்த்தான், ஜுரம் சிறிது குறைந்திருந்தது.

வைத்த கரத்தை எடுக்க தோன்றாமல் மெதுவே கீழிறக்கி மென்மையாக கன்னம் வருடியவன், "சரியான வீம்புகாரிடி நீ... கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதற்கேற்ப உடம்பு முடியவில்லை என்றாலும் வீண் பிடிவாதித்திற்கு ஒன்றும் குறைச்சலில்லை!" என்று மனைவியை கடிந்தான்.

கன்னத்தில் இருந்து நேராக அவள் உலர்ந்த இதழ்களுக்கு விரல்களை நகர்த்தியவன் அதை மிருதுவாக வருடினான். விழிகளில் மயக்கம் தோன்ற ஏக்கப் பெருமூச்சொன்றை வெளியேற்றியவன் அவள் கரத்தை எடுத்து தன்

கன்னத்தில் அழுத்திவைத்து கண்களை மூடிக்கொண்டான்.

வெளிச்சம் கண்களை கூச இமைகளை பிரிக்க முயன்று தோற்று சோர்வுடன் திரும்பி படுத்தவளின் தோளை யாரோ மென்மையாக உலுக்கவும் சிரமப்பட்டு திறந்து பார்த்தாள்.

"எழுந்து ரெஃப்ரெஷ் பண்ணிட்டு வந்து இந்த கஞ்சியை குடி!"

எதிரே பவானி நிற்க கண்டு வேகமாக எழுந்து அமர்ந்தவளின் கழுத்தில் கை வைத்துப் பார்த்தவர், "டெம்ப்ரேட்சர் மறுபடியும் அதிகமாகிறது மாத்திரை போட வேண்டும். போய் பிரஷ் பண்ணிட்டு வா!" என்றதும் மெதுவாக இறங்கி வாஷ்ரூம் சென்றாள் ஹிரணி.

'அகில் எங்கே?' என்று அவள் உள்ளம் கேள்வி எழுப்பியது.

திரும்பி வந்தவளின் அருகில் அமர்ந்தவர் அவளிடம் கஞ்சியை ஊற்றி கொடுத்துவிட்டு, "அகில் அவன் பிரெண்ட் பிரஸ்கிரைப் செய்த மாத்திரையை பார்மஸியில் வாங்கிட்டு வந்தான். காலையில் இது மூன்றும், மதியம் இது ஒன்று மட்டும் அப்புறம் இரவில் இரண்டு இதில் குறித்திருக்கின்றனர் பார்!" என கவரை காண்பித்துவிட்டு டீபாயில் வைத்தார்.

தன் கையில் இருந்த டம்ளரை வாங்கி மீண்டும் கஞ்சியை ஊற்ற முயன்றவரிடம், "வேண்டாம் அத்தை போதும்!" என்று சோர்வாக மறுத்தாள்.

"அதெல்லாம் கிடையாது... மாத்திரை விழுங்குவதால் நன்றாக உறக்கம் வரும். வயிறு காலியாக இருந்தால் அசிடிட்டி உருவாகி அல்சர் ஃபார்ம் ஆகும். இந்த ஒரு டம்ளரை மட்டும் இப்பொழுது குடி. பிறகு தூக்கம் கலைந்து பசித்தால் இங்கே பிரெட் வைத்திருக்கிறேன் பார் அதை சாப்பிடு!" என்று சுட்டிக் காட்டினார்.

ஆமோதிப்பாக தலையசைத்தவளின் கலைந்திருந்த கூந்தலை மெல்லமாக அவள் காதருகே ஒதுக்கிவிட்டவர், "வேறெதுவும் வேண்டுமா?" என்றார்.

நிமிர்ந்து அவரை தயக்கத்துடன் நோக்கியவள், வேண்டாம் என மறுத்துவிட்டு பின்பு முகம் வாட விழிகளை தாழ்த்திக் கொண்டாள்.

ஒரு கணம் அவளை கூர்ந்து நோக்கியவர், "சரி ரெஸ்ட் எடு, அதற்குமுன் மறக்காமல் ஆபிஸ்க்கு போன் செய்து லீவ் சொல்லிவிடு!" என்றுவிட்டு வெளியேறினார் பவானி.

திரும்பி எதிரில் சுவற்றை பார்க்க அங்கிருந்த கடிகாரம் மிகச்சரியாக நேரம் எட்டு முப்பது என்று காட்டியது.

19

பவானி அறையை விட்டு வெளியேறியதும் சோர்வாக சாய்ந்து அமர்ந்துக் கொண்டவளின் நெஞ்சம் அகிலை காணவேண்டி வெகுவாக ஏங்கியது.

தன் உடல்நிலை குறித்த கவலையில்லாமல், தன்னிடம் எதையும் விசாரிக்காமல், தான் விழித்தெழுவதற்கு முன்பாகவே தன்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் அவன் அலுவலகம் கிளம்பி சென்றது ஹிரணியின் மனதை ரொம்பவே பாதித்தது.

இரவும் அப்படித்தான் அவன் நினைத்ததை கடகடவென்று வலுக்கட்டாயமாக செய்தானே தவிர என்ன ஏதுவென்று என்னிடம் ஆறுதலாக எதுவும் பேசவில்லை என்று வருத்தத்தோடு எண்ணும்பொழுது தான் முதலில் அகில் தன்னிடம் கேள்வி கேட்டு தான் அவனுக்கு பதிலளிக்காமல் அலட்சியப்படுத்திவிட்டு திரும்பி படுத்தது நினைவிற்கு வந்தது.

'ஓ... ஆமாம், கரெக்ட்... அவன் அதிலிருந்து தான் என்னிடம் கோபமாக முரட்டுத்தனமாக நடந்துக் கொண்டான்!'

'ச்சே... முடிந்தவரை என்னிடம் எப்பொழுதும் நன்றாக சிரித்தமுகமாக பேசுபவனை அவ்வப்பொழுது எரிச்சல் மூட்டி அப்செட் ஆக்கி விடுகிறேன். ஏன் தான் நான் இப்படி ஒரு முசுடாக இருக்கிறேனோ தெரியவில்லை?' என்று தன்னையே நிந்தித்துக் கொண்டவள் எதிரிலிருந்த தங்களது புகைப்படத்தை பார்த்தாள்.

திருமணத்தின் பொழுது எடுக்கப்பட்டது. பவானி அதைக் கொண்டு வந்து அறையில் மாட்டும் பொழுது, இப்பொழுது இது ரொம்ப அவசியம் என்று உண்மையிலேயே அவளுக்கு கடுப்பாக தான் இருந்தது. ஆனால் இப்பொழுதோ அதை ரசித்துப் பார்த்தாள்.

இவள் மேம்போக்காய் முறுவலித்தபடி பார்த்திருந்தாலும் அகிலின் விழிகளிலும், இதழ்களிலும் உண்மையான மகிழ்ச்சியே தெரிந்தது. அப்படியென்றால்... என்னை பிடித்து தான் திருமணம் செய்துக் கொண்டானா? நான் தான் தேவையில்லாமல் அவனுடைய அண்ணன் மேல் உள்ள ஆத்திரத்தை இவனிடம் திருப்பி வெறுப்பை சம்பாதித்துக் கொண்டேனா...

இருக்காதா பின்னே... ஏமாற்றி திருமணம் செய்ததே தவறு. இதில் உன்னை பிடிக்கவில்லை வீட்டை விட்டு போகிறேன் என ரொம்பவும் திமிராக பேசுபவளை எந்த ஆண் தான் விரும்பி ஏற்றுக்கொள்வான் என்று பெருமூச்சுவிட்டவள், 'இருந்தாலும்... இந்தப் புகைப்படத்தை பார்க்கும் பொழுதாவது அவன் மனதின் ஓரத்தில் ஏதாவது சஞ்சலம் தோன்றாதா? எங்கே... தோன்றினாலும் அதை மறக்கடிக்க தான் அந்த மயூ வேறு இருக்கிறாளே!' என வெறுப்பாய் எண்ணமிட்டாள் ஹிரண்மயி.

'அப்பா... இத்தனை வருடங்களாக அவர் கண்களில் விழாதவள், நான் திருமண உறவை வேண்டாமென்று மறுத்து பேசியதும் எப்படி தான் சரியாக எதிரில் வந்தாளோ தெரியவில்லை!' என்று மனதில் மயூவை குற்றவாளியாக்கி அலுத்துக் கொண்டிருந்தவள் மாத்திரைகளின் உபயத்தால் அப்படியே மெத்தையில் சரிந்து கண்ணயர்ந்தாள்.

தன்னுடைய நெற்றியை வலுவான கரம் ஒன்று மெல்ல அழுத்துவதை உணர்ந்து முகம் சுருக்கியபடி திரும்பி படுத்தவள் சட்டென்று விழிகளை திறந்து பார்த்தாள்.

அகிலன் தான் உணர்ச்சி துடைத்த முகத்தோடு அவள் எதிரில் நின்றிருந்தான். தன் கண்களையே நம்ப முடியாமல் அவனையே வியப்புடன் பார்த்தவள் அது கனவா நனவா என்று குழம்பி தயக்கத்துடன் அவன் கரம் தொட்டாள்.

ஹிரணியின் ஐயம் கண்டு அதுவரை இருந்த இறுக்கம் மறைந்து அகிலின் முகத்தில் இளகுதன்மை தோன்ற, இரு புருவங்களையும் கேள்வியாய் ஏற்றி இறக்கினான்.

பளீரென்று முகம் மலர்ந்தவள், "நீங்கள் தானா?" என்றாள் ஆவலுடன்.

"வேறு யாரென்று நினைத்தாய்?" என்றபடி இலகுவாக கட்டிலில் அவளருகே அமர்ந்தான்.

"இல்லை..." என மெல்லமாக இழுத்தவள், "அதற்குள் மாலையாகி விட்டதா என்ன? அலுவலகத்தில் இருந்து வந்து விட்டீர்கள்!" என்று புருவம் சுருக்கி நேரம் பார்த்தாள்.

"இரண்டு மணி தான் ஆகிறதா?"

"ம்... நான் இன்று அலுவலகம் போகவில்லை!"

"ஏன்?" என்று வினவியவளுக்கு எதிர்பார்ப்பு கூடியது.

"சும்மா தான் ஆபிஸ் ரொம்ப போராக இருக்கிறது என்று லீவ் போட்டு விட்டேன். சரி... எழுந்து உட்கார், கஞ்சியை குடித்து விட்டு மாத்திரை போட வேண்டும் நீ!" என்று நகர முயன்றவனின் கரம்பற்றி தடுத்து நிறுத்தினாள் ஹிரணி.

"என் மேல் கோபமா?" என்றாள் சோகமாக.

"எனக்கு யார் மீதும் கோபம் வராது என்று நான் அன்றே சொன்னதாக ஞாபகம்!"

"பொய்!" என்றாள் அவள் விழிகளை இடுக்கி.

அவன் நெற்றியை சுருக்க, "கோபம் இல்லாமல் தான் நேற்று இரவு என் போர்வையை அப்படி இழுத்தீர்களா? அப்புறம் என்னை பட்டென்று வேகமாக கட்டிலில் சாய்த்தது, மாத்திரை அட்டையை தூக்கி என் மடியில் வீசியது..." என்றவள், இதற்கு பெயர் என்ன? என கைகளால் வினவினாள்.

அவளின் பாவனையில் உதடுகள் விரிய தன்னை மீறி அவள் முகத்தருகே ஆசையாக வலது கையை கொண்டு

சென்றவன் சட்டென்று பின்னே இழுத்துக் கொண்டான்.

"என்ன?"

"ஒன்றுமில்லை... நீ முதலில் இதை குடி, தொட்டுக்கொள்ள துவையலும் இருக்கிறது!" என்றவனிடம் மாட்டேன் என்று தலையாட்டினாள் பெண்.

"ப்ச்... என்ன லொள்ளா?"

அவள் ஆமோதிப்பாக தலையாட்ட, "வக்கீல் அம்மாவுக்கு ஜுரம் வரவும் மறைகழன்று விட்டது என்று நினைக்கிறேன். இதுவரை இல்லாத விளையாட்டு புத்தியெல்லாம் புதிதாக தோன்றுகிறது!" என கேலிப் பேசினான் அகில்.

அதுவரை அவனோடு உரிமையுடன் ஆர்வமாக ஊடலாடிக் கொண்டிருந்தவளின் முகம் மெல்ல இருண்டது.

'உண்மை தானே... இதுவரை நான் யாரிடமும் இப்படி விளையாடியது இல்லையே!' என்ற எண்ணம் தோன்றும் பொழுதே இதயம் துவண்டது.

பிறந்ததிலிருந்து பெற்றோர், உடன்பிறப்புகளின் தனிப்பட்ட அரவணைப்பு இல்லாமல் நூற்றில் ஒன்றாக கூட்டத்தோடு கூட்டமாக தட்டில் விழுந்ததை உண்டு, கிடைத்த இடத்தில் உறங்கிக் கொண்டு ஆசிரமத்தில் உள்ள மற்ற சிறுவர்களோடு சேர்ந்து விளையாடினாலும் அதிலும் பல நெறிமுறைகளை பின்பற்றி கொண்டு செல்ல குறும்புகள் செய்ய கூட வழியின்றி இந்த உலகில் ஜனித்து விட்ட ஒரே காரணத்திற்காக அநாதவராக வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது நெஞ்சில் அலைமோதியது.

ஹிரணியின் முகத்தில் இருந்த நகை துணி கொண்டு துடைத்தாற் போல் மறைந்து வாடவும் உள்ளம் உருக, "என்னம்மா?" என்று ஆதரவாக அவள் கரம் பற்றினான் அகில்.

விவரம் தெரிய ஆரம்பித்த சில வருடங்களுக்குள்ளாகவே தன் நிலையை பரிபூரணமாக புரிந்துக் கொண்டாள் ஹிரணி. தங்களை போன்றவர்கள் மற்றவரிடம் எதை எதிர்பார்த்தாலும் எதிரில் உள்ளவர்கள் இகழ்ச்சியாக தான் பார்ப்பார்கள் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டவள் கூடுமானவரை தன் ஏக்கங்களை அது அன்போ, உணவோ, உடையோ, படிப்போ எதுவென்றாலும் தனக்குள்ளேயே ஆழமாக புதைத்துக் கொண்டு வெளியே துணிச்சலான, தன்னம்பிக்கை பெண்ணாக வலம் வந்தாள்.

அதே திடம் இப்பொழுதும் கை கொடுக்க முகம் இறுக ஒன்றுமில்லை என மெதுவாக முனகியவள் அவன்புறம் விழிகளை திருப்பாமல் கஞ்சியை குடிக்க ஆரம்பித்தாள்.

அவளின் முகமாறுதல் கவலையை கொடுக்க, விவரம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டாள் அழுத்தக்காரி என்று தனக்குள் புலம்பியபடி அமைதியாக துவையல் கிண்ணத்தை எடுத்து அவளிடம் நீட்டினான் கணவன்.

அவனை நிமிர்ந்தும் பாராமல் சின்ன தயக்கத்துடன் அதை வாங்கியவள், "தேங்க்ஸ்!" என்று முணுமுணுத்து விட்டு அதில் சிறிது எடுத்து நாக்கில் வைத்தவுடன் முகம் மீண்டும் தெளிவானது.

"அக்கா... ஹர்ஷு அக்கா என்ன செய்கிறார்கள்? அவர்கள் சாப்பிட்டார்களா?" என்றாள் வேகமாக.

அவளையே குறுகுறுவென்று பார்த்தவன், "ம்... ஒன்றரைக்கு சாப்பிட்டார்கள்!" என்று விவரம் தந்தான்.

'ஏன் அப்படி பார்க்கிறான்? ஒருவேளை எதிரில் உள்ளவனை கேட்காமல் கீழே உள்ளவரை கேட்கிறாளே என்று எதுவும் எண்ணுகிறானா?'

"நீங்கள்?"

"நான்... என்ன? புரியவில்லை..."

"இல்லை... நீங்கள் சாப்பிட்டீர்களா?" என்றாள் மெல்லிய கூச்சத்துடன்.

"அடேங்கப்பா... ஒரு வழியாக ஞாபகம் வந்துவிட்டதா?"

அவன் சீண்டலில் லேசாக முகம் சிவந்தவளிடம், இல்லை என்று பதிலளித்தான்.

"ஐயோ... ஏன்? நீங்கள் போய் சாப்பிடுங்கள் நான் இதை குடித்து விடுகிறேன்!"

"இருக்கட்டும் பரவாயில்லை, தனியாக சாப்பிட போராக இருக்கிறது. நான் அப்புறம் சாப்பிடுகிறேன்!"

ஒரு சின்ன தயக்கத்திற்கு பிறகு, "நான் வேண்டுமென்றால் கீழே வரவா?" என்று கேட்டாள்.

"உன்னால் முடியுமா?"

"ம்... இப்பொழுது நன்றாக இருக்கிறது, ஜுரம் அவ்வளவாக இல்லை!"

"சரி அப்பொழுது சீக்கிரமாக மாத்திரை போட்டுவிட்டு வா, உள்ளேயே அடைந்து கிடப்பது உனக்கும் கஷ்டமாக தான் இருக்கும்!" என்றான் அகில்.

உணவு அறையில் அவனுக்கு அருகே நின்று பரிமாற முயன்றவளை முடிந்தவரை தடுக்கப் பார்த்தான் அவன்.

"இப்பொழுது என்ன நான் படுத்த படுக்கையாகவா இருக்கிறேன்? கொஞ்சமே கொஞ்சம் ஜுரம் வந்துவிட்டது அவ்வளவு தான். அதற்கென்னவோ கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும் பாத்திரத்தில் இருப்பதை கூட எடுத்து போட முடியாத நோயாளி போல என்னை ட்ரீட் பண்றீங்களே!" என்று முறைத்தவளை பார்த்து தலையில் கைவைத்து கொண்டவன் தட்டில் போடு என்றான்.

முகத்தில் புன்னகை துலங்க தனக்கு ஆசைஆசையாக பரிமாறியவளை கண்கொட்டாமல் பார்த்தவன், 'வரவர என் ரோலை இவள் எடுத்துக்கொண்டு என்னை மிகவும் குழப்புகிறாளே, ஒருநேரம் மலர்ந்த முகத்துடன் நெருங்கி

வருகிறாள் அடுத்தப்பொழுதோ தனக்குள் இறுகிக்கொண்டு முடிந்தவரை ஒதுங்கி போகிறாள். இவளை எல்லாம் எப்படி தான் நான் வழிக்கு கொண்டு வருவதோ?' என அயர்வுடன் எண்ணினான்.

அகில் சாப்பிட்டு முடித்ததும் ஹர்சுவின் அறைக்கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள் ஹிரண்மயி.

"ஏய் ஹிரணி... நீயே கீழே வந்து விட்டாயா? ஜுரம் பரவாயில்லையா... நான் அறைக்கு வந்து பார்த்தப்பொழுது நீ நன்றாக ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்தாய்!" என்று ஆவலுடன் தன் கரம்பற்றியவளின் கரத்தை மென்மையாக அழுத்தியவள், "சரியாகிவிட்டது அக்கா!" என்றபடி அருகில் அமர்ந்தாள்.

"தம்பி என்னை அடிக்கடி மாடியேற கூடாது நானே அவளை பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார்!"

ம்... என்று முறுவலித்தவளின் பின்னே வந்த அகில், "அவளுக்கு உங்கள் ஞாபகம் எப்படி வந்தது என முதலில் கேளுங்கள் அண்ணி!" என்று போட்டுக் கொடுத்தான்.

"ஏன்? அவர்களை நினைவுப்படுத்தி பார்க்கும் அளவுக்கு நான் எப்பொழுது மறந்தேன்?"

"வேறெப்பொழுது... என்னோடு ஆர்வமாக பேசும்பொழுது தான்!" என்றவன் கண்சிமிட்ட முகம் சிவந்தவள் அவனை போலியாய் முறைத்தாள்.

"ஆஹான்... அப்படியா ஹிரணி?"

"இல்லைக்கா... அவர் சும்மா பொய் சொல்கிறார்!"

"அச்சோ சத்தியம் அண்ணி, உங்கள் துவையலை வாயில் வைத்தப்பின் தான் உங்களை பற்றி விசாரித்தாள். ஆமாவா இல்லையா என்று நீங்களே கேளுங்கள்!" என்று சவால் விடுத்தான்.

'ஐயோ... ஆமாம், அதற்கு தான் இவன் அப்படி பார்த்தானா? அடப்பாவி!'

"என்ன மேடம் அப்படியே அமைதியாகி விட்டீர்கள்? பதில் சொல்லுங்கள்!"

"அது ஒன்றும் இல்லை அக்கா, அந்த பருப்பு துவையல் நீங்கள் நன்றாக செய்வீர்களே என்ற நினைவில் கேட்டேன். அதைத்தான் இப்படி கேலி செய்கிறார்!" என்று சமாளித்தாள் அவள்.

ஹிரணி இவ்வாறாக எந்த நேரம் தங்களை நெருங்கி வருவாள் அல்லது விலகிப் போவாள் என்பது புரியாமல் அனைவரையும் தீராத குழப்பத்திலேயே வைத்துக் கொண்டிருந்தாள்.

இந்நிலையில் ஹர்சிதாவை ஏழாம் மாதம் மாதாந்திர பரிசோதனைக்காக மருத்துவனை அழைத்து சென்று வந்த பவானி அன்று சோகமாக இருக்கவும் என்னவென்று கவலையுடன் விசாரித்தான் அகில்.

"ஏன்மா அண்ணியும், குழந்தையும் நன்றாக இருக்கிறார்கள் தானே?"

ஆங்... என்று தன் நினைவில் இருந்து மீண்டு அவனிடம் திரும்பியவர், "கடவுள் புண்ணியத்தில் அவர்கள் இருவரும் நலமாக இருக்கிறார்களடா!" என்று பூஜையறையை பார்த்து ஒரு நமஸ்காரம் போட்டார்.

"அப்புறம் என்னம்மா? உங்கள் முகமே சரியில்லையே... ஏதோவொரு மன உளைச்சலில் இருப்பது போல் தெரிகிறது!”"

"விமலை பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா அகில்!" என சட்டென்று அவனுடைய கரம்பற்றி ஏக்கத்துடன் கேட்டார் பவானி.

"இல்லைம்மா... நானும் எனக்கு தெரிந்த வழிகளில் எல்லாம் முயன்றுக் கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் பலன் தான் கிட்டமாட்டேன் என்கிறது!"

"இன்னும் எத்தனை நாட்களுக்கு தான்டா அந்த அப்பாவிப்பெண்ணை இப்படி வயிற்றுப்பிள்ளையோடு ஏங்கவிடுவது?" என்று கண்ணீர் உகுத்தார் அவர்.

"தனக்குள் அத்தனை வேதனையையும் புதைத்துக்கொண்டு நமக்காக தைரியமாக இருப்பது போல் நடிக்கிறாள்டா அவள். எனக்கு தெரியகூடாது என்று ஒவ்வொரு இரவிலும் ஓசையின்றி அழுதே கரைகிறாள்!"

எப்படி இதை சரி செய்வது என ஒன்றும் வழி புலப்படாமல் தன் தாயின் வார்த்தைகளை முகம் கலங்க கேட்டபடி வேதனையுடன் அமர்ந்திருந்தான் அகில்.

20

"ஹர்சும்மா!"

"ஆங்... சொல்லுங்கம்மா!" என ஏதோ யோசனையில் இருந்தவள் பவானியிடம் திரும்பினாள்.

"இப்பொழுது உனக்கு ஏழாம் மாதம் தொடங்கி விட்டது. வளைகாப்பு செய்ய வேண்டும்!" என்றார் தயக்கத்துடன்.

இரவு உணவு முடிந்து அனைவரும் வரவேற்பறையில் குழுமியிருந்தனர். வீட்டில் எந்த ஒரு பொதுவான முடிவையும் அனைவரும் கலந்தாலோசித்து தான் எடுக்க வேண்டும் என்பது பவானியின் கொள்கை. அதனால் வேலையிருக்கிறது என்று அறைக்கு செல்ல முயன்ற ஹிரணியையும் அங்கேயே அமரச் செய்திருந்தார்.

அவர் சொல்லை கேட்டு குதூகலித்தவள், "ஓ... சூப்பர், ரொம்பவும் நல்ல விஷயம் அத்தை. நாளெல்லாம் பார்த்து விட்டீர்களா?" என்றாள் பவானியிடம்.

"இனி தான் பார்க்க வேண்டும்!"

"இல்லை... வேண்டாம்மா!" என்றாள் ஹர்சிதா மெதுவாக.

அவள் மனம் புரிந்து பவானி அமைதி காக்க, "ஏன்கா?" என்று புருவம் சுருக்கினாள் ஹிரணி.

"என்னால் அவரில்லாத எந்த ஒரு விசேஷத்தையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை!" என்று விமலின் நினைவில் முகம் கசங்கினாள் அவன் காதலி.

"உங்களுக்கு பைத்தியம் முற்றிக் கொண்டே போகிறதே தவிர தெளியமாட்டேன் என்கிறது!"

அகிலின் முகம் இறுக, "இல்லை ஹிரணி அவர்..." என்று பேச முயன்ற ஹர்சுவை ஆத்திரத்துடன் தடுத்தாள் ஹிரணி.

"எத்தனை சொன்னாலும் ஏன்கா நீங்கள் புரிந்துக்கொள்ள மறுக்கிறீர்கள்? உங்களை ஏமாற்றி சென்ற ஒருவர் இன்னமும் தேடி வருவார் என ஏன் முட்டாள்தனமாகவே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஹிரணி!" என்று பவானி அதட்ட, "நீங்கள் சும்மா இருங்கள், உங்கள் மகனுக்காக எதுவும் சப்போர்ட் பண்ணாதீர்கள். யாருமில்லாமல் அநாதையாக இருக்கின்ற பெண் தானே என்று உங்கள் மகன் சுலபமாக அக்காவை ஏமாற்றி சென்று விட்டார். இப்பொழுது எங்கே எந்த பெண்ணை ஏமாற்றி கொண்டிருக்கிறாரோ... அவரை போன்றவர்களால் தான் எங்களை மாதிரி அநாதைகள் உருவாகிறோம். தன் மகிழ்ச்சி தான் எல்லாவற்றிலும் பெரிது என்றெண்ணும் சுயநலப்பிண்டங்கள்!" என்றாள் ஆவேசமாக.

"அவரை அப்படி எல்லாம் தவறாக சொல்லாதே... அவர் மிகவும் நல்லவர். எங்கிருந்தாலும் நிச்சயம் எனக்காக வருந்திக் கொண்டிருப்பார்!" என்று தன் முகத்தை மூடிக்கொண்டு வெடித்து அழ ஆரம்பித்தாள் ஹர்சிதா.

"சும்மா சும்மா பேசினதையே பேசிக் கொண்டிருக்காதீர்கள். நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் உங்கள் கழுத்தில் தாலி கட்டிய ஆள் சரியான..."

"ஹிரணி..." என்று கத்தியபடி வேகமாக எழுந்து வந்து அவள் தோள்களை பற்றி பலமாக உலுக்கினான் அகில்.

"போதும் வாயை மூடு!"

"ஏன் உங்கள் அண்ணனை சொல்கிறேன் என்று கோபம் வருகிறதா? இன்னமும் தன் வாழ்க்கையை பார்ப்போம் என்றில்லாமல் வராத ஆளுக்காக ஏங்கி ஏங்கி உடலை கெடுத்துக் கொண்டிருக்கிறார்களே... நான் பேசுவதில் என்ன தவறு?" என்று ஆங்காரமாக வினவினாள்.

"நீ பேசுவது எல்லாமே தவறுதான்டீ... யாரென்ன என்று எதுவும் தெரியாமல் அவனை பற்றி பழித்து பேச உனக்கு

எந்த உரிமையுமில்லை!" என்றவன் எகிற, அவனுடைய 'டீ'யில் அவளும் கொதித்தெழுந்தாள்.

"மரியாதை கொடுத்து மரியாதை வாங்குங்கள்... தாலி கட்டிவிட்டதால் மட்டும் நான் ஒன்றும் உங்கள் அடிமை கிடையாது!"

"முதலில் எனக்கு நல்ல மனைவியாக நடக்கப்பார் பிறகு அடிமைத்தனத்தை பற்றி பேசுவாய்!" என்றான் அவனும் அதே கோபத்தோடு.

ச்சே... என்று முகத்தை திருப்பியவள் உடல் நோக அழுது கொண்டிருந்த ஹர்சுவை கண்டு மேலும் கடுப்படைந்தாள்.

விறுவிறுவென்று அவளிடம் சென்றவள், "இங்கே பாருங்கள்... எதற்காக இப்படி உங்களையும் வருத்திக் கொண்டு, வயிற்றில் இருக்கும் ஏதுமறியா சிசுவையும் வருத்துகிறீர்கள்? முதலில் அழுகையை நிறுத்துவிட்டு உண்மையை எதிர்கொள்ளுங்கள்!" என்றாள்.

'இவள் அடங்கவே மாட்டாள்!' என ஆத்திரத்துடன் பற்களை கடித்து தன் பிடறியை அழுந்த தடவினான் அகில்.

சூழ்நிலை திசைமாறி சின்ன மருமகள் பிரச்சினையை பெரிதாக்குவது புரிந்தாலும், மகன் சண்டையிடும் பொழுது தானும் மேலே குறுக்கிட வேண்டாம் என்று பொறுமையாக இருந்தார் பவானி.

"இல்லை ஹிரணி... அவர் வருவார், நிச்சயம் என்னை தேடி வருவார்!" என்று சின்ன விசும்பலுடன் கூறிய ஹர்சுவை சலிப்புடன் பார்த்தாள் அவள்.

"எந்த நம்பிக்கையில் சொல்கிறீர்கள்?"

"அவர் என் மேல் வைத்திருக்கும் ஆழ்ந்த நேசத்தின் நம்பிக்கையில், எங்கள் காதல் மேல் உள்ள நம்பிக்கையில்!" என்றாள் கேவிக்கொண்டே.

"மண்ணாங்கட்டி... அதுதான் உங்கள் காதல் பற்றி எல்லா நியுஸ்சேனல்களிலும் கிழிகிழியென்று கிழிக்கிறார்களே... ஊரில் எத்தனை பெண்களை அந்த கேவலமான பெயர் சொல்லி தினமும் ஏமாற்றுகிறார்கள், சித்திரவதை செய்து கொல்கிறார்கள். இன்னமும் உங்களை போன்ற ஏமாறும் பெண்கள் மட்டும் மாறுவதேயில்லை!" என்று கடுகடுத்தாள்.

"யார் எப்படியோ எனக்கு தெரியாது, ஆனால் இவர் மிகவும் நல்லவர்!" என்று அழுந்தக் கூறினாள் ஹர்சு.

"ஆமாம்... ஆமாம்... எல்லாப் பெண்களும் ஏமாறும் வரை இப்படி தான் நம்புகிறார்கள்!"

"இல்லைம்மா..." என்று ஹர்சு மறுத்து திணற, அவளை வேகமாக தடுத்தான் அகில்.

"அண்ணி... இந்த முட்டாளுக்கு எடுத்து சொல்லி புரிய வைக்கும் அளவுக்கு இப்பொழுது உங்கள் உடம்பில் சிறிதும் தெம்பு இல்லை. நீங்கள் போய் முதலில் ஓய்வெடுங்கள் அவளுக்கு எல்லாம் நான் சொல்கிறேன்!"

"இல்லை தம்பி... முதலிலிருந்தே இவள் அவரை நம்ப மறுக்கிறாள்!" என்றாள் அவள் ஆற்றாமையோடு.

"நான் தான் சொல்கிறேனே... அவள் உங்களை மாதிரி மென்மையான மனம் கொண்டவளில்லை. எதையுமே எடுத்தோம் கவிழ்த்தோம் என்று அதிரடியாக சிந்திப்பவள் நான் புரிய வைக்கிறேன். அம்மா... அண்ணியை ரூமிற்கு அழைத்து செல்லுங்கள்!"

ம்... என்றவர் ஹர்சுவின் கரம்பற்றி எழுப்பினார், அவர்கள் இருவரும் அறைக்குள் மறைந்ததும் எதிரில் முகம் இறுக நின்றிருந்த தன் மனைவியின் கரம்பற்றி இழுத்தான் அகில்.

அவனை பலமாக முறைத்தவள் தன் கையை உதற முயல அவன் பிடி இரும்பாக இருந்தது, "ப்ச்... கையை விடுங்கள்!" என்றவளிடம் முடியாது என்றபடி

தரதரவென்று தங்கள் அறைக்கு இழுத்து சென்று கதவை தாளிட்டான்.

"இப்பொழுது எதற்காக கதவை தாளிடுகிறீர்கள்?" என்றாள் கோபமாக.

"ஆங்... வேறெதற்கு? உன்னை ரேப் பண்ணுவதற்காக தான்!" என்று அலட்சியமாக உதட்டை வளைத்து குளியலறைக்குள் நுழைந்துக் கொண்டவனை வசைமாறிப் பொழிந்தவள் அவன் வெளியே வந்ததும் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள்.

"இங்கே பாருங்கள்... இந்த மாதிரி கேலியெல்லாம் என்னிடம் வேண்டாம் எனக்கு பிடிக்காது. நான் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன்!"

"தெரியும்... நல்லா ஜங்குஜங்கென்று கத்துவாய். வேறென்ன தெரியும் உனக்கு?"

புசுபுசுவென அனல் மூச்சை வெளியிட்டவள், "உங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே தெரியாது என்பது போல் பேசுகிறீர்களே... கீழே அப்படிதான் அக்காவிடமும் என்னை முட்டாள் என்கிறீர்கள்!" என்று முறைத்தாள்.

"பின்னே இல்லையா... மெத்த படித்து வேலைக்கு சென்று சம்பாதித்தால் மட்டும் போதுமா? உலகம் ஞானம் சுத்தமாக இல்லை!" என்று தோள்களை குலுக்கினான்.

"எதை வைத்து எனக்கு உலக ஞானம் இல்லை என்று சொல்கிறீர்கள்? உங்களுக்கு ரொம்ப இருக்கிறதோ!" என்றாள் ஹிரண்மயி ஏளனமாக.

"நான் அப்படி சொல்லவில்லைம்மா... ஆனால் ஒருசில விஷயங்களில் உன்னை விட நான் தெளிவானவன் தான்!" என்றபடி சென்று கட்டிலில் சாய்ந்தான்.

"அதென்ன உங்கள் அண்ணாவை பற்றிதானே!" என்று இகழ்ச்சியாக அவனை பார்த்தாள்.

அவன் பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக விழிகளை மூடிக்கொள்ள, 'என்ன இவன் என்னவோ இவள் புத்தியை தெளிய வைக்கிறேன் அது இதுவென்று கீழே கதையளந்து விட்டு இங்கே வந்து அமைதியாக படுத்துக் கொண்டான்?' என்று யோசித்தாள்.

"தூங்குகிறீர்களா?"

"இல்லை... டென்னிஸ் விளையாடுகிறேன்!"

"ப்ச்... விளையாடாதீர்கள்!"

பதிலின்றி இருந்தவனின் அருகில் சென்று அமர்ந்தவள், "எனக்கு ஏதோ கதை சொல்லப்போவதாக அக்காவிடம் சொல்லிவிட்டு இங்கே வந்து அமைதியாகி விட்டீர்கள்!" என்றாள்.

"இட்ஸ் டோட்டலி வேஸ்ட் ஆஃப் டைம், அண்ணியை சமாளிக்க அப்படி சொன்னேன்!"

"அதாவது..."

"மனதை நிச்சலனமாக வைத்திருப்பவர்களிடம் சொல்லி புரிய வைப்பது சுலபம். இது இப்படிதான் என்ற முடிவில் இருப்பவளிடம்... ம்..." என்று விழிகளை திறந்து அவளை அர்த்தமாய் பார்த்தவன், "என்ன பார்க்கிறாய்? இதுவரை விமலை பற்றி உனக்கு என்னென்ன விவரம் தெரியும்?" என்றவனுக்கு பதில் கூற இயலாமல் தடுமாறினாள் ஹிரணி.

ஹர்சிதா காதலித்து மணந்து கொண்டாள், சில காலம் வரை அவளுடன் வாழ்ந்துவிட்டு அவள் கணவன் அவளை பிரிந்து சென்றுவிட, அநாதரவாய் வயிற்றுப்பிள்ளையோடு தவித்தவளை, இவள் இங்கே கட்டாயப்படுத்தி கொண்டு வந்து சேர்த்திருக்கிறாள். மற்றபடி... எந்நேரமும் அவனை நினைத்து வருந்துபவளை இவள் அதட்டியிருக்கிறாளே தவிர விமலை பற்றி எதையும் பேசவிட்டதேயில்லை.

அதுவரை இருந்த ஆக்ரோஷம் தண்ணீர் தெளித்த பாலாக இறங்க அவனை தயக்கத்துடன் நோக்கியவளை கண்டு இதழ்களை பிதுக்கியவன், "இதுமட்டுமென்று இல்லை... எதற்கெடுத்தாலும் ஆண்களால் தான் உலகில் அநாதை குழந்தைகள் உருவாகிறார்கள் என்று குதிக்கிறாயே. அதுகுறித்த ஆய்வுகளை நிறைய தேடிப்பிடித்து படித்துப்பார் உண்மை என்னவென்று உனக்கே தெளிவாகப் புரியும். நீ உன் குணத்தை நிறைய மாற்றிக்கொள்ள வேண்டும் ஹிரணி, இதற்கென்று நான் சொல்லவில்லை உன்னுடைய பிரொஃபஷனுக்கு இமோஷனல் ஆகவே ஆகாது பொறுமை மிகவும் முக்கியம். பார்க்கும் எதையுமே ஜட்ஜ்மென்டலாக பார்க்காதே... தீர விசாரித்து முடிவெடு. அப்பொழுது தான் உன்னை நம்பி வருபவர்களின் பிரச்சினைக்கு நீ சரியான தீர்வை சொல்ல முடியும். இதை ஜஸ்ட் உன் மேல் உள்ள நல்ல எண்ணத்தில் சொல்கிறேன், பிறகு உன் விருப்பம். என் அண்ணனுக்காக நான் மேல்பூச்சு பேசுவதாக கூட நீ நினைக்கலாம். ஓகே... குட்நைட்!" என்றபடி மீண்டும் விழிகளை மூடிக்கொண்டான்.

சற்று நேரம் அகில் கூறியதையெல்லாம் தனக்குள் ஆலோசித்து பார்த்தவளுக்கு அதில் இருக்கும் நிதர்சனம் புரிய, 'அப்பொழுது இவர்கள் அனைவரும் கூறுவது போல் இவன் அண்ணன் நல்லவரா?' என்று முதல் முறையாக தன் மச்சினனுக்கு மரியாதை கொடுத்து குழப்பத்துடன் சிந்தனை வயப்பட்டாள் ஹிரணி.

"அப்பொழுது உங்கள் அண்ணன் நல்லவர் தான் என்கிறீர்களா?" என்று அவனிடம் வேறு அவள் கேள்வி கேட்க, "நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை!" என கழன்றுக் கொண்டான் அவள் கணவன்.

"ப்ளீஸ்... ப்ளீஸ்... என்ன நடந்தது என்று எனக்கு கொஞ்சம் தெளிவாக விவரம் சொல்லுங்களேன்!"

"ஏன்? அதை தெரிந்து நீ என்ன செய்யப் போகிறாய்? உனக்கு தான் அவனை குறித்து எந்தவொரு நல்ல அபிப்ராயமும் இல்லையே..."

"இல்லையில்லை... இப்பொழுது கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. அவர் நல்லவர் தான் என்றால் ஏன் இத்தனை மாதங்களாக அனைவரையும் விட்டுப் பிரிந்திருக்கிறார்?"

"அதுதான் எங்களுக்கும் புரியவில்லை, அவன் எங்கள் அனைவரின் மீதும் மிகவும் பாசமாக இருப்பவன். எங்களை பாராமல் அவனால் ஒருநாள் கூட இருக்கவே முடியாது. வீட்டை விட்டுப் பிரிய மனம் வராமல் பட்டப்படிப்புகள் கூட உள்ளூரில் உள்ள கல்லூரியில் சேர்ந்து தான் படித்தான். அப்படிப்பட்டவன் எங்கள் அம்மாவை எதிர்த்து அண்ணியை திருமணம் செய்துக் கொண்டான் என்றால் நீயே அவன் காதலை பற்றி சரியாக தெரிந்துக்கொள்!" என்றவன் தன் அண்ணனை குறித்த நினைவில் ஆழ்ந்தான்.

* * *

"விமல்!"

"ஆங்... சொல்லுங்கம்மா!" என்றபடி எதிரே வந்தவனை நோக்கி கனிவுடன் முறுவலித்தார் பவானி.

"நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா... அம்மாவுக்கு பேங்கில் முக்கியமான ஆடிட்டிங் என்பதால் அவர்களால் வரமுடியவில்லை. நீங்கள் எதுவும் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று மறக்காமல் உன் சித்தியிடமும், சின்னப்பாட்டியிடமும் சொல்லிவிடு இல்லையென்றால் வேலைக்கு போவதால் எங்கேயும் வருவதில்லை மதிப்பதில்லை என புலம்புவார்கள்!" என்றார் அலுப்போடு.

"ஹஹா... மறக்காமல் பாட்டியிடம் என் அம்மாவுக்கு ஸ்ட்ராங்க் ரெக்மென்டேஷன் போட்டு விடுகிறேன். ஓகே?" என்று அவரை தோளோடு அணைத்து கண்சிமிட்டினான் விமல்.

அவன் கன்னம் கிள்ளியவர், "நீ என்பதால் உடனே ஒத்துக்கொண்டாய்டா. இதுவே உன்னுடைய தம்பியாக

இருந்திருந்தால் என்னிடம் ஆயிரெத்தெட்டு வம்பிழுத்து டென்ஷனாக்கி பிறகுதான் சரி என்று சொல்லியிருப்பான்!" என்று இளைய மகன் நினைவில் புன்னகை பூத்தார்.

"ம்... ம்... ஆனாலும் அவன் குறும்பில்லாமல் வீடே வெறிச்சென்று அமைதியாக இருக்கிறதும்மா. இன்னும் ஐந்து மாதங்களாகும் அவன் திரும்பி வருவதற்கு!" என்று பெருமூச்சுவிட்டவனை கேலி செய்து சிரித்தார் பவானி.

"நீதான்டா இப்படி தம்பி தம்பி என்று அவனுக்காக ஏங்குகிறாய்... அவனெல்லாம் அங்கே ஜாலியாக சுற்றிக் கொண்டிருப்பான்!"

"சரி இந்த வயதில் சுற்றாமல்... நன்றாக என்ஜாய் பண்ணிட்டு வரட்டும். எனக்கு தான் அதைப்போலெல்லாம் வெகுநாட்களுக்கு வீட்டைவிட்டு பிரிந்திருக்க மனம் வருவதில்லை. சரிம்மா... நேரமாகி விட்டது, நீங்களும் கிளம்பிவிட்டீர்கள் என்றால் உங்களை பாங்கில் விட்டு விட்டு நான் அப்படியே கோவிலுக்கு சென்று விடுவேன்!"

"இதோ ஒரு ஐந்தே நிமிடம்!" என்று அறைக்கு விரைந்தார் பவானி.

21

பவானியின் ஒன்றுவிட்ட சகோதரி சுமித்ராவின் பேத்தியுடைய காதணி விழாவிற்காக தான் விமலன் அவர்களுடைய குலதெய்வக் கோவிலுக்கு தன் இருசக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்தான்.

சுமித்ராவின் அம்மாவும், பவானியின் அம்மாவும் உடன்பிறந்த சகோதரிகள். குணத்தில் அப்படியே பவானிக்கு நேர்மாறானவர் சுமித்ரா, எதிலும் படபடவென்று மனதில் நினைப்பதை பட்டென்று பேசிவிடுபவர். அதனால் தான் பவானி கவலைக்கொண்டதே, சுமித்ராவிற்கு ஒரு மகன், மற்றும் மகள். மகனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை, மகள் வயிற்று பேத்திக்கு தான் அன்று முடியிறக்கி காது குத்துகிறார்கள்.

விமல் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு கோவிலினுள் செல்ல, எதிரே சித்தியின் மகன் தேவா ஓடிவந்து அவனை கட்டிக்கொண்டான்.

"ஹாய் அண்ணா!"

"டேய்... எப்படிடா இருக்கிறாய்?" என்று வினவியபடி அவன் தோளில் ஆசையுடன் கைப்போட்டான் இவன்.

"ஃபைன் அண்ணா, எங்கே பெரியம்மா வரவில்லையா?"

"இல்லைடா... அம்மாவிற்கு ஆசைதான். ஆனால் இன்று என்று பார்க்க ஆடிட்டிங்கில் மாட்டிக் கொண்டார்கள். வரமுடியவில்லையே என்று ஒரே கவலை!"

"சரி விடுங்கள்... என்ன செய்வது? வேலையை பார்க்க வேண்டுமே, ஒரு வீக்கென்ட் வீட்டிற்கு அழைத்து வாருங்கள்!"

"கண்டிப்பாக!" என்றவன் எதிரே வந்த மீனாவை பார்த்து, "ஹாய் மீனு!" என அவளிடம் முறுவலித்து விட்டு, அவள்

கையில் இருந்த மூன்று வயது பெண் குழந்தையை ஆசையாக வாங்கிக் கொண்டான்.

"ஹேய் செல்லக்குட்டி... மாமாவிடம் வாங்க. இன்னிக்கு குட்டிப்பாப்பாவுக்கு புது தோடெல்லாம் போடப் போறாங்களா?" என்றவன் கொஞ்சலாய் வினவவும், ஈயென்று தனது பச்சரிசி பல்லைக் காட்டி மண்டையை மண்டையை ஆட்டியது குழந்தை.

அதைக்கண்டு புன்னகைத்த மீனா, "என்னவோ அண்ணா ஒரே குஷியாக தலையை தலையை ஆட்டுகிறாள். காது குத்தும் பொழுது எப்படி ஆர்ப்பாட்டம் செய்வாளோ என்று எனக்கு பயமாக இருக்கிறது!" என கவலையோடு புலம்பினாள்.

"இவள் பயப்படுவாளோ என்னவோ தெரியவில்லை அண்ணா, ஆனால்... அவள் அம்மா ஒரு வாரமாக ஏகத்திற்கும் புலம்புகிறாள்!" என தன் தமக்கையை கேலி செய்து சிரித்தான் தேவா.

"வாடாப்பா... வழக்கம் போல உன் அம்மா வரவில்லையா? சொந்தப் பந்தத்தை விட வேலையும், சம்பாத்தியமும் தான் முக்கியமாக போய்விட்டது அவளுக்கு!" என்று நொடித்தார் அருகில் வந்த சுமித்ரா.

"அப்படியெல்லாம் இல்லை சித்தி... அம்மா லீவெல்லாம் போட தயாராக தான் இருந்தார்கள். ஆனால் பாருங்கள் இந்த ஆடிட்டிங் வந்து மாட்டிக்கொண்டது அவர்கள் என்ன செய்வார்கள். இந்த வார ஞாயிறு கண்டிப்பாக வீட்டிற்கு வருவதாக சொல்ல சொன்னார்கள்!"

"என்னவோ போ நீ சொல்வதால் ஏற்றுக் கொள்கிறேன். மீனா... குழந்தையை முடியிறக்கும் இடத்திற்கு அழைத்து போ நேரமாகிவிட்டது!" என்று அவளை விரட்டினார்.

முடியிறக்கி முடித்ததும் குழந்தையை குளிப்பாட்டி விட்டு அருகில் இருந்த கோவில் சுற்றுப்பிரஹாரத்தின் ஒருபுறம் அவளுக்கு பட்டுப்பாவாடை சட்டை அணிவித்து கொண்டிருந்தாள் மீனா. சுமித்ரா உடனிருந்து

குழந்தைக்கு அணிவிக்க வேண்டிய நகைகளை எடுத்துக் கொடுத்து கொண்டிருந்தார்.

இங்கே கோவில் மண்டபத்தில் சுமித்ராவின் அம்மா அவர் கொடுத்து விட்டு போயிருந்த பைகளிலிருந்து பொருட்களை எல்லாம் எடுத்து உறவுப்பெண்களின் உதவியோடு சீர்வரிசை தட்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்.

"இந்த சாக்லேட் பாக்கெட் எங்கே காணவில்லை, அநேகமாக அவள் கைப்பையில் வைத்திருப்பாளாக இருக்கும். அதையும் கொடுத்து விட்டால் தட்டில் கொட்டி அடுக்குகிற வேலையை முழுவதுமாக முடித்துவிடலாம். இந்த தேவா பையன் எங்கே?" என்று தன் பேரனை சுற்றும்முற்றும் தேடினார்.

"விமலா... இங்கே கொஞ்சம் வாப்பா!"

உறவினர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தவன் அவரிடம் வந்து, "என்ன பாட்டி?" என்று பதவிசாக வினவினான்.

"உன் சித்தி என்ன செய்கிறாள் என்று பார், சீக்கிரம் வரச்சொல்லு. பாட்டி அனைத்து சீர்வரிசை தட்டுகளையும் அடுக்கிவிட்டார்கள் சாக்லேட் மட்டும் தான் பாக்கி என்று சொல்லி அவளை இங்கே அழைத்து வா!"

"சரி பாட்டி!" என்றவன் சுமித்ராவை தேடிச்சென்றான்.

"படித்து வேலைக்கு செல்கிறாயே தவிர உனக்கு கொஞ்சம் கூட அறிவே கிடையாது மீனா!" என்ற தன் சித்தியின் வசைப்பாட்டு கேட்டு இவன் கால்கள் தேங்க, சற்று தள்ளி ஒரு இளம்பெண் நின்றுக் கொண்டிருப்பது அவன் பார்வை வட்டத்தில் தெரிந்தது.

"ஏன் இப்பொழுது என் அறிவில் என்ன குறைக்கண்டு விட்டீர்கள்?" என்றபடி குழந்தையின் கழுத்தில் சிறிய மாங்காய் மாலையை அணிவித்தாள் மீனா.

தன்னை போல தான் சித்தியின் மொழியை கேட்டு அந்தப் பெண்ணும் தயங்கி நிற்கிறாள் என்பது புரிய தான் முன்னே செல்லலாமா என்று விமல் எண்ணிய நேரம் மேலும் கடுகடுக்க ஆரம்பித்தார் சுமித்ரா.

"பின்னே என்னடி... உன்னுடன் வேலை செய்யும் அந்த ஹர்சிதாவை எல்லாம் எதற்குடி குழந்தையின் விசேஷத்திற்கு அழைத்தாய்? உன் வயதாகிறது அவளுக்கு, இருபத்தியேழு வயது வரை திருமணம் செய்யாமல் செய்து வைக்க ஆளில்லாமல் அநாதையாக ஆசிரமத்தில் வளர்ந்தவளை எல்லாம் அழைத்தால் நம் குழந்தையையும் உன் வாழ்க்கையையும் பார்த்து அவள் கண்திருஷ்டி பட்டு அமைதியாக இருக்கின்ற உன் வாழ்வில் ஏதாவது பிரச்சினை உருவாகிவிட்டால்... உனக்கெல்லாம் என்ன தெரியும்?" என்று சாடினார்.

'ஐயோ பாவம்... எந்தப் பெண்ணை இப்படி குறை சொல்கிறாரோ!' என்றபடி திரும்பியவன் எதிரே இருந்த பெண்ணின் முகத்தை கண்டு திகைத்தான்.

சற்றுமுன் வரை தயக்கத்தை வெளிப்படுத்திய முகம் தற்பொழுது சொல்லொண்ணா விதத்தில் வேதனையை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தது. முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றிமறைய தன்னுடைய விழிகள் கலங்குவதை உணர்ந்து வேகமாக அங்கிருந்து நடந்து சென்றாள் அவள்.

மறுபுறமாக பார்த்தபடி நின்றிருந்தவள் அங்கே இருந்த விமலை கவனிக்கவில்லை, 'அப்பொழுது சித்தி சொன்ன ஹர்சிதா இவள் தானா... ஓ காட்!' என்று தவிப்புடன் அவள் சென்ற திசையை பார்த்தான் அவன்.

"இந்த மாதிரி போலியான வெற்று விஷயமெல்லாம் எனக்கு தெரியாமலே இருக்கட்டும். அவளை பற்றி என்ன தெரியும் உங்களுக்கு மிகவும் நல்லப்பெண். அட அண்ணா... இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று வினவினாள் மீனா.

தன் எதிரே வந்துவிட்டவர்களை கண்டு வேகமாக தன்னை சமாளித்துக் கொண்டவன், "இல்லைம்மா... சித்தியை பாட்டி கூப்பிட்டார்கள் என்று சொல்ல வந்தேன்!" என்றான்.

"ஓ... சீக்கிரம் வாம்மா!" என்றபடி இருவரும் கோவில் மண்டபத்திற்கு சென்றனர்.

அவர்கள் தலை மறைந்ததும் கவலையுடன் ஹர்சிதாவை தேட ஆரம்பித்தான் விமல். இந்த சித்தி அவளை குறை கூறிய வார்த்தைகள் அவள் காதிலேயே விழுந்து விட்டதே. ப்ச்... என்றபடி கோவிலை சுற்றி வந்தவன் அம்மன் சன்னதியில் அவள் கரம் கூப்பி மண்டியிட்டிருப்பதை கண்டு விரைவாக அருகில் சென்று தூண் மறைவில் மறைந்து நின்றுக் கொண்டான்.

கூப்பிய கையில் தலை கவிழ்ந்திருந்தவள் நிமிர விழிகள் இரண்டும் சிவந்திருந்தது. சுற்றும்முற்றும் பார்த்து யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு அம்மனிடம் பேச ஆரம்பித்தாள் அவள்.

"அம்மா... பெற்ற தாயென்று யாருமில்லாமல் உன்னை தான் அனுதினமும் அம்மாவாக நினைத்து தொழுகிறேன். சத்தியமாக... அவர்கள் சொன்னது போல் என் மனதில் எந்தவித பொறாமையோ, வயிற்றெரிச்சலோ துளியும் இல்லை. ஆனால் ஒருவேளை எனக்கே தெரியாமல் என் தனிமையினால் உருவான அடிமனதின் ஏக்கங்கள் எதுவும் மீனாவையோ, அவள் குழந்தையை, குடும்பத்தை பாதித்து விடக்கூடாது. எனக்கு ஒரு வாழ்க்கையை அமைத்து தா என்று தான் உன்னிடம் வேண்டுகிறேனே தவிர மற்றவர் வாழ்க்கையை கண்டு நான் பொறாமை கொள்ளவில்லை. தயவுசெய்து அந்த குழந்தைக்கு நல்ல ஆரோக்கியமான வாழ்வை கொடுங்கள்!" என்று விழிகள் மூடி தியானித்தவள் மெதுவாக எழ, விமல் இன்னும் ஒதுங்கி நின்றான்.

முகத்தை அழுந்த துடைத்து தன்னை சீர்ப்படுத்திக் கொண்டவளின் விழிகளில் புதியதொரு தெளிவு பிறக்க

நிம்மதியாக மண்டபம் நோக்கி நடந்தாள் ஹர்சிதா.

இமைக்க மறந்து விலகிச் செல்லும் அவளையே கனிவுடன் பார்த்திருந்தான் விமல். அவள் வார்த்தைகள் செவியில் ரீங்காரமிட, இவளை விடவும் நல்ல மனதுள்ள பெண் இந்த பாரில் உண்டோ என மெய்சிலிர்த்து நின்றான்.

குழந்தைக்கு காது குத்தும் இடத்தை அடைந்தவன் அங்கே முகம் மாறாமல் இதழில் ஒட்டிவைத்த புன்சிரிப்போடு ஒரு ஓரமாக நின்றிருந்த ஹர்சிதாவை ஆவலுடன் பார்வையால் படம் பிடிக்க ஆரம்பித்தான்.

மனதிற்குள் ஆயிரம் புழுக்கங்கள் இருந்தாலும் எதையும் வெளிக்காட்டாமல் அமைதியின் உருவாக நின்றிருந்தவள் இவன் மனதைக்கவர, இவளே தன்னுடைய வாழ்க்கை துணைவி என்று அந்த நொடிப் பொழுதில் தீர்மானமாக முடிவெடுத்தான் விமலன்.

அதன் பின் அவன் அவளை பார்க்கும் பார்வையே முற்றிலும் மாறிப்போனது. இவள் என்னவள் என்று இதயம் பறைசாற்ற உரிமையுடன் அவன் விழிகள் எதிரே நின்ற பெண்மையை ஆர்வமாக அளவெடுத்தது.

சாந்தம் தவழும் அந்த மென்மையின் அழகில் தன்னை தொலைக்க துவங்கியவன் அவளிடம் அசைவை உணர்ந்து நினைவை மீட்டான். குழந்தைக்கு ஒருவர் பின் ஒருவராக பரிசளித்துக் கொண்டிருக்க இவளும் அருகில் சென்றாள்.

தன் கையில் இருந்த அழகான வேலைப்பாடமைந்த பிராக் ஒன்றை குழந்தையிடம் அன்பளிப்பாக கொடுத்தவள் அதன் பட்டுக்கன்னத்தை ஆசையுடன் வருடிவிட்டு மீனாவிடம் விடைப்பெற முனைந்தாள்.

"ஏய்... என்ன அதற்குள் கிளம்புகிறேன் என்கிறாய்? ஒழுங்காக சாப்பிட்டு விட்டு தான் நீ போகிறாய்!" என்று உரிமையுடன் தோழியை அதட்டினாள் அவள்.

"இல்லைப்பா... நம் டிபார்ட்மென்டில் நீயும் லீவெடுத்து நானும் பர்மிஷன் கேட்டதற்கே மேனேஜர் மிகவும் சலித்துக் கொண்டார். நேரமாகி விட்டது, இன்னும் இரண்டு பஸ் வேறு மாறிப் போக வேண்டும்!"

"பரவாயில்லை... அந்தப் பக்கமாக செல்லும் யாரையாவது நான் டிராப் பண்ண சொல்கிறேன்!"

"அச்சோ... நீ வந்திருக்கும் விருந்தினர்களை முதலில் கவனிம்மா, எனக்கென்ன நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"இல்லை... நீ சாப்பிட்டு..."

"ஏய் மீனா... நேரமாகி விட்டது என்று அவள் தான் இத்தனை தூரம் எடுத்து சொல்கிறாள் இல்லை... பிறகு ஏன் வற்புறுத்துகிறாய்? இன்னும் உறவினர்கள் வேறு பரிசு கொடுக்க வரிசையில் காத்திருக்கிறார்கள் பார்!" என்று மகளை கடிந்துக் கொண்ட சுமித்ரா, "நீ போய்ட்டு வாம்மா!" என ஹர்சுவிடம் பற்களை காட்டினார்.

அவர் பேச்சில் விழிகளில் பரவிய வெறுமையை மறைத்து முறுவலித்தவள் தன் தாயை முறைத்துக் கொண்டிருந்த மீனாவிடம் சின்ன தலையசைப்புடன் விடைப்பெற்றாள்.

நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த விமலின் இதயம் ஹர்சிதாவின் நிலையை எண்ணி புழுவாய் துடிக்க, சோர்வுடன் நடந்து செல்லும் அவளை பின் தொடர்ந்து சென்று ஆறுதலளிக்க முடியாத தன்னுடைய சூழ்நிலையை வெறுப்புடன் சபித்தான் அவன்.

"அண்ணா... ஆர்டர் செய்திருந்த உணவெல்லாம் வந்து விட்டது. வாங்க... நாம் அங்கே போய் பந்தியை கவனிக்கலாம். விருந்தினர்கள் ஒவ்வொருவராக கிளம்ப ஆரம்பிக்கிறார்கள்!" என்று அழைத்தான் தேவா.

'ஆமாம்... என் ஆளையே உன் அம்மா இந்த வெயிலில் பட்டினியுடன் அனுப்பி விட்டார்கள். இதில் மற்றவர்கள் சாப்பிட்டால் என்ன சாப்பிடாமல் போனால் தான்

எனக்கென்ன?' என்று தனக்குள் கோபமாக முணுமுணுத்து கொண்டான் விமல்.

"என்ன அண்ணா?" என்று தேவா உலுக்க திடுக்கிட்டவன், "ஆங்... ஒன்றுமில்லை, போகலாம் வா!" என நெஞ்சில் சுமையோடு அவனுடன் நடக்க ஆரம்பித்தான்.

22

இரவில் உறங்க விடாமல் ஹர்சிதாவின் வாடிய முகமே விமலை தொடர்ந்து இம்சித்துக் கொண்டிருந்தது.

அவளை அடுத்து எப்படி சந்திப்பது என்று சிந்தித்தவனுக்கு சட்டென்று மீனாவின் நினைவு வர, மறுநாள் மாலை அவள் அலுவலகத்தின் பக்கம் ஒரு உலா போகலாம் என முடிவெடுத்த பின் தான் மனதில் நிம்மதி பூக்க விழிகள் உறக்கத்தை தழுவியது.

மீனாவின் அலுவலகத்திற்கு எதிரே இருந்த பாஸ்ட் புட் ரெஸ்டாரன்ட் ஒன்றில் சாட் ஒன்றை வாங்கி கொறித்தபடி சற்று மறைவாக நின்றிருந்தான் விமல்.

இருக்காதா பின்னே... தற்பொழுது அவன் இரண்டு பிரச்சினைகளை சமாளிக்க வேண்டும். ஒன்று மீனாவின் கண்களில் விழுந்து விடக்கூடாது, அவள் நல்ல எண்ணம் கொண்டவள் தான் என்றாலும் ஹர்சிதாவிற்கும் தனக்கும் முதலில் நல்ல புரிதல் ஏற்படும் வரை விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம் என்று எண்ணினான். இரண்டாவது ஹர்சிதா, அவள் முன் சென்று தன்னை வெளிப்படுத்தும் நேரம் அவளை பற்றிய தகவல்கள் அனைத்தும் தன் விரல் நுணியில் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களை கடக்கும் பொழுது மீனா தன் ஸ்கூட்டியில் முதலில் வெளியே வந்தாள்.

'எங்கே நம் ஆளைக் காணவில்லை!' என்று இவன் விரல் நகம் கடிக்க இருந்த நேரம் அடுத்த பத்து நிமிடங்களை விழுங்கி விட்டு கண்ணெதிரே தோன்றினாள் ஹர்சு.

இதழ் மலர்ந்தவன் ஆவலுடன் அவளை விழிகளால் வருட, நாள் முழுவதும் வேலை செய்த களைப்பு கொஞ்சமும் இன்றி முகத்தில் எந்நேரமும் தவழும் சாந்தமுடன் விழிகள் அலைபுற சாலையின் இருபுறமும் திரும்பி கவனித்தவள் துரிதமாக அதை கடந்து வந்தாள்.

பேருந்து நிறுத்தத்தை அடைந்தவள் வலப்புறம் ஒருமுறை பார்வையை வீசிவிட்டு, தன் கைக்கடிகாரத்தை பார்த்தாள். அதற்குள் அருகிலிருந்த பெண்மணி ஏதோ விவரம் கேட்க இளம் புன்னகையுடன் ஆமோதிப்பாக தலையசைத்து பேசிக் கொண்டிருந்தாள் பெண்.

அவள் செல்லும் பேருந்து வரவும் முகத்தில் லேசான பரபரப்பு தொற்றிக் கொள்ள முண்டியடித்து ஏறி உள்ளே சென்றாள்.

அதைக்கண்டு மனதில் கவலை பூத்தது விமலுக்கு, 'உனக்கு எதற்குடா இவ்வளவு சிரமம்? நீ உம்... என்று சொன்னால் உனக்கு சாரதி வேலை பார்க்க நான் ரெடி, மேடுபள்ளமுள்ள சாலையென்றாலும் அலுங்காமல் அழைத்து செல்வேன்!' என ஏக்கப் பெருமூச்சு ஒன்றை விட்டவன், 'ச்சே... ரொம்ப சினிமாத்தனமான டயலாக் ஆக இருக்கிறதோ!' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான்.

விமலின் பைக் சிறிய இடைவெளி விட்டு ஹர்சிதா செல்லும் பேருந்தை தொடர ஆரம்பித்தது. ஒவ்வொரு நிறுத்தத்திலும் அவள் இறங்குகிறாளா என்று கண்களால் அலசியபடி பின் தொடர்ந்தான்.

டிராபிக் சிக்னல் பலவற்றை கடந்து நாற்பது நிமிடநேர பயணத்தின் முடிவில் தன் நிறுத்தத்தில் இறங்கினாள் ஹர்சிதா.

தனது வண்டியின் வேகத்தை குறைத்தவன் அவள் பின் மெதுவாக உருட்டி சென்றான். மெயின் ரோட்டில் இருந்து பிரிந்த கிளைச்சந்து ஒன்றில் நடந்தவள் தெருமுனையில் அமைந்திருந்த வொர்கிங் வுமன்ஸ் ஹாஸ்டல் ஒன்றிற்குள் நுழைந்தாள்.

அந்நகரை பத்து நிமிடங்களுக்கு வண்டியில் சுற்றி சுற்றி வந்தவன் அந்த ஏரியாவின் பாதுகாப்பில் திருப்தியடைந்து தனது வீட்டிற்கு சென்றான்.

வண்டியை நிறுத்திவிட்டு வீட்டினுள் நுழைந்த மகனை வியப்புடன் கூர்ந்தார் பவானி.

"என்னடா இன்று உன் முகத்தில் தனி தேஜஸ் தெரிகிறது? ஏதாவது பிரொமோஷனா?" என்றார் ஆர்வமாக.

சற்றே சங்கடத்துடன் நெளிந்தவன், "அப்படியெல்லாம் இல்லைம்மா... நான் நார்மலாக தான் இருக்கிறேன்!" என்று அவரை வேகமாக தவிர்த்துவிட்டு மாடியேறினான்.

ம்... என்று ஐயத்துடன் சிந்தித்தவருக்கு துளியும் தன் மகன் காதலில் விழுந்திருப்பான் என்று தோன்றவில்லை.

காரணம்... அவர் மகன் வளர்ந்திருந்த விதம் அப்படி, பெண்களுடன் சகஜமாக பழகினாலும் அவனிடம் எந்த தவறான பார்வையும் இருக்காது. அகில் கூட அந்தப் பெண் எப்படி இந்தப் பெண் எப்படி என்று தன்னிடம் கேலியாக வம்பிழுத்தால் கூட இவன் புன்னகையுடன் அமைதியாக தான் இருப்பான்.

அவர்களுடன் கல்லூரியில் படித்த தோழிகளின் பெற்றோர் தான் இவரிடம் பெருமையாக கூறுவர். உங்களுடைய பிள்ளைகள் இருவரையும் நம்பி எங்கள் பெண்களை எந்த வெளியூருக்கு வேண்டுமென்றாலும் நாங்கள் அனுப்பலாம். அவர்களை பத்திரமாக அழைத்து சென்று வருவர், மிகவும் பொறுப்பான தங்கமான பிள்ளைகள் என்று பாராட்டுவதை கேட்கும்பொழுது இவரின் பெற்ற மனம் கர்வத்தில் விம்மி தணியும்.

அவர் சிறகில்லாமல் பறப்பதை கவனித்துக் கொண்டே அருகில் வரும் அகிலன் தன் அன்னையை மெல்லிய குரலில் வேண்டுமென்றே சீண்டுவான்.

"அம்மா... நீங்கள் இவர்கள் உசுப்பேற்றுவதை எல்லாம் நம்பிக்கொண்டு எதிர்காலத்தில் ஏமாந்துவிடாதீர்கள். உங்கள் பெரிய பையன் அவர்கள் சொன்னது போல் தாய் சொல் தட்டாத பிள்ளை தான் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். அவன் நீங்கள் சொல்கின்ற பெண்ணை தான் கண்டிப்பாக திருமணம் செய்து கொள்வான்.

ஆனால் நான் எல்லாம் அப்படியல்ல..." என்று இழுத்துவிட்டு, "எனக்கு எந்த பெண்ணையாவது காதலித்து திருமணம் செய்ய வேண்டுமென்று தான் ஆசை. ஸோ... நான் சொல்கின்ற பெண்ணை தான் நீங்கள் எனக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும்!" என சின்ன கண்சிமிட்டலுடன் முடித்தான்.

பவானி கண்களை இடுக்க, "என்ன விமல் கூப்பிட்டாயா? இதோ வருகிறேன்!" என்று நழுவி ஓடுபவனை கண்டு சிரிப்பு தான் பொங்கியது இவருக்கு.

விஷமக்காரப் போக்கிரி பையன்... இவனுக்கு எந்நேரமும் என்னை வம்பிழுத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று தனக்குள் ரசித்துக் கொள்வார்.

பெரியவன் விமலுக்கு தற்பொழுது இருபத்தியொன்பது துவங்கிவிட்டது, அகில் அவனை விட மூன்று வயது இளையவன்.

அதனால் அவனுக்கு தீவிரமாக பவானி பெண் தேடும் நேரம் அகிலுக்கு ஆறுமாதம் வெளிநாடு சென்று வருவது போல் தற்பொழுது உள்ள வேலையில் இக்கட்டான சூழ்நிலை உருவாகிவிட வேறுவழியின்றி அவன் நாடு திரும்பியதும் இதை பார்த்து கொள்ளலாம் எனக்கு முப்பது ஆனாலும் பரவாயில்லை என்று தடுத்து விட்டான் விமல்.

அதையெல்லாம் எண்ணிப் பார்த்து அறையின் உள்ளே மனதில் புழுக்கத்துடன் நடந்துக் கொண்டிருந்தான் மகன்.

இதுவரை அம்மாவிடம் எதையும் மறைத்து பேசி பழக்கம் இல்லாதவனுக்கு முதன்முதலாக ஹர்சுவின் விஷயத்தை மறைப்பது குற்றவுணர்ச்சியை தோற்றுவித்தது.

அவரிடம் குறிப்பாக மறைக்க வேண்டுமென்று எதையும் அவன் திட்டமிடவில்லை. ஆனால் உள்ளுக்குள்ளே இருந்த ஏதோவொரு உணர்வு அதை எவரிடமும் பகிரவிடாமல் ரகசிய செயல் போல் அடைகாக்க வைத்தது. இருந்தும்

தன் காதலை அம்மா நிச்சயம் ஏற்றுக்கொள்வார் என்று மட்டும் உறுதியாக நம்பினான் அவன்.

அந்த உறுதி தந்த உத்வேகத்தில் தொடர்ந்து ஹர்சிதாவை தன் கண்காணிப்பின் வலையில் வைத்திருந்தான் விமல். இடையில் தன் தம்பியிடம் மட்டும் மனம் கேட்காமல் ஒருநாள் விஷயத்தை போட்டு உடைத்து விட்டான்.

அவனோ இவனை கேலி என்கிற போர்வையில் ஒருவழியாக்க, "அடேய் சாமி... போதும் விடுடா!" என்று இவன் அலறவும் தான் அமைதியானான்.

"இரு... இரு... முதலில் இதை அம்மாவிடம் சொல்ல வேண்டும். உங்கள் பெரிய மகன் காதலிக்கிறாராமே என்று கேட்கப் போகிறேன்!"

"ஏய் அகில் கொஞ்சம் அடங்குகிறாயா? நான் சொல்ல வருவதை முதலில் முழுவதுமாக கேளுடா, உடனே உன் அளப்பறையை ஆரம்பிக்காதே. நான் இன்னும் அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை!"

"ஏன்டா?"

"இல்லைடா... ஹர்சிதாவிடம் என் காதலை சொல்லி சம்மதம் வாங்கி விட்டு அம்மாவிடம் சொல்லலாம் என்று இருக்கிறேன்!"

"ஓ... சூப்பர் சூப்பர்... அண்ணியிடம் எப்பொழுது சொல்லப் போகிறாய்?"

"தெரியவில்லைடா... நான் கவனித்தவரை அவள் ஆண்களிடம் சற்று ஒதுங்கி ஒதுங்கி தான் இருக்கிறாள். யாரிடமும் அவ்வளவாக பேசுவதில்லை. அதுதான் எப்படி எப்பொழுது பேசுவது என்று குழம்பிக் கொண்டிருக்கிறேன்!"

"உருப்பட்டுவிடும் போ... அவர்களும் பேச மாட்டார்கள், நீயும் குழம்பிக் கொண்டிருந்தால்... பேசாமல் ஒன்றுசெய்.

அவர்கள் நம்பரை கேட்டு வாங்கி என்னிடம் கொடு நான் பேசுகிறேன்!"

"சுத்தம்... நான் பேசினால் யோசிக்கவாவது செய்வாள், நீ பேசினால் உன் பேச்சைக் கேட்டு அவள் தலைதெறிக்க ஒடிவிடுவாள்!" என்று விமல் ஆர்ப்பரித்து சிரித்தான்.

"உனக்கு ஆள் கிடைத்துவிட்டது என்று ரொம்பவும் தான் நக்கல் செய்கிறாய்... ம்...? என்னுடைய ஆள் வரட்டும் அவளை வைத்தே உன்னையும், உன்னுடைய ஆளையும் ஒரு வழியாக்குகிறேன்!" என்று அகில் சூளுரைத்தான்.

"ஹஹா... அதை அப்பொழுது பார்க்கலாம்டா!" என்று தம்பியிடம் சிரித்தபடி லைனை கட்செய்தான் விமல்.

நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி ஹர்சுவை வழக்கம் போல பின் தொடர்ந்து கொண்டிருந்தான் விமல். தனக்கு தானே ஏதாவதொரு சாக்கு சொல்லி அவளிடம் பேசுவதை தள்ளிப்போடுவது குறித்து அவனுக்கே வெட்கமாக தான் இருந்தது.

இறுதியில் அந்த வார ஞாயிறன்று அவளிடம் எப்படியும் பேசிவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஒவ்வொரு வார இறுதியிலும் காலை பத்து மணிக்கு தனக்கு தேவையான பொருட்களை எல்லாம் அருகிலுள்ள பல்பொருள் அங்காடிக்கு ஓய்வாக சென்று வாங்கி வருவாள் ஹர்சிதா.

அவளின் வழமை தெரிந்திருந்ததால் விமல் அங்கே சென்று அவளுக்காக காத்திருந்தான். வார விடுமுறை என்பதால் அந்நேரத்தில் அவ்வளவாக கூட்டம் இல்லை. அவனுடைய எண்ணத்தை பொய்பிக்காமல் அவனின் நாயகி அங்கே பிரசன்னமாக, இதயத்தில் படபடப்பு கூட கைக்கு கிடைத்த பொருட்களை ஒவ்வொன்றாக தானும் அடுத்தடுத்து எடுத்து பாஸ்கெட்டில் போட ஆரம்பித்தான் அவன்.

தனக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு அவள் பில் போட செல்ல, 'ஐயோ... கிளம்புகிறாளே, இங்கே

சுற்றியுள்ள ஆட்களின் முன்னிலையில் எப்படி அவளிடம் காதலை சொல்வது? பேசாமல் அவள் செல்லும் வழியில் தனியாக இடைமறித்து பேசலாமா... எதுவும் தவறாக எடுத்துக் கொள்வாளோ!' என்று தனக்குள் சிந்தித்தபடி அவளை பார்த்திருந்தான்.

அப்பொழுது தான் திடீரென்று அந்த சம்பவம் நடந்தது. சற்றே நவநாகரீகமாக இருந்த வடமாநிலத்து இளைஞன் ஒருவன் சட்டென்று தனக்கு முன்னே நின்றிருந்த பெண்மணியின் கழுத்து சங்கிலியை பறித்துக் கொண்டு வெளியே ஓட முயற்சித்தான்.

வாயிலில் இருந்த காவலாளி அந்த பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு சுதாரித்து அவனை தடுக்கப் பார்க்கவும் தடுமாறியவன் மீண்டும் உள்ளே திரும்பி கண்களில் முதலில் தென்பட்ட ஹர்சிதாவை பின்னிருந்து வளைத்து அவள் கழுத்தில் கத்தியை வைத்தான்.

விழிகள் அதிர்ச்சியில் விரிய இதயம் தன் துடிப்பை நிறுத்த, ஏய்... என்று கூவியபடி விமல் ஓரடி முன்னே வந்தான். அந்த திருடன் மறுப்பாக தலையசைத்து எச்சரித்தபடி அவளை மேலும் இறுக்கவும் மரண பீதியோடு முகம் வெளுக்க அரண்டுப் போய் நின்றிருந்தாள் ஹர்சிதா.

தவிப்புடன் தன் கை முஷ்டிகளை இறுக்கியவன், அவளை எவ்வாறு அவனிடமிருந்து மீட்பது என்று புரியாமல் அருகிலேயே நின்றபடி அலைபாய்ந்தான்.

செயினை பறிக்கொடுத்த பெண்ணின் கணவரோ சற்றும் அவன் மிரட்டலை மதிக்காமல் வேகமாக அந்த திருடனை நெருங்க, அதில் பதற்றமடைந்தவன் ஹர்சுவின் கழுத்தில் இருந்த கத்தியை லேசாக அழுத்திவிட அதில் உண்டான வலியில் லேசாக முகம் சுளித்து அவன் கரத்தை பற்றியபடி ஆ... என்று முனங்கினாள் அவள்.

அவளின் கழுத்தில் குருதி துளிர்க்க கண்டு வெகுண்ட விமல் சட்டென்று அந்த திருடனின் கரத்தை பிடித்திழுத்து

பின்புறமாக முறுக்கி ஹர்சிதாவை விடுவித்தான்.

23

விமலன் திருடனின் கரம்பற்றி முறுக்கி ஹர்சிதாவை விலக்கவும் சுற்றியிருந்த ஏனைய ஐந்தாறு நபர்களும் சேர்ந்து அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டனர்.

ஹர்சுவின் கழுத்தில் செந்நிறமாக ரத்தம் துளிர்க்க ஆரம்பிக்கவும் அருகில் இருந்த விற்பனை பெண் ஒருவள் தனது கர்சீப்பை கொண்டு காயம்பட்ட இடத்தில் மெல்ல அழுத்திப் பிடித்தாள்.

வலி ஒரு பக்கம் துன்பத்தை கொடுக்க லேசாக முகம் சுனங்கியபடி அந்தப் பெண்ணிடம் நன்றியுரைத்து விட்டு எடுத்த பொருட்களை மீண்டும் வரும்பொழுது எடுத்துக் கொள்வதாக அவளிடம் சைகையில் தெரிவித்தவளுக்கு உணர்வுகளின் கொந்தளிப்பால் யாருமற்ற தனிமை பூதாகரமாக தாக்கி நெஞ்சை அடைத்தது.

"முதலில் ஏதாவது ஒரு மருத்துவமனையில் காண்பித்து விடுங்கள்!" என்றவளுடன் கூட்டணி அமைத்து மேலும் இரண்டு மூன்று நபர்கள் அதை ஆதரித்து பேச மௌனமாக தலையாட்டிவிட்டு வெளியேறினாள்.

'கழுத்தில் கடுகடு வலியும், சுறுசுறுவென்ற எரிச்சலும் இருக்க, தான் மட்டும் தனியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்!' என்று யோசிக்கும் பொழுதே உடல் பலமிழந்து இருப்பது போல் அயர்வு தோன்றியது அவளுக்கு.

கால்கள் பின்ன மெதுவாக சாலையை அடைந்தவளை மேலே முன்னேற விடாமல் இருசக்கர வாகனம் ஒன்று திடீரென்று குறுக்கே வந்து தடுக்கவும், சற்றுமுன்னர் நடந்திருந்த சம்பவத்தால் ஏற்கனவே அரண்டுப் போயிருந்த பெண்ணவள் பதறியடித்து விலக முயல அவள் கரம்பற்றி தடுத்தான் விமல்.

விழிகளில் அச்சத்துடன் நிமிர்ந்தவள் அவன் முகம் கண்டு மெல்ல அமைதியடைய, அதைப் படித்தவனின்

நெஞ்சிலோ லேசான நிம்மதிப் பூத்தது.

தன்னை அந்த திருடன் கத்தியுடன் பற்றியதுமே முதல் நபராக பதறியடித்து முன்னே வந்த விமலின் முகம் நினைவில் ஊஞ்சலாட, அவனிடம் நன்றியுரைக்காமல் வந்தது பெரிய தவறாக இப்பொழுது தோன்ற தடுமாறியபடி தாங்க்ஸ் என்று முணுமுணுத்தாள் ஹர்சிதா.

முகத்தில் எந்த உணர்வுமின்றி அவளை கூர்ந்தவன், "வண்டியில் ஏறு!" என்றான்.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்து, ஆங்... என்றாள்.

"வண்டியில் ஏறு!" என்றான் மீண்டும்.

"நான்... நான்..." என்று நா குழறியவள், "எதற்கு?" என்றாள் தயக்கத்துடன்.

அவன் பார்வை ஒருமுறை அவள் கழுத்தை வருடிவிட்டு விழிகளுக்கு உயர்ந்தது.

"ஹாஸ்பிடல் போகலாம்!"

முகம் வாட உள்ளம் துவண்டவள், "வந்து... பரவாயில்லை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று கூறும் பொழுதே அவளுடைய விழிகள் தழைந்தது.

தன்னோடு அணைத்து ஆறுதலளிக்க தோன்றிய உணர்வை சிரமப்பட்டு அடக்கியவன், "இப்பொழுது உன்னால் என்னுடன் வரமுடியுமா முடியாதா?" என்று கேட்டு அவளை ஆழ்ந்துப் பார்த்தான்.

அவன் குரலில் அந்த வரிகளுக்குரிய அதிகாரம் எதுவுமின்றி வார்த்தைகளில் மட்டும் அழுத்தம் கூட்டிய அவனுடைய பார்வை இவள் இதயத்தை தீண்ட, ஒருநொடி தவித்தவளுக்கு அதற்குமேல் அவனிடம் மறுக்க இயலாமல் மௌனமாக பின்புறம் சென்று பைக்கில் ஏறினாள்.

முகத்தில் மெல்லிய பெருமிதம் தோன்ற உதட்டில் முறுவலுடன் வண்டியை கிளப்பினான் விமல்.

மருத்துவனை வளாகத்தில் அவன் வண்டியை நிறுத்தவும் இறங்கியவள் சற்று தள்ளி நிற்க, லாக் செய்துவிட்டு அவளை உள்ளே அழைத்து சென்றான்.

மருத்துவர் காயம் கண்டு ஐயத்துடன் விசாரிக்க, விவரம் தெரிவித்தவன் அவளை பற்றிய விவரத்தை மட்டும் அறியாதவனாக தெளிவாக மறைத்து அவளிடமே பெயர், வயது முதற்கொண்டு விசாரித்து கூறினான். பெரிய கிரைம் எதுவும் இல்லாததால் மருத்துவரும் அதற்குமேல் எதுவும் கூறாமல் சிகிச்சை அளித்து மாத்திரை, மருந்துகளை மட்டும் எழுதிக் கொடுத்தார்.

அவற்றை வாங்கி வந்தவன் அவளை அழைத்துக் கொண்டு செல்லும் வழியில் சில பழச்சாறு பாக்கெட்களை மட்டும் பழமுதிர்சோலை ஒன்றில் நிறுத்தி வாங்கிக் கொண்டான்.

இருவர் இடையிலும் மௌனமே பிரதான மொழியாகி போக வார்த்தைகள் எதுவுமின்றி பிறர் அறியாமல் ஒருவரையொருவர் ஆராய்ச்சியுடன் கண்காணித்து கொண்டிருந்தனர்.

ஹர்சுவின் முகத்தில் இதுவரை எந்தவொரு சுளிப்போ வெறுப்போ தோன்றவில்லை என்பதை ஓரவிழியில் குறித்துக் கொண்டிருந்தான் விமல். மாறாக அவளோ தனக்கான அவனுடைய ஒவ்வொரு செயலையும் ஒருபுறம் வியப்புடனும் மறுபுறம் நெகிழ்ச்சியுடனும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"போகலாமா?" என்றபடி அவன் வண்டியின் அருகில் வரவும், தன்னையுமறியாமல் இயல்பாக தலையசைத்தபடி அதில் ஏறுவது அவளுக்குள் குறுகுறுப்பை உண்டாக்கியது.

விடுதி இருந்த தெருவில் வண்டி திரும்பவும் அதுவரை இருந்த இதம் தொலைந்து ஹர்சுவின் மனதில் சட்டென்று

ஒரு இயலாமை பரவியது. அத்தனை நேரமாக இருந்த தெளிவு மறைந்து அவள் விழிகளில் வெறுமை அதிகமாக தோன்றுவதை பைக்கின் ரியர்வியூ மிரரில் கவனித்தவன் வாசலில் சென்று நிறுத்தினான்.

இயந்திரத்தனமாய் கீழே இறங்கியவள் அவனை நிமிர்ந்தும் பாராமல் குனிந்த தலையுடன் கைப்பையை இறுக்கியபடி கேட்டருகே சென்றாள். இவனும் தடுக்காமல் தன் கைகளை கட்டிக்கொண்டு அவளையே அமைதியாக பார்த்திருந்தான்.

கேட்டை திறக்க கையை நீட்டியவளின் முகத்தில் விரைந்து திகைப்பு தோன்றியது.

'நான் என்ன செய்கிறேன்? எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? எந்த உரிமையில் அவருடைய உதவிகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டேன். பொருள் உதவி முதற்கொண்டு அனைத்தையும் பெற்றுவிட்டு இது அவர் எனக்கு செய்ய வேண்டிய கடமை என்பது போலல்லவா நடந்துக் கொள்கிறேன். கடவுளே... அவர் என்னை பற்றி என்ன நினைப்பார்?' என்று குற்றவுணர்வில் தவித்தபடி வேகமாக அவனிடம் திரும்பி வந்தாள்.

உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி ஆர்ப்பரித்துப் பெருக அதை வெளிக்காட்டாமல் அவளை மௌனமாக ஏறிட்டான் விமல்.

"வந்து... ஐ ஆம் சாரி, என்னை தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நான்... வந்து... அது... திடீரென்று நடந்த அந்த சம்பவத்திலிருந்து இன்னும் முழுவதுமாக வெளிவரவில்லை. அதனால் தான்... நான்... உங்களிடம் ஒரு நன்றி கூட தெரிவிக்காமல் சென்று விட்டேன். அப்புறம்... பணம் எவ்வளவு ஆயிற்று என்று சொன்னீர்கள் என்றால் ஏடிஎம்மில் டிராப் செய்து கொடுத்து விடுகிறேன். வந்து... என்னால் உங்களுக்கு நிறைய தொந்திரவு!" என்று சிறு குரலில் கூறியவளின் முகத்தில் அவமானக்கன்றல் மெலிதாக தோன்றி மறைந்தது.

அவளின் நிலையை எண்ணி இதயத்தில் எழுந்த வலியை விழுங்கியவன், "இட்ஸ் ஓகே... ஐ அன்டர்ஸ்டார்ன்ட். யாராக இருந்தாலும் அப்படி தான் இருப்பார்கள், பெரிய ஆபத்திலிருந்து தப்பி பிழைத்துள்ளாய். பணம் ஒன்றும் அவசரமில்லை, இப்படியே வெளியில் அலைய வேண்டாம். இன்று முழுவதும் நன்றாக ஓய்வெடு, நாளைப்பின்னே அதை பார்த்துக் கொள்ளலாம். நீ பணத்தை என்று திருப்பி தருகிறாயோ அன்று வந்து வாங்கிக் கொள்கிறேன்!" என்று அவளிடம் இதமாக முறுவலித்தான்.

அதில் நெஞ்சம் சிறிது அமைதிக்கொள்ள இயல்புக்கு திரும்பியவள், "உங்களிடம் எப்படி தெரிவிப்பது மொபைல் நம்பர் எதுவும்..." என்று தயக்கத்துடன் இழுத்தாள்.

"நம்பர்... உன்னுடைய அலைபேசியை கொடு, சேவ் செய்து விடுகிறேன்!" என்று கை நீட்டினான், அவளும் இயல்பாக கைப்பையிலிருந்து தன் அலைபேசியை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

அதை வாங்கி குறுக்கும் நெடுக்கும் தட்டியவன் அவளிடம் திருப்பினான். நம்பரை சரிப்பார்க்க என்று அவள் ஸ்கிரீனை தேய்க்கவும் வேகமாக தடுத்தபடி அவளை தன்பக்கம் திசைத் திருப்பினான் விமல்.

"இதுவும் உனக்கு தான்!" என்றபடி அவன் நீட்டிய பையை கவனித்த ஹர்சிதா, இது... என்று குழப்பத்துடன் நிமிர்ந்தாள்.

"வேறொன்றுமில்லை... இது நீ சூப்பர் மார்க்கெட்டில் தேர்ந்தெடுத்தது. இது உனக்கு தொண்டைவலிக்கு... பழச்சாறு போன்று லிக்விட் அயிட்டம் குடித்தால் நன்றாக இருக்கும் என்று வாங்கினேன்!" என விளக்கினான்.

“ஐயோ இல்லை... வேண்டாம் பரவாயில்லை!" என்று அவள் அவசரமாக மறுக்க, "என்னை சங்கடப்படுத்த வேண்டாம், இதில் இருக்கும் லேடிஸ் ஐட்டத்தை வைத்துக் கொண்டு நான் எதுவும் செய்ய முடியாது. ஒருமுறை

வாங்கியது வாங்கியது தான் திருப்பி தரவும் இயலாது. அப்புறம்... பயப்பட வேண்டாம், இந்த பழச்சாறையெல்லாம் பில்லில் சேர்த்து கணக்கு காட்டிவிட மாட்டேன்!" என்று சிரியாமல் சொன்னான்.

“அச்சோ... அதில்லை..." என்று அவள் மேலும் தயங்கவும், "ப்ளீஸ்..." என கெஞ்சலாக பார்த்தான் விமல்.

இத்தனை தூரம் தனக்கு வலிய வந்து உதவியவனை மேலும் சங்கடப்படுத்த வேண்டாம் என்று அரைமனதாக வாங்கினாள் ஹர்சிதா.

"தாங்க் யூ... பை, டேக் கேர்!" என்று அழகாக புன்னகைத்து விட்டு விலகிச் செல்பவனை தடுக்க தோன்றிய மனதை கடிவாளமிட்டு அடக்கியவள் அறைக்கு சென்றாள்.

கையில் இருந்த பையை ஒரு ஓரமாக கட்டிலில் வைத்தவள் சோர்வுடன் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

உடல்சோர்வை விட மனச்சோர்வே அதிகமாக இருந்தது. விமல் அவள் மனதில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருந்தான். நினைவு தெரிந்த நாளில் இருந்து அவளிடம் யாரும் இதுப்போன்று கனிவுடனும், அக்கறையுடனும் நடந்துக் கொண்டதில்லை.

அவளுக்கொரு ஆபத்து எனும் பொழுது பதறி துடித்த அவன் முகம், தானாக முன்வந்து அவளை வற்புறுத்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றது. மேலும் அவளுடைய நலத்தை கருத்தில் கொண்டு பழச்சாறு முதற்கொண்டு தேவையானவற்றை எல்லாம் வாங்கி கொடுத்து விடுதி வாயிலில் விட்டுச் சென்றது என்று எண்ணும் பொழுதே அவனுடைய பிரிவு மனதில் ஏக்கத்தை உருவாக்கியது.

'மிகவும் நல்லவர் போலிருக்கிறது, இது போன்ற மனிதர் கிடைக்க அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!' என்று உதித்த மறுகணமே, 'நீ கவலைப்படாதே... இது போன்ற மனிதர் எல்லாம் உன் போன்ற துரதிர்ஷ்டசாலிகளுக்கு கிடைக்க மாட்டார்கள்!'

என்ற பரிகாச குரல் ஒன்று உள்ளிருந்து ஒலித்து அவள் விழிகளில் நீரை பெருக்க செய்தது.

கழுத்தில் கத்தி வைத்த திருடனிடமிருந்து எப்படியோ தப்பி விட்டேன், ஒருவேளை மாறாக இறந்திருந்தால் தனக்காக ஏங்கி ஒரு சொட்டு கண்ணீர் விடக்கூட இந்த உலகில் ஆள் இருந்திருக்க மாட்டார்கள் என்று கண்டதையும் கற்பனை செய்து வெளிப்புண்ணுக்கு நிகராக உள்புண்ணையும் வரவழைத்துக் கொண்டாள் ஹர்சு.

கிட்டத்தட்ட அரைமணி நேரமாக அவன் நினைவில் ஏங்கி அழுதவளுக்கு இறுதிவரை அவனுக்கு எப்படி நம் விடுதியின் முகவரி தெரியும் என்று கிஞ்சித்தும் சந்தேகம் எழவில்லை.

சலிப்புடன் விழிகளை மூடியிருந்தவளை அவளுடைய அலைபேசி அழைத்தது. இமைகளை பிரித்தவள் அதை எடுக்க தோன்றாமல் சுவரை வெறித்தபடி படுத்திருந்தாள்.

ஒருமுறை அடித்து ஓய்ந்தது மீண்டும் அழைக்கவும், அலுப்புடன் எடுத்தவள் விழிகளை அகல விரித்தாள். எத்தனை தூரம் கண்சிமிட்டியும் எழுத்துக் கூட்டிப் படித்துப் பார்த்தும் திரையில் மின்னிய பெயர் எந்தவித மாற்றமும் இல்லாமல் அதையே உறுதிப்படுத்தியது.

இதயத்துடிப்பு எகிற கரங்கள் சில்லிட்டு நடுங்க எழுந்தவள் பிரமிப்புடன் திரையையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

இம்முறையும் தன் அழைப்பை அவள் எடுக்கவில்லையே என்று எந்தவித சினமும் கொள்ளாமல் எதிர்முனையில் இருந்தவர் மீண்டும் பொறுமையாக முயன்றார்.

கையில் இருந்த அலைபேசியை தயக்கத்துடன் பார்த்தவள், அதில் மின்னிய பெயரை தனக்குள் உச்சரித்துப் பார்த்தாள்.

"புருஷன் காலிங்!"

உடலில் உள்ள ரோமங்கள் எல்லாம் சிலிர்த்து எழும்ப, மெதுவே தயங்கி அந்த கால்லை பிக்கப் செய்து காதில் வைத்தவள், தொண்டையில் அடைத்த எச்சிலை விழுங்கிக் கொண்டு ஹலோ என்று முனங்கினாள்.

எந்தவித எதிரொலியும் இன்றி தொடர்ந்து அமைதியை வெளிப்படுத்திய அலைபேசியை குழப்பத்துடன் கையில் எடுத்து அதை கூர்ந்தவள் லைன் ஆக்டிவ்வாக இருக்கவும், 'யார் அந்த புருஷன்?' என்று இனம் புரியாத பரபரப்புடன் இம்முறை சிறிது அழுத்தமாக, “ஹலோ!” என்று குரல் கொடுத்தாள் பெண்.

எதிர்முனையில் ஒலித்த, "ஹலோ!" என்ற ஆழ்ந்த குரல் அவளுக்கு விமலை நினைவூட்ட, 'அவரா? ஆனால் அவர் ஏன் இப்படி...' என புரியாமல் விழித்தபடி இப்பொழுது இவள் அமைதியானாள்.

24

ஹர்சிதாவின் மனநிலை தனக்கு சாதகமாக இருப்பதை ஓரளவு உணர்ந்த பின்பு தான் விமலன் துணிந்து அவளது அலைபேசியில் தனது எண்களை அவ்வாறு பதிவு செய்திருந்தான்.

தற்பொழுது நீளும் அவளது மௌனத்தை எவ்வாறு எடுத்துக் கொள்வது என்று சற்று குழம்பியவன் லேசாக தொண்டையை செறுமி விட்டு அவளிடம் துணிவுடன் பேச ஆரம்பித்தான்.

"ஹலோ ஹர்சிதா... லைனில் இருக்கிறாயா?"

அவன் குரலில் தன்னை சுதாரித்துக் கொண்டவள், ம்... என்று பதிலளித்துவிட்டு மேலே பேச இயலாமல் தடுமாற, இவன் எந்தவொரு தடுமாற்றமும் இல்லாமல் அவளிடம் தெளிவாக பேச ஆரம்பித்தான்.

"எதுவும் பிரச்சினையா... ஏன் அமைதியாக இருக்கிறாய்?"

"அது..." என்றவளின் விரல்கள் மெத்தையின் விரிப்பை இறுக்க, "கால் அட்டென்ட் செய்ய ரொம்ப நேரமானதே தூங்கி விட்டாயா?" என்று அடுத்த கேள்வியை தொடுத்தான் விமல்.

"இல்லை... விழித்து தான் இருந்தேன்!" என்று பதிலளிக்கும் பொழுதே அவளின் குரல் உள்ளே சென்றது.

"ஆஹான்... அப்புறம் ஏன் எடுப்பதற்கு அவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாய்?"

அவன் கேள்வியில் திணறியபடி இவள் கீழுதட்டை கடித்து அமைதியாக, "ஹர்சு..." என்றவனின் ரகசிய அழைப்பில் இதயம் உருக படபடப்புடன் விழிகளை மூடிக்கொண்டாள்.

மூச்சுக்காற்றின் வேகம் அதிகரித்து அவனுடைய, "ஐ லவ் யூ!" வில் இவள் விழிகள் நீரைப் பொழிய ஆரம்பித்தது.

லேசான விசும்பல் சத்தத்தில் பதறியவன், "ஹர்சும்மா... தயவுசெய்து அழாதே... உனக்கு பிடிக்கவில்லை என்றால் நான் வற்புறுத்த மாட்டேன். நீ... " என்று மேலே ஏதோ சொல்ல முயல, "ஐ ஆம் சாரி!" என்றாள் அவள்.

ஒன்றும் புரியாமல், "எதற்கு?" என்று வினவினான் விமல்.

"உங்கள் மனதில் இப்படியொரு தவறான கணிப்பை உண்டாக்கியதற்கு!"

"தவறான கணிப்பு...?"

"அது... எனக்கு பிடிக்காமல் தான் அழுகிறேனோ என்று..."

அவளின் வார்த்தைகளில் ஒளிந்திருந்த சாதகமான பதிலை கண்டுப்பிடிக்க அவனுக்கு சில நொடிகள் தேவைப்பட்டது.

விடைக் கண்டதும் முகம் பூவாய் மலர, "யூ... என்னையே ஒரு நிமிடம் ஆட்டம் காண வைத்து விட்டாயே... ஃபிராடு!" என்று செல்லமாக கோபித்துக் கொண்டவனின் குரலில் வெளிப்படையாகவே உற்சாகம் குமிழியிட்டது.

"ம்... நான் ஃபிராடா? உங்களின் அழைப்பு வரும்பொழுதே தெரிந்துவிட்டது யார் ஃபிராடென்று?"

"ஓஹோ... அதனால் தான் மேடம் பயந்துப் போய் போனை எடுக்கவில்லையோ?"

முகம் செம்மை நிறம் பூசிக்கொள்ள வார்த்தைகளின்றி மௌனித்தவளை, அவன் காதலுடன் அழைத்தான்.

"ஹர்சு... உனக்கு என்னை பிடித்திருக்கிறதா? என்னை திருமணம் செய்துக் கொள்ள சம்மதம் தானே?" என்றான் மிகுந்த எதிர்ப்பார்ப்புடன்.

விமலின் கேள்விக்கு உடனே சம்மதம் தெரிவிக்க தூண்டிய மனதை வாட்டத்துடன் பின்னுக்கு தள்ளியவள் அதுவரை இருந்த தடுமாற்றம் மாறி அவனிடம் தெளிவாக பேச ஆரம்பித்தாள்.

"உங்கள் மனதில் இப்படியொரு பாதிப்பை நான் ஏற்படுத்தி இருக்கிறேன் என்பதை என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை. முதலில் நான் என்னை பற்றிய விவரங்களை உங்களிடம் முழுவதுமாக தெரிவித்து விடுகிறேன். பிறகு நான் உங்களுக்கு தகுதியானவளா இல்லையா என்பதை அலசி ஆராய்ந்து..."

"பெயர் ஹர்சிதா, வயது இருபத்தியேழு, ஆசிரமத்தில் வளர்ந்தாய், படிப்பு பி.காம்..." என்று அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்னரே இவன் விவரித்துக் கொண்டே போக, இமைக்க மறந்து சிலிர்த்துப் போய் அமர்ந்திருந்தாள் ஹர்சு.

"ம்... உன்னை பற்றி எனக்கு தெரியாத விஷயம் எதுவும் உன்னிடம் இருக்கிறதா?" என்றான் துள்ளலோடு.

"இதெல்லாம் எப்படி?" என்றாள் வியப்புடன்.

லேசாக நகைத்தவன், "ஓகே... ரொம்ப குழம்ப வேண்டாம். நான் நேரிடையாகவே விஷயத்தை கூறுகிறேன்!" என்று மீனாவின் குழந்தை காதுகுத்து விசேஷத்தில் அவளை முதன்முதலாக தான் சந்தித்தது காதலில் விழுந்தது. கடந்த சில நாட்களாக இடைவிடாமல் அவளை பின்தொடர்வது என்று அனைத்தையும் விவரித்தான்.

சுமித்ரா கூறிய வார்த்தைகளை மட்டும் முக்கியமாக மறைத்து விட்டான். அது தெரிந்து தன்மேல் அவனுக்கு ஒருவேளை பரிதாபமோ என்ற கழிவிரக்கம் எதுவும் அவளுக்கு தோன்றி விடக்கூடாது என்று நினைத்தான்.

இங்கே விமலின் காதலில் உள்ளம் மலர்ந்த இவளுக்கோ மெல்லிய உறுத்தல் தோன்றி, "ஓ..." என்று மட்டும் பதில் கூற வைத்தது. அவன் மறைத்தாலும் மீனாவின் உறவினன் என்றதிலேயே சுமித்ராவின் ஏளனமான வார்த்தைகளை மீட்டெடுத்திருந்தாள் அவள்.

"இன்னும் என்ன?"

அவனை திருமணம் செய்துக் கொண்டு அவனோடு வாழ வேண்டுமென்று அவளுக்கு மனம் முழுக்க ஆசைதான். இருந்தாலும் அவளுக்குள் இருக்கும் நேர்மை அவளை இடித்துரைக்க மேலும் தெளிவுப்பெற விரும்பினாள் ஹர்சிதா.

"உங்களை பொறுத்தவரை எல்லாம் சரி, ஆனால் உங்கள் வீட்டில் உள்ளவர்கள் என்னை மருமகளாக ஏற்றுக் கொள்வார்களா? என்ன இருந்தாலும் நான் ஒரு அநாதை!"

"ப்ச்... என் வீட்டில் அம்மா, நான், தம்பி மூவர் மட்டும் தான். எங்களில் யாருமே அப்படி குறுகிய மனம் படைத்தவர்கள் இல்லை. உனக்கு சம்மதமா இல்லையா என்று அதை மட்டும் சொல்!" என்றான் அழுத்தமாக.

"இல்லை... நான் சொல்ல வருவதை முதலில் நீங்கள் தெளிவாக புரிந்துக் கொள்ளுங்கள். என்னுடைய சம்மதம் எல்லாம் இரண்டாம்பட்சம் தான், உங்கள் வீட்டினரின் சம்மதம் தான் எனக்கு முக்கியம். குடும்பம், உற்றார், உறவினர் யாருமில்லாத தனிமையில் வளர்ந்த எனக்கு உங்களுடன் இணைந்து உங்கள் குடும்பமும் வேண்டும். நாளைப்பின்னே எதுவும் பிரச்சினை தோன்றி உங்களை அவர்களிடமிருந்து பிரித்தப் பாவியாக நான் மாற விரும்பவில்லை!" என்றாள் தீர்மானமாக.

"ஹேய்... அந்தக் கவலையே உனக்கு வேண்டாம் என் குடும்பத்தாரின் மேல் உள்ள நம்பிக்கையில் தான் நான் இதை உன்னிடம் பேசுவதே!" என்றவன் மேலும் தன் அம்மாவை பற்றியும், தம்பியை பற்றியும் விவரமாக எடுத்துக் கூற, அதன்பின் வேறெந்த கேள்வியும் கேட்காமல் அந்தக் குடும்பத்தில் தானும் ஒருவளாக இணைய ஆசைக்கொண்டு அடுத்த நொடி தன் உளப்பூர்வமான சம்மதத்தை விமலிடம் தெரிவித்தாள் ஹர்சிதா.

இருபத்திநான்கு மணி நேரத்தில் எப்பொழுது தனிமை கிடைத்தாலும் அவளுடன் மறவாமல் பேசி மறைமுகமாக

நானிருக்கிறேன் உனக்கு என்று அவளுடைய தனிமை உணர்வை போக்கும் நிழலாக மாறிப் போனான் அவன்.

இருவர் மனதிலும் குறுகிய நாட்களிலேயே காதல் வேரூன்றி விருட்சமாக வளர்ந்து ஒருவரின்றி மற்றொருவர் இல்லை என்ற நிலையை கொண்டு வந்தது.

தினமும் மாலை வேலையில் தானும் அவளின் தரிசனம் கண்டு பிரதியுபகாரமாக தனது தரிசனத்தையும் அவளுக்கு பரிபூரணமாக கொடுத்தான் விமல்.

வார விடுமுறை நாட்களில் பகல்வேளையில் பாதிப் பொழுதை அவளுக்காக அவளுடன் செலவிட்டான். அவனை கண்டவுடன் மலரும் அவளது விழிகள் அவனைப் பிரிய நேர்கையில் அத்தனை ஏக்கத்தையும், தவிப்பையும் வெளிப்படுத்துவதை கண்டு கவலைமிக விரைவில் அவளை தன்னுடையவளாக்கி தன் வீட்டிற்குள் அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை அவனுக்குள் ஆழமாக வேரூன்றச் செய்தது.

தங்களின் காதலை தனது தாய்க்கு இவன் தான் முதலில் தெரிவிக்க வேண்டும் என்று மீனா முதற்கொண்டு யாரிடமும் வெளிப்படுத்தாமல் விமல் அதை அடைக்காத்து வந்திருக்க அது சரியாக சுமித்ராவின் கண்களில் உறுத்தும் தூசிப்போல விழுந்துவிட்டது.

பிறர்வாய் மொழியாக தன் காதல் பவானிக்கு செல்லக் கூடாது என்று தெளிவாக நினைத்திருந்தவன் திட்டமிடலில் சொதப்பி விட்டான்.

தன் காதல் மாதக்கணக்கில் தாண்டாமல் நாட்கணக்கில் தானே இருக்கிறது பிறர் கவனத்தை அவ்வளவு விரைவில் கவராது என்று அலட்சியமாக இருந்தவன் ஹர்சுவை வெளியிடங்களுக்கு அழைத்து செல்வதில் எந்த தயக்கமும் காட்டவில்லை. அதுவே பிரச்சினை தோன்றுவதற்கும் காரணமாகி விட்டது.

சுமித்ரா ஒருநாள் வெளியில் எங்கேயோ சென்று விட்டு வீடு திரும்பி கொண்டிருந்த வழியில் சிக்னலில் அவரின்

கால்டாக்ஸிக்கு அருகே விமலின் வண்டியும் நிற்க அவன் பின்னால் அமர்ந்திருந்த ஹர்சிதாவை கண்டு இவர் திகைத்துப் போனார்.

'இவள் எப்படி இவனுடன்?' என்று குழம்பும் பொழுதே சிக்னல் விழுந்துவிட அவன் வண்டி இவரின் காரை தாண்டி வேறு பாதையில் விரைந்து சென்றுவிட்டது.

மூளை குடைச்சலை கொடுக்க வேகமாக தன் மகள் மீனாவை தொடர்பு கொண்டார். அவளுக்கே விவரம் தெரியாத பொழுது அவள் என்ன சொல்வாள் உளறாதீர்கள் என்று ஒரே வார்த்தையில் கடிந்துவிட்டு வைத்துவிட்டாள்.

தன் மகளின் மேல் திருப்தி தோன்ற மறுக்க, இவர் நேராக சென்ற இடம் பவானியின் இல்லம்.

என்றும் வராதவள் இங்கே எங்கே வந்திருக்கிறாள் என்ற நெருடல் தோன்ற அதை மறைத்து அவரை இயல்புடன் வரவேற்றார் பவானி.

ஏதோ பெயருக்கு அவரிடம் குசலம் விசாரித்து விட்டு நேரிடையாக விஷயத்திற்கு வந்தார் சுமித்ரா.

"ஏதாவது வேலையை காரணம் காட்டி நீ ஏன் உறவுகளின் விசேஷத்திற்கு வராமல் ஒதுக்குகிறாய் என்பது இன்று தான் எனக்கு விவரம் தெரிந்தது!"

'என்ன உளறுகிறாள் இவள்?' என்று புருவம் சுருக்கினார் பவானி.

"அத்தான் இல்லையென்றால் அவரின் பொறுப்பும் சேர்ந்து உனக்கு இருக்கிறது என்பதை மறந்து விட்டு வசதியாகப் போயிற்று என்பது போலல்லவா நீ தான்தோன்றித்தனமாக நடந்துக் கொள்கிறாய்!" என்று அவரை வார்த்தைகளால் சீண்ட பவானிக்கு சினம் துளிர்த்தது.

"சுமி... எதைப் பேசுவதென்றாலும் வெளிப்படையாக பேசு!"

"நான் என்ன சொல்வது உனக்கே தெரியாதா? உன் பையன் ரொம்பவும் தகுதி வாய்ந்த மருமகளாக தான் உனக்கு தேர்ந்தெடுத்திருப்பான் போலிருக்கிறது!" என்றார் நக்கலாக.

'மருமகளை தேர்ந்தெடுத்தானா? அகில்... இடியட்... சொன்ன மாதிரியே செய்து விட்டானா? அவனை...' என பல்லைக் கடித்தவர், 'செய்ததை தான் செய்தாய்... என்னிடம் ஏன்டா தெரிவிக்கவில்லை?' என்று தனக்குள் புகைந்தார்.

"என்ன அமைதியாகி விட்டாய்? இவளுக்கு விவரம் தெரிந்து விட்டதே என்று கவலையா?" என்றார் சுமி ஏளனமாக.

சலிப்புடன் அவரை ஏறிட்டவர், 'முதலில் இவளுக்கு எப்படி தெரியும்?' என்று குழம்பி, "உனக்கு யார் சொன்னார்கள்?" என்று விவரம் கேட்டார்.

"யாரும் சொல்ல வேண்டுமா? நானே தான் என் கண்ணால் நேரில் பார்த்தேன்!" என்று முகத்தை சுளித்தார்.

'இவள் கண்ணால் பார்த்தாளா...' என்று திகைத்தவருக்கு முரண்பாடு மேலும் குழப்பத்தையே அதிகரித்தது.

அவரை அதற்கு மேல் தவிக்க விடாமல் விஷயத்தை பட்டென்று போட்டு உடைத்தார் சுமித்ரா.

"நான் இப்பொழுது தான் என் கண்ணால் பார்த்து விட்டு நேரே இங்கே வருகிறேன். அந்த அநாதைப்பெண் விமலின் பின்னே அவ்வளவு உரிமையுடன் வண்டியில் அமர்ந்து செல்கிறாள். எப்படித்தான் இப்படிப்பட்ட குலம்கோத்திரம் தெரியாதவளை எல்லாம் உனக்கு மருமகளாக நீ ஒப்புக் கொண்டுள்ளாயோ!" என்று அஷ்டகோணலுடன் தான் வந்த வேலையை முடித்தார் சுமித்ரா.

அதற்கு மேல் அவர் கூறிய வார்த்தைகள் எதுவும் காதில் விழாமல் தன் பிள்ளையின் நடவடிக்கைகளை ஆராய்ந்து

கொண்டிருந்தது அந்த தாயின் உள்ளம்.

கடந்த சில வாரங்களாக மலர்ந்திருந்த அவன் முகம், மாலையில் தாமதாக வருவது, விடுமுறை நாட்களில் பாதி நேரம் தவறாமல் வெளியே சென்று விடுவது, கேட்டதற்கு நண்பர்களுடன் என்று விமல் கூறியது இன்று சமாளிப்பாக தோன்றியது.

அகில் காதலிக்கிறானோ என்ற எண்ணம் தோன்றிய பொழுது தன்னிடம் கூறவில்லையே அவன் என்று சிறு சினம் மட்டுமே அவருக்கு துளிர்த்தது. ஆனால் மாறாக விமல் காதலிக்கிறான் என்பதை அவரால் அவ்வளவு சுலபமாக ஜீரணிக்க முடியவில்லை.

சுமித்ரா தன் போக்கில் மேலும் மேலும் அவர்களின் காதலை ஏளனப்படுத்தி பேசிவிட்டு கிளம்பி செல்ல அவரை தடுக்க தோன்றாமல் இவர் தன் சிந்தனை வலையில் குழப்பத்துடன் சிக்கியிருந்தார்.

இத்தனை நாளாக அம்மா பிள்ளையாக தன்னை சுற்றி வந்தவன் காதலித்தான் என்பதை விட அதை தன்னிடம் மறைத்து விட்டான் என்பதே முதல் விரிசலாக அவர் உள்ளத்தில் தோன்றி அவனுடைய காதலுக்கு எதிராக அவரின் மனதை இறுக வைத்தது.

பற்றாக்குறைக்கு சுமித்ரா வேறு ஹர்சிதாவை பற்றி அவர் மனதில் தாழ்வாக மதிப்பிடும்படி பேசி சென்று விட்டார். அது ஒருபுறம் உள்ளுக்குள் திகிலை கிளப்ப, விமலனை இதிலிருந்து எப்படி மீட்பது என்று கவலையில் ஆழ்ந்தார்.

25

பொதுவாக ஒரு மனிதனின் எந்தவொரு முடிவும் அவனுக்கு வாய்க்கின்ற சூழ்நிலைகளை பொறுத்தே சரியாக அமையும். தன் மனதை துடைத்து வைத்த கரும்பலையாக எவனொருவன் வைத்திருக்கிறானோ அவனுடைய பெரும்பாலான முடிவுகள் தெளிவாகவும், ஆரோக்கியமாகவும் அவன் குணாதிசயங்களுக்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும்.

நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சமூக அமைப்பில் அதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. ஆகையால் தான் நம்மில் பலர் சரியான முடிவுகளை எடுக்க முடியாமல் அதிகம் திணறி தவிக்கின்றோம். இறுதியில் காலநேரமின்மையை காரணம் காட்டி ஏதோ ஒரு பக்கம் சாய்ந்து விடுகிறோம். அவை நமக்கு சாதகமாக அமைவது நம்முடைய அதிர்ஷ்டத்தை பொறுத்தே அமைந்து விடுகிறது.

பவானியும் அத்தகைய சூழலில் தான் சிக்குண்டிருந்தார். தன் மகன் விமல் வாயிலாக அவன் காதல் கதையை கேட்டிருந்தால் அதை ஆதரித்து அவனுக்கு அனுகூலமாக நடந்திருப்பாரோ என்னவோ மாறாக விதியின் சதியால் அவன் மதி கணக்கீடு தோற்றுப்போய் அந்நியர் ஒருவரின் ஏளன சொற்களால் உள்வாங்கப்பட்ட அவனுடைய காதல் அவரிடம் நன்மதிப்பை பெறவில்லை.

"ஹாய் மா!" என்றபடி அருகில் வந்தமர்ந்த விமலை சற்றே வெறித்தவர், அவனுடைய நெற்றி சுருங்கவும் மெல்ல முறுவலித்தார்.

"என்னம்மா? கையில் புத்தகம் இல்லை, டிவி ஓடவில்லை அப்படியே அமைதியாக உட்கார்ந்து இருக்கிறீர்கள். எதுவும் பிரச்சினையா?" என்று அவர் முகத்தை கூர்ந்தான்.

தன் முகத்தை முயன்று இயல்புக்கு கொண்டு வந்தவர், "அது ஒன்றும் இல்லைடா... எல்லாமே ஒரே போர், சரி

கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கலாம் என பார்த்தால் நீ எந்த நேரம் வந்து கதவை தட்டுவாயோ என்று தான் உனக்காக காத்திருந்தேன்!" எனும்பொழுதே அவரின் குரலில் மெல்லிய குற்றச்சாட்டு வெளிப்பட்டது.

"அச்சோ... சாரிம்மா... இனிமேல் சரியான நேரத்திற்கு வந்து விடுகிறேன். ஓகே?" என்று முறுவலித்தான்.

ம்... என்றவர் அதற்கு மேல் அவனிடம் இயல்பாக பேச முடியாமல் குழப்பத்துடன் எழுந்து தன்னறைக்கு சென்றார்.

மனதிற்குள் தன்னையே கடிந்துக் கொண்டவன், 'ச்சே... இனியும் தாமதிக்க கூடாது, இங்கே அம்மா தனிமையை உணர்கிறார்கள் என்றால் அங்கே ஹர்சுவும் அதையே ஃபீல் செய்கிறாள். அம்மாவுக்கு போராக மட்டும் தான் இருக்கிறது, ஆனால் அவளுக்கோ சுயபச்சாதாபம் வேறு தோன்றுகிறது. கூடிய விரைவில் அம்மாவிடம் பேசி நாள் பார்த்து திருமணம் முடித்து அவளை இங்கே அழைத்து வந்து விட வேண்டும். அடடா... அகிலுக்கு இடையே விடுமுறை கிடைப்பது கடினமாயிற்றே, பரவாயில்லை இங்குள்ள சூழ்நிலையை அவன் சரியாக புரிந்துக் கொள்வான். முதலில் எப்படியாவது ஹர்சிதாவை நம் குடும்பத்தில் இணைக்க வேண்டும்!' என்று எதிர்படும் தடைகளுக்கு எல்லாம் அவனுக்கு அவனே விளக்கம் சொல்லி சரிசெய்து கொண்டு தாயின் மனநிலை அறியாமல் குதூகலமாக திட்டமிட ஆரம்பித்தான்.

"அம்மா!" என்று தயங்கியவாறு தன்னெதிரே வந்து அமர்ந்த மகனை மேலிருந்து கீழ் வரை அளவெடுத்தார் பவானி.

"சொல்லுப்பா!"

"இதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள் என்று தெரியவில்லை. வந்து... அகில் தான் அவ்வப்பொழுது காதல், திருமணம் என்றெல்லாம் ஏதாவது கேலி செய்து உங்களிடம் விளையாடுவான். எனக்கு அப்படியெல்லாம் எதுவும் தோன்றியதேயில்லை, ஆனால்..." என மென்று

விழுங்கியவன், "கடந்த சில வாரங்களாக நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன், அவள் மிகவும் நல்லவள். அவளை நேரில் பார்த்தீர்கள் என்றால் நிச்சயம் உங்களுக்கு பிடிக்கும்!" என்று ஆர்வமாக விளக்கியவனை தன்னுடைய ஒரே சொல்லால் செயலிழக்க வைத்தார் அவர்.

"தேவையில்லை!"

ஒருகணம் விழித்தவன், "ம்மா..." என்றான்.

"நான் யாரையும் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை!"

தன் காதுகளையே நம்ப முடியாமல் அம்மாவின் முகத்தை உணர்வுகள் மரத்துப் போய் பார்த்திருந்தான் விமல்.

அவனால் இன்னமும் தன் அம்மாவின் வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை. அவர் வாயிலிருந்தா அந்த வார்த்தை வந்தது... என் நம்பிக்கை பொய்த்துப் போனதா? விஷயத்தை சொன்னதும் முதலிலேயே ஏன்டா என்னிடம் சொல்லவில்லை என லேசாக கோபிப்பார், பின்பு சிறு கேலியுடன் தன்னுடைய காதலை அவர் நிச்சயம் ஏற்றுக் கொள்வார் என்று மனக்கோட்டை கட்டியிருந்தேனே... இப்பொழுது என்ன செய்வது? என்று பரிதவித்தான்.

இவர் மேல் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கை தானே ஹர்சுவிடம் வாக்களிக்க தூண்டியது. சோர்வை தீண்டும் மனதை துவள விடாமல் மீண்டும் அவரிடம் தன் காதலை புரிய வைக்க முயன்றான் விமல்.

"அம்மா!"

"வேண்டாம் விமல்... இதைப்பற்றி பேச எனக்கு சிறிதும் விருப்பமில்லை!" என்றார் குரலில் கடினம் கூட்டி.

"ஏன்மா... நான் இன்னும் விஷயத்தை முழுவதுமாக கூட கூறவில்லையே அதற்குள் ஏன் மறுக்கிறீர்கள்?" என்றான் ஏமாற்றத்தோடு.

"தெரியவில்லை விமல்... உன்னுடைய வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிவருவதை என் மனம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது!"

"நானும் காதலிப்பேன் என்று நானும் தான்மா ஒருநாளும் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் ஹர்சுவை பார்த்த மறுகணமே அவளின் குணம் என்னை கவர்ந்திழுத்து விட்டதும்மா!"

சில நொடிகள் அமைதி காத்தவர், "சரி உனக்காக வேண்டும் என்றால் அவளுடைய பெற்றோரிடம் முதலில் பேசிப் பார்க்கிறேன். அவர்களுடைய மொபைல் நம்பர் கொடு!" என்றார் அலட்சியமாக.

அவள் அநாதைப்பெண் என்று தெரிந்தப் பின்னும் தன் மகனின் வாதத்தை பலமிழக்கச் செய்யவே அவர் அவ்வாறு கேட்டார். முகத்தில் ஈயாடாமல் வாடிப்போய் அமர்ந்திருந்த தன் மகனை கண்டு நெஞ்சம் உருகினாலும் அதை வெளியே காண்பிக்காமல் இறுக்கத்துடன் அமர்ந்திருந்தார் பவானி. அந்த நேரம் சுமித்ரா சீண்டி விட்டு சென்றிருந்த கௌரம் முக்கியமாக தோன்றியது அவருக்கு. மேலும் ஆண் தலைமை இல்லாத வீடு என்ற குத்தல் வேறு அவரை தடுமாற வைத்திருந்தது.

"அம்மா... அவளுக்கு பெற்றோர் இல்லை, ஆசிரமத்தில் வளர்ந்தவள்!" என்றான் மெல்லிய குரலில்.

"அப்பொழுது அடுத்த பேச்சுக்கே இடமில்லை, ஒரு அநாதை இந்த வீட்டு மருமகளாக வருவதை நான் விரும்பவில்லை!" என்று எடுத்தெறிந்து பேசினார் அவர்.

அவரின் சொற்களை கேட்டு, “அம்மா...” என்று கூவியவன் மெல்ல கண்களை மூடி தன்னை நிதானப்படுத்தினான்.

அந்த வார்த்தைகள் அவன் இதயத்தை கசக்கிப் பிழிய அதுவரை இருந்த பொறுமை மறைந்து ஹர்சிதாவிற்காக அவனுடைய உள்ளம் வெகுண்டது.

"ஏன்மா உங்களின் இயல்புக்கு மாறாக இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? யாருமில்லாமல் அநாதையாக வளர்ந்தது

அவள் தவறு அல்ல... அவளை விட்டுச் சென்றவர்களின் தவறு அது!" என்றான் முகம்சிவக்க.

"எனக்கு உன்னுடைய எந்த விளக்கமும் வேண்டாம் விமல், பிடிக்கவில்லை என்றால் பிடிக்கவில்லை அவ்வளவு தான்!" என்று முடிக்கப் பார்த்தவரை தடுத்து கெஞ்சினான் அவன்.

"அம்மா... அவள் ரொம்ப பாவம்மா, எந்த உறவும் இன்றி தனிமையில் வாழ்வதை எண்ணி மிகவும் மனமுடைந்து போயிருக்கிறாள்!"

"அவள் மேல் பரிதாபம் என்றால் ஏதாவதொரு அநாதை பையனுக்கு திருமணம் முடித்து வை. அதைவிட்டு விட்டு இந்த வீட்டுக்கு அழைத்து வரவேண்டும் என்று மட்டும் நினைக்காதே!" என்றார் கோபமாக.

"ஓஹோ... அப்படியென்றால் யாருமற்றவர்கள் எந்த உற்றார், உறவுமின்றி தனிமையில் வாழும் அநாதரவ இளைஞர்களை மட்டும் தான் திருமணம் செய்துக் கொள்ள வேண்டுமா? நம்மை போன்று குடும்பங்களில் சேர்ந்து வாழக் கூடாதா?" என்றான் நேர்பார்வையாக.

ஒரு கணம் தடுமாறியவர் சட்டென்று சமாளித்து, "ஆமாம்!" என்றார் உறுதியாக.

வார்த்தைகள் மௌனிக்க அவரை வெறித்துப் பார்த்தவன் வேறெதுவும் வாதிடாமல் அமைதியாக வெளியேறினான்.

ஓய்ந்துப் போய் கட்டிலில் அமர்ந்த பவானிக்கு தான் பேசிய வார்த்தைகளை எண்ணி லேசாக பதற்றமாக இருந்தது. முகம்மறியா அப்பெண் நல்லவளா கெட்டவளா என எதுவும் தெரியாமல் அவள் எந்த குடும்பத்திலும் வாழத் தகுதியில்லாதவள் என்று தான் கூறியது மிகவும் தவறாகப்பட்டது அவருக்கு. ஒருபுறம் அவருள் இருக்கும் மனசாட்சி உறுத்தினாலும் மறுபுறம் தன் கௌரவம் முக்கியமாகபட மற்றதை பின்னுக்கு தள்ளினார்.

அறையின் இருளில் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் தவிப்புடன் தன் தாயின் வாதங்களை எண்ணி பெரிதும் அலைபாய்ந்து கொண்டிருந்த விமலை கலைத்தது அலைபேசியின் ஒலி.

கையில் எடுத்தவனுக்கு ஹர்சுவின் பெயரை திரையில் பார்த்ததும் கலக்கம் ஏற்பட்டது.

"ஹலோ!"

"ம்... சொல்லும்மா!"

"என்ன? சொல்லும்மாவா... நீங்கள் வீட்டிற்கு போய் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகிவிட்டது. மணி பத்தாகப் போகிறது... ஏன் இவ்வளவு நேரமாக எனக்கு போன் செய்யவில்லை?" என்று உரிமையோடு அவனிடம் கோபித்துக் கொண்டாள்.

அதில் தெரிந்த கொஞ்சல் தனது நெருக்கத்தை பறைசாற்ற, 'இத்தனை தூரம் இந்த பேதைப் பெண்ணின் மனதில் ஆசையை வளர்த்து விட்டு இப்பொழுது எனது அம்மா உன்னை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்று சொன்னால் அந்த வலியை அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா? அதற்கு நானே காரணமாக இருப்பதா?' என்று உள்ளம் வெதும்பினான்.

"ஹலோ... ஹலோ... லைனில் இருக்கிறீர்களா?"

"ம்..." என்றவனின் குரல் பிசிறடிக்கவும் லேசாக கவலைக் கொண்டவள், "எதுவும் பிரச்சனையா?" என்றாள் தவிப்புடன்.

"ம்... அதெல்லாம் எதுவும் இல்லை!"

“நிஜமாகவா?” என்க, இவன் உம் கொட்டினான்.

"இல்லை... பொய் சொல்றீங்க, உங்கள் குரலே சரியில்லை. என்னிடம் என்னவென்று விவரம் சொல்ல மாட்டீர்களா?"

அவளிடம் சொல்ல தயங்கியவன், "அது... கொஞ்சம் ஆபிஸ் டென்ஷன்டா!" என்று சமாளித்தான்.

ஓ... என்றவள் மேலே வேறு பேச ஆரம்பிக்க முடிந்தவரை அவளிடம் எந்த வேறுபாடுமின்றி இயல்பாக பேசி முடித்தான். அகிலின் நினைவு வர அடுத்து அவனுக்கு அழைப்பு விடுத்து எல்லாவற்றையும் வேகமாக புலம்பி தள்ளிவிட்டான் விமல்.

ஒருவாரமாக எவ்வளவோ எடுத்து சொல்லிப் பார்த்தும் பவானியின் எண்ணத்தை அவனால் சிறிதும் மாற்றவே முடியவில்லை. ஒருபக்கம் ஹர்சுவுடனான சந்திப்பும் நாள் தவறாமல் நடந்துக் கொண்டிருந்தது. அவனுடைய முகத்திரையை தாண்டி அவன் நெஞ்சில் இருந்த வருத்தத்தை அவளால் கண்டறிய முடியவில்லை.

அன்று வந்ததிலிருந்தே தன்னிடம் எதையோ சொல்ல நினைத்து முடியாமல் அவள் தயங்குவதை கண்டவன் கனிவுடன் அவள் கரம்பற்றினான்.

"என்னம்மா... என்னிடம் கேட்பதற்கு எதற்கு இவ்வளவு தயங்குகிறாய்? ம்..." என்று அவளை பேச தூண்டினான்.

"இல்லை... அது வந்து... அம்மாவிடம் பேசிவிட்டீர்களா? எப்பொழுது திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று ஏதாவது நீங்கள் திட்டமிட்டுள்ளீர்களா?" என்றாள் ஹர்சு தயங்கி தயங்கி.

உயிர் வரை வலி தீண்ட, தன் முகம் மாறாமல் காக்க மிகவும் சிரமப்பட்டுப் போனான் விமல். நல்லவேளையாக கூச்சத்தில் தலைக்குனிந்திருந்ததால் அவள் பார்வையில் அது விழவில்லை.

கை விரல்களை ஒன்றோடொன்று பிணைத்துக் கொண்டு தன்னுடைய தடுமாற்றத்தை மறைக்க போராடியவளை கண்டு நெஞ்சம் நெகிழ அவள் முகத்தை நிமிர்த்தி தன் விழிகளை காணச் செய்தான் அவன்.

"என்னுடைய திட்டமெல்லாம் இருக்கட்டும். நீ என்ன நினைக்கிறாய் அதைச் சொல்?"

"ம்... நான் உங்களை தான் கேட்டேன்!"

"நீ பதில் சொன்ன பிறகு தான் நான் சொல்வேன்!" என்றான் இவன் பிடிவாதமாக.

ப்ச்... என்று போலியாக முறைத்தவளின் முகம் அடுத்து வெட்கச்சிவப்பை அழகாக தத்தெடுத்துக் கொள்ள, "என்னை கேட்டால் இப்பொழுதே என்னை திருமணம் செய்து உங்கள் வீட்டிற்கு அழைத்து செல்லுங்கள் என்று தான் கூறுவேன்!" என வேகமாக சொல்லிவிட்டு, "வந்து... உங்களால் என்னை சரியாக புரிந்துக் கொள்ள முடிகிறதா? உங்களை விட்டு தனிமையில் பிரிந்திருப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உங்களை சந்திக்கும் வரை தனிமை மிகவும் விரக்தியை மட்டும் தான் எனக்கு கொடுத்தது. ஆனால் இப்பொழுது... அதை எப்படி சொல்வதென்று புரியவில்லை, உங்களை விட்டு பிரிந்திருப்பது நரகத்தில் இருப்பது போல் அவ்வளவு வேதனையாக இருக்கிறது!" என்று கண்ணீர் மாலையை தொடுத்தவளை, ஏய்... என்றபடி சட்டென்று இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான் விமல்.

"அம்மாவிடம் சீக்கிரமாக விவரம் சொல்லி என்னை உங்களுடன் அழைத்து செல்கிறீர்களா?" என்று விழிகளில் உயிரை தேக்கி ஏக்கத்துடன் வினவினாள் ஹர்சிதா.

உண்மை தெரிந்தால் இவளின் இதயம் எப்படி துடிதுடிக்கும் என்று இமைகளை அழுந்த மூடி தன் வேதனையில் ஆழ்ந்தான் நாயகன்.

26

அதெல்லாம் சில நொடிகள் தான், ஹர்சிதாவின் ஏக்கம் விமலின் முகத்தில் தீவிர சிந்தனையை தோற்றுவித்தது.

"என்ன அமைதியாகி விட்டீர்கள்?" என்றவளின் குரலில் மெல்லிய ஏமாற்றம் வெளிப்பட்டது.

"இனி பேச்சில்லாமல் செயலில் மட்டும் தான் காட்ட வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன்!" என்றான் அவன் தீவிரமாக.

அவள் புருவம் சுருக்க, "திருமண தேதியை குறித்து விட்டு தான் உன்னிடம் அடுத்து பேசலாம் என்றிருக்கிறேன்!" என அழகிய வசீகர புன்னகையுடன் கூறியவனை ஆசையாக நோக்கினாள் அவனின் காதலி.

அவன் சர்ட்டை இறுகப் பற்றியவள், "நிஜமாகவா?" என்றாள் விழிகள் மின்ன.

அவள் முகத்தை தன் கைகளில் ஏந்தி குனிந்து நெற்றியில் முத்தமிட்டவன், "நாளை திருமண தேதியோடு உன்னை சந்திக்கிறேன்!" என்று தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

உச்சக்கட்ட பரவசத்தில் இதயம் விம்ம விமலின் சர்ட்டை ஆனந்த ஊற்றால் குளிப்பாட்ட ஆரம்பித்தாள் ஹர்சிதா.

அதை உணர்ந்தவனின் நெஞ்சமோ அவளுக்காக நெகிழும் அதேநேரம் தன் தாயின் நிலையை எண்ணியும் லேசாக கவலையை தத்தெடுத்திருந்தது.

"அம்மா!"

அவரின் இறுக்கமான முகம் தன்னை வெகுதூரம் தள்ளி நிறுத்தியிருப்பது போன்றதொரு பிரமையை அவனுள் தோற்றுவிக்க வருத்தத்துடன் பேச ஆரம்பித்தான் விமல்.

"நான் ஹர்சிதாவை திருமணம் செய்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்மா!" என்றவனுடைய பார்வை மறந்தும்

அவரை நிமிர்ந்துப் பார்க்கவில்லை.

அவனை உச்சக்கட்ட அதிர்ச்சியுடன் ஏறிட்ட பவானி, "ஓ... தேதியெல்லாம் பார்த்தாயிற்றா?" என்றார் உள்ளடங்கிய வேதனையுடன் மெல்லிய குரலில்.

இதுவரை எதை செய்தாலும் என் மனம் நோகாமல் செய்ய வேண்டும் என்று பார்த்து பார்த்து நடந்துக் கொண்ட மகன், இப்பொழுது தன் திருமணம் என்று வரும்பொழுது என்னுடைய வார்த்தைகளை மதிக்க மறுக்கிறானே என்பது அவருக்கு வருத்தத்தை கொடுத்தது.

"இன்னும் இல்லைம்மா... நாளை தான் பார்க்க வேண்டும்!" என்று உள்ளே போன குரலில் மொழிந்தவன் சட்டென்று அவர் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அருகில் அமர்ந்து கெஞ்ச ஆரம்பித்தான்.

"அம்மா... ப்ளீஸ்... நாளை நாம் இருவருமே ஜோதிடரிடம் போய் நல்ல நாள் பார்த்து திருமண தேதியை முடிவு செய்யலாமே?" என்று விழிகளாலும் இறைஞ்சினான்.

விமலின் முகத்தையும், விழிகளையும் அவ்வாறு காண முடியாமல் தடுமாறியவர் ஒரு நப்பாசையில், "இதற்கு நான் உடன்பட மறுத்தால்..." என்றார்.

"அந்த பேச்சிற்கே இடமில்லை... நீங்கள் எனக்காக நிச்சயம் சம்மதிப்பீர்கள்!" என்று பிடிவாதமாக கூறினான் அவன்.

சட்டென்று அவருள் சினம் துளிர்க்க ஒரு பேச்சிற்கு கூட அவளை விட்டுக் கொடுக்காமல் தன்னை சம்மதிக்க வைப்பதிலேயே குறியாக இருக்கிறானே என்ற ஆத்திரம் பெருகி அவரின் தன்மானத்தை தூண்டிவிட எதிர்திசையில் முறுக்கி கொண்டு திரும்பினார் அவர்.

"உன் எண்ணத்தை என் முடிவில் திணிக்கப் பார்க்காதே விமல்!" என்றார் கடினமுடன்.

"அதில் தவறென்ன? ஒரு நல்ல விஷயம் எனும்பொழுது நீங்கள் அதை தாராளமாக ஏற்றுக் கொள்ளலாமே!"

"எது நல்ல விஷயம்? பார்த்து சில நாட்களே ஆன எவளோ ஒருத்தி மொத்தமாக எனக்கெதிராக என்னுடைய மகனை திசைத்திருப்பி விடுவாள். நான் அவளை ஏற்றுக் கொள்ள வேண்டுமா?"

"அம்மா...” என பதறியவன், “இப்படி குறுகிய எண்ணத்தோடு யோசிக்காதீர்கள், உங்களின் ஆழ்மனதிற்கு சென்று உணர்ந்துப் பேசுங்கள். உங்களின் குணத்திற்கு நீங்கள் இப்பொழுது பேசிக் கொண்டிருப்பது மிகவும் தவறானது!"

"ஓ... என்னிடம் வேறு குறைக் கண்டுப்பிடிக்கும் அளவிற்கு நீ வந்தாயிற்றா?"

"ஐயோ... இல்லைம்மா, உங்களிடம் இப்படி பொதுவான சராசரி பெண்களின் குணத்தை நான் எதிர்பார்க்கவில்லை என்று சொல்ல வந்தேன்!"

"போதும் நிறுத்து... இதற்குமேல் எந்த வாதமும் வேண்டாம். எத்தனை காலம் ஆனாலும் சரி இந்த திருமணத்திற்கு என்னால் நிச்சயமாக சம்மதிக்க முடியாது. இறுதியாக உன் முடிவு என்ன?"

"அம்மா ப்ளீஸ்... நான்..."

"கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும், இந்த வழவழாகொழகொழா எல்லாம் வேண்டாம்!"

"இல்லைம்மா..."

"உன்னிடம் பதிலை தான் கேட்டேன் விமல்!"

சற்று நேரம் அமைதியாக தலைக்குனிந்திருந்தவன், "நான்... நான் அடுத்த முகூர்த்தத்தில் ஹர்சுவை திருமணம் செய்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்மா!" என்றான் வேதனையோடு.

தன் தாய்க்கு எதிராக செயல்படும் சூழ்நிலை உருவாகும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

அவன் சொல்லில் பவானியின் உள்ளம் முற்றிலுமாக நொறுங்கிப் போனது. தன் மகன் அவ்வளவு தானா? என்ற ஆற்றாமையில் கண்ணீர் துளிர்க்கப் பார்த்தது.

அத்தனை வருடங்களாக தனி ஒருவராக பிள்ளைகளை வளர்த்தி ஆளாக்கியருந்தவருக்கு ரோஷமும், வீம்பும் தலைத்தூக்க விழிநீரை வெளிவிடாமல் உள்ளுக்குள்ளே விழுங்கியவர் நிமிர்ந்து ஒரு நிமிடம் விமலை வெறித்தார்.

"அப்படியென்றால் இந்த வீட்டில் உனக்கு இடமில்லை, நீ வெளியே போகலாம்!"

"அம்மா!" என்று தீயை மிதித்தது போல் அலறியவன் வேகமாக வந்து அவர் தோள்களை பற்றினான்.

"நான் உங்களை விட்டுப் போக வேண்டுமா? என்னம்மா பேசுகிறீர்கள் நீங்கள்?" என்றான் பதற்றத்துடன்.

தொண்டை அடைத்து நெஞ்சம் வலிக்க அவன் கரத்தை மெதுவாக விலக்கியவர், "நீதான்டா உனக்கு வேண்டிய வாழ்க்கையை தேர்ந்தெடுத்தாய்?" என்றார் அமைதியாக.

"ஆனால்... ஆனால்... நான் உங்களை விட்டு விலக வேண்டும் என்று எண்ணவில்லையே? என்னால் உங்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாதும்மா!" என்றான் தவிப்போடு.

"அப்படியென்றால் அவளை விட்டுவிட்டு வா!" என்றார் முகம் இறுக அவனை நேராக பார்த்து.

"அம்மா.. திஸ் இஸ் இமோஷனல் பிளாக்மெயில்!" என்றான் விமல் கோபமாக.

"அது எதுவாக வேண்டுமென்றாலும் இருந்து விட்டுப் போகட்டும். நீ இந்த வீட்டில் இருக்க வேண்டுமென்றால் அவளை மறந்து தான் ஆக வேண்டும்!"

"அது என்னால் முடியாதும்மா!" என்றான் மகன் நிமிர்வாய் நின்று பிடிவாதமாக.

"அப்பொழுது நீ வெளியே போகலாம்!"

"அதுவும் என்னால் முடியாது. உங்களை இங்கே தனியே இருக்க விட்டு நான் எங்கும் செல்ல மாட்டேன்!" என்று முறைத்தான் விமல்.

"சரி... உன்னுடைய விருப்பத்தை ஏன் கெடுக்க வேண்டும்? விடுதியில் இருப்பவளை நீ இங்கே அழைத்து வா, இங்கிருக்கும் நான் விடுதிக்கு சென்று விடுகிறேன்!" என்றார் பவானி கோபமாக.

அவரை அதிர்ச்சியுடன் பார்த்தவன் வார்த்தைகளின்றி ஊமையாகிப் போனான்.

'தன் அம்மா விடுதியில் தங்குவதா?'

அவரோ முகத்தை சுளித்து அதற்குமேல் எதுவும் பேசாமல் வெடுக்கென்று திரும்பி அறைக்கு செல்ல முயல வேகமாக நெருங்கி அவர் கரம்பற்றி தடுத்தவன், "எனக்காக கொஞ்சம் யோசிங்கம்மா... ப்ளீஸ்!" என்றான் விழிகள் கலங்க.

அவரை விட்டுப் பிரிய வேண்டும் என்பதை அவனால் சற்றும் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

"எனக்காக நீ யோசிக்க மாட்டாய்... நான் மட்டும் உனக்காக இதை யோசிக்க வேண்டுமா?" என்று அவரின் ஈகோ தலைதூக்கியது.

"அம்மா... நீங்கள் கொஞ்சம் யோசித்து முடிவை மாற்றிக் கொள்வதால் யாருக்கும் எந்தவொரு பாதகமும் ஏற்படப் போவதில்லை. ஆனால் நான் என் முடிவை மாற்றினால் ஒரு அப்பாவிப்பெண்ணின் வாழ்க்கை தான் வீணாகும்!"

"ஏன் வீணாகும் உன்னை நம்பி மோசம் போய்விட்டாளா என்ன? என்னுடைய மகனை நான் ஒன்றும் அப்படி வளர்க்கவில்லை!"

அந்நேரத்திலும் தன் தாயின் வார்த்தையை எண்ணி மெல்ல முறுவலித்தவன், "நம்ப வைத்து ஏமாற்றுவதும் ஒருவகையில் மோசம் தான்மா!" என்றான் அமைதியாக.

"விமல்... போதும், மேலும் மேலும் பேசி என்னை மிகவும் அப்செட்டாக்காதே!" என்றார் எரிச்சலுடன்.

"என்னை என்ன தான் செய்ய சொல்கிறீர்கள்?" என்றான் அவன் சோர்வாக.

"அதுதான் வீட்டை விட்டு வெளியே போ என்று சொல்லி விட்டேனே... அப்புறம் என்ன?" என்றார் புருவம் நெறித்து.

"உங்களை நம் வீட்டில் தனியாக விட்டு நான் எப்படிம்மா செல்ல முடியும்?"

"அந்தக் கவலை உனக்கு தேவையில்லை, உங்கள் அப்பா இல்லாமலே தைரியமாக வாழ்ந்தவள் நான். என்னை பார்த்துக் கொள்ள எனக்கு தெரியும்!" என்றார் வீம்பாக.

சில கணங்கள் அவர் முகத்தை பார்த்திருந்து விட்டு, "சரி நான் போகிறேன், ஆனால் உங்களை சுற்றி எப்பொழுதும் கண்காணித்து கொண்டு தான் இருப்பேன். எந்த நிமிடம் அழைத்தாலும் உங்களிடம் ஓடிவந்து விடுவேன்..." என சிறு இடைவெளி விட்டவன், "ஹர்சுவோடு!" என்று முடித்தான்.

அவன் முடிவை கேட்டு முகம் சிவந்தவர் அதற்குமேல் அங்கே நிற்க பிடிக்காமல் வேகமாக தன்னறைக்கு சென்று கதவை சாற்றிக் கொண்டார்.

மறுநாள் காலை தன் நெருங்கிய நண்பன் ஒருவனிடம் விவரத்தை கூறி அவசர அவசரமாக தனக்கொரு வீட்டை ஏற்பாடு செய்தவன் அன்றிரவு கிளம்ப மனமே இல்லாமல் அறையை விட்டு வெளியே வந்தான்.

இங்கே நடப்பவை அனைத்தையும் ஒன்று விடாமல் அகிலுக்கு தெரியப்படுத்தி பதிலுக்கு அவன் புலம்பலையும் கேட்டு பதிலளித்துவிட்டு பவானியிடம் வந்தான் விமல்.

இறுகிப்போய் அமர்ந்திருந்தவரை நெருங்கியவன் ஒருவித இயலாமையோடு அவரை பார்க்க, அவர் மறந்தும் இவன் புறம் திரும்பவில்லை.

"அம்மா நான் கிளம்புகிறேன், ஏதாவது பிரச்சினை என்றால் தயங்காமல் கூப்பிடுங்கள் உடனே ஓடிவந்து விடுவேன். நம் ஏரியாவில் தான் வீடு பார்த்திருக்கிறேன்!"

"அப்படியொரு நிலையை எனக்கு தந்து விடாதீர்கள் என்று அந்த கடவுளிடம் நான் வேண்டிக் கொள்கிறேன்!" என்றார் அவர் வெறுப்போடு.

முகம் வாடியவன் அவர் முகத்தை ஏக்கத்துடன் திரும்பி திரும்பி பார்த்தபடி சோர்வுடன் வெளியேறினான். விமல் கண்ணிலிருந்து மறையும் வரை பவானியிடம் இருந்த வீராப்பு எல்லாம் அவன் கண்மறைந்ததும் காணாமல் போக உடைந்து போய் அழ ஆரம்பித்தார்.

தனது புதிய வீட்டிற்கு சென்ற விமல், அங்கே தங்குவதற்கு தேவையான அடிப்படை வசதிகளை மட்டும் உணர்வே இல்லாமல் தான்தோன்றித்தனமாக மேற்கொண்டான்.

அடுத்து வந்த நான்காவது தினத்தை திருமணத்திற்கென்று குறித்தவன் ஹர்சிதாவிடம் தன் தாயின் எதிர்ப்பை மறைத்து விட்டான். அவள் குழப்பத்துடன் வினவியதற்கு முதன்முறையாக பார்க்கும் பொழுது நல்ல நாளில் பார்க்க வேண்டுமாம் அதனால் திருமணத்தன்று பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார் என அவளிடம் பொய்யுரைத்தான்.

திருமணம்! இத்தனை வருட தனிமையில் இருந்து தனக்கு விடுதலை கிட்டப் போகிறது என்பதிலேயே மற்றவை அடிப்பட்டுப் போக அவளும் தன்னவனின் மனதையும், முகத்தையும் சரியாக ஆராயாமல் குதூகலமாக சம்மதித்து விட்டாள்.

விமல் வாங்கி தந்த பட்டுப்புடவையிலும், உச்சக்கட்ட மகிழ்ச்சியிலும் அந்த முழுநிலவுக்கு நிகராக அழகுடன்

ஒளிர்ந்தவள் தன்னை அழைத்து போக வந்தவனை விழிகளில் எதிர்ப்பார்ப்புடன் நோக்கினாள்.

புறவிழியால் தன்னவளின் அழகை பருகும் அதேநேரம் அவளின் வதனத்தில் இருக்கும் மலர்ச்சி எல்லாம் தன் அம்மாவின் எதிர்ப்பு தெரியவரும் பொழுது எப்படி மாறுமோ என்று அகவிழியால் கவலைக் கொண்டான். இருந்தும் அவளது தற்காலிக சந்தோஷத்தையாவது நாம் காப்போம் என முயன்று முறுவலித்து கண்சிமிட்டினான்.

அதில் பெருமையில் முகம் சிவக்க அவனுடன் ஆசையாக கோவிலுக்கு கிளம்பினாள். அங்கே சென்று இறங்கியதுமே அவளுடைய விழிகள் சுழன்று அலைபாய்வதை கண்டவன் முதல்நாளே ஏமாற்றத்தை தரப்போகிறோமே என்கிற வேதனையோடு அவள் கரம்பற்றி அழைத்து சென்றான்.

"அம்மா எங்கே?" என்றாள் சுற்றிலும் பார்த்தவாறு குழந்தையாக.

அவன் பதிலளிக்காததை தாமதமாக உணர்ந்து திரும்பி முகம் பார்த்தவள் திகைத்தாள்.

"ஏன் உங்கள் கண்கள் கலங்குகிறது? அம்மா... அம்மா சம்மதிக்கவில்லையா?"

ம்... என்றான் தொண்டையடைக்க, அவனை அதிர்ச்சியோடு ஏறிட்டவள், "அப்புறம் எதற்காக இந்த அவசர திருமணம்?" என்றாள் புரியாமல்.

அதற்குள் தன்னை மீட்டுக் கொண்டவன் அவளை தன்புறம் திருப்பி, "நமக்காக... உன்னை விட்டு என்னாலும், என்னை விட்டு உன்னாலும் பிரிந்திருக்க முடியாது என்பதற்காக!" என்றான் தெளிவாக.

"ஆனால்... இது தவறில்லையா? உங்களை பெற்றவரின் வெறுப்பில்... எனக்கு பயமாக இருக்கிறது, வேண்டாம்!" என்றவளின் விழிகள் நீரைப் பொழிந்தது.

"ஷ்... இது தப்பு தான், நானும் மறுக்கவில்லை. பட்... என்னால் உன்னை எங்கேயும் விட்டுத் தரமுடியாதும்மா. அதேபோல் இனியும் உன்னை இப்படியே தனிமையில் தவிக்க விடவும் முடியாது!" என்றான் விமல் உறுதியோடு.

ஹர்சு எதுவும் பேசாமல் தலைக்குனிய, "இங்கே பாருடா... இந்தப் பிரச்சினை எல்லாம் அகில் சென்னை வரும் வரை தான். அவன் வீடு திரும்பி விட்டால் அம்மாவை எப்படியாவது தலைகீழாக நின்றேனும் ஒருவழி செய்து நம் பக்கம் சாய்த்து விடுவான். அதுவரை இந்த தற்காலிக வருத்தத்தை நாம் சந்தித்து தான் ஆக வேண்டும். அதற்குள் நாமும் நம் முயற்சியை விடாமல் அவரிடம் தொடருவோம். ஒருவேளை நம்முடைய அதிர்ஷ்டமாக அம்மா அதற்கு முன்னரே நம்மை வீட்டிற்கு அழைத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!" என்று அவளுக்கு உத்வேகம் தந்தான்.

அவள் மேலும் தயங்க, "இன்னும் என்னடா? இத்தனை தூரம் ஆசையாக அனைத்து மனக்கசப்பையும் மறந்து திருமண ஏற்பாட்டை செய்து விட்டேன். நம் வாழ்க்கையை தொடங்க இருக்கும் நேரம் அபசகுணமாக தடங்கல் எதுவும் சொல்லாதே!" எனவும் அச்சத்தில் பதறியடித்து சம்மதித்து விட்டாள் ஹர்சிதா.

அதன்பின் கோவிலுக்குள் சென்று ப்ரோஹிதர் சொன்னபடி அனைத்து முறைகளையும் வரிசையாக செய்து இருவரும் ஒருமனதாக தங்களது மணவாழ்க்கையில் இனிய காதல் தம்பதியராக இணைந்தனர்.

27

திருமணம் முடிந்து புது வீட்டிற்கு வந்த மணமக்களை வரவேற்க தான் அங்கே யாருமில்லை, உள்ளம் சோர்ந்து காலடி எடுத்து வைத்தனர்.

சற்று நேரத்தில் தன்னை மீட்டுக் கொண்ட விமல் ஹர்சிதாவிற்காக கலகலவென்று பேச ஆரம்பித்தான். தன் வாழ்வில் சந்தித்த பல சுவாரஸ்யமான தகவல்களையும், நகைச்சுவையையும் மாறி மாறி கூறி அவளை இயல்பாக்க முயன்றான். அவளுக்கும் அவனுடைய நிலைமை புரிய மெல்ல அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

மனம் விரும்பியவனை மணந்தும் அவன் அம்மாவின் ஒதுக்கத்தால் மிகவும் வெறுமையாக உணர்ந்த ஹர்சு, வெளியில் சென்று உணவு வாங்க முயன்றவனை தடுத்து நேரத்தை கடத்துவதற்காக மதிய உணவை வீட்டிலேயே சமைக்கலாம் என்று சமைக்க தயாரானாள்.

அவளுக்கு உதவுகிறேன் என்று விமலும் உடன் சேர்ந்துக் கொள்ள அந்த நேரத்தில் சரியாக மூக்கில் வியர்த்தது போல் தொடர்பு கொண்டான் அகில்.

இருவரின் மனநிலையையும் தெளிவாக உணர்ந்திருந்தவன் அவர்களின் சமையலை குறித்து கேலி செய்கிறேன் பேர்வழி என்று வஞ்சனையில்லாமல் இரண்டு பேரையும் ஒருவர் மாற்றி ஒருவர் என கலாய்த்து தள்ளி விட்டான்.

இடையில் ஹர்சிதா குறுக்கிட்டு நான் உங்கள் அண்ணா போல் எல்லாம் இல்லை, நான் நன்றாக சமைப்பேன் என்றதை அவன் காதிலேயே வாங்கி கொள்ளவில்லை. அதெல்லாம் நான் நம்பமாட்டேன், நான் இந்தியா வந்ததும் உங்கள் கையால் சமைத்து போட்டதை சாப்பிட்டு எந்த பாதிப்பும் இல்லாமல் நன்றாக இருந்தேன் என்றால் வேண்டுமானால் ஓகே உங்களுக்கும் சமைக்க தெரியும் என ஏற்றுக் கொள்கிறேன். அதுவரை

நோ என்றால் நோ தான் என்று வம்படியாக பேசி சிறிது நேரத்தில் அந்த வீட்டையே கலகலப்பாக்கி விட்டான்.

அவனிடம் பேசி முடித்ததில் இருவர் மனதிலும் இருந்த பாரம் நீங்கி இதயம் லேசாக நிமிர்ந்து ஒருவரையொருவர் பார்த்தவர்கள் சட்டென்று அவனுடைய கேலியை எண்ணி வாய்விட்டு சிரித்தனர்.

ஹர்சு அவ்வாறு வாய்விட்டு நகைத்ததை கண்டவனின் மனதில் பெரும் நெகிழ்ச்சி தோன்றியது. இதைத்தான் நான் எதிர்ப்பார்த்தேன், இவளை இதுபோலவே எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க வேண்டும் என்று நெஞ்சம் உருக ஆசையோடு கைகளில் அள்ளிக் கொண்டான்.

"ஹைய்யோ... என்ன பண்றீங்க?" என்று பதறினாள் அவள்.

"பார்த்தால் தெரியவில்லையா பேபி... தூக்கி செல்கிறேன்!"

"ஆனால் சமையல்..." என்றவளின் குரல் மெல்ல தேய்ந்தது.

"அகிலுடன் பேசி முடிக்கும் முன்னரே உன் கலாட்டா சமையல் எல்லாம் முடிந்து ஸ்டவ்வை அணைத்து விட்டாய்டா செல்லம்!" என்று அவன் கண்ணடிக்க, சிணுங்கியபடி அவனுடைய மார்பில் புதைந்தாள் ஹர்சிதா.

அவளை தன் மடியில் இறுத்தியவன் முகத்தை நிமிர்த்தி ரசனையுடன் நோக்க, அவனுடைய பார்வையை தாங்க இயலாதவள் வெட்கத்துடன் அவனை கட்டிக்கொண்டாள்.

"ஐ லவ் யூடா... நீ எப்பொழுதும் இப்படியே மகிழ்ச்சியுடன் சிரித்து கொண்டிருக்க வேண்டும்!" என்று அவள் உச்சியில் தன் இதழை பதித்தான்.

உடல் சிலிர்த்தவள் அவனை மேலும் இறுக்கி கொண்டு, "என்னுடன் நீங்கள் இருக்கும் வரையில் என் மகிழ்ச்சிக்கு

எந்த குறையும் வராது!" என்று நிமிர்ந்து அவன் விழிகளை ஊடுருவினாள்.

அவளுடைய ஆர்வம் மிகுந்த பார்வையை கண்டு விமலின் புருவம் கேலியாக ஏறி இறங்க சட்டென்று எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டவள், தாங்க்ஸ் என்று முனகியபடி விழிகள் கலங்க அவன் தோள் சாய்ந்தாள்.

"ம்... இதை உணர இவ்வளவு நேரமா?"

"சாரி... எனக்கு அம்மாவை நினைத்து மிகவும் கவலையாக இருந்தது. என்னால் தானே நீங்கள் அவரை பிரிந்தீர்கள் என்ற குற்றவுணர்வு வேறு சேர்ந்துக் கொண்டது. ஆனால் அகிலிடம் பேசவும் எல்லாம் சரியாகி விட்டது. நீங்கள் சொன்னது போல் அனைத்தும் கூடிய விரைவில் சரியாகி நாம் நம் குடும்பத்தில் இணைந்து விடுவோம் என்கிற நம்பிக்கை தோன்றி மனதில் நிம்மதிப் பிறந்து விட்டது!" என்று புன்னகைத்தாள்.

"அதற்கு தான் புருஷன் பேச்சை கேட்க வேண்டும் அல்லது நம்ப வேண்டும் என்று சொல்வது!" என கொஞ்சலாக மொழிந்தபடி அவள் மூக்கை பிடித்து ஆட்டினான் அவன்.

மாலை தன்னுடைய வங்கி பணி முடிந்து பவானி வீடு வரும் வழியில் ஹர்சிதாவுடன் காத்திருந்தான் விமல். வீட்டிற்கோ அலுவலகத்திற்கோ சென்றால் அங்கு சூழ இருப்போரால் அவருக்கு சங்கடம் எதுவும் நேர்ந்து விடும் என்று எண்ணி அதை தவிர்த்து விட்டான்.

அவர்கள் இருவரையும் குறிப்பிட்ட தொலைவிலேயே கண்டுக்கொண்டவர் நேர்ப்பார்வையாக விறுவிறுவென்று நடக்க, வேகமாக ஹர்சுவின் கரம்பற்றி இழுத்துக் கொண்டு அவரின் அருகில் சென்று பேச முயற்சித்தான் மகன்.

"விமல்... தயவுசெய்து நடுரோட்டில் வைத்து எதையும் பேசி சீன் கிரியேட் பண்ணாதே, அவ்வளவு சுலபத்தில் நீ

செய்த காரியத்தை மன்னித்து என் மனம் ஏற்றுக் கொள்ளாது. வீணான வாதத்தால் இருவருக்கும் வருத்தம் தான் மிஞ்சும். ஸோ... என்னை விட்டு கொஞ்சம் விலகியே இரு!" என்று ஹர்சிதாவை திரும்பியும் பாராமல் சென்றுவிட்டார்.

அவர் சொல்லில் பெருமூச்சொன்றை வெளியேற்றியவன் தன்னருகில் வருத்தத்துடன் நின்றிருந்த மனைவியின் புறம் திரும்பினான்.

அவளை தோளோடு அணைத்து ஆறுதல்படுத்தியவன், "சரிவிடு... அவர்கள் சொல்வதும் சரிதான், சில காலத்திற்கு தள்ளியே இருப்போம். அவர்கள் கண்பார்வையில் விழுவது போல் மட்டும் தினமும் வந்து செல்வோம். காலம்மாறும் வரை காத்திருப்பதை தவிர நமக்கும் வேறுவழியில்லை!" என்று விட்டு அவளின் வருத்தத்தை மாற்ற அருகில் இருந்த சிறுவர் பூங்கா ஒன்றிற்கு அழைத்து சென்றான்.

அவ்வப்பொழுது ஏற்படும் பவானியின் ஏக்கத்தை தவிர்த்து மற்றபடி இருவரும் மகிழ்ச்சியுடனே வாழ்ந்தனர். எப்படியோ அவளின் தனிமையை போக்கி விட்டோம் என்ற நிறைவில் அவனும், எங்கே தேடினாலும் தன் மேல் உயிராக இருக்கும் இப்படியொரு மனிதன் தனக்கு கிடைக்க மாட்டான் என்ற களிப்பில் அவளும் இல்லறத்தில் நிறைவை அடைந்த நேரம் தான் விமலன் காணாமல் போனான்.

விமலுடன் இருக்கும் நேரத்தை பொக்கிஷமாக உணர்வாள் ஹர்சிதா. அவன் வீட்டில் இருக்கும் நேரம் முழுவதும் அவனோடு உரசிக் கொண்டே சுற்ற ஆசைப்படுவாள். அதை உணர்ந்திருந்த அவனும் அவளை எப்பொழுதும் தன் கைவளைவிலேயே வைத்திருப்பான். இவ்வாறாக ஒன்றாக வாழ்ந்த சில காலத்திற்குள் ஈருடல் ஓருயிராய் மாறிப் போயிருந்தனர் அந்த காதல் தம்பதியனர்.

விமல் வழக்கமாக வரும் நேரத்தை கணக்கிட்டு அன்று அவன் வரவிற்காக கைகளை குறுக்கே கட்டிக்கொண்டு பால்கனியில் தவம் இருந்தாள் ஹர்சிதா. அங்கிருந்து பார்த்தாலே அவன் கேட்டுக்குள் நுழைவது தெரியும்.

நேரம் தான் கடந்ததே தவிர அவன் வரவில்லை, அவன் பார்ப்பது அரசாங்க வேலை தான் என்றாலும் மத்திய அரசாங்கத்தின் ஆய்வு துறையில் இருப்பதால் புது புது பிரொஜக்ட் சம்பந்தமான ஆய்வுகளை மக்களிடையே நடத்தி அவர்களின் கருத்துக்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். பொதுவாகவே சமூகநலனில் அக்கறை கொண்டவன் என்பதால் அத்துறையை தேர்ந்தெடுத்து முடிந்தவரை மக்களுக்கு சாதகமாகவே தன் கருத்துக்களை முன் வைப்பான் விமல்.

மக்களிடையே பேட்டி எடுக்க செல்லும் பொழுது ஒருசில நாட்கள் வழக்கமான நேரத்தை தாண்டியும் அவன் தாமதமாக வீட்டிற்கு வருவான் என்பதால் பொறுமையாக காத்திருந்தாள்.

ஆனால் எத்தனை நேரம் காத்திருந்தும் அவன் வரவில்லை எனும் பொழுதே ஹர்சிதாவிற்குள் மெல்லிய பீதி பரவியது. அவனுடைய எண்களை தொடர்புகொண்டால் அது வேறு அணைத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல் தந்தது.

தொடர்ந்து முயன்றுக் கொண்டிருந்தவள் விடியவிடிய கண்ணயராமல் தனக்குள் ஒடுங்கி போய் அமர்ந்திருந்தாள். அவளின் உத்திரவு இல்லாமலே அவளின் விழிகள் அருவியை பொழிந்துக் கொண்டிருந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்து ஒன்பது மணியை தாண்டவும் நடுங்கும் கரத்தால் அவனுடைய அலுவலக எண்ணை தொடர்பு கொண்டு அழைத்தாள். அங்கும் அவன் இல்லை என்கிற எதிர்மறை பதிலே வரவும் அதற்குமேல் கேவி கேவி அழ ஆரம்பித்தவள் விமலுக்கு வேண்டியவர்களின்

அலைபேசி எண்களை கேட்டு வாங்கி வைக்காத தனது முட்டாள்தனத்தை எண்ணி எண்ணி ஓய்ந்துப் போனாள்.

விமல் அவளின் வாழ்க்கையில் வந்ததும் வெளிஉலகத்தை மறந்து அவனை சுற்றிலும் மட்டுமே தன் உலகத்தை சுழல விட்டவள் மற்றதை அலட்சியப்படுத்தி விட்டிருந்தாள்.

அவளுக்கும் தான் எப்படி தெரியும்? தன் வாழ்க்கையில் அதுவரை அனுபவித்த துயரை தீர்த்து தன்னை விழிப்போல் நேசிக்கும் ஜீவன் கிடைத்து விட்டதில் எல்லாம் சரியாகி விட்டது என்று தப்புக்கணக்கு போட்டு விட்டாளே.

அழுது அழுது ஓய்ந்து போனவளுக்கு பவானியின் நினைவு வந்து அவருக்கு எதுவும் உடல்நிலை முடியவில்லை என அங்கே சென்றிருக்கிறானா என்று மேனி முழுவதும் புதுரத்தம் பாய விரைந்து அவர் வீட்டிற்கு சென்றாள்.

கடந்த இரண்டு நாட்களாக தன் மகன் கண்களில் தென்படாததில் அவ்வளவு தான் அவன் நம்மை மறந்து விட்டான் என்று ஏற்கனவே கடுப்பில் இருந்தவரின் முன்கோபம் கண்களை மறைக்க வந்திருந்த பெண்ணின் தளர்ந்த தோற்றத்தை சரியாக கவனிக்காமல் அவளின் கூற்றை நம்பமறுத்து திருப்பி அனுப்பி விட்டார் அவர்.

எந்தப் பக்கமும் ஆதரவு கிடைக்காமல் ஆசிரமத்தின் புறமும் உதவி கேட்டு செல்ல விருப்பமில்லாமல் விமல் எங்கேயாவது கண்களில் தென்படுகிறானா என்று பகல் முழுவதும் சிந்தை கலங்கி ரோடு ரோடாக அலைபவள் இரவில் தன் கூட்டில் சென்று முடங்கிக் கொள்வாள்.

அப்படியொரு சூழ்நிலையில் தான் சரியான ஆகாரம், உறக்கம் இல்லாமல் தன் வயிற்றில் கருவை சுமக்கிறோம் என்கிற விஷயமும் தெரியாமல் சுற்றி அலைந்தவள் நடுரோட்டில் மயங்கி விழுந்து ஹிரணியின் கவனத்தை ஈர்த்தாள்.

அறையில் குண்டுசி விழுந்தால் கூட கேட்கும் அளவுக்கு மயான அமைதி நிலவ விமலின் கதையை கேட்டு மிகவும் பிரமித்துப் போய் அமர்ந்திருந்தாள் ஹிரண்மயி.

மேலே சீலிங்கில் சுற்றும் மின்விசிறியை வெறித்துக் கொண்டிருந்த கணவனிடம் திரும்பியவள், "உங்கள் அண்ணனை பற்றி நினைத்தாலே எனக்கு பிரமிப்பாக இருக்கிறது. இந்தளவுக்கு ஒரு ஆணால் ஒரு பெண்ணை நேசிக்க முடியுமா... அந்த காதலுக்கு அவ்வளவு உயர்வு இருக்கிறதா என்ன?" என்று விழி விரித்து அகிலிடம் வியப்புடன் வினவினாள்.

"என் வாயில் நன்றாக வந்து விடப் போகிறது, ஏதாவது சொல்லி விடப் போகிறேன். உன்னை எல்லாம்..." என்று அவன் தலையிலடித்துக் கொள்ளவும், விழிகளை இடுக்கி முறைத்தவள் ஹூம்... என உதட்டை சுழித்து விட்டு திரும்பிக் கொண்டாள்.

'பெரிய இவன் மாதிரி தான் அலுத்துக் கொள்வான், அப்படியென்ன கேட்ககூடாத விஷயத்தை நான் கேட்டு விட்டேன்...' என்று சிலிர்த்துக் கொண்டவள் வேகமாக அவனிடம் திரும்பினாள்.

"ஆமாம்... நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் உங்கள் அண்ணா தானாக எங்கும் சென்றிருக்க மாட்டார் போலிருக்கிறதே. ஒன்று... அவரை யாராவது கடத்தியிருக்க வேண்டும், இல்லையென்றால் விபத்து ஏதாவது நடந்து சுயநினைவு இல்லாமல் இருப்பார். இன்னொன்று..." என்று அவள் சொல்லாமல் தயங்க, அகில் பதறி தடுத்தான்.

"ஹிரணி ப்ளீஸ்... இதற்கு மேல் எதுவும் சொல்லாதே!" என்றான் தவிப்போடு.

அகிலின் வேதனை இவள் இதயத்தை பிசைய ஆதரவாக அவன் கரம் பற்றியவள், "இல்லை அப்படியிருக்காது, சாரி... நல்லதையே நினைப்போம். நிச்சயம் உங்கள் அண்ணா நலமுடன் திரும்பி வருவார்கள்!" என்றாள் நம்பிக்கையுடன்.

என்னவோ தன் மனைவியின் வாயிலிருந்து வந்த அருள்வாக்கு கண்டிப்பாக பலித்துவிடும் என்கிற அளவுக்கு ஓவராக கற்பனை செய்து மகிழ்ந்தவன் ஆசையுடன் அவள் கரத்தை எடுத்து தன் உதட்டில் ஒற்றி முத்தமிட்டான். இவள் சொல்லால் அகிலின் முகத்தில் பொங்கிய உற்சாகத்தை ஆவலுடன் ரசித்துக் கொண்டிருந்தவள் அடுத்து அவன் செய்துவிட்ட காரியத்தால் பேந்த பேந்த விழித்தாள்.

'இவள் ஏன் இப்படி பேயறைந்த மாதிரி பார்க்கிறாள்?' என்று சிந்தித்தவனுக்கு அதன்பிறகே சூழ்நிலை புரிய, ஐயையோ... என இதழ் கடித்தான்.

28

செய்து விட்ட தவறை சீர்செய்ய ஜெட் வேகத்தில் சிந்தித்த அகிலன், "ஏய்... ஏன் இப்படி திருதிருவென்று விழிக்கிறாய்?” என கேட்டு யோசிப்பது போன்ற பாவனை ஒன்றை வெளியிட்டு, “அச்சச்சோ... ஷிட்... கிஸ் பண்ணிட்டேனா?" என்று தலையில் கை வைத்துக் கொண்டான்.

'என்ன இது? அச்சச்சோ இடிச்சிட்டேனா... என்பது போல் படு கேசுவலாக பேசுகிறான்?' என்று ஹிரண்மயி மேலும் வாயைப் பிளக்காத குறையாக அவனை பார்த்தாள்.

‘அகில்... பார்ட்டி சுதாரிப்பதற்குள் பேசிமுடித்து படுத்து விடு!’

"ஐ ஆம் ரியலி சாரி... நான் இதை எதிர்ப்பார்க்கவில்லை, அது வந்து... ஒரு சந்தோசத்தில் இப்படி செய்து விட்டேன். நல்லவேளை... என் அம்மாவிடம் செய்வது போல் வேறு எதுவும் செய்யவில்லை. ஓ... தாங்க் காட்!" என்று நெஞ்சில் கைவைத்து போலியாக பெருமூச்சொன்றை வெளியிட்டான்.

அவள் அவனை புரியாமல் பார்க்க, "என்ன பார்க்கிறாய்? சின்ன வயதிலிருந்து இப்பொழுது வரை என்னிடம் ஒரு கெட்டப் பழக்கம் இருக்கிறது. ஏதாவது எதிர்பாராத திடீர் மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டால் அது சின்னதாக இருந்தாலும் சரி, உடனடியாக என் அம்மாவை கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டு கொண்டாடுவேன்!" என்று சாதாரணமாக சொன்னவனை திகைப்புடன் பார்த்தாள் ஹிரணி.

'நிஜமாகவே நீ சொன்னது போல் நல்லவேளை தான்டா... மயிரிலையில் தப்பித்திருக்கிறேன். உன் அண்ணன் திரும்ப கிடைக்கும் பொழுது நான் ஏதாவது ஒரு அறைக்குள் தான் சென்று ஒளிந்துக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது!'

அவள் முகத்தில் படிந்திருந்த சிந்தனை கண்டு, 'அப்பாடி... ஒருவழியாக சமாளித்து விட்டோம்!' என்று உள்ளுக்குள் ஒரு குத்தாட்டம் போட்டவன், "ஓகே குட்நைட்!" என திரும்பி படுத்து வேகமாக விழிகளை மூடிக்கொண்டான்.

அவனிடம் விழிகளை திருப்பியவளுக்கு அவளையும் மீறி உள்ளிருந்து மெல்லிய பெருமூச்சொன்று வெளிப்பட்டது. கால்களை மடக்கி முழங்காலை கட்டிக்கொண்டு அதில் தலைசாய்த்தவளுக்கு அவனுடைய அலட்டலான பேச்சை எண்ணி இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

'சரியான ஆள்... செய்வதை எல்லாம் செய்து விட்டு, நல்லவேளை என்று பூசி சமாளிக்கிறான்!' என ரசனையுடன் எண்ணமிட்டபடி அமர்ந்திருந்தவள் அவன் முத்தமிட்ட கையை மெதுவாக விழிகளுக்கு நேரே உயர்த்தி பார்த்தாள்.

சற்று முன்பு விமலின் காதலை கேட்டிருந்தவளுக்கு அந்த உணர்வின் மேல் ஒரு இனம் புரியாத மதிப்பு தோன்றியது. போலியான காதலையும், ஆட்களையும் தவிர்த்து விட்டு பார்த்தால் காதல் மிகவும் அற்புதமான ஒன்று தான் என மனதார ஏற்றுக் கொண்டாள்.

முதல் முத்தம்... என் கணவன் என்ற சிந்தனையில் லேசாக கன்னம் சிவந்தவளை தொடர்ந்து சிலாகிக்க விடாமல் அழையா விருந்தாளியாக மயூ வந்து சேர்ந்தாள்.

சட்டென்று முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க எரிச்சலுடன் திரும்பி அருகில் துயில் கொண்டுள்ள அகிலை உறுத்துப் பார்த்தாள் ஹிரண்மயி.

'இடியட்... ப்ளடி ஸ்டுப்பிட்... வொர்ஸ்ட் ஃபெல்லோ...' என்று மாறி மாறி அர்ச்சித்தவள், 'இவங்க அண்ணனை விட இவன் நல்லவன் என நினைத்தேனே, உண்மையில் அவர் தான் மிகவும் நல்லவர். ஹர்சு அக்காவின் மகிழ்ச்சிக்காக எத்தனை விஷயங்களை செய்திருக்கிறார்? அப்பா... என்ன ஒரு லவ்? இவனும்

இருக்கிறானே... நான் வேண்டாம் என்று சொன்ன அடுத்த இரண்டாம் நாள் வேறொரு பெண்ணை தேடிக்கொண்டான். அப்படியே இவனை...' என்று பற்களை கடித்தவளுக்கு ஆழ்ந்து உறங்குகின்ற அவனை போட்டு உலுக்க வேண்டும் என்ற ஆத்திரம் பெருகியது.

வெறுப்புடன் கட்டிலை விட்டு கீழிறங்கி சற்றுநேரம் நடைப்பயின்றவளின் மனம் கிடைக்காத ஒன்றிற்காக எப்பொழுதும் ஏங்காதே என்று தன்னை தானே வழக்கம் போல் கடிந்துக் கொண்டு மெல்ல சமாதானமடைந்தது.

இரவு முழுவதும் சரியான உறக்கம் இன்றி பொழுதை நெட்டித் தள்ளியவள் விடிந்ததும் மளமளவென்று குளித்து தயாராகி கீழே ஹர்சிதாவை தேடி வந்தாள்.

அதிகாலைநேர பனியின் புத்துணர்ச்சியில் தோட்டத்தின் மலர்களெல்லாம் அழகாக இதழ் விரித்து பார்வைக்கு இதத்தை அளித்துக் கொண்டிருக்க, மலர்ந்த மலர்களுக்கு மத்தியில் அவற்றிற்கு மாறாக முற்றிலும் வாடிப்போய் அமர்ந்திருந்தாள் ஹர்சு.

அகிலின் வார்த்தைகளால் உருவகப்படுத்தப்பட்ட விமலும் அவனுடைய காதலும் தன் நினைவில் ஊஞ்சலாட மனதில் அரும்பிய மெல்லிய வருத்தத்தோடு அவளருகே சென்று தோளில் கை வைத்தாள் ஹிரணி.

திடுக்கிட்டு திரும்பிய ஹர்சு அவளை கண்டு மெதுவாக இதழ்களை விரித்தாள்.

அமைதியாக அவளருகில் அமர்ந்து அவளுடைய கைகளை பற்றிக்கொண்டவள் அவள் முகத்தையே சில நிமிடங்கள் கூர்ந்துப் பார்த்தாள்.

"ஏய்... என்ன?" என்று மெல்ல சிரித்தாள் ஹர்சு.

"ஐ ஆம் சாரிக்கா, என்னை மன்னித்து விடுங்கள். விமல் அத்தானை பற்றி சரியாக தெரியாமல் உங்களிடம் மிகவும் தவறாகப் பேசி விட்டேன்!" என்றாள் தயக்கத்துடன்.

கனிவுடன் அவள் கன்னம் வருடியவள், "பரவாயில்லைடா... இப்பொழுதாவது புரிந்துக் கொண்டாயே, அதுவே போதும். உன் கோபமும் என் மீது உள்ள அக்கறையால் வந்தது தானே. அதுசரி... என்ன திடீரென்று அவர் மீது நல்ல எண்ணம்? ஓ... தம்பி சொன்னாரா?" என்று ஆவலுடன் வினவினாள்.

ம்... என்று முறுவலித்தவள், "ஆனாலும் விமல் அத்தான் ரொம்ப சூப்பர்ப் கேரக்டர் இல்லை... என்ன ஒரு லவ்? அவரை பற்றிக் கேட்டதிலிருந்தே பிரமிப்பாக இருக்கிறது!" என்றாள் வியப்புடன்.

"ஆமாம்..." என்றவளின் விழிகள் தன்னவனின் நினைவில் கனவில் மிதந்தது.

இத்தனை நேரமாக ஒளிக்குன்றியிருந்த அவளின் அழகு முகம் தன் கணவனின் நினைவில் மலர்ந்து விகசிப்பதை ரசனையுடன் நோக்கினாள் ஹிரணி.

"குட்மார்னிங்மா! என்ன இது பிடித்து வைத்த சிலைப்போல் அசையாமல் ஒரே பக்கம் பார்த்தபடி இப்படி நிற்கிறீர்கள்?" என்றபடி தன் அம்மாவின் தோளில் கைப்போட்டான் அகில்.

அவனிடம் திரும்பிய பவானி, "இல்லைடா... இப்பொழுது தான் எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தேன். என் இரண்டு மருமகள்களும் தோட்டத்தில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை பார்த்ததும் அப்படியே மெய்மறந்து நின்று விட்டேன். நேற்று இரவெல்லாம் ஹர்சிதா ஒரே அழுகையும், அனத்தலுமாக தான் இருந்தாள். கர்ப்பமாக இருக்கிற பெண் இவ்வளவு வேதனைப்படுகிறாளே என்று விடிய விடிய எனக்கு உறக்கமேயில்லை. ஏதோ இந்த மட்டும் உன் பெண்டாட்டியால் கொஞ்சம் கவலையை மறந்து சிரிக்கிறாளே!" என்று தன்னை தேற்றிக் கொண்டார்.

"ம்... பின்னே... அவங்க அழுகைக்கான காரணமே இவள் தானே, நேற்றிரவு கொஞ்சம் வேப்பிலை அடிக்கவும் சரியாகி விட்டாள்!" என்றான் கேலியாக.

தன் இயல்பாய், "ம்ஹும்..." என்றவர் சட்டென்று மகனிடம் திரும்பி, "என்ன வேப்பிலையா?" என்றார் குழப்பத்துடன்.

"அதுதான்மா... விமலுடைய காதல் கதையை அழகாக எடுத்து விட்டேன்!" என்று கண்ணடித்தான்.

பவானியின் முகம் லேசாக இருண்டது, "எல்லாவற்றையுமே சொல்லி விட்டாயாடா?" என்றார் வருத்தத்தோடு.

"என்ன கேட்க வருகிறீர்கள்?" என்றான் அகில் புரியாமல்.

"இல்லை... என்னை பற்றியும் சொல்லி விட்டாயா?" என்று தவறு செய்து மாட்டிக்கொண்ட குழந்தையாக அப்பாவி முகத்துடன் வினவினார் பவானி.

மெதுவாக விஷயம் அகிலின் மூளையை எட்ட, "பின்னே... அவனுடைய கதையோட முக்கிய திருப்புமுனை கேரக்டரே நீங்கள் தானே, ஐ மீன்... வில்லி?" என்று கள்ளத்தனமாய் சிரித்தான் அகில்.

"போடா..." என்று அவனை தள்ளிவிட்டு வாடிய முகத்துடன் தனது அறைக்கு செல்ல முயன்றவரை வேகமாக இழுத்து பிடித்து நிறுத்தினான் அவன்.

"மம்மி... மம்மி... சும்மா கோச்சுக்காதீங்க... அப்படியெல்லாம் எதுவும் இல்லை, நீங்கள் சூழ்நிலை கைதி தான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு வகையில் உங்களுக்கு அவகாசமே தராமல் அவசரப்பட்டதில் விமலின் பங்கும் தானே அடங்கியிருக்கிறது!"

"என்னவோடா... அவன் எங்கே எந்த மூலையில் என்ன மாதிரி பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை... ஒருநேரம் என் கோபம் தான் அவன் வாழ்க்கையை பாதித்து விட்டதோ என்ற குற்றவுணர்வு வேறு அவ்வப்பொழுது தோன்றி என்னுடைய நெஞ்சை பிழிகிறதுடா!" என்று தாயாய் கண்ணீர் உகுத்தார் பவானி.

"ஷ்... ம்மா... ம்மா... மறுபடியும் நீங்கள் பழைய தவறையே செய்கிறீர்கள். அப்பொழுது மற்றவரின் மூடப்பேச்சிற்கு பயந்து அப்படியொரு தவறை செய்தீர்கள் என்றால் இப்பொழுது தேவையில்லாத மூடநம்பிக்கையை வளர்த்து கொண்டு கவலைப்படுகிறீர்களே... உங்களை எல்லாம் என்ன செய்வது? ஆங்... இப்படி காதை திருகினால் தான் சரிப்படுவீர்கள்!" என்று அவர் காதைப் பிடித்து நன்றாக முறுக்கி விட்டான் அகில்.

"ஆ... டேய்... நாயே... இது தான் சாக்கென்று காதை திருகுகிறாயா?" என்று அவன் கையைப் பிடித்து முன்னால் இழுத்து முதுகில் ஒன்று பலமாக வைத்தார் அவர்.

"அவுச்... அம்மா, தோளுக்கு மேல் வளர்ந்தப் பிள்ளையை இப்படி தான் அடிப்பார்களா?" என்று முறைத்தான் மகன்.

"ஆங்... பெற்ற அம்மாவின் காதை பிடித்து திருகுபவனை எந்த வயதில் அடித்தாலும் தப்பில்லை, ஹூம்!" என்றபடி அடுக்களைக்கு சென்றார் பவானி.

முகத்தில் முறுவல் தோன்ற, 'எப்படியோ வீட்டில் உள்ள நிலைமை சீராகி விட்டது. இனி அடுத்து விமல்... டேய் அண்ணா... எங்கேடா இருக்கிறாய் நீ? இந்த சினிமாக்களில் வருவது போல் ஏதாவது மேஜிக் செய்து எனக்கொரு க்ளூவை அனுப்பி வையேன்டா!' என்று உள்ளுக்குள் புலம்பினான்.

அடுத்து வந்த தினங்களில் தினமும் இரவு வேளையில் தங்களின் தனிமையில், விமலை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் அகிலும், ஹிரணியும்.

அவன் ஒன்று சொல்ல பதிலுக்கு இவள் ஒன்று சொல்ல என எங்கேயாவது ஏதாவது மாட்டுகிறதா என்று இருவரும் தீவிரமாக முயன்றனர்.

அவ்வப்பொழுது ஹர்சுவிடமும், பவானியிடமும் விரிவாகப் பேசி விமலின் குணநலன்களை கேட்டறிந்து

ஏதாவது விஷயம் பிடிபடுகிறதா என்று ஆராய்வாள் ஹிரணி.

எங்கே மாமியாரும், மருமகளும் பெருமையாய் முறையே தங்கள் பிள்ளை மற்றும் கணவனின் புகழ் மாலையை தான் எடுத்து உரைத்தனர். அவன் அப்படி, அவன் இப்படி, மிகவும் நல்லவன், வல்லவன் இத்யாதி இத்யாதி.

ஆகமொத்தம், இருபெண்களின் பார்வையிலுமே... விமலை போன்ற சிறந்ததொரு மனிதன் இந்த உலகிலேயே யாரும் கிடையாது. யார் மனதையும் புண்படுத்த தெரியாத அவன் செய்த ஒரே தப்பு பெற்றவரை மீறி அவசர மணம் புரிந்தது தான்.

அகிலன் ஒருபுறம் போலீஸின் துணைக்கொண்டு விமலை பல வழிகளில் தேடி வந்தாலும் ஹிரண்மயி தன் பங்குக்கு தனக்கு தெரிந்த பெண் போலீஸ் விஜயா மூலம் தனது தேடுதல் வேட்டையை மேற்கொண்டாள்.

விமல் வழக்கமாக செல்கின்ற இடங்கள் என சிலவற்றை தேர்ந்தெடுத்து அதை சுற்றிலும் ஏதேனும் விபத்தோ, கடத்தலோ ஆறு மாதங்களுக்கு முன் நடந்துள்ளதா என்று தீவிரமாக விசாரித்தனர். ஆனால் பலன் என்னவோ அவள் கணவனுக்கு கிடைத்தது போன்று தான் இவளுக்கும் பூஜ்யமாக கிடைத்தது.

அன்றும் அப்படித்தான் வழக்கம் போல எதையும் சந்தேக கண்கொண்டு பார்க்கும் தனது வக்கீல் மூளையை தட்டி எழுப்பியவாறே ஹர்சுவிடம் பேசிக் கொண்டிருந்தவளுக்கு சட்டென்று ஒரு பொறி தோன்றியது.

"ஆங்... அக்கா... அட இதை மறந்து விட்டேன் பாருங்கள்!" எனவும் பெரியவளின் முகத்தில் எதிர்பார்ப்பு கூடியது.

எப்படியாவது யோசித்து எதையாவது செய்து யாராவது விமலை கண்டுப்பிடித்து அழைத்து வந்தால் போதும் என்ற எதிர்பார்ப்புடன் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் இதில் ஏதாவது விடை கிடைத்து

விடுமா என ஒவ்வொன்றுக்கும் ஆவலாக பதிலளிப்பாள் அவள்.

"என்ன ஹிரணி?"

"இல்லை... அத்தான் காணாமல் போன பிறகு அவரை தேடிக்கொண்டு யாராவது வீட்டிற்கு வந்தார்களா?"

ஹர்சிதா தீவிரமாக யோசிக்க, "நன்றாக சிந்தித்து பதில் சொல்லுங்கள், ஒவ்வொன்றும் நமக்கு மிகவும் முக்கியம்!" என்று தூண்டினாள் ஹிரண்மயி.

"அது... ஆமாம், அவர் கிளம்பி சென்ற அடுத்த நாள் இரவு ஒரு ஏழு மணியிருக்கும்... இரண்டு பெண்கள் அவரை பார்க்க வேண்டுமென்று கேட்டு வீட்டிற்கு வந்தார்கள்!"

"ஓ... சூப்பர்! அவர்கள் என்ன சொன்னார்கள்? அத்தானை எதற்காக பார்க்க வேண்டுமென்று ஏதாவது விவரம் சொன்னார்களா?" என்று படபடப்பானாள் ஹிரணி.

29

ஹிரணியின் ஆர்வம் ஹர்சிதாவிற்குள்ளும் உற்சாகத்தை வரவழைக்க மலர்ச்சியுடன் வேகமாக பதில் உரைக்க முயன்றவளுக்கு தான் அவர்களிடம் எந்த விவரத்தையும் பெற முயலவில்லையே என்பது தாமதமாக நினைவு வந்து மிகவும் சோர்வடைய வைத்தது.

"என்னக்கா?" என்று அவள் தோள் தொட்டாள் ஹிரணி.

"நான்... நான்... அவர் வீட்டிற்கு வரவில்லையே என்கிற பயத்திலும், பதட்டத்திலும் அவர்களிடம் எதையுமே கேட்க நினைக்கவில்லை. அண்ணா வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டார்கள், நான் இல்லை என மட்டும் மெதுவாக தலையசைத்தேன். அவரை பார்க்க முடியவில்லை எனவும் அவர்கள் முகத்தில் லேசாக ஏமாற்றம் பரவியது. ஆங்... ஆனால் அவர்களுடைய மொபைல் நம்பர் என்னிடம் இருக்கிறது. அப்புறம் அண்ணா வந்தவுடன் கண்டிப்பாக எனக்கு கால் பண்ணி சொல்லுங்க என்று நம்பரை எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்கள்!"

"காட்... அந்த நம்பரை பத்திரமாக வைத்திருக்கிறீர்களா?"

"இருக்கிறது... நல்லவேளை, அகில் நம்பர் எல்லாம் அவரிடம் வாங்கி வைக்காமல் உதவி கேட்க முடியாமல் போனதில் கொஞ்சம் உஷாராகி இருந்தேன். பத்திரமாக டைரியில் குறித்து வைத்திருக்கிறேன்!" என நிம்மதியுடன் எழுந்தாள் ஹர்சு.

"ஓ... வெரிகுட் அக்கா, சரி வாங்க முதலில் அந்த நம்பரை என்னிடம் கொடுங்கள்!" என்று அவளுடன் நடந்தவள், 'கடவுளே... அந்தப் பெண் நம்பரை மாற்றாமல் இருக்க வேண்டும். இதை வைத்தே அத்தானை கண்டுபிடிக்க எனக்கு ஏதாவது ஒருவழி கிடைக்க வேண்டும்!' என்று தீவிரமாக மனதில் வேண்டிக் கொண்டாள்.

ஹர்சுவிடம் நம்பரை வாங்கி கொண்ட ஹிரண்மயி, இந்த வழியில் அத்தானை கண்டுப்பிடிக்க ஏதாவது வழி கிடைக்கிறதா என்று பார்க்கிறேன் என அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு தனது அறைக்கு சென்று தனிமையில் அந்த எண்ணை தொடர்பு கொள்ள முயன்றாள்.

ஸ்விச்ட் ஆஃப் என வரவும் டென்ஷன் ஏகத்திற்கும் ஏறியது. முகம் இறுக பற்களை அழுந்தக் கடித்தபடி அப்படியே சில நிமிடங்களுக்கு கண்மூடி அமர்ந்திருந்தவள் மெதுவாக ஆழ்ந்த மூச்சுக்கள் சிலவற்றை நிதானமாக வெளியேற்றி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் இரண்டு முறை முயன்று பார்த்துவிட்டு தன் அலுவலகத்திற்கு கிளம்ப ஆரம்பித்தாள்.

அலுவலகத்தில் கிடைக்கும் இடைவேளையில் விடாமல் அவ்வப்பொழுது தொடர்ந்து முயன்றுக் கொண்டிருந்தவளை மாலை ஏழு மணியளவில் வந்த டெக்ஸ்ட் மெஸேஜ் ஒன்று உற்சாகப்படுத்தியது.

தாங்கள் தொடர்பு கொண்ட வாடிக்கையாளர் தற்பொழுது தங்கள் போன்காலை எடுக்க தயாரான நிலையில் உள்ளார் என்றிருக்கவும் மீண்டும் ரீகால் பட்டனை அவசரமாக படபடக்கும் இதயத்துடன் அழுத்தினாள் ஹிரணி.

ஏதோ ஒரு பாட்டின் வரிகளுக்கு பின்னே, ஹலோ என்ற பெண் குரல் ஒலிக்கவும், அவளை எப்படி குறிப்பிடுவது தன்னை எவ்வாறு அவளிடம் அறிமுகப்படுத்திக் கொள்வது என சற்று தடுமாறிப் போனாள் நாயகி.

"ஹலோ... நான்... அது ஒரு நிமிடம்மா, முதலில் விமல் அண்ணாவை தேடி வீட்டிற்கு வந்த பெண் நீங்கள் தானே?" என்று வேகமாக வினவவும், எதிர்முனை அமைதி காத்தது.

"ஹலோ... ஹலோ..."

"அது எதற்கு உங்களுக்கு?"

"எல்லாமே விவரமாக சொல்கிறேன், எனக்கு உன்னுடைய உதவி மிக அவசியமாக தேவைப்படுகிறது!"

"ஆனால்... நீங்கள் யார் என்று..."

அதற்குள் கொஞ்சம் தெளிந்திருந்தவள், "ம்... சொல்கிறேன்... விமல் அண்ணாவின் தம்பி அகிலை உனக்கு தெரியுமா?" என்று யோசனையோடு கேட்டாள்.

"ஓ... தெரியுமே... அந்த அண்ணா விமல் அண்ணாவோடு எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். நானும் அவர்கள் வீட்டிற்கு சென்றிருக்கிறேனே!"

நிம்மதி பெருமூச்சுவிட்டவள், "நான் அவருடைய மனைவி ஹிரண்மயி பேசுகிறேன்மா!" என்று விவரம் தந்தவளுக்கு உள்ளுக்குள் சிறு உற்சாகமாக இருந்தது.

"என்ன? அப்படியா... நீங்கள் அகில் அண்ணா வொய்ஃபா? உங்களுக்கு எப்படி என் நம்பர் தெரியும்?"

"ஹர்சு அக்கா தான் கொடுத்தார்கள், அதாவது... விமல் அண்ணாவின் மனைவி!"

"ம்... ஆமாம், ஒரு ஆறு மாதங்களுக்கு முன் அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்த பொழுது நான் தான் அண்ணியிடம் நம்பரை கொடுத்தேன். ஆனால் அதன்பிறகு விமல் அண்ணாவும் பேசவில்லை, என்னாலும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. வீட்டை வேறு மாற்றி விட்டார்கள் போலிருக்கிறது!" என்றாள் லேசான வருத்தத்துடன்.

"அது ஒரு பெரிய பிரச்சினைம்மா, இப்பொழுது உன்னை மட்டும் தான் ரொம்பவும் மலை போல் நம்பியிருக்கிறேன். முதலில் உன் பெயரை சொல்!"

"என் பெயர் சிநேகா! என்ன பிரச்சனை அண்ணி?" என்று வினவியவளிடம் சுருக்கமாக விமல் காணாமல் போனது குறித்து விவரம் உரைத்தாள் ஹிரண்மயி.

"ஐயோ... என்ன? ஆறு மாதங்களாக விமல் அண்ணாவை காணவில்லையா... கடவுளே..." என்று பதறினாள் அப்பெண்.

"ஆமாம்மா... அதனால் தான் அவருக்கு தெரிந்தவர்களிடம் எல்லாம் அவரை தேடிக் கண்டுப்பிடிக்க ஏதாவது விவரம் கிடைக்குமா என்று தீவிரமாக விசாரித்து வருகிறேன். உன்னை நேரில் மீட் பண்ண முடியுமா?"

"கண்டிப்பாக அண்ணி... நீங்கள் சொல்வதை எல்லாம் வைத்துப் பார்த்தால்... அண்ணா நிச்சயமாக எங்கள் விஷயம் தொடர்பாக தான் ஏதோ பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருப்பார் என்று தோன்றுகிறது. இப்பொழுது நன்றாக இருட்ட ஆரம்பித்து விட்டது, அம்மா வேறு வீட்டில் தனியாக இருக்கிறார்கள். அவர்களை விட்டு விட்டு இந்நேரத்திற்கு என்னால் வெளியே வரமுடியாது. நாளை காலை நேரமாக உங்கள் வீட்டிற்கு வரட்டுமா?"

"இருக்கட்டும்மா பரவாயில்லை, வீட்டிற்கு வர வேண்டாம். அக்கா, அத்தை எல்லாம் அத்தானை நினைத்து மிகவும் அப்செட்டாக இருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் அவர் கிடைத்து விடுவாரா என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்துப் போகிறார்கள். ஸோ... இனிமேல் அத்தானை கண்டுப்பிடிக்கும் வரை அவர்களிடம் விவரம் தெரிவிக்க வேண்டாம் என்றிருக்கிறேன். நாளை காலை நானே வந்து உங்கள் வீட்டில் பார்க்கிறேன். உனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லையே!" என்று விசாரித்து அவளுடைய முகவரியை தனக்கு அனுப்பிவிட சொல்லி இணைப்பை துண்டித்தாள்.

மறுநாள் சிநேகா மெஸேஜ் செய்திருந்த முகவரியில் தன் ஸ்கூட்டியை சென்று நிறுத்திய ஹிரணி யோசனையோடு வீட்டை பார்வையிட, வேகமாக வெளியே வந்த சிநேகா அவளை வரவேற்று வீட்டினுள்ளே அழைத்து சென்றாள்.

"அம்மா... இவங்க அகில் அண்ணாவின் மனைவி!" என்று தன் தாயிடம் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"வணக்கம்மா!" என்று கரம் குவித்தாள்.

"வாம்மா... வீட்டில் அகில், விமல், பவானி எல்லோரும் நன்றாக இருக்கிறார்களா?"

விழிகளில் வினாவுடன் ஹிரணி சிநேகாவிடம் திரும்ப அவள் சங்கடமாய் முறுவலித்தாள்.

"நன்றாக இருக்கிறார்கள்மா, உங்களை விசாரித்ததாக சொல்ல சொன்னார்கள்!" என்று இவள் புன்னகைத்தாள்.

"ஓ... சரி சரி உட்காரும்மா, காபி எடுத்து வருகிறேன்!" என்று உள்ளே சென்றார் அவர்.

தன் தாயின் தலை மறைந்ததும் விரைந்து ஹிரணியின் அருகில் வந்து அவள் கரம் பற்றியவள், "அண்ணி... நான் அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை அவர்கள் மிகவும் பயந்து விடுவார்கள். வாங்க நாம் மாடிக்கு செல்வோம்!" என்று அழைத்து சென்றாள்.

"சொல் சிநேகா... நேற்று இரவே விமல் அத்தான் உங்கள் பிரச்சினை தொடர்பாக ஏதாவது சிக்கிக் கொண்டிருப்பார் என்று சொன்னாயே!"

"ம்... சொல்கிறேன் அண்ணி, விமல் அண்ணாவும், என் அண்ணா சதீஷும் நெருங்கிய பள்ளி தோழர்கள். அதனால் இரு குடும்பங்களுக்குமே நல்ல அறிமுகம் உள்ளது. விமல் அண்ணா மாதிரி இல்லை என்னுடைய அண்ணாவுக்கு படிப்பு கொஞ்சம் சுமாராக தான் வரும். அதனால் ஏதாவது தொழிலை கற்றுக்கொள் என்று தொழில் சம்பந்தமான படிப்பை படிக்க சொல்லி அவர் சிபாரிசு செய்தது தான் அவன் படித்த ஐடிஐ படிப்பு. அதில் நன்கு கற்றுத் தேர்ந்து நல்ல கம்பெனியில் வேலை கிடைத்து நன்றாக தான் போய் வந்து கொண்டிருந்தான். நான்கைந்து வருடங்களில் இங்கே கொடுக்கும் சம்பளம் எல்லாம் பற்றாது சில வருடங்களுக்கு வெளிநாடு சென்று சம்பாதித்து வந்தால் தான் நல்ல லாபம் கிடைக்கும்

என்று அங்கே கம்பெனியில் அறிமுகமான ஒரு ஆள் இவனிடம் ஆசை வார்த்தை சொல்லி இருக்கிறார். அதை நம்பிய இவனும் அம்மா எனக்காக சேர்த்து வைத்த நகைகளை விற்று வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடு செய்ய பார்த்தான். அம்மாவுக்கோ பயம், அப்பா இல்லாமல் எங்களை சிரமப்பட்டு தான் வளர்த்திருந்தார். சரியான படிப்பறிவு இல்லாததால் தையல் மிஷினை நம்பி பிழைத்து தான் இத்தனை தூரம் எங்களை ஆளாக்கி இருந்தார். அதனால் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த நகையை விற்று அண்ணன் இப்படி வெளிநாடு செல்வதில் அம்மாவிற்கு உடன்பாடில்லை. அதுவுமில்லாமல் வயதுப் பெண்ணான என்னை வேறு ஆண் துணையின்றி தனியாக பார்த்துக் கொள்ள வேண்டுமே என்று பயந்தார். இதை அம்மா விமல் அண்ணாவிடம் தெரிவிக்கவும் அவர் வந்து அண்ணாவிடம் பேசிப் பார்த்தார். அவனோ பிடிவாதமாக இருக்கவும் சரி நான் தெரிந்தவர்களிடம் விசாரித்து சொல்கிறேன் நீங்கள் தைரியமாக இருங்கள் என்று அம்மாவை சமாதானப்படுத்தி விட்டு சென்று விட்டார்கள்!"

மாடிப்படியில் அரவம் உணர்ந்து சிநேகா அமைதியாகவும் அவளுடைய அம்மா கையில் காபி டம்ளர்களுடன் வந்தார்.

ஹிரணி முன்னே வந்து, "ஏன்மா குரல் கொடுத்திருந்தால் நாங்களே கீழே வந்திருப்போம் இல்லை?" என்றபடி ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டாள்.

"இல்லைம்மா... இரண்டு பேரும் ஏதோ முக்கியமாக பேசுகிறீர்கள் போலிருக்கிறது என்று தான் நானே வந்தேன்!" என்று தன் மகளை ஐயத்துடன் பார்த்தார்.

“ஆமாம்மா... கொஞ்சம் முக்கியமான விஷயம் தான், நேற்று இன்டர்வியூ போனேன் அல்லவா அந்தக் கம்பெனியில் அண்ணிக்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்களாம். அதனால் எனக்கு வேலைக்கு சிபாரிசு செய்வதாக சொன்னார்கள்!"

"ஓ... அப்படியா? ரொம்ப சந்தோசம். சரி நான் போய் என் வேலையை பார்க்கிறேன்!" என்று கீழிறங்கி சென்றார்.

"ம்... அப்புறம்?"

"அப்புறம்... விமல் அண்ணா விசாரித்து சொல்கிற வரை பொறுமை இல்லாமல் சதீஷ் அண்ணா அவசரப்பட்டு ஒரு ஏஜென்சியில் தெரிந்தவர் சொன்னார் என பணத்தை கட்டி விட்டான். கொஞ்ச நாளில் விசா வந்து விடும் பாஸ்போர்ட் ரெடி பண்ணு என்று அங்கே இவனை அனுப்பி விட்டார்கள். இவனும் அலைந்து திரிந்து எல்லாவற்றையும் தயார் செய்து விட்டான். ஆனால் அவர்கள் இவனை வெளிநாடு அனுப்பவதற்கு ஏற்பாடு செய்யாமல் இதோ அதோ என்று இழுத்தடித்தார்கள். இவனுக்கு கொஞ்சம் பயம் வரவும் விமல் அண்ணாவிடம் சொல்லி புலம்பியிருக்கிறான். அண்ணாவும் அவனை சத்தம் போட்டுவிட்டு போய் அங்கே பார்த்தால் பணம் வாங்கியவர்கள் அந்த ஏஜென்சியை இழுத்து மூடிவிட்டு ஓடிவிட்டார்கள். பணம் மொத்தமும் போய் விட்டதே என்று எங்களுக்கெல்லாம் ஒரே அதிர்ச்சி. அந்தப் பைத்தியம் அதோடு விட்டானா? அதற்கு மேல் தற்கொலை முயற்சி வேறு செய்தான். விமல் அண்ணா அவனை போட்டு வாங்கு வாங்கென்று வாங்கி, நீ செய்த தவறுக்கு தற்கொலை தான் தீர்வா, முட்டாள் மாதிரி நடந்து கொள்கிறாய். கொஞ்சம் கூட பொறுமையில்லாதவன்... அம்மாவையும், சிநேகாவையும் நினைத்துப் பார்த்தாயாடா? என்று திட்டவும், நான் மறுபடியும் எப்படி அத்தனையையும் சம்பாதிப்பேன் என்று அவன் அழுதான். எல்லாவற்றிலும் அவசரம் தான்டா எருமை, உனக்கு வேறு ஒரு நல்ல ஏஜென்சியில் விசாரித்து வைத்திருக்கிறேன். நீ அங்கே போய் கடுமையாக உழைத்து உன் எண்ணம் போல் சம்பாதித்துக் கொள் என்கவும், பணம்... என இழுத்தவனை முறைத்துப் பார்த்தவர் அதற்கு நான் பொறுப்பு என்று விட்டார். அண்ணா உடனே சட்டென்று அவர் காலில் விழுந்து விட்டான். டேய்... லூசு... என்னடா செய்கிறாய்? எழுந்திரி, விமல்... உன்னை போன்ற

நண்பன் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று கட்டிக் கொண்டான். ஆமாம்... இதில் ஒன்றும் குறைச்சலில்லை, சொன்னப் பேச்சை மட்டும் கேட்காதே என்று அவர் போலியாக அலுத்துக் கொண்டார். இல்லைடா... இனிமேல் உன்னிடம் சொல்லாமல் நான் எதையும் செய்ய மாட்டேன் என அவரிடம் சத்தியம் செய்தான். இப்பொழுது சவுதியில் நன்றாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறான்!" என்று நிறுத்தி காபியை ஒரு மிடறு விழுங்கியவள் மீண்டும் பேசினாள்.

"அதன்பிறகு விமல் அண்ணா தான் அவனுக்கு... ஏன்? எனக்குமே வெல்விஷர். அவரை கேட்காமல் நாங்கள் எதுவும் செய்ய மாட்டோம். ஆறு மாதங்களுக்கு முன்பு நான் கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒருநாள் கல்லூரி முடித்து வரும் வழியில் சதீஷ் அண்ணாவிடம் பணம் வாங்கி ஏமாற்றிய அந்த ஏஜென்சியின் ஒரு ஆளை பார்த்தேன். அவன் முதலில் அண்ணாவுடன் கொஞ்ச நாள் கம்பெனியில் தான் வேலை செய்திருக்கிறான். அப்புறம் தான் யாரோ ஒரு ஆளுடன் கூட்டு சேர்ந்து பிராடுத்தனம் செய்து அப்படி ஒரு ஏஜென்சி நடத்திக் கொண்டிருந்திருக்கிறான். என் அண்ணனை போல் நிறைய பேரை அவன் ஏமாற்றியிருக்கிறான். அவனை பார்த்ததும் எனக்கு பதட்டமாகி விட்டது, உடனே விமல் அண்ணாவிடம் போன் செய்து விவரம் கூறினேன். முதலில் அவன் கண்களில் படாமல் எங்காவது மறைந்து நின்று அவன் என்ன செய்கிறான் என்பதை கவனித்து சொல்ல சொன்னார். நானும் அதன்படியே செய்தேன், அவன் காரை பற்றி சொல்லவும் அதன் நம்பரை குறித்து வைத்துக் கொள் என்றார். சற்று நேரத்தில் அவன் கிளம்பி சென்று விட்டான். அண்ணா என்னிடம், சரி... இனி இவனை பற்றி நான் விசாரித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக நீ எதுவும் செய்யாதே, அவன் உன் முன்னால் வந்தால் கூட உனக்கு அவனை தெரியாதது போலவே அமைதியாக விலகிச் சென்று விடு என்று சொல்லி விட்டு

வைத்து விட்டார். அதன்பிறகு அவரை என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை!" என்று வருத்தத்துடன் முடித்தாள் சிநேகா.

30

"அப்பொழுது அந்த ஏஜென்சி ஆள் தொடர்பாக ஏதாவது செய்ய போய் தான் அத்தான் மாட்டியிருப்பார் என்கிறாயா?" என்றாள் ஹிரண்மயி யோசனையோடு.

"ஆமாம் அண்ணி... கண்டிப்பாக, அவர்கள் எல்லாம் மிகவும் மோசமானவர்களாகவும், கை தேர்ந்தவர்களாகவும் தான் இருக்க வேண்டும். இல்லையென்றால்... அத்தனை பேரை ஏமாற்றி விட்டுக் கொஞ்சம் கூட பயமே இல்லாமல் அவன் எப்படி கூலாக மூன்று வருடங்களிலேயே இப்படி வெளியே சுற்றுகிறான் பாருங்கள்!"

"ம்... யோசிக்க வேண்டிய விஷயம் தான். ஆனால் விமல் அண்ணாவின் வீடு மாறி விட்டால் என்ன அட்லீஸ்ட் அகில் அண்ணாவிடமாவது நீ இந்த விஷயத்தை உடனடியாக முன்பே சொல்லியிருக்கலாம் அல்லவா?"

"இல்லை அண்ணி... அகில் அண்ணா சென்னை வந்தது எனக்கு தெரியாது. இந்தப் பிரச்சினைக்கு முன்பு என் அம்மாவின் ஹெல்த் செக்கப்புக்கு டாக்டரை பற்றி விசாரிக்கவென்று அண்ணாவின் வீட்டிற்கு போயிருந்தேன். அப்பொழுது பவானி அம்மா தான் இருந்தார்கள், என்னை சாதாரணமாக வரவேற்று நலம் விசாரித்து பேசியவர்கள் விமல் அண்ணாவை பற்றி கேட்கவும் கோபமாகி அவனை பற்றி என்னிடம் எதுவும் கேட்காதே என்று கோபித்துக் கொண்டார்கள். அப்புறம் அண்ணாவிடம் போனில் விவரம் தெரிவிக்கவும் தான் அவர்களுடைய திருமணம் விஷயம் தெரிந்தது. பிறகு அவரே வீட்டிற்கு வந்து அம்மாவை பார்த்து நடந்ததை விவரித்து விட்டு தன்னுடைய புது வீட்டு முகவரியை கொடுத்து சென்றார்கள்!"

"ம்ஹும்... ஓகேம்மா, அவனுடைய கார் நம்பரை குறித்து வைத்தேன் என்றாயே இன்னும் வைத்திருக்கிறாயா?"

"இருக்கிறது அண்ணி... அப்பொழுது எடுத்த அவனுடைய போட்டோவும் இருக்கிறது, ஆனால்..." என்று சிநேகா தயங்கினாள்.

"என்னம்மா?"

"இல்லை... அதை எதற்காக கேட்கிறீர்கள்? நீங்களும் ஏதாவது வீணாகப் பிரச்சினையை இழுத்துக் கொள்ளப் போகிறீர்கள். விமல் அண்ணாவை பற்றியே இன்னும் தெரியவில்லை எனும்பொழுது உங்களுக்கு வேறு ஏதாவது ஆபத்து வந்து விடப் போகிறது!" என்றாள் அச்சத்துடன்.

"அது ஒன்றும் பிரச்சினையில்லை சிநேகா, நான் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு தெரிந்தப் பெண் போலீஸ் ஒருவர் இருக்கிறார்கள். அவர்களை வைத்து தான் நடவடிக்கை எடுப்பேன் தனியாக இல்லை, ஸோ... டோன்ட் வொர்ரி அபௌட் தட்!" என்று அவள் தோள் தட்டி சமாதானப்படுத்தி விவரங்களை வாங்கி கொண்டு விடைப்பெற்றாள் ஹிரணி.

நேராக சப்-இன்ஸ்பெக்டர் விஜயாவை தேடிச் சென்றவள் நடந்ததை விவரித்து அவரின் உதவியோடு அந்த கார் நம்பரை வைத்து ஆளை ட்ரேஸ் பண்ண முயன்றாள்.

அவர்களுடைய முயற்சி வீண் போகாமல் காரின் உரிமையாளர் பற்றிய விவரம் முழுவதுமாக கிடைக்க சந்தேகத்திற்கு இடமில்லாமல் சிநேகா அனுப்பியிருந்த புகைப்படத்தில் உள்ள வாசுதேவன் தான் அது என்பது உறுதியானது.

அடுத்து அவனுடைய விவரங்களை எல்லாம் சேகரிக்க ஆரம்பித்தார்கள். உள்ளூரிலேயே தற்பொழுது வேறொரு நபரை பினாமியாக போட்டு அவன் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது. அதிலும் அவன் மேல் நிலங்கள் தொடர்பான ஆக்கிரமிப்பு மற்றும் ஏமாற்று புகார்கள் சில சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களுக்கு ஏற்கனவே வந்திருந்தன.

நாட்டின் பெரிய அரசியல் புள்ளிகள் சிலருக்கு அவர்களின் தேவைகேற்ப நிலங்களை ஏற்பாடு செய்துக் கொடுத்து விட்டு தன் தொழிலுக்கு எந்த தொந்திரவும் வராமல் திட்டம் போட்டு சமயோசிதமாக மேலும் மேலும் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான் அவன்.

"ஹிரணி... இது நீ வழக்கமாக பார்த்துவரும் குடும்பநல வழக்கு சம்பந்தமான சிக்கல்களுக்கு முற்றிலும் மாறாக கிரிமினல் கேஸ் லெவலுக்கு பிரச்சினை ரொம்ப பெரியதாக இருக்கிறது. முக்கியமான அரசியல் தலைகள் எல்லாம் அவனோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பெட்டர்... இதில் நீ நேரடியாக இறங்காமல் போலீஸ் மூலமாக அடுத்த நடவடிக்கை மேற்கொள்வது தான் நல்லது என்று எனக்கு தோன்றுகிறது!" என விஜயா எச்சரித்தார்.

"நீங்கள் சொல்வது சரி தான் மேடம், ஆனால் ஒரு விஷயத்தை யோசித்து பாருங்கள்... உங்கள் டிபார்ட்மென்ட் ஆட்களில் எத்தனை பேர் மற்றும் யார் யார் அவனுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதை பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரிய வேண்டாம். அட்லீஸ்ட்... உங்களால் அறுதியிட்டு கூற முடியுமா?" என்று வினவினாள் ஹிரணி.

அவர் தயக்கத்துடன் மறுப்பாக தலையசைத்தார், "அப்புறம் எப்படி அவர்களை மட்டும் நம்பி நான் என்னுடைய கையை கட்டிக்கொண்டு அமைதியாக வேடிக்கை பார்ப்பது?" என்று கேள்வி எழுப்பினாள்.

"அதற்கு... என்ன செய்யலாம் என்கிறாய்?"

"நானே நேரடியாக அந்த வாசுதேவனை அவன் செல்லும் இடங்களுக்கெல்லாம் பின் தொடரப் போகிறேன்!"

"ஏய்... என்ன விளையாடுகிறாயா? இது ரொம்ப ரிஸ்கியான ஜாப். விமலே என்ன செய்து எப்படி அவர்களிடம் மாட்டிக் கொண்டார் என்று தெரியவில்லை.

இதில் நீ வேறு அசட்டு துணிச்சலுடன் திட்டம் போடுகிறாய்?" என்று அவளை கடிந்துக் கொண்டார்.

"ப்ச்... ஏதாவது செய்து விமல் அத்தானை கண்டிப்பாக காப்பாற்றி தான் ஆக வேண்டும் வேறு வழியில்லை. நான் இப்படியே போகாமல் மேலே புர்கா போல் எதையாவது போட்டு என்னை மறைத்து கொள்கிறேன். கூடுமானவரை... பகலில் தான் அவனை பின் தொடருவேன். நிச்சயமாக என் பாதுகாப்பு விஷயத்தில் நான் கவனமாக இருக்கிறேன்!"

"இதில் நீ இவ்வளவு சிரமப்படுவதற்கு உன் கணவனிடம் சொல்லி அந்த ஆளை வேவுப் பார்க்க சொல்லலாம் இல்லை?"

"இல்லை மேடம்... அது சரி வராது, ஏனென்றால் அந்த வாசுதேவனிடம் தான் விமல் அத்தான் இருக்கிறாரா என்று இன்னும் நமக்கே சரியாக உறுதியாக தெரியவில்லை. ஒருவேளை இல்லாமலும் இருக்கலாம், அப்படியிருக்கும் பட்சத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரே விஷயத்திற்கு மெனக்கெடுவது நேர விரயம். ஸோ... அவர் தொடர்ந்து அவருடைய வழியிலேயே தேடட்டும்!"

"ம்... நீ என்னவோ சொல்கிறாய்? ஆனால் எனக்கு திருப்தியில்லை. இந்த காலத்தில் பெண்களுக்கென்று ஆயிரெத்தெட்டு ஆபத்து சமூகத்தில் காத்து கிடக்கிறது. இந்த அழகில் இராப்பகலாக ஒரு சமூக விரோதியை பின்தொடர்ந்து செல்லப் போகிறேன் என்கிறாய். இது என்னவோ எனக்கு புத்திசாலித்தனமாக படவில்லை!" என்று குறுக்காக தலையசைத்தார்.

"அடப்போங்க மேடம்... எதற்கும் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்றால் எப்படி? அப்பொழுது உருப்படியான யோசனை ஏதாவது நீங்களே சொல்லுங்களேன் பார்க்கலாம்!" என நாற்காலியில் தளர்ந்து சாய்ந்துக் கொண்டாள் ஹிரணி.

"ம்... ஆமாம்டிம்மா... கடைசியில் அப்படி தான் ஆயிற்று... என்ன செய்யலாம்?" என்று அவளை முறைத்தவர் மாற்று

வழியை தேடி திசுக்களை தட்டி விட்டார்.

விஜயாவிற்கு தனிப்பட்ட முறையில் என்று எப்பொழுதுமே ஹிரணியை ரொம்ப பிடிக்கும். தனக்கென்று யாரும் இல்லையே என்று ஒரு சாமான்யப் பெண்ணாய் தன் வாழ்வின் அநாதரவ நிலையை எண்ணி என்றும் கவலைக் கொள்ளாமல் தன்னால் முடிந்த வரை மற்றப் பெண்களின் வாழ்க்கையாவது மேம்படுத்துவோம் என்கிற அவளுடைய கொள்கை அவரை மிகவும் கவர்ந்திழுத்தது.

"சரி... எனக்கு ஒரு சந்தேகம், உனக்கு தான் திருமணம் ஆயிற்றே... நீ இப்படி நேரங்கெட்ட நேரத்தில் வெளியே சுற்றி அழைந்து விட்டு வீட்டிற்கு சென்றால் உன் கணவர் உன்னை ஒன்றும் சொல்ல மாட்டாரா?"

"ம்ஹும்... அவர் என் சுதந்திரத்தில் எப்பொழுதும் தலையிட மாட்டார், மிகவும் ஜெனியூன் கேரக்டர். ஆனால் பாதுகாப்பு விஷயத்தில் ஆள் கொஞ்சம் கெடுபிடி தான் கண்டிப்பாக சண்டைப் போடுவார். என் மாமியார் அதற்கு மேல் ஒருநாள் இருட்டுகிற வேளையில் கொட்டுகிற மழையில் நனைந்தபடி தனியாக வண்டி ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு சென்றேன் என்பதற்காக எனக்கு செம டோஸ் விட்டார்கள்!"

"ஓ... வெரிகுட்... இதற்கு தான் குடும்பம் வேண்டும் என்று சொல்வது. நம்மை பற்றிய அக்கறை அவர்களுக்கு தான் அதிகமாக இருக்கும்!"

"ஆமாம்... ஆமாம்... அதனால் தான் பெற்ற உடனேயே பத்திரமாக இருக்கட்டும் என்று ஆசிரமத்தில் கொண்டு வீசி சென்று விட்டார்கள் போலிருக்கிறது!" என்றாள் ஏளனமாக.

"எத்தனை சொன்னாலும் இந்த விஷயத்தில் மட்டும் உன் புத்தியை மாற்றவே முடிவதில்லை. ஏன் இப்படி நினைத்து பாரேன்? ஏதாவது சமூக விரோத கும்பலிடம் இருந்து உன்னை காப்பாற்ற கூட அவர்கள் அப்படி செய்திருக்கலாம் இல்லை?"

"அடடா... உடனே நன்றாக கதை சொல்லி சமாளிப்பீர்களே நீங்கள், ப்ச்..." என்று அலுத்துக் கொண்டாள்.

"நீ நம்பினால் நம்பு இல்லாவிட்டால் போ. எப்படியோ உன் புகுந்த வீடும், புருஷனும் நல்லவர்களாக அமைந்தார்களே அதுவரை எனக்கு சந்தோஷம் தான்!" என்று முறுவலித்தார் விஜயா.

'எங்கே... என் புருஷன் தான் தனக்கென்று வேறொரு பெண்ணை தேடிக் கொண்டானே, இனி அந்த வீட்டில் எனக்கென்ன வேலை?' என்று வெறுப்புடன் எண்ணமிட்டாள் ஹிரண்மயி.

"ஏய்... என்ன புருஷனை பற்றிப் பேசவும் டூயட் பாட சென்று விட்டாயா?" என்று கேலி செய்தார் அவர்.

‘காட்... வயிற்றெரிச்சலை கிளப்பாதீர்கள்’ என்று வாய் வரை வந்ததை வேகமாக விழுங்கியவள், "உஃப்போ... இப்பொழுது என்ன பிரச்சனையோ அதற்கு தீர்வு சொல்லுங்கள் மேடம்!" என்றாள் சலிப்புடன்.

"ம்... எனக்கு ஒரு சூப்பர் யோசனை தோன்றுகிறது!"

"என்ன?"

"நாம் காவல்துறை ஆட்களை தான் நம்ப முடியாது, ஆனால் இது போன்ற டிடெக்டிவ் விஷயத்தில் ஆர்வமுள்ள நம்பகமான பையன் ஒருவன் இருக்கிறான். எனக்கு மிகவும் தெரிந்தவன் தான் கணவர் வழியில் தூரத்து சொந்தம், ஜெர்னலிஸம் முடித்தவன் அவனால் நிச்சயம் உனக்கு உதவ முடியும்!" என்றார் உறுதியாக.

"என்ன பையனா?" என்று முகத்தை சுளித்தாள் அவள்.

"ஏய் பையன் என்றால் கல்லூரியில் படிக்கின்ற சின்னவன் என்று எண்ணி விடாதே, திருமண வயதில் இருக்கும் இளைஞன் அவன்!"

"அவன் எவனாக வேண்டுமென்றாலும் இருக்கட்டும் நமக்கு உபயோகமாக வேலை செய்வானா?"

"இங்கே பார்... முதலில் அவன் இவன் என்று மரியாதை இல்லாமல் பேசாதே, அவன் உன்னை விட சில ஆண்டுகளேனும் வயதில் பெரியவன். ஆண்பிள்ளை என்று சொன்னால் போதுமே உன் மதிப்பில் தானாக கீழே இறங்கி விடுவார்கள்!" என்று சற்று காட்டமாகவே விமர்சித்தார்.

சுருதி இறங்கிப் போய், "சாரி மேடம்!" என்றாள் ஹிரணி மெல்லிய குரலில்.

"ஆமாம்... இதில் ஒன்றும் குறைச்சலில்லை. என் தேர்வு எனும்பொழுதாவது உனக்கு நம்பிக்கை வர வேண்டும்!"

"ஹூம்... நான் தான் சாரி சொல்லிட்டேன் இல்லை. அப்புறம் என்ன? விட்டு விடுங்களேன்!" என்றாள் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு.

"சரி சரி... விடு!" என்று அவரும் சமாதானமானார்.

"ஆஹான்... நான் எப்பொழுதோ விட்டு விட்டேன், நீங்கள் தான் இனி விஷயத்தை சொல்ல வேண்டும்!" என்று குறும்புடன் மொழிந்தவளை தன்னுடைய கையில் இருந்த லத்தியால் ஒரு தட்டு தட்டினார் விஜயா.

"ஹேப்பியா... ம்... எங்கே கடகடவென்று அவரைப் பற்றிய விவரங்களை வரிசையாக எடுத்து விடுங்கள் பார்க்கலாம். அவர் ஜெர்னலிஷம் முடித்துள்ளார் என்றால் ஏதாவது பத்திரிக்கையில் வேலை செய்கிறாரா?"

"இல்லை... டிவி சேனல் ஒன்றில் ரிப்போர்டராகவும், சில கிரைம் மற்றும் பொதுநல நிகழ்ச்சிகளை அவனே டைரக்ட் செய்து நேரடியாக தொகுத்து வழங்கியும் வருகிறான்!"

"ஓ... ஆனால் மேடம் அவரால் இது போன்ற சவாலான விஷயங்களில் துணிந்து ஈடுபட்டு துப்பறிந்து உண்மையை கண்டுப்பிடிக்க முடியுமா?" என்றாள் ஹிரணி ஐயத்துடன்.

"இன்னும் நம்பிக்கை வரவில்லையா? அவனை பற்றி இந்த உலகிற்கு தெரியாத ஒரு ரகசியம் சொல்கிறேன் நன்றாக கேட்டுக் கொள். நாங்கள் உறவினர் மற்றும் நான் இந்த துறையில் இருக்கின்ற நம்பகமான ஆள் என்பதால் மட்டும் தான் எங்களுக்கு அந்த விவரத்தை தெரியப்படுத்தினர்!" என்று அந்த இளைஞனின் கதையை முழுதாக விவரிக்க ஆரம்பித்தார் விஜயா.

"வாவ்... ரியலி சூப்பர்ப் மேம், வாட் எ மேன்! உண்மையில் என் மனதில் இருக்கின்ற ஆண் வர்க்கத்தின் மீதான வெறுப்பை இது போன்ற மனிதர்கள் தகர்த்தெறிந்து விடுவார்கள் போலிருக்கிறது. முதலில் நல்ல குணமுள்ள மனிதனாக என் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியவர் என் கணவர். இரண்டாவதாக தன்னுடைய மனைவிக்கு சிறந்த காதலனாகவும், நல்ல கணவனாகவும் நடந்தார் என்று என் கணவரின் அண்ணன் விமலை பற்றிக் கேள்விப்பட்டு மெய்சிலிர்த்தேன். அடுத்து காட்... இவரை பற்றி சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை, திருமணமாகாத ஒரு இளைஞன் மற்றவர்களின் துயர் கண்டு வருந்தி சமூகத்தில் அவர்களுக்கு நியாயம் வாங்கி கொடுக்க போராடியது மட்டுமின்றி சித்ரவதைக்கு ஆளாகி தொலைந்துப் போன குடும்பத்தில் ஒருவரும் இல்லாமல் அநாதரவாக தனித்து இருந்த சின்னஞ்சிறு சிறுவனை மீட்டு தன் பொறுப்பில் வளர்க்கிறார் என்றால் ரியலி அமேஸிங்... மனிதன் என்ற சொல்லுக்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர் இவர் தான்!" என்று வியந்து பாராட்டினாள் ஹிரண்மயி.

31

"ஆமாம்... அதனால் தான் அவனை உனக்கு ரெக்மென்ட் செய்தேன். மிகுந்த சமூக பொறுப்பு இருப்பதோடு துப்பறிந்து கண்டுப்பிடிப்பதிலும் ஆர்வம் அதிகம் உள்ளவன் என்பதால் நிச்சயம் அவனால் நமக்கு உதவ முடியும்!" என்றார் விஜயா.

"ம்... எனக்கும் நம்பிக்கை தோன்றுகிறது, அவரிடமே பேசி விடலாம்!" என்று வேகமாக தலையாட்டினாள் ஹிரணி.

உடனடியாக தனது அலைபேசியை எடுத்து அவனை தொடர்பு கொண்டார் விஜயா.

"ஹலோ... ஜெய்?"

(இத்தனை நேர சம்பஷானையில் தலைவரை யாரென்று என்னுடைய நீண்ட நாள் ஆன்லைன் வாசகர்கள் ஏதாவது கண்டுப்பிடித்தீர்களா? ஆம்... அதில் சந்தேகமே வேண்டாம். “என்னை தெரியுமா” நாவலின் நாயகன் ஜெய்சங்கரே தான் இவன்.)

"ஆங்... சொல்லுங்கள் அண்ணி, நான் வெளியே டிராபிக்கில் இருக்கிறேன். எதுவும் முக்கியமான விஷயமா?"

"ஆமாம்பா... கொஞ்சம் சீரியஸ் மேட்டர் தான். நீ ஃபிரியாகி விட்டு கால் பண்றியா?"

"இதோ ஒரு நிமிடம் இருங்கள், நான் வண்டியை ஓரங்கட்டி விடுகிறேன். ம்... இப்பொழுது சொல்லுங்கள்!"

அவனிடம் நடந்ததை எல்லாம் சுருக்கமாக விவரித்தவர், "இப்பொழுது அந்த கிரிமினல் வாசுதேவனை தொடர்ந்து கண்காணித்து அவனிடமிருந்து விமலை மீட்க வேண்டும். அதை தானே செய்து விடுவதாக என் எதிரில் அமர்ந்து இருக்கிற ஒரு அசட்டு துணிச்சல்காரி சொல்கிறாள் தான். ஆனால் இளம்பெண்ணான அவளை அதில்

தனியாக ஈடுபட அனுமதிக்க எனக்கு மனம் வரவில்லை!" என்றார்.

"ஆஹாங்... நம் ஆளைப் போல் இன்னொரு துணிச்சல் பெண்ணா? அவளை போல் வாயும் அதிகமா?" என்று ஒரு ஆர்வத்தில் வேகமாக கேட்டு விட்டான் ஜெய்சங்கர்.

"என்ன ஆளா? அப்படியென்றால் நீ லவ் பண்ணுகிறாயா?" என்று விஜயா திகைப்புடன் வினவவும் தான், ஏதோ ஓர் உற்சாகத்தில் தான் வாய் விட்டது அவனுக்கு புரிந்தது.

ஹிஹி... என்று அசடு வழிந்தவன் சட்டென்று சமாளித்து, "ஏன் இருக்க கூடாதா என்ன நானும் ஆண்பிள்ளை தானே? ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டாமா? என்னவோ உலக அதிசயம் நிகழ்ந்தது போல் இப்படி வியந்து கேட்கிறீர்கள்!" என்று கெத்தாக வினவினான்.

"அப்பப்பா... நீ தாராளமாக லவ் பண்ணுப்பா, அவளையே கல்யாணமும் பண்ணிக் கொள். நான் எதுவும் உன்னை சொல்லவில்லை. ஆமாம்... அம்மாவுக்கு தெரியுமா?"

"இல்லை... நான் அவளிடமே இன்னும் என்னுடைய காதலை சொல்லவில்லை. சின்னப் பெண், இப்பொழுது தான் கல்லூரி இறுதியாண்டில் இருக்கிறாள். என்னை போலவே ஜெய்சங்கர் விசிறி அப்புறம் ஜெர்னலிசத்திலும் ஆர்வம் இருக்கிறது. முதலில் அதில் எல்லாம் தேர்ந்து தனது கேரியரில் ஸ்ட்ராங்க் ஆகட்டும் ஒரு இரண்டு வருடங்கள் கழித்து மற்றதை பார்த்துக் கொள்ளலாம்!"

"நீ யாருடா... எதையுமே திட்டம் போட்டு தானே செய்வாய்!" என்று விஜயா பாராட்ட, ஜெய்யோ அலுத்துக் கொண்டான்.

"ம்க்கும்... இதை நீங்கள் என் அம்மாவிடம் சொல்லுங்கள். இன்னமும் என்னை ஒன்றும் தெரியாதவன், சொன்னப் பேச்சை கேட்காதவன் என்றே தான் தினமும் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் இந்த திலக் பையன் வேற... அவங்க சொல்வதற்கெல்லாம் ஆமாம் சாமி

போட்டு என் இமேஜை வீட்டில் ரொம்பவே டேமேஜ் செய்கிறான்!"

"ஹஹா... உன்னிடம் நம்மால் ஆகாது தம்பி. சமூகத்தில் உள்ள எவ்வளவோ தீவிரமான விஷயங்களை அலசுபவன் என்று உன்னை பற்றிய அறிமுகம் இல்லாதவர்களுக்கு அறிமுகப்படுத்தினால் நிச்சயம் யாரும் நம்ப மாட்டார்கள்!" என்று சிரித்தார்.

"பின்னே... அதற்காக எந்நேரமும் என் தொழிலைப் போல நான் விறைப்பாக சுற்ற முடியுமா? அது என் ஆர்வம், இது என் குணாதிசயம். சரி இப்பொழுது எங்கே இருக்கிறீர்கள்?"

"ஸ்டேஷனில் தான் இருக்கிறேன்!"

"ஒகே... நான் உங்களுடைய ஏரியாவுக்கு அருகில் தான் இருக்கிறேன். நேரில் வருகிறேன், பார்க்கலாம்!" என்று இணைப்பை துண்டித்தான்.

அலைபேசியை டேபிள் மீது வைத்தவர், "ம்... அவனே நேரில் வருகிறானாம்!" என்று ஹிரணிக்கு தகவல் தெரிவித்தார்.

ஓ... என்று முறுவலித்தவள், "அதென்ன அவரிடம் பேசும் பொழுது அப்படி சிரித்தீர்கள்? கூடவே லவ் அது இது என்று கேலி வேறு!" என ஆர்வத்துடன் வினவினாள்.

நம் மனதிற்கு ஒருவரை பிடித்து விட்டால் அவர் செய்யும் எந்த செயலுமே சுவாரஸ்யமாகவும், ரசிக்கும்படியாகவும் தோன்றும். இதுவே அவரை சிறிது பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், அவர்கள் என்ன தான் நல்லது செய்தாலும் அதில் குறை கண்டுப்பிடிக்க தான் தோன்றும். அது போலவே ஜெய்யிடம் பேசிய விஷயத்தை விஜயா கூற ரொம்பவே ரசித்தாள் பெண்.

"ஓ காட்... ரொம்ப சுவாரஸ்யமான மனிதராக இருப்பார் போலிருக்கிறதே!"

"ம்... வருவான் பார், நீயே தெரிந்துக் கொள்வாய்!"

சற்று நேரத்தில், "ஹாய் அண்ணி!" என்று புன்னகையுடன் உள்ளே நுழைந்த ஜெய்சங்கரை பார்த்த உடனே பிடித்துப் போனது ஹிரணிக்கு.

விஜயா அவர்கள் இருவரையும் பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

பெரிதான முறுவலுடன், "ஹலோ சிஸ்டர்... கிளாட் டு மீட் யூ!" என்று கை நீட்டினான் ஜெய்.

"ஹலோ!" என்று மகிழ்ச்சியுடன் கரம்பற்றி குலுக்கியவளை சற்று கூர்ந்தவன் வியப்புடன் விஜயாவிடம் திரும்பினான்.

"பிரச்சினை இவர்களுக்கென்றா சொன்னீர்கள்? பார்த்தால் அப்படி தெரியவில்லையே ரொம்பவும் கேசுவலாக சிரித்துக் கொண்டிருக்கிறார்!"

ஹிரணி திருதிருவென்று விழிக்க, "அட ஏன்பா நீ வேற... உன்னுடைய கதையை கேட்டு அவளுடைய சீரியஸ்னஸ் எல்லாம் போய் உன்னை சந்திக்கும் ஆர்வம் அதிகமாகி இலகுவாக இருக்கிறாள்!" என்று விளக்கினார் விஜயா.

"ஆகமொத்தம்... என்னை ஒரு காமெடி பீஸ் லெவலுக்கு டெவலப் செய்து அவர்களின் ஆர்வத்தை பெரிதாக தூண்டி விட்டிருக்கிறீர்கள். ம்..." என்று கண்களை இடுக்கி அவரை முறைத்துப் பார்த்தான்.

சட்டென்று ஹிரணி சிரித்து விட்டாள், "ஸோ... நைஸ் ஆஃப் யூ, உங்களை மீட் செய்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம். உண்மையில் என் கணவரும் கிட்டதட்ட உங்களை மாதிரி தான் ரொம்பவும் ஜோவியல் அன்ட் கேரிங் டைப். பட்... என்னவொன்று என்னால் அதை அதிகம் ரசிக்க தான் முடியாது. ஏனெனில் அவருடைய காமெடிக்கான இலக்காக பல நேரங்களில் நான் தான் இருப்பேன்!" என்று பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு கூறினாள்.

இம்முறை சிரிப்பது ஜெய்யின் வசம் மாறியது, "ரியலி இன்ட்ரெஸ்டிங்... ஓகே... ஒருநாள் நிச்சயம் அவரை மீட்

பண்றேன். இப்பொழுது பிரச்சினைக்கு வருவோம், என்ன நடந்தது என்று எனக்கு கொஞ்சம் விளக்கமாக கூறுங்கள்!" என அவளிடம் விவரம் கேட்டான்.

அதுவரை இருந்த இலகுதன்மை மாறி முகத்தில் இருள் படர விமலின் நிலையை விளக்கமாக எடுத்துரைத்தாள் ஹிரண்மயி.

"ம்... டிவியில், செய்திதாள்களில் என்ன தான் எச்சரிக்கை செய்தி வந்தாலும், மற்றவர்கள் எச்சரித்தாலும் இப்படி விட்டில் பூச்சியாய் விழுகிறவர்கள் விழுந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இதில் பாவம் தன் நண்பன் செய்து வைத்த பிரச்சினையை தீர்க்கப் போய் விமல் தேவையில்லாமல் மாட்டிக் கொண்டிருக்கிறார். அதுசரி... இந்த வாசுதேவனால் மட்டும் தான் விமலுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என நீங்கள் எப்படி அவ்வளவு உறுதியாக எதிர்பார்க்கிறீர்கள்?" என்று தன்னுடைய தாடையை வலது கையால் தடவியபடி யோசனையோடு வினவினான் ஜெய்.

இதுவரை தானும், தன் கணவரும் மேற்கொண்ட பல முயற்சிகளில் இது ஒன்று தான் மிகவும் ஆபத்தான விஷயமாக கிடைத்திருக்கிறது. மற்றது எதுவும் இந்த அளவுக்கு ஆள் கடத்தல் அது இது என்று பயமுறுத்துகிற விதத்தில் ஆள் பலமோ பண பலமோ இல்லாதது தான். காவல்துறை மூலமாகவும் அவற்றை அவர் விசாரித்து வருகிறார் என்று அவனிடம் விவரம் தெரிவித்தாள்.

"ஓஹோ... இதுவரை உங்கள் குடும்பத்தினர் யாரையும் அவர்கள் தொடர்பு கொள்ளவில்லையா?"

"இல்லையே... அதனால் தான் இவ்வளவு தாமதமாகிறது!"

"ஒகே... இப்பொழுதைக்கு நம்முடைய ஒரே டார்கெட் இந்த வாசுதேவன் தான். சரி நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"நானும் உங்களுடன் வரலாமா?"

சற்று சிந்தித்தவன், "இல்லைம்மா... முதலில் அவனை பற்றி நான் கிளியராக ஸ்டடி பண்ணிட்டு சொல்கிறேன். பிறகு தேவைப்பட்டால் நிச்சயம் நீங்கள் வந்து உதவலாம்!" என்று கூறினான்.

"சரி, ஆனால் வந்து... தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். எந்த அளவுக்கு விரைவாக முடியுமோ அந்த அளவுக்கு சீக்கிரமாக விமல் அத்தானை கண்டுப்பிடிக்க வேண்டும். என் அக்கா ஹர்சிதா அவரின் நினைவில் மிகவும் நொந்துப் போய் இருக்கிறார். அது மட்டுமில்லை, அவர் நிறைமாத கர்ப்பிணி வேறு... ஆனால் தன் நலனில் சிறிதும் அக்கறை செலுத்தாமல் கணவரின் நிலையை எண்ணியே மிகவும் கவலையாக இருக்கிறார்கள்!"

"டோன்ட் வொர்ரிமா... உங்கள் நிலைமை எனக்கு புரிகிறது. கூடிய விரைவில் உங்களுக்கு சாதகமான விவரங்களை தருகிறேன். நீங்கள் தான் இந்த அளவிற்கு கல்பிரிட்டை எனக்கு சார்ட் லிஸ்ட் செய்துக் கொடுத்திருக்கிறீர்களே... அப்புறம் என்ன?" என்று நம்பிக்கையூட்டினான்.

"ஜெய்... உன்னிடம் இதை சொல்லவில்லையே நான். மேடம் லாயர் தெரியுமா?" என்று இடையில் புகுந்தார் விஜயா.

"ஆஹான்... அப்படியா? குட்... அப்பொழுது வாயில் நிறைய பொய்கள் சரளமாக வருமோ!" என்றான் அவன் சிந்திக்கும் பாவனையில்.

"நீ வேற... திருமணமே செய்துக் கொள்ள மாட்டேன் என்று மிகவும் பிடிவாதமாக சுற்றிக் கொண்டிருந்தவள் திடீரென்று பார்த்தால் போலியாக அம்மா, அப்பா, வீடு என்று பெரிய செட்டப் செய்து இல்லாத பல நூறு பொய்கள் சொல்லி தன் கணவனை திருமணம் முடித்துக் கொண்டாள்!"

ஜெய்சங்கர் விழிகளை அகல விரித்து ஹிரணியை நம்பாத பார்வை பார்த்தான்.

"ஐயோ மேடம்... நான் ஏன் அப்படி செய்தேன் என்று உங்களுக்கே தெரியும்!" என ஹிரணி சிணுங்கினாள்.

"ஹேய்... ஸ்டாப்... ஸ்டாப்... என்ன இது? ஒரு காவல் நிலையத்தில் அதுவும் நேர்மையான காவல் அதிகாரி முன்பு தன் போர்ஜெரியை மிக தைரியமாக ஒரு பெண் டிஸ்கஸ் செய்கிறாள். நீங்கள் என்னடாவென்றால் அவள் மேல் கேஸ் எதுவும் போடாமல் ஏதோ சினிமா கதையை சொல்வதுப் போல் அவளுடைய ஃபிராடுதனத்தை எல்லாம் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். வாட் ஈஸ் திஸ் ஸ்டுப்பிட் ஆஃப் தி நான்சென்ஸ் ஆஃப் தி இடியட்!" என்று போலியாக கொந்தளித்தான் ஜெய்.

"ஹஹா... அண்ணா நிச்சயமாக எனக்கு பயம் வரவில்லை!" என்று சிரித்தாள் ஹிரணி.

"என்னது அண்ணாவா?" என்று விஜயா வாயைப் பிளந்தார் என்றால் ஹிரணிக்குமே சற்று ஆச்சரியம் தான்.

"இதில் என்ன இவ்வளவு அதிசயம்? நான் அவர்களை சிஸ்டர் என்றேன் அவர்கள் பதிலுக்கு திரும்பி என்னை அண்ணா என்று சொல்லி விட்டார்கள். அவ்வளவு தான்!" என தோள்களை குலுக்கினான்.

"நிச்சயம் இது அதிசயம் தான்... இவள் இதுவரை எந்த ஒரு ஆணையும் இப்படி எல்லாம் உறவுமுறை கூறி உரிமையாக அழைத்ததில்லை. ஆசிரமத்தில் வளர்ந்ததால் சிலவற்றை தனக்கு தானே தவறாக அர்த்தம் கற்பித்துக் கொண்டு இயல்பாகவே ஆண்களை மதிக்காமல் சற்று ஒதுக்கி தான் வைப்பாள் இவள்!"

"இருங்கள்... இருங்கள்... இப்பொழுது என்ன சொல்ல வருகிறீர்கள்? ஏதோ அந்தப் பிள்ளையே தன்னால் மனசு வந்து எனக்கொரு மரியாதையை கொடுத்து விட்டது. அதை என்னவோ உலக அதிசயம் போல் டெவலப் செய்து ஏன்டா இவனை அண்ணா என அழைத்தோம் என்று அவளை ஃபீல் செய்ய வைத்து விடுவீர்கள் போலிருக்கிறதே!"

அதுவரை சங்கடமாக உணர்ந்தவள் சட்டென்று நிமிர்ந்து, "கண்டிப்பாக இல்லை அண்ணா... என்னையும் அறியாமல் என் உள்ளத்தில் இருந்து வெளிவந்த வார்த்தை அது. அதை நிச்சயமாக நான் திரும்ப பெற மாட்டேன்!" என்றாள்.

"வெரிகுட்... அன்ட் தாங்க் யூ!" என்று முறுவலித்தான் ஜெய்.

"ஓகே... இனி விமல் அத்தான் விஷயத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நீங்கள் எடுத்து வைத்திருக்கும் இந்த முகவரியிலிருந்து அவனுக்கே தெரியாமல் அந்த வாசுதேவனை கண்காணிக்க போகிறேன். அவனுடைய நடவடிக்கைகளை கொஞ்சம் நெருக்கமாக தொடர்ந்து கவனித்து வந்தாலே போதும் சீக்கிரமாக விமல் பற்றிய ரகசியத்தை கண்டுப்பிடித்து விடலாம். அதன்பிறகு அங்கிருந்து அவரை மீட்பது ரொம்பவே சுலபம். கவலை வேண்டாம்... அவ்வப்பொழுது கிடைக்கின்ற தகவல்களை உனக்கு மறவாமல் அப்டேட் செய்கிறேன்!" என்று உறுதியளித்தான் ஜெய்.

“ஆங்... ஜெய் அப்புறம்... அவனை பற்றி இந்த விஷயத்தை சொல்ல மறந்து விட்டனே!” என்று விஜயா தான் சேகரித்து வைத்திருந்த வாசுதேவன் சம்பந்தப்பட்ட முக்கிய அரசியல் தலைவர்களை குறித்தும் விவரம் தெரிவிக்கவும், நெற்றி சுருங்க மிகவும் தீவிரமாக அதைக் கேட்டிருந்தவன் உடனே தன் சகாக்களை தொடர்பு கொண்டு மேலும் அதன் தொடர்பான விஷயங்களை எல்லாம் விரைவாக சேகரிக்க சொன்னான்.

32

ஜெய்சங்கரை பற்றி கேள்விப்பட்டதிலும், அவனிடம் பேசி விமலை கண்டுப்பிடிக்கும் பொறுப்பை ஒப்படைத்ததை எண்ணியும் மிகவும் நிம்மதியாக உணர்ந்தாள் ஹிரண்மயி.

இது போன்ற விவகாரங்களில் முன் அனுபவம் உள்ளவர் என்பதால் எப்படியும் விரைவில் விமல் அத்தானை அந்த கயவர்களிடம் இருந்து மீட்டு விடுவார் என்று அவன் மேல் உள்ள நம்பிக்கையில் மலர்ச்சியுடன் வலம் வந்தாள்.

அவளின் அதீத களிப்பு அகிலுக்கு குடைச்சலை கொடுத்தது.

'இவள் என்ன ஏதோ ஒலிம்பிக்கில் மெடல் வாங்கிய சாதனையாளர் போல் எப்பொழுதும் ஈயென்று சுற்றிக் கொண்டிருக்கிறாள்? முதலில் எல்லாம் அசால்ட்டு ஆறுமுகமாக எதைப் பற்றியும், யாரை பற்றியும், எதையும்... கண்டுக்கொள்ளாமல் கொஞ்சம் விலகியே இருந்தாள். இடையில் விமலை பற்றிய முழுவிவரமும் தெரிந்ததும் அவனுக்காக வருந்தி அவனை தன் பங்குக்கு தானும் கண்டுப்பிடிக்க முயல்வதாக கூறி அவனை பற்றி நம்மிடம் குடைந்துக் குடைந்து பெரிய கேள்வி வேட்டை நடத்தினாள். இரவிலாவது நிம்மதியாக தூங்க விட்டாளா? அதுவும் கிடையாது, நடுநிசியில் எழுப்பி அவனை குறித்த சந்தேகம் எதையாவது கேட்பாள். ஏய்... காலையில் கேட்பது தானே என்றால்... இல்லை... காலையில் இந்தக் கேள்வி மறந்து வேறு ஏதாவது தோன்றிவிடும் என்று அதற்கு வேறு தனி விளக்கவுரை கொடுப்பாள். ஆனால்... இப்பொழுது ஒரு இரண்டு நாளாக விமலை பற்றி எதுவும் பேசுவதில்லையே, என்னவாயிற்று இவளுக்கு?' என்று இதழ் கடித்தபடி தன் மனைவியை யோசனையுடன் ஆராய்ந்தான் அகிலன்.

அவ்வப்பொழுது ஜெய்யிடம் இருந்து இவளுக்கு வரும் தகவல்களை கவனமாக சேகரித்து வைத்து தன்

பங்கிற்கு தான் ஏதாவது செய்ய முடியுமா என்று மிகவும் தீவிரமாக ஆராய்ந்துப் பார்ப்பாள் ஹிரணி. ஆனால் அவளுக்கு வேலையே இல்லாமல் நல்ல தெளிவாக ஸ்கெட்ச் போட்டு காய்களை நகர்த்திக் கொண்டிருந்தான் ஜெய்.

“அலுவலகத்தில் எதுவும் பிரச்சினையா உனக்கு?" என்று தன் யோசனையில் இருந்தவளை கலைத்தான் அகில்.

ஆங்... என அவனிடம் திரும்பியவள், "அப்படியெல்லாம் எதுவும் இல்லையே!" என்றாள் அமைதியாக.

"அப்புறம் ஏன் இப்படி இடித்தப் புளி மாதிரி அசையாமல் ஒரே இடத்தில் அமர்ந்துக் கொண்டு எதிரே உள்ள வெறும் சுவற்றை அப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறாய்?" என்றான் அவன் நக்கலாக.

பற்களை கடித்து அவனை புருவம் நெறியப் பார்த்தவள், "நான் அத்தானை பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்று அலட்சியமாக உதட்டை சுழித்தாள்.

சில நொடிகள் கடந்த பின்னும் தடுமாறிய மனதை அடக்கி வலுக்கட்டாயமாக தன் பார்வையை அவள் உதட்டிலிருந்து விழிகளுக்கு உயர்த்தியவன், "அவனை பற்றி என்றால் நீ என்னிடம் எதுவும் டிஸ்கஸ் பண்ணவில்லையே!" என்றான் சந்தேகமாக.

"ப்ச்... எல்லாவற்றையும் இனிமேல் உங்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டேன்!"

"ஏன்?" என்றான் அகில் வேகமாக.

"ஏனென்றால்... நீங்கள் மயூவை பற்றி என்னிடம் ஏதாவது சொல்கிறீர்களா... தெளிவாக மறைக்கிறீர்கள் இல்லை? இத்தனை நாளில் கார்ப்ரேட் ஆபிஸ் பக்கம் போகாமலா இருந்திருப்பீர்கள், அல்லது... அவளை பார்த்து தான் நீங்கள் வழியாமல் இருந்தீர்களா..." என்றாள் மனைவி ஏளனமாக.

பொங்கிய வெடிச்சிரிப்பை அவள் முன் வெளியிடாமல் மறைக்க மிகவும் சிரமப்பட்டு தான் போனான் கணவன்.

'ஐயோ... கடவுளே... கடவுளே... இவளை எல்லாம் வைத்துக் கொண்டு நான் என்ன தான் செய்வதோ? சத்தியமாக எப்படியப்பா இப்படி தன்னைக் குறித்தே பொறாமைக் கொள்ளும் ஒரு அற்புதமான பீஸை படைத்தாய்? அதை வேறு எனக்கே எனக்கென்று அழகாக மனைவியாக்கி விட்டாய்!' என உள்ளுக்குள் அவள் அறியாமையை எண்ணி ஹிரணியின் மேல் அவனுக்கு காதல் ஊற்றாக பொங்கி வழிய அதை அனுபவிக்க வழியில்லாமல் அவளே அதற்கு தடையாகவும் இருக்கிறாளே என்று நினைத்து ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டான்.

'அவளை பற்றி பேச்செடுத்ததுமே முகத்தில் தோன்றுகிற பளபளப்பை பார்!' என்று அவன் சிரிப்பை அடக்கியதால் உண்டான பளப்பளப்பை தவறாக அர்த்தம் கற்பித்துக் கொண்டு கொதித்துக் கொண்டிருந்தாள் ஹிரண்மயி.

"சரி விமலுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக தேவையில்லாமல் அவளை இங்கே உள்ளே இழுக்கிறாய்?" என்றான் அகில் விழிகள் மின்ன.

அவன் மேற்கொண்டு தன்னிடம் எதுவும் விசாரிக்க கூடாது என்றே தேவையில்லாமல் மயூவை இடையில் கொண்டு வந்தாள் அவள்.

"அதெல்லாம் எனக்கு தெரியாது..." என்று அவள் மறுக்கும் பொழுதே அலைபேசி ஒலி எழுப்பியது.

டிஸ்ப்ளேவை பார்த்தவள் ஜெய்யின் அழைப்பு எனவும் கப்சிப்பென்று அமைதியாகி கணவனிடம் ஒரு கவனமான பார்வையை வீசிவிட்டு அதை ஸ்வைப் செய்தாள்.

மெல்லிய குரலில் "ஆங்... சொல்லுங்கண்ணா, ஒரு நிமிடம் உங்கள் குரல் எனக்கு சரியாக கேட்கவில்லை!" என்றவாறு வெளியேறியவளை குழப்பத்துடன் பார்த்தான் அகில்.

'எது... அண்ணாவா... அது யார் திடீரென்று? ஒருவேளை அப்பா, அம்மாவை திருமணத்திற்காக தத்தெடுத்தது போல் இப்பொழுது அண்ணாவை தத்தெடுத்துக் கொண்டாளா... ஆனால்... எதற்காக இருக்கும்? வேறு எதற்குடா மடப்பயலே எப்பொழுதும் உன் மனைவியின் ஒரே டார்கெட் நீதானேடா, அநேகமாக மயூவை பற்றி விசாரிக்க எவனையாவது கூட்டு சேர்த்துக் கொண்டிருப்பாளாக இருக்கும். ஹஹா... இவளோடு சேர்ந்து அவனும் மண்டைக் காய்ந்து என் பின்னால் சுற்றப் போகிறான்!' என்று அதையெண்ணி குதூகலித்தபடி அப்படியே கட்டிலில் விழுந்தான்.

"ஹலோ... ஹிரணி, கிட்டத்தட்ட நம்முடைய இலக்கை நாம் நெருங்கி விட்டோம்!" என்ற ஜெய்யின் குரலில் துள்ளல் தெரிந்தது.

"வாவ்... அண்ணா... என்னவாயிற்று? எப்படி? எனக்கு சந்தோசத்தில் பேச்சே வரவில்லை. விமல் அத்தானை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதை கண்டுப்பிடித்து விட்டீர்களா?" என்றாள் குதூகலமாக.

"இன்னும் இல்லைம்மா... அது நாளை தான் தெரியும். வாசுதேவனுடைய அலைபேசி எண்ணை ட்ராக் செய்ததில் அவன் இன்று ஒரு நம்பருக்கு ஜஸ்ட் இப்பொழுது தான் ஒரு பத்து நிமிடங்களுக்கு முன்பு பேசினான். அவன் இன்னமும் உண்மையை சொல்லாமல் அப்படியே தான் இருக்கிறானாடா... யாருக்காக நம்மை தேடி வந்தான் என்றே தெரியவில்லையே. அவனுடைய குறிப்புகள் எதுவும் நம்மிடம் ஏமாந்தவர்கள் லிஸ்டில் இல்லை. பிறகு எதற்காக சம்பந்தமில்லாமல் நம் விஷயத்தில் மூக்கை நுழைக்கப் பார்த்தான். நல்லவேளை அவன் வேவு பார்க்க வந்த நேரத்தில் நான் அலுவலகத்துக்கு வந்தேன் இல்லையென்றால் விஷயம் வெளியே போய் பெரிய பிரச்சினையாகி இருக்கும். ஆனால் இவன் யாருக்காக வந்தானோ அவர்களுக்கு நம்முடைய விவரம் எல்லாம் போய்விட்டதா என்ன என்று ஒன்றும் புரியாமல் இன்னும் இழுபறியாகவே

இருக்கிறதே, நாளை நான் நேரில் வருகிறேன். இந்த முறை அவனுக்கு ஒரு மெடிக்கல் செக்கப் செய்து விட்டு இன்னும் டோஸோஜ் அதிகம் உள்ள மருந்தை செலுத்த வேண்டும். அப்பொழுதாவது உண்மை வெளிவருகிறதா என்று பார்க்கலாம் என கண்டபடி அந்த வாசுதேவன் டென்ஷன் ஆவதை பார்த்தால் அது நிச்சயம் விமலாக தான் இருக்கும்!"

"ஐயோ அண்ணா... நீங்கள் சொல்வதை வைத்து பார்த்தால் அவருக்கு ஏதோ தவறான மருந்தை செலுத்துகிறார்கள் போலிருக்கிறதே!" என்றாள் பதற்றத்துடன்.

"ம்... அநேகமாக சுயநினைவை இழந்து பிதற்றும் அளவுக்கு ஏதாவது போதை மருந்தை செலுத்துவார்களாக இருக்கும்!" என்று அவன் முடிக்கும் முன்னரே பதறினாள் ஹிரணி.

"கடவுளே... ஆறேழு மாதங்களாக அவருக்கு போதை ஊசி போடுகிறார்கள் என்றால் அவருடைய ஹெல்த் இப்பொழுது எப்படி இருக்கிறதோ தெரியவில்லையே..." என்றவளின் குரல் கவலையில் பிசிறியது.

"ஷ்... ஹேய் ஹிரணி... அதை ஏன் அப்படி பார்க்கிறாய்? அவரை பத்திரமாக உயிருடன் மீட்கப் போகிறோம் என்று பாஸிடிவாக நினைக்கப் பாரேன்!"

"ம்... ஆமாம்... ஆமாம்... அதுவும் கரெக்ட் தான்!" என்று சற்றே சமாதானம் ஆனாள் இவள்.

"ஓகே... பீ கூல், நாளை இரவு எப்படியும் நாம் விமலை மீட்டு விடலாம்!"

"ஆனால்... ஒருவேளை அந்த வாசுதேவன் நாளை அங்கே போகவில்லை என்றால் என்ன செய்வது அண்ணா? நாம் அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்"

"டோன்ட் வொர்ரி... நான் அதற்கு இன்னொரு வழியையும் யோசித்து வைத்து விட்டேன். அவனுக்கு வந்த இன்கமிங் நம்பரை எடுத்தால் அதனுடைய சிக்னலை வைத்தும்

லொக்கேஷனை கண்டுப்பிடிக்கலாம். எப்படியும் அவன் ஸ்பாட்டில் இருப்பவனாக தான் இருக்கும்!"

"ஓ... ரொம்ப சூப்பர் அண்ணா, அப்படியே செய்து விடலாம். எப்படியோ ஒன்று... நாளை விமல் அத்தானை அங்கிருந்து காப்பாற்றி விட வேண்டும்!"

"ஷ்யூர்... ஓகே பார்க்கலாம். டேக் கேர், குட் நைட்!" என்று தன் லைனை கட் செய்தான் ஜெய்.

அவனுடன் பேசியவற்றை தனக்குள் அசைப்போட்டபடி அறைக்கு வந்தவளை கூர்ந்துப் பார்த்தான் அகில்.

'என்ன? இவள் முகத்தில் இப்பொழுது இருப்பது கவலையா அல்லது சந்தோஷமா? அந்த லூசு டிடெக்டிவ் இல்லாத ஒருத்தியை பற்றி இவளிடம் என்ன உளறி வைத்தானோ தெரியவில்லையே... இப்படி தன் உணர்வில் இல்லாமல் குழப்பத்தில் மிதந்தபடி வருகிறாள்!' என்று சிந்தித்தவன் அவள் கட்டிலுக்கருகில் வரும்பொழுது வேண்டுமென்றே குறுக்கே தன் காலை நீட்டினான்.

அதில் தடுமாறி விழப் போனவள் சமாளித்து நின்று, "ப்ச்... நீங்கள் எந்தப் பக்கம் படுத்திருக்கிறீர்கள், உங்கள் கால் எவ்வளவு தூரம் நீண்டுக் கிடக்கிறது?" என்று முறைத்தாள்.

"ம்... தூக்கம் வரவில்லை, அதனால் கட்டில் முழுவதும் உருண்டுக் கொண்டிருந்தேன்!" என்றான் அவன் அசால்டாக.

"ஓஹோ... தூக்கம் வரவில்லை என்றால் போய் மொட்டை மாடியில் நடங்கள், நன்றாக தூக்கம் வரும்!" என்று அலட்சியமாக மொழிந்து விட்டு அவள் இடத்தில் படுத்தாள்.

"எப்படி? இப்பொழுது உனக்கு போன் வந்து நீ போனாயே... அப்படியா? உனக்கு பரவாயில்லை யாரோ ஒரு அண்ணன் போன் செய்தான் எனவும் நீ சென்று பொழுதை நன்றாக போக்கிவிட்டு வந்தாய். எனக்கு என்

அண்ணன் எங்கே இருக்கிறானென்றே தெரியவில்லையே!" என்று கேலியாக பேச ஆரம்பித்தவன் விமலின் நினைவில் முகம் வாடினான்.

கணவனின் முகம் பார்த்த ஹிரணிக்கு ஒரு நொடி தன்னை மீறி அவனிடம் விஷயத்தை சொல்லி விடலாமா என்று கூட தோன்றிவிட்டது. ம்ஹூம்... வேண்டாம்... வேண்டாம், நாளை சர்ப்ரைஸாகவே தெரிந்துக் கொள்ளட்டும் என்று எண்ணும் பொழுதே அன்று அவன் தன்னுடைய கையை முத்தமிட்டு விட்டு உளறியது நினைவில் மோதி இதழில் ரகசியப் புன்னகையை தோற்றுவித்தது.

காலையில் எழுந்து தடதடவென்று கீழே இறங்கி வந்தவள் யோசனையோடு அமர்ந்திருந்த ஹர்சிதாவை பார்த்து நெஞ்சம் உருகிப் போனாள்.

அவள் அரவம் உணர்ந்து திரும்பிய ஹர்சு, "குட்மார்னிங் ஹிரணி!" என்று முறுவலித்தாள்.

"குட்மார்னிங்கா!" என்று அருகில் வந்தவள் சலுகையுடன் அவள் தோளில் சாய்ந்துக் கொண்டாள்.

இன்று இரவு நடக்கப்போகும் நிகழ்வை எண்ணி ஒருபுறம் இதயம் அமைதி இழந்து சிறிது படபடப்பாகவே இருந்தது அவளுக்கு. முன்தின இரவும் சரியான உறக்கமே இல்லை, விமலை எப்படி மீட்கப் போகிறோம் என்பதிலேயே மூளை உறங்க மறுத்து அடம்பிடித்தது.

ஹர்சுவின் மேடிட்டிருந்த வயிற்றை கவனித்தவள், "அக்கா... குழந்தைக்கு ஒன்பது மாதம் ஆகப்போகிறது இல்லை?" என்று வாஞ்சையுடன் தடவினாள்.

"ஆமாம், நாளை பிறந்தால் ஒன்பது மாதம் தொடங்குகிறது!" என்றவளுக்கு ஏனோ அந்த மகிழ்ச்சியை முழுமையாக உணர முடியவில்லை.

அதைக் கவனித்தபடி வந்த பவானி அவர்கள் எதிரில் அமர்ந்து, "என்ன? உன் தங்கை காலையிலேயே வந்து உன் தோள் சாய்ந்து ரொம்பவும் கொஞ்சிக்

கொண்டிருக்கிறாள்!" என்று நிலைமையை இலகுவாக்க கேலி செய்தார்.

ஹர்ஷிதா சிரிப்புடன் குனிந்து அவள் கன்னம் வருடினாள்.

மாறாக ஹிரணியோ, "என்னவென்று தெரியவில்லை மனது ஒருவிதமாக கொஞ்சம் படபடப்பாகவே இருக்கிறது!" என்று தன்னை மறந்து முனகினாள்.

"என்ன?" என்று இரு குரல்கள் ஒருசேர பதறி ஒலிக்கவும் தான் அவள் திடுக்கிட்டு நிமிர்ந்துப் பார்த்தாள்.

இருவரின் விழிகளிலும் லேசான பதற்றத்தை கண்டவள் தன்னையே கடிந்துக் கொண்டு, "ஒன்றுமில்லை... கொஞ்சம் அலுவலகத்தில் பிரச்சினை!" என்று சமாளித்தாள்.

"வேறொன்றுமில்லையே!" என்று பவானி அவள் முகத்தை கூர்ந்து நோக்கினார்.

மறுப்பாக தலையசைத்தவள், "சரி நான் போய் அலுவலகம் கிளம்புகிறேன். இன்றைக்கு வேலையிருக்கிறது என சற்று சீக்கிரமாக வரச் சொன்னார்கள்!" என்று நழுவிச் சென்றாள்.

ஹிரணியின் நடவடிக்கை அவள் தங்களிடம் எதையோ மறைக்கிறாளோ என்ற சந்தேக விதையை பவானிக்குள் தூவியது.

மதிய உணவுவேளை முடிந்து தன் வேலையில் கவனமாக இருந்தவளை அலைபேசியின் நோட்டிவிக்கேஷனின் ஒலி கலைத்தது.

புருவம் சுருங்க எடுத்துப் பார்த்தவள் ஜெய்யிடமிருந்து தகவல் என்று தெரியவும் உடல் பரபரப்பை தொற்றிக் கொள்ள வேகமாக திறந்துப் பார்த்தாள்.

வந்திருந்த தகவலும் அவள் இதயத் துடிப்பை அதிகமாக எகிற வைத்தது. வாசுதேவனை தொடர்ந்து சென்று விமல் இருக்கின்ற இடத்தை கண்டுக்கொண்டதாக அதன்

முகவரி முதற்கொண்டு அனைத்தையும் தெளிவாக அனுப்பியிருந்த ஜெய், தன் நண்பன் ஒருவனுடன் இன்றிரவு அங்கு சென்று சூழ்நிலையை ஆராய்ந்து மயக்க மருந்து ஸ்ப்ரே செய்து அங்கிருப்பவர்களை மயக்கமடைய வைத்து எப்படியாவது விமலை மீட்டு விடுவதாகவும் தற்பொழுது வேறொரு முக்கியமான வேலையில் மாட்டிக் கொண்டிருப்பதால் போன் செய்து பேச இயலவில்லை நீ எதிர்பார்த்திருப்பாயே என்று டெக்ஸ்ட் செய்தேன் எனவும் அனுப்பியிருந்தான்.

உச்சக்கட்ட பரவசத்தில் விழிகளில் நீர் ஊற்றெடுக்க இதழ் கடித்து அதை அடக்கியவள், 'நோட்டட்... ஸோ ஹாப்பி, தாங்ஸ் எ லாட்!' என்று பதில் ரிப்ளை அனுப்பினாள்.

மொபைலை கீழே போட்டு விட்டு சற்று நேரம் அழுது தன் உணர்வு கொந்தளிப்பை வெளியேற்றியவள் எழுந்து முகம் கழுவிக் கொண்டு வந்து தன் சேரில் அமர்ந்தாள்.

தொடர்ந்த நிமிடங்களில் எத்தனை முயன்றும் தன்னை ஆசுவாசப்படுத்த முடியாமல் திணறினாள் அவள். இது ஒரு புது அனுபவமாக இருந்தது அவளுக்கு. இதுவரை யாரை நினைத்தும் இந்தளவுக்கு அக்கறையாக அவள் பயந்ததோ, கவலைக்கொண்டதோ கிடையாது.

பெற்றவர்களின் உதாசீனத்தால் அநாதையாக்கப்பட்டோம் என்கிற வெறுப்பில் இருந்ததாலோ என்னவோ எதையுமே இவளும் அலட்சியமாக தான் பார்ப்பாள்.

இறுதியில் சும்மா இருந்து இங்கே அலைபாய்வதை விட அங்கே சென்று இடத்தை ஒரு சுற்றுப் பார்க்கலாம் என்று முடிவெடுத்து ஜெய்யிடம் தெரிவிக்காமல் அலுவலகத்தில் அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வேகமாக வெளியே வந்தாள் ஹிரண்மயி.

ஜெய்சங்கர் குறிப்பிட்டிருந்த ஏரியாவை இவள் அடைய கிட்டத்தட்ட மணி நான்கை தாண்டியது. சென்னையின் புறநகர் பகுதியில் அமைந்திருக்கின்ற சிப்காட்டின்

கடைசி பகுதி அது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய ரக தொழிற்சாலைகள் மட்டும் சிலது தள்ளி தள்ளி இருந்தன. அவற்றில் ஒன்றிரண்டு கம்பெனியில் ஏதாவது வேலை நடக்கிறதா இல்லையா என்று பார்ப்பவர்கள் சந்தேகம் கொள்ளும் அளவுக்கு மிகவும் மோசமானதொரு நிலையில் பாழடைந்த கட்டிடமாக இருந்தது.

விழிகளை சுழற்றி சுற்றுப்புறத்தை மெல்ல ஆராய்ந்தவாறே தனது ஸ்கூட்டியை மெதுவாக ஓட்டிச் சென்றாள் ஹிரணி.

அப்பொழுது திடீரென்று உடல் மெலிந்த ஒரு கறுத்த உருவம் (முகத்தை அடையாளம் காண முடியாதயளவு அடர்ந்து நீண்டிருந்த தாடி பாதி மறைத்திருக்க) வேகமாக ஓடி வந்து அவள் வண்டியை குறுக்கே வழி மறித்தது.

இதயம் தன் துடிப்பை நிறுத்த ஏதோ பைத்தியமோ என்று ஒரு கணம் அச்சத்தில் பதறிய ஹிரணியின் கரங்களில் மெலிதான நடுக்கம் தோன்றியது.

"ஹேய்... சீக்கிரம் வண்டியை எடு. அவர்கள் வந்து விடப் போகிறார்கள். ம்... சீக்கிரம்!" என்று அவளை பிடித்து உலுக்கினான் அவன்.

அதுவரை விக்கித்து அமர்ந்திருந்தவளுக்கு சட்டென்று பொறி தட்ட, "விமல் அத்தான்!" என்று முணுமுணுத்தாள்.

அவன் காதுகளில் அது அரைகுறையாக விழ, "ஆங்... விமல் தான். என்னை உனக்கு தெரியுமா? சீக்கிரம் வண்டியை எடு, இங்கிருந்து விரைவாக போக வேண்டும். ப்ளீஸ்..." என்று கெஞ்சினான்.

33

"அது நீங்கள்... நீங்கள்... அவர்களிடமிருந்து தப்பி வந்து விட்டீர்களா?" என்று விமலனிடம் ஆர்வமாக வினவினாள் ஹிரண்மயி.

"ம்... ஆமாம், கிளம்பு!" என்றபடி அவள் பின்னால் ஏறினான்.

"ஆங்... இதோ!" என்று ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள்.

வண்டியின் பின்பக்கப் பிடியை பிடிக்க முயன்று தோற்ற விமல் அவள் ஸ்கூட்டியை செலுத்த ஆரம்பிக்கவும் கீழே சரிய ஆரம்பித்தான்.

"ஐயோ... என்ன?" என்று பதறியவள், வேகமாக பிரேக்கிட்டு நிறுத்தி பின்னால் திரும்பி அவனை தாங்கி நிமிர்த்தினாள்.

"இல்லை... அவனுங்க ஊசி போட்டு ஐந்து மணி நேரத்திற்கு மேலாகி விட்டது போதை தெளிந்து விட்டது. ஆனாலும் என்னவோ கையெல்லாம் ஒருமாதிரி தொய்ந்து விழுகிறது. என்னால் கைகளை பின்னால் கொண்டு போய் வண்டியை சரியாக பிடிக்க முடியவில்லை, அவர்கள் வேறு வந்து விடுவார்களே!" என்று அச்சத்துடன் வந்த வழியை திரும்பி பார்த்தான் விமல்.

மனது பாரமாக தன்னை சமன்படுத்தியவள், "ஒன்றும் பிரச்சினை இல்லை... நீங்கள் முன்னாடி என்னை பிடித்துக் கொள்ளுங்கள்!" என்று விமலின் கரங்களை முன்னால் இழுத்து தன் வயிற்றை சுற்றிப் பிடிக்கச் செய்தாள் ஹிரணி.

"ஐயோ... இல்லை... இல்லை... வேண்டாம்!" என்று அவன் வேகமாக விலக்கிக் கொண்டான்.

"அச்சோ... என்னவாயிற்று? எதற்காக கையை எடுத்தீர்கள்... கீழே விழப் போகிறீர்கள் பார்த்து..."

"இல்லை... இப்படியெல்லாம் வேண்டாம், நான் அப்படியே உட்கார்ந்துக் கொள்கிறேன். நீ வண்டியை எடு!"

"ப்ச்... என்ன இப்படி செய்கிறீர்கள்? உங்களுக்கு உடல்நிலை வேறு சரியில்லை, வண்டி போகும் பொழுது கீழே விழுந்து விடுவீர்கள். என்னை உங்கள் தங்கை மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள்!"

"இல்லை... நீ..." என்று அவன் மேலும் தயங்க, "இப்பொழுது நீங்கள் பத்திரமாக வீட்டிற்கு போய் உங்கள் மனைவியை சீக்கிரமாக பார்க்க வேண்டுமா வேண்டாமா?" என்று அவன் நாடியை பிடித்தாள் ஹிரண்மயி.

"ஆமாம்... ஆமாம்... போக வேண்டும், அவள் வேறு ரொம்ப நாளாக என்னை காணவில்லை என்று மிகவும் பயந்து போயிருப்பாள்!" என்று ஹர்சுவின் நினைவில் தவிப்புடன் கூறினான் விமல்.

கண்களில் நீர் சுரக்க, "அப்பொழுது நான் சொல்கிறபடி செய்யுங்கள், நேரமாகிறது அந்த ரௌடிகள் வேறு உங்களை தேடிக்கொண்டு வந்துவிடப் போகிறார்கள்!" என்று அவனை துரிதப்படுத்தியவளுக்கு ஒன்று தோன்ற, தன் ஷாலை எடுத்து விமலையும், தன்னையும் சேர்த்து இறுக கட்டினாள்.

"ஏய்... என்ன செய்கிறாய்?"

"இல்லை... போகும் பொழுது ஒருவேளை மருந்தின் வீரியத்தால் உங்களுக்கு தூக்கமோ மயக்கமோ வந்தால் விழாமல் இருப்பீர்கள் இல்லை... அதற்காக தான் இப்படி கட்டுகிறேன். முடிந்தவரை விரைவாக ஓட்டிப் போகிறேன், நீங்களும் கொஞ்சம் பார்த்து உட்கார்ந்துக் கொள்ளுங்கள்!"

"ஆங்... சரி சரி, என் வீடு..."

"தெரியும்!" என்று வண்டியை முறுக்கினாள் ஹிரணி.

"எப்படி? ஹர்சுவை உனக்கு தெரியுமா?"

"ம்!"

"அப்பொழுது... அவளை சமீபத்தில் பார்த்தாயா? எப்படி இருக்கிறாள் நன்றாக இருக்கிறாளா?" என்றான் ஆவலாக.

"நன்றாக இருக்கிறார்கள், உங்களை நினைத்து தான் மிகவும் பயந்து போய் இருக்கிறார்கள். நீங்கள் பத்திரமாக திரும்பி வர வேண்டும் என்று ரொம்ப கவலை வேறு!"

"ஹும்... எனக்கு தெரியும் அவளைப் பற்றி, அவர்களிடம் மாட்டி அடைப்பட்டதிலிருந்தே அவளை நினைத்து தான் எனக்கு கவலையாக இருந்தது. ஒழுங்காக சாப்பிட்டு, உறங்கியிருக்க கூட மாட்டாள், திருமணத்திற்கு பிறகு என் மேல் ரொம்பவும் டிப்பென்டன்டாக இருந்தாள். பாவம்... இத்தனை மாதங்களாக என்னை காணாமல் ரொம்பவே தவித்துப் போயிருப்பாள்!" என்று தன்போக்கில் குரல் கரகரக்க பேசிக் கொண்டிருந்தான் விமல்.

விழிகளில் வழிந்தோடும் நீரை கூட துடைக்க தோன்றாமல் வண்டியை சீரான வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தாள் ஹிரண்மயி.

மனதில் அன்று ஹர்சு உரைத்த வார்த்தைகள் வலியுடன் இன்று அலைமோதியது.

'அவரை அப்படியெல்லாம் சொல்லாதே... எங்கிருந்தாலும் அவர் என்னை பற்றி தான் நினைத்துக் கொண்டிருப்பார்!'

அவர்களுடைய வீடு இருந்த ஏரியாவை நெருங்கும் நேரம் விமலின் உடல் லேசாக தொய்ந்து தன் மேல் பாரமாக அழுந்துவதிலேயே ஒன்று அவன் உறங்கி விட்டான் அல்லது மயங்கி விட்டான் என்பதை புரிந்துக் கொண்டவள் அவனை பேலன்ஸ் செய்து வண்டியின் வேகத்தை சிறிது குறைத்து மெதுவாக ஓட்டி சென்றாள்.

மாலை மங்கி இருள் கவிய ஆரம்பிக்கும் நேரம் வீட்டு வாசலில் ஸ்கூட்டியை நிறுத்தியவள், கேட்டின் உள்ளே

அகிலின் காரை பார்த்து நிம்மதியடைந்தாள்.

'நல்லவேளை இவர் வந்து விட்டாரா... மயக்கத்தில் என் மீது சாய்ந்து இருப்பவரை என் ஒருவளால் மட்டும் சமாளித்து கீழே இறக்க முடியாது!' என்று எண்ணியபடி வண்டி ஹார்னை அடித்தாள்.

ஒருவரும் வெளியில் வருவதுப் போல் தெரியவில்லை, ப்ச்... லேசாக சலித்தபடி விடாமல் தொடர்ந்து ஹார்னை அழுத்திப் பிடித்தாள் ஹிரணி.

சத்தம் அதிகமாகவும் பின்னால் இருந்த விமலிடம் லேசாக அசைவு தெரிந்தது. வீட்டின் உள்ளிருந்து அகிலும் வேகமாக வெளியே வந்தான்.

கோபமாக வந்தவன் அவளின் வண்டியை பார்த்து இவள் தானா? என்று அசால்டாக கேட்டை திறக்க கையை வைத்தான். அப்பொழுது தான் அவள் தன் பின்னால் யாரோ ஒரு மனிதனை கட்டி அழைத்து வந்திருப்பது அவனுடைய பார்வை வட்டத்தில் விழுந்தது.

திகைப்புடன் அவளிடம் விழிகளை திருப்பியவன், "ஏய்... யார் இது? யாரை இப்படி உன்னோடு கட்டி இழுத்து வந்திருக்கிறாய்?" என்று பதற்றத்துடன் வினவினான்.

"ப்ச்... சும்மா என்னிடம் வளவளவென்று கேள்வி எதுவும் கேட்காதீர்கள். முதலில் ஒழுங்காக கேட்டை திறங்கள்!" என்று அவனுக்கு கட்டளையிட்டாள் அவன் துணைவி.

"ஏய்... லூசு... நீ நிஜமாகவே லாயரா அல்லது ஏதாவது கிரிமினலா? இல்லை... ஒருவேளை மாட்டிக் கொள்ளாமல் தப்பு செய்வது எப்படி என்பதை கற்றுக் கொள்வதற்காகவே பி.எல் படித்தாயா? ஏற்கனவே செய்த போர்ஜரிகள் பற்றாது என்று ஆட்களை வேறு கடத்த ஆரம்பித்து விட்டாயா? இங்கே எதற்குடி கூட்டிட்டு வந்தாய் பின்னால் போலீஸ் எதுவும் துரத்திக் கொண்டு வருகிறதா?" என்று தெருவை எட்டிப் பார்த்தான் அகில்.

"ஓ காட்... தயவுசெய்து கேட்டை திறங்கள். என்னால் முடியவில்லை எனக்கு முதுகு, கைகள் எல்லாம் ரொம்ப

வலிக்கிறது!" என்று புலம்பினாள் ஹிரண்மயி.

அதற்குள் வெளியே சலசலப்பு கேட்டு பவானியும் அங்கு வந்து சேர்ந்தார். இவள் என்ன செய்கிறாள் என ஒன்றும் புரியவில்லையே... புதிதாக எதுவும் பிரச்சினையை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறாளா என்று அலுப்புடன் கேட்டை அகல திறந்தான் நாயகன்.

ஸ்கூட்டியை உள்ளே விட்டு போர்டிகோவில் நிறுத்தியவள், "என்ன சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? இங்கே வந்து இவரை கட்டியிருக்கும் என் துப்பட்டாவை கொஞ்சம் அவிழுங்கள்!" என்று அவனை குதூகலமாக அதிகாரம் செய்தாள் பெண்.

"ஐயோ... யாரைடா இப்படி அழைத்து வந்திருக்கிறாள்?" என்று அதிர்ச்சியுடன் வினவினார் பவானி.

“ம்... யாருக்கு தெரியும்? தேடி அலைந்து கட்டி வைத்தீர்களே நீங்களே விவரம் கேளுங்கள்!" என்று அவரை முறைப்புடன் பார்த்தபடி மனைவியிடம் சென்றான்.

"என்ன? ஆமாம்... போட்டோ பார்த்து நீ ஓகே சொல்லாமல் தான் நான் உனக்கு அப்படியே திருமண ஏற்பாடுகள் செய்தேனா?" என்று பதிலக்கு வாரினார் பவானி.

அவற்றையெல்லாம் காதில் வாங்கியபடி புன்னகையுடன் ஹெல்மெட்டை கழற்றினாள் ஹிரண்மயி.

"உண்மையில் உங்கள் மருமகளுக்கு மறை தான் கழன்று விட்டது என்று நினைக்கிறேன். ஒரு மனிதனை கடத்தி வந்திருக்கிறோம் என்கிற பயம் கொஞ்சமாவது அவளுக்கு இருக்கிறதா பாருங்கள். என்னவோ ஆள்கடத்தல் கூட்டத் தலைவி மாதிரி என்னமாய் கம்பீரமாக சிரிக்கிறாள். எனக்கு தான் இதயம் பந்தயக் குதிரை மாதிரி ஏகத்திற்கும் லப்டப்பென்று எகிறி துடிக்கிறது!" என்று புலம்பியபடி ஹிரணியின்

துப்பட்டாவின் முடிச்சியை அவிழ்த்த அகில் அடுத்த கணம் தன்மேல் முழுவதுமாக சரிய ஆரம்பித்த மனிதனை வேகமாக தாங்கிப் பிடித்தான்.

"ஆமாம்... இதுவரை... அதாவது வீட்டிற்கு பத்திரமாக வரும் வரை இருந்த டென்ஷன் போய் இப்பொழுது தான் மிகவும் நிம்மதியாக அதுவும் சந்தோசமாக இருக்கிறது!" என்று அகிலை பார்த்து நன்றாகவே பல்லைக் காண்பித்தாள் ஹிரணி.

உண்மையில் அவளுக்கு தலைகால் புரியவில்லை தான், இத்தனை மாதங்களாக தேடிக் கொண்டிருந்த விமலை நாம் பத்திரமாக வீடு கொண்டு வந்து சேர்த்து விட்டோம் என்பதிலேயே நிம்மதியடைந்து சிறகாக மாறி வானில் பறக்க ஆரம்பித்து விட்டாள் அவள். அதற்கும் மேல் இங்கிருப்பவர்களுக்கு இந்த விவரம் தெரிய வரும்பொழுது அவர்கள் அடையும் ஆனந்தத்தை எண்ணிப் பார்த்தாலே அவளுக்கு துள்ளிக் குதிக்க வேண்டும் போல் இருந்தது.

"போதும்... பல்லை காண்பிக்காதே, எனக்கு கோபம் வருகிறது. அப்படியே ஓங்கி அறைந்து விடப் போகிறேன். இப்பொழுது இவரை என்ன செய்வது... யார் இவர்?" என்று அவளை அதட்டினான் அகில்.

சாதாரணமாக என்றால் கணவனின் பேச்சிற்கு இந்நேரம் எகிறியிருப்பாள் பெண். இப்பொழுதோ அவனிடம் சிரித்த முகம் மாறாமல் ஒரு நிமிடம் இருங்கள் வருகிறேன் என சென்று அருகில் தோட்டத்தில் இருந்த வாளியில் உள்ள நீரை ஒரு மக்கில் அள்ளி வந்தாள் அவள்.

இருவரும் அவளின் நடவடிக்கைக்கான காரணம் புரியாமல் புதிரோடு பார்த்திருக்க, விமலிடம் வந்தவள் அவன் முகத்தில் நீரை தெளித்து அவனை எழுப்ப ஆரம்பித்தாள்.

"அத்தான்... விமல் அத்தான்... இங்கே பாருங்கள் வீடு வந்து விட்டது!"

தாயும், மகனும் மின்னல் வேகத்தில் பார்வையை பரிமாறி பதற்றத்தோடு எதிரில் இருக்கும் மனிதனை கூர்ந்து உற்று நோக்கினர்.

ஹிரணியின் லேசான உலுக்கலில் மெல்ல எழ ஆரம்பித்த அவனின் முகத்தை வேகமாக நிமிர்த்தினான் அகிலன்.

கண்களை சிரமப்பட்டு திறந்த விமலும் எதிரிலிருந்த தன் தம்பியை பார்த்து முகம் மலர, "டேய்... அகில்!" என்று உற்சாகமாக கூவினான்.

"விமல்!" என்று விழிகளில் கரகரவென்று வழியும் நீரோடு அவன் முகம் தடவியவன் சட்டென்று அவனை தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டு கதற ஆரம்பித்தான்.

பவானியும் கண் முன்னே நடப்பதை நம்ப இயலாமல், தன் மகன் கிடைத்து விட்டானா என்ற உணர்ச்சிப் பெருக்கில் நீர் வடித்தபடி அவர்களை நெருங்கினார்.

நடக்கின்ற பாசப் போராட்டத்தை கண்டு தானும் அழுதபடி அகிலின் தோள் தொட்டு பவானியை கண் ஜாடையில் காண்பித்தாள் ஹிரணி.

அவனும் சுதாரித்து வேகமாக முகம் துடைத்து தன்னுடைய அம்மாவை அருகில் இழுத்தான். அதற்கு மேல் முடியாமல் பவானியும் விமலை கட்டிக் கொண்டு ஓவென்று வெடித்து அழ ஆரம்பித்தார்.

பிறகு, "சரி போதும் வா... முதலில் வீட்டிற்குள் போகலாம்!" என்று தன் புடவை தலைப்பால் பிள்ளைகள் இருவரின் விழிகளையும் துடைத்தவர் விமலை மெல்ல வண்டியை விட்டு கீழிறக்க அகிலுடன் இணைந்து தானும் உதவினார்.

அதுவரை தன் தாயையும், தம்பியையும் நெடுநாளைக்குப் பிறகு பார்த்த மகிழ்ச்சியில் இருந்த விமல் அப்பொழுது தான் தன்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறோம் என்பதை முழுதாக உணர்ந்தான்.

திகைத்தவன், "ம்மா... இல்லைம்மா... ப்ளீஸ் நான் அப்புறம் வருகிறேன். முதலில் நான் போய் ஹர்சுவை பார்க்க வேண்டும். அவள் என்னை காணாமல் ரொம்பவே பயந்து போயிருப்பாள்!" என்று இறங்க மறுத்து அடம்பிடித்தான்.

அவ்வளவு நேரம் இருந்த இறுக்கம் தளர அவன் காதலை எண்ணி மற்ற மூவரும் வாய் விட்டு சிரித்தனர்.

"டேய் லூசுப் பையா... இன்னமும் என் இமேஜை டேமேஜ் பண்ணாதேடா. உன் பெண்டாட்டி இங்கு நம் வீட்டில் தான் இருக்கிறாள்!" என்று புன்னகையுடன் அவன் தலையை தடவினார் பவானி.

இருக்கின்ற தவிப்பில் தன்னுடைய தாயை நம்ப மறுத்தது அவன் நெஞ்சம். விமல் கீழே இறங்காமல் இன்னமும் தன் சிந்தனையில் சந்தேகமாக அமர்ந்திருக்கவும் அவருக்கு வருத்தமாக இருந்தது.

"என்னடா... என்னை நம்ப மாட்டாயா? உன் அம்மா மேல் அவ்வளவு தான் உனக்கு நம்பிக்கையா?" என ஏக்கத்துடன் வினவினார்.

"ஐயோ... அப்படியெல்லாம் இல்லைம்மா. எனக்கு பயமாக இருக்கிறது, நான் ஹர்சுவை உடனே பார்க்க வேண்டும்!"

"ஏய் விமல்... போதும் வாடா, ரொம்ப பண்ணாதே. அண்ணி உள்ளே தான் இருக்கிறார்கள்!" என்று அவனை அடக்கி வீட்டினுள் அழைத்து சென்றான் அகில்.

அவ்வப்பொழுது ஏற்படும் மனச்சோர்வை நீக்க புராணம் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு பவானியின் அறையில் தஞ்சமடைந்து விடுவாள் ஹர்சிதா. அதில் வரும் கதாபாத்திரங்களின் வாழ்வின் சிக்கல்களை படிக்கும் பொழுது தன் வாழ்வும் அதுபோல் ஒருநாள் நேராகி விடும் விமல் நிச்சயம் தன்னை தேடி வந்து விடுவான் என்று தன்னை தேற்றிக் கொள்வாள்.

இன்றும் அதுபோல் ஒன்றியிருந்தவளுக்கு தன் கணவன் வீடு திரும்பி விட்டான் என்கிற விவரம் தெரியவில்லை.

அறைக் கதவை வேகமாக திறந்த பவானி, "ஹர்சும்மா!" என்று அழைக்க, "என்னம்மா?" என வினவியபடி திரும்பிய தன் மனைவியை கண்களில் ஆவலுடன் மேலிருந்து கீழ்வரை காதலுடன் வருடினான் விமல்.

மேடிட்டிருந்த வயிற்றில் விழிகள் தேங்க நெஞ்சம் விம்மி கண்ணீர் ஊற்றெடுத்தது. தன் எதிரில் நின்ற புது மனிதனை அடையாளம் காண முயன்று தோற்றவளாக அகிலிடம் கேள்வியாய் திரும்பினாள் ஹர்சு.

"என்னை ஏன் அப்படி பார்க்கிறீங்க? உங்களை தேடி இங்கு வந்து நிற்பது சாட்சாத் உங்கள் ஆத்துக்காரரே தான்!" என்று கேலியாக விவரம் உரைத்தான் அகில்.

அவன் உருவம் கண்டு அதிர்ந்தவள் வேகமாக அருகில் சென்று முகத்தை கூர்ந்து நோக்கினாள், "ஹசும்மா..." என்ற விமலின் உயிரை உருக்கும் கரகரப்பான அழைப்பில் முகம் சிவந்து இதழ்கள் துடிக்க சிறிய விம்மலுடன் சட்டென்று அவனுடைய நெஞ்சில் தலையை சாய்த்தாள் ஹர்சிதா.

34

தன் மேல் சாய்ந்து ஓசையின்றி தேம்பியழும் மனைவியை சில கணங்களுக்கு தன்னோடு சேர்த்து இறுகப் புதைத்துக் கொண்டான் விமலன்.

"ஷ்... ஏய்... ஹசும்மா, போதும் விடுடா அழாதே. எவ்வளவு நேரமாக தான் அழுவாய்? அது தான் நான் பத்திரமாக வீடு வந்து விட்டேனே!" என்று அவளை விலக்கி முகம் பார்க்க முயன்றவனிடம் மறுப்பாய் தலையசைத்து மீண்டும் கட்டிக் கொண்டாள் ஹர்சிதா.

அதுவரை அவர்களின் அன்பையும், காதலையும் தன்னை மறந்து சிறு நெகிழ்ச்சியுடன் பார்த்திருந்த பவானி, "சரி சரி போதும் ஹர்சிதா, நகரு. வயிற்றில் பிள்ளையை சுமந்துக் கொண்டு எவ்வளவு நேரம் தான் இப்படி உடல் அயர அழுதுக் கொண்டிருப்பாய் நீ. அவனும் ஓய்ந்துப் போய் வந்திருக்கிறான் பார், இரண்டு பேரும் வந்து இப்படி உட்காருங்கள்!" என்று அதட்டி அவர்கள் இருவரையும் அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தார்.

"ம்... இப்பொழுது அமைதியாக பேசிக் கொண்டிருங்கள். என்ன செய்ய வேண்டும்? பேச மட்டும் தான் செய்ய வேண்டும். புரிகிறதா... இதற்கு மேல் எந்த அழுகையும் இருக்க கூடாது மீறி அழுதாய் என்றால் உதை விழும். நான் போய் குடிக்க ஏதாவது எடுத்து வருகிறேன்!" என்று அவர் வெளியேற, தன் அன்னை ஹர்சுவிடம் இந்தளவுக்கு உரிமை பாராட்டி அக்கறையுடன் அதட்டுவது அவன் நெஞ்சில் நிம்மதி பூக்க செய்ய ஆவலுடன் தன் துணைவியின் மதி முகம் நோக்கினான் விமல்.

கலைந்திருந்த கூந்தலை மெல்ல ஒதுக்கி கன்னத்தில் வழிந்திருந்த அவள் விழிநீரை மென்மையாக துடைத்தவன் அவளுடைய முகத்தை தன் இரு கரங்களிலும் ஆசையுடன் ஏந்தி காதலுடன் அவளின் விழிகளை ஊடுருவினான்.

"எத்தனை மாதம்?" என்றான் ஆர்வமாக ரகசிய குரலில்.

அந்நிலையிலும் ஹர்சுவின் முகம் அழகாக செம்மையுற, "ஒன்பது மாதங்கள்!" என்றாள் வெட்கத்துடன் அவன் விழி காண மறுத்து.

அவர்களையே ரசனையுடன் கவனித்திருந்த அகிலன் ஹர்சுவின் வெட்கத்தில் சட்டென்று தன்னை சுதாரித்து இனி அவர்களுக்கு தனிமை தர வேண்டும் என்றெண்ணி திரும்ப, எதிரே கனவில் மிதக்கின்ற விழிகளோடு இதழில் மெல்லிய புன்னகை உறைந்திருக்க கண்சிமிட்டவும் மறந்து அவர்களின் நேசத்தில் ஆவலுடன் லயித்திருந்த தன் மனைவியை இவனும் மெய்மறந்து ஒருகணம் ஆசையோடு நோக்கிவிட்டு பின்னர் ஏதோ நினைவு வந்தவனாக முகம் சிவந்தவன் வேகமாக ஹிரணியின் அருகில் சென்று அவள் கரம்பற்றி இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

தன் ரசனையை கெடுத்து வெளியே இழுத்து வந்தவனின் மீது சினம் மூள, "ப்ச்... என்ன?" என்று கையை உதறி முகம் சுளித்தாள் ஹிரணி.

"என்னவா? உன்னை நினைத்தால் எனக்கு அவ்வளவு கோபம் வருகிறதுடி. விமலை எப்படி கண்டுப்பிடித்தாய் நீ? எங்கே இருந்து அவனை அழைத்து வருகிறாய்? ஒரு வார்த்தை என்னிடம் சொல்ல வேண்டுமென்று உனக்கு தோன்றவில்லை, நீ நடந்து கொள்வதை எல்லாம் வைத்துப் பார்த்தால் அவன் இருக்குமிடம் உனக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் போலிருக்கிறது. பிறகு எதற்காக என்னிடம் சொல்லாமல் மறைத்து இந்த வேலை செய்தாய்?" என்றான் அடக்கப்பட்ட சினத்துடன்.

"ஓ காட்... நீங்கள் வேறு தயவுசெய்து ஏதாவது தப்பார்த்தம் கற்பித்துக் கொள்ளாதீர்கள். விமல் அத்தான் அங்கே இருக்கிறாரோ என்னவோ என்று ஒரு சந்தேகம் தான் எனக்கு தோன்றியது. உறுதியில்லாததை சொல்லி உங்கள் அனைவரையும் குழப்ப வேண்டாம் என்று தான் நீங்கள் தேடுவது ஒருபுறம் அப்படியே தொடரட்டும் இதை நான் முயற்சி செய்யலாம் என்று செய்தேன்!" என நடந்ததை ஒன்று விடாமல் அவனிடம் கூறி முடித்தாள்.

அகில் யோசனையுடன் நிற்க, "ஜெய் அண்ணா இன்று மதியம் தான் விமல் அத்தான் இருக்குமிடத்தை எனக்கு மெஸேஜ் செய்தார். அதற்குமேல் என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை, சரி ஒருமுறை எதற்கும் அந்த இடத்தை சென்று சுற்றிப் பார்ப்போம் என்று தான் அங்கே போனேன். பிறகு தான் பார்த்தால் சரியாக அதேநேரம் இவரும் அங்கிருந்து தப்பித்து வந்தார். முதலில் எனக்கும் ஒன்றும் புரியவில்லை, பின்பு இவர் அவசரப்படுத்தவும் தான் நிலைமையின் விபரீதம் புரிந்து நான் வேகமாக இங்கே நம் வீட்டிற்கு அழைத்து வந்தேன்!" என்று மேலும் தன் நிலைமையை விளக்கினாள் ஹிரணி.

அதுவரை அமைதியாக கேட்டிருந்தவன், "ஏய்... இந்த விஷயத்தை அவரிடம் தெரிவித்து விட்டாயா? அதாவது விமலை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டேன் என்று ஜெய்யிடம் எதுவும் விவரம் கூறினாயா இல்லையா?" என்றான் வேகமாக.

"அச்சோ... இல்லை, எனக்கு இருந்த டென்ஷனில் அதை மறந்து விட்டேன். நல்லவேளை... ஞாபகப்படுத்தினீர்கள்!" என்று தலையை தட்டிக்கொண்டு அவசரமாக அவனுக்கு கால் செய்தாள் ஹிரணி.

"உன்னையெல்லாம்... ஏற்கனவே அங்கிருந்து விமல் தப்பி வந்த கடுப்பில் இருக்கின்ற அடியாட்கள் மீண்டும் அவனை தேடி யாராவது வந்தால் இருக்கும் ஆத்திரத்தில் வேறு ஏதாவது மோசமான சம்பவத்தை நிகழ்த்தி விடுவார்கள்!" என்றவன் முறைக்கவும் சற்றே அசடு வழிந்தவள் சாரி... என்று அவனிடம் தலைசாய்த்து முணுமுணுக்க, இவன் உதட்டில் மெல்லிய முறுவல் ஒன்று பூத்தது.

"ஹலோ... ஆங்... அண்ணா, நான் ஹிரணி!"

"சொல்லும்மா... என்ன இத்தனை நாள் இருந்த பொறுமை எல்லாம் இப்பொழுது காற்றில் பறக்கிறதா? நான் தான் அவரை அங்கிருந்து வெளியே பத்திரமாக அழைத்து

வந்துவிட்டு உனக்கு கால் செய்கிறேன் என சொன்னேனே!" என்றான் எதிர்முனையில் இருந்த ஜெய்.

"ஐயோ... அதில்லை அண்ணா, நான் விமல் அத்தானை அங்கிருந்து வீட்டிற்கு அழைத்து வந்து விட்டேன்!"

ஒன்றும் புரிந்துக்கொள்ள இயலாமல் சற்று நேரம் கழித்தே, "எது... என்ன?" என்றான் அவன் திகைப்புடன்.

"அது வந்துண்ணா..." என்று அவனிடம் நடந்ததை விரிவாக விவரித்தவள், "சரி இந்த விவரம் தெரியாமல் நீங்கள் இருவரும் அங்கே சென்று மாட்டிக்கொள்ளப் போகிறீர்கள் என்று தான் போன் செய்தேன்!" என்றாள்.

"நல்லவேளை செய்தாயம்மா... நாங்கள் கொஞ்சம் ஏமாந்து இருந்தாலும் அவனுங்க கோபத்திற்கு முழுதாக இரையாகி இருப்போம்!" என்று போலியாக ஆசுவாசப்பட்டான் ஜெய்.

"அதை நீங்கள் என் கணவரிடம் தான் சொல்ல வேண்டும், இருந்த டென்சனில் அதை மறந்துவிட்ட எனக்கு அவர் தான் சரியான நேரத்தில் ஞாபகப்படுத்தினார்!" என்று எதிரில் இருந்தவனை மெல்லிய கூச்சத்துடன் நோக்கினாள்.

"அவருக்கு ஒரு பெரிய தாங்க்ஸ் சொன்னேன் என்று சொல். அப்புறம்... விமல் எப்படி இருக்கிறார்? அவருடைய ஹெல்த் எதுவும் ரொம்ப பாதிக்கப்படவில்லை இல்லை..."

"காட்... இல்லைண்ணா, அவரால் பின்னால் தன் கையை வளைத்து வண்டியை கூட சரியாக பிடிக்க முடியவில்லை. நான் தான் என்னுடைய ஷாலில் கட்டி அழைத்து வந்தேன், ஏழு மாதங்களாக அவருடைய இரண்டு கரங்களிலும் அந்த நாய்கள் நிறைய ஊசி போட்டிருப்பார்கள் போலிருக்கிறது. அவர் கரங்களில் அப்பொழுது லேசான நடுக்கத்தை கூட உணர முடிந்தது!" என்றாள் அவள் வருத்தத்துடன்.

"சரி ஒன்று செய், இம்மிடியட்டாக அவரை அழைத்துக் கொண்டு நான் சொல்லுகின்ற மருத்துவமனைக்கு வா. எனக்கு தெரிந்த மருத்துவர் ஒருவர் அங்கே இருக்கிறார், விரைவில் அவர் உடல்நிலை சீராகும்படி நன்றாக சிகிச்சை அளிப்பார். நானும் அதற்குள் கிளம்பி நேராக அங்கு வந்து விடுகிறேன்!" என்று ஜெய் ஆலோசனை கூறவும் சரியென்று சம்மதித்து இணைப்பை துண்டித்தாள் ஹிரணி.

விமலின் நிலையை எண்ணி உள்ளம் கொந்தளித்தவனாக அகில் முகம் இறுகி நின்றிருக்க, "சரி வாங்க முதலில் அத்தானை ஹாஸ்பிடல் அழைத்து செல்ல வேண்டும்!" என்றவளிடம் மெல்ல நிமிர்ந்தவன் விழிகள் கலங்க அவள் கரம்பற்றி அழுத்தி நா தழுதழுக்க, தாங்க்ஸ் என்றான்.

அவனை கண்டு தான் உருகினாலும் சூழ்நிலையை மேலும் உணர்ச்சிமயமாக்க வேண்டாம் என நினைத்து, "அதை விடுங்கள்... எல்லாம் சரியாகி விடும்!" என்று இயல்பாக அவன் கரம்பிடித்து உள்ளே அழைத்து சென்றாள்.

அங்கே பவானி தந்த தேநீரை அருந்திக் கொண்டிருந்த விமலன் எதிரே வந்த அகிலை பார்த்து முறுவலிக்கும் பொழுது தான் அருகில் இருந்த ஹிரணியை கவனித்தான்.

"ஹேய்... நீ இங்கே தான் இருக்கிறாயா? உன்னை மறந்தே போய்விட்டேன் பார்!" என்று தன் மனைவியிடம் வேகமாக திரும்பி, "உனக்கு தெரியுமா ஹசும்மா... இன்று இவள் அங்கே வரவில்லை என்றால் என்னால் தப்பித்திருக்க முடியுமோ என்னவோ... ஏற்கனவே இருமுறை முயன்று முடியாமல் போய் அவர்கள் எனக்கு போடுகின்ற மருந்தின் டோஸேஜை வேறு அதிகரித்து விட்டார்கள். நல்லவேளை... உனக்கு தெரிந்தப்பெண் என்பதால் பார்த்து பத்திரமாக வீட்டிற்கு அழைத்து வந்து விட்டாள், மிகவும் நல்லப்பெண்!" என்று அவளை கனிவுடன் நோக்கி பாராட்டினான்.

அவனுடைய நிலையை எண்ணி சில நொடிகள் வேதனை அடைந்தாலும் பின் மெல்ல எழுந்து ஹிரணியிடம் சென்ற ஹர்சிதா, வார்த்தைகளின்றி மௌனமாக அவளை கட்டி அணைத்து விம்மும் நெஞ்சத்துடன் கண்களை மூடினாள். பதிலாக அவளை தானும் அணைத்து அவளின் முதுகை வருடி ஆறுதல்படுத்தினாள் ஹிரண்மயி.

"லீவ் இட் அக்கா... எல்லாம் சரியாகி விட்டது!" என்று புன்னகையுடன் அவள் கன்னம் தட்டினாள்.

அவள் கரத்தை எடுத்து இதழை ஒற்றியவள், "இறுதியில் சொன்ன மாதிரியே உன் அத்தானை என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டாய்!" என்றாள் கண்ணீர் பொங்க உணர்ச்சியோடு.

"சரியாக சொன்னாய், இவளுக்கு வெறும் வார்த்தைகளால் நாம் நன்றியுரைத்து விட முடியாது!" என்று பவானியும் அருகில் வந்து ஹிரணியின் தலையை வருடி பதிலுக்கு தன் உணர்வை வெளிப்படுத்த அவளோ சிணுங்கினாள்.

"ப்ச்... என்ன இது? எல்லோரும் மாற்றி மாற்றி இப்படியே பேசுகிறீர்கள், எனக்கு என்னவோ ஒரு மாதிரி இருக்கிறது!" என்று முனகினாள்.

"அதுதானே... இது எல்லாம் அவளுடைய கடமை. அதனால் யாரும் ரொம்பவும் பாராட்டிப் பேசி அவளை அந்நியப்படுத்த வேண்டாம்!" என்று இடையில் புகுந்து தன்னுரிமையை அங்கே நிலைநாட்டினான் அகில்.

ஹர்சுவிற்கு தன் கொழுந்தன் நிலையை கண்டு புன்னகை அரும்பியது, ஹிரணியை தோளோடு அணைத்தவண்ணம் கணவனிடம் திரும்பினாள்.

தன் வீட்டில் உள்ள அனைவரும் ஹிரணியிடம் எடுத்துக் கொள்ளும் உரிமை விமலுக்கு குழப்பத்தை தர ஒன்றும் புரியாமல் அவர்களை பார்த்திருந்தான் அவன்.

"நீங்கள் சொன்னீர்களே எனக்கு தெரிந்தப் பெண் என்று, உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இவள் எனக்கு

தெரிந்தப் பெண் என்ற காலம் எல்லாம் மலையேறிவிட்டது. இப்பொழுது என்னை விட உங்கள் தம்பிக்கு தான் இவள் மேல் உரிமை அதிகம். ஏனெனில் அவருடைய தர்மபத்தினி தான் இவள், பெயர் ஹிரண்மயி!" என்று பெருமையாக தன் உடன்பிறவா சகோதரியை தன்னுடைய கணவனுக்கு அறிமுகப்படுத்தினாள் ஹர்சிதா.

ஏனோ ஹிரணியின் இதயத்தை சுற்றி மெல்லிய வெட்கம் படர, அவள் அகிலின் புறம் மறந்தும் தன் பார்வையை திருப்பாமல் விமலிடம் சங்கடத்துடன் முறுவலித்தாள். வியப்புடன் தன் தம்பியிடம் பார்வையை திருப்பியவனுக்கு அவன் காட்டிய முப்பத்தியிரண்டு பற்களையும் பார்த்து சிரிப்பு தான் பொங்கியது.

"இங்கே வாடா!" என்று கையை நீட்டி பாசமாக அருகில் அழைத்த அண்ணனிடம் ஆர்வமாக சென்ற தம்பியின் காதை பற்றி நன்றாக முறுக்கினான் விமல்.

"ஏன்டா... டிட் ஃபார் டேட்டா... என்னுடைய வயதென்ன உன் வயதென்ன? நான் கிடைக்கும் வரை கூட பொறுமையாக காத்திருக்க முடியாமல் உன் எண்ணப்படி பெண்ணை பார்த்து அம்மாவையும் சரிகட்டி அவ்வளவு அவசரமாக திருமணம் முடித்துக் கொண்டாயா?" என்று அதட்டினான்.

ஆ... என்று முதலில் மெலிதாக வலியில் கத்திய அகில் அடுத்து அண்ணனின் பேச்சைக் கேட்டு, "அவ்வ்வா..." என்று தன் இரு கைகளாலும் வாயை மூடினான்.

"எது? நான் அவசரப்பட்டு திருமணம் செய்து கொண்டேனா... எங்கே என்னுடைய பரம எதிரிகள்?" என்று கொந்தளித்தபடி தன் அம்மாவிடமும், மனைவியிடமும் திரும்பினான்.

இருவரும் எட்டிக்காய் கசப்பை விழுங்கிய உணர்வோடு திருதிருவென்று விழித்தபடி கைகளை பிசைந்துக் கொண்டு நின்றிருக்க, வேகமாக அவர்களிடம் சென்றவன் இரண்டு பேரையும் பிடித்து விமலின் அருகில்

இழுத்து வந்தான். நடப்பவற்றை இளம் முறுவலுடன் ரசனையுடன் பார்த்தபடி நின்றிருந்தாள் ஹர்சிதா.

"ம்... உன் கைகளால் இவர்கள் இருவரின் காதையும் நீ நன்றாக பிடித்து திருகு. நீ சொன்ன குற்றச்சாட்டுக்கும் எனக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை. இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து தான் தனித்தனியாக திட்டம் போட்டு உன்னை பழிவாங்க என்று என்னை இந்த அவசர திருமணத்தில் இப்படி மாட்டி விட்டார்கள்!" என்று கூறியபடி அவர்கள் இருவரையும் முதுகொடிய குனிய வைத்தான்.

இருவரும் விமலின் முன்பு பரிதாபகரமாக விழிக்க பீறிட்ட சிரிப்புடன், "ஏய்... என்னடா இது?" என்றான் விழிகள் மின்ன.

"ம்... சொல்கிறேன் கேள். நம்மை பெற்றது என்ன செய்தது தெரியுமா? உன் அண்ணன் தான் என் பேச்சை கேட்காமல் தன்னிஷ்டத்திற்கு திருமணம் செய்து கொண்டான், நீயாவது நான் சொல்லும் பெண்ணை தான் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் அதுவும் இப்பொழுதே உடனடியாக என பிளாக்மெயில் செய்து இவளை கைகாட்டி விட்டது. நான் தாலி கட்டியது இருக்கிறது பாரு... அது அதற்கும் ஒருபடி மேல். ஆயிரம் பிராடுத்தனம் பண்ணி போலி அம்மா, அப்பா, வீடு என ஏதேதோ ஏற்பாடு செய்து, உன் பெண்டாட்டிக்கு இந்த வீட்டில் கண்டிப்பாக நியாயம் வாங்கி தருவேன் என்று தனக்கு தானே சூளுரைத்து நம் வீட்டைப் பற்றி இல்லாத கற்பனையெல்லாம் செய்து பழி தீர்க்கவென்று இந்த அம்மாவை ஏமாற்றி என்னை கல்யாணம் செய்துக் கொண்டது. இப்பொழுது சொல்... யாரை என்ன செய்யப் போகிறாய்?" என்று நியாயம் கேட்டான் அகில்.

தன்னிடம் என்ன மாதிரி பாவனையை வெளிப்படுத்துவது என்று தெரியாமல் தவித்தபடி நிற்கும் தன் அம்மாவையும், தம்பியின் மனைவியையும் கண்டு கண்களில் நீர் வழிய வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான் விமல்.

35

விமலன் விழிகள் கலங்க விழுந்து விழுந்து சிரித்ததில் பவானியும், ஹிரணியும் குற்றவுணர்விலிருந்து வெளிப்பட்டு சிறிதே நிம்மதியானார்கள்.

ஒரே நேரத்தில் அகிலின் கைகளை அலட்சியமாக விலக்கி விட்டு நேராக நிமிர்ந்து நின்றவர்கள் அவனை ஏளனமாகப் பார்த்து உதட்டை வளைத்தனர்.

"ம்... நீங்கள் கொளுத்திப் போட்ட பட்டாசு இப்படி புஸ்ஸாகி விட்டதே. அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கணவனிடம் சவாலாக கேட்டாள் ஹிரண்மயி.

அவளை தன்னுடைய பார்வையாலே உறுத்து விழித்தவன் திரும்பி தன் அண்ணனை தீப்பார்வை பார்த்தான்.

"இந்த அசிங்கமெல்லாம் எனக்கு தேவையாடா... எல்லாம் உன்னால் தான்!" என்று அவனை குற்றம் சாட்டினான்.

"சரி விடுடா, எல்லாம் நம் நன்மைக்கே... ஒரே நேரத்தில் உனக்கு நல்ல மனைவியும் கிடைத்து விட்டாள். அம்மாவும் நிதர்சனம் உணர்ந்து இரண்டு மருமகள்களையும் மனமாற ஏற்றுக் கொண்டார்கள்!" என்று புன்னகைத்தான்.

"அது என்னவோ உண்மைதான்டா... நானாக தேடியலைந்து கண்டுப்பிடித்து இருந்தாலும் இப்படி நம் குடும்பத்தை தன்னுயிராக நேசிக்கும் நல்ல மருமகள்களை என்னால் கொண்டு வந்திருக்க முடியுமோ என்னவோ... இப்பொழுது இவர்களால் தான் இந்த வீட்டில் அனைத்தும் சரியாகி இருக்கிறது. பெற்றோரின் அரவணைப்பில் வளராத பிள்ளைகளிடம் இத்தனை பொறுப்பும், பொறுமையும், பண்பும், அமைதியும் இருக்கும் என்று நான் கனவிலும் எண்ணிப் பார்த்ததில்லை. இனி எதைப்பற்றியும், யாரைப் பற்றியும்

நான் கவலைப்பட போவதில்லைடா, நம் வீட்டு சந்தோசம் குடும்ப அங்கத்தினர்களின் வார்த்தைகளுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில் தான் உள்ளது என்பது எனக்கு நன்றாக புரிந்து விட்டது. ஊரார் பேச்சை கேட்டு எடுத்த நடவடிக்கை நம்மை இன்னலில் தான் கொண்டு வந்து சேர்த்து விட்டது!" என்றார் பவானி வருத்தத்துடன்.

"அப்படி நீங்கள் எல்லாவற்றையும் கூறிவிட முடியாதும்மா. சிறியவர்கள் எடுக்கும் முடிவிலும் தவறுகள் இருக்கலாம். இங்கே நம் வீட்டிற்கு வந்த இரு பெண்களுமே நல்லவர்கள் என்பதால் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் எல்லாம் சுமூகமாகி விட்டது. மாறாக சூழ்நிலைகள் காரணமாக தீய வழியில் செல்பவர்களாக இருந்திருந்தால் குடும்பத்தின் அழிவுக்கே அது வழிவகுத்து விடும். ஒருவருக்கொருவர் எதையுமே மனம் விட்டு தெளிவாகப் பேசி தீர விசாரித்து முடிவெடுப்பது தான் நல்லது!"

"விமல்... போதும் உன் பிரசங்கத்தை கொஞ்சம் நிறுத்து. நான் அம்மாவிடம் ஒரு சந்தேகம் கேட்க வேண்டும்!"

"என்னடா?"

"இல்லை... நீங்கள் நிறைய பேசும் பொழுது இடையில் மருமகள்களிடம் பொறுப்பு, அமைதி, பொறுமை இதெல்லாம் இருப்பதாக சொன்னீர்களே அது அண்ணியிடம் இருக்கிறது எல்லாம் சரி, ஆனால்... உங்கள் சின்ன மருமகளிடம் அது இருக்கிறதா என்ன? எனக்கு அப்படி தெரியவில்லையே..." என்று தீவிரமாக யோசிக்கும் பாவனையுடன் மனைவியை வம்புக்கு இழுத்தான் அகில்.

பவானியின் முகத்தில் சிறு சிரிப்பு குமிழியிட, ஹிரணியின் முகத்திலோ அப்பட்டமாய் எரிச்சல் வெளிப்பட்டது.

உர்ரென்று நின்றிருந்த மருமகளிடம் ஒரு பார்வையை செலுத்திவிட்டு, "ஹிரணியிடம் அது இல்லை தான்...

நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அப்படி இருப்பவளால் தான் உன்னை மாதிரியான ஆளை கட்டிமேய்க்க முடியும். ஸோ... அதில் உனக்கு எந்தவொரு சந்தேகமும் வேண்டாம், என் மகனுக்கு அவள் இருநூறு சதவீதம் பொருத்தமானவள் தான்!" என்று பவானி கேலியுடன் முடிக்க, ஹிரணியின் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

"ஹேய் அகில்... சரி பல்பு... ஏன்டா இப்படி உன்னை நீயே டேமேஜ் செய்துக் கொள்கிறாய்?" என்று தன் தம்பியிடம் வம்பில் இறங்கினான் விமல்.

மற்றவரின் கவனம் அதில் குவிய மலர்ந்த ஹிரணியின் முகம் அடுத்த நிமிடம் இருண்டது.

'நான் எங்கே அவனுக்கு பொருத்தமானவள்... தனக்கு பொருத்தமானவளை தான் அவன் தேடிக் கொண்டானே?' என்று உள்ளம் வாடினாள்.

தனக்கு தானே தன்னை தேற்ற முயன்று தோற்றவளுக்கு அங்கிருந்த சூழ்நிலை சட்டென்று எரிச்சலை கிளப்பியது.

"சரி இதுவரை பேசியதெல்லாம் போதும், இதற்கு மேலும் நேரத்தை ரொம்ப விரயமாக்க வேண்டாம். முதலில் விமல் அத்தானை அழைத்துக் கொண்டு அண்ணா குறிப்பிட்ட மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்!" என்று அவர்களை விரட்டினாள் ஹிரண்மயி.

"ஆமாம்... ஆமாம்!" என்று தீவிரமான அகிலனும் விமலின் கரங்களை முன்னால் இழுத்து தோள்வரை ஆராய்ந்தான்.

தோளுக்கு கீழுள்ள அவன் கரங்கள் இரண்டிலும் அத்தனை மாதங்களாக அவனுக்கு போட்டப்பட்ட போதை ஊசிகளின் எண்ணிக்கையுடைய வடுக்களை பறைசாற்றியது.

எத்தனை துன்பங்களை அவன் கடந்து வந்திருக்கிறான் என அங்கிருந்தவர்களின் நெஞ்சம் கலங்கியது. ஹர்சு பெருகி வழியும் நீரோடு அவனுடைய தோளை அழுத்த

நிமிர்ந்த அவள் கணவனோ மறுப்பாக தலையசைத்து அவளை நோக்கி ஆறுதலாக புன்னகைத்தான்.

காரில் செல்லும் நேரம், "அதுசரி.. மருத்துவமனையை பற்றி சொல்லும் பொழுது யாரோ அண்ணா என்றாயே... எனக்கு தெரியாமல் யாரவர், அதுவும் நீ அண்ணன் என குறிப்பிடும் அளவுக்கு?" என்று குழப்பத்துடன் வினவினாள் ஹர்சிதா.

"அதற்கு பதில் நான் சொல்கிறேன் அண்ணி. விமலை கண்டுப்பிடிக்க என்று இவள் தன்னுடன் கூட்டு சேர்த்துக் கொண்ட ஜேம்ஸ்பான்ட் தான் அவர். அவரை பற்றி மற்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது!" என்று தோள்களை குலுக்கியபடி காரை ஓட்டினான் அகில்.

"அதை நான் சொல்கிறேன் அக்கா!" என்று விழிகள் மின்ன ஆர்வமாக இருக்கையில் சற்று முன்னே நகர்ந்து அமர்ந்த மனைவியை ஆழமாய் ஒரு பார்வை பார்த்தான் அவன்.

'இவள் மகிழ்ந்து குதிக்கும்... ச்சீய்... மதிக்கும் அளவுக்கு ஒரு ஆண்பிள்ளையா?' என்று புருவம் சுளித்தவன், ஜெய்யை பற்றிய முழுவிவரம் தெரியவும் தானும் அவனைக் காண உடனே ஆவல் கொண்டான்.

மருத்துவமனையின் வாயிலில் இவர்களுக்கு முன்னரே வந்து காத்திருந்த ஜெய்சங்கர், அவர்களிடம் வரவேற்பாக புன்னகைத்தபடி வேகமாக அருகில் வந்தான்.

ஹிரணி தன் குடும்பத்தினரை அவனிடம் அறிமுகப்படுத்த பவானியிடமும், ஹர்சுவிடமும் தன் இருகரம் குவித்தவன், விமலிடமும், அகிலிடமும் நட்பாய் கரம்பற்றி குலுக்கினான்.

"உங்களை பார்த்ததில் ரொம்ப நிம்மதியாக இருக்கிறது. எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பி வந்திருக்கிறீர்கள். வாங்க... அப்படியே பேசிக் கொண்டே உள்ளே போகலாம்!" என்று அவர்களை மருத்துவரிடம் அழைத்து சென்றான்.

"உண்மையில்... உங்களுக்கு தான் நான் ரொம்பவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். இன்று உங்களுடைய உதவி மட்டும் இல்லையென்றால் நான் அங்கிருந்து தப்பிக்க முடியாமல் கூட போயிருக்கலாம்!" என்று விமல் கூறவும் மற்றவரும் அதை ஆமோதித்தனர்.

"நோ... நோ... இது முழுக்க முழுக்க உங்கள் சிஸ்டர் இன் லாவின் முயற்சியில் தான் நல்லவிதமாக நடந்து முடிந்தது. அவள் தான் எல்லா முயற்சியையும் எடுத்தாள், இறுதியாக இருப்பிடத்தை மட்டும் தான் நான் கண்டுபிடித்தேன்!"

அகில் பெருமையுடன் திரும்பி தன்னவளை நோக்க அவளின் விழிகளோ மற்றவர்களிடம் நிலைத்து இருந்தது.

விமலிடம் சற்றுநேரம் தனிமையில் பேசிய மருத்துவர் பின் அவனை பரிசோதித்து விட்டு, "ஜெய்... இவருடைய ஹெல்த் கண்டிஷனை வைத்துப் பார்க்கும் பொழுது ஒன்றும் பயப்படுகிற அளவுக்கு பெரிய ஹார்ம்ஃபுல் டிஸ்ஸார்டர்ஸ் எதுவும் இல்லை. ஜஸ்ட்... அவர்களுடைய பிரச்சினைக்கு விடைக் காண இவருக்கு போதை மருந்தை செலுத்தி மிரட்டி பார்த்திருக்கின்றனர் அவ்வளவு தான். ஸ்ட்ராங்கான ஹெல்த்ஃபுல் பெர்சன் என்பதால் பெரிய பாதிப்பு எதுவும் நேராமல் கொஞ்சம் சமாளித்துக் கொண்டிருந்திருக்கிறார். இதுப்போன்ற சூழ்நிலைகளில் மாட்டுகிற ஒரு சிலர் தங்களுக்கே தெரியாமல் அந்த போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி விடுவர். அந்த வகையில் இவர் எப்படியோ மாட்டாமல் தப்பி விட்டார் பரவாயில்லை. சரி... முதலில் நாம் இவருக்கு சில ப்ளட் டெஸ்ட்களை எடுத்துப் பார்த்தாலே என்னவிதமான மருந்துகளை இவருக்குள் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை சரியாக கண்டுப்பிடித்து விடலாம். பிறகு அதன் தீவிரத்தை பொறுத்து உறுப்புகள் எதுவும் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அதற்குரிய ஸ்கேன் மூலம் பார்த்து விடலாம்!" என்று விளக்கியவர் விமலுக்கு எடுக்க வேண்டிய ரத்தப் பரிசோதனை குறித்து எழுதிக் கொடுத்தார்.

விமலுக்கு ஒருபுறம் சோதனைகள் நடந்துக் கொண்டிருக்க அறைக்கு வெளியே அகில், ஜெய், ஹிரணி மூவரும் இனி வாசுதேவனை எப்படி விமலின் வழியில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்வது என்று தீவிரமாக தங்களுக்குள் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தனர்.

பவானியும், ஹர்சுவும் அங்கே இருந்த நாற்காலிகளில் அமைதியாக அமர்ந்து விமலுக்கு நடக்கின்ற சிகிச்சைகள் குறித்து கவலையுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது தான் ஹர்சுவை கவனித்த ஜெய், "ஹேய்... மணி ஒன்பதாகப் போகிறதே ஹிரணி, நீங்கள் அனைவரும் சாப்பிட்டீர்களா?" என்று கேள்வி எழுப்பினான்.

"இன்னும் இல்லை... இதோ இனிமேல் தான்!" என்று அவள் பதிலுரைக்க, "ப்ச்... என்னம்மா? சிஸ்டர் பிரெக்னென்டாக வேறு இருக்கிறார்கள் அவர்களை எதற்கு இங்கே அழைத்து கொண்டு வந்து அலைகலிக்கிறீர்கள்... வீட்டிலேயே விட்டு விட்டு வந்திருக்கலாமே!" என்றான்.

"அது முடியாத காரியமப்பா, இத்தனை மாதங்களாக விமலை காணாமல் அவர்கள் எப்படி பரிதவித்தார்கள் என்று உடன் இருந்த பார்த்த எங்களுக்கு தான் தெரியும். நாங்கள் எதுவும் சொல்லவும் இல்லை, அப்படியே சொல்லி இருந்தாலும் அவர்கள் கேட்டிருக்கவும் மாட்டார்கள். என் அண்ணன் அதற்கு மேல் சீன் போடுவான்!" என்று அகில் சிரிக்க, ஹிரணியும் மாலையில் தன் வீட்டு வாசலில் நடந்த கூத்தை ஜெய்யிடம் தெரிவித்தாள்.

அதைக்கேட்டு ஓசையின்றி நகைத்தவனோ, "ஹஹா... ரியலி இன்ட்ரெஸ்டிங்... இந்தளவுக்கு தீவிரமாக நம்மால் எல்லாம் இருக்க முடியாதுப்பா!" என்று மணிகர்ணிகாவின் நினைவில் சிரிப்புடன் கூறினான்.

"ஹை... அப்பொழுது அடிச்சுக்கோங்க, சத்தியமாக அவனை மாதிரி என்னாலும் இந்தளவிற்கு உருக முடியாதுப்பா!" என்று அவனிடம் ஹாய்ஃபை கொடுத்தான் அகில்.

இருவரையும் ஒருசேர முறைத்த ஹிரணி, "விமல் அத்தான் அளவுக்கெல்லாம் உங்களுக்கு பொறுப்பு, பொறுமை, உருக்கம் கிடையாது என்பது தான் ஊருக்கே தெரியுமே!" என்று இகழ்ந்துரைத்தாள்.

"அதற்கு நீயும் அண்ணி மாதிரி இருக்க வேண்டுமம்மா!" என்றான் அவனும் பதிலுக்கு.

"நான்..." என்று ஹிரணி வாயை திறந்த நேரம் வேகமாக இடையில் புகுந்த ஜெய், "ஏன்பா என் தங்கையை பற்றி அப்படி கூறுகிறாய்? அவளுக்கு பொறுமை கிடையாதா என்ன?" என்று அகிலிடம் தீவிரமாக வினவினான்.

'போச்சு... இப்பொழுது ஈயென்று பல்லைக் காட்டிக்கொண்டு நம் கதையை அவிழ்த்து விடப் போகிறான். எத்தனை தடவை சொன்னாலும் எப்படி தான் அச்சுப்பிசகாமல் வார்த்தை மாறாமல் மறக்காமல் முதல் தடவை மாதிரியே அப்படியே சொல்கிறானோ தெரியவில்லை!' என்று தன் தலையை இடது கையால் தாங்கிக் கொண்டாள்.

"ஹஹா... அங்கே பார்... உன் தங்கைக்கு அதற்குள் ஃப்யூஸ் போய்விட்டது!" என்று பரிகாசம் செய்து பதிலாக அவளின் முறைப்பை பரிசாகப் பெற்றுக்கொண்டான் அகில்.

பேச்சுவாக்கில் நெருங்கிய இருவரும் சமவயது காரணமாக தங்களுக்கு இடையே இருந்த மரியாதையை தொலைத்து ஒருமைக்கு தாவியிருந்தனர்.

"சரி நாம் நம்முடைய கதைக்கு வருவோம், இவளைப் பற்றிப் பேச நிறைய இருக்கிறது. ஆனால் இப்பொழுது நமக்கு அதற்கு நேரமில்லை என்பதால் அதை இன்னொரு நாள் பேசுவோம். தற்சமயம் உனக்கு தெரிந்த

கதையையே நான் மேற்கோள் காட்டுகிறேன்!" என்று அவன் நகைக்க ஹிரணியும், ஜெய்யும் அவனை புருவம் சுருங்க பார்த்தனர்.

"சரி... விமல் இருக்கும் இடம் தெரிந்தவுடன் அவளுக்கு என்ன சொல்லி நீ மெஸேஜ் செய்தாய்?" என்று ஹிரணியை விழிகளாலேயே வம்புக்கிழுத்தான் அகில்.

ஒ காட்... என்று நாக்கை கடித்து தான் மறுத்து ஒன்றும் சொல்வதற்கு இல்லாமல் வேகமாக விழிகளை மூடி அவனுக்கு மறுபுறம் திரும்பிக் கொண்டாள் ஹிரணி.

"ஹஹா... ஓகே ஓகே, ரைட் ரைட் எனக்கு புரிந்துவிட்டது!" என்று நகைத்தான் ஜெய்.

"நீதான் நம்ம இனமாயிற்றே உனக்கு புரியாமல் போகுமா?"

"அட ஆமாம்... உன் வொய்ஃப் கூட முதல் சந்திப்பில் இதையே தான் கூறினாள். என் கணவர் மாதிரியே தான் உங்களுடைய நடவடிக்கைகளும் இருக்கிறது. ஆனால் என்னவொன்று நீங்கள் அனைத்து விஷயங்களையும் கேலி செய்கிறீர்கள், அவருக்கு எப்பொழுது பார் என்னை சீண்டுவது மட்டும் தான் வேலையே என்று புலம்பினாள். அது சரியாக தான் இருக்கிறது!"

"ஆஹான்... அவள் நடந்துக் கொள்வது அப்படி!" என்று தோள்களை குலுக்கினான் அவன்.

ஹிரணி பதிலுக்கு அவனை முறைத்தபடி இதழ் சுழிக்க, உள்ளுக்குள்ளே பெருமூச்சு விட்டவன், "நீயே பாரப்பா... எந்த நேரம் பார் இப்படி முறைத்தால் எனக்கு பதிலுக்கு சீண்டத்தானே தோன்றும்!" என்றான் அகில்.

"அது என்னவோ வாஸ்தவம் தான், இன்று ஹிரணி செய்த காரியம் என் வாழ்வில் நடந்த வேறொரு சம்பவத்தை எனக்கு நினைவுப்படுத்தியது!" என்று விழிகளில் ஒருவித லயிப்புடன் பேசினான் ஜெய்.

"அப்படியா... என்ன அது?"

"ஹிரணி மாதிரி என் வாழ்க்கையிலும் ஒரு துணிச்சல்காரி இருக்கிறாள். செய்கிற செயல்களுக்கு ஏற்ப அவள் பெயரும் ஜான்சிராணியின் மணிகர்ணிகா தான்!" என்று அவளை பற்றி சுவாரசியமாக கூறினான்.

அடேங்கப்பா... என்று விழிகளை விரித்து வியந்த அகில், "நமக்கு மட்டும் எங்கிருந்துப்பா இப்படிபட்டவர்கள் வந்து சேருகிறார்கள்!" என்றான் போலியான அலுப்புடன்.

"ம்... எல்லாம் அவரவர் செய்த வினை. வினை விதைத்தால் வினை தான் கிடைக்கும், பின்னே... தினையா கிடைக்கும்?" என்று நக்கலாக கேள்வி எழுப்பினாள் ஹிரண்மயி.

36

"ஹஹா... ஹிரணி... அப்பொழுது உன்னை நீயே வினை என்று வெளிப்படையாக இங்கே ஒத்துக் கொள்கிறாய்!" என அடக்கமாட்டாமல் ஆர்ப்பாட்டமாக சிரித்தவன், "இந்தாப்பா... அடிச்சுக்கோ!" என ஜெய்யிடம் தன் கையை உயர்த்தினான் அகிலன்.

அவனோ சட்டென்று, "யப்பா... நான் வரலைப்பா இந்த விளையாட்டிற்கு. கேம் எங்கேயோ போகிறது, அதுவும் இல்லாமல் அவள் என் தங்கைப் பார். அவளுக்கெதிராக எல்லாம் நான் அப்படி பேச மாட்டேன்!" என்று அப்பாவியாக அந்தர்பல்டி அடித்தான்.

"அடப்பாவி... உன்னை நம்பி தான்டா நான் இத்தனை தூரம் பேசினேன்!" என்று பதறிப் போய் கேட்டான் அகில்.

ஹிஹி... என அசடுவழிந்து அவனை நெருங்கினான் ஜெய்.

"சரி சரி சமாளிப்போம்!" என்று அவனிடம் கிசுகிசுத்தவன், "சரி அகில் எவ்வளவு நேரமாக தான் இப்படியே வெட்டியாக பேசிக் கொண்டிருப்பாய். அனைவரையும் கேண்டினுக்கு அழைத்துக் கொண்டு போய் உணவை முடித்து விட்டு வா!" என அவனை சத்தமாக விரட்டினான்.

அகிலோ அவனை ஒருமாதிரி பார்த்து, "சமாளிக்கிறேன் என்று கடைசியில் அதற்கும் என் தலையிலேயே கையை வைத்து விட்டாயா?" என முணுமுணுத்தான்.

"சரி போ... ஆகமொத்தம் உன் பெண்டாட்டியிடம் இருந்து காப்பாற்றி விட்டேன் இல்லை!" என்று அழகாக வழிந்தான் அவன்.

அதற்குள் பவானியையும், ஹர்சுவையும் அழைத்து வந்த ஹிரணி, "அண்ணா நீங்கள்?" என்று கேட்டாள்.

"இல்லைம்மா... நீங்கள் இங்கே வருவதற்கு தாமதமாகவும், சரி பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்திருப்பதால் எப்படியும் கொஞ்ச நேரமாவது அளவளாவி விட்டு தான் வருவீர்கள் என்று நான் முன்னரே உணவை முடித்து விட்டேன். நீங்கள் போய் சாப்பிடுங்கள், நான் இங்கே விமலை பார்த்துக் கொள்கிறேன்!" என்று அவர்களை அனுப்பி வைத்தான்.

உணவு நேரமும் அகிலின் உபயத்தால் கலகலவென்று செல்ல ஹிரணிக்கோ அவள் எவ்வளவு தடுத்தும் மனதில் மெல்லிய ஏக்கம் படர்ந்தது.

'இவனையும் இந்தக் குடும்பத்தையும் விட்டு நான் விலகிச் செல்ல வேண்டுமா? நோ... மாட்டேன்!' என்று தனக்கு தானே பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

இதயத்தை பிசைந்த உணர்வால் உணவை வெறுத்தாள்.

"ஏய்... சாப்பிடாமல் என்ன அளைந்துக் கொண்டிருக்கிறாய்? ஒழுங்காக சாப்பிடு!" என்று அவளை அதட்டினான் அகில், நிமிர்ந்து அவனை சோர்வுடன் பார்த்தவள் அமைதியாக குனிந்து உணவை உள்ளே தள்ள ஆரம்பித்தாள்.

விழிகள் இடுங்க அவளை கூர்ந்து கவனித்த கணவனோ, 'இவளுக்கு என்னவாயிற்று... ஏன் திடீரென்று ஒரு மாதிரி டல்லாகி விட்டாள்? ஒருவேளை நான் ரொம்ப கேலி செய்கிறேனோ... வேண்டாம், இனிமேல் அப்படி செய்யக் கூடாது!' என்று தனக்குள் முடிவு செய்துக் கொண்டான்.

உணவை முடித்து கேண்டினில் இருந்து வந்தவர்கள் மெதுவே மருத்துவமனை வளாகத்தை நோக்கி நடக்க துவங்க, சட்டென்று ஹிரணியின் கரம்பற்றி தன்னருகே இழுத்துக் கொண்டான் அகில்.

திகைப்புடன் அவனிடம் திரும்பியவள் அவசரமாக திரும்பி முன்னே சென்ற தன் மாமியாரையும், தமக்கையையும் பதற்றத்துடன் பார்த்தாள்.

அவளின் கரத்தோடு தன் கரத்தை கோர்த்தவன், "சாரி!" என அவள் புறம் சாய்ந்து மெல்ல முணுமுணுத்தான்.

அவன் தீண்டலில் உடலின் ரோமங்கள் சிலிர்த்தெழும்ப ஒன்றும் புரியாமல், "எதற்கு?" என வியப்புடன் வினவினாள்.

"உன்னை ரொம்ப டீஸ் செய்கிறேனோ... சாப்பிடும் பொழுது ஏன் அவ்வளவு டல்லாக இருந்தாய்?" என்று வினவினான்.

உள்ளம் குளிர தன்னை மீறி முறுவலித்தவள், "அதெல்லாம் ஒன்றும் இல்லை... அத்தானை இந்த அளவுக்கு இரக்கமே இல்லாமல் கொடுமைப்படுத்திய அந்த வாசுதேவனை என்ன செய்து எப்படி பழி தீர்க்கலாம் என நான் யோசித்துக் கொண்டிருந்தேன்!" என்று சமாளித்தாள்.

உடனே தீவிரமான அகிலும், "ஆமாம்... நிச்சயம் அவனை சும்மா விடக்கூடாது!" என்று முகத்தில் கடுமைப் பரவ கோபமாக கூறினான்.

விமலுக்கு அனைத்து விதமான பரிசோதனைகளும் முடிந்து உடல் உறுப்புகளுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் நலமாக உள்ளார், இரத்தத்தில் கலந்த நச்சுத்தன்மையை நீக்க மட்டும் அவருக்கு சிகிச்சை அளித்தால் போதும் ஒரு நான்கு நாட்களுக்கு அட்மிஷன் போட்டு விடுவோம் என்று மருத்துவர் தெரிவித்தார்.

விமலுக்கு கொடுத்த அறையில் அனைவரும் குழுமியிருக்க அகில் தான் பேச்சை ஆரம்பித்தான்.

"சரி இரவில் இத்தனை பேர் பேஷன்டுடன் இருக்க மருத்துவர் அனுமதிக்க மாட்டார். அம்மா... நீங்களும் அண்ணியும் வாங்க உங்களை வீட்டில் விட்டு விடுகிறேன். நன்றாக தூங்கி ஓய்வெடுங்கள், நான் காலையில் வந்து அழைத்து வருகிறேன்!" என்றான்.

ஹர்சிதா தயங்க, "டேய் விமல்... அண்ணி பிரெக்னென்டாக இருக்கிறார்கள். இந்நேரத்தில் சரியான

ஓய்வு கட்டாயம் தேவை நீ சொன்னால் தான் அவர்கள் கேட்பார்கள்!" என்று அண்ணனிடம் குனிந்து கிசுகிசுத்தான் தம்பி.

நிதர்சனம் உணர்ந்தவனும், "ஹசும்மா... அகில் சொல்வது சரி நீ வீட்டிற்கு போய்விட்டு காலையில் வா. என்னுடன் தான் இவர்கள் அனைவரும் இருக்கிறார்கள் அல்லவா... பயப்படாமல் செல், இனி அனைத்தும் நல்லதாகவே நடக்கும்!" என்று அவள் கரம்பற்றி அழுத்தினான்.

மேலும் தயங்கியவள் சற்றும் மனமில்லாமல் அவனை ஏக்கத்துடன் பார்த்தபடி தலைக்குனிந்தாள்.

பவானி விமலின் தலையை வருத்தத்துடன் வருடியபடி, "ஜாக்கிரதையாக இருடா... நாளை காலையில் வருகிறேன். ஹர்சுவின் துணைக்காக தான் நான் வீட்டிற்கு செல்கிறேன் பத்திரம்!" என்றவரிடம் மெல்ல புன்னகைத்தவன், "ஒன்றும் கவலைப்படாதீர்கள்மா... அது தான் நம்ம வீட்டு ஜான்ஸி ராணி இங்கு காவலுக்கு இருக்கிறாளே... அப்புறம் என்ன? நீங்கள் தைரியமாக போய் வாருங்கள்!" என்று அவருக்கு தெம்பளித்து விடைக் கொடுத்தான்.

"அத்தான்... நீங்களுமா?" என்று ஹிரணி முகம் சுருக்க, அனைவரும் நகைத்தனர்.

"இதில் என்ன இருக்கிறது? நான் கேலி செய்யவில்லை, பெருமையுடன் உண்மையை தான் சொல்கிறேன்!" என்று விமல் உள்ளார்ந்து கூற, ஓ... என ஹிரணி உவகையுடன் ராகம் இழுக்கும்பொழுது, ஹச்... ஹச்... என்று அகில் தும்ம ஆரம்பித்தான்.

அதில் கடுப்பானவள் கணவனிடம் திரும்பி, "இன்னும் கிளம்பவில்லையா நீங்கள்? என்னை ஏதும் பாராட்டினால் உங்களுக்கு பொறுக்காதே... முதலில் கிளம்புங்கள்!" என்று அவன் முதுகில் கை வைத்து வெளியே தள்ளினாள்.

"ஹேய்... எல்லாம் பார்த்துகோங்கப்பா பார்த்துகோங்க, எந்த மனைவியும் கணவனுடன் இருக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுவாள். ஆனால் இவள் என்னை எப்படி வெளியே தள்ளி விடுகிறாள் பாருங்கள்!" என்று அவள் குறித்து புகார் ஒன்றை வாசித்து விட்டே வெளியேறினான் அகில்.

ஹஹா... என நகைத்த ஜெய், "ஹிரணி... நீ கூறியது போல் அகிலுக்கு உன்னிடம் வம்பு இழுக்கவில்லை என்றால் கண்டிப்பாக தூக்கமே வராது போலிருக்கிறது. ஆனால் அவன் அமைதியாக இருந்தாலும் உனக்கு வாழ்க்கையில் சுவாரசியம் இருக்காது!" என்று புன்னகைத்தான்.

ம்... என்று அவன் நினைவில் முறுவலித்தவள், "நீங்கள் வீட்டிற்கு கிளம்பவில்லையா அண்ணா?" என அவனிடம் வினவினாள்.

"இல்லை... இப்பொழுது நமக்கொரு முக்கியமான வேலை இருக்கிறது. இப்படி உட்கார்!" என்று விமலின் கட்டிலுக்கு எதிரே இருந்த அட்டென்டர் காட்டை அவளுக்கு கை காட்டியவன் தானும் அதில் அமர்ந்தான்.

"என்னண்ணா? எதுவும் புதியதாக பிரச்சினை தோன்றி இருக்கிறதா?" என்றாள் கவலையுடன்.

"இல்லை... நாம் இன்னும் பழைய பிரச்சினையிலிருந்தே முழுவதுமாக வெளிவரவில்லை. விமல் தப்பி வந்த வரை எல்லாம் சரி தான், ஆனால் அந்த வாசுதேவன் அப்படியே இருக்கிறானே... அவனுக்கு வேறு ஏதாவது புதிய பிரச்சினை கொடுத்து திசைதிருப்பி விட்டால் தான் எதிர்காலத்தில் அவனால் விமலுக்கு வேறு எந்த தொந்திரவும் ஏற்படாமல் இருக்கும். சரி விமல்... நீங்கள் சொல்லுங்கள், உங்களுக்கு இப்பொழுது ஹெல்த் எப்படி இருக்கிறது? ரொம்ப டயர்டாக இருக்கிறதா?" என்று அவனிடம் வினவினான்.

"அதெல்லாம் எதுவும் இல்லை, கொஞ்சம் டயர்டனஸ் இருக்க தான் செய்கிறது. பட்... பத்திரமாக வீடு திரும்பி

அனைவரையும் சந்தித்து விட்டதிலேயே பெரிய நிம்மதி ஏற்பட்டு விட்டதால் ஐ ஆம் பெர்ஃபெக்ட்லி ஆல்ரைட் நவ்!"

"ஓகே... அப்பொழுது உங்களுக்கு என்ன நடந்தது, நீங்கள் எப்படி அவர்களிடம் மாட்டினீர்கள் என்று கொஞ்சம் விவரம் கூறுங்கள்!"

"ஆக்ட்சுவலி... என் பிரெண்ட் சதீஷின் தங்கை சிநேகா, வாசுதேவன் குறித்து விவரம் தெரிவிக்கவும் அவன் கார் நம்பரை வைத்து அவனை டிரேஸ் செய்து அவனுடைய இருப்பிடத்தை முதலில் கண்டுக்கொண்டேன். பிறகு அவனை ஃபாலோ செய்ததில் தற்பொழுது அவன் ரியல் எஸ்டேட் பிசினஸில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது. உடனே சதீஷை தொடர்பு கொண்டு பேசினேன். அவனை போல வாசுதேவனிடம் ஏமாந்தவர்கள் அனைவரும் ஒன்றாக கேதராகி தற்பொழுது தனியாக பேஸ்புக், வாட்ஸ்ஆப்பில் குழுவாக இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் விவரத்தை அவன் என்னிடம் தெரிவித்தான். எப்படியாவது யாருக்காவது அவனை பற்றிய விவரம் தெரிந்தால் உடனே அவனை வளைத்து விடலாம் என அவர்கள் திட்டமிட்டு இருந்தனர். அது எனக்கும் வசதியாக இருந்தது, நான் மட்டும் தனியாக எந்த நடவடிக்கையும் எடுத்து வீணான பிரச்சினையில் சிக்கிக் கொள்ளாமல் அவர்களை வைத்து ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்காக சதீஷிடம் இருந்து அந்த கான்டாக்ட் லிஸ்ட் அனைத்தையும் கலெக்ட் செய்து என்னுடைய மெயில் ஃபோல்டரில் தனியாக போட்டு வைத்து விட்டு வாசுதேவனின் ரியல் எஸ்டேட் அலுவலக விலாசம் மற்றும் அதை அவன் யார் பெயரில் நடத்துகிறான் போன்ற தகவல்கள் சிலவற்றை மேம்போக்காய் விசாரித்தறிந்து சேகரிக்க என்று அவனுடைய அலுவலகத்திற்கு சென்று இடம் விசாரிக்க வந்திருப்பது போல் பொதுவாக அங்கிருந்த ஆளிடம் மனை தொடர்பான விவரங்களை பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த வாசுதேவனும் அங்கே வந்தான், நான் எதுவும் கண்டுக்கொள்ளாமல் இயல்பாக தான்

இருந்தேன். ஆனால் எப்படி தான் ஸ்மெல் செய்தானோ தெரியவில்லை, அவனுக்கு என் மேல் ஏதோ சந்தேகம் வந்துவிட்டது. திடீரென்று குறுக்கே புகுந்து என்னிடம் மாற்றி மாற்றி கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். நானும் சளைக்காமல் பதிலளித்தாலும் உள்ளுக்குள் ஏதோ ஒரு எச்சரிக்கை உணர்வு தோன்ற நான் பிறகு வருகிறேன் அவசர வேலை இருக்கிறது என்று கிளம்பினேன். வெளியே வரும் பொழுதே ஏதோ தோன்ற கீழே வண்டியிடம் வந்ததும் மொபைலிருந்த சிம்மை கழற்றி விட்டேன். என்னிடம் இருக்கும் விவரங்களை கொண்டு அவன் என்னை சேர்ந்தவர்களை அணுகி தொல்லை கொடுக்க கூடாது என்று எண்ணினேன். ஆனால் என் போதாத நேரம் அதை அவன் மாடியிலிருந்து கண்கொத்தி பாம்பாக கவனித்து இருந்திருக்கிறான். அங்கிருந்து கிளம்பி நான் பாதி தொலைவு செல்லும்பொழுதே ஒரு நீலநிற கார் என்னை பின் தொடர்வது புரிந்தது. லேசாக பதட்டமாக இருந்தாலும் சமாளித்து முடிந்தவரை தப்பிவிட வேண்டும் என்று வண்டியை வேகமாக முறுக்கி குறுக்கு சந்துகளில் அதிகம் நுழைந்து வெளிவந்து என பல வழிகளில் போக்கு காட்ட முயன்றேன். ஆனால் அவர்களும் விடுவது போல் தெரியவில்லை எனவும் சட்டென்று கழற்றி வைத்திருந்த சிம் கார்டை அவர்கள் அறியாமல் எடுத்து உடைத்து கீழே போட்டுவிட்டு நில்லாமல் மேலே சென்றேன். போகும் வழியிலேயே என் வாலட் மற்றும் பாக்கெட்டிலிருந்த குடும்ப புகைப்படங்கள், அலுவலகம் தொடர்பான சில பேப்பர்கள் என்று அனைத்தையும் மெதுவாக முன்னால் இருந்த வண்டியின் பெட்ரோல் டாங்கில் போட்டு லாக் செய்து விட்டேன். எங்கேயும் நிற்காமல் நான் சென்றதால் அவர்களால் என்னுடைய இந்த நடவடிக்கைகளை சரியாக கவனிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் சேஸிங் முடிந்து அவர்களிடம் நான் சிக்கி கொண்டேன்!" என அன்றைய நினைவின் வேதனையோடு கூறினான் விமல்.

37

"உண்மையில் உங்களை எப்படி பாராட்டுவதென்றே எனக்கு தெரியவில்லை விமல், ரியலி யு டன் எ கிரேட் ஜாப். அவர்களிடமிருந்து தப்பி செல்வது கடினம் என புரிந்தவுடன் அத்தனை பதட்டத்திலும் முதல் வேலையாக உங்களை சேர்ந்தவர்களை அவர்களிடம் இருந்து பத்திரமாக காக்க வேண்டும் என முயன்றிருக்கிறீர்களே... என்ன சொல்வது? உங்களின் இந்த உயர்ந்த குணத்தால் தான் நீங்கள் வேறெந்த பயங்கரத்திலும் சிக்காமல் நல்ல முறையில் வீடு திரும்பியிருக்கிறீர்கள்!" என்று உளமாற அவனை மெச்சுதலாக பேசினான் ஜெய்சங்கர்.

பெரும் வியப்புடன் அதைக் கேட்டிருந்த ஹிரணியும் அவன் சொல்லை ஆமோதித்தாள்.

"ஆமாம் அத்தான்... அண்ணா சொல்வது மிகச் சரியான வார்த்தை. அந்த நேரத்தில் அக்கா ஒருபுறமும், அத்தை ஒருபுறமும் என்று தனித்தனியாக இருந்தனர். எதுவும் ஆபத்து நேர்ந்திருந்தால் அவர்களை காப்பாற்றுவதற்கு கூட உடன் யாருமில்லாமல் பெரிய சிக்கலாகிப் போயிருக்கும்!" என்று அந்த நாளை கற்பனையில் எண்ணிப் பார்க்க கூட அஞ்சியவளாக சிலிர்ப்புடன் பேசினாள் பெண்.

"ம்... அவர்களிடம் மாட்டிக்கொண்டோமே என்று ஒருபுறம் கவலையாக இருந்தாலும் எப்படியோ நம் குடும்பத்தை காப்பாற்றி விட்டோம் என்பது தான் எனக்கும் பெரிய நிம்மதியை தந்தது. என்னவொன்று என்னை காணாமல் மிகவும் நொந்துப் போவார்கள் என்பது புரிந்தாலும் வேறு வழியின்றி அடைப்பட்டு கிடந்தேன். அந்த வாசுதேவனுக்கு என் மீது சந்தேகம் வந்ததற்கு காரணம், அவன் ஏமாற்றிய கும்பலில் என்னை எங்கேயோ பார்த்திருக்கிறான். ஆனால் என்னை சதீஷுடன் பார்த்ததை அவனால் ரெகக்னைஸ் செய்ய முடியவில்லை. ஏன்? அவன் என்னை சந்தித்து

விசாரித்துப்பொழுது எனக்கும் கூட சட்டென்று முதலில் அது புரியவில்லை தான். நான் எதற்காக அங்கே அவன் அலுவலகத்திற்கு வந்தேன், எதை துப்பு துலக்க வந்தேன் என்று என்னை அடியாட்களை வைத்து மிரட்டியும், அடித்தும் பணிய வைக்கப் பார்த்தான். நான் எதற்கும் மசியவில்லை, என்னால் தேவையில்லாமல் விஷயம் கசிந்து சதீஷின் குழுவில் இருப்பவர்களுக்கு மேலும் எந்தவித பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். அவன் செய்த தொழில்கள் மூலம் யாரையெல்லாம் ஏமாற்றி இருக்கிறானோ அவர்களுடைய அனைத்து விவரங்களையும் புகைப்படங்களோடு தனித்தனி கோப்புகளாக போட்டு வைத்திருந்தான். எதிலுமே நான் பொருந்தவில்லை எனவும் அவனுக்கு கடுப்பு தான் வந்தது. எப்படியும் கண்டுப்பிடித்து விடுவோம் என்ற நம்பிக்கையில் மேலும் மேலும் அப்படியே நோண்டிக் கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் தன்னால் முடியவில்லை எனவும் தான் அடங்காத ஆத்திரம் பெருகி தன்நிலையை மறக்கச் செய்யும் போதை ஊசியை எனக்கு போடச் சொல்லி உத்திரவு இட்டான். அது தெரிந்தவுடன் என்னை மேலும் நான் உளவியல் ரீதியாக தயார்படுத்திக் கொண்டு கடுமையான தியானப் பயிற்சியை தினமும் மேற்கொள்ள ஆரம்பித்தேன். என் மூலம் அவனுக்கு எந்த விவரமும் வெளிவரக்கூடாது என்பதை மந்திரம் போல் எனக்குள் ஜெபிக்க துவங்கினேன். மேலும் தன்னம்பிக்கையை பெருக்கி கொள்ள எதிரி முகாம்களில் சிக்கித்தவிக்கும் நம் இராணுவ வீரர்களை மனதிற்குள் கொண்டு வந்து அவர்களை போல் எனக்கு எந்தக் கொடுமை நிகழ்ந்தாலும் உண்மையை வெளிவிடக் கூடாது என்று ஆணித்தரமாக இருந்தேன். அதனால் தான் அவர்களுடைய போதை ஊசிக்கு முடியாமல் என்னுடைய நினைவை இழந்தாலும் இழப்பேனே தவிர என் திடத்தை இழக்காமல் இருந்தேன். இதற்கிடையில் ஏற்கனவே செய்த மோசடி தொழிலில் கூட்டு வைத்திருந்தவனையும் இவன் ஏமாற்றி இருப்பான் போலிருக்கிறது அவன் ஒருபக்கம் அந்த வாசுதேவனுக்கு

குடைச்சல் கொடுக்க ஆரம்பித்தான். அதனால் என் விஷயத்தில் அவனுடைய தீவிரம் நடுவில் சற்றே குறைந்தது. அந்த நேரம் தப்பிக்கப் பார்த்து மீண்டும் சிக்கி போதை ஊசியை வேறு அதிகமாக்கி விட்டான்கள். மறுபடியும் நான் விதியை நொந்துக்கொண்டு சரியான தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தேன். இன்று மீண்டும் அவன் என்னை காண வந்திருந்த நேரம் அவனுடைய தொழில் எதிரி அந்த மாசானம் இவன் ரியல் எஸ்டேட் அலுவலகத்தின் மீது ஏதோ போலி புகார் அளித்து இவனை பற்றி மீடியாவில் பயங்கர புரளியை கிளப்பிவிட்டான் போலிருக்கிறது. அதை கேள்விப்பட்டு மனைப்பிரிவு சீட்டு போட்டிருந்தவர்கள் எல்லாம் அங்கே கூட்டமாக ஒன்று திரண்டு விட்டார்கள் எனவும் சூழ்நிலையை சமாளிக்க என்று உடனே அவன் அங்கே கிளம்பி சென்றுவிட்டான். இன்று எனக்கு ஏதோ மருத்துவ பரிசோதனை செய்து போதை மருந்தின் அளவை அதிகரிக்க வேண்டும் என்று காலையில் போட்ட ஊசியோடு மீண்டும் போடாமல் விட்டிருந்தார்கள். ஆனால் அந்த வாசுதேவன் வந்தவுடன் கிளம்பவும் எனக்கு மருந்தை செலுத்தவில்லை என்பதை மறந்துவிட்டு பரிசோதனைக்காக தளர்த்திய கட்டுக்களை இறுக்காமல் என்னை அப்படியே விட்டு விட்டனர். அதைப் புரிந்துக்கொண்டு சற்று நேரம் அசையாமல் இருந்துவிட்டு அவர்கள் அசந்த நேரம் வெளியே தப்பிவந்து ஹிரணியின் உதவியால் எப்படியோ வீட்டிற்கு வந்து விட்டேன்!" என்று விமல் முடித்த நேரம் அகிலும் அறையின் உள்ளே வந்தான்.

"ஹேய்... என்ன மூன்று பேரும் இவ்வளவு சீரியஸாக இருக்கிறீர்கள்? எதுவும் பிரச்சினையா?" என்றபடி இயல்பாக ஹிரணியின் அருகில் அமர்ந்தான்.

ஜெய்சங்கரின் கவனம் அவனிடம் இல்லாமல் விமலின் விளக்கத்தில் ஆழ்ந்து இருக்க, அகிலிடம் திரும்பிய அவனுடைய மனைவி அவ்வளவு நேரமாக தங்களுக்குள் நடந்த உரையாடலின் விவரத்தை அவனிடம் தெரிவித்தாள்.

ஓ... என்றவன் அண்ணனிடம் திரும்பி கண்சிமிட்டினான், "ஆனாலும் ரொம்ப தான் பாசக்காரப் பிள்ளை என்பதை எந்த சூழ்நிலையிலும் நீ விட்டுக் கொடுக்க மாட்டாய்டா!" என்று கேலி செய்தான்.

விமலன் வார்த்தையின்றி முறுவலிக்க, ம்... என்று இதழ் கடித்தபடி தன்னவளிடம் திரும்பிய அகில், "அதுசரி... நீ இங்கே இவ்வளவு நேரமாக பேசினாயே உன்னை பற்றிய உண்மையை விமலிடம் சொல்லி விட்டாயா?" என ரகசிய குரலில் வினவினான்.

முதலில் விழித்துவிட்டு, "என்ன உண்மை? நீங்கள் தான் வீட்டிலேயே அத்தானிடம் நம் திருமண விவரத்தை கூறி விட்டீர்களே?" என்றாள் மெல்லிய குரலில்.

"ப்ச்... அதில்லை, நீ எப்பொழுது பார் விமலை பெண்களை ஏமாற்றி வாழ்கின்ற பொறுக்கி ரேஞ்சுக்கு டெவலப் செய்து அண்ணியை அழ வைத்துக் கொண்டிருப்பாயே... அதை சொல்லி விட்டாயா என்றேன்!" என இப்பூனையும் பால் குடிக்குமா போன்று அப்பாவியாக விவரம் கேட்ட அகிலை திகைப்புடன் நோக்கியவள் பின்பு முறைத்தாள்.

"கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டு அமைதியாக இருக்கிறீர்களா?" என்றாள் அடிக்குரலில்.

"ஏன்... ஏன்... நான் ஏன் அமைதியாக இருக்க வேண்டும்?" என்று படபடத்தவனை அவள் கண்கள் இடுங்க பார்க்க, "சரி சரி பிழைத்து போ, இந்த ஒரு முறை மட்டும் விட்டு விடுகிறேன்!" என தாராள மனதுடன் விட்டுக்கொடுத்தான்.

"ஏய்... புருஷனும், பெண்டாட்டியும் உங்கள் தனிப்பட்ட காதல் மொழிகளை பேசி முடித்துவிட்டீர்கள் என்றால் கொஞ்சம் நான் சொல்வதை கவனிக்கிறீர்களா?" என்று நக்கலடித்தான் ஜெய்.

"என்ன காதல் மொழியா... அப்படி என்றால் என்னப்பா? ஏன் ஹிரணி உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று

அவளை வம்புக்கு இழுத்தான் அகில்.

"கடவுளே... ஏன் அண்ணா இப்படி... சும்மாவே இவர் வாயை அடக்க முடியாது. இதில் நீங்கள் வேறு பாயின்டை எடுத்து கொடுக்கிறீர்கள்!" என்று தன் தலையில் கை வைத்துக் கொண்டாள் அவள்.

"ஓய்... என்ன?" என்று அவள் தாங்கியிருந்த கரத்தை அகில் பட்டென்று தட்டிவிட அதில் லேசாக நாக்கை கடித்துக் கொண்டவள், ஷ்... ஆ... என்று வலியில் துடித்து விட்டாள்.

உடனே அண்ணனும், தம்பியும் சற்றே பதறி விட்டனர்.

"ஏய்... என்ன? தட்டி விட்டதில் பல் எதுவும் பட்டு விட்டதா... சாரி!" என்று குற்றவுணர்வோடு அவள் முகத்தை தாங்கி கன்னத்தை தடவிக் கொடுத்தான் அகில்.

அவள் முகம் லேசாக வலியில் சுருங்கியிருக்க, "உனக்கு எல்லாம் விளையாட்டு தான் அகில், அவளுக்கு வலிக்குமா என்ன என்றெல்லாம் பார்ப்பதில்லை!" என விமல் கடிந்துக் கொண்டான்.

"அச்சோ விமல்... நிஜமாக நான் விளையாட்டுக்கு தான்டா செய்தேன், இப்படி அடிபடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆரம்பத்தில் இவள் என்னை டீஸ் செய்தாள், அதற்கு பிறகு முழுவதுமாக நான் அதை கையில் எடுத்துக் கொண்டேன். ஆனால் இவளும் லேசுப்பட்டவள் இல்லை தெரியுமா? எத்தனை முறை எனக்கு எரிச்சல் மூட்டியிருக்கிறாள். ஏய்... ஆமாவா... இல்லையா?" என்று அவளிடம் வினவினான்.

மெதுவாக, "இல்லை!" என்றவளிடம், "என்ன?" என்று அவன் எகிற, "ப்ச்... ஏய் போதும் அடங்குடா, அவள் இல்லை என்று சொன்னாலும் இதுவரை நான் பார்த்த வரையில் அவள் உனக்கு அடங்க மாட்டாள் என்பது தான் எனக்கு நன்றாக தெரிகிறதே. அப்புறம் எதற்கு அவளுடைய வாய்மொழி சாட்சியம் வேறு, கொஞ்சம் இருவரும் ஜெய் சொல்ல வருவதை என்னவென்று

அமைதியாக கவனியுங்கள்!" என்று அவர்கள் இருவரையும் திசை திருப்பினான் விமல்.

தன்னை எரிச்சலுடன் பார்த்த அகிலை கண்டு ஹிரணி மெல்ல கண்சிமிட்டி ரகசியமாக புன்னகைக்க அவளை வியப்புடன் பார்த்தவன் பின்பு இறுக்கம் தளர சிரிப்புடன் ஜெய்யிடம் கவனத்தை திருப்பினான்.

விமலிடம் எதையோ விசாரித்துவிட்டு ஜெய் இவர்களிடம் திரும்பியவன், "ம்... விமலின் இருப்பிடம் தெரிந்தவுடன் நான் மதியம் பிஸியாக இருப்பதாக சொன்னதற்கு காரணம் இந்தப் பிரச்சினை தான். வாசுதேவனையுடைய எதிரி மாசானம் மீடியாவில் கிளப்பிய புரளி அவனுடைய அலுவலகத்தை மக்கள் முற்றுகையிடும் அளவிற்கு வளர்ந்ததால் தான் நான் அவசரமாக அதைக் கவனிக்க சென்று விட்டேன்!" என்றான்.

"ஓ... அதனால் நமக்கு எதுவும் லாபம் இருக்கிறதா?" என்று வினவினான் அகில்.

"நிச்சயமாக... எந்தவொரு சிக்கலான விஷயத்திலும் இறங்குவதற்கு முன்பு முதலில் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வது மிகவும் முக்கியமான விஷயம். எந்தளவுக்கு மக்கள் முன் ஒரு குற்றத்தை நாம் நிரூபிக்க முயற்சி எடுக்கிறோமோ அந்த அளவுக்கு குற்றவாளி முன்பு நம்மை வெளிப்படுத்தாமலும் இருக்க வேண்டும். ஏனெனில் நம்மை சுற்றி பெரும்பாலும் ஊழலும், துரோகமும் நிறைந்த இந்த உலகில் நாம் நல்லதையே செய்தாலும் கூட அது நமக்கு பெரும் இன்னலில் தான் வந்து முடியும்!"

"நீ சொல்வது சென்ட் பர்சென்ட் கரெக்ட் ஜெய்... அதற்கு என் அண்ணனே சாட்சி!" என்றான் அகில்.

"சரி அண்ணா... இப்பொழுது இந்த மாசானம் கிளப்பிய புரளியால் நமக்கு என்ன ஆதாயம்?" என்று வினவினாள் ஹிரண்மயி.

"ம்... சொல்கிறேன்!" என்று தான் செயல்படுத்த எண்ணும் திட்டத்தை விவரிக்க ஆரம்பித்தான் ஜெய்.

"ரியலி சூப்பர்ப்... இதனால் வாசுதேவன் வசமாக மாட்டிக் கொள்வான். இந்த சிக்கலிலிருந்து அத்தானும் சுலபமாக வெளிவந்து விடுவார்கள். ரைட்?"

"ம்... ஆமாம், அதேபோல் நீங்கள் கொஞ்ச நாளைக்கு இந்த அரசாங்க திட்டங்கள் தொடர்பாக தனியாக மக்களை சந்தித்துப் பேட்டி எடுப்பதை தவிர்க்க வேண்டும் விமல்!" என்று அவனுக்கு அறிவுறுத்தினான் ஜெய்.

விமல் குழப்பத்துடன் அதை யோசித்திருக்க, "அது ஒன்றும் பிரச்சினையில்லை, ஆல்ரெடி இவன் அலுவலகத்திற்கு வராமல் எந்தவொரு தகவலும் தராமல் மாதக்கணக்கில் விடுமுறையில் இருந்ததை கண்டித்து வீட்டிற்கு எச்சரிக்கை கடிதங்கள் அடுத்தடுத்து இரண்டு முறை அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். எங்கள் அம்மா இவன் மேல் இருந்த கோபத்தில் அதை பிரித்து கூடப் பார்க்காமல் டேபிள் டிராயரில் போட்டு வைத்து விட்டார்கள். பிறகு அண்ணி வந்து உண்மை தெரிந்ததும் தயங்கி தயங்கி என்னிடம் விஷயத்தை கூறினார்கள். ஏற்கனவே காவல்துறையில் இவனை காணவில்லை என்று நான் புகாரை பதிவு செய்து வைத்திருந்ததால் நண்பர் ஒருவர் உதவியோடு இவன் மேலதிகாரிக்கு அதை சமர்ப்பித்து தொடர்ந்து இதுபோன்ற பாதுகாப்பற்ற சூழலில் இவனால் பேட்டி எடுக்கும் வேலைகளில் எல்லாம் ஈடுபட முடியாது வேறு ஏதாவது பிரிவுக்கு அவனை மாற்றிவிடுங்கள் என்று விண்ணப்பித்து விட்டேன். விமல் திரும்ப அங்கு வேலையில் சேர்ந்ததும் அவனுடன் ஆலோசித்து விட்டு நல்ல முடிவெடுப்பதாக அவரும் கூறி இருக்கிறார்!" என விவரம் கூறினான் அகில்.

"ஏய்... ஏன்டா? நீ..." என ஆரம்பித்த விமலை கோபமாக குறுக்கிட்டவன், "நீ சும்மா இரு... எதுவும் பேசாதே, உன்னை தொலைத்துவிட்டு நாங்கள் அனைவரும் எப்படி

எல்லாம் தவித்தோம் என்பது எங்களுக்கு தான் தெரியும்!"
என்று ஆத்திரத்தில் சீறினான்.

38

"ஹே... கூல் மேன்!" என்று அகிலின் தோளை தட்டினான் ஜெய்சங்கர்.

"இல்லைப்பா... உனக்கு தெரியாது. இவனுடைய தொடர்பு முழுவதுமாக விட்டுப்போய் என்ன செய்வது என புரியாமல் வெளிநாட்டில் நான் தவியாய் தவித்துப் போனேன். அதுவும் அண்ணியை கூட தொடர்பு கொள்ள வழி தெரியவில்லை. இந்த நிலையில் எங்கள் வீட்டிற்கு உயிர்ப்பே இல்லாமல் வந்த அவர்களை பார்த்தப்பொழுது அவ்வளவு கஷ்டமாக இருந்தது. இவனை பற்றிய கவலை ஒருபுறம் என்றால் தினமும் நான் ஏதாவது நல்ல தகவலை கூறுவேனா என்று ஒவ்வொரு முறையும் அவர்கள் என்னை எதிர்பார்ப்புடன் பார்க்கும் பொழுது எனக்கு அத்தனை வலிக்கும்!" என்று வேதனையோடு கூறினான்.

"ம்... ஆமாம் அத்தான், இவர் சொல்வது உண்மை தான். அக்காவை நான் முதன் முதலில் நடுரோட்டில் மயங்கிய நிலையில் தான் மீட்டெடுத்தேன். உடலில் கொஞ்சம் கூட வலுவில்லாமல் உங்களை ரோடு ரோடக தேடி அலைந்து தான் அவர்கள் அந்த நிலைக்கு ஆளாகியிருந்தார்கள். உண்மையை சொல்ல வேண்டுமென்றால் உங்கள் மீது எனக்கு அப்பொழுது முழுஅளவில் வெறுப்பு தோன்றியது. நீங்கள் வேண்டுமென்றே அவர்களை ஏமாற்றி விட்டதாக நினைத்து அவர்களிடம் நான் எத்தனை முறை சண்டைப் போட்டிருக்கிறேன் தெரியுமா?" என்று ஹிரண்மயி கூறவும் முகம் வாட அமைதியானான் விமலன்.

"புரிந்துக் கொள்டா... இதற்கு மேலாவது அவர்களுக்கு நீ நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வை கொடு!" என அவன் கரம்பற்றி அழுத்தினான் அகில்.

"நான் அப்படிப்பட்டவன் இல்லை என்கிறாயாடா அகில்?" என்றான் அவன் வேதனையுடன்.

"லூசாடா நீ... உன்னை யாரும் குறைசொல்லவில்லைடா. மீண்டும் இதுபோல ஏதாவது இக்கட்டான சூழ்நிலையில்

சிக்கிக் கொள்ளாதே என்று தான் சொல்கிறேன்!"

"ம்... புரிகிறது. சரி நீ சொல்வது போலவே வேறு பிரிவுக்கு மாறி விடுகிறேன் போதுமா?" என்று முறுவலித்தான்.

"யா... தட்ஸ் குட்!" என மகிழ்ச்சியுடன் வேகமாக அவனை கட்டியணைத்துக் கொண்டான் அகில்.

பிறகு சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு ஜெய்சங்கர் தனது இல்லத்திற்கு கிளம்பிவிட, விமலும் அதீத உடல் அலுப்பினால் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

மருத்துவமனை வாயில் வரை சென்று ஜெய்யை வழி அனுப்பி வைத்துவிட்டு அங்கிருந்த நர்ஸிடம் விமலின் சிகிச்சை குறித்து சில சந்தேகங்களை தெளிவுப்படுத்திக் கொண்டு அகில் அறைக்குள் வர, அதுவரை சோர்வுடன் உடலை லேசாக முறுக்கி கொண்டிருந்த ஹிரணி அவனை காணவும் சட்டென்று நேராக அமர்ந்தாள்.

அதை கவனித்தவனுக்கு மாலையில் அவளின் மேல் விமல் முழுதாக சாய்ந்திருக்க உடல்வலி என்று அவள் புலம்பியது நினைவிற்கு வந்தது.

"சரி நீயும் படுத்து தூங்க வேண்டியது தானே... ஏன் இன்னும் உட்கார்ந்துக் கொண்டே இருக்கிறாய்?"

"நீங்கள்..." என மெல்ல இழுத்தாள் மனைவி.

"ம்... நான் இப்படி ஒரு சேரை இழுத்து போட்டுக்கொண்டு கட்டிலில் காலை நீட்டி தூங்கி விடுகிறேன்!" என்றபடி ஒரு சேரை நகர்த்தி விமலின் கால் புறமாக போட்டு அதில் அமர்ந்து தன்னுடைய கால்களை நீட்டி வசதியாக சாய்ந்துக் கொண்டான்.

"விடிய விடிய உங்களால் இப்படியே தூங்க முடியுமா... அது வந்து... உங்களுக்கு வசதியாக இருக்காதே... கை, கால்கள் ஏதாவது பிடித்துக்கொள்ள போகிறது, கழுத்து கூட ஒரு சில நேரம் சுளுக்கு பிடிக்கும்!" என்றாள் கரிசனமாக.

"ஆமாம்... உண்மை தான். அதற்காக உன் கட்டிலில் இடம் கொடுக்கப் போகிறாயா? கட்டில் சிறியது என்பதால் கொஞ்சம் நெருக்கியடித்து படுப்பது போல் தான் இருக்கும். பரவாயில்லையா?" என்று சிரியாமல் கேட்டான்.

ஒருகணம் திகைத்து விழித்தவள், "அது... அது ஆமாம், உங்களுக்கு திரும்புவதற்கு கூட இடம் இல்லாமல் ரொம்ப சிரமமாக இருக்கும் இல்லை. சரி நான் மட்டும் இங்கே தூங்கிக் கொள்கிறேன்!" என்று அவசரமாக அவனுக்கு எதிர்புறம் திரும்பி படுத்து கண்களை மூடிக் கொண்டாள்.

உதட்டில் முறுவல் பூக்க விழிகளால் அவளை கனிவுடன் வருடியவன் ஹிரணியை சந்தித்த நாள் முதல் இன்று வரை தன் வாழ்வில் நடந்துவிட்ட மாற்றங்களை ஆசையுடன் இமைகளை மூடி அசைப்போட ஆரம்பித்தான்.

சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய விமலை ஹிரணியை வைத்து ஆலம் சுற்றி திருஷ்டி கழித்த பவானி அவனை ஆவலுடன் வீட்டிற்குள் அழைத்து சென்றார்.

"உட்கார்டா!" என்று எதிரே அமர்ந்தவர், "மாடியில் உன் அறையை நேற்றே தயார் செய்து விட்டேன். நீ இல்லாமல் உன்னுடைய மனைவியை அங்கே தனியே விட வேண்டாம் என்று இத்தனை நாட்களாக அவளை என்னுடன் தான் தங்க வைத்திருந்தேன்!" என்றார்.

"ரொம்ப தாங்க்ஸ்மா!" என்று அவரிடம் தன் மகிழ்ச்சியை வெளியிட்டவன் அருகில் நின்றிருந்தவளின் கரம்பற்றி இழுத்து தன்னருகே இருந்த காலியிடத்தை விழிகளால் சுட்டிக் காட்டினான்.

அது இவளுக்கு புரிந்தாலும், ஆர்வமுடன் காத்திருந்தாலும் மற்ற குடும்ப அங்கத்தினர்களின் முன்னிலையில் அவனை உரசியபடி அமர்வதற்கு சற்றே தயக்கம் கொண்டாள்.

"எதற்காக நீ இவ்வளவு யோசிக்கிறாய்? இங்கே யார் இருக்கிறார்கள் நாங்கள் தானே, அதுவும் திருமணம் ஆகாத வயதுப்பிள்ளைகள் என்று யாரும் இந்த வீட்டில் இல்லை. அதனால் சும்மா எதற்கும் சங்கடப்பட்டுக் கொண்டு இல்லாமல் இயல்பாக இரு நீ!" என்று பவானி அவளை செல்லமாக அதட்ட, மெல்லிய வெட்கப் புன்னகையுடன் விமலின் அருகில் ஆசையுடன் அமர்ந்தாள் ஹர்சிதா.

"அடேங்கப்பா... இந்த காலத்துப் பெண்களுக்கு கூட இப்படி எல்லாம் வெட்கம் வருமா அம்மா?" என்று சிரித்தபடி தன் அண்ணியை கேலி செய்தான் அகில்.

"அதை ஏன் என்னிடம் கேட்கிறாய்? உன் மனைவியிடம் கேள்!" என்று கோர்த்து விட்டார் பவானி.

அதுவரை ஹர்சுவை ரசித்துக் கொண்டிருந்தவள் மலங்க விழித்து கணவனிடம் வேகமாக திரும்பினாள், அவனோ கேள்வியாய் இரு புருவங்களையும் ஏற்றி இறக்கினான்.

ஏனோ அந்நேரத்தில் அகிலின் விழிப்பார்வையை நேராக எதிர்கொள்ள இயலாமல் ஹிரணியின் விழிகள் சட்டென்று அலைபாய்ந்தது. உடலில் புதுவித வெப்பம் பரவுவது போல் உணர்ந்தவள் அதை முகத்திற்கு பரவ விடாமல் தடுக்கப் போராடும் நேரம் அகிலின் குரல் கணீரென்று ஒலித்தது.

"ப்ச்... அப்படியென்றால் என்னவென்று என் பெண்டாட்டிக்கு தெரியாதாம்மா!" என்றுரைத்து வேண்டுமென்றே அவளை வெறுப்பேற்றினான்.

அதுவரை அவளுள் கிளர்ந்துக் கொண்டிருந்த உணர்வு பொங்கிய பாலாக அடங்கி விடவும் அவனை முறைத்துப் பார்த்தாள் ஹிரண்மயி. அதைதான் அவள் கணவனும் எதிர்ப்பார்த்தான், காதல் என்கிற உணர்வை முழுதாக உணரும் வரை தன்னவள் அப்படியே இருக்கட்டும் என்று நினைத்தான்.

"சரி வருகிற வெள்ளிக்கிழமை நல்ல முகூர்த்த நாளாக இருக்கிறது. கிட்டத்தட்ட பதினோரு மாதங்களுக்கு பிறகு நம் வீட்டில் இப்பொழுது தான் அனைவரும் இப்படி ஒன்றிணைந்திருக்கிறோம். அருகில் உள்ள பெருமாள் கோவிலில் ஒரு சின்ன பூஜைக்கு ஏற்பாடு செய்யலாமா? நான் பேங்கில் விடுமுறை சொல்லி விடுகிறேன். அகில், ஹிரணி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று வினவினார் பவானி.

"வருகின்ற வெள்ளிக்கிழமையா... என்ன தேதி வருகிறது?" என்று தன் மொபைல் காலண்டரை ஆராய்ந்த அகில், "சரி ஓகே... எனக்கு பிரச்சனையில்லைம்மா, லீவ் போட்டு விடுகிறேன்!" என சம்மதம் தெரிவித்தான்.

அனைவரின் பார்வையும் ஹிரணியிடம் திரும்ப, "நான் இரண்டு நாட்களாக கம்பெனிக்கு வேறு செல்லவில்லை. நாளைக்கு சென்றால் தான் சரியாக தெரியும் சூழ்நிலையை பார்த்து விட்டு சொல்லட்டுமா? இல்லையென்றால் நீங்கள் அனைவரும் சென்று வாருங்கள்!" என்றாள்.

"ப்ச்... அதெல்லாம் வேண்டாம். அனைவரும் ஒன்றாக குடும்பமாக செல்ல வேண்டும் என்று தான் சொல்கிறேன். அப்புறம் என்ன உன்னை விட்டு விட்டு நாங்கள் மட்டும் செல்வது? உனக்கு எப்பொழுது வசதிப்படும் என சொல் அப்பொழுது நாள் பார்த்துக் கொள்ளலாம்!" என்றார் பவானி லேசான கண்டிப்புடன்.

"சரி நாளை மாலை நான் சொல்லி விடுகிறேன்!" என்றாள் மருமகள் அவசரமாக.

ஹிரணிக்கும் அந்த வெள்ளியே வசதியாக விடுமுறை கிடைக்க அனைவரும் அன்றே கோவிலுக்கு கிளம்பினர். பவானியின் உத்திரவுப்படி இரு தம்பதியினரும் முறையே பட்டுவேஷ்டி சர்ட், பட்டுப்புடவை என்று தங்கள் அறையில் தயாராகி கொண்டிருந்தனர்.

ஹிரணிக்கு தான் சற்றே அலுப்பாக இருந்தது, எப்பொழுதும் வசதி மற்றும் பாதுகாப்பான உடை என்று சுடி, குர்தி போன்ற வகைகள் தான் அவள் அணிவதே, புடவையை அவள் தொட்டும் பார்த்ததில்லை. திருமணத்தின் பொழுது தான் வேறு வழியில்லாமல் நான்கைந்து நாட்களுக்கு புடவையில் சுற்றினாள். அதுவும் அப்பொழுது முதலில் இரண்டு நாட்கள் மட்டும் தான் மங்களத்தின் உதவியுடன் பட்டுப்புடவை வாசம் பிறகு சிம்பிள் காட்டன் புடவை தான் கட்டியிருந்தாள்.

இப்பொழுது பவானியோ மகன்கள், மருமகள்கள் சகிதம் குடும்பம் ஒன்றிணைந்த மகிழ்ச்சியில் அனைவருக்கும் புது துணியை எடுத்து விட்டார். அதனால் அது வேறு சரியாக படிந்து வராமல் ஒரே தொல்லையாக இருந்தது அவளுக்கு, கிட்டதட்ட இருபது நிமிடங்களாக போராடிப் பார்க்கிறாள். மேல்பாதி வரை புடவையை அழகாக கட்டிவிட்டாள், கீழே ஃப்ளீட்ஸ் சுத்தமாக வரமாட்டேன் என்கிறது.

புடவையை கட்டுவதற்கு முன்பே தலைவாரி, அழகாக பவுடர் போட்டு பொட்டிட்ட முகம் வேறு அவளுக்கு இருந்த பதற்றத்தில் லேசாக வியர்க்க ஆரம்பித்தது. ஹர்சுவின் உதவியை நாட வழியில்லாமல் அவள் வேறு இப்பொழுது நிறைமாதமாக இருக்கிறாள். பவானியிடம் இன்னும் அந்த அளவுக்கு உரிமை பாராட்ட வரவில்லை அவளுக்கு.

"ஏய்... முடிந்ததா?" என்று மூன்றாவது முறையாக வந்து கதவை தட்டினான் அகில்.

'ப்ச்... இவன் வேற...'

"ஒரு ஃபைவ் மினிட்ஸ்!" என்று வேகமாக அவனிடம் குரல் கொடுக்கும் பொழுதே, 'அதற்குள் முடித்து விடுவாயா?' என உள்ளிருந்து ஒரு குரல் கேள்வி எழுப்பியது.

"என்ன மறுபடியும் ஃபைவ் மினிட்ஸா? இதையே தான் ஒரு பதினைந்து நிமிடங்களாக சொல்லிக் கொண்டிருக்கிறாய் நீ!" என்றான் அவன்.

ஏற்கனவே இருந்த கடுப்பில் பதிலளிக்காமல் மீண்டும் ஃபீளிட்ஸை முதலில் இருந்து விரல்களுக்கு இடையே மடிக்க துவங்கினாள் ஹிரண்மயி.

"என்ன சத்தத்தையே காணோம்? கிளம்புகிறேன் என பொய் சொல்லி விட்டு கட்டிலில் குப்புற விழுந்து தூங்கிக் கொண்டிருக்கிறாயா?" என்று பெரிதாக அவளிடம் சந்தேகம் வேறு எழுப்பினான் வெளியே காத்திருந்தவன்.

பற்களை அழுந்த கடித்தவள் புடவையிடம் தன் கோபத்தை காண்பித்து மறுபடியும் போராட்டத்தை ஆரம்ப புள்ளியில் இருந்து தொடங்கினாள்.

"ஏய் ஹிரணி... கிளம்பவில்லை என்றாலும் பரவாயில்லை தயவுசெய்து நீ முதலில் கதவைத் திற, கீழே அனைவரும் கிளம்பிவிட்டனர். நல்ல நேரத்தில் கோவிலுக்கு சென்று பூஜையை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த அம்மா வேறு ரொம்ப நேரமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!" என படபடவென்று கதவை தட்டினான்.

அதற்குமேல் முடியாமல் சலித்துக் கொண்டாள் பெண்.

தனக்குள் தோன்றிய பொருமலை அயர்வுடன் விழிகளை மூடி அடக்கியவள் தன்னுடைய புடவையை கொத்தாக அள்ளி வயிற்றில் சொருகிக் கொண்டு வந்து வேகமாக கதவை திறந்தாள்.

உள்ளே வந்த அகிலோ அவளை ஏற இறங்க பார்த்து, "ஓ... கிளம்பி விட்டாயா நீ? சரி சரி... நான் வாஷ்ரூம் போய் ரெப்ரெஷ் செய்து வருவதற்குள் நீ மீதிப்புடவையையும் கட்டிக்கொண்டு கீழே போய்விடு!" என்று விவரம் புரியாமல் சாதாரணமாக சொல்லிவிட்டு சென்றான்.

'ம்க்கும்... அதற்குள் கட்ட முடியுமா என பார்க்கிறேன்!' என்று எண்ணியபடி அவன் கதவை தாளிட்டதும் திரும்பி நின்று தன் வேலையை பரபரவென்று தொடங்கினாள்.

கதவு திறக்கும் ஓசை கேட்கவும் சட்டென்று புடவையை இறுக்கிப் பிடித்தபடி அசையாமல் நின்றாள். நிமிடங்கள்

சில கரைந்தும் அவனிடமிருந்து எந்த சத்தமும் வராமல் போகவும் குழப்பத்துடன் திரும்பி பார்த்தாள் ஹிரண்மயி.

அவனோ கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி அவளை ஆழ்ந்துப் பார்த்துக் கொண்டிருந்தான். விழிகள் தழைய லேசாக துடித்த இதழ்களை கடித்து அதை அடக்கியபடி தடதடக்கும் இதயத்துடன் சட்டென்று மறுபுறமாக திரும்பி நின்றுக் கொண்டாள் பெண். விரல்களால் புடவையை கசக்கிக் கொண்டிருந்தவளுக்கு அவனது காலடியோசை தன்னை நெருங்கவும் பதற்றம் அதிகரித்தது.

தொண்டையில் அடைத்த எச்சிலை மெதுவாக விழுங்கிக் கொண்டிருந்தவளின் தலையில் ஓங்கி ஒரு கொட்டு வைத்தவன், "புடவை ஒழுங்காக கட்டத் தெரியாதென்றால் சொல்ல மாட்டாயா? என்ன ஃப்ளீட்ஸ் சரியாக வரமாட்டேன் என்கிறதா... இதற்கு தான் உள்ளேயே அடைந்துக் கொண்டு இவ்வளவு நேரம் செலவழித்துக் கொண்டிருந்தாயா?" என்று வினவியவன் இயல்பாக கீழமர்ந்து அவளின் புடவையின் மடிப்பை பார்க்க அது ஒழுங்கற்று இருந்தது.

அவளிடம் விழிகளை உயர்த்தியவன், "மடிப்பெடுக்க கூட தெரியாதா உனக்கு!" என்று எழுந்து அவள் கரத்திலிருந்த புடவையை இழுத்து பிடுங்க அதிர்ந்து போனவள் வேகமாக அவன் கரம்பற்றி தடுத்தாள்.

"என்ன செய்கிறீர்கள்?"

"ஏன் பார்த்தால் எப்படி தெரிகிறது உனக்கு? புடவையை மடிப்பெடுக்கப் போகிறேன்!" என்றான் அகில் அசட்டையாக.

"அதெல்லாம் எதுவும் வேண்டாம்... எனக்கு அது தெரியும், கீழே ஃப்ளீட்ஸ் தான் ஒழுங்காக வரமாட்டேன் என்கிறது!" என்றாள் சலிப்புடன்.

"அப்புறம் ஏன் நீ புடவையை இப்படி பிடித்துக் கொண்டு நிற்கிறாய்?"

"அது... நான் எப்படி எப்படியோ மடிப்பை மாற்றி மாற்றி பிரித்துப் பார்க்கிறேன், ஆனால் இது மட்டும் ஒழுங்காக வராமல் எனக்கு ரொம்பவே எரிச்சலை கிளப்புகிறது!" என்று சின்னப்பிள்ளையாய் முகத்தை சுளித்தாள்.

அவளின் முகச்சுளிப்பை சில நொடிகள் ரசித்துப் பார்த்தவன் அவள் கன்னம் கிள்ளி முத்தமிடத் தோன்றிய உணர்வை ஏக்கத்துடன் விழுங்கி, "உள்ளே வர விடாமல் என்னை வெளியே வெட்டியாக நிற்க வைத்துக் கொண்டிருந்தாயே அப்பொழுதே சொல்வதற்கென்ன?" என்று ஹிரணி எடுத்த புடவை மடிப்பை கீழே சரியாக இழுத்து விட்டான்.

"இது... இதையெல்லாம் எப்படி நான் உங்களிடம் சொல்ல முடியும்?" என்றாள் அவள் உள்ளே போன குரலில்.

"ஏன் அதில் என்ன பிரச்சனை உனக்கு? நீ என்னுடைய மனைவி தானே?" என்று அவளை ஆழ்ந்து நோக்கினான்.

அகிலின் பார்வைக்கான அர்த்தத்தை புரிந்துக் கொள்ள இயலாமல் தடுமாறினாள் ஹிரணி. அதில் தெரிந்த உரிமை அவளுக்கு சற்று மகிழ்ச்சியை கொடுத்தாலும் இடையே பானக துரும்பாக இருக்கின்ற அவனுடைய காதல் நாயகி அவளிடம் ரொம்பவே குழப்பத்தை ஏற்படுத்தினாள்.

39

ஹிரணியின் முகத்தில் தோன்றிய குழப்பத்திற்கான விடை தனக்கு நன்றாக தெரிந்திருந்தாலும் அதை கூறி அவளை தெளிவுப்படுத்த விரும்பாமல் தன் வேலையில் கவனத்தை செலுத்தினான் அகிலன்.

"ஓகே ஃபைன்... இப்பொழுது சரியாக இருக்கிறதா?"

குனிந்து புடவையை கவனித்தவள், ம்... என்று முனகினாள்.

"சரி நேரமாகி விட்டது, நான் போய் டிரஸ் சேஞ்ச் செய்கிறேன்!" என்று அவன் வார்ட்ரோபிடம் செல்லவும், திரும்பி கண்ணாடியில் ஒருமுறை தன்னை விரைவாக சரி பார்த்துக் கொண்டவள் கீழே சென்றாள்.

ஹாலில் பவானியும், விமலும் பூஜை பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்க, ஹர்சிதா அமைதியாக அதை கவனித்தபடி அருகில் நின்றுக் கொண்டிருந்தாள்.

ஹிரணியை கண்டதும் ஆவலுடன் அவளருகில் வந்த ஹர்சு, "ஹேய்... சூப்பர்ப், புடவையில் ரொம்ப அழகாக இருக்கிறாய், என் கண்ணே பட்டு விடும் போலிருக்கிறது. இன்று தான் உன்னை முதல் முறையாக புடவையில் பார்க்கிறேன்!" என்று அவள் கன்னம் வருடினாள்.

க்ளுக்கென்று சிரித்தவள், "அக்கா... ஆல்ரெடி திருமணமான புதிதில் ஒருநாள் நான் புடவை கட்டியிருந்தேன். ஆனால் நீங்கள் தான் அத்தானை பற்றிய கவலையில் இருந்ததால் என்னை அப்பொழுது சரியாக கவனிக்கவில்லை!" என்று கண்சிமிட்டினாள்.

ஏய்... என்று பொய்யாய் முறைத்தபடி ஹர்சிதா அவள் முதுகில் தட்ட, விமலோ தன் மனைவியை காதலுடன் பார்த்திருந்தான்.

"ஓகே... ஐ ஆம் ரெடி!" என்று சத்தமாக அறிவித்தவாறு படியில் இளம் துள்ளலுடன் இறங்கிய அகிலை பார்த்த

ஹிரண்மயி இமைக்க மறந்துப் போனாள்.

ராம்ராஜின் ஒட்டிக்கோ கட்டிக்கோ வேஷ்டியும் ஹிரணியின் புடவைக்கு மேட்சாக பேபி பிங்க் நிற சில்க் சட்டையும் அணிந்து வந்தவனிடம் தெரிந்த கம்பீரம் அவள் இதயத்தை கொள்ளைக் கொள்ள, இருவருடைய உடை பொருத்தத்தையும் விழிகளால் விழுங்கியவளுக்கு இவன் என்னவன் என்கிற பெருமை தன்னால் எழுந்தது.

அடர்ந்துப் பளபளத்த கருநிற சிகை அவனுடைய நடைக்கு ஏற்ப அலையலையாய் துள்ளிவிழ, அதை தொட்டு தடவ வேண்டும் என தனக்குள் எழுந்த பேராவலை அடக்க மிகவும் சிரமப்பட்டு போனாள் அவள்.

"ம்... என்ன எல்லாம் முடிந்ததா கிளம்பலாமா?"

"நாங்கள் எல்லோரும் எப்பொழுதோ ரெடி... நீதான் லேட்!" என்று குற்றம் சாட்டினான் விமல்.

"ஆங்... நான் வருவதற்கு ஏன் தாமதமானது தெரியுமா?" என்று அகில் வேகமாக ஆரம்பிக்கவும் ஹிரணி சட்டென்று அவன் கரத்தில் தன் கரத்தை வைத்து அழுத்தினாள்.

அதில் சிலீரென்று தாக்கப்பட்டவன் அவள் விழிகளுக்கு தன் விழிகளை உயர்த்த, ப்ளீஸ் என்று பார்வையை சுருக்கி கெஞ்சுதலாக இறைஞ்சினாள் பெண்.

முகத்தில் பட்டென்று குறும்பு கொப்பளிக்க கள்ளத்தனமாக நகைத்தவன் அவளின் பிடியை தனதாக்கி கொண்டு, "சரி நான் போய் காரை எடுக்கிறேன்!" என்று அவளை இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

அகிலின் ஸ்பரிசமும், அழுத்தமும் ஹிரணியினுள் இனம் புரியா ஹார்மோன் போராட்டத்தை துவக்கி வைக்க, அதை தடுக்கும் வழி தெரியாது தடுமாற்றத்துடன் நடந்தாள்.

"ம்... உட்காருங்கள் வொய்ஃபை!" என ஸ்டைலாக குனிந்து அவளுக்கு கார் கதவை திறந்துவிட்டு முறுவலித்தவனை வினோதமாகப் பார்த்தவள், "இப்பொழுது ஏன் திடீரென்று கையை பிடித்து அழைத்து வந்து ஓவர் சீன் போடுகிறீர்கள்... ஓ... உங்கள் அம்மா, அண்ணாவிற்காக இப்படி நடந்துக் கொள்கிறீர்களா?" என்றாள் உடனே சந்தேகமாக.

அதுவரை இருந்த குதூகலம் அனைத்தும் மறைந்து அந்த இடத்தை எரிச்சல் முழுதாக ஆக்கிரமித்துக் கொள்ள, 'ஏன்டி ஒரு தடவையாவது எதையும் சரியாக யோசிக்க மாட்டாயா நீ? ஆனால் பார்த்துக் கொண்டே இரு... இதற்கெல்லாம் உன்னை சும்மா விடமாட்டேன். எப்படி தவிக்க விடுகிறேன் என்று மட்டும் பார்!" என உள்ளுக்குள் பயங்கர கடுப்புடன் மனைவியை பார்த்து கறுவினான் அகில்.

"ஹூம்... நீதான் மிகவும் புத்திசாலி ஆயிற்றே, அதுதான் சுலபமாக கண்டுப்பிடித்து விட்டாய். பின்னே... இப்பொழுது தான் அனைவரும் ஒன்றாகி விட்டோம் என்று என் அம்மா நிம்மதியாக இருக்கிறார்கள். அவர்கள் சந்தோசத்தை ஏன் கெடுக்க வேண்டும்?" என்று அலட்சியமாக தோள்களை குலுக்கிவிட்டு உள்ளூர புகைச்சலுடன் சென்று டிரைவிங் சீட்டில் அமர்ந்தான் நாயகன்.

அவன் வார்த்தைகளில் உடனே இவள் முகம் சூம்பிவிட, 'ஒரு பேச்சுக்காகவாது அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என ஏதாவது சொல்கிறானா பார்!' என்று மனம் சுணங்கி அவனை ஓரவிழியில் நோக்கினாள் நாயகி.

"காரின் உள்ளே உட்காராமல் என்ன யோசனை செய்துக் கொண்டிருக்கிறாய்?" என அவள் தோள் தொட்டார் பவானி.

"இல்லை அது... நீங்கள் அனைவரும் வந்தப் பின் ஏறிக் கொள்ளலாம் என்றிருந்தேன்!" என அவரிடம் ஏதோ கூறி சமாளித்து விட்டு முன்பக்கம் அமர்ந்தாள்.

மாலையில் பெண்கள் மூவரும் தோட்டத்தில் பூப்பறித்தபடி தங்களுக்குள் எதையோ அலசிக் கொண்டிருக்க, இங்கே விமல் தன் தம்பியை ஓரங்கட்டி வந்தான்.

"டேய்... டேய்... இப்பொழுது எதற்கு அண்ணியிடம் செய்ய வேண்டியதை எல்லாம் மாற்றி என்னிடம் செய்துக் கொண்டிருக்கிறாய்? இதற்கு மேல் வேறு எதுவும் அசிங்கம் செய்து விடாதேடா!"

"அட ச்சீய்... என்ன கொழுப்பா? அப்படியே மண்டையில் ஒன்று ஓங்கி போட்டேன் என்றால் தெரியும்!"

"அப்புறம் என்ன நீ எதற்கு இப்படி..." என ஆரம்பித்தவனின் வாயை அழுத்தமாக மூடியவன், "முதலில் என்னுடைய சந்தேகத்தை தெளிவுப்படுத்துடா?" என்றான் அதிகாரமாக.

"ஹ்ஹ... சந்தேகமா... அது என்ன?" என்று அலட்சியமாக கேட்டபடி அண்ணனை பார்த்தான் அகில்.

"இல்லை... நீயும், ஹிரணியும், கணவன் மனைவி தானே?"

"என்ன அப்படியா?" என்று யோசிப்பது போல் பாவனை செய்தவனின் தோளில் ஒரு தட்டு தட்டினான் விமல்.

"அப்புறம் என்ன லூசுத்தனமாக கேட்கிறாய் என் திருமண ஆல்பத்தை பார்த்தாய் அல்லவா?"

"அதெல்லாம் சரிடா... ஆனால் ஏன் இருவரும் உரிமையுள்ள கணவன், மனைவி போல் நேருக்கு நேராக ரசிக்காமல் ஏதோ ஒருதலை காதலர்கள் போன்று ஒருவரையொருவர் மற்றவர் பாராத நேரமாக அப்படி திருட்டுத்தனமாக சைட் அடிக்கிறீர்கள்?" என்றான் புரியாமல்.

"ம்... அதெல்லாம் என் தலையெழுத்து!" என்று நொந்தபடி தனக்குள் பெருமூச்சு விட்டவன் சட்டென்று விறைத்து, "என்ன... ஏய் இப்பொழுது நீ என்ன சொன்னாய்? அந்த

டகால்டியுமா என்னை லுக்கு விடுகிறாள்?" என்றான் அகில் ஆவலே வடிவாக.

புருவம் சுளித்து தன்னை கூர்ப் பார்வை பார்த்தவனிடம் ஈயென்று பல்லைக் காண்பித்தவன் பின் தன் சொந்தக் கதை சோக கதையை சோர்வாக சொல்ல ஆரம்பித்தான்.

அவனை திகைப்புடன் ஏறிட்டவன், "அப்பொழுது அவள் உன்னை விட்டுப் பிரிந்து போய் விடுவேன் என்றே சொல்லி விட்டாளாடா?" என்றான்.

"பின்னே... இவ்வளவு நேரமாக நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன்!" என்று முகம் சுளித்தான் அகில்.

"முன்னர் அவள் எப்படியிருந்தாளோ தெரியாதுடா, ஆனால் இப்பொழுது நிச்சயமாக ஹிரணி உன்னை விரும்புகிறாள். பார்க்கும் பார்வையிலேயே அது நன்றாக தெரிகிறது!"

"எனக்கும் புரிகிறது... அவ்வப்பொழுது எனக்கு தோன்றிய சந்தேகம் தான். இன்று உன்னால் அது உறுதியாகி விட்டது!" என்று பெருமையாக முறுவலித்தான்.

"அதுதான் உனக்கு எல்லாம் புரிந்து விட்டதே... இதற்கு மேல் எதுவும் வளர்த்தாமல் அவளிடம் நீதான் மயூ என்று விவரம் சொல்லிவிடு!" என்றான் விமல்.

"எது... நோ நோ... அதெல்லாம் முடியாது, அஸ்க்கு புஸ்க்கு... நான் மட்டும் ஆரம்பத்திலிருந்தே அவள் மீது ஆசையாக இருப்பேனாம். ஆனால் அந்தம்மா என்மீது கொஞ்சம் கூட ஈர்ப்போ அக்கறையோ இல்லாமல் என்னை விட்டுப் பிரிந்து போய் விடுவேன் என்று சொல்லி திமிராக திரிவாளாம். இப்பொழுது அவளுக்கு காதல் வந்து விட்டது என்பதற்காக நான் மட்டும் உடனே அவளை ஏற்றுக்கொள்ள வேண்டுமா... அதெல்லாம் முடியாது!" என்றான் வீம்பாக.

"டேய் பைத்தியக்காரா... காதலில் எப்பொழுதும் வீம்பையும், சுயகௌரவத்தையும் நுழைய விடக்கூடாதுடா. அது உங்கள் இருவருக்கும் தான்

பேரிழப்பு. அவளை தவிக்க விடுவதால் மட்டும் நீ மகிழ்ச்சியாகவா இருக்கிறாய்?"

"இல்லைதான்... அதேசமயம் இதை நான் வீம்புக்காக மட்டும் பிடிவாதம் பிடிக்கவில்லை. எதுவுமே சுலபமாக கிடைத்து விட்டால் அதன் மதிப்பு சரியாக புரியாது. அது காதலுக்கும் பொருந்தும், இப்பொழுது தான் அவளுக்கு என் மேல் ஈர்ப்பு தோன்றியிருக்கிறது. அது இன்னும் ஏக்கமாக மாறட்டும், அப்பொழுது தான் என்னுடைய உறவை சரியாக தெளிவாக உறுதியாக புரிந்துக் கொள்வாள் அவள்!"

"என்னவோ பெரிய தத்துவம் பேசுகிறாய் போ, உனக்காவது அவளுக்கு வேறு அஃபேர் எதுவும் இல்லை என்பது நன்றாக தெரியும். எத்தனை நாட்களுக்கு வேண்டுமென்றாலும் நீ காத்திருப்பாய். ஆனால் அவள் தான் பாவம்... நீ புகுத்திய மயூ கேரக்டரை எண்ணி ஒவ்வொரு நிமிடமும் தவித்துக் கொண்டிருப்பாள்!" என அவளுக்காக வருந்தினான் விமல்.

பக்கென்று நகைத்த கள்வனோ, "ஹஹா... ஆமாம்டா... அது என்னவோ வாஸ்தவம் தான். ஒருசில நேரம் மயூவை குறிப்பிட்டு அவள் வெளிப்படையாக பொருமும் பொழுது எனக்கு செம வேடிக்கையாக இருக்கும். அந்த நேரத்தில் அவளுடைய திமிர் முகம் கோபத்திலும், பொறாமையிலும் சிவந்திருக்கும் அழகைப் பார்க்க கண் கோடி வேண்டும்!" என்று அகில் சிலாகிக்க, அவன் முதுகில் பலமாக ஒன்று வைத்த விமல், "அந்தப் பிள்ளையோட டென்ஷன் உனக்கு ஜாலியாக இருக்கிறதாடா?" என முறைத்தான்.

"ப்ச்... சும்மா நீ டென்ஷனாகாதேடா, இதெல்லாம் உங்களை மாதிரி சாஃப்ட் ஜோடிக்கு ஒன்றும் புரியாது. எங்களை மாதிரி அடாவடி ஆட்களுக்கு அதில் தான் த்ரில்லே..." என்று அண்ணனிடம் கண்ணடித்தான்.

"நான் பார்க்கிற வரை பார்ப்பேன்டா, அப்புறம் உன் மயூ கதையை அவளிடம் நானே போட்டு உடைத்து

விடுவேன்!" என எச்சரிக்கை விடுத்து விட்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்த விமலை தொடர்ந்தபடி, நோ... நோ என்று ஏதோ பேரம் பேசிக் கொண்டு சென்றான் அகில்.

இரவில் சரியாக உறக்கம் வராமல் புரண்டுப் படுத்த அகிலன் தன்னருகில் உறங்கி கொண்டிருக்கும் காதல் மனைவியை ஆசையுடன் பார்த்தான்.

முன்பெல்லாம் இரவு உறங்கும் பொழுது போர்வையை தலைவரை இழுத்து போர்த்தி தன் முகத்தை மறைத்து கொள்பவள் இப்பொழுது எல்லாம் இயல்பாக கழுத்து வரை மட்டும் போர்த்திக் கொண்டு உறங்குகிறாள்.

தன்னுடைய அருகாமையை ஒரு மனைவியாய் அவளின் மனமும், உடலும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டது என்பது அவளுக்கு புரிந்தாலும் அதை அவள் வெளிப்படுத்த தயங்குவதை எண்ணி லேசாக கோபம் எட்டிப் பார்த்தது அவனுக்கு.

எல்லாவற்றிலும் எதையும் எடுத்தெறிந்துப் பேசி சண்டைப் போட தெரிந்தவளுக்கு... இதில் மட்டும் தடுமாற்றம் ஏன்? நீ என் புருஷன்டா உன்னை எவளுக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன் நான் என்று என் சட்டையை பிடித்துக் கேட்க வேண்டியதுதானே... என்று கோபமாக தன் மனைவியிடம் பொருமியவன் அதை கற்பனையில் விழிமூடி ரசித்துப் பார்த்து மகிழ்ந்தவனாக அவளை நெருங்கிப் படுத்தான்.

'நீ என்றைக்குடி என்னிடம் அப்படி சண்டைப் போடுவாய்? விமல் சொன்னதுப் போல் உன்னை பழிவாங்குகிறேன் என்று உண்மையில் நான் தான் தவியாய் தவிக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிஜம் நன்றாக தெரிந்துக்கொள், என்று என்னிடம் உன் காதலை நீ வெளிப்படுத்துகிறாயோ அன்றே நல்ல வசமாக சிக்கிக் கொள்ளப் போகிறாய்!' என உல்லாசமாக புன்னகைத்தான்.

மறுநாள் இரவு ஏழு மணியளவில் தங்கள் வீட்டிற்கு வந்த ஜெய்சங்கரை வரவேற்று உபசரித்த பவானி, "என்னப்பா சாப்பிடுகிறாய் டீ ஆர் காபி?" என்று வினவினார்.

"டீ ஓகேம்மா... என்ன வீட்டில் உங்களை தவிர வேறு ஒருவரும் இல்லையா?"

"இல்லை... விமல் ஹர்சுவை அழைத்துக் கொண்டு அருகில் உள்ள பூங்காவிற்கு வாக்கிங் சென்றிருக்கிறான். அகிலும், ஹிரணியும் அநேகமாக இந்நேரம் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருப்பார்கள்!"

அடுத்த பத்து நிமிடங்களில் வீட்டினுள் வந்த விமல், "ஹேய் ஜெய்... வாங்க வாங்க!" என்று மகிழ்ச்சியாக வரவேற்றான்.

புன்னகை முகமனாக அவனிடம் தலையசைத்த ஹர்சிதா மெல்ல சென்று விமலின் அருகில் அமர்ந்தாள்.

"இரண்டு பேரும் எப்படி இருக்கிறீர்கள்?"

"ரொம்பவே நன்றாக இருக்கிறோம்!" என முறுவலித்தவன், "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என விசாரித்தான்.

"பைன்... உங்களுக்கு டெலிவரி டேட் எப்பொழுது சிஸ்டர்?"

"அதற்கு இன்னும் இருபது நாட்கள் இருக்கிறது, அடுத்த வாரம் வளைக்காப்பு வைக்கலாம் என்று அத்தை நாள் பார்த்திருக்கிறார்கள். நீங்களும், அம்மாவும் நிச்சயம் வர வேண்டும். இவரும், தம்பியும் உங்கள் வீட்டிற்கே வந்து நேரில் அழைப்பார்கள்!" என்றாள் ஹர்சு புன்னகையுடன்.

"அதற்கென்ன கண்டிப்பாக வருகிறோம்!"

"அப்புறம் ஜெய்... அந்த வாசுதேவன் இஸ்யூ என்னவாயிற்று நம் திட்டப்படி எதுவும் மூவ் ஆகிறதா?" என்று விசாரித்தான் விமல்.

"ம்... ஆக்ட்சுவலி அதை சொல்லத்தான் இப்பொழுது நான் இங்கே வந்தேன். ஏற்கனவே நான் நினைத்தபடி நண்பர்கள் உதவியுடன் மாசானத்தை கொஞ்சம் தூண்டி விட்டதில் வாசுதேவனின் ரியல்எஸ்டேட் தொழில் பெரிதும் அடிப்பட்டு விட்டது. உலகத்தின் முன்பு தன்னுடைய அடையாளம் தெரியாமல் மறைந்துக் கொள்ள முயன்றவனை ஏற்கனவே நீங்கள் மெயிலில் விபரம் சேகரித்து வைத்திருந்த சதீஷின் நண்பர்களுக்கு கைகாட்டி விட்டேன். மேலும் நாடு முழுவதும் உள்ள அனைத்து மீடியாக்களுக்கும் ரகசிய பெயரில் அவனை பற்றிய புகார்கள் அனைத்தையும் முழுவதுமாக அனுப்பி வைத்துவிட்டேன். இப்பொழுது எங்கும் தப்பி செல்ல வழியில்லாதபடி மாட்டிக்கொண்டு விழிக்கிறான். வாசுதேவன் சார்ந்திருந்த கட்சி ஆட்களுக்கு எதிராக மற்ற வாய்சவடால் தம்பட்ட கட்சிகளை திசை திருப்பி விட்டதில் ஏகத்திற்கும் சிக்கிக் கொண்டுள்ளான். ஒரு இடம் விடாமல் ஊர் ஊராக அவனையும், அவனை சார்ந்தவர்களையும் பற்றி எதிர்கட்சியினர் மேடைப்போட்டு கிழிகிழியென்று கிழிப்பதால் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடக்கிறான்!" என்று மகிழ்ச்சியோடு அறிவித்தான் ஜெய்.

40

"ஓ... தாங்க் காட்!" என விழி மூடி ஒரு நொடி மேலே பார்த்துவிட்டு ஜெய்யிடம் திரும்பி, “அப்பொழுது இனிமேல் அந்த வாசுதேவனால் இவருக்கு எந்த தொந்திரவும் வராது இல்லையா?" என்று ஆவலுடன் வினவினாள் ஹர்சிதா.

"கிட்டத்தட்ட அப்படிதான்... லக்கிலி, விமல் தப்பிப்பதற்கு முன்பே மாசானம் வாசுதேவனை குடைகின்ற வேலையை ஆரம்பித்து விட்டது நமக்கு மிகவும் வசதியாகப் போயிற்று. ஏனெனில் ஆல்ரெடி ரியல் எஸ்டேட் பிரச்சனை துவங்கி விட்டதால் இவர் மேல் அவர்களுக்கு எந்தவித சந்தேகமும் வராது. அது மட்டுமில்லாமல் நம்முடைய தூண்டுதலால் உண்டான பிரச்சினைகள் அனைத்தும் இப்பொழுது அவனுக்கு பெரும் தலைவலியை உண்டாக்கி இருக்கிறது. அதிலிருந்து அவனால் அவ்வளவு சுலபத்தில் வெளிவர முடியாது. நாம் இப்படி மறைவாக பின்புலத்தில் இருந்து செயல்படுவது யாருக்கும் தெரியாது. ஆதலால் அவனால் எதிர்காலத்தில் உங்களுக்கு எதுவும் புதிதாக தொந்திரவு ஏற்பட்டாலும் நீங்கள் தெளிவாக மாசானத்தை கைக்காட்டி விடுங்கள் விமல். அவனுக்காக தான் இதில் தலையிட்டேன் அலுவலகத்தில் வந்துப் பிரச்சினை பண்ணவும் எனக்கு வேறுவழி தெரியவில்லை. ஆனால் இப்பொழுது விலகி விட்டேன் அவனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என உறுதியாக சொல்லி விடுங்கள் நீங்கள், மற்றதை வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்!" என்று அவன் கரம்பற்றி தைரியமூட்டினான் ஜெய்சங்கர்.

"ஒகேப்பா!" என்று விமல் தலையசைக்க, "நல்லவேளை செய்தாய் ஜெய்... இப்பொழுது தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது!" என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் பவானி.

"அதெல்லாம் ஒன்றும் ஒர்ரி பண்ணிக்காதீங்கம்மா, எது வந்தாலும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று அவன் அவருக்கு தைரியம் சொல்லிக் கொண்டிருந்த நேரம் அகிலும், ஹிரணியும் ஒன்றாக வீட்டினுள் வந்தனர்.

"ஹேய் ஜெய்... வாட் அ ப்ளசன்ட் சர்ப்ரைஸ்! எப்பொழுது வந்தாய்?" என்றபடி அவனருகில் வந்து அமர்ந்தான் அகில்.

"ஹாய் அண்ணா!" என்று முறுவலித்தாள் ஹிரணி.

"என்ன அதிசயமாக முன்னே பின்னே இல்லாமல் காரும், ஸ்கூட்டியும் ஒரே நேரத்தில் வந்திருக்கிறது!" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டார் பவானி.

"அதை ஏன் அத்தை கேட்கிறீர்கள்... இவர் கார் பஞ்சராகி விட்டதாம், நீ எங்கே இருக்கிறாய் என்னை பிக்கப் செய்துக் கொள்ள முடியுமா என ஆறரைக்கு போன் செய்தார். நான் கிளம்புவதற்கு இன்னும் அரைமணி நேரமாகும் என்று சொன்னேன், சரி நீ வரும் வழியில் லிங்க் ரோடில் வெயிட் பண்றேன் என அங்கு வந்து நின்றுக் கொண்டிருந்தார். பிறகு இருவரும் ஒன்றாக என்னுடைய வண்டியில் வந்து விட்டோம்!" என்று விளக்கினாள் ஹிரண்மயி.

பவானியும், ஹர்சுவும் மின்னலினும் வேகமாக பார்வையை பரிமாறிக் கொண்டவர்கள் அகிலை பார்த்து கேலியாக சிரித்தனர். அவர்களிடம் சற்றே அசடு வழிந்து விட்டு ஜெய்யிடம் திரும்பினான் அவன்.

"கார் எப்பொழுதுடா பஞ்சரானது? சர்வீஸ் சென்டருக்கு உடனே சொல்லி விட்டாயா?" என்று விவரம் புரியாமல் தம்பியை கேள்வி கேட்டான் விமல்.

அது... என்றவனை வேகமாக இடையிட்டு, "அதெல்லாம் அவன் சொல்லி இருக்கமாட்டான்டா, நாளைக்கெல்லாம் அவனுடைய கார் ரெடியாகி விடும்!" என்று அமர்த்தலாக கூறினார் பவானி.

ஹர்சு பொங்கி வெடித்த சிரிப்பை மறைக்க சோபாவின் பிடியில் தன் முழங்கையை ஊன்றி தாடையை அழுந்த தாங்கிக் கொண்டாள். விமல் ஒன்றும் புரியாமல் அவளை பார்க்க அவளோ விழிகளை உருட்டி அவனை எச்சரித்தாள்.

நடக்கும் நாடகத்தை கூர்மையாக கவனித்த ஜெய், "இங்கே என்ன நடக்கிறது?" என்றான் நெற்றி சுருங்க.

என்ன மாட்டிவிடப் பார்க்கிறீர்களா... என்பது போல் தன் தாயிடம் தீப்பார்வை ஒன்றை செலுத்திய அகில் ஜெய்யின் கரத்தை அழுத்தி, "அதெல்லாம் ஒன்றும் இல்லைப்பா, எங்கம்மா இப்படி தான் அவ்வப்பொழுது சம்பந்தம் சம்பந்தமில்லாமல் ஏதாவது பேசுவார்கள். நீ முதலில் உன் விஷயத்தை கூறு!" என்று பேச்சை திசைத்திருப்பினான்.

அவனை சற்று சந்தேகமாக பார்த்தவன் பிறகு அவனிடம் தனிமையில் பேசிக் கொள்ளலாம் என்று அதை மேலும் கிளறாமல் விட்டு விட்டான்.

அனைவரிடமும் கலகலத்து விட்டு இரவு உணவையும் அங்கேயே முடித்துவிட்டு கிளம்பிய ஜெய், அகிலின் கரத்தை விடாமல் பற்றி இழுத்துக் கொண்டு வெளியே அழைத்து சென்றான்.

"ஏய்... என்ன திருட்டுத்தனம் செய்கிறாய் நீ? ஏன் அம்மா, அண்ணி இருவரும் உன்னை பார்த்து அப்படி ரகசியமாக சிரிக்கிறார்கள்?"

அது... என்றவன் உள்ளே ஒருமுறை எட்டிப்பார்த்து விட்டு, "இதற்கு தான் எதை செய்தாலும் மிகவும் ரகசியமாக செய்ய வேண்டும் என்பது, ஒருமுறை மாட்டிக்கொள்ளவும் மறுமுறை ரொம்பவே சுலபமாக கணித்து விட்டார்கள்!" என வெகுவாக அலுத்துக் கொண்டு, கார் பஞ்சராகவில்லை தன்னுடைய அலுவலகத்தில் தான் பத்திரமாக நிற்கிறது என்ற உண்மையை போட்டு உடைத்தான்.

பக்கென்று வெடித்து சிரித்தவன் அவன் தோளை தட்டி, "நாளை காலையில் என்னடா செய்வாய்? மறுபடியும் லிஃப்டா!" என்றான் இதழ்கள் துடிக்க.

"அதே... அதே... பழைய லிஃப்ட் பிட்டையே மீண்டும் போட்டு எப்படியாவது அவளோடு தொத்திக் கொண்டு அலுவலகம் சென்று விடுவேன். அதற்காக வேறு காலையில் கொஞ்சம் நேரமாக கிளம்ப வேண்டும்!" என்று கண்சிமிட்டினான்.

"கேடிப் பையன்டா நீ... பாவம் என் தங்கை!"

"ஐயோடா... ரொம்பவும் தான் உருகாதே, இந்த கேடிக்கும் கேடி அவள். கொஞ்சம் ஏமாந்தேன் தலையில் மிளகாய் அரைத்து விடுவாள். இல்லாமலா... கல்யாணம் முடிந்த மறுநாளே என் அறையில் நான் குளித்து முடித்து வெறும் டவலோடு வந்ததற்கு டீஸன்ஸி பற்றி கேள்வி எழுப்புவாள் அவள். ஏதோ என் மேல் அவளுக்கு இருக்கும் ஒரேயொரு குழப்பத்தை பயன்படுத்தி சாதூர்யமாக காலத்தை தள்ளிக் கொண்டிருக்கிறேன்!" என புலம்பியவனிடம் புன்னகையுடன் மறுநாளைக்கு வாழ்த்து கூறி விடைப்பெற்றான் ஜெய்.

திருமணப் புடவை கட்டி தலைக்கொள்ளாப் பூக்களுடன் கன்னங்கள் இரண்டும் சந்தனத்தில் மினுமினுக்க கைகள் நிறைய கண்ணாடி வளையல்கள் அடுக்கி இதழ்களில் உறைந்து விட்ட புன்னகையுடன் முகம் மலர்ந்து விகசிக்க ஹிரணியிடம் பேசிக் கொண்டிருக்கும் தன் மனைவியை காணக்காண நெஞ்சம் முழுவதும் கரைக்காணா நேசத்தில் விம்மி தணிந்தது விமலுக்கு.

"அடடடடா... கடவுளே... இவங்க லவ்ஸ் பெரிய லவ்ஸாக இருக்கிறதுப்பா... என்னால் ஒன்றும் முடியவில்லை!" என்று ஜெய் அலுத்துக் கொள்ளும் குரல் கேட்டு வேகவேகமாக தன்னவளிடமிருந்து பார்வையை விலக்கியது அண்ணன் விமல் மட்டும் இல்லை தம்பி அகிலும் தான்.

"இப்பொழுது என்ன... இல்லை என்னங்கிறேன்?" என்று அவன் முகத்திற்கு நேராக தன் கையை ஆட்டிய அகிலின் கரத்தை பிடித்து இறக்கி, "எதற்காக இருவரும் என்னை இப்படி வெறுப்பேற்றுகிறீர்கள்?" என்றான் ஜெய் சோகமாக.

"ஹஹா... அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? நீதான் பெரிய உத்தமபுத்திரனை போல் இறுதியாக போனில் பேச முயன்ற சிஸ்டரையும் ஏதோ ஒன்றை பேசி சமாளித்து அவளுடைய காதலை சொல்ல விடாமல் பட்டென்று கட் பண்ணிவிட்டாய். அப்புறம்... இப்பொழுது அழுதால் என்ன செய்வது?" என்று நக்கலாக கேட்டான் அகில்.

"எல்லாம் என்னுடைய நேரம்டா!" என்று ஜெய் முறைக்க, "சரி விடுப்பா... அவன் கிடக்கிறான். நீ செய்தது மிகவும் நல்ல செயல் தான், படிக்கின்ற பெண்ணின் மனதை அப்படி கெடுக்க கூடாது!" என அவனை பாராட்டினான் விமல்.

"ஆமாம் ஆமாம்... எங்க வீட்டு இசைஞானி... ச்சீய்... தத்துவ ஞானி சொல்கிறார் நன்றாக கேட்டுக்கொள். நீ அவாயிட் செய்கிறாய் என சிஸ்டர் எதுவும் தப்பாக நினைக்காமல் இருந்தால் சரி!" என்று அசட்டையாக தோள்களை குலுக்கி அவன் வயிற்றில் புளியை கரைத்தான் அகில்.

"ஏய்... ஏன்டா இப்படி? உன் பெண்டாட்டியை நீ நல்லா சைட் அடிடா ராஜா நான் டிஸ்டர்ப்பே பண்ணலை. ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது மணி நிச்சயம் என்னை புரிந்துக் கொள்வாள்!" என்று பெருமையுடன் கூறினான் ஜெய்.

"பாருடா..." என மேலும் சீண்டியவனை, "இரு இரு... மயூ யார் என்பதை ஹிரணியிடமே சொல்கிறோம்!" என்று பதற வைத்து ஓரங்கட்டி சென்றனர் ஜெய்யும், விமலும்.

திலக்கை தங்கள் அருகில் அமர வைத்து ஹர்சுவும், ஹிரணியும் ஏதோ கதைப்பேசி அவனை சிரிக்க

வைத்துக் கொண்டிருந்தனர்.

செண்பகம் அவர்களை கனிவுடன் பார்த்துக் கொண்டிருக்க, "திலக் ரொம்பவும் அமைதியான பையனாக தெரிகிறானே வீட்டிலும் அப்படித்தானா? இப்பொழுது எல்லாம் எந்த சுட்டித்தனமும் இல்லாமல் இப்படிப்பட்ட அமைதியான பிள்ளையை பார்ப்பதே மிகவும் அரிதாக இருக்கிறது!" என்று முறுவலித்தார் பவானி.

அவரிடம் திரும்பிய செண்பகத்தின் விழிகளில் மெல்லிய வேதனையின் சாயல் தெரிந்தது.

"திலக்கை பற்றிய விவரம் எதுவும் உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டார் அவர்.

"ஆங்... எங்களிடம் அன்று ஹிரணி நடந்த அனைத்தையும் கூறினாள்!" என்றார் பவானி வருத்தத்துடன்.

"இந்தப் பையனுடைய குடும்பத்தின் நிலையை ஜெய் சொல்லும் பொழுது என்னுடைய கண்களில் ரத்தம் வராத குறைதான் அத்தனை வேதனையாக இருந்தது!" என்று துளிர்த்த விழிநீரை பிறர் அறியாமல் லேசாக ஒற்றி எடுத்தவர், "என்ன கொடுமை பாருங்கள்... இந்த பிஞ்சு குழந்தை கண் முன்னாலேயே அம்மா கத்தியால் அறுத்து தற்கொலை செய்துக் கொண்டாள். இவனுடைய அப்பாவும், அண்ணனும், இவனும் அந்த ரௌடிகளிடம் சிக்கி பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாகி அப்பப்பா... என்னால் அதற்கு மேல் சொல்ல முடியவில்லை நெஞ்சு வலியே வந்துவிடும். இத்தனையையும் தாண்டி திலக்கை அங்கிருந்து காப்பாற்றி ஜெய் அழைத்து வந்ததில் என் மகனை நல்ல முறையில் வளர்த்திருக்கிறேன் என்று எனக்கு ஏகப் பெருமை. வந்தப் புதிதில் மிகவும் பயந்து போய் தனக்குள்ளேயே ரொம்பவும் ஒடுங்கிப் போயிருந்தான் பையன். இரவெல்லாம் சரியாக உறங்காமல் ஏதேதோ நினைவில் அஞ்சி அலறுவான். மிகவும் சிரமப்பட்டு அதிலிருந்து மீட்டு பழைய

நினைவை மறக்கடிக்க வெகுவாக முயற்சித்து கொண்டிருக்கிறோம். புத்திசாலிப்பிள்ளை... எதை சொன்னாலும் நன்றாக புரிந்துக் கொள்வான். இப்பொழுது எல்லாம் ஓரளவுக்கு இயல்பாகி ஜெய்யுடன் நல்லமுறையில் ஓடியாடி விளையாடுகிறான். ஆனால் என்னவொன்று துறுதுறுப்பு தான் இல்லை, கடந்து போன சம்பவங்கள் அவன் ஆழ்மனதில் பெரிய வடுவாக பதிந்துவிட்டது. நாங்களும் சரி என்று அதற்கு மேல் மனோதத்துவ சிகிச்சை அது இதுவென அலைகலிக்காமல் அவன் போக்கிற்கே விட்டு விட்டோம். பள்ளியிலும் நல்லப்பெயர்... படிப்பு, விளையாட்டு என்று அனைத்திலும் முன்னேற்றம் தான்... அவனுள் படிந்திருக்கும் பயஉணர்வை மட்டும் எங்களால் முழுவதுமாக விலக்க முடியவில்லை. வெளியாட்கள் அனைவரிடமும் ஜெய்யின் சினேகிதன் பிள்ளை என்று மட்டும் சொல்லி வைத்திருக்கிறோம். இவனும் எங்களோடு நன்றாக ஒட்டிக்கொண்டான்!" என்று அவனை வாஞ்சையுடன் பார்த்தார் செண்பகம்.

"உண்மையில் நீங்களும், உங்கள் மகனும் மனதளவில் எவ்வளவு உயர்ந்து நிற்கிறீர்கள். என்னை நினைத்தால் எனக்கே அசிங்கமாக இருக்கிறது. நான் பெற்று வளர்த்த என் மகனுக்கு இருக்கின்ற காருண்யமும், கனிவும் கூட எனக்கில்லாமல் போனதால் தான் அன்று ஹர்சுவை என் மருமகளாக ஏற்றுக்கொள்ள மறுத்து அவனை வீட்டை விட்டே விரட்டினேன் நான். இன்று திலக்கிற்கு ஏற்பட்ட நிலைப்போன்று அப்பொழுது என்னுடைய மருமகள்கள் எந்த காரணத்தினால் அப்படி அநாதரவாக நின்றார்களோ தெரியவில்லை. அதையெல்லாம் புரிந்துக் கொண்டு ஒரு தாயாய் அவர்களுக்கு சரியான ஆதரவு அளிக்காமல் சிறுபிள்ளைத்தனமாய் நடந்துக் கொண்டதை எண்ணிப் பார்த்தால் வெட்கம் தான் வருகிறது. என் சின்ன மருமகள் வந்து என்னிடம் சண்டையிடும் வரை ஊரார் முன் காட்டும் வெட்டி கௌரவத்திற்காக வாழ்ந்தேன்!" என்று கசப்பாக இதழை வளைத்தார் பவானி.

அவர் கரத்தை பற்றி ஆதரவாக அழுத்திய செண்பகம், "சரி விடுங்கள்... மனிதர்கள் என்றால் பிசகுவது இயல்பு. அதற்கு கைமாறாக தான் உங்கள் மகன் இல்லாமலேயே பெரிய மருமகளை இமைக்குள் வைத்து தாங்கியிருக்கிறீர்களே... அப்புறம் என்ன? நீங்கள் இந்தளவுக்கு பாசம் காட்டவும் தானே அவள் அம்மா அம்மா என்று ஆசையாக உங்களை சுற்றி சுற்றி வருகிறாள். அதையெல்லாம் கெட்ட கனவாக மறந்து விடுங்கள்!" என்று அவரை சமாதானப்படுத்தினார்.

மெல்ல தன்னை சமாளித்துக் கொண்ட பவானி, "அப்புறம் ஜெய்க்கு எப்பொழுது திருமணம் செய்யலாம் என நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ம்... பார்க்க ஆரம்பிக்கலாம் என்று நினைத்தேன். இவன் என்னவோ அதற்கு சம்மதிக்காமல் ஏதோ கமிட்மென்ட்ஸ் இருக்கிறது இன்னும் ஒரு வருடம் போகட்டும் என்கிறான்!" என்று செண்பகம் முடிக்க திலக் அருகில் ஓடி வந்தான்.

"என்னப்பா?"

அவர் கழுத்தை வளைத்து காதருகில் அவன் கிசுகிசுக்க கலகலத்து சிரித்தவர், "சரி சரி வா!" என்று பவானியிடம் திரும்பி, "ரெஸ்ட் ரூம் போக வேண்டுமாம். எந்த ரூம் யூஸ் பண்ணிக் கொள்ளட்டும்!" என வினவினார் செண்பகம்.

"ஓ... இதற்கு தான் இத்தனை ரகசியமா?" என்று சிரித்து அவன் கன்னம் வருடிய பவானி, வாங்க என அவர்களை தன்னறைக்கு அழைத்து சென்றார்.

41

மதிய உணவு முடிந்து அனைவரும் போர்டிக்கோவில் ஓய்வாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்க ஜெய்யிடம் தன் சந்தேகத்தை எழுப்பினாள் ஹிரணி.

"அண்ணா நீங்கள் எப்படி எதை செய்தாலும் நன்றாக தெளிவாக எடுத்துக் கொள்கின்ற வேலையில் எந்தவித பிசகும் ஏற்படாதவாறு சரியாக நினைத்ததுப் போல் செய்து முடிக்கிறீர்கள்?"

"அதற்கு முதல் காரணம் எதையுமே செயலாற்றுவதற்கு முன் ஒருமுறைக்கு இருமுறை மனதளவில் நான் ஒத்திகை நடத்தி பார்ப்பது தான். இரண்டாவது சிறுவயது முதலே த்ரில்லர் சப்ஜெக்டில் ஆர்வம் அதிகம் என்பதால் அது எந்த மொழிப் படமென்றாலும் பார்த்து விடுவேன். வளர வளர இதுதான் என்னுடைய துறை என்று முடிவெடுத்த பின், நிறைய படங்களில் வருவதுப் போல் துப்பறிபவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை உளவியல் ரீதியாக ஆராய்ச்சி செய்து பார்ப்பேன். எங்கே எதில் தவறு நேர்கிறது மேலும் எதனால் எல்லாம் தவறு நேரக்கூடும் என்பதை புரிந்துக் கொண்டாலே முடிந்தவரை பிரச்சினைகளிலிருந்து தப்பித்து விடலாம். அதையெல்லாம் பாடமாக கொண்டு எடுக்கும் வேலையில் மிகவும் கவனமாக இருப்பேன். நம்முடைய வாழ்க்கையில் நாம் சாதிக்க இன்னும் நிறைய இருக்கிறது அதுவரை எந்தப் பிரச்சினையிலும் மாட்டிக்கொள்ள கூடாது என்ற உத்வேகமும் ஒரு காரணம்!" என்று அவன் முடிக்க, பலத்த கைத்தட்டல் ஒலி எழுந்தது.

"அய்யய்யே... என்னது இது?" என்று ஜெய் முகம் சுளித்து உதடுகளை கீழே வளைக்க, அவன் பாவனையில் சிரித்த திலக் வேகமாக செண்பகத்தின் மடியில் இருந்து இறங்கி ஓடிச்சென்று அவன் மடியில் அமர்ந்தான்.

"என்னங்க சார்?" என்று அவனை கட்டிக்கொண்டவனிடம், "ஏன் சித்தப்பா எல்லோரும் கை

தட்டறாங்க?" என்று சந்தேகம் கேட்டான் திலக்.

"அதுவா... நீங்கள் எப்படி ஜெய் இவ்வளவு தைரியமாக இருக்கிறீர்கள் என்று என்னிடம் கேட்டார்கள். நான் சின்ன வயதிலிருந்தே மனவலிமையை வளர்க்கும் கதைகளை நிறைய கேட்பேன், படிப்பேன், பார்ப்பேன், அதனால் தான் எதற்கும் பயப்படாமல் வளர்ந்தேன் என சொன்னேன். உங்களுக்கு தெரியுமா? எங்கள் திலக் கூட இப்பொழுது என்னுடன் சேர்ந்து அதுமாதிரி படங்கள் நிறைய பார்க்கிறான், பாட்டியிடம் கதையெல்லாம் கேட்கிறான். சீக்கிரமாக என்னை போல பெரிய ப்ரேவ் பாயாக மாறப் போகிறான். அப்படித்தானே?" என்று மற்றவரிடம் விவரம் தெரிவித்தபடி திலக்கிடம் வினவினான் ஜெய்.

திலக்கின் முகம் யோசனையில் சுருங்க, "ஏய்... சூப்பர்ப்... திலக் பிரேவ் பாய் ஆகிவிட்டான் என்றால் உங்கள் ஹெல்ப் இல்லாமலேயே பாட்டியை கோவிலுக்கு, கடைக்கு எல்லாம் கூட்டி சென்று வருவான். நீங்கள் வேலை முடிந்து திரும்பும் வரை வீட்டையும் பத்திரமாக பார்த்துப்பான் என்கிறீர்களா?" என்று ஜெய்யிடம் குதூகலமாக வினவினாள் ஹிரண்மயி.

"ஆமாம் பின்னே... என்னடா கண்ணா?" என்றவன் திலக்கை குனிந்து பார்க்க, அவன் முகத்திலும் ஒரு தெளிவு பிறந்து மலர்ச்சியுடன் ஆமோதிப்பாக தலையசைத்தான்.

"குட்பாய்!" என்று பாராட்டி அவனை தூக்கி கன்னத்தில் முத்தமிட்டான் விமல், ஹர்சிதா அவனுடைய கரம்பற்றி குலுக்க, அனைவரின் பாராட்டிலும் உண்டான பெருமையில் லேசாக வெட்கம் பூத்தது அவனுக்கு.

மாலையில் ஜெய்சங்கரின் குடும்பம் இவர்களிடமிருந்து விடைப்பெற்றுக் கிளம்ப, "ஹேய் திலக்... இங்கே எப்படி பொழுதுப் போயிற்று... ஜாலியாக இருந்ததா நன்றாக என்ஜாய் செய்தாயா?" என்று அவனை கைகளில் அள்ளி மேலே தூக்கிப்போட்டு பிடித்தான் அகில்.

கலகலத்து சிரித்த திலக், "ரொம்ப ஜாலியா இருந்தது மாமா. அத்தைங்க, புது பாட்டி, இந்த மாமா எல்லோருமே ஒன்றாக விளையாடியது சூப்பரா இருந்தது. ஆனால் ஏன் நடுவில் சித்தப்பாவும், பெரிய மாமாவும் உங்களை தனியே இழுத்துப் போனாங்க. நீங்கள் அவுட் ஆகிட்டீங்களா என்ன? ப்ளீஸ்... ப்ளீஸ்... அதெல்லாம் வேண்டாம் என்றெல்லாம் சொல்லிட்டிருந்தீங்களே!" என குழப்பத்துடன் வினவினான்.

'அடப்பாவி... அதை நீ கவனித்தாயா?' என்று தடுமாறிய அகில், இதை எப்படி சமாளிப்பது என வேகமாக யோசிக்க, "அது ஒன்றுமில்லைடா செல்லம்... உன் மாமாவுக்கு வாய் ஜாஸ்தி, அவர்களிடம் எதையாவது தேவையில்லாமல் உளறிக்கொட்டி மாட்டிக் கொண்டிருந்திருப்பாரா இருக்கும்!" என்று கண்சிமிட்டி சிரித்தாள் ஹிரணி.

மற்றவரின் வெடித்த சிரிப்பலைகளுக்கு இடையே அவனை கேலியும், தெனாவெட்டும் கலந்து நோக்கினாள் பெண்.

இவனோ மனதில், 'லூசுப்பெண்ணே... லூசுப்பெண்ணே... லூசுப்பெண்ணே... லூசுப்பையன் உன்மேல தான் லூசா சுத்தறான்!' என்கிற ரீதியில் பாட்டு பாடி, 'அடி என் லூசுப் பெண்டாட்டி.. என் மூக்கை உடைக்கிறேன் என்று நினைத்து உண்மையில் நீ எனக்கு ஹெல்ப் தான்டி செல்லக்குட்டி செய்திருக்கிறாய்!' என வெளியே அனைத்து பற்களையும் காட்டிக்கொண்டிருந்தான்.

அன்று விடுமுறை தினம் என்பதால் காலைப்பொழுது சோம்பலாக விடிய, படுக்கையை விட்டு எழ மனமில்லாமல் உருண்டுக் கொண்டிருந்தான் அகிலன்.

மெல்ல விழிகளை திறந்து அருகினில் பார்க்க ஹிரணி கையில் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அதில் தன்னை தீவிரமாக தொலைத்திருந்தாள்.

அதை காணக் காண அவனுக்குள் சுறுசுறுவென்று ஏறியது, 'பக்கத்தில் புருஷன் அசந்து தூங்கிக்

கொண்டிருக்கிறானே அவனைக் கொஞ்சமாவது சைட் அடிப்போம் என்கிற புத்தி எதுவும் இருக்கிறதா பார். ஞானசூன்யம்... ஞானசூன்யம்... சீக்கிரம் எழுந்து விட்டு பரீட்சைக்கு படிப்பது போல புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கிறது. அப்படியே படித்து ஐஏஎஸ் எழுதி நாளைக்கே அறம் நயன்தாரா மாதிரி பெரிய கலெக்டராகப் போகிறாள்!' என்று பொங்கிய சினத்தில் திரும்பி படுத்து எரிமலையாய் உள்ளுக்குள் ரொம்பவே குமுறிக் கொண்டிருந்தான் அகில்.

'திருமணமான நாளிலிருந்தே இப்படித்தான், என் மீது எந்த ஈர்ப்போ, லயிப்போ கிடையாது. இவள் வேலையிலேயே தான் கவனமாக இருப்பாள். ஒரு நாளாவது இவளை திருட்டுத்தனமாக ரசிக்காமல் என் நாள் முடிந்திருக்குமா? ஆனால் இவள் என்னை சைட் அடித்த நாட்களை நான் விரல் விட்டு எண்ணி விடுவேன். இன்னும் எத்தனை நாட்களுக்கு தான் நான் இப்படி தனிமையிலேயே புலம்பி தவிப்பதோ... கொஞ்சமாவது என் மேல் ஏதாவது ஃபீலிங்ஸ் வருகிறதா பார் இந்த மரமண்டைக்கு, வாயில் நன்றாக வருகிறது இவளை அப்படியே...' என்று பல்லைக் கடித்தபடி அவளுக்கு எதிர்திசையில் படுத்துக் கொண்டு புசுபுசுவென மூச்சு வாங்கியவனுக்கு சட்டென்று ஒன்று தோன்றியது.

'கொஞ்ச நாட்களாக இவளிடம் மயூ தொடர்பாக எந்தப் பொருமலும் இல்லையே... ரொம்ப கூலாக இவன் என்னை விட்டு எங்கே சென்று விடப் போகிறான் என்பது போல் அசட்டையாக இருக்கிறாள். நோ... இதை இப்படியே விடக்கூடாது. நான் மட்டும் புலம்பி தவிக்க வேண்டும் இவள் மட்டும் ஜாலியாக இருப்பாளாமா?' என்று தனக்குள் வில்லத்தனமாக கறுவியவன், மெதுவாக தன் உடலை அசைக்காமல் அருகிலிருந்த அலைபேசியை இழுத்தான்.

சில நிமிடங்களுக்கு அப்படியே இருந்து விட்டு மெல்ல அலைபேசியை ஸ்வைப் செய்து அதில் தனது

ரிங்டோனை சத்தமாக ஒலிக்க விட்டு இவன் துரிதமாக தன் விழிகளை மூடிக் கொண்டான்.

அகிலின் அலைபேசி ஒலி எழுப்பவும் ஹிரணி திரும்பி உறக்கத்திலிருந்து அவனை எழுப்ப முயல, அதற்குள் அவனே சோம்பலாக உடலை நெளித்து திரும்பி படுத்து அதை எடுத்து ஸ்வைப் செய்து காதில் வைத்தான்.

ஹிரணியோ மீண்டும் தன் புத்தகத்தில் ஆழ, அவளை கடைவிழியில் நோக்கியபடி, "ஹலோ!" என்றான் அகில்.

"ஹேய்... எப்படி இருக்கிறாய்?"

"ம்... நான் நன்றாக இருக்கிறேன்டா. ஆங்... இங்கே வீட்டில் அனைவரும் நலம்!"

"அங்கே எப்படி... அப்புறம் உன் லைஃப் எப்படி போகிறது?"

"என்ன? ஏன்டா இப்படி அலுத்துக் கொள்கிறாய்?" என சில நொடிகள் அமைதிக் காத்தவன், ஹிரணியை விழிகளால் அளவெடுத்தபடி ம்... என்று மட்டும் முனகினான்.

"உனக்கு கொஞ்சமாவது ஏதாவது அறிவிருக்கிறதாடா? ஹூம்... உன்னிடம் போய் இந்தக் கேள்வியை கேட்கிறேன் பார். இருந்திருந்தால் இப்படியா நடந்துக் கொள்வாய்?" என்று எதிர்முனையில் இருப்பவரை சற்று கடுமையாக சத்தமிடுவது போல் பேசினான் அகில்.

அதுவரை ஒருவழி பாதையாக மட்டும் விஷயத்தை காதில் வாங்கி கொண்டிருந்த ஹிரணி சிந்தனையோடு அவன்புறம் விழிகளை திருப்ப அதை எதிர்பார்த்திருந்தவன் போல் மேலே தீவிரமாக பேசினான் அவன்.

"பின்னே திட்டாமல் கொஞ்ச சொல்கிறாயா? லூசாடா நீ... உன்னை விரும்பாதவளின் பின்னால் ஏன்டா பைத்தியம் போல் சுற்றிக் கொண்டிருக்கிறாய் நீ?"

ஹிரணியின் விழிகள் பெரிதாக விரிய, "போதும் வாயை மூடு... எனக்கு தெரிகிறது, நீ அவளை மிகவும் விரும்பினாய் தான். அவளையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டாய் அதெல்லாம் சரி, ஆனால் அவளுக்கு உன்மேல் துளியும் ஆர்வம் இல்லையே... நீ வீணாக அவளின் பின்னால் சுற்றியலைந்து வருந்தி என்ன பிரயோஜனம்? இங்கே பாருடா... இனிமேலாவது நான் சொல்வதை ஒழுங்காக கேள். இதற்கு மேலும் காதல், நேசம் என்று பேத்திக் கொண்டு அவள் பின்னால் சுற்றாதே. பிடிக்கவில்லை என்றால் போடி... என்று அவளை உன் மனதில் இருந்து தூக்கி எறிந்து விட்டு உன்னை விரும்பி நேசிக்கும் பெண்ணை கண்டுப்பிடிக்கின்ற வேலையைப் பார், அப்பொழுது தான் உன் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். உன்னை விட்டுப் பிரிவதை நினைத்தாலே அவளுக்கு வலிக்க வேண்டும், உனக்காக எதையும் செய்ய தயாராக இருப்பவளாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவளிடம் உன் உண்மையான நேசத்தை காண்பித்து பார், வாழ்க்கை அப்படியே வண்ணமயமாக மாறிவிடும். நானெல்லாம் அதுபோன்றதொரு வாழ்க்கையை எதிர்ப்பார்த்து தான் ஆவலாக காத்திருக்கிறேன். ஸோ... நீ என்ன செய்கிறாய்? முதலில் அந்த வீம்புகாரிக்கு போன் செய்து இத்தனை நாட்களாக உன்னை தொந்திரவு செய்ததற்கு ரொம்ப சாரிம்மா, இனிமேல் உன் பின்னால் வரமாட்டேன். நான் வேறொரு பெண்ணை..." என வேகமாக பேசிக்கொண்டே சென்றவனிடமிருந்து அலைபேசி வெடுக்கென்று பறிக்கப்பட அவன் திகைப்புடன் திரும்பினான்.

ஹிரணி தான் அவனுடைய மொபைலை பிடுங்கி கொண்டு கண்கள் சிவக்க முறைத்துக் கொண்டிருந்தாள். திருடனுக்கு தேள் கொட்டிய கணக்காய் திருதிருவென்று விழித்த அகில் தொண்டையில் அடைத்த எச்சிலை மெதுவாக விழுங்கி தன்னை நிலைப்படுத்த முயன்றான்.

"ஹலோ... வெரி சாரி, குறுக்கே பேசுவதற்கு மன்னிக்கவும். உங்கள் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டும் என்றால் தயவுசெய்து நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்கள். உங்கள் நண்பரின் அறிவுரையை மட்டும் எக்காரணத்தை கொண்டும் ஏற்காதீர்கள். நீங்கள் விரும்புகின்ற பெண் உங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள் என்றால் என்ன பிரச்சினை என்று அதற்கான காரணத்தை தெளிவாக ஆராய்ந்து முதலில் அவளை சமாதானப்படுத்த முயற்சி செய்யுங்கள். அதை விட்டுவிட்டு எடுத்தோம் கவிழ்த்தோம் என இவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு வேறு பெண்ணை தேடாதீர்கள். புரிகிறதா?" என்று அதிகாரமாக வினவியவள் எதிர்முனை அமைதி காக்கவும், "ஹலோ!" என்றாள்.

மீண்டும் நிசப்தமாகவே இருக்கவும், மேலும் இருமுறை குழப்பத்துடன் ஹலோ... ஹலோ... என்றவள் காதிலிருந்து அலைபேசியை எடுத்துப் பார்த்தாள்.

ஸ்க்ரீன் அணைந்து இருக்கவும் லைன் எதுவும் கட்டாகி விட்டதா என்று யோசனையோடு நிமிர்ந்து அகிலை பார்க்க அங்கே அவனை காணவில்லை.

அகிலின் வார்த்தைகள் மனதை உறுத்த, என் போன்ற நிலைமை இன்னொரு பெண்ணுக்கு வர வேண்டாம் என்று நினைத்தவள் அவனுடைய நண்பனை தானே தொடர்பு கொள்ளலாம் என ஸ்க்ரீன் லாக்கை ஓபன் செய்தாள்.

விமல் மருத்துவமனையில் இருந்தப்பொழுது அவனுடைய பரிசோதனைக்காக உடன் சென்ற நேரம் முழுவதும் அவசரத் தேவைக்காக என்று அகில் இவளிடம் தான் தன் மொபைலை கொடுத்து தன்னுடைய அலுவலக மெயில் சிலவற்றிற்கு ரிப்ளை அனுப்ப சொல்லியிருந்தான். அது இப்பொழுது கைகொடுக்க மிகவும் சுலபமாக அவன் அலைபேசியை திறந்தாள் ஹிரண்மயி.

அதன் வால்பேப்பரில் தாங்கள் இருவரும் திருமணக் கோலத்தில் நின்றிருக்க கண்டதும் அவளையுமறியாமல் விழிகள் கலங்கியது. இவை அனைத்தும் கானல் நீராகப் போகிறதா? முதன் முதலில் மருத்துவமனையில் இதைக் கண்டதும் தான் ஆனந்தப்பட்டதும் பின்பே வீட்டினருக்காக தான் இதை வைத்திருப்பான் என்றெண்ணி நொந்ததும் நினைவில் ஆடியது.

இதழ் கடித்து தன்னை அடக்கியவள் ரிசீவ்ட் கால் லிஸ்டை ஓப்பன் செய்தாள். அங்கே ஏதோ ஒரு பெயரில் மின்னிய எழுத்துக்களை கூட படிக்க ஆர்வமில்லாமல் செய்தி தான் ரொம்ப முக்கியம் என டயல் பட்டனை தொட சென்றவள் அப்பொழுது தான் நேரத்தை கவனிக்க முன்தின இரவு பத்து மணியை காண்பித்தது அந்த கால் ஹிஸ்டரி.

42

புருவம் சுளித்த ஹிரண்மயி, 'இதென்ன ரிசீவ்ட் கால் நேரம் தப்பாக காண்பிக்கிறதே, லூசுப்பையன்... டேட் அன்ட் டைம் செட்டிங்ஸ் ஒழுங்காக வைக்கவில்லையா?' என்று குழம்பியபடி அதை சரிபார்க்க, நான் மிகச்சரியாக தான் ஓடி கொண்டிருக்கிறேன் என அவள் கணவனை சுலபமாக மாட்டிவிட்டு பல்லை காண்பித்தது அது.

மண்டை கொதிக்க தலையை இறுகப் பிடித்துக் கொண்டு விழிகளை மூடி சிறிது சிந்தித்தாள். நான் சற்று நேரமாக விழித்தெழுந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான், பிறகு அவனுடைய அலைபேசி ஒலித்ததால் உறக்கம் கலைந்து எடுத்துப் பேசினான்.

படபடவென்று தன் நண்பனிடம் ஆலோசனை கூறுகிறேன் பேர்வழி என்று கேனத்தனமாக உளறிக் கொண்டிருந்தான். பின்பு எனக்கு எரிச்சல் வந்து அவனுடைய மொபைலை பிடுங்கி அவன் பேச்சை எதுவும் நீங்கள் கேட்காதீர்கள் என்று நான் பேசும்பொழுது எந்த சத்தமும் இல்லாமல் லைன் அமைதியாக இருந்தது. லைன் கட்டாகி விட்டது என்று டயல் செய்ய கால் லிஸ்டை பார்த்தால் முதல் நாள் இரவோடு தனது பதிவை அது முடித்திருக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்? என்று இதழை கடித்தாள்.

சட்டென்று பொறி மூள அலைபேசியை ஸ்வைப் செய்து ஸ்ப்ளிட் ஸ்க்ரீனை எடுத்துப் பார்த்தாள். மியூசிக் ஃபோல்டர் ஐகானோடு அவனுடைய ரிங்டோன் பாடல் தான் அதில் இறுதியாக பாடியது என்று அவளுக்கு தெளிவாக எடுத்து காண்பித்துக் கொண்டிருந்தது அது.

பல்லைக் கடித்தவள், 'யூ... இடியட்... சீட்டிங் ஃபெல்லோ... எதற்காகடா காலையிலேயே என்னை இப்படி டென்ஷன் ஆக்குகிறாய்? நான் பாட்டுக்கு தானே அமைதியாக புக் படித்துக் கொண்டிருந்தேன். உனக்கு என்ன பிரச்சனை

என்று தேவையில்லாமல் பொய்யாக கால் செய்து என்னை வெறுப்பேற்றுகிறாய்?' என பொருமும் பொழுதே மனதின் ஓரம் ஒரு விடிவெள்ளி முளைத்தது.

'வெயிட்... வெயிட்... இப்பொழுது அவன் பேசிய பேச்சுக்கள் எல்லாமே என்னை வெறுப்பேற்றுவது போலவே அமைந்து இருந்தது. அதாவது நான் அவனை கண்டுக்கொள்ளாதது போலவே அவனுடைய நண்பனுடைய காதலியும் அப்படியே இருந்திருக்கிறாள். ஸோ... இவன் என்னுடைய உறவை கத்தரிப்பதுப் போலவே அவரையும் செய்ய சொல்கிறான். அப்படியென்றால் திருமண உறவை வேண்டாம் என்று மறுத்து செல்பவள் இவள் என என் மீது இவனுக்கு கோபம் இருக்கிறது. அந்த ஆத்திரத்தில் தான் மயூவை தேடிக் கொண்டானா... ஆனால்... அதுவும் எந்தளவுக்கு உண்மை? அன்றொரு நாள் ஆரம்பத்தில் மட்டும் தான் மயூவை பற்றி அவன் பேசினான். பிறகு நான் தான் அவ்வப்பொழுது காய்ந்துக் கொண்டிருக்கிறேனே தவிர அவன் ஒருநாளும் எதுவும் சொன்னதேயில்லை. முதன் முதலில் சொல்லும் பொழுது கூட இன்னும் காதலை சொல்லவில்லை என்பது போல் தானே எதை எதையோ பூசி மெழுகிப் பேசினான். அப்பொழுது மயூ... மயூ... என்பதும் இதுபோன்றே ஏதாவது போலித்தனம் நிறைந்த ஏமாற்று வேலையா? என் மீது உள்ள எரிச்சலால் தான் என்னை அப்படி வெறுப்பேற்றி ஏமாற்றுகிறானா?' என்று உடலில் சிறு பரபரப்பு தொற்றிக் கொள்ள வேகமாக அவனை தேடிச் சென்றாள் ஹிரணி.

மயூ என்பவள் உண்மை இல்லை என்ற ஐயம் தோன்றவும் உள்ளம் லேசாகி சிறகை விரித்துப் பறக்க தன் கணவனை எண்ணி பரவசமடைந்தாள் அவள்.

'பிராடு... பிராடு... இல்லாத ஒருத்தியை உள்ளே இழுத்து என்னை எவ்வளவு டென்ஷனாக்கி பைத்தியக்காரியாக்கி சுற்ற விட்டிருக்கிறான்? மகனே... என் கையில் சிக்கினாய் என்றால் அப்பொழுது இருக்கிறதடா உனக்கு...’ என்று கள்ளத்தனமாக சிரித்துக் கொண்டவள்,

‘திருட்டுப்பயலே... மாட்டிக்கொள்ளவும் எஸ்கேப் ஆகியா ஓடி விட்டாய். இரு... இரு... எங்கே சென்று விடுவாய் நீ உன்னை விடமாட்டேன்!' என்று மனதோடு அவனிடம் செல்ல சண்டையிட்டவாறு உதடுகள் வெட்கத்தில் துடிக்க அவனை வலைவீசி தேடியும் எங்கும் காணவில்லை எனவும் உள்ளம் சோர்ந்தாள்.

விரல்களை பிணைத்தும், பிரித்தும் வீட்டு வாசலில் நின்று அலைபாய்ந்து கொண்டிருந்தவளை அப்பொழுது தான் குளித்து முடித்து அறையில் இருந்து வெளியே வந்த விமல் யோசனையோடு கவனித்தான்.

"குட்மார்னிங்!" என்ற அவனது உற்சாக வாழ்த்து கேட்டு திரும்பியவள், "குட்மார்னிங் அத்தான்!" என்று கடமையே என இதழ்களை விரித்தாள்.

அவளை சில நொடிகள் கூர்ந்தவன், "என்ன வாசலையே பார்த்தபடி நின்று தவம் புரிந்துக் கொண்டிருக்கிறாய் டீ எதுவும் குடித்தாயா இல்லையா?" என்று வினவினான்.

"இல்லை... இப்பொழுது தான் கீழே வந்தேன், இதோ போய் குடிக்கிறேன்!" என்று முன்பாதி கேள்விக்கு பதிலளிக்காமல் வேகமாக கிச்சனுக்கு சென்றாள் ஹிரண்மயி.

தேநீர் கலந்து எடுத்துக் கொண்டு வந்து சோபாவில் அமர்ந்தவள் நொடிக்கொரு முறை வாசலை பார்ப்பதை கவனித்த விமல், "யாரை தேடுகிறாய் நீ அகிலையா?" என்று விவரம் கேட்டான்.

சொல்லலாமா வேண்டாமா என்று அவளிடம் சின்ன தயக்கம் தோன்ற, ம்... என இழுத்தவளை கண்டு இவனுக்கு சிரிப்பு மலர, "நீ என்னிடம் சொல்லவில்லை என்றாலும் பரவாயில்லைப்பா நான் சொல்லி விடுகிறேன். கொஞ்ச நேரத்திற்கு முன்பு நான், அம்மா, ஹர்சு மூவரும் இங்கே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது உன் புருஷன் தடதடவென்று கீழே ஓடி வந்தான். திடீரென்று அம்மாவிடம் மதியம் என்ன சமைக்கப் போகிறீர்கள் வாங்க மார்கெட் போய் வரலாம் என்று

அழைத்தான். அம்மாவோ டேய்... முதலில் பல்லை தேய்த்தாயா உன் முகம் ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்கவும் முறைத்தபடி போய் அவர் அறையிலேயே பல்லை தேய்த்துவிட்டு வந்தான். வாங்க இப்பொழுது போகலாம் என்று கைப்பிடித்து இழுக்கவும், போய் கார் சாவி எடுத்து வாடா என்றதற்கு ஏன் பைக்கில் என்றால் வரமாட்டீர்களோ என நக்கலடித்து கீ ஸ்டாண்டில் இருந்த வண்டி சாவியை எடுத்துக் கொண்டு அவரை வழுக்கட்டாயமாக இழுத்து சென்று விட்டான். வருவதற்கு எப்படியும் குறைந்தது ஒரு அரைமணி நேரமாவாது ஆகும் என நினைக்கிறேன்!" என்று புன்னகைத்தான் விமல்.

அகிலின் கிரேட் எஸ்கேப்பை நினைத்து ஹிரணிக்கும் அப்பொழுது புன்னகை அரும்பியது. அவளுடைய முகத்தை பார்த்தவனுக்கு சற்றுமுன் இருந்த சந்தேகம் உறுதியானது.

அகில் அவசர அவசரமாக மாடியில் இருந்து கீழே இறங்கி வந்ததும் இல்லாமல் அம்மாவையும் அதிரடியாக வெளியே அழைத்து சென்றதில் மேலே ஏதோ ஒரு பிரச்சினையை கிளப்பிவிட்டு தப்பித்து ஓடுகிறான் என்று சந்தேகப்பட்டான் விமல். ஆனால் தொடர்ந்து அவனை தேடிக்கொண்டு கீழே ஹிரணி வராததால் சரி வேறேதோ போலிருக்கிறது என்று எண்ணி தன்னறைக்கு குளித்துவர சென்று விட்டான். வந்து பார்த்தால் அவன் ஐயத்தை தெளிய வைப்பது போல் தம்பி மனைவி அவனை தேடிக் கொண்டிருக்கிறாள்.

"சரி அத்தான் நானும் போய் ரெஃப்ரெஷ் செய்து வருகிறேன். அக்கா எங்கே?" என்றபடி எழுந்தாள்.

"அவள் குளித்துக் கொண்டிருக்கிறாள் வந்து விடுவாள்!" எனவும், "ஓ... சரி நானும் தயாராகி வருகிறேன்!" என்று மாடியேறினாள் ஹிரணி.

அகிலையே விழிகளால் பின் தொடர்ந்தாள் ஹிரணி, அவன் மறந்தும் தன் பார்வையை இவள்புறம்

திருப்பவில்லை.

'டாமிட்... வந்ததிலிருந்து என்னை திரும்பி பார்க்கிறானா பார், எதையாவது நோண்டிக் கொண்டும் யாரிடமாவது எதையாவது பேசிக் கொண்டும் இருக்கிறானே தவிர என் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டேன் என்கிறானே... அறைக்கு சென்றால் நைசாக பின்னால் சென்று பிடித்து விடலாம் என பார்த்தால் மாடிப்படி எங்கிருக்கிறது என்பதே தெரியாதவன் போல் உட்கார்ந்து இருக்கிறான். இவனை எப்படி அறைக்கு வரவழைப்பது?'

"மணி பதினொன்றே ஆகப்போகிறது... நீங்கள் இன்னும் போய் குளிக்கவில்லையா?" என்று கணவனிடம் கேட்டாள்.

ரொம்ப கரிசனம் தான் என உள்ளுக்குள்ளே நகைத்தவன், "ப்ச்... இன்றைக்கு சண்டே தானே மெதுவாக பார்த்துக் கொள்ளலாம்!" என்று வசதியாக சோபாவில் சரிந்து கால் மேல் கால் போட்டுக்கொண்டு ரிமோட்டை மாற்றி மாற்றி அழுத்த ஆரம்பித்தான் அவன்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க இவனை எப்படி தன் வலையில் வீழ்த்துவது என்று தவிப்புடன் கைகளை பிசைந்தாள் ஹிரண்மயி.

நடக்கும் நாடகத்தை தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்த விமல் மெதுவாக எழுந்து மாடிக்குச் சென்றான்.

சற்று நேரத்தில், "டேய் அகில்... இங்கே ஒரு நிமிடம் வா!" என்ற விமலின் குரல் கேட்டு அங்கிருந்த அனைவரும் அண்ணார்ந்து மாடியை பார்த்தனர்.

"ஏன் என்ன வேண்டும்?" என்று பதிலுக்கு இங்கிருந்தே கத்தினான் இவன்.

"ஏய்... இதை மேலே லாஃப்டிலிருந்து எடுக்க முடியவில்லை வாடா என்றால் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறான்!" என்றவன் அங்கிருந்து கடுப்பாக

அதட்டவும் சலிப்புடன் எழுந்து ஹிரணியிடம் ஒருமுறை கவனமாக பார்வையை வீசிவிட்டு மேலேறினான் அகில்.

மதியம் வெஜ் புலாவ் செய்யலாம் என தீர்மானித்து பவானி காய்கறிகளை எடுத்து நறுக்கிக் கொண்டிருக்க கேரட்டை தோல் சீவியபடி அவருக்கு உதவுகிறேன் என பெயர் பண்ணிக் கொண்டு கவனமாக கணவனை நோட்டமிட்டுக் கொண்டிருந்தாள் ஹிரண்மயி.

அவன் மாடியேறவும் சுறுசுறுப்பானவள், ஆனால் இவன் அத்தானுக்கு உதவச் செல்கிறானே அங்கே எப்படி சென்று பேச முடியும் என்று தளர்ந்தாள்.

அதேநேரம் அவளின் அலைபேசி ஒலியெழுப்பவும் எடுத்து பார்த்தால்... விமல், யோசனையோடு மாடியை பார்வையிட அகில் கடைசி படிக்கட்டில் இருந்தான்.

காதுக்கு கொடுத்தவள், "ஹலோ!" என்க, "உடனே இங்கே மாடிக்கு வா!" என்ற விமலின் குரலை தொடர்ந்து லைன் கட்டானது.

உதட்டை கடித்தவள், "இதோ வந்து விடுகிறேன்!" என்று பெண்களிடம் பொதுவாக மொழிந்து விட்டு இவளும் வேகமாக விறுவிறுவென்று படிகளில் ஏற, மற்ற இருவரும் அவளை குழப்பத்துடன் பார்த்தனர்.

"என்னடா நடக்கிறது இங்கே? ஒருவர் பின் ஒருவராக வரிசையாக மாடிக்குச் செல்கின்றனர்!" என்றார் பவானி.

"ஆமாம்மா... ஆனால் ஒன்றை கவனித்தீர்களா காலையில் கீழே வந்ததிலிருந்தே தம்பி அவருடைய அறைப்பக்கம் செல்லவேயில்லை. ஹிரணியிடமும் ஒரு வார்த்தை நின்று பேசவில்லை ஏதோ பிரச்சினை என்று நினைக்கிறேன்!" என தன் எண்ணத்தை முன் வைத்தாள் ஹர்சிதா.

"எதற்குடா கூப்பிட்டாய்?"

"அதோ... மேலே இருக்கிற அந்த அட்டைப்பெட்டியை கீழே இறக்க வேண்டும். என்னுடைய புத்தகங்கள் சிலது

எனக்கு தேவைப்படுகிறது, நீ என்னை விட சற்று உயரம் என்பதால் சுலபமாக எடுத்துக் கொடுப்பாய் என்று கூப்பிட்டேன்!"

"ஆமாம்... நான் அப்படியே உன்னை விட இரண்டடி உயரம். ஏதோ ஒரு ஏழெட்டு சென்டிமீட்டர் வித்தியாசம் வருமா?" என்றபடி ஸ்டூலில் ஏறினான் அகில்.

பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு விமல் நின்றிருக்க, "எது இந்த பெட்டியா?" என்று அவனிடம் திரும்பி கேள்வி கேட்டான் தம்பி.

விரைந்து முகத்தை சீர்ப்படுத்திக் கொண்டவன் ஆமாம் என்க, வாசலில் நிழலாடியது. திரும்பி ஹிரணியிடம் கண்ஜாடை காட்டியவன் மெல்ல வாசலுக்கு நகர்ந்தான்.

அவள் உள்ளே வர, "ம்... உனக்கு வேண்டுகிற புத்தகங்களை எடுத்து விட்டுக் கொடு, பெட்டியை மீண்டும் மேலே ஏற்றி விடுகிறேன்!" என்றபடி அட்டைப்பெட்டியை அருகிலிருந்த டேபிளில் இறக்கினான் அகில்.

"அதெல்லாம் ஒன்றும் அவசரமில்லை, தேவைப்படுவதை மெதுவாக பார்த்து எடுத்துக் கொண்டு நானே லாஃப்டில் திரும்பவும் வைத்து விடுகிறேன். நீ முதலில் ஹிரணியின் பிரச்சினையை தீர்த்து வை!" என்று விட்டு அறைக்கதவை வெளிப்பக்கமாக தாளிட்டான் விமல்.

அப்பொழுது தான் மறுபுறம் திரும்பி பார்த்த அகில் அங்கே ஹிரண்மயி நின்றிருக்க கண்டு திகைத்தான். வேகமாக இறங்கி கதவருகே சென்றவன் படபடவென்று கதவை பலமாக தட்டினான்.

"ஏய் விமல்... ஒழுங்காக கதவை திற, வெளியில் வந்தேன் என்று வைத்துக் கொள் என்ன செய்வேன் என எனக்கே தெரியாது!" என்று இயலாமையால் உண்டான கோபத்தில் படபடவென்று பொரிந்தான்.

"சரி அதை நீ வெளியில் வரும்பொழுது நாம் தெரிந்துக் கொள்ளலாம். இப்பொழுது முதலில் போய் அவளிடம்

பேசு!" என்று விமல் பரிகாசமாக கூறவும் ஆத்திரத்தில் முகம் சிவந்தவன் விறுவிறுவென சென்று பால்கனி கதவை வெடுக்கென்று காலால் உதைத்து தள்ளிவிட்டு வெளியில் சென்று புருவம் சுளித்தபடி நின்றான்.

அதுவரை விளையாட்டுத்தனமாக இருந்தவனின் மனதில் சட்டென்று சீற்றம் பெருகி வழிந்தது. தன் எண்ணப்படி எல்லாம் நடக்கிறது என்று அவன் உவகை கொண்டிருக்க தன் தமையன் மூலமாகவே அது தலைகீழாக மாறவும் வெடித்துக் கிளம்பிய ஆத்திரத்தை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. கை முஷ்டிகளை இறுக்கி விழிகளையும், இதழையும் அழுந்த மூடி தன்னை கொஞ்சம் நிதானப்படுத்த முயன்றான் அகில்.

தன்னுடைய காதலியாக கணவன் வரித்திருக்கின்ற மயூ என்பவள் உண்மை இல்லையோ போலியானவளோ என்ற சந்தேகம் வலுத்ததிலிருந்தே தன்னவனின் நினைவில் உல்லாசமாக சுற்றி திரிந்தபடி அவனிடம் கொஞ்சலாக சண்டையிட காத்திருந்த ஹிரணி எதிர்பாராத அவனுடைய திடீர் கோபத்தில் விக்கித்து நின்றாள்.

தன் முயற்சியில் வெற்றி பெற்ற அகிலன் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பினான்.

அப்பொழுது தான் தன்னுடைய மனைவியும் மௌனமாக இருப்பதை உணர்ந்தவன் மெல்ல ஓரவிழியில் அவளை கவனித்தான். உம்மென்று முகம் சுருங்கியிருக்க கரங்களை குறுக்கே கட்டிக்கொண்டு அருகில் இருந்த டேபிளின் மேல் லேசாக சாய்ந்தவண்ணம் கீழே குனிந்தபடி தரையை வெறித்துக் கொண்டிருந்தாள் அவள்.

43

'ம்... எப்படியும் இவளிடம் சிக்கப் போவது உறுதி தான். அதற்குள் கொஞ்ச நேரம் இவளை சுற்றி அலையவிட்டு பிறகு சமாளிப்பாக ஏதாவதொரு கதையை கட்டவிழ்த்து விடலாம் என்று பார்த்தால் இந்த அண்ணன் வேறு சொதப்பி விட்டான். மகனே... உன்னை அப்புறம் கவனித்துக் கொள்கிறேன். சரி முதலில் இவளுக்கு ஏதுவாக நாம் எதையாவது சீக்கிரம் யோசிக்க வேண்டும், கால் எதுவும் வரவில்லை என்பதை நிச்சயம் கண்டுக் கொண்டிருப்பாள். மயூவை பற்றி எதுவும் சந்தேகம் தோன்றியிருக்குமா என்னவென்று தெரியவில்லையே... இப்பொழுது என்னிடம் எதை கேட்கப் போகிறாள்?'

அகிலை சுற்றி எண்ணங்களால் வட்டமிட்டு கொண்டிருந்த ஹிரணி, மெல்லிய பெருமூச்சோடு அவனிடம் நிமிர்ந்தாள். அவன் அவளையே நேர்ப்பார்வையாய் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை கண்டு ஒருகணம் தடுமாறிப் போனவள் பின்பு சமாளித்து, நான் என்ன தவறு செய்தேன் என்று வீம்பாய் அவனை எதிர்பார்வை பார்த்தாள். நீ ஒரு தவறும் செய்யவில்லையா என உள்ளுக்குள்ளே இருந்த மனசாட்சி இடித்துரைத்தது தான். அதற்கெல்லாம் செவி சாய்த்தால் எண்ணிய காரியம் நிறைவேறுமா?

"என்ன பார்வை? இப்பொழுது எதற்காக விமலை கூட்டு சேர்த்துக் கொண்டு இப்படியொரு வேலை செய்துள்ளாய் நீ? ஹவுஸ் அரெஸ்ட் போல் ரூம் அரெஸ்ட் பண்றீங்களோ?" என்று அதிகாரமாக வினவினான் அகில்.

'இங்கே பாருடா இவன் அதிகாரத்தை... கொஞ்சமாவது இவளிடம் மாட்டிக்கொண்டோமே என்கிற தடுமாற்றம் எதுவும் இருக்கிறதா பார்!'

"சரி... உனக்கு வேண்டிய பதிலை படித்து விட்டாயா நீ? முதலில் உன் அத்தானை கதவை திறக்க சொல்!"

என்றபடி அகில் கதவருகே செல்லவும், "என்ன?" என்றாள் ஹிரணி ஒன்றும் புரியாமல்.

"இவ்வளவு நேரமாக என்னுடைய முகத்தையே பே... என்று பார்த்துக் கொண்டிருந்தாயே பதில் கிடைக்கவில்லையா?" என்றான் அவன் ஏளனமாக.

வார்த்தைகளின்றி அவனை உறுத்து விழித்தவள், "கொஞ்ச நஞ்சமில்லை ரொம்ப நிறையவே இருக்கிறது..." என்று ஆரம்பிக்கும் முன்னரே இவன் இடையில் புகுந்தான்.

"எது? உனக்கு திமிர் தானே... எல்லாம் எங்களுக்கு தெரியும் தெரியும். முதலில் உன்னுடைய பிரச்சினை என்ன என்பதை தெளிவாக சொல்!" என்று அசால்டாக விவரம் கேட்டான் அகில்.

'அடப்பாவி... என்னவோ பஞ்சாயத்து தலைவர் ரேஞ்சுக்கு பில்டப் செய்கிறான். முக்கிய குற்றவாளியே நீதான்டா... உன்னை யார் தூக்கி ஜட்ஜ் போஸ்ட்டில் உட்கார வைத்தது!' என்று பொங்கினாள் ஹிரண்மயி.

"ம்... ம்... சீக்கிரம், எனக்கு நேரமாகிறது!" என்று அவளை யோசிக்க விடாமல் துரிதப்படுத்தினான் அகில்.

தான் பேச எண்ணிய சம்பவத்திற்கு முற்றிலும் வேறாக அவன் மாற்றி மாற்றிப் பேசியதில் முதலில் குழம்பியவள் சற்றே சுதாரித்து அவனை அடக்கினாள்.

"போதும்... இதற்கு மேல் நீங்கள் எதுவும் பேச வேண்டாம், நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்!"

"சரி... கேள்!" என்று தோள்களை குலுக்கினான்.

"காலையில் நீங்கள் தூங்கி எழும்பொழுதே எதற்காக தேவையில்லாமல் போன் வருவது போல் நடித்து அப்படி பேசி என்னை ஏமாற்றினீர்கள்?"

"என்னது உன்னை ஏமாற்றினேனா... என் நண்பனோடு பேசுகிறேன் என்று நான் உன்னிடம் ஏதாவது விவரம் கூறினேனா?"

"இல்லை தான்... ஆனால் உங்கள் பேச்சின் சாராம்சம் முழுவதும் என்னை தான் டார்கெட் செய்தது. அதை மட்டும் இல்லையென்று உங்களால் மறுக்க முடியாது!"

"ஆமாம்... நானும் இல்லையென்று சொல்லவில்லையே!" என அகில் பட்டென்று கூறவும் லேசான பரபரப்பு தொற்றிக் கொள்ள, "எதற்காக அப்படி செய்தீர்கள் நீங்கள்?" என்று எதிர்பார்ப்புடன் வினவினாள் ஹிரணி.

"எதற்காக என்றால்... என் வாழ்க்கையை கெடுத்துவிட்டு நீ மட்டும் நிம்மதியாக புத்தகம் படிப்பதை பார்க்கவும் எனக்கு கோபம் வந்து விட்டது. அதனால் தான் அப்படி செய்தேன்!"

"நான்... நான் உங்கள் வாழ்க்கையை கெடுத்து விட்டேனா?"

"பின்னே... இல்லையா? ஹர்சு அண்ணியின் வாழ்க்கையை சீராக்கவென்று என்னை ஏமாற்றி திருமணம் செய்தது மட்டுமில்லாமல், விவாகரத்து செய்ய தயாராக இருப்பவள் தானே நீ?" என்று அவளை நேராகப் பார்த்து கடுமையாக குற்றம்சாட்டினான் அகில்.

"இல்லை நீங்கள்... அது வந்து... நான்..." என்று ஹிரண்மயி குற்றவுணர்வில் தடுமாற, "போதும்... நீ எதுவும் சொல்ல வேண்டாம். நான் நல்ல எண்ணத்தில் தான் செய்தேன் என்பாய், எதுவாக இருந்தாலும் உன்னால் இனிமேல் நான் செகன்ட் ஹான்ட் தான். இனி என்னை திருமணம் செய்துக் கொள்ளப் போகிறவளுக்கு நான் கொடுக்க கூடிய ஸ்தானம் இரண்டாம் தாரம். அது அவளுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை நீயே கொஞ்சம் நியாயமாக யோசித்துப் பார்!" என்று அவளை பேசவிடாமல் தடுத்து வேகமாக நியாயம் கேட்டான் நாயகன்.

மீண்டும் திருமணம்... இரண்டாம் தாரம் என்ற அவன் வார்த்தைகளில் சுக்கு நூறாக உடைந்துப் போனவளுக்கு, இவ்வளவு நேரமாக தான் செய்த கற்பனைகள் அனைத்தும் தவறா என்று இதயம் வலித்தது.

அப்பொழுது மயூ கூட போலியானவள் இல்லையா... உண்மையிலேயே இவர் அவளை... என்று அதற்கு மேல் சிந்திக்கப் பிடிக்காமல் அவனிடமே தன் சந்தேகத்தை முன் வைத்தாள் ஹிரணி.

"அப்பொழுது அந்த மயூ..." என்று தயக்கத்துடன் இழுத்து நிறுத்தினாள் பெண்.

மனைவியின் முகத்தையே பார்த்திருந்தவன் அவளின் வேதனையை உணர்ந்து பேசாமல் உண்மையை சொல்லி விடலாமா என ஒரு நொடி தயங்கி யோசித்து, இல்லை வேண்டாம்... இப்படி ஒரு சாதாரணமான சூழ்நிலையில் என்னுடைய காதலை நான் சொல்லக் கூடாது என்று பின் வாங்கினான்.

"ம்... மயூவை பற்றி நானே உன்னிடம் பேச வேண்டுமென்று நினைத்தேன். ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருந்தது போல் அவள் என்னை பற்றி புரிந்துக் கொள்வதற்கு தேவையான வாய்ப்புகளை அளித்திருந்தேன். இப்பொழுது எனக்கு தெரிந்து அவள் மனதில் நான் இருக்கிறேன் என்பது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. அப்படியே கொஞ்சம் அரைகுறையாக என்னுடைய திருமண விவரமும் அவளுக்கு தெரிவதுப் போல் பிரெண்ட் ஒருவர் மூலம் பேசி வைத்திருந்தேன். அதன்பிறகும் அவள் என்னிடம் இயல்பாக தான் பேசுகிறாள். ஸோ... இனி அடுத்து என் காதலை அவளிடம் சொல்லி விடலாம் என பார்க்கிறேன்!" என்று தன் எதிரில் இருந்தவளை ஆழம் பார்த்தான் அகில்.

அவனை திகைப்புடன் ஏறிட்டவள் பின்பு முகம் இறுக விழிகளை திருப்பிக் கொண்டாள்.

'என்னடி செல்லம் அதற்குள் முகமெல்லாம் சிவந்துவிட்டது, இன்னும் நான் மெயின் சீனை சொல்லவேயில்லையே. என்னை ஏமாற்றும் பொழுது அவ்வளவு அலட்சியமாய் இருந்தவளுக்கு இப்பொழுது கஷ்டமாக இருக்கிறதா? உன்னை விருப்பமில்லாமல்

ஆதாயத்திற்காக மட்டும் தான் நான் திருமணம் புரிந்தேன் என்று நீ சொன்னப் பொழுது எனக்கெப்படி வலித்திருக்கும்?'

"அப்புறம் வருகின்ற புதன்கிழமை மாலை ஒரு ஆறு மணி போல நீ என்னுடன் வெளியே வர வேண்டியிருக்கும். அன்று ஒருநாள் மட்டும் அதற்குள்ளாக உன் வேலையை முடித்து விடுகிற மாதிரி பார்த்துக் கொள்!" என்றான் அவன்.

அவனை நெற்றி சுருங்க ஏறிட்டவள், "எதற்காக?" என்று குழுப்பத்துடன் வினவினாள்.

"அன்று தான் நான் மயூவிடம் என் காதலை சொல்லப் போகிறேன். அப்பொழுது நீ என்னுடன் வர வேண்டும்!"

அதிர்ந்தவள், "நான்... நான் ஏன் வர வேண்டும்? இல்லை முடியாது!" என்று வேகமாக மறுத்தாள்.

'இவன் வேறொருவளிடம் காதலை சொல்வதற்கு நான் சாட்சியாக செல்ல வேண்டுமா? சத்தியமாக என்னால் அது முடியாது. அன்பு, பாசம், காதல் என்று எனக்கு தெரியாத அத்தனை உணர்வுகளையும் என்னுள் அறிமுகப்படுத்தி விட்டு இப்பொழுது அதையெல்லாம் வேரோடு பிடுங்கி வேறொருவளுக்கு தரப்போகிறேன் என்கிறானே!' என்று பரிதவித்தாள்.

"என்ன... நான் ஏன் வர வேண்டுமா? நீதானே என்னுடைய மனைவி, அப்பொழுது நீதான் கண்டிப்பாக வரவேண்டும்!" என்றவனை வினோதமாக பார்த்தாள் ஹிரணி.

'இவனுக்கென்ன பைத்தியமா?'

"என்ன பார்க்கிறாய்? நான் அவளிடம் என் காதலை சொல்லும் பொழுதே, உன்னை பற்றியும் தெளிவாக விளக்கி விட வேண்டும். இவள் தான் என் முதல் மனைவி, என்னை இவளுடைய ஆதாயத்திற்காக தான் திருமணம் செய்துக் கொண்டாள் மற்றபடி இவளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆங்... அப்புறம் இதை நீதான்

நிச்சயமாக சொல்ல வேண்டும் அப்பொழுது தான் அது அவளுக்கும் நிம்மதியாக இருக்கும்!"

அவள் பேச்சின்றி அவன் முகத்தையே வெறித்திருக்க, "இவர் மேல் எனக்கு எந்தவித ஆர்வமும் இல்லை, நான் ஒருநாளும் இவரை நேசித்ததில்லை பிரிந்து செல்ல வேண்டும் என்று தான் திட்டம் போட்டு மணம் புரிந்தேன். அதனால் எதிர்காலத்தில் உங்களது வாழ்வுக்கு என்னால் ஏதாவது தொந்திரவு ஏற்படுமோ என்றெண்ணி நீங்கள் பயப்பட வேண்டாம். நிம்மதியாக திருமணம் செய்துக் கொள்ளுங்கள், முறைப்படி இவரை நான் சீக்கிரமே விவாகரத்து செய்து விடுவேன் என்று அவளுக்கு நீதான் நம்பிக்கை அளிக்க வேண்டும்!" என முடித்தான்.

அகில் பேசப் பேச கொந்தளித்த மனதை அடக்க பெரும்பாடு பட்டுப் போனாள் ஹிரணி.

'இவன் வாழ்க்கையில் நிம்மதியாக செட்டில் ஆக நான் உதவ வேண்டுமா?' என்கிற ஆக்ரோஷம் பொங்க, அதற்கு மேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் எரிச்சலுடன் வெளியேற முயன்றவளின் கரத்தை வேகமாக பற்றியிழுத்து அருகில் நிறுத்தினான் அகில்.

"ஏய் இரு இரு... இன்னும் நான் முடிக்கவில்லை!"

"இன்னும் என்ன?" என்றபடி அவன் பிடியிலிருந்த தன் கரத்தை வெடுக்கென்று உருவியவளை கண்டு புன்னகை பூக்க அதை லாவகமாக மறைத்தவன், "இதை தயவுசெய்து வீட்டில் யாரிடமும் நீ சொல்லி விடாதே!" என்று வெகு நயமாக மனைவியிடம் கேட்டுக் கொண்டான்.

"ஏன்? அவர்களுக்கு தெரியாமல் ஓடிப்போய் கல்யாணம் செய்துக் கொள்ளப் போகிறீர்களா?" என்று ஏளனமாக கேட்டாள் ஹிரணி.

“சீச்சீய்... என்ன நீ? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை, எல்லோரிடமும் சொல்லி அவர்களின் ஆசிர்வாதத்தோடு தான் திருமணம் செய்துக் கொள்வேன்!" என்று பல்லைக்

காண்பித்தவனை அப்படியே இழுத்து வைத்து அறைய தோன்றியது அவளுக்கு.

"அப்புறம் என்ன?" என்றாள் கடுப்பாக.

"முதலில் மயூவின் முழுசம்மதத்தை உறுதியாக பெற்றப் பின்பு இவர்களிடம் எல்லாம் சொல்லிக் கொள்ளலாம். இல்லையென்றால்... உன் மேல் இருக்கும் பாசத்தில் நாம் இருவரும் இப்படி பிரியக் கூடாது என்று தேவையில்லாமல் உன்னையும், என்னையும் குழப்ப பார்ப்பார்கள். இதோ இப்பொழுதே பார்த்தாய் அல்லவா... நான் அவனுடைய தம்பி என்பதையே மறந்து விட்டு உனக்கு ஆதரவாக என்ன வேலை செய்கிறான் பார் என் அண்ணன். அதற்கு தான் நமக்குள் ரகசியமாக இருக்கட்டும் என்கிறேன் நான்!"

ப்ச்... என்று முகத்தை சுளித்தவள், "சரி சரி நான் யாரிடமும் சொல்லவில்லை. அவ்வளவு தானே.. இப்பொழுதாவது நான் வெளியே போகலாமா?" என்று சிடுசிடுத்தாள்.

"ஓ... தாராளமாக, அவ்வளவு தான் இதற்கு மேல் உன்னை நான் தடுக்க மாட்டேன்!" என்று புன்னகைத்தவனை சிறு வெறுப்புடன் நோக்கிவிட்டு மடமடவென்று கதவிடம் சென்று பலமாக தட்டினாள் ஹிரண்மயி.

"ஏய்... பார்த்து பார்த்து, என்ன நீ இப்படி தட்டுகிறாய்? கதவு எதுவும் உடைந்து விடப் போகிறது!" என்று போலியாக பதறினான் அகில்.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்கிற பழமொழிக்கேற்ப தன் கணவனுடைய இரண்டாம் தாரம், திருமணம் என்ற பொய்மையிலேயே தன்னுடைய பொறுமையை இழந்து சினம் கொண்ட ஹிரணிக்கு அவனுடைய போலித்தனமான நகாசு பேச்சுக்களை சரியாக இனம்பிரித்து கண்டுப்பிடிக்க முடியாமலே போய்விட்டது.

"கவலைப்படாதீர்கள்... அப்படி உடைந்துப் போனால் வேறு புதுக்கதவு வாங்கி மாட்டி விடுகிறேன்!" என்று பல்லைக் கடித்தவள் இம்முறை, "அத்தான்!" என்று சத்தமிட்டபடி கதவை தட்டவும், விமல் வேகமாக கதவை திறந்தான்.

பாருடா... என்று தன் அண்ணனை முறைத்தான் அகிலன்.

"என்னம்மா பேசி விட்டாயா?" என்று மகிழ்ச்சியுடன் விவரம் கேட்டவனை கத்தரித்து செல்ல மனமில்லாமல், ம்... ம்... என முனங்கிவிட்டு விறுவிறுவென சென்று தன்னறைக்குள் புகுந்துக் கொண்டாள் ஹிரண்மயி.

"அவளிடம் என்னடா பேசினாய்? ஏன் ரொம்ப அப்செட்டாக தெரிகிறாள்?"

"ம்... நான் என்ன பேசினேன்? ஒன்றுமே பேசவில்லையே!" என்றபடி கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தான் அகில்.

"அப்புறம்?" என்றான் அண்ணன் புரியாமல்.

"ப்ச்... நீ செய்த வேலையில் எனக்கு ரொம்பவும் கோபம் வந்துவிட்டது!" என்று முகத்தை சுளித்தான் தம்பி.

"அதனால்?" என்று கேள்வியாய் இழுத்தான் இவன்.

"உஃப்போ... அதனால் கோபத்தில் அவளை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து விட்டேன். போதுமா?" என்று பொங்கிய சிரிப்பை தனக்குள் அடக்கியபடி அங்கிருந்து வேகமாக வெளியேறினான் அகில்.

தன் தம்பியின் பதிலை கேட்டு ஒரு கணம் விழித்து பின்பு அதை சரியாக புரிந்துக்கொள்ள முடியாமல் தடுமாறி என விமலின் நிலை தான் அங்கே பரிதாபகரமாக மாறிவிட்டது.

44

மதிய உணவுக்கு கீழே இறங்கி வந்த ஹிரணி இறுகிய முகத்துடனேயே தன்னுடைய உணவை முடித்துவிட்டு வேலையிருக்கிறது என்று மீண்டும் அறைக்குள் புகுந்துக் கொண்டாள்.

அதில் கவலையடைந்து அகிலை விடாமல் விரட்டிப் பிடித்து அவனிடம் கெடுபிடியாக என்ன பிரச்சனை என்று அழுத்தமாக விசாரித்தான் விமல்.

விவரம் தெரியும் வரை இவன் விடமாட்டான் என்று புரிந்து, தான் ஹிரணியிடம் கூறிய விஷயத்தை விளக்கியவனை எரிச்சலுடன் நோக்கினான் அவன்.

"ஏன் அகில் இப்படி நடந்துக் கொள்கிறாய்? அவளை வருத்துவதால் உனக்கு அப்படி என்ன சந்தோசம் கிடைத்து விடப் போகிறது?" என்று சினந்தான்.

"ஏய்... ஏன்டா நீ வேற, இது நான் முன்னாடியே திட்டமிட்டு வைத்திருந்தது. ஹிரணி எப்பொழுது என்னை கணவனாக ஏற்க விரும்புகிறாள் என்று தெரிய வருகிறதோ அதற்கு அடுத்து வரும் ஒரு நல்ல நாளில் அவளிடம் நேரடியாக பிரொபோஸ் செய்து உண்மையை கூறி விடலாம் என நான் நினைத்தேன். இவள் இந்தளவுக்கு வருந்துவாள் என்று எனக்கெப்படி தெரியும்?"

"ஆமாம்... உனக்கென்ன தான் தெரியும்? டேய்... தயவுசெய்து இப்பொழுதாவது போய் உண்மையை சொல்லேன்!"

"தோடா... நான் எல்லாம் புக் பண்ணிட்டேன். புதன்கிழமை சாயந்திரம் கன்பார்மா கிளியர் பண்ணிடறேன். நீ கொஞ்சம் அமைதியாக இரு, எதையாவது சொதப்பி வைத்து விடாதே. அவள் மிகவும் போல்டானவள் அதெல்லாம் சமாளித்துக் கொள்வாள்

இரண்டு நாட்களுக்கு தானே. யூ டோன்ட் வொர்ரி!" என்று கெஞ்சினான் அகில்.

"உன்னையெல்லாம் திருத்த முடியாது, என்னவோ செய் போ!" என்று அலுப்புடன் சென்றான் விமல்.

இரவு தன்னறைக்கு சென்ற அகில் அங்கே ஹிரணியின் வேலையில் திகைத்து நின்றான். பழையபடி தரையில் கார்ப்பெட் போட்டு ஒரு ஓரமாக அவள் முடங்கியிருந்தாள். தூங்காமல் இறுக்கமான முகத்துடன் தன் அலைபேசியில் மூழ்கியிருந்தவளை யோசனையோடு நெருங்கினான்.

"ஏய்... ஏன் கீழே படுத்து விட்டாய்?"

அவனை திரும்பியும் பாராது உம்மென்று மொபைலை ஸ்வைப் செய்தவளின் கைகளிலிருந்து வேகமாக அதைப் பிடுங்கியவன் சுவாதினமாக சென்று கட்டிலில் விழுந்தான்.

உச்சக்கட்ட எரிச்சலில் பொருமியவள் விழிகளை இறுக மூடி தன்னை நிதானித்து போர்வையால் தலை வரை இழுத்து மூடிக்கொண்டாள். தன்னிடம் அவள் ஏதேனும் சண்டைக்கு வருகிறாளா என திரும்பி பார்த்தவன் அவள் நிலையை கண்டு அடிப்பாவி என்று இதழசைத்து, சரி போ மேலும் மேலும் உன்னிடம் நான் வம்பு வளர்க்கவில்லை என்று அமைதியாக இவனும் இமைகளை மூடி உறங்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

* * *

புதனன்று காலையில் கண்ணாடியின் முன் நின்று ஹிரண்மயி வேக வேகமாக தலைவாரிக் கொண்டிருக்க, அப்பொழுது தான் தூங்கி விழித்த அகில் குழப்பத்துடன் திரும்பி கடிகாரத்தை பார்த்தான். மணி ஏழாக இன்னும் இருபது நிமிடங்கள் இருந்தது.

"குட்மார்னிங்! நீ அதற்குள் அலுவலகம் கிளம்பி விட்டாயா என்ன? இல்லை... வேறு எங்காவது செல்கிறாயா?"

எதுவும் பேசாமல் நெற்றியில் பொட்டிட்டவள் ஹேன்ட் பேகை எடுக்க, சட்டென்று இறங்கி அருகில் வந்தவன் அவளிடமிருந்து அதை பிடுங்கி விட்டு முறைத்தான்.

"ஏய்... உன் மனதில் நீ என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எதைக் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்? என்ன தான் பிரச்சினை உனக்கு?" என்றான் கடுப்புடன்.

"எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை, பேகை கொடுங்கள் நேரமாகிறது!" என்று கையை நீட்டினாள்.

தன் கையை பின்னால் இழுத்துக் கொண்டவன், "முதலில் எனக்கு பதில் சொல்!" என்றான் அழுத்தமாக.

"ப்ச்... என்ன பதில் வேண்டும் உங்களுக்கு?"

"ஏன் இப்படி இருக்கிறாய் என்று கேட்டேன்?"

"நான் எல்லாம் எப்பொழுதும் போல் தான் இருக்கிறேன்!" என்றாள் எங்கோ பார்த்தபடி.

அவளையே சில நொடிகள் பார்த்தவன், "ம்... சரி, இன்று புதன்கிழமை சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா? ஒரு ஆறு மணிக்கு நானே வந்து உன்னை பிக்கப் செய்து கொள்கிறேன்!" என்றான்.

"அதெல்லாம் தேவையில்லை, எங்கே வர வேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள் நானே நேராக வந்து விடுவேன்!" என்றவளின் முகம் இறுக்கத்தை தத்தெடுத்திருந்தது.

"இல்லை... வேண்டாம் வேண்டாம், ஒரே வீட்டிற்கு திரும்பி வருவதற்கு எதற்காக ஆளுக்கு ஒரு வண்டி. நானே உன் அலுவலகத்திற்கு வருகிறேன் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு, நாளை காலையிலும் உன்னை கம்பெனியில் டிராப் செய்து விடுகிறேன்!"

"ம்... சரி!" என்று விட்டு வேகமாக அவன் கரத்திலிருந்த பையை பிடுங்கிக் கொண்டு வெளியேறினாள்.

நேராக கடற்கரைக்கு தன் வண்டியை விட்டவள் பொங்கி அடங்கும் கடல் அலைகளையே வெறித்தபடி சிலையென சமைந்திருந்தாள்.

மனம் முழுவதும் இயலாமையால் ரணப்பட்டுக் கிடந்தது. அகிலையும், அவன் குடும்பத்தையும் விட்டு ஒதுங்கி மீண்டும் தான் தனிமையில் வாழ வேண்டும் என்பதை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

திருமணத்திற்கு முன்பும் சரி திருமணமான புதிதிலும் சரி அவள் அப்படி எண்ணினாள் தான் அகிலை பற்றி எள்ளளவும் அவளுக்கு எந்த அபிப்ராயமும், அக்கறையும் தோன்றவில்லை. தன் காரியத்தில் மட்டும் குறியாக நினைத்ததை முடித்தவுடன் அவனை விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும் என்று தான் மணம் புரிந்தாள். ஆனால் இந்த நான்கு மாத கால திருமண வாழ்க்கையில் நிலைமை தலைகீழாக மாறி அவனை விட்டுப் பிரிய வேண்டும் என்ற நினைப்பையே அவளால் தாங்க முடியாமல் வலிக்கிறது.

அவ்வளவு தான் இன்று மாலை அந்த மயூவிடம் தன் காதலை அவன் சொல்லி விட்டான் என்றால் அவனுடைய வாழ்க்கையில் என்னுடைய அத்தியாயம் முடிந்தது.

ஆற்றாமையால் முகம் சிவந்து இதழ்கள் துடித்து விழிகள் கலங்கியது. கன்னத்தில் நீர் வழிந்து இறங்கவும் தான் பழைய வைராக்கியம் தலைத்தூக்க வேகமாக அதை துடைத்தெறிந்தவள் நான் யாருக்காகவும் எதற்காகவும் அழ மாட்டேன் என்று தோரணையாக நிமிர்ந்து அமர்ந்தாள்.

பிறக்கும் பொழுதே நான் யாரை நம்பியும் பிறக்கவில்லை. இது தான் என் வாழ்க்கை, இதுவரை எப்படி வாழ்ந்தேனோ அதுபோலவே தனியாக வாழ்ந்து விட்டுப் போகிறேன். எனக்கென்று யாரும் தேவையில்லை என்று வீம்பாக எண்ணமிட்டவள் விசுக்கென்று எழுந்து தன் உடையில் ஒட்டியிருந்த மணலை தட்டிவிட்டு நடந்தாள்.

சரியாக மாலை ஐந்து ஐம்பதிற்கு ஹிரணியின் அலுவலக வாயிலில் காரை நிறுத்திய அகில், மொபைலை எடுத்து அவளுக்கு அழைப்பு விடுத்தான்.

முதல் இரண்டு முறையும் முழுதாக ரிங் போய் கட்டானதே தவிர இவன் அழைப்பை அவள் ஏற்கவேயில்லை.

'ஐய்யையோ... கடைசி நேரத்தில் இப்படி சொதப்புகிறாளே... அவள் வருவாளா மாட்டாளா?' என்று பதற்றத்துடன் விரல் நகம் கடித்தான் அகில்.

"மேடம்... உங்கள் போன் ரிங்காகிறது!"

"ம்... தெரியும், அந்நோன் நம்பர்!" என்று சாதாரணமாக சொல்லி விட்டு தன் முன்னால் இருந்த கீபோர்டை தடதடவென்று தட்ட ஆரம்பித்தாள் ஹிரண்மயி.

அவளுடைய கேபினில் உடன் இருந்தவள் அவள் முகத்தின் தீவிரத்தை வினோதமாக நோக்க, அதை எதையும் உணரும் மனநிலையில் அவள் இல்லை.

சரியாக ஆறு மணிக்கு சிஸ்டத்தை ஷட் டௌன் செய்து விட்டு எழுந்தவள் தன் பையை எடுத்து தோளில் மாட்டும் பொழுது சற்றே நிதானித்து மொபைலை எடுத்து சைலன்ட் மோடில் போட்டாள்.

மனைவியின் அலைபேசிக்கு விடாமல் தொடர்ந்து முயன்று கொண்டிருந்த கணவனின் முன்பு கூலாக சென்று நின்றாள் பெண். தன்னருகில் அமைதியாக வந்து நின்றவளை பார்த்து அவன் கடுப்புற்றான்.

"ஏய்... உனக்கு எத்தனை முறை நான் போன் செய்வது?" என்று முறைத்தான்.

"ஓ... அப்படியா? நான் ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன் அதனால் சைலன்டில் போட்டு விட்டேன் கவனிக்கவில்லை!" என்று அலட்சியமாக மொழிந்து விட்டு காரின் பின்பக்க கதவில் கையை வைத்தாள்.

"என்ன செய்கிறாய்?" என்று அவளை விழிகள் இடுங்க நோக்கினான் அகில்.

"ஏன் காலையில் நீங்கள் தானே உங்களோடு நான் காரில் வர வேண்டும் என்று சொன்னீர்கள்?"

சலிப்புடன் உள்ளிருந்து பெருமூச்சொன்றை வெளியேற்றி தன்னை நிதானப்படுத்தியவன், "வந்து முன்னால் ஏறு!" என்றான் அமைதியாக.

"நான் முன்னால் வந்து அமர்ந்து விட்டால் அப்புறம் உங்கள் மயூவை பிக்கப் செய்யும் பொழுது அவள் எங்கே அமர்வாள்?" என குதர்க்கமாக கேட்டாள் ஹிரண்மயி.

'ஓ மை காட்! என்ன சோதனை இது? என்னை ரொம்பவும் படுத்துகிறாளே... இவளிடம் நான் எப்படி என் காதலை சொல்லி புரிய வைக்கப் போகிறேன்? அதற்கு இவள் எப்படி ரியாக்ட் செய்யப் போகிறாளோ தெரியவில்லையே... ஆயிரம் எப்படிகள் வரிசையாக காத்திருக்க, சத்தியமாக... நான் எதுவும் இவளிடம் கத்தி விடாமல் பொறுமையாக இருக்க வேண்டுமே என்று அது வேறு பயமாக இருக்கிறது!' என மேலிருப்பவனிடம் புலம்பினான் அகில்.

"அவளை நாம் பிக்கப் செய்ய தேவையில்லை, அவளே நேராக வந்து விடுவாள். நீ வந்து இங்கே உட்கார்!" என்று முன்பக்க கதவை திறந்து விட்டான்.

செல்லும் வழியெங்கும் நிசப்தமே குடியிருக்க, ஹிரணியை ஓரவிழியில் அளந்தான் அகில். முகத்தை மறைத்து தொங்கிய இரும்புத்திரையை மீறி அவள் மனதில் என்ன ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை அவனால் அவ்வளவு சுலபத்தில் கண்டறிய முடியவில்லை.

குறிப்பிட்ட பைவ் ஸ்டார் ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அவன் அழைத்து சென்ற இடத்தை விழிகளால் சுற்றிலும் அளந்தவள் அவனிடம் சந்தேகமாக கேள்வி எழுப்பினாள்.

"இது என்ன வெளியே அத்தனை ஆட்கள் இருக்கிறார்கள், இங்கே ஒருவரும் இல்லை!"

"என்ன இப்படி கேட்கிறாய்? இது கூட தெரியாதா உனக்கு!" என இயல்பு நிலைக்கு திரும்பி நக்கலடித்தவன் அவளின் வெறுமையான விழிகளை கண்டு அமைதியாகி, "லவ்வர்ஸ் முதன்முதலாக பிரபோஸ் செய்வதற்கு, பிறகு அவர்களுக்கு இடையேயான ஸ்பெஷலான செலிப்ரேஷனுக்கெல்லாம் வெளியாட்கள் யாரும் வரமுடியாத இதுபோன்ற பார்ட்டி ஹாலை தான் புக் செய்வார்கள்!" என்று முறுவலித்தான்.

புன்னகை என்பதையே மறந்துப் போயிருந்த முகத்தை கண்டவன், 'ஐயோ... தயவுசெய்து என்னிடம் சண்டையாவது போடுடி, நீ இப்படி இருந்தால் என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. அப்புறம் எப்படி நான் உன்னிடம் என் மனதை தெரிவிப்பது?' என்று தவித்தான்.

"உங்கள் மயூ எத்தனை மணிக்கு வருவாள்?" என்று தன் கைகடிகாரத்தை பார்த்தாள்.

"ம்... இன்னும் ஒரு டென் மினிட்ஸில் வந்து விடுவாள். வா... நாம் இப்படி உட்காரலாம்!" என்று அவளை நடுநாயகமாக இருந்த டேபிளுக்கு அழைத்துச் சென்றான் அகில்.

தனிப்பட்ட முறையில் பல வண்ண ஆர்க்கிட் பூக்கள், சிகப்பு ரோஜாக்கள், ஹார்டின் பலூன்கள் மற்றும் கேன்டில்களால் ரொமான்டிக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த டேபிளின் முன்னும் பின்னும் எதிரெதிரே இரண்டு நாற்காலிகள் மட்டும் போடப்பட்டிருந்தன.

அதைக் கண்டதும் ஹிரணிக்கு தொண்டையை அடைத்தது. இதில் அமர வேண்டியது இவனும், அவளும் தான் நான் இல்லை என மனம் வெதும்பி நின்றாள்.

"ஏன் நின்றுக் கொண்டே இருக்கிறாய்? உட்கார்!" என்றபடி எதிரே அமர்ந்தான் நாயகன்.

நாயகியோ தயக்கத்துடன் நின்றாள்.

"இல்லை... நான் அந்த டேபிளில்..." என்று தயங்கியவளை, "ப்ச்... ஹிரணி, அமைதியாக உட்கார்!" என்றான் அகில்.

"இல்லை... இங்கே மயூ..."

"அவள் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம், நீ உட்கார்!" என்றதும் அதுவரை கொஞ்சம் அடங்கியிருந்த ஆத்திரம் மீண்டும் அவளுள் பீறிட்டுக் கிளம்பியது.

தன் கையிலிருந்த பையை இறுக்கியபடி அமர்ந்தவளின் உள்ளம் உலைக்களமாய் கொதிக்க ஆரம்பித்தது.

'அவள் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்!' என்ற அகிலின் வார்த்தை திரும்ப திரும்ப காதில் எதிரொலிக்க, வரும்வரை என்றால் அவள் வந்தப்பிறகு நான் வேறு இடத்தில் சென்று அமர வேண்டுமா? தன்னை அவன் ஓரங்கட்டுவது போன்ற கற்பனை தோன்றி அவளுக்குள் துவேசத்தை கிளப்பியது.

கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்த சிப்பந்தி ஒருவன் தன் கையில் கொண்டு வந்திருந்த பெரிய டிரேயை அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த மேசை மீது வைத்துவிட்டு ஒரு புன்னகையுடன் விடைப்பெற்று சென்றான்.

அலங்கார மூடியால் மூடப்பட்டிருந்த அந்த டிரேயை கண்டு இதழ்களில் ரகசிய முறுவல் பூக்க ஹிரணியிடம் ஆர்வமாக நிமிர்ந்தான் அகில்.

"இதை பார்த்தால் நிச்சயம் மயூவுக்கு பிடிக்கும், நீயும் பார்!" என்று ஆவலாக மேலிருந்த மூடியை எடுத்தான்.

ஹார்டின் வடிவ கேக்கின் கீழ்பகுதியில் இரண்டு இதயம் இணைவது போல் வரைந்திருந்த இடத்தில் மயூ, அகில் என இருவரின் பெயரும் அழகாக எழுதியிருக்க அதன் மேல் உள்ள வாசகம் ஹிரணியை ஆங்காரம் கொள்ள வைத்தது.

உயிர் இல்லாத உடலும் காதல் இல்லாத உயிரும் ஒன்றே!!
என் உயிருக்கு உயிர் தரும் உறவாக வருவாயா அன்பே !!!

அகிலன் அருகில் தான் உரிமையுடன் இருக்க வேண்டிய இடத்தில் வேறொருப் பெண்ணா... அதுவும் இத்தனை காதலுடன்... என்கிற புகைச்சல் அடிவயிற்றில் இருந்து வெடித்துக் கிளம்ப, அதற்குமேல் தன் பொறுமையை இழந்த ஹிரண்மயி, கைமீறிய சினத்துடன் டேபிள் மேல் இருந்த கேக்கை பட்டென்று ஒரே தள்ளில் கீழே தள்ளி விட்டாள்.

அவள் செயலில் முற்றிலுமாக அதிர்ந்துப் போன அகில், "ஏய்... என்னடி செய்கிறாய்?" என்று சேரை தள்ளிவிட்டு அடித்துப்பிடித்து எழுந்தான்.

உடல் முழுவதும் கட்டுக்கடங்காத ஆத்திரம் ஆக்கிரமித்து இருந்ததால் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியவள் அவனை தீப்பார்வை பார்த்து விட்டு பதிலளிக்காமல் மடமடவென்று கதவை நோக்கி நடந்தாள்.

அவளிடம் தன்னுடைய காதலை தெரிவிப்பதற்காக ஆசை ஆசையாக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து ஏற்பாடு செய்து அலங்கரித்து வைத்தால்... அதை ஒரே நொடியில் அவள் கீழே தள்ளி கெடுத்து விட்டதில் அகிலுக்கும் ஜெட் வேகத்தில் கோபம் கன்னாபின்னாவென்று தலைக்கு மேல் எகிறியது.

அங்கிருந்து வெளியேற கோபமாக கதவின் பிடியை திறக்க முயன்றவளை நான்கே எட்டில் நெருங்கி அவளின் கரத்தை அழுந்தப் பற்றி தடுத்தான் அகில்.

"ச்சே... என் கையை விடுங்கள், என்னை தொடுகிற வேலை எல்லாம் வைத்துக் கொள்ளாதீர்கள்!" என்று விழிகளில் நெருப்பை கக்கியபடி அவன் பிடியிலிருந்து தன் கரத்தை உருவ முயன்றாள் ஹிரணி.

அகிலோ இரும்பு பிடியாக தன் கரத்தை மேலும் அழுத்த, லேசாக வலியெடுத்தது அவளுக்கு. அதில் மேலும் மேலும் இயலாமையால் அவளின் சீற்றம் அதிகரிக்க, மறுகரத்தால் அவனை பிடித்து தன்னிடமிருந்து தூர தள்ளினாள்.

45

அதை சுலபமாக தடுத்து அடக்கியவன், அவளை முறைத்துப் பார்த்தான். உண்மையில் ஹிரண்மயி எதற்காக இப்படி நடந்துக் கொள்கிறாள் என்பது அவனுக்கு புரியவேயில்லை. தற்பொழுது அவன் ஏற்பாடு செய்திருக்கும் இந்த ஏகாந்த சூழ்நிலையை தன் மனைவி அகமகிழ்ந்து ரசிப்பாள் என்று கனவில் மிதந்துக் கொண்டிருந்தவன் ஹிரணியும், மயூவும் வேறு என்கிற அதீத கற்பனையில் அவள் உளவுவதை தற்காலிகமாக மறந்திருந்தான்.

முதல் முதலில் தங்கள் இருவரின் மனதிலும் இருப்பதை வெளிப்படையாக பகிர்ந்துக் கொள்ளும் இந்த அழகிய தருணத்தை மேலும் அழகாக்க என்று ஒவ்வொன்றையும் யோசித்து இவன் ஏற்பாடு செய்திருக்க, அவளோ தன் காதலை உதாசீனப்படுத்தியது மட்டும் இல்லாமல் சற்றும் மரியாதையின்றி கேட்கின்ற கேள்விக்கு பதிலளிக்காமல் ஆவேசம் கொண்டவளாக வெளியேற முயல்வதை கண்டு மேலும் உக்கிரமானான் அவன்.

"முதலில் எனக்கு பதில் சொல்லடி, எதற்காக அவ்வளவு அழகான கேக்கை அப்படி கீழே தள்ளி வீணாக்கினாய்?" என்றவனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அனல் மூச்சின் சீறலாக வெளிவந்தது.

'ஓஹோ... அவளுக்காக உங்களுக்கு அவ்வளவு கோபம் வருகிறதா? இங்கே வருபவள் எந்த லோகத்து சுந்தரியாக இருந்தாலும் சரி, அவளை உங்களை நெருங்க விடாமல் பின்னங்கால் பிடறியில் பட ஓட வைப்பேன் நான்!' என ஆங்காரத்துடன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள் ஹிரணி.

"உன்னிடம் தானே கேட்கிறேன் வாயை திற!" என அகில் பல்லிடுக்கில் வார்த்தைகளை துப்பியவாறு பலமாக அவள் கரத்தை மேலும் அழுத்த, அதில் உண்டான

வலியை தாங்க முடியாமல், ஸ்... ஆ... என்று தன்னையும் மீறி முகத்தை சுளித்தாள் அவள்.

அப்பொழுது தான் குனிந்து தங்கள் இருவரின் கரத்தையும் பார்த்தவன் திகைத்து தன்னுடைய கரத்தை வேகமாக விலக்கி கொண்டான்.

விழிகளை இறுக்க மூடி பல்லைக் கடித்து தன் வலியை பொறுத்தவள் சிவந்திருந்த கரத்தை மெல்ல தேய்த்து விட்டாள். புருவத்தை சுளித்தபடி அதைப் பார்த்திருந்தவன், அலுப்புடன் மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

மூன்று நாட்களாக தான் ஒன்று நினைத்து ஆசையுடன் செய்த முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீராக வீணாகிப் போனதில் அவன் மனதில் வெறுப்பு ஏற்பட்டது.

இருந்தும் அவளிடமிருந்து தகுந்த காரணம் அறியாமல் அவளை விடக்கூடாது என்கிற வைராக்கியம் மனதில் பிறக்க, அவளின் முகத்தை வலுக்கட்டாயமாக நிமிர்த்திய அகில், "கேட்டதற்கு பதில் சொல். ஏன் இப்படி நடந்துக் கொள்கிறாய்?" என்று அழுத்தமாகப் பார்த்தான்.

ஹிரணியும் வீம்பில் குறைந்தவள் அல்லவே... பதிலுக்கு அவனை எரிச்சலுடன் நோக்கியவள், "இப்பொழுது என்ன தெரிய வேண்டும் உங்களுக்கு?" என்றாள் சுள்ளென்று.

"எதற்காக அந்த கேக்கை கீழே தள்ளி விட்டாய்?" என்று மீண்டும் பொறுமையாக வினவினான்.

தன் முகத்தை சுளித்து, "எனக்கு பிடிக்கவில்லை!" என்றாள் அவள் சுவற்றை வெறித்தபடி மொட்டையாக.

அகிலுக்கு சுத்தமாக ஒன்றும் புரியவில்லை, அந்த கேக்கை பிடிக்கவில்லை என்றா அப்படி தள்ளி விட்டாள்.

'அது அழகாக தானே இருந்தது!'

"ஏன்... அதில் என்ன பிடிக்கவில்லை? அது ரொம்பவும் தனியாக அழகாக..." என்ற கணவனை முடிக்க விடாமல் ஆத்திரத்தில் கத்தினாள் மனைவி.

"ரொம்பவும் அழகாக தான் இருந்தது. ஆனால் எவளோ ஒரு கண்ட நாய்... அது... கண்டவளுக்காக என் புருஷன் அது போன்ற கேக்கை தனியாக வடிவமைத்தது எனக்கு பிடிக்கவில்லை!" எனும்பொழுதே வார்த்தைகள் வெடித்தது.

அவள் முகத்தையே பார்த்திருந்தவனுக்கு மெல்ல விஷயம் புரிய, அதுவரை இருந்த கோபமும், இயலாமையும் மாறி உள்ளக்குள் உற்சாகம் ஊற்றாக பொங்கியது.

'இந்த லூசு அது வேறு ஏதோ ஒரு மயூவிற்காக தயாரித்தது என்று தான் இவ்வளவு ஆங்காரம் கொண்டதா?'

விழிகள் ஆவலில் மின்ன குனிந்திருந்த அவளின் சுருங்கிய முகத்தை ஆசையுடன் ரசித்தவன் அவளை தொட்டு வருடி தனக்குள் புதைத்துக் கொள்ள தோன்றிய உணர்வை சிரமப்பட்டு கட்டுப்படுத்தினான். இந்த அளவுக்கு தன்னை வெளிப்படுத்துகிறாள் என்றால் தன்னுடைய காதலையும் சொல்வாளா என்ற எதிர்ப்பார்ப்புடன் அவளிடம் ஆவலாக அதேசமயம் நிதானமாக அடுத்த கேள்வியை தொடுத்தான்.

"என்ன? எதற்காக பிடிக்கவில்லை என்கிறாய்?"

"அதுதான் சொன்னேனே... வேறு ஒருத்திக்காக என்று நீங்கள் அவ்வாறு செய்வது எனக்கு பிடிக்கவில்லை!" என அதிவேகமாக மொழிந்தபடி கோபத்துடன் நிமிர்ந்தவள் அவனுடைய மலர்ந்த முகம் கண்டு திகைத்து விழித்தாள்.

"என்ன சொன்னாய் நீ? வேறு ஒருத்திக்காக நான் எதுவும் செய்யக் கூடாதா... ஏன்?" என்றான் மீண்டும்.

'இதற்கு என்ன பதிலளிப்பது?' என்று சிறிது தடுமாறியவள், "அது எனக்கு தெரியாது!" என முகம் சுருக்கி நிமிர்வாகவும், மழுப்பலாகவும் பதிலளித்து விட்டு விரைவாக திரும்பி அங்கிருந்து நழுவிச் செல்ல முயன்றாள்.

அதை தடுத்து அவளை தன்புறம் சுழற்றி திருப்பியவன், "என்ன? ஏனென்று உனக்கு தெரியாதா... பரவாயில்லை, உனக்கான பதிலை நானே சொல்கிறேன்!" என்று அவள் முகத்தை நிமிர்த்தி தன் விழிகளை காணச் செய்தான்.

அவனுடைய நெருக்கம் பதற்றத்தை தந்தாலும், இவன் ஏன் திடீரென்று கோபமாக சண்டையிடுவதை விட்டுவிட்டு இவ்வளவு பொறுமையாக நடந்துக் கொள்கிறான் என்று புரியாமல் அவனை பார்த்தாள் ஹிரண்மயி.

அவளின் குழம்பிய முகத்தை ரசித்தபடி இன்னும் அருகே சென்று படபடத்த அவள் இமைகளை உரசும் நெருக்கத்தில் குனிந்து, "ஐ லவ் யூ மயூ!" என்று கிசுகிசுத்தவன், அவளின் விரிந்த விழிகளை கண்டு காதலில் லயித்தபடி, "புரிகிறதா... மயூ என்கிற ஹிரணி என்கிற ஹிரண்மயி!" என மேலும் நெருங்கி அவளிடம் அழுத்தமாக மொழிந்து கண்சிமிட்டி புன்னகைத்தான் அகில்.

மூச்சுக்காற்றை சுவாசிக்கவும் மறந்து தன்னை பிரமிப்புடன் நோக்கியவளின் இதழ்களை தீண்டியவன் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளை தன் ஆளுமைக்குள் கொண்டு வந்து மேலும் இறுக்க ஆரம்பித்தான். மேனி சிலிர்த்து அடங்க விழிகளை இறுக மூடிக் கொண்டவளின் இமைகளிலிருந்து அவளுடைய அனுமதி இல்லாமலேயே கரகரவென்று நீர் வெளியேற ஆரம்பித்தது.

தனது இத்தனை நாள் குழப்பத்திற்கான விடை தற்பொழுது அவன் வாய் மொழியாகவே கிடைத்து விட்டதில் உண்டான உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்க திராணியற்று இதயம் விம்மி துடிக்க வெடித்து அழத் துவங்கினாள் ஹிரண்மயி.

அவளின் அழுகையில் அதிர்ந்துப் போன அகில் வேகமாக அவளை தன்னிடமிருந்து பிரிக்க முயல, விலக மறுத்து அவனை மேலும் இறுக்கிக் கொண்டு தேம்பினாள் அவள்.

"ஏய் மயூ... என்னடாம்மா இது? உஷ்... வேண்டாம்!" என்று வருத்தத்துடன் அவள் முதுகை வருடினான்.

"உங்களை நேசிக்காமல் ஆதாயத்திற்காக தான் மணந்தேன் என்று நீங்கள் என்னை நன்றாக பழிவாங்கி விட்டீர்கள் இல்லை..." என்றாள் மூக்கை உறிஞ்சியபடி.

"ப்ச்... என்ன உளறுகிறாய்?" என்று அவன் அதட்ட, "ஆமாம் அப்படித்தான்... இல்லையென்றால் என்னிடம் முதலிலேயே உன்னை தான் விரும்புகிறேன் என்று நீங்கள் நேரிடையாக சொல்லி இருப்பீர்கள் அல்லவா?" என்று நிமிர்ந்து அவனை குற்றஞ்சாட்டினாள்.

"என்னது... அப்படியே ஓங்கி ஒரு அறை விட்டேன் என்று வைத்துக் கொள் மென்று சாப்பிடுவதற்கு வாயில் ஒரு பல் இருக்காது. சொல்லியிருந்தால் மட்டும் அப்படியே ஐ லவ் யூ டா டார்லிங் என்று இதுபோல் கட்டிப்பிடித்திருப்பாயா... ரப்பர் பாலாட்டம் எதற்கெடுத்தாலும் துள்ளிக் குதிப்பவள் தானே நீ?" என முறைத்தான் அகில்.

பின்னதை ஒதுக்கி முன்னதை மட்டும் தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டவள், "ஆங்... நீங்கள் பல்லை பெயர்க்கும் வரை நான் சும்மா இருப்பேன் என்று நினைத்தீர்களா?" என தன் சுபாவத்திற்கு மாறி தானும் அவனிடம் எகிறினாள்.

உடனே ஈயென்று காதல் மன்னன் ஆனான் நம் நாயகன், "வேண்டாம்... நீ சும்மா இருக்க வேண்டாம், சட்டென்று கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து விடு!" என்று அவளை தன்னருகில் இழுத்து கண்ணடிக்க, "எப்படி இப்படியா?" என வினவி அவனை இறுக கட்டிக்கொண்டு முத்தமிட்டாள் அவனுடைய மயூ.

அதன்பிறகு அந்த புதிய காதல் ஜோடிக்கு எல்லாம் வண்ண மயமாக மாற தங்கள் உலகத்தில் மூழ்கிப் போயினர்.

இங்கே வீட்டிலோ பவானி தன் பெரிய மருமகளிடம் அலுத்துக் கொண்டிருந்தார்.

“உன் கொழுந்தனை எல்லாம் என்ன செய்வது? சாயந்திரம் சீக்கிரமாக அலுவலகத்தில் இருந்து வருகிறானே என பார்த்தால் கையில் வைத்திருந்த பைகளை என்னிடம் கொடுத்து விட்டு, நான் மயூவிடம் என் காதலை சொல்லப் போகிறேன். நாங்கள் உணவை முடித்துவிட்டு தான் வீட்டிற்கு வருவோம், அதற்குள் இதில் இருப்பதை வைத்து எங்கள் அறையை தயார் செய்து விடுங்கள் என வேகமாக சொல்லிவிட்டு நிற்காமல் ஓடியவனை ஒன்றும் புரியாமல் இழுத்துப் பிடித்து நிறுத்தி வைத்து என்னடா தயார் செய்ய வேண்டும் என்று விவரம் கேட்டால் வெட்கம்கெட்டவன், அச்சோ... உங்களிடம் எல்லாம் விளக்கி சொல்ல வேண்டும் என பெரிதாக அலட்டிவிட்டு அதுதான் காதலை சொல்லப் போகிறேன் இல்லை, அப்புறம் முதலிரவிற்கு ஏற்பாடு பண்ண வேண்டாமா என்று அதட்டிவிட்டு ஓடிவிட்டானே. சத்தியமாக எனக்கு திக்கென்று நெஞ்சு ஒருகணம் நின்றே போய்விட்டது!” என்று இப்பொழுதும் மார்பை நீவி விட்டுக் கொண்ட மாமியாரை சின்ன சிரிப்புடன் பார்த்திருந்தாள் ஹர்சிதா.

அவர் விமலிடம் இதை சொல்லிப் புலம்பும் பொழுதே அகிலின் அடாவடியை எண்ணி எண்ணி இவள் ரகசியமாக ஒருபுறம் சிரித்து ஓய்ந்திருந்தாள்.

“அம்மா... அவன் சொல்லியபடி அலங்காரம் எல்லாம் முடிந்துவிட்டது. அப்புறம் இப்பொழுது தான் எனக்கும் மெசேஜ் செய்திருந்தான். அவர்கள் இருவரும் ஹோட்டலில் இருந்து கிளம்பி விட்டார்களாம். ஹசு... இது உனக்கு, ஹிரணி வந்தால் அவளை நேராக நம் அறைக்கு இழுத்து சென்று அவன் வாங்கி வந்திருக்கின்ற புது புடவையில் அலங்காரம் செய்து அனுப்ப வேண்டியது உன் பொறுப்பாம்!” என்று மனைவியிடம் நமட்டுச் சிரிப்போடு கூறினான் விமல்.

“ஐயோ… கடவுளே… டேய்… உன் தம்பியை…” என்று பவானி தலையில் அடித்துக்கொள்ள, “ப்ச்… ம்மா… விடுங்கள். ஏதோ அவனுடைய சின்ன ஆசை, திருமணத்தை தான் அவ்வளவு அவசரமாக அவனுக்கு வாய்ப்பே கொடுக்காமல் நடத்தி முடித்து விட்டோம். இதையாவது அவன் விருப்பத்திற்கு செய்துக் கொடுப்போமே!” என்றான் கனிவுடன்.

“ஹூம்… அதுவும் சரிதான்!” என சன்னமாக பெருமூச்சு விட்டுக் கொண்டவர், “ஆனால் டேய்… இவன் பாட்டிற்கு இவன் இஷ்டதிற்கு இதையெல்லாம் செய்கிறானே… அவள் என்ன மனநிலையில் இருக்கிறாளோ!” என்றார் சங்கடமாக.

அம்மாவின் அருகில் அமர்ந்து அவர் கையை பற்றிக் கொண்டவன், “அம்மா… இவன் சொல்வதே ரொம்ப லேட். உங்கள் மருமகள் எப்பொழுதோ அவனை விரும்ப துவங்கி விட்டாள். ஆனால் இவன் தான் அவள் இன்னும் என்னை நன்றாக உணர வேண்டும் அது இது என பேத்திக் கொண்டு அவளை ரொம்பவே சோதித்து தாமதமாக உண்மையை சொல்கிறான். அதனால் கவலைப்படாதீர்கள், ஹிரணியும் அவனோடு வாழ்வதற்கு தயாராகி விட்டாள்!” என்று எடுத்து சொன்னான்.

“என்னவோ எல்லாம் நல்லபடியாக நடந்து இனியாவது உங்கள் நால்வரின் வாழ்க்கையும் நன்றாக இருந்தால் சரி!” என்று மகனின் கரத்தை அழுத்தினார்.

அதேநேரம் அகிலின் கார் காம்பவுண்டில் நுழைய, “ம்… அவர்கள் வந்து விட்டார்கள். நான் என்னுடைய அறைக்கு போகிறேன், நீங்கள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள்!” என்று பவானி தனது அறைக்கு தப்பித்து ஓடி விட்டார்.

ஆனந்தத்தில் பளபளத்த இளையவர்களின் முகம் கண்டு மூத்த ஜோடி இருவரும் நிறைவான பார்வை பரிமாற்றம் ஒன்றை தங்களுக்குள் நிகழ்த்திக் கொண்டனர்.

தம்பியின் பார்வை அண்ணனிடம் கேள்வியாக திரும்பும் நேரம் அவனுடைய அண்ணி மனைவியை கைப்பிடித்து அழைத்து செல்லவும் இவன் முகம் வெற்றியில் மின்னியது.

“அப்புறம்டா...” என்று விமல் ஆரம்பிக்கும் முன்னரே, “டேய்... உன்னிடம் நான் நாளை பேசுகிறேன்!” என அறைக்கு ஓட முயன்றவனை இழுத்து நிறுத்தியவன், “அடேய்... அண்ணன் என்கிற பொறுப்பிற்கு என்னை ஒரு வாழ்த்தாவது சொல்ல விடுடா!” என்று அலுத்தான்.

“ஓ... வாழ்த்தா... சொல்... சொல்!” என தயாராக நின்றவனை பார்த்து சிரிப்பு பீறிட்டுக் கிளம்ப அவனை கட்டியணைத்து, “ஆல் தி பெஸ்ட் டா! எங்கள் பிரச்சினையால் உங்கள் இருவரின் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு விட்டது!” என்று வாழ்த்தும் பொழுதே தன் வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டான் விமலன்.

”ப்ச்... ஏய்... அதெல்லாம் ஒன்றுமில்லை. சரி நான் அறைக்கு போகிறேன். அப்புறம்... அவள் எனக்கு முன்னால் போய்விட போகிறாள்!” என்று அவசரமாக ஓடுபவனை பார்த்து வாய் விட்டே சிரித்து விட்டான் அண்ணன்.

ஹர்சுவிடம், “அக்கா... என்னக்கா?” என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தாள் அவள் இழுப்பிற்கு உடன் சென்ற பெண்.

“சீக்கிரமாக குளித்து விட்டு வந்து இந்தப் புடவையை கட்டிக்கொள்!” என்று தன் கைகளில் ரோஜா வண்ண மென்பட்டுப் புடவையை திணிப்பவளை விநோதமாகப் பார்த்தவள், “இப்பொழுது எதற்காக அக்கா இது?” என்றாள் புரியாமல்.

“ஐயோ... என்னை எதுவும் கேள்வி கேட்காதே... சொன்னதை செய்!” என்றாள் பெரியவள் சங்கடமாக.

இவளும் குழப்பத்துடன், “சரி!” என அங்கிருந்து வெளியேற முயல பதறியடித்து அவளை தடுத்து

நிறுத்தினாள் ஹர்சு.

“ஏய்... எங்கே போகிறாய்?”

“ஏன்? குளித்து இந்த புடவையை கட்டி வர சொன்னீர்களே!”

“இல்லை... அங்கே போக வேண்டாம். இங்கேயே குளித்து உடைமாற்று!” என்றாள் அவள் தடுமாற்றத்துடன்.

ஹிரணிக்கோ அங்கே குளிக்க சங்கடமாக இருந்தது.

“இங்கேயா...” என தயங்கி நின்றவள், “நான் என் அறைக்கு செல்கிறேனே!” எனவும் செய்வதறியாது கைகளை பிசைந்த ஹர்சு, “ஏய்... நான் சொல்வதைக் கேளேன், நல்லப் பிள்ளை இல்லை...” என்று அவள் நாடியை பற்றிக் கொஞ்சினாள்.

“ஆனால்... அத்தான் வந்துவிட மாட்டாரா?” என்றாள் இவள் கூச்சமாக.

“ம்ஹும்... நீ உன்னுடைய அறைக்கு போகும் வரை அவர் மேலே வர மாட்டார்!” எனவும் சிறிது நிம்மதியடைந்தவள் குளிக்கவென திரும்பும் நேரம் மூளையில் மின்னல் வெட்ட, “ஆமாம்... ஏன் திடீரென்று இதையெல்லாம் செய்யச் சொல்கிறீர்கள்?” என்றாள் சட்டென்று சந்தேகமாக.

“அது... அது வந்து... அத்தை தான்...”

“ப்ச்... பொய் சொல்லாதீர்கள் அக்கா!” என்றாள் நாயகி வேகமாக, பெரியவளின் தடுமாற்றத்தை சற்றே கூர்ந்தவள் பல்லைக் கடித்து, “உங்கள் கொழுந்தனின் வேலையா?” என கோபமாக கேட்டாள்.

‘திருமணமாகி இத்தனை நாட்களுக்கு பிறகு, இது என்ன அசிங்கமாக?’ என்று அவளுக்கு சங்கடமாகவும் இருந்தது.

“ஏய்... கோபப்படாதே... உன் மேல் இத்தனை மாதங்களாக உள்ளுக்குள் ஆசை வைத்துக்கொண்டு, உனக்கு மரியாதை கொடுத்து தானே தம்பி இப்படி

விலகி இருந்தார்!" என்று பெரியவளாக அவளுக்கு வேண்டிய அறிவுரை கூறினாள்.

சிந்தனையில் மூழ்கியவளாக மெல்லிய பெருமூச்சொன்றை வெளியேற்றியவள் படக்கென்று நிமிர்ந்து, “அப்பொழுது உங்களுக்கு ஏற்கனவே அவர் என்னை விரும்புவது தெரியுமா?” என்றாள் பரபரப்புடன்.

அவள் வேகம் கண்டு லேசாக சிரித்த ஹர்சு, “உன்னை தவிர எல்லோருக்கும் தெரியும்!” என்று கண்சிமிட்டினாள்.

“அவரை... பிராடு... பிராடு!” என்று வசைப்பாடினாள்.

“சரி... சீக்கிரம்... அகில் வேறு காத்துக் கொண்டிருப்பார்!”

“ப்ச்... என்னக்கா? அவர் தான் எதையும் யோசிக்காமல் செய்கிறார் என்றால் நீங்களும் இப்படி செய்கிறீர்களே... இரண்டாம் முறையாக எங்கேயாவது யாராவது இப்படி எல்லாம் ஏற்பாடு செய்வார்களா?” என்றாள் தவிப்புடன்.

“யாரும் செய்யவில்லை என்றால் என்ன? உன் புருஷன் செய்வார் போ!” என்று அவளை பிடித்து குளியலறைக்குள் தள்ளினாள் ஹர்சிதா.

இவளை அறைக்குள் விட்டுவிட்டு ஹர்சு வெளியேறவும் சாற்றிய கதவை ஒருமுறை பார்த்துவிட்டு இவள் உள்ளே திரும்பினால் அகிலை அறையில் காணவில்லை.

‘இவர் எங்கே?’ என்று ஹிரணி விழிகளை சுழற்ற யாரோடு அலைபேசியில் பேசியபடி பால்கனியில் நின்றிருந்தவன் இவள் தேடலை உணர்ந்து ஒரு நிமிடம் என கண்களை சுருக்கி விரலில் ஜாடை காட்டினான்.

உதட்டில் முறுவல் பூக்க திரும்பி அறையை முழுவதுமாக ஒரு சுற்றுப் பார்த்தவள் அவன் ஏற்பாடுகளை பார்த்து மெல்ல சிரித்துக் கொண்டாள்.

சட்டென்று பின்னிருந்து அணைத்து, “பிடித்திருக்கிறதா?” என்றவனுடைய தீண்டலிலும், கிசுகிசுப்பான பேச்சிலும் மனம் மயங்கியவளுக்கு அவனிடம் விளையாடிப் பார்க்க ஆசை தோன்றியது.

“ம்... எல்லாமே ரொம்ப அழகாக இருக்கிறது. ஆனால் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்!” என்றாள் மெல்ல.

“என்ன? ஏதாவது பிடிக்கவில்லையா... உன்னுடைய டேஸ்ட் தெரிந்து தானே ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து தேர்வு செய்தேன். புடவை கூட உனக்கு பிடித்த மாதிரி சாப்ட் சில்க் தான் வாங்கினேன்!” என்று வேகமாக மொழிந்தவனின் மீது காதல் பித்துப் பிடிக்க, முயன்று அதை கட்டுக்குள் கொண்டு வந்தாள் நாயகி.

“ம்... எல்லாம் பிடித்து தான் இருக்கிறது!” என்றாள் அவள் மீண்டும்.

அவனோ சலிப்புடன், “ஏய்... இப்பொழுது நீ என்ன சொல்ல வருகிறாய்?” என்றான் வேகமாக.

“இல்லை... காதல் சொல்லி விட்டால் அடுத்து இது தான் என்று கட்டாயமாக நடந்தாக வேண்டுமா என்ன?” என்றாள் மெதுவாக அவனிடம் விழிகளை உயர்த்தி.

அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு திருமண இரவன்று தன்னிடம் கேட்ட கேள்வியையே மனைவி திரும்ப கேட்கவும் அவளை சலனமின்றி பார்த்து விட்டு அமைதியாக சென்று அகில் லைட்டை அணைக்க இவள் திருதிருவென்று விழித்தாள்.

“என்ன பதிலை சொல்லாமல் நீங்கள் லைட்...” என்றவளின் இதழ்களிலிருந்து வார்த்தை வெளிவராமல் அடைப்பட்டு தவித்தது.

“இனி உனக்கு நான் பதிலும் சொல்லப் போவதில்லை, உன்னை பேசவும் விடப் போவதில்லை என முடிவு செய்து விட்டேன்!” என்றவனின் வீராப்பான பேச்சை கேட்டு மனைவி கலகலவென்று நகைக்க, இம்முறை கணவன் அவள் வார்த்தைகளுக்கு பதில் சிரிப்பை அடைத்தான்.

* * *

ஐந்து மாதங்களுக்கு பிறகு, நன்றாக அயர்ந்து உறங்கி கொண்டிருந்த அகிலின் காதில் மெல்ல குறுகுறுப்பு

மூட்டிக் கொண்டிருந்தாள் ஹிரணி.

"ப்ச்... ஏய் சும்மா இரு!" என அவள் கரத்தை தட்டி விட்டான்.

"தூங்கியது போதும் எழுந்திருங்கள், கோவிலுக்கு போக வேண்டும்!" என அவன் காதில் முத்தமிட்டு மொழிந்தாள்.

"ஷ்... அப்பா... டைம் என்னடி, ஒன்பது மணிக்கு தானே கோவிலுக்கு போக வேண்டும்!" என்று அவளை விலக்கி தள்ளி கவிழ்ந்துப் படுத்தான் அகில்.

"மணி ஏழு ஆகிறது... எழுந்திருங்கள். எனக்கு தூக்கம் போய்விட்டது ஒரே போராக இருக்கிறது!" என்று அவன் மீது சரிந்தாள்.

"ஏழு மணியா... அப்பொழுது இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறதா?" என திரும்பி படுத்து சோம்பல் முறித்தவன் அவள் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்.

"ம்... ஆமாம்!" என்று அவன் அருகில் குனிந்தவளை தன் கைகளால் வளைத்துக் கொண்டவன், "சரி உனக்கு வேறு தூக்கம் வரவில்லை ஒரே போராக இருக்கிறது என்கிறாய். அதனால் கொஞ்ச நேரம் ஜாலியாக விளையாடலாம்!" என்று ஹிரணியை தனக்கு கீழே புரட்டினான்.

"என்னது? ஹேய்... நோ... நோ, நாம் கோவிலுக்குப் போக வேண்டும்!" என்று அவன் நெஞ்சில் கை வைத்து தடுத்தாள் மயூ.

"அப்பொழுது போடி... நான் மறுபடியும் தூங்குகிறேன்!" என்று வீம்பாக முறுக்கி கொண்டு திரும்பி படுத்து விழிகளை மூடிக்கொண்டான் அகில்.

ஹும்... என்று சிணுங்கியவள், "எனக்கு போரடிக்கிறதுடா!" என்று அவனை பின்னிருந்து இறுக்கி அவனுடைய தோளில் தாடையை வைத்து அழுத்தினாள்.

"உன்னை நம்பியெல்லாம் நான் எழ மாட்டேன் போடி, பாவமே என்று கம்பெனி கொடுக்கப் பார்த்தால் ரொம்ப தான் அலட்டுகிறாய்!"

'ஐயோடா... பாவம் பார்க்கிற ஆளைப்பார்!' என்று நகைத்து அவன் மீது முன்னேறியவள், "சரி நான் வேண்டுமென்றால் தலைக்கு குளித்து விடுகிறேன்!" என்றபடி அவன் கால் மீது தன் காலை தூக்கிப் போட்டாள்.

"தேவையே இல்லை..." என மறுத்தவனை திருப்பி அழுந்த முத்தமிட்டு விலகியவள், "இப்பொழுது நீதான்டா மிகவும் அலட்டுகிறாய்!" என்று முறைத்தாள்.

"இல்லையென்றால் உன்னை என் வழிக்கு கொண்டு வர முடியாதே!" என்று தனது சில்மிஷத்தால் அவளை துள்ளி விழ வைத்தவன் அவள் முகத்தோடு தன் முகத்தை சேர்த்து இதழ் முத்தெடுக்க துவங்கினான்.

விமல் ஹர்சுவின் ஐந்து மாத குழந்தை முகிலனுக்கு இன்று குருவாயூர் கிருஷ்ணன் கோவிலில் முதல் முறையாக அமுது ஊட்டுகிறார்கள். அனைவருக்கும் ஒன்றாக இந்த மாதத்தில் விடுமுறை ஒத்து வரவும் சரி பெயருக்கு இன்று ஒருமுறை உணவை கொடுத்து விட்டு பின்பு ஆறு மாதத்தில் இருந்து குழந்தைக்கு முறையாக தினமும் சாதம் ஊட்டிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருந்தனர்.

குழந்தை பசியில் அழவும் ஒரு ஓரமாக அமர்ந்து ஹர்சிதா அவனுக்கு பால் புகட்டிக் கொண்டிருக்க, ஹிரண்மயி சந்நிதானத்தில் விளக்கேற்றிக் கொண்டிருந்தாள்.

உடன் நின்றிருந்த விமலிடம் திரும்பி, "அச்சோ அண்ணா... பாருங்கள் மறந்தே போய் விட்டேன். அம்மா கொண்டு வந்திருந்த நெய்யிலிருந்து தீபம் போட்டு விட்டேன், பூஜைக்கு வேறு வாங்க சொல்ல வேண்டும் என்று நினைத்தேன் ஞாபகமேயில்லை சரியான மறதி. நீங்கள் உங்கள் தம்பிக்கு போன் செய்யுங்கள்!" என்றாள்.

குடும்பத்தில் அனைவரும் ஹர்சு உட்பட அம்மா, தம்பி என்று நெருங்கிய முறையில் உறவு கொண்டாட, தான் மட்டும் முறை சொல்லி அழைத்து விலகியிருப்பதாய் எண்ணிய ஹிரண்மயி அகிலுடன் மனம் ஒன்றிய பிறகு பவானியை அம்மா என்றும் விமலை அண்ணா என்றும் அழைக்க ஆரம்பித்திருந்தாள்.

"அவனிடம் சொல்கிற நேரம் நானே போய் வாங்கி வருகிறேன்!" என்று அவன் நடக்க ஆரம்பிக்க, "அடடே... இது பவானியின் மூத்த மகன் விமல் தானே!" என்று அருகில் ஒரு குரல் வியப்புடன் ஒலிக்கவும் திரும்பினாள் ஹிரணி.

"ஆமாம்... அது எங்கள் விமல் அண்ணா தான். உங்களுக்கு அம்மாவையும் தெரியுமா?" என்று அவரிடம் ஆவலுடன் கேட்டாள்.

"ஒ... என்னுடைய பழைய சிநேகிதிம்மா அவள்..." என்றவர் குழப்பத்துடன், "அம்மா என்கிறாய்... நீ அவள் பெண்ணா? எனக்கு தெரிந்து அவளுக்கு இரண்டும் பையன் தானே..." என யோசனையுடன் இழுத்தார்.

"ஆமாம்... அவருக்கு பசங்க மட்டும் தான், நான் அவருடைய மருமகள்!" என்று முறுவலித்தாள் மயூ.

"என்ன மருமகளா... அப்புறம் ஏன் புருஷனை அண்ணா என்கிறாய்?"

"சீச்சீ... அவர் எனக்கு அண்ணா தான், அவருடைய தம்பி தான் எனக்கு புருஷன்!" என்று தெளிவாக உரைத்து புன்னகைத்தாள் ஹிரணி.

அவளுடைய பதிலில் ஙே... என விழித்தவரின் கரத்தை பற்றி இழுத்து, "ஏய்... மலர் எப்படியடி இருக்கிறாய்? பார்த்து பத்து வருடங்களுக்கும் மேலே ஆகிவிட்டது இல்லை?" என்று அப்பொழுது தான் கடையிலிருந்து அங்கே வந்த பவானி தோழியிடம் குதூகலமாக வினவினார்.

"ஆங்... ஆங்... இருக்கிறேன்... இருக்கிறேன்!" என்றபடி உடனிருந்தவர்களை வினோதமாக பார்வையிட்டார் மலர்.

அதற்குள் ஹர்சுவும் குழந்தையோடு அருகில் வந்தாள்.

"ம்... இவர்கள் தான் விமல் அண்ணாவுடைய மனைவி, என்னுடைய செல்ல ஹர்சு அக்கா!" என்று மேலும் அழகாக மலருக்கு அறிமுகப்படுத்தினாள் ஹிரணி.

ஓ... ஓ... என்று சமாளிப்பாக புன்னகைத்து விட்டு, "சரி பவானி, என் வீட்டினர் அந்தப் பக்கமாக உட்கார்ந்து இருக்கிறார்கள். என்னை காணவில்லை என தேடுவார்கள் சொல்லி விட்டு வந்து விடுகிறேன். உன்னிடம் நிறைய பேச வேண்டும்!" என சின்னவளை பார்த்தவாறு கூறி சென்றார்.

"இவள் ஏன் ஒரு மாதிரி பேயறைந்த மாதிரி இருக்கிறாள்?" என்று யோசித்தார் பவானி.

பக்கென்று வெடிச்சிரிப்பு சிரித்தாள் ஹிரண்மயி, "ஏய் வாலு... உன் வேலை தானா அது... என்ன செய்தாய்?" என்று விமல் அவள் காதை திருக, "ஐயோ அண்ணா... இருங்கள் சொல்கிறேன்!" என அவன் கரத்தை பிடித்து விலக்கி விட்டு நடந்ததை கூறி கண்சிமிட்டினாள்.

"அடிப்பாவி... என்னுடைய தோழியை இப்படியாடி கலாட்டா செய்வாய்!" என்று அவள் முதுகில் செல்லமாக ஒன்று வைத்தார் பவானி.

"அத்தான்... பாருங்கள் அத்தான், கொஞ்சம் கூட பயமே இல்லாமல் உங்கள் முன்னிலையிலேயே அம்மா என்னை எப்படி அடிக்கிறார்கள் என்று..." என கணவனிடம் செல்லம் கொஞ்சியபடி புகார் வாசித்தாள் அவன் மனைவி.

"அதுதானே... என்ன தைரியம் அம்மா உங்களுக்கு? என் கண் முன்னாலேயே என்னுடைய ஸ்வீட் ஹார்ட்டை போட்டு இப்படி அடிக்கிறீர்கள். வேண்டுமென்றால்... என் கண்மறைவாக தனியாக அழைத்து சென்று வெளுத்து

வாங்குங்கள்!" என்று அகில் காலை வாரியதும் இடுப்பில் கரம் வைத்து அவனை முறைத்தாள் அவனின் மயூ.

"ஹஹா... தம்பி... இன்று தனிமையில் உங்கள் மயூ தான் உங்களை வெளுத்து வாங்கப் போகிறாள்!" என்று அங்கே ஒரு சிரிப்பு வெடியை பற்ற வைத்தாள் ஹர்சிதா.

◆ ◆ ◆

சுபம்